# இலங்கை குற்றவியல் எதிர்வாத பயிற்சி கையேடு



**<u>இலங்கை குற்றவியல் எதிர்வாத செயன்முறைக் கைநூலை சட்டத்தரணிகள் சங்கம் உறுதிப்படுத்துகிறது.</u>**

**சட்டத்தரணிகள் சங்கம் - யாழ்ப்பாணம்**

*நீதிக்கான சர்வதேச இணைப்பு அமைப்பு (IBJ) இந்தக் குற்றவியல் எதிர்வாதம் தொடர்பான கைநூலுக்கு முழுமையான அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. இக்கைநூலானது, இலங்கையில் தொழிலில் ஈடுபடும் எதிர்தரப்பு சட்டத்தரணிகள் அனைவருக்கும் பிரயோசனமிக்க மூலவளமொன்றாக அமையுமென யாழ். சட்டத்தரணிகள் சங்கம் நம்புகின்றது.*

*- சாந்தி அபிமானசிங்கம் - தலைவர், யாழ். சட்டத்தரணிகள் சங்கம்*

***<u>திருகோணமலை சட்டத்தரணிகள் சங்கம்</u>***

*இந்தக் கைநூலானது, குற்றம் சாட்டப்பட்டவர் தொடர்பான குற்றவியல் சட்டவாக்கத்தின் பல அம்சங்களையும், அவருக்குள்ள உரிமைகளையும் ஆழமாக பகுப்பாய்வு செய்கின்றது.*

*- சுபாசினி சித்ரவேல் - தலைவர், திருகோணமலை . சட்டத்தரணிகள் சங்கம்*

***<u>மன்னார் சட்டத்தரணிகள் சங்கம்</u>***

*இலங்கையின் சட்டத்துறைத் தொழிலில் ஈடுபட்டுள்ள பெரும் பகுதியினரால்,இக்கைநூல் அதற்குரிய தகுதி மட்டத்தில் பாராட்டுதலையும், ஏற்றுக் கொள்ளல்களையும் பெரும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. சட்டக்கோட்பாடுகளான ''அடிப்படை உரிமைகள்'', ''குற்றமிலான் எனும் ஊகம்'' மற்றும் குற்றத்தை ஒப்புக்கொள்ளல் தொடர்பான ஒழுங்கு விதிகள் போன்ற மதிப்புக்குள்ளாகும். அத்துடன் அரசியல் யாப்பினால் பேணப்பட்டுவரும் சட்டக் கோட்பாடுகள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள இக்காலகட்டத்தில், இக்கைநூலானது, அவ்வாறான அனர்த்தங்களுக்கு எதிராக நீண்ட தூரம் செல்லக்கூடுமென நினைக்கிறேன். அத்துடன் சட்டத்துறையில் ஈடுபட்டுள்ள இளம் வயதினையுடைய பலருக்கும் இக்கைநூல் பேருதவியாகவும், வழிகாட்டியாகவும் அமையுமென்பதில் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன்.*

*- கையஸ் பெல்டானோ - மன்னார். சட்டத்தரணிகள் சங்கம்*

***<u>கண்டி சட்டத்தரணிகள் சங்கம்</u>***

*இந்த குற்றவியல் எதிர்தரப்பு செயற்பாட்டுக் கைநூலானது, குற்றவியல் நீதித்துறை முறைமை மீதான ஒழுங்கு நடைமுறைகளின் புதிய பரிமாணங்கள் தொடர்பில் எமது சட்டக் கண்களை திறந்து வைக்கின்றது.*

- *ஈ.எம்.பீ குமாரி அபேரத்ன, கண்டி சட்டத்தரணிகள் சங்கம்*
- *பண்டார கருணாநாயக்க, செயலாளர், கண்டி சட்டத்தரணிகள் சங்கம்*

***<u>வவுனியா சட்டத்தரணிகள் சங்கம்</u>***

*நீதிக்கான சர்வதேச இணைப்புறவு அமைப்பின் (IBJ) இக்கைநூல் எமக்கு கிடைத்துள்ளதையிட்டு நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம். இக்கைநூலானது, எமது சட்டத்தரணிகளுக்கு பேருதவியாக அமையுமென நம்புகின்றோம்.*

- *அன்டன் புனிதநாயகம் - செயலாளர் வவுனியா சட்டத்தரணிகள் சங்கம்*

## நீதிக்கான சர்வதேச இணைப்புறவு அமைப்பு (International Bridges to Justice) பற்றியதோர் அறிமுகம்

உலகளாவிய ரீதியில் நீதியை நிலைநாட்டும் பணியில் ஈடுபடுபவர்களைக் கொண்டு செயல்படும் இவ்வமைப்பானது, 2000ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டதுடன், உலகம் பூராகவும் காணப்படும் சித்திரவதையை ஒழித்து சட்டத்தின் ஆட்சியை 21ஆம் நூற்றாண்டில் பலப்படுத்துவதை நோக்கமாகவும் கொண்டு இயங்குகின்றது. மேலும் இவ்வமைப்பு (IBJ) ஒவ்வொரு தனிநபரினதும் உரிமைகளை மதிக்கும் படியான குற்றவியல் நீதி விசாரணை முறைமையை சீர்திருத்தும் நோக்கில் குறித்த நாடுகளின் அரச, சிவில், சமூகவியல் நிறுவனங்களுடன் இணைத்தும் செயல்பட்டு வருகின்றது. அத்துடன் சித்திரவதை, மனித உரிமை மீறல்கள் மற்றும் ஏனைய தடைசெய்யப்பட்டுள்ள நடத்துதல்கள் போன்றவற்றை கணிசமான அளவில் குறைக்கும் நோக்கில் அவை தொடர்பான நீதி விசாரணை வழிமுறைகளின் ஆரம்ப கட்டத்தில் உரிய சட்ட ஆலோசனைகள் பெறுவதனை உறுதிப்படுத்தியவாறும் இவ்வமைப்பு (IBJ) செயற்பட்டு வருகின்றது. மேலும் இவ்வமைப்பு அதன் பிரதான முனைப்பாக குற்றவியல் நீதி விசாரணை முறைமையின் இயக்குனர்களான சட்ட உதவி வழங்குனர்களை வலுவூட்டி ஒத்துழைப்பு வழங்குதல் போன்ற பணியையும் செய்து வருகின்றது. ஐக்கிய அமெரிக்காவில் தொண்டு நிறுவனமொன்றாக பதிவு செய்யப்பட்டுள்ள இந்த IBJ அமைப்பு அதன் நடவடிக்கைகளை தற்போது புருண்டி, காம்போடியா, சீனா, கொங்கோ சனநாயக குடியரசு, மெக்ஸிக்கோ, மியன்மார், ருவான்டா, இலங்கை, சிரியா, வியட்நாம் மற்றும் சிம்பாப்வே போன்ற நாடுகளில் முன்னெடுத்தும் வருகின்றது.

### நீ. ச. இ. அமைப்பின் (IBJ) நோக்கு

நாம் குறிப்பாக, ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும் அதே போன்று பிள்ளைக்கும் உரித்தான அடிப்படை சட்ட உரிமைகளை மதித்து நடக்கும் உலகமொன்றையே நோக்கமாகக் கொண்டுள்ளோம். அத்துடன் சட்ட நடவடிக்கைகளில் திறமையான பிரதிநிதித்துவம் பெறும் உரிமை, சித்திரவதை உள்ளிட்ட ஏனைய கொடூரமான, மனிதாபமற்ற, கீழ்த்தரம் மிக்கதான நடத்துதல் போன்றவற்றிலிருந்து விடுபட்டிருக்கும் உரிமை மற்றும் நியாயபூர்வமான நீதி விசாரணையொன்றை பெறும் உரிமை போன்றவற்றையும் இவ்வமைப்பு அதன் நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் தனக்குள்ள உரிமைகள் பற்றி நன்கு அறிந்து வைத்துள்ளவர்களாக, அத்துடன் அவ்வாறான உரிமைகள் நடைமுறையில் பேணப்படுகின்றன என்பதை கோரி நிற்கும் நிலையை வலுவூட்டியவர்களாக உள்ளதோர் உலகொன்றையும் இவ்வமைப்பு எதிர் பார்த்து நிற்கின்றது. அதுமாத்திரமல்லாமல், பொதுமக்கள் மத்தியில் அன்றாட நீதி சார் செயற்பாடுகளில் சட்டத்தின் ஆட்சியும், சர்வதேச மட்டத்திலான மனித உரிமைகளும் உயிரூட்டிப் பேணப்படுகின்ற உலகொன்றும் இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### நீ. ச. இணைப்புறவு அமைப்பின் பணி

உலகலாவிய மனித உரிமைகள் பிரகடனத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை அங்கீகரித்தவாறு செயற்பட்டு வரும் இவ்வமைப்பு அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் வாழும் சாதாரண குடிமக்களின் அடிப்படை சட்ட உரிமைகளை அர்ப்பணிப்புடன் பேணிப்பாதுகாத்து வருவதுடன், குறிப்பாக சகல பிரஜைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளின் போது உரித்ததான திறமைமிக்க பிரநிதித்துவம், கொடூரமான அசாதாரண நடத்தல்கள் அல்லது தண்டனைகள் என்பவற்றிக்கு எதிரான நியாயமான நீதி விசாரணை போன்ற உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கும் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றது.

### நீ. ச. இ. அமைப்பின் அணுகுமுறை

இவ்வமைப்பானது, அதன் பணியை பூர்த்தி செய்து கொள்ளும் நோக்கில் சட்ட உதவி வழங்கும் சட்டத்தரணிகள், அரச நிறுவனங்கள், சட்ட உதவி வழங்கும் அமைப்புக்கள், சமூகமைய அமைப்புக்கள் மற்றும் இத்துறையில் ஆர்வமுள்ள தரப்பினருடன் இணைந்து செயற்பட்டும் வருகின்றது. அத்துடன் செயற்றிறன் மிக்கதும் முழுமையானதுமானதோர் குற்றவியல் நீதி விசாரணை சார்பு மாற்றமொன்றை உறுதி செய்யும் நோக்கில் பல பரிமாணங்களைக் கொண்ட அணுகு முறையினையும் இவ்வமைப்பு முன்னெடுத்து வருகின்றது.

***எதிர்தரப்பு நலனைக் கவனிப் போரின் ஆற்றலை கட்டியெழுப்புதல் :*** குற்றிவியல் நீதி விசாரணை முறைமையினை முன்னெடுத்துச் செல்வோர் என்ற வகையில் நாம் எமது ஒத்துழைப்பினை வழங்குவதில் எதிர்தரப்பு நலன் கவனிப்பவர்கள்/ சட்ட உதவி வழங்கும் சட்டத்தரணிகள் போன்றோரை வலுவூட்டுவதிலேயே அதிகூடிய கவனத்தை செலுத்தி வருகின்றோம். இவ்வாறான ஒத்துழைப்பானது திறன் அபிவிருத்தி, பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளிட்ட உபகரணங்கள்,

களமைய வள நிலையங்கள், சர்வதேச ரீதியில் சமூகத்தை கட்டியெழுப்புதல் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு போன்றவற்றை மேற்கொள்வதன்/ வழங்குவதன் மூலம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

***நிறுவன ரீதியான ஆற்றலைக் கட்டியெழுப்புதல் :*** சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதில் நீதித்துறை சார்பு சமூகத்திற்குள் செயல்படும் அனைவரினதும் ஒத்துழைப்பு முக்கியத்துவம் பெறுவதால் அதனை அங்கீகரித்தவாறு இவ்வமைப்பினர் (IBJ) சட்ட உதவி வழங்குனர்கள், வழக்குத் தொடுனர்கள், நீதிபதிகள், நீதி மன்றத்தின் நிர்வாகிகள், பொலிசார், வைத்திய அதிகாரிகள், தடுப்பு முகாம் சார் அதிகாரிகள், உள்ளூராட்சிப் பிரதிநிதிகள் மற்றும் நீதி விசாரணைத் துறைசார்பு சட்ட வல்லுனர்கள் போன்றவர்களுடன் இணைந்து பணிபுரிந்து வரும் அதேவேளை, இவர்கள் மத்தியில் பரஸ்பர கௌரவத்தை கட்டியெழுப்பவும், கருத்துக்களை பரிமாற்றிக் கொண்டு முன்மொழிவுகளை முன்வைக்கவும் அதேபோன்று நீண்ட காலத்துக்கான நீதித்துறை சார் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான அடித்தளத்தை கட்டியெழுப்பவும் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.

***உரிமைகள் தொடர்பான விழிப்பூட்டல் :*** சட்ட ரீதியான உரிமைகள் மற்றும் அவை தொடர்பான அறிவு என்பவற்றறில் ஒரு சாதாரண பிரஜைக்குள்ள அறிவின்மையானது குறித்த உரிமை மீறல்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதில் பாரிய பங்களிப்பை செலுத்துகின்றது. எனவே, இவ்வமைப்பு (IBJ) குறித்த உரிமைகள் தொடர்பான அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை (சுவரொட்டிகள், கைநூல்கள், வீதியோர சட்ட அறிவூட்டல் அமர்வுகள்) போன்ற தொடர்பாடல் சாதனங்கள் ஊடாக முன்னெடுத்து வருவதுடன் அதனூடாக நாட்டின் பிரஜைகள் தமக்குரிய உரிமைகள் அல்லது தமது உறவினர்கள் சார்பாக குறித்த உரிமைகளை முன்னெடுத்துச் செல்லவும் சட்ட ரீதியான நிவாரணங்களை பெற்றுக் கொள்ளவும் கூடியவாறு வலுவூட்டப்படுகின்றார்கள்.

## உள்ளடக்க அட்டவணை


அறிமுகம்
…………………………………………………………………………………………………..……………..14

முகவுரை
…………………………………………………………………………………………….……………….…....15

**நீதித் துறை முறைமை : அடிப்படைக் கண்ணோட்டம் மற்றும் நிலை மாறல் நீதி**

I. அடிப்படை கண்ணோட்டம் ………………………………………………………..…………………16
II. சர்வதேச ஒப்பந்த கடப்பாடுகள் மற்றும் ஏற்புடையதாகும் உலகளாவிய சட்ட தரங்கள்….16
III. இலங்கையில் நிலைமாறல் நீதித் துறை ………………………………………………………...17

(அ)

அறிமுகம் ……………………………………………………………………………………….…..15

(ஆ) ஐ. நா. சபையுடன் இணங்கிச் செல்லல்

தீர்மானங்கள் ………………………………………………………………………………………16

(இ) தாமதித்த நீதி ……………………………………………………………………………...16

(ஈ) குற்றவியல் பொறுப்புக் கூறல் ……………………………………………………………...17

(உ) நீதித்துறை முறைமையில் பன்முகத்தன்மை இன்மை ……………………………………18

(ஊ) நீதிமன்ற அலுவலர்கள் மத்தியில் நிர்வாக செயற்றிறனின்மை ……………………….…..19

(எ) நீதித்துறை ……………………………………………………………………………….20

**அத்தியாயம் 1**
**குற்றம் சாட்டப்பட்டவரின் அடிப்படை உரிமைகள்**

1.1 தன்னை பாதுகாத்துக் கொள்ளும் உரிமை …………………………..…………….……21
1.2 குற்றமற்றவர்/ குற்றமிலான் என்ற அனுமானம் …………… …………………………...21
1.3 சித்திரவதைக்கு அல்லது மோசமான நடத்துதலுக்கு
ஆளாகாமல் இருக்கும் உரிமை ……………………….…………………………..22
1.4 ஒன்றும் கூறாமல் மௌனமாக இருக்கும் உரிமை …………………………….……..…23
1.5 சட்டத்தரணி ஒருவரால் பிரதிநிதித்துவப்படுத்தும் உரிமை …………………………....23
1.6 உரிய வழிமுறையை கோரி நிற்கும் உரிமை …………………..…………………...25
1.7 சட்டத்தின் கீழ் சம/ ஒரே வித பாதுகாப்பை பெறக்கூடிய உரிமை ………………..…25
1.8 இரட்டைத் தண்டிப்புக்கு எதிரான உரிமை ……………………………..……..….26
1.9 பிற்செயல் வழக்குத் தொடுப்புக்கு எதிரான உரிமை …………………….........…26
1.10 குற்றச்சாட்டுக்களை தெரியப்படுத்தும் உரிமை ……………………………..….27
1.11 பிணையில் செல்லும் உரிமை ……………………………………………….……..27
1.12 உரை மொழிபெயர்ப்பை பெறும் உரிமை …………………………………….......28
1.13 சட்டவிரோத தேடல்கள் மற்றும் கைப்பற்றல்களுக்கு எதிரான உரிமை ……………...29
1.14 பொலிசாரின் சட்டவிரோத தடுத்து வைத்தலுக்கு எதிரான உரிமை …………………29

**அத்தியாயம் 2**
**எதிர்தரப்பு சட்டத்தரணியின் பணிகளும் பொறுப்புக்களும்**

2.1 கண்ணோட்டம் மற்றும் இலங்கையின் தேசிய கட்டமைப்பு …………….…………..31

2.2 சர்வதேச கட்டமைப்பு ……………………………………………………………..31

2.3 எதிர்தரப்பு சட்டத்தரணிக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் பொறுப்புக்கள் ……………………………………………………………………….…32

2.3.1 கட்சிக்காரரின் தகவல்களை இரகசியமாக பேணிவரும் கடமை உணர்வு ………..…32

2.3.2 தன்பக்க வாதத்தினை ஆர்வத்துடன் முன்வைக்கும் உணர்வு …………………….....32

2.3.3 தேவைப்படும் விசாரணைகளை மேற்கொள்ளும் கடமை உணர்வு ……………..…..33

2.3.4 சுயாதீனமாக இருக்கவேண்டிய கடமை உணர்வு ………………………………........34

2.3.5 ஒழுக்க/ நெறிமுறைக்கமைய பணியாற்றும் கடமை உணர்வு ………………………34

2.3.6 பிரதிநிதித்துவப்படுத்தலில் ஏற்படும் முரண்பாடுகளை தவிர்த்துக் கொள்ளும் கடமை உணர்வு ……………………………………………………………………..…35

2.3.7 நீதிமன்றத்தில் பிரதிநிதித்துவத்தை வழங்கும் உரிமை ……………………………….35

2.3.8 தடுப்பிலுள்ள கட்சிக்காரர்களை போய் சந்திக்கும் உரிமை …………………………......36

## அத்தியாயம் 3
## <u>கட்சிக்காரர்</u>

3.1 கட்சிக்காரருடனான ஆரம்ப நேர்காணல் ……………………………………………..37

3.2 ஆரம்ப நேர்காணலுக்கான நடைமுறை குறிப்புகள் ………………………………......39

3.3 சட்டத்தரணிக்கும் கட்சிக்காரருக்கும் இடையில் உறவை ஏற்படுத்திக் கொள்ளல்…..40

3.4 கட்சிக்காரருடனான ஆரம்ப நேர்காணலுக்குரிய பட்டியல்…………………………....40

3.5 விசேட மக்கள் வகையினர் ……………………………………………………….......44

3.5.1 பாலியர்கள் …………………………………………………………………….....44

3.5.2 பெண்கள் …………………………………………………………………….…...48

3.5.3 பெண் - பெண் உறவு, ஆண் - ஆண் உறவு, இரு பால் உறவு, பால் நிலை மாறுவோர், இடைப்பாலினர் ……………..………………………………………………………….....50

3.5.4 மனநோயாளிகள் ………………………………………………………........52

## அத்தியாயம் 4
## <u>சித்திரவதைக்கு அல்லது மனித உரிமை மீறலுக்கு ஆளாக்கப்பட்ட கட்சிக்காரர் ஒருவரை பிரதிநிதித்துவப்படுத்துதல்.</u>

4.1 சித்திரவதை பற்றிய பொதுவான வரைவிலக்கணம் ……………………………….....53

4.2 சித்திரவதை பற்றிய சர்வதேச சட்ட வரைவிலக்கணம் ………………......................54

4.3 இலங்கையில் சட்டக் கட்டமைப்பு மற்றும் சித்திரவதை …………………………........55

4.4 நேர்காணலுக்கு தயாராகுதல் மற்றும் அதனை நடாத்துதல் ………………………......56

4.5 சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்ட நபருடனான நேர்காணலுக்கான செயல்முறை வழிகாட்டிகள் …………………………………………………………..……........57

4.6 சித்திரவதைக்கு அல்லது மனித உரிமை மீறலுக்கு ஆளாக்கப்பட்டுள்ளதென கூறும் நபருக்கான மாதிரிக் கேள்விகள் ……………………………………………………….58

4.7 சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டவர்களினால் பொதுவாக வெளிக்காட்டப்படும் அவதானிக்கப்பட்ட எதிர்வினைகள் ……………………………………………….59

4.8 சித்திரவதைக்கு அல்லது மனித உரிமை மீறலுக்கு உள்ளாக்கப்பட்டவருடனான நேர்காணலின் இறுதியின் போது சட்டவாதி பெற்றிருக்க வேண்டிய தகவல்கள்…..60

4.9 வழக்குத் தொடுனரை அல்லது நீதிபதியை அணுகும் நடைமுறை ………………..60

4.10 இஸ்டான்புல் உடன்பாடு மற்றும் சித்திரவதை …………………………......61

4.11 பாலினப் பிரச்சினைகள் மற்றும் சித்திரவதை ……………………………...62

4.12 மனித உரிமை மீறல் தொடர்பில் இலங்கையில் நீதிமன்றத்துக்கு வெளியே உள்ள தீர்வுகள் ……………………………………………………………………….63

## அத்தியாயம் 5
## எதிர்தரப்பு வழக்கின் அடிப்படை மற்றும் கருப் பொருள்

5.1 வழக்கின் அறிமுகம் மற்றும் அதன் எல்லைக்கோடுகளை திறம்பட வரைதல் …....63

5.2 வழக்கின் வாதத்தை தீர்மானித்தல் …………………………………………....65

5.3 வழக்கின் கருப்பொருளை தீர்மானித்தல் ……………………………………..66

5.4 நிகழ்வு விளக்கம் மற்றும் வழக்கின் அடிப்படையையும் கருப்பொருளையும் முன்வைத்தல் …………………………………………………………..……67

5.5 எதிர் தரப்பு வாதம் சார்பு அம்சங்கள் ……………………………………….68

5.5.1 நிகழ்வுப் பிழை ……………...........……………………………………...68

5.5.2 நல்லெண்ணம்/ நன்னம்பிக்கை ……………………………………….....68

5.5.3 தற்பாதுகாப்பு ……………………………………………………………......69

5.5.4 துர்அதிஷ்டம் ……………………………………………………………......69

5.5.5 போதை வெறி …………………………………………………………....69

5.5.6 இணக்கம் ……………………………………………………………………..70

5.5.7 அச்சுறுத்தல் ……………………………………………………….…......70

5.5.8 தலத்திலா வாதம் …………………………………………………..…......70

5.5.9 பொது நோக்கத்திலிருந்து அல்லது கூட்டு குற்றவியல் முயற்சியிலிருந்து விடுபடுதல் ..........................................................................................................70

5.5.10 பொறியில் சிக்கவைத்தல் ……………………………………………......72

5.5.11 நீதிமன்ற மன்னிப்பு …………………………………………………........74

5.5.12 சட்டத்தின் பிழை ………………………………………………………...74

5.5.13 ஆற்றலின்மை ……………………………………………………….........74

5.5.14 சித்தசுயாதீனமின்மை ……………………………………………….....75

## அத்தியாயம் 6
## நீதிமன்றங்களின் நியாயாதிக்கம்


6.1 நீதவான் மன்றம் ……………………………………………………………….…..75

6.2 மேல் நீதிமன்றம் …………………………………………………………….76

6.3 மேன்முறையீட்டு நீதிமன்றம் ………………………………………………77

6.4 உயர்/ உச்ச நீதிமன்றம்……………………………………………………77

6.5 ஏனைய சட்டங்களின் கீழ் வரும் குற்றங்களுக்கான நியாயாதிக்கம் …..……78


## அத்தியாயம் 7
## புலன் விசாரணைக் கட்டம்


7.1 குற்றச் சாட்டு……………………………………………………………78

7.2 கைதாகுதல் ……………………………………………………………81

7.2.1 சட்ட விரோதக் கைது …………………………………………….…81

7.2.2 பிடியாணை இன்றி கைது செய்தல் ……………………………….....82

7.2.3 பிடியாணையுடன் கைது செய்தல் ……………………………….....83

7.2.4 பிடியாணையின்றி கைது செய்யலாகாத வழக்குகள் ……………………….84

7.2.5 தனி நபர்களினால் மேற்கொள்ளப்படும் கைதுகள் …………………….......84

7.2.6 நீதவானினால் மேற்கொள்ளப்படும் கைதுகள் …………………………........85

7.2.7 சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் கைது செய்யப்படும் நபர்கள் ……….......85

7.3 தேடுதல் நடவடிக்கைகள் ...………………………………………….....85

7.3.1 கைது செய்யப்பட்டவர்கள் சார்பு தேடுதல் நடவடிக்கைகள் …………….....85

7.3.2 பெண்களைத் தேடுதல் நடவடிக்கைகள் ……….……………………..….86

7.3.3 இடத்தைத் தேடுதல் நடவடிக்கைகள்...………………………………..…...86

7.4 சொத்துக்களையும் ஆவணங்களையும் கைப்பற்றுதல் ……………………..……86

7.5 அழைப்பு ஆணை ……………..…………………………………………......87

7.6 மரண விசாரணை ……………………………………………………….....88

7.7 தடுத்து வைத்தல் ……………………………………………………….......88

7.8 பொலிஸ் விசாரணை ……………………………………………….........89

7.9 குற்றம் சாட்டப்பட்டவர் வழங்கும் வாக்கு மூலம்/ கூற்றுக்கள் …………………....94

7.10 ஒன்றும் கூறாமல் மௌனமாக இருக்கும் உரிமை …………………………......96

7.11 பொலிஸார் கட்சிக்காரரை தரக்குறைவாக மதித்தல் ……………………….......96

7.12 வழக்குத் தொடுப்புச் சான்றுகளைப் பெறுதல் …………………………….........97

## அத்தியாயம் 8
## விளக்கத்துக்கு முந்திய விடயங்கள்


8.1 பிணை ……………………………………………………………………….97

8.2 பிணைப் பட்டியல் ……………………………………………………………98

8.3 மன்றுரைப்பு …...........………………………………………………….....101

8.3.1 குற்றவாளி மற்றும் குற்றமற்றவர் பற்றிய வாதாடல்..…………………………....101

8.3.2 மன்றுரைப்பொன்றுக்கான பேச்சு வார்த்தையை கையாளுதல்..………………....102

8.4 முதனிலை விசாரணை ……………………..………………………….....103

8.5 விளக்கத்துக்கு தயாராகுதல் ……………………………………………......105


## அத்தியாயம் 9
## விளக்கம்


9.1 நீதவான் மன்ற விசாரணைகள் ...……………………………………….....106

9.1.1 ஆரம்ப விசாரணை ..............................................................................................108

9.1.2 நீதவான் மன்றத்தினால் மேற்கொள்ளப்படும் சுருக்கமுறை விளக்கம் ………..109

9.2 நீதவான் மன்றத்தின் ஓட்டவிளக்கப் படம் ……………………………..113

9.3 மேல் நீதிமன்ற நடவடிக்கைகள் ……………………………………….113

9.3.1 மேல் நீதிமன்றம் : யூரர் இல்லாத விளக்கம் …………………………114

9.3.2 மேல் நீதிமன்றம் : யூரர் ஊடான விளக்கம் .............………………………...116

9.3.3 யூரர் தெரிவு மற்றும் அதற்கு ஏற்புடையதான பொது நடவடிக்கை முறைகள்.. 117

9.3.4 அரச, எதிர் தரப்பு வழக்கை முடிப்பதற்கான விளக்கம் ......................………119

9.3.5 விளக்க முடிவு ...................................................……………………………...121

9.4 மேல் நீதிமன்றப் பாய்வு அட்டவணை ............……………………………123

9.5 நீதிமன்ற அறைப்பண்பாடும் மரபொழுங்குகளும் .............……………………..123

9.6 ஆரம்ப கூற்றுக்கள் …………………………………………………….125

9.6.1 பொது …………………………………………………………………125

9.6.2 தொடர்புடைய சட்டவாக்கம் …………………………………………..125

9.6.3 ஒரு செயல்விளைவுடைய ஆரம்ப கூற்றை வழங்குதல்……………………..125

9.6.4 ஒரு செயல்விளை. ஆரம்ப கூற்றை வெளி. மே. ந.மு. துணுக்குகள்..……....126

9.7 நேரடி/ பிரதான விசாரணை …...................…………………………….....126

9.7.1 பொருத்தமான சட்டவாக்கம் …………………………………………126

9.7.1.1 நீதவான் மன்றம் - நீதவான் விளக்க விசாரணை ........ ………………………...126

9.7.1.2 மேல் நீதிமன்றம் - நீதிபதி விளக்க விசாரணை ……..........…………………….127

9.7.1.3 மேல் நீதிமன்றம் - யூரர் விளக்க விசாரணை …...........………………………..127

9.7.2 பிரதம விசாரணையை மேற்கொள்ளும் போது ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டிய குறிப்புக்கள் ……………………………………………….………………...128

9.8 குற்றம் சாட்டப்பட்டவரை சாட்சியம் வழங்கும்படி கோருதல் …………………..128

9.9 குறுக்கு விசாரணை ………………………………………………………..129

9.9.1 பொது ……………………………………………………………………129

9.9.2 உரிய சட்டவாக்கம்…………………………………………………………..129

9.9.3 குறுக்கு விசாரணை நடைமுறை அம்சங்கள் ................………………………130

9.9.4 குறுக்கு விசாரணைக்கு சட்டத்தரணி தயாராகுதல் ……………………………130

9.10 மீள் விசாரணை ………………………………………………………………130

9.11 விவாதத்தை முடிவுக்கு கொண்டு வருதல் ……………………………………..131

9.11.1 பொது …………………………………………………………………………131

9.11.2 பயனுள்ள முக்கிய துணுக்குகள் …...……………………………………..............131

9.12 பரீட்சித்தல் ஒரு நியாயமான சந்தேகத்திற்கு அப்பாலான குற்ற உணர்வு…...…131

9.13 வழக்குத்தொடுனரின் வழக்கின் இறுதியில் விடுவிப்பதற்காக நீதிமன்றத்தை விண்ணப்பித்தல் ...........................................................................................................132


**அத்தியாயம் 10**

**சாட்சியத்தின் ஆட்சி**


10.1 பொது ……………………………………………………………………..133

10.2 ஒப்புறுதிப்படுத்தல் ..………………………………………………………134

10.3 சொல்லக்கேட்ட சான்று ……………………………………………………134

10.4 ஆவணச் சான்று …………..……………………………………….…………135

10.5 சூழ்நிலைச் சான்று ……………..……………………………..………136

10.6 சாட்சியின் சான்றுரை …...……………………………………………………..137

10.6.1 சிறுவர்கள் ……………………..…………………………………………...137

10.6.2 குற்றத்துணையாளிகள் …………………………………………………………..138

10.6.3 நிபுணர் சான்று…………………………………………………………….…139

10.6.4 சாட்சிகளின் நம்பகத்தன்மை ………………………………………………….…140

10.7 டி.என்.ஏ (உடற்கூறு) கைவிரல்,உள்ளங்கை,காலடி,கையெழுத்து மாதிரிகள் …...140

10.8 அடையாள அணிவகுப்பு ……………………………………………………...141

10.9 கணனிச் சான்று ……………………………………………………………….....142

10.10 சத்தியக் கடதாசிகள் ……………………………………………………………142

10.11 ஒப்புக்கொள்ளல் கொள்ளுதல் ……...……………………………………………..142

10.12 குற்ற ஒப்புக்கொள்ளல் ……..........……………………………………………..144

10.13 துப்பாக்கிகள், குண்டுகள், ஆயுதங்கள் போன்றவை…………………………….….145

**அத்தியாயம் 11**
**விளக்கத்தின் பின்**

11.1 தண்டணை தீர்ப்பு வழங்குதல்……………………………………………….………146

11.11.1 பொது ……………………………………………………………………...……146

11.1.2 இலங்கையில் தண்டனைத் தீர்ப்பளித்தல் கட்டமைப்பு ………...……………..146

11.1.3 தண்டனை தீர்ப்பளித்தல்: தணிக்கும் மற்றும் மிகைப்படுத்தும் காரணிகள்..........148

11.1.4 தண்டனைத் தீர்ப்பளித்தல் விளைவுகள் ..……………………………………149

11.1.4.1 பண ரீதியான நட்டஈடு …………………………………………………………149

11.1.4.2 சமூக சேவை கட்டளைகள் ……...........................…..……………………..149

11.1.4.3 மறியல் வைத்தல்/ சிறைவாசம் …………..………………...…………………150

11.1.4.4 ஒத்திவைக்கப்பட்ட தண்டனை…….............……………………………………150

11.1.4.5 நிபந்தனையின் பேரிலான விடுவிப்பு ......……………………………………...151

11.1.4.6 மரண தண்டனை …………………………………………………………………152

11.1.4.7 பெண்கள் …....................................................................................................152

11.1.4.8 தொடர்புடைய சட்டவாக்கம் ..............................................................................153

11.2 மேன்முறையீடுகள் ……………………………………………………………..154

11.2.1 பொது .................................................................................................................154

11.2.2 நீதவான் மன்றத்திலிருந்து மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு …………………..154

11.2.3 மேல் நீதிமன்றத்திலிருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு ………………156

11.2.4 மேன்முறையீட்டின் விளைவுகள் ……...……………………………………….159

11.2.5 மேன்முறையீட்டிற்கான அனுமதி எப்போது தேவைப்படும் ……………………159

11.2.6 உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு ..........................................................160

11.3 நீதித்துறை மீளாய்வு ……………………………………………………………160

**அத்தியாயம் 12**
**ஏனைய தொடர்புடைய உள்நாட்டு சட்டங்கள்**

12.1 மரண தண்டனை ...................................................................................161

12.1.1 இலங்கையில் மரணத்தினால் தண்டிக்கப்படும் குற்றங்களும் குற்றமிழைப்பவர்களும் ……………………………………………………………………………………………………161

12.1.2 மறியத்தண். விலக்களிக்கப்பட்ட குற்றமிழைத்தவர்களின் வகை…………………………163

12.1.2.1 18 வயதுக்கு குறைந்த தனிநபர்கள் ……… ……………………………………....163

12.1.2.2 கர்ப்பிணித் தாய்மார்கள் ………………… ……………………………………....163

12.1.2.3 புலமை ரீதியாக இயலாதோர் …........... …………………………………………....164

12.1.2.4 மன நோயாளி ……………..……………………………………………………......164

12.2 பயங்கரவாத தடுப்புச் சட்டம் ……………………………………………………......164

12.2.1 பொது ………………………………………………………………………..……......164

12.2.2 சட்டத்தின் முக்கிய மனித உரிமை பிரச்சினைகளும் அதன் அமுல்படுத்தலும் .....164

12.3 காணாமல் போனோர் அலுவலகம் தொடர்பான சட்டம் (2016 இலக்கம் 14)..........165

12.3.1 கா.போ.அலுவல ஆணை ……..........………………………………..……..........165

12.3.2 கா.போ.அலு. சட்டத்தின் அதிகாரங்கள் ……………………………………........165

12.3.3 கா.போ.அலு. பணிகளும் கடமைகளும் ……………………………………........166

12.3.4 தேடிச்செல்லும் அலகும் பாதிக்கப்பட்டோர் சாட்சிகள் என்போரைப் பாதுகாப்பும்......166

12.4 இறப்புப் பதிவு செய்தல் - (தற்காலிக ஏற்பாடுகள் திருத்தம்) 2016ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க சட்டம் ……………………..…………………..........167

12.5 தகவல் அறியும் சட்டம் (2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கம்) …………………........167

12.6 பலவந்தமாக காணாமலாக்கப்பட்ட சகலரையும் பாதுகாக்கும் (2018ஆம் ஆண்டின் இலக்கம் 5) தொடர்பான சர்வதேச சம.வா.ச. ………..……........167

## அத்தியாயம் 13
## குற்றவியல் நீதித்துறைசார்பு தரப்பினர்

13.1 பொது ……………………………………………………………………………167

13.2 நீதிபதிகள் ………………………………………………………………………...167

13.3 நீதவான் மன்ற நீதிபதிகள் ………………………………………………………169

13.4 சமாதான நீதவான்கள் மற்றும் உத்தியோகப்பற்றற்ற நீதவான்கள் ……………169

13.5 வழக்குத் தொடுநர்கள் …………………………………………………………...169

13.6 பொலிஸார் ………………………………………………………………………..170

13.7 சட்ட வைத்திய அதிகாரி ………………………………………………………171

13.8 திடீர் மரண விசாரணை அதிகாரி ……………………………………………171

13.9 சீர்திருத்த சேவைகள் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் …………………...172

13.10 நீதிமன்ற உரை பெயர்ப்பாளர்கள் ……………………………………………172

13.11 யூரர் சபை அங்கத்தினர் ………………………………………………………172

13.12 சட்ட உதவி ஆணைக்குழு ……………………………………………………173

13.13 இலங்கை நீதிச் சேவைகள் ஆணைக்குழு ……………………………………173

13.14 இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ..........................................173

## அத்தியாயம் 14
## ஆவண வார்ப்புருக்கள் மற்றும் பின்னிணைப்புக்கள்

1. நீதிச் சேவைகளுக்கான அடிப்படை ஒப்பந்தம்
2. கண்டறிவதற்கு/ வெளிப்படுத்தலுக்கான நகர்த்தல் பத்திரம்/ விண்ணப்பம்
3. கண்டறிவதை/ வெளிப்படுத்தலை கட்டாயப்படுத்தலுக்கான நகர்த்தல் பத்திரம்/ விண்ணப்பம்
4. தள்ளுபடி செய்யும் படியான நகர்த்தல் பத்திரம்/ விண்ணப்பம் : குற்றச்சாட்டுகளில் குறைபாடுகள்/ பூர்த்தியற்ற நிலை.
5. எழுத்தாணையின்றி பெறப்பட்ட சாட்சியத்தை மறைத்துவிடுவதற்கான நகர்த்தல் பத்திரம்/ விண்ணப்பம்.
6. விவாதத்துக்கான தலைப்புக்கள் : தொகுப்புரையை/ சுருக்கத் தொகுப்புரையை முடிவுறுத்துதல்.
7. விவாதத்துக்கான தலைப்புக்கள் : தண்டனைக்கு எதிரான மேன்முறையீடு
8. மேன்முறையீட்டின் பெறுபேறு வரும் வரை விடுவித்தல்
9. நீதவான் மன்றத்தின் பாய்ச்சல் விளக்கப் பத்திரம்
10. மேல் நீதிமன்றத்தின் பாய்ச்சல் விளக்கப் பத்திரம்

## அத்தியாயம் 15
## வளங்கள்

**உள்நாட்டுச் சட்டங்கள்/ பிரமாணங்கள்**

(அ) தண்டனைச் சட்டக் கோவை (1883ஆம் ஆண்டின் இலக்கம் 02)
(ஆ) குற்றவியல் நடவடிக்கைச் சட்டக் கோவை (1979ஆம் ஆண்டின் இலக்கம்15)
(இ) சான்றுகள் (விஷேட ஏற்பாடுகள்) சட்டம் (1995ஆம் ஆண்டின் இலக்கம் 14)
(ஈ) பிணை வழங்கல் சட்டம் (1997ஆம் ஆண்டின் இலக்கம் 30)
(உ) நீதித் துறைச் சட்டம் (1978ஆம் ஆண்டின் இலக்கம் 2)
(ஊ) தீங்கிழைக்கும் ஆயுதங்கள் சட்டம் (1996ஆம் ஆண்டின் இலக்கம் 8)
(எ) பயங்கரவாத தடைச் சட்டம் (1979ஆம் ஆண்டின் இலக்கம் 48)
(ஏ) காணாமல் போனோர் அலுவலகம் சட்டம் (2016ஆம் ஆண்டின் இலக்கம் 14)
(ஐ) சான்றுகள் கட்டளைச் சட்டம்
(ஒ) சிறுவர் மற்றும் இளைஞர்கள் கட்டளைச் சட்டம்

**சர்வதேச ஒப்பந்தங்கள்**

(அ) சிவில், அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச ஒப்பந்தம்
(ஆ) சித்திரவதை மற்றும் ஏனைய கொடூரமான மனிதாபிமானமற்ற விதத்தில் நடத்துதல் அல்லது தரக்குறைவாக மதித்தல் அல்லது தண்டனை போன்றவற்றிக்கு எதிரான உடன்படிக்கை.
(இ) சித்திரவதை மற்றும் ஏனைய கொடூரமான மனிதாபிமானமற்ற நடத்துதல் அல்லது தரக்குறைவாக மதித்தல் அல்லது தண்டனைகளுக்கு எதிரான விருப்பத்திற்குரிய உடன்படிக்கை.

(ஈ) பலவந்தமாக காணாமலாக்கப்பட்ட சகலரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை.

(உ) சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபை உடன்படிக்கை

(ஊ) பெண்களுக்கெதிரான அனைத்து வித பாகுபாடுகளையும் இல்லாதொழிக்கும் மாநாடு.

**<u>சர்வதேச பிரகடனங்கள்/ கொள்கைகள்/ வழிகாட்டிகள்</u>**

(அ) மனித உரிமைகள் தொடர்பான உலகளாவிய பிரகடனம்

(ஆ) பெண் சிறைக்கைதிகளை நடத்தும் விதம் மற்றும் பெண் குற்றவாளிகள் தொடர்பான பராமரிப்பற்ற நடவடிக்கைகள் பற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் சட்ட விதிகள்.

(இ) குற்றவியல் நீதித்துறை வழிமுறையில் சட்ட உதவி பெறும் வசதி மீதான ஐ.நா. சபையின் கொள்கைகள் மற்றும் வழிகாட்டிகள்.

(ஈ) சட்டத்தரணிகளின் வகிபாகம் மீதான ஐ.நா. சபையின் அடிப்படைக் கொள்கைகள்

(உ) ஆசியான் (ASEAN) அமைப்பின் மனித உரிமைகள் பிரகடனம்.

**<u>அமைப்புகள்</u>**

(அ) சர்வதேச சட்டத் தரணிகள் சங்கம்

(ஆ) இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்

(இ) சட்ட உதவி ஆணைக்குழு

**<u>இக்கையேட்டை எவ்வாறு பயன்படுத்துவது?</u>**

இக்கையேட்டின் முதல் பிரிவானது இலங்கைக்கு ஏற்புடைய ஒரு சில அடிப்படை ரீதியான குற்றவியல் சட்டப் பிரச்சினைகளையும் அதேபோன்று ஒரு சில நிலைமாற்று நீதித்துறை பிரச்சினைகளையும் கையாள்வது தொடர்பான விடயங்களைக் கொண்டுள்ளது. ***அத்தியாயம் 1 மற்றும் 2*** என்பன குற்றம் சுமத்தப்பட்டுள்ளவரின் உரிமைகள் பற்றியும் அதே போன்று எதிர்த்தரப்பு சட்டத்தரணிகளின் பொறுப்புக்கள் பற்றியும் எடுத்தியம்புகின்றன. ***அத்தியாயம் 3*** ஊடாக, கட்சிக்காரர் ஒருவரை எவ்வாறு அணுகுவது மற்றும் அவருடன் விசுவாசத்தை எவ்வாறு வளர்த்துக் கொள்வது பற்றிய வழிகாட்டல்களும், அதே போன்று சிறுவர்கள், பெண்கள், பெண் - பெண் உறவாளர்கள், ஆண் - ஆண் உறவாளர்கள், பால் வித்தியாவமற்ற உறவாளர்கள், திருநங்கை இடைப்பாலின உறவாளர்கள் மற்றும் உள ரீதியாக ஊனமுற்றவர்கள் உள்ளிட்ட பாதிப்புக்குள்ளாகும் விஷேட குழுக்குள் (விஷேட மக்கள் கூட்டத்தினர்) தொடர்பான பிரச்சினைகளும் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. அதே போன்று, ***அத்தியாயம் 4*** ஊடாக சித்திரவதைக்கு ஆளாகியுள்ள அல்லது ஏனைய விதத்திலான மனித உரிமை மீறல்களுக்கு உள்ளாகியுள்ள கட்சிக்காரர் ஒருவரை அணுக வேண்டிய முறை பற்றியும் அவரை பிரதிநிதித்துவப்படுத்த வேண்டிய முறை பற்றியும் வழிகாட்டல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ***அத்தியாயம் 5*** ஊடாக வழக்கொன்றுக்கு தயாராகுவது தொடர்பாவும், அதன் கருப்பொருளையும், வாதத்தையும் எவ்வாறு முன்வைப்பது தொடர்பாகவும் (இலங்கையில் உள்ளவறான குறித்த வழக்குரை/ வாதத்தை) உதவி வழங்கி நிற்கின்றது. அத்துடன் ***அத்தியாயம் 6*** ஆனது, இலங்கயில் நீதிமன்ற நியாயாதிக்கம் தொடர்பான கண்ணோட்டமொன்றை வழங்கி நிற்பதுடன் ***அத்தியாயம் 7*** இலங்கையில் வழக்கொன்றின் விசாரணைக் கட்டங்கள் ஆராயப்படுகின்றன. ***அத்தியாயம் 8*** ஒரு சில முன் - விளக்க விடயங்கள் ஆராயப்படுவதுடன் ***அத்தியாயம் 9*** இலங்கையில் விளக்க வழிமுறை மற்றும் விளக்கம் தொடர்பான விடயங்கள் பற்றியும் விபரங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதே போன்று ***அத்தியாயம் 10*** ஆனது, பொருத்தமான சான்றுச் சட்ட விதிகள் பற்றிய கருத்தாடலொன்றை

வழங்குவதுடன் ***அத்தியாயம் 11*** விளக்கத்துக்குப் பிந்திய அதாவது தண்டனை வழங்குதல் மேன்முறையீடு மற்றும் மீளாய்வு போன்ற விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. மேலும், ***அத்தியாயம் 12*** பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் அதனோடிணைந்த பிரச்சினைகள் உள்ளிட்ட இலங்கையின் சட்டவாக்கம் தொடர்பான ஏனைய விடயங்களும், ***அத்தியாயம் 13*** கீழ் இலங்கையின் குற்றவியல் நீதித்துறை சார்பு பொறிமுறையில் எதிர்நோக்கப்படும் பல்வேறுபட்ட குற்றவியல் நீதித்துறை சார்பு தரப்பினர் பற்றியும் ஆராயப்படுகின்றன. ***அத்தியாயம் 14 மற்றும் 15*** என்பவற்றுள் ஒரு சில பின்னிணைப்புக்கள் மற்றும் சட்டத்தரணிப் பணிகளின் மாதிரித் தயாரிப்புக்களும், இக்கைநூல் வரைபில் காட்டப்பட்டள்ள வளங்கள் பற்றியும் விபரிக்கப்பட்டுள்ளன.
எனவே, இதனைப் பயன்படுத்துவோர் அனைவருக்கும், அவர்கள் புதிதாக தகுதிபெற்றவர்கள் என்றாலும் சரி, துறைசார் வல்லமை பெற்றவர்கள் என்றாலும் சரி, இங்குள்ள குறிப்புரைகள் உள்ளிட்ட உள்ளடக்க விடயங்கள் அனைத்தும் மிகவும் பிரயோசனம் மிக்கதாக அமையும் என்பதையும் நாம் உளப்பூர்வமாக எதிர்பார்க்கின்றோம்.

**அறிமுகம்**

இந்தப் பயிற்சிக் கையேடானது, இலங்கையின் குற்றவியல் நீதித்துறையில் உள்ள அனைத்துவித அதாவது, கட்சிக்காரரின் உரிமைகள், சட்டத்தரணியின் கடமைகள், வழிமுறைகள், சான்றுச் சட்ட விதிகள், விளக்கத்துக்கு முந்திய விளக்கம் சார் விடயங்கள் மட்டுமல்லாமல் தண்டனை வழங்குதல் மற்றும் மேன்முறையீடு செய்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக நிலையான, செயற்பாட்டு ரீதியான வழிகாட்டலை வழங்குமென எதிர்பார்க்கப்படுகினறது. இக்கையேட்டை வரைவதில் இலங்கையிலும் வெளிநாட்டிலும் உள்ள பல்வேறுபட்ட நீதித்துறை சார் தரப்பினர்களின் ஆலோசனைகள் பெறப்பட்டன. இலங்கையின் குற்றவியல் மற்றும் குற்றவியல் வழிமுறை சார் சட்டங்கள் மீது இக்கையேடு அதன் கவனத்தை செலுத்துவதுடன் பிரதானமாக, இலங்கையில் குற்றங்கள் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டுள்ள தரப்பினரை பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்தரப்பு குற்றவியல் சட்டத்தரணிகள் தொடர்பான விடயங்கள் மீதும் அதன் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் இக்கையேடானது, இலங்கையின் குற்றவியல் நீதித்துறையின் கீழ் செயற்படுகின்ற வழக்குத் தொடுனர்கள், நீதிமன்ற பதிவாளர்கள், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் உள்ளிட்ட (எனினும் மட்டுப்படுத்தப்படவில்லை) ஏனைய தரப்பினருக்கும் மிகவும் பெறுமதிமிக்கதொன்றாக அமையும் என்றும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

*ஜஸ்லின் பிரவுன்*
*நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர், இலங்கை*
*நீதிக்கான சர்வதேச இணைப்புறவு அமைப்பு.*

*Jacques du Preez*
*Legal Training Director*
*International Bridges to Justice*

<u>முகவுரை</u>

முறுகல் நிலைக்குப் பிந்திய இக்கால கட்டத்தில், இலங்கையில் சட்டத்துறை ஆட்சியை மீள உறுதிப்படுத்தி, அத்துறையில் நிறுவனங்களை மீளக்கட்டியெழுப்பி, குற்றவியல் சட்டத்துறை மீது பொதுமக்களின் நம்பிக்கையை மீள பெற்றெடுப்பதற்கான பாரிய கடப்பாட்டில் இலங்கை இருந்து வருகின்றது. இதற்காக வேண்டி, உண்மையை கண்டறியும் நோக்கில், குற்றமிழைத்தவர்களை பொறுப்புகூறவைத்தவாறும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கிவாறும் செயல்பட்டு இறந்த காலத்தை விளிப்பதற்கான துணிவும், மனத்திடமும் எம்மிடம் இருத்தல் வேண்டும். அதே முறையில், நாம் எமது பிரஜைகளுக்கு அவர்களது உரிமைகள் தொடர்பான அறிவூட்டலை வழங்கியும், அதற்குரிய மூலவளங்களை கிடைக்கச் செய்தவாறும், சர்வதேச மட்டத்திலான சிறந்த செயன்முறைகளை அங்கீகரிப்பதனூடாக தற்போது நடைபெற்று வரும் விதத்தில், எமது சட்டத்துறை அமைப்புக்களை பலப்படுத்தியவாறும் செயல்பட்டு, நாம் எமது எதிர்காலத்தை அணுகவேண்டியுள்ளோம்.

உயர்வான மட்டத்திலுள்ள அத்தியவசிய சட்டத்துறை வளங்கள் இடர் நிலையில் காணப்படும் இந்த நிலைமாறல் காலகட்டத்தில், இக்கைநூலானது மிகவும் வரவேற்புக்குரியதாக அமைகின்றது. இந்நூலானது, தற்போதுள்ள நூல்களில் காணப்படும் இடைவெளியை நிரப்புவதுடன், சட்டத்தரணிகளுக்கும், கல்விசார் சமூகத்தினருக்கும், ஆர்வமுடைய பிரஜைகளுக்கும், தேவையான விபரங்களை அறியக்கூடிய வழிகாட்டியாகவும் அமைகின்றது. மேலும் இக்கைநூலானது, பிரச்சினைக்குட்பட்டுள்ள சட்ட அதிகாரத்தரப்பு சார்பான அத்துடன் குற்றவியல் நடவடிக்கைகளின் பல்வேறு நகர்வுக் கட்டங்கள் தொடர்பில் முழுமையானதோர் நோக்கத்தைக் கொண்டுள்ளது மாத்திரமல்லாமல், மிகவும் எளிதான முறையில் பயன்படுத்தக்கூடியதான, சகலரையும் சென்றடையக்கூடிய, பக்கச் சார்பற்ற செயல்முறை ரீதியான மற்றும் உள்பார்வையும் கொண்டதாக அமைந்துள்ளது. தரப்பினருடனான நேர்காணல், நிரல்கள், விளக்கத்திற்கு தயாராகுதல் மற்றும் மன்றுரைப்பு பேச்சுவார்த்தை போன்ற தலைப்புகளின் கீழ் வரும் தலைப்புகள் காரணமாக இலங்கையிலுள்ள சட்டத்தரணிகள் இந்நூலை மிகவும் பிரயோசனம் மிக்கதாகவும் கண்டுகொள்வதுடன், இவற்றினூடாக தமது தரப்பினரை மிகவும் திறமையாகவும், வினைத்திறன் மிக்கதாகவும் அத்துடன் வெற்றிகரமானதாகவும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும் இந்நூல் உதவுகின்றது.

இலங்கையின் முறுகலுக்குப் பிந்திய காலத்திற்குரிய சட்டத்துறை சார்பு முயற்சிகள் மற்றும் முன்னேற்றங்கள் தொடர்பில் கணிசமான பங்களிப்பை இந்நூல் வழங்கும் என்பதில் நாம் பூரண நம்பிக்கை கொண்டுள்ளோம்.

தந்தை நொயல் டயஸ்
சட்டத்தரணி
கத்தோலிக்க சட்டத்தரணிகள் அமைப்பின் தலைவர்
பேராசிரியர், இலங்கை சட்டக் கல்லூரி

பிரியந்தா கமகே
சட்டத்தரணி
சமாதான நீதவான், உத்தியோகப்பற்ற நீதவான்
ஆணையாளர், இலங்கை சட்ட உதவி வழங்கும் ஆணைக்குழு
இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுத் தலைவர்
நல்லுறவுகான வலய பணிப்படையின் உறுப்பினர்
தலைவர், கேகாலை சட்டத்தரணிகள் சங்கம்

## (i) <u>அடிப்படைக் கண்ணோட்டம்</u>

இலங்கை ‘‘பொதுச் சட்டத்தை’’ கொண்டதோர் நாடாகும். இதற்கு மாறாக அமைந்துள்ள கோவைப்படுத்தப்பட்ட குடியியல் சட்டப் பாரம்பரியமானது, இங்கு மேலோங்கி நிற்பதுடன், குறித்த பொதுச் சட்டப் பராம்பரியம் கூட தேசிய சட்டத்தை வரைவிலக்கணப்படுத்துவதிலும் அதனை பிரயோகிப்பதிலும் முன்தீர்ப்புச் சட்டம் - நீதிமுறை அபிப்பராய அமைப்பு – (முன்தீர்ப்பு வழி நிற்றல் மற்றும் தீர்ப்பு அடிப்டை நியாயம்) மீதே பெருமளவில் தங்கியுள்ளது. குறித்த நீதித்துறைக் கட்டமைப்பானது கண்டியச் சட்டம், ரோமன் - ஒல்லாந்தர் சட்டம், ஆங்கிலேய சட்டம், தேச வழமைச் சட்டம் மற்றும் முஸ்லிம் சட்டம் போன்றவற்றின் கலவையொன்றாகும்.

உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்படும் தீர்ப்புக்கள் மிகவும் அதிகாரத்துவம் மிக்கதாக அமைவதுடன், அதற்கு அடுத்தபடியாக மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்புக்களும் அடுத்தபடியாக முறையே மேல் நீதிமன்ற, மாவட்ட நீதிமன்ற, நீதவான் மன்ற மற்றும் ஆரம்ப நீதிமன்றங்களின் தீர்ப்புக்களும் ஒழுங்கு வரிசையில் அதிகாரத்துவம் பெறுகின்றன. குற்றவியல் சட்டத்தின் கீழ் வரும் வழக்குகள் தொடர்பான முதனிலை நியாயாதிக்கத்தை நீதவான் மன்றங்களும் மேல் நீதிமன்றங்களும் கொண்டுள்ளன.

இலங்கையில் குற்றவியல் சட்டத்தை ஒழுங்குபடுத்தும் பிரதான மூலங்கள் பின்வருமாறு :

- இலங்கையின் யாப்பு
- இலங்கை குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக் கோவை
- இலங்கை சான்றுகள் கட்டளைச் சட்டம்
- இலங்கை தண்டனை சட்டக் கோவை மற்றும்
- இலங்கை நீதித்துறை சட்டம்

இலங்கை அரசு மேல் நீதிமன்றத்தில் சட்ட மா அதிபர் திணைக்களம் ஊடாக குற்றவியல் வழக்குகளை முன்னெடுப்பதுடன் இவை பொதுவாக கொலை வழக்குகள் மற்றும் அரசக்கெதிரான விளக்கங்களாக அமைகின்றன. அதேவேளை, ஏனைய குற்றவியல் தவறுகள் நீதவான் மன்றங்களில் விசாரிக்கப்படுகின்றன. நீதவான் மன்றங்களில் விசாரிக்கப்படும் வழக்குகள் நீதவான் ஒருவரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தீர்ப்புக்கள் வழங்கப்படும். அதேவேளை மேல் நீதிமன்ற வழக்குகள் நீதிபதி ஒருவரால் அல்லது யூரர் சபை ஊடாக விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்படும்.

அதேவேளை, மேன்முறையீட்டு நீதிமன்றமானது கீழ் நீதிமன்றங்களினால் வழங்கப்படும் தீர்ப்புக்களுக்கு எதிரான மேன்முறையீடுகளை விசாரிக்கும் பொறுப்பினைக் கொண்டுள்ளது. இவ்வாறான மேன்முறையீடொன்று பொதுவாக மூன்று நீதிபதிகளைக் கொண்ட குழாம் ஒன்றினால் இங்கு விசாரிக்கப்படும். அதேவேளை, உயர் நீதிமன்றம் கொழும்பில் அமைந்துள்ளதுடன் எந்தவித வழக்கினதும் இறுதி மேன்முறையீடு இங்கு விசாரிக்கப்படுவதுடன் இவ்வாறான மேன்முறையீடுகள் வழமையாக மூன்று நீதிபதிகளைக் கொண்ட குழாமொன்றினால் விசாரிக்கப்படும். ஏனைய நாடுகளில் உள்ளது போன்று, அரசியல் யாப்பின் ஏற்பாடுகளுக்கு வரைவிலக்கணம் வழங்கி அவற்றை பிரயோகிக்கும் தகுதி வாய்ந்த அரசியலைப்பு நீதிமன்றமொன்று இலங்கையில் இல்லை.

## (ii) சர்வதேச உடன்படிக்கை கடப்பாடுகள் மற்றும் ஏனைய ஏற்புடைய உலகளாவிய தர நிர்ணயங்கள்

மனித உரிமைகள் மற்றும் குற்றவியல் நீதித்துறை சார்பான பல முக்கிய சர்வதேச உடன்படிக்கைகளில் இலங்கை கையெழுத்திட்டு அவற்றை ஏற்றுக்கொண்டுள்ளது. இலங்கையின் தேசிய சட்டங்களை மேற்குறித்த சர்வதேச உடன்படிக்கைகளின் கடப்பாடுகளுக்கு அமைவாக நீதி

முறைப் பொருள்கோடலுக்கு உட்படுத்தக் கூடியவாறு வாதாடும் படி சட்டத்தரணிகள் ஊக்கமூட்டப்படுகின்றனர். இவ்வாறான உடன்படிக்கைகளும் அவற்றுடன் தொடர்புடைய திகதிகள், கையொப்பங்கள், உறுதிப்படுத்தல்கள் அல்லது இலங்கை அவற்றை அடைந்தமை பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) மனித உரிமைகள் தொடர்பான உலகளாவிய பிரகடனம். (1955 டிசம்பர் மாதம் 14ஆம் திகதி உறுதிப்படுத்தப்பட்டது)

(ஆ) சிவில், அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச ஒப்பந்தம். (1980 ஜுன் மாதம் 11ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டது)

(இ) பெண்களுக்கு எதிரான அனைத்து வித பாகுபாடுகளையும் இல்லாதொழிக்கும் மாநாடு. (1981 ஒக்டோபர் மாதம் 05ஆம் திகதி தனியார் முறைப்பாடுகள் வழிமுறைகளுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டது)

(ஈ) சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐ.நா. சபையின் மாநாடு. (1991 ஜுலை மாதம் 12ஆம் திகதி ஏற்றுக் கொள்ளப்பட்டது) மற்றும்

(உ) சித்திரவதை மற்றும் ஏனைய கொடூரமான மனிதாபிமானமற்ற விதத்தில் நடத்துதல் அல்லது தரக்குறைவாக மதித்தல் அல்லது தண்டனை போன்றவைக்கு எதிரான உடன்படிக்கை. (1994 ஜனவரி மாதம் 03ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டது)

(ஊ) பலவந்தமாக காணாமலாக்கப்பட்ட சகலரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை. (2016 மே மாதம் 25ஆம் திகதி தனியார் முறைப்பாடுகள் வழிமுறைகளுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது)

(எ) சித்திரவதை மற்றும் ஏனைய கொடூரமான, மனிதாபிமானமற்ற விதத்தில் நடாத்துதல் அல்லது தரக்குறைவாக மதித்தல் அல்லது தண்டனை போன்றவற்றுக்கு எதிரான விருப்பத்துக்குரிய உடன்படிக்கை. (2017 டிசம்பர் மாதம் 05ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டது)

(ஏ) ஊனமுற்றவர்களின் உரிமைகள் மீதான உடன்படிக்கை. (2016 பெப்ரவரி மாதம் 08ஆம திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டது)

சட்ட உடன்படிக்கைகள் தொடர்பான 1969ஆம் ஆண்டின் வியன்னா மாநாடு, குறித்த நாடுகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள உடன்படிக்கைகளுக்கு அந்நாடுகள் நல்லெண்ணத்துடன் உடன்படல் வேண்டும் என்றும் இவ்வாறான சர்வதேச உடன்படிக்கைகளை நிலைநிறுத்தத் தவறும் பட்சத்தில் அதனை நியாயப்படுத்தும் வகையில் உள்நாட்டுச் சட்டங்களில் உள்ள ஏற்பாடுகளை பயன்படுத்தக் கூடாதென்றும் குறிப்பிட்டுள்ளது. அதேபோன்றே, சர்வதேச சட்டத்தின் கீழ் வரும் கடப்பாடுகளுக்கு அமைவாக உள்நாட்டுச் சட்டங்கள் இணங்கிச் செல்லல் வேண்டும் என்பது சர்வதேச சட்டத்தின் கீழ் நன்கு ஏற்றுக் கொள்ளப்பட்டதோர் கோட்பாடாகும். இலங்கை நாடானது பல்வேறுபட்ட சர்வதேச மனித உரிமைகள் சார்பு உடன்படிக்கைகளுக்குரிய தரப்பொன்றாக இருந்த போதிலும் கூட இவ் உடன்படிக்கைகளில் உள்ள சட்டரீதியான பொறுப்புக்கள் உரிய முறையில் செயல்படுத்தப்படாமை குறித்து இலங்கை கண்டனத்துக்கு உள்ளாகியுள்ளது.

### (iii) இலங்கையில் நிலைமாறல் நீதித்துறை

**(அ) அறிமுகம்**

நீண்டகால முறுகல் மற்றும் அடக்குமுறைகளிலிருந்து மீண்டுவரும் நாடுகளில் காணப்படும் பாரிய அளவிலான அல்லது முறைப்படுத்தப்பட்ட, அத்துடன் அந்நாடுகளிலுள்ள வழமையான நீதித்துறை முறைமையூடாக போதுமான தீர்வு வழங்க முடியாத மட்டத்திலான மனித உரிமை

மீறல்கள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தும் வழிமுறைகளையே நிலைமாறல் நீதித்துறை எனக் குறிப்பிடுகின்றது.[2] இதனை விரிவாக உற்றுநோக்கும் போது, குறித்த நிலைமாறல் நீதித்துறையானது உண்மை, பொறுப்புக் கூறல், இழப்பீடு மற்றும் நீதி போன்றவற்றை வழங்குவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.

இலங்கை நாடானது 26 வருடங்கள் நீடித்துச் சென்ற சிவில் யுத்தமொன்றில் சிக்குண்டிருந்ததுடன் அவ் யுத்தம் 2009 மே மாதம் முடிவுக்கு வந்தது. குறித்த சிவில் யுத்தம் முடிவுற்று நீண் காலம் கடந்துள்ள போதிலும் கூட அப்போதைய மனித உரிமை மீறல்கள், பலவந்தமாக காணாமலாக்கப்பட்டோர், பொறுப்புக் கூறல் இல்லாமை மற்றும் அரசாங்க மட்ட வெளிப்படைத்தன்மை போன்றவற்றின் தாக்கங்கள் இன்றும் கூட தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. இதேவேளை 2015ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின்பு அரசாங்கமானது நிலைமாறல் நீதித்துறைக்கான கடப்பாட்டை ஏற்றுக்கொண்டுள்ளது.

### (ஆ) ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களுக்கு உடன்படுதல்

ஐ.நா. சபையின் 30/1 இலக்க தீர்மானத்துக்கு 2015 ஒக்டோபர் மாத்தில் இலங்கை இணை அனுசரணை வழங்கியதுடன் அதனூடாக நீதி, நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் போன்றவற்றுக்கு ஊக்கமளிக்கும் விதத்தில் நான்கு நிலைமாறல் நீதித்துறை பொறிமுறைகளை உருவாக்குவதற்கு உறுதியும் வழங்கியது. இவற்றுள், சர்வதேச நீதிபதிகள், வழக்குத் தொடுனர்கள், விசாரணையாளர்கள் போன்றோர் அடங்கிய பொறுப்புக் கூறல் பொறிமுறை ; உண்மையறிதல் மற்றும் நல்லிணக்க பொறிமுறை ; மற்றும் காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் உள்ளிட்ட இழப்பீடு வழங்கல் அலுவலகம் போன்றறை அடங்குகின்றன. எனினும் இது வரை காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் மாத்திரமே நிறுவப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட பணிப்புரைகளை 2016 ஜுன் மாதத்தில் ஏற்றுக் கொண்டது. அதனூடாக, தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை துஷ்பிரயோகங்களிலிருந்து குறிப்பாக கைதாகும் போதும், அதைத் தொடர்ந்து தடுத்து வைத்தலின் போதும், பாதுகாக்க வேண்டியுள்ளதுடன் அவர்களுக்கு மருத்துவ மற்றும் சட்ட உதவி வழங்குதல், கைதினை பதிவு செய்தல் போன்ற வசதிகளையும் வழங்குதல் வேண்டும். மேலும் இலங்கை ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரவதைக்கு எதிரான செயற்குழுவுக்கும் (CAT) அதே போன்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் செயற்குழுவுக்கும் (UNHRC) அவ்வப்போது உரிய அறிக்கைகளை சமர்ப்பித்தும் வந்துள்ளது. எனினும் இங்கு பரவலான சித்திரவதைகள் மற்றும் பலவந்தமான காணாமல் போதல்கள் நடைபெறுகின்றன என்ற வகையிலான குற்றச்சாட்டுகள் மீது இவ்விரு செயற்குழுக்களும் தமது ஆழ்ந்த கவலையினை தெரிவித்துள்ளன.[3]

அதேவேளை 2017 மார்ச் மாதத்தில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சில் இலங்கையின் செயலாற்றுகையை அதன் மிகவும் அண்மித்த தீர்மானத்தின் (2015) கீழ் மீளாய்வு செய்ததடன், இலங்கை ஏற்றுக்கொண்டிருந்த கடப்பாடுகளை முழுமையாக அமுல்படுத்துவதற்கு வேண்டிய காலக்கெடுவையும் நீடித்தது.

[2]"What is Transitional Justice?" *International Centre for Transitional Justice: Justice Truth Dignity.2018,* *https://www.ictj.org/about/transitional-justice.*

[3]Pinto-Jayawardena, Kishli. "Will International Treaties Protect Human Rights in Sri Lanka." Colombo Telegaoh, 10 December 2013, https://www.colombotelegraph.com/index/php/will-international-treaties-protect-human-rights-in-sri-lanka/.

**(இ) தாமதித்த நீதி**

குற்றவியல் வழக்குகளில் ஏற்படும் காலதாமதத்தையும் அதிகாரத் துஷ்பிரயோகத்தையும் இல்லாமல் செய்யவும், அதேபோன்று பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நேரத்தில் நீதி கிடைப்பதை உறுதி செய்யவும் வேண்டி இவ்வழக்குகள் மீது கால நிர்ணயம் விதிக்கப்படல் வேண்டும். சில வழக்குகள் வருடத்தில் ஒரே முறையே விசாரிக்கப்படுகின்றன. இதற்குக் காரணம் வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களை வருடத்தில் இரு முறை நீதிமன்றத்தில் இடமளிப்பதற்குரிய வசதிகள் இல்லாத நிலைமையேயாகும்.[4] அதேபோன்று நீதிபதிகளும் வழக்குத் தொடுனர்களும் நீதிமன்றத்துக்கு சமூகமளிக்க தவறுவதால் வழக்குகள் தாமதமாகின்றன. அதேபோன்று உரிய பொறிமுறையொன்று செயற்படாமையினால் (ஒரு வழக்கை வழமையாக விசாரிக்கும் நீதிபதி சமூகமளிக்கத்தவறினால் அவருக்குப் பதிலாக பிறிதொரு நீதிபதி வழக்கு விசாரணையை முன்னெடுப்பதற்குரிய ஏற்பாடுகள் நீதி சேவை ஆணைக்குழுவில் இருத்தல்) வழக்குகள் பின்போடப்படுகின்றன[5]. மேலும் நீதிமன்றங்களின் பற்றாக்குறையினால் பலதரப்பட்ட குற்றவியல் வழக்குகள் கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளன. அதே போன்று பெரும் எண்ணிக்கையிலான வழக்குகள் இருக்கின்ற படியால் அவை அனைத்தையும் ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் விசாரணைக்குட்படுத்துவது சாத்தியமற்றதாகவே உள்ளது.

**(ஈ) குற்றவியல் பொறுப்புக் கூறல்**

நாட்டில் 26 வருடங்கள் நீடித்த சிவில் யுத்த காலத்தின் போது நடைபெற்றுள்ள அக்கிரமங்கள் தொடர்பான குற்றவியல் பொறுப்புக் கூறல் நடவடிக்கை முறையானது நிலைமாறல் நீதித்துறையில் உள்ளதோர் முக்கியமான அம்சமாகும். ஜனாதிபதி ராஜக்ஷ 2010இல் உருவாக்கிய கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (LLRC) வுற்கு 2002 முதல் 2009 வரையிலான காலப்பகுதியில் நிகழ்ந்துள்ள சம்பவங்களை விசாரணை செய்வத்றகான ஆணை வழங்கப்பட்டது. எனினும் இவ்வாணைக்குழுவிற்கு இருந்த மட்டுப்படுத்தப்பட்ட ஆணை மற்றும் அதன் உணரப்பட்ட பக்கச்சார்புத் தன்மை மீது சர்வதேச ரீதியிலான விமர்சனம் வெளிவந்தது.[6]

மேலும் இலங்கை அரசாங்கம் குற்றம் புரிந்துள்ளதாக கூறப்படுவோருக்கு எதிராக விசாரணை செய்து சட்ட நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளது. அதேவேளை, வழக்குத் தொடர்தல் நடவடிக்கையில் சர்வதேச பங்கேற்புக்கு இடமில்லையென்றும் யுத்த வீரர்கள் (எல்ரீரீஈ அமைப்புக்கு எதிராக யுத்தம் புரிந்த இராணுவ அதிகாரிகள்) தண்டிக்கப்படமாட்டார்கள் என்றும் அரசாங்கம் 2017இல் வலியுறுத்திக் கூறியது.[7]

**(உ) நீதித்துறை முறைமையில் பல்வகைமை இல்லாமை**

இலங்கைச் சமூகமானது பிரதானமாக சிங்களவர்களையும் சிறுபாண்மையினாக தமிழர்களையும் முஸ்லிம்களையும் கொண்டுள்ளது. இங்கு சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் உத்தியோகபூர்வ மொழிகளாக இருக்கின்றன. எனினும், தற்போதுள்ள நீதித்துறை முறைமையில் சனத்தொகையின் பல்வகைத்தன்மை பிரதிபலிக்கப்படவில்லை என்பதுடன் நீதித்துறை ஆளணியினர் மத்தியில் சிங்களர்களே பெரும்பான்மையினராக உள்ளனர். எனவே தமிழ் தெரிந்த அதிகாரிகள் மற்றும் உரை பெயர்ப்பாளர்கள் நீதிமன்றங்களில் குறைவாகக் காணப்படுவதால் தமிழ் மொழி பேசும் வழக்காளிகள் தமது நீதித்துறை நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகிறார்கள். அதேபோன்று நீதித்துறை சார் உயர் பதவிகளில் பெண்களின் பிரதிநிதித்துவமும் குறைந்தே காணப்படுகின்றது.

[4] "Truth Benind Law's Delay." *The Daily Mirror. 24 October 2016. Web. 16 July 2018.*

[5] "Truth Benind Law's Delay." *The Daily Mirror. 24 October 2016. Web. 16 July 2018*

**(ஊ) நீதிமன்ற ஆளணியினர் மத்தியில் நிர்வாக ரீதியிலான செயற்றிறனின்மை**

ஆளணியினர் பற்றாக்குறையானது குற்றவியல் வழக்குகளை தேவையில்லாத தாமதத்துக்கு இட்டுச் சென்றுள்ளது. அதேபோன்று, ஆளணியினர் தமது கடமைகளை உரிய முறையில் மேற்கொள்ளும் பொருட்டு நன்கு அறிவூட்டி பயிற்றுவிக்கப்படல் வேண்டும். அதேவேளை, குறித்த முறைமையின் கீழ், வழக்குகள் தாமதமின்றியும் செயற்றிறன் மிக்கதாகவும் முன்னெடுக்கப்படுவதற்கு போதிய தகுதிவாய்ந்த ஆளணியினர் தேவைப்படுகின்றனர்.

**(எ) நீதித்துறை**

ஜனநாயக சூழலொன்றின் கீழ், நீதித்துறையின் வகியாகமதானது அரசாங்கத்தின் அரசியல் சார்பு கிளைகள் மீது செம்மைப்படுத்தல் மற்றும் சமநிலைப்படுத்தலை வழங்கி நிற்கின்றது. தற்போதுள்ள யாப்பின் கீழ் நீதித்துறை சுயாதீனத்துக்கும் அதிகாரங்களை பிரித்து வழங்குவதற்குமான விஷேட ஏற்பாடுகள் காணப்படுவதில்லை. இலங்கையிலுள்ள நீதிபதிகள், சட்டவாதிகள் போன்றோரின் சுயாதீனத்தன்மை பற்றிய ஐ.நா. வின் விஷேட அறிக்கையாளரினால் 2017 மார்ச் மாதத்தில் பூர்த்தி செய்யப்பட்ட அறிக்கையின் படி, நீதித்துறையில் சுயாதீனம், பக்கசார்பின்மை மற்றும் ஆற்றல் என்பவை தொடர்பில் நம்பகத்தகுந்த கவலைக்குரிய நிலைமைகள் இருப்பதாக தெரியவந்துள்ளது.[8] பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படும் குற்றப்பிரேரணை வழிமுறையொன்றின் ஊடாக உயர் நீதிமன்ற நீதிபதிகளை பதவிகளிலிந்து அகற்ற முடியும்.[9] நிறைவேற்று அதிகாரம் கொண்டவருக்கு தான் நினைத்தால் நீதிபதி ஒருவரை பதவியிலிருந்து நீக்கவும் முடியும் என்பதுடன் இந்நிலைமையானது நீதித்துறை மீது நிறைவேற்று அதிகாரம் கொண்டவருக்குள்ள கட்டுப்பாட்டு நிலை மீதான கவலையும் மேலோங்கி நிற்கின்றது.

அதேபோன்று, அரசியமைப்புச் சபையானது உயர் நீதிமன்ற நீதிபதிகளை தெரிவு செய்து நியமித்து வருகின்றது. இந்த அரசியலமைப்பு சபை பத்து உறுப்பினர்களைக் கொண்ட உரிய அதிகாரத்தையுடையதொன்றாகும் என்பதுடன் குறித்தொதுக்கப்பட்ட நடவடிக்கைகளையும், ஆணைக்குழுக்களின் சுயாதீனத் தன்மையையும் கண்காணித்து வரும் பொறுப்பினையும் கொண்டுள்ளது. நீதித்துறை மீதான ஜனாதிபதியின் செல்வாக்கினை தணிக்கும் வகியாகமொன்றையே அரசியலமைப்பு சபை மேற்கொள்வதாக கருதப்படுகின்றது. எனினும் அதிலுள்ள பெரும்பாண்மை அங்கத்தினர் அரசியல்வாதிகளாகவே உள்ளனர்.[10] நீதித்துறை நியமனங்கள் தொடர்பில் இக்கவுன்சில் முன்னெடுக்கும் வழிமுறையானது தொடர்ந்தும் தெரியப்படுத்தப்படுவதில்லை. சர்வதேசச் சட்டத்தரணிகள் சங்கம், 2009ஆம் ஆண்டில் நீதிதுறை நியமனங்கள் மீதான ஜனாதிபதியின் தற்றுணிவுச் செயற்பாடுகள் தொடர்பில் சுயாதீன கண்காணிப்பு மற்றும் நடைமுறைகள் இல்லாத நிலைமையானது நிறைவேற்று (ஜனாதிபதியின்) தலையீடுகள் நீதித்துறையை பாதிப்புக்குள்ளாக்குவதாகவும் அதன் சுயாதீனத் தன்மையும் ஆபத்து நிலைக்குள்ளாக்குவதாகவும் தெரிவித்துள்ளது.[11]

நீதிச்சேவை ஆணைக்குழு கீழ் நீதிமன்றங்களுக்கு உரிய நீதிபதிகளை நியமிக்கும், இடமாற்றும், அகற்றும், ஒழுக்க விசாரனைகளுக்கு உட்படுத்தும் வழிமுறையை உருவாக்கியுள்ளது. இவ்வாணைக்குழுவின் உறுப்பினர்களை ஜனாதிபதி நியமனம் செய்வதால் இவர்கள் அரசியல் சுயாதீனத்தை கொண்டிராதவர்களாக இருக்கின்றார்கள். இதனடிப்படையில் நீதிபதிகள் பொரும்பாலும் அரசியல் செல்வாக்கிற்கு உட்படுகின்றார்கள். மேலும், நீதிபதிகளை பெயரிடுவதானது அவர்களின் செயற்திறன் அடிப்படையில் அல்லாமல் அரசியல் தொடர்புகளைக் கொண்டு அமையலாகாது.[12] விஷேட அறிக்கையாளரின் 2017ஆம் ஆண்டின் அறிக்கைல் கடந்த காலங்களில் நீதிபதிகளுக்கான நியமனங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட வழிமுறையின் அடிப்படையில் நடைபெறாத சந்தர்ப்பங்கள் உள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது.[13]

அதேவேளை, நீதிபதிகளின் பதவி உயர்வுகள் தொடர்பான நடைமுறையும் தெளிவற்றதாக உள்ளதாகவும், பதவி உயர்வுகள் எனும்போது அவை மனித உரிமை மீறல்கள் மற்றும் சித்திரவதை போன்ற பிரச்சினைகளுக்குரிய விடயங்களில் அரசியல் ரீதியான இசைவாக்கத்தை பெறும் விதத்திலான ஆயுதமொன்றாக பயன்படுத்தப்படுகின்றதென்ற கவலையும் தெரிவிக்கப்பட்டுள்ளது.[14]

## [1] குற்றம் சாட்டப்பட்டவருக்குள்ள அடிப்படை உரிமைகள்

### 1.1 தன்னை பாதுகாத்துக் கொள்ளும் உரிமை

1. குற்றம் சாட்டப்பட்டவருக்கு தனது சொந்த பாதுகாப்பினை முன்னிட்டு சான்றினை விளக்கிக் கூறவும் அதனை முன்வைக்கவும் அல்லது சாட்சிகளை முன்னிறுத்தவும் உரிமை உண்டு. - **குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக் கோவை – பிரிவு 152**
2. ஏற்புடைய சர்வதேச தர நிர்ணயங்கள் :

- தனக்கெதிரான எந்தவித குற்றச் சாட்டையும் தீர்மானிக்கும் விடயத்தில், கீழ் வரும் அடிப்படை உத்தரவாதங்களுக்கு எவரேனும் ஒருவர் சமத்துவ அடிப்படையில் முழுமையான உரிமையைப் பெறுகின்றார்………. தன் முன்னிலையில் விசாரிக்கப்படுவதற்கும், தனிப்பட்ட முறையில் தனக்காக வாதாடுவதற்கும் அல்லது தான் விரும்பியவாறான சட்ட உதவியை நாடுவதற்கும் : தனக்கு சட்ட உதவி இல்லாத நிலையில், அவ்வாறான உதவியை எச்சந்தர்ப்பத்திலும் பெற்றுக்கெள்ள முடியும் என்பதையும் அவ்வாறான சட்ட உதவியை எச்சந்தர்ப்பத்திலும் பெறுவதற்குரிய பணவசதி தன்னிடம் இல்லாதபட்சத்தில் கூட கட்டணம் செலுத்தாமல் அதனை பெற்றுக்கொள்வதற்கு நீதியின் பெயரால் தனக்கு உரிமை உண்டு என்பதை தனக்கு அறியத்தரல் வேண்டும். - சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான **சர்வதேச உடன்படிக்கை – உறுப்புரை 14(3)(ஈ)**

### 1.2 குற்றமிலான் எனும் ஊகம்

1. குற்றம் சாட்டப்பட்ட நபர் குறித்த நிகழ்வுகளை நிரூபிக்கும் பொறுப்புக்கு உட்பட்டவாறு, ஒவ்வொரு நபரும் தான் குற்றவாளி என்பதை நிரூபிக்கும் வரையில் குற்றமற்றவர் என்றவாறே அனுமானிக்கப்படுவார்.
2. ஏற்புடைய சர்வதேச தரநிர்ணயங்கள்.

- தண்டனைக்குள்ளாகும் தவறொன்றின் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒவ்வொரு நபரும் பகிரங்க விளக்கமொன்றில் குற்றவாளியாகக் காணப்படும் வரையில் குற்றமற்றவர் என்ற ஊகத்தையே சட்டம் கொண்டிருக்கின்றது. மேலும் இச்சட்டத்தின் கீழ் தனது பக்க நியாயத்தை உறுதிப்படுத்த தேவைப்படும். அனைத்து உத்தரவாதங்களும் காணப்படுகின்றன. – **மனித உரிமைகள் மீதான உலகளாவிய பிரகடனம் உறுப்புரை II (I)**

---

[6] De Jonge, F.(2015), *An Ad Hoc Hybrid Special Court for Sri Lanka: qhat Does it Take? 25 Septemper 2015.* Available at http//www.peacepalacelibrary.nl/2015/09/an-ad-hoc-hybrid-special-court-for-sri-lanka-what-does-it-take/.

[7] Jayaody, Nadeshda. "To Prsecute or not to Prosecute: The Need for Justice in Post-Conflict Sri Lanka." *United Nations Univercity. Centre for Policy Pesearch.* 13 December 2017, http//cpr.unu.edu/category/articles.

[8] Pinto, Monica. : Report of the Special Rapporteur in the independence of judges and lawyers on her mission to Sri Lanka." *United Nation Human Rights Council (23 March 2017), Pg.7, Para.32.*

[9] Pinto, Monica. : Report of the Special Rapporteur in the independence of judges and lawyers on her mission to Sri Lanka." *United Nation Human Rights Council (23 March 2017), Pg.9, Para.48*

- தண்டனைச் சட்டமொன்றை மீறியுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள அல்லது கூறப்படும் ஒவ்வொரு சிறுவனுக்கும் ஆகக் குறைந்தது கீழ் வரும் உத்தரவாதங்கள் உள்ளன : சட்டத்தின் கீழ் குற்றவாளியாகக் காணப்படும் வரையில் குற்றமற்றவர் என ஊகிக்கப்படுகிறார். **சிறுவர் உரிமைகள் பற்றிய மாநாடு உறுப்புரை 40 (2) (ஆ)**
- குற்றவியல் தவறொன்றின் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒவ்வொருவரும் சட்டத்தின் முன்னால் குற்றவாளியாகக் காணப்படும் வரை குற்றமற்றவர் என ஊகிக்கப்படுகிறார். சிவில், அரசியல் **உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை – உறுப்புரை 14 (2)**
- குற்றவியல் குற்றமொன்றை புரிந்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டவர் ஒருவர் தனக்காக வாதிடக்கூடிய உரிமைக்கு உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ள தகுதி வாய்ந்த, சுயாதீனமான பக்கசார்பற்ற நியாய சபை ஒன்றினால் சட்டரீதியாக குற்றவாளியாக காணப்பட்டாலன்றி, அவர் குற்றமற்றவர் என ஊகிக்கப்படல் வேண்டும். – **மனித உரிமைகள் மீதான ஆசியான் பிரகடணம் - உறுப்புரை 20 (1)**

### 1.3 சித்திரவதைக்கு ஆளாக்கப்படாமல் அல்லது தரக்குறைவாக மதிக்கப்படாமல் இருப்பதற்கான உரிமை

1. எவரேனும் ஒருவர் சித்திரவதைக்கு உட்படுத்தல் அல்லது கொடூரமான மனிதாபிமானமற்ற விதத்தில் நடத்துதல். அல்லது தரக்குறைவாக நடத்துதல் அல்லது தண்டித்தல் போன்றவற்றுக்கு ஆளாக்கப்படலாகாது. இலங்கையின் அரசியல் யாப்பு பிரிவு II
2. தனக்குத் தெரிந்த ஒரு விடயத்தை வெளியிடும்படி அல்லது வெளியிடாமல் இருக்கும் படி குற்றம் சாட்டப்பட்டவரை அச்சுறுத்தல், உறுதிமொழி வழங்கல் அல்லது வேறேதேனும் விதத்தில் தூண்டப்படலாகாது. – **குற்றவியல் நடவடிக்கை சட்டக்கோவை – பிரிவு III மற்றும் 126**
3. ஏற்புடைய சர்வதேச தர நிர்ணயங்கள்
   - எவரேனும் ஒருவர் சித்திரவதைக்கு அல்லது கொடூரமான மனிதாபிமானமற்ற விதத்தில் நடத்துதல் அல்லது தரக்குறைவாக நடத்துதல் அல்லது தண்டித்தல் போன்றவற்றுக்கு ஆளாக்கப்படலாகாது. – **மனித உரிமைகள் மீதான உலகளாவிய பிரகடனம் - உறுப்புரை 5**
   - எவரேனும் ஒருவர் சித்திரவதைக்கு அல்லது கொடூரமான மனிதாபிமான விதத்தில் நடத்துதல் அல்லது தரக்குறைவாக நடத்துதல் அல்லது தண்டித்தல் போன்றவற்றுக்கு ஆளாக்கப்படலாகாது – **சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை உறுப்புரை – 7**

[10] Pinto, Monica. : Report of the Special Rapporteur in the independence of judges and lawyers on her mission to Sri Lanka." United Nation Human Rights Council (23 March 2017), Pg.8, Para.35.

[11] "Justice in retreat: A report on the independence of the legal profession and the rule of law in Sri Lanka." International Bar Association (May 2009), Pg.7.

[12] "Authority without Accountability: The Crisis of Impunity in Sri Lanka." Internationalk Commission of Jursits, International Commission of Jursuts, 26 October 2012, Page 151, http://www.reworld.org/pdfid/50ae365b2.pdf.

[13] Pinto, Monica. : Report of the Special Rapporteur in the independence of judges and lawyers on her mission to Sri Lanka." United Nation Human Rights Council (23 March 2017), Pg.8, Para.37.

[14] Pinto, Monica. : Report of the Special Rapporteur in the independence of judges and lawyers on her mission to Sri Lanka." United Nation Human Rights Council (23 March 2017), Pg.8, Para.35.

- ‘‘சித்திரவதை’’ என்ற பதம் உளரீதியாகவோ அல்லது உடல் ரீதியாகவோ கடுமையான நோவினை அல்லது துன்புறுத்தலை தரக்கூடிய செயலொன்றை குறிப்பதுடன், அது ஒரு குறிப்பிட்ட நபரிடமிருந்து ல்லது மூன்றாம் தரப்பினர் ஒருவரிடமிருந்து ஒரு தகவலை அல்லது ஒரு குற்ற ஒப்புதலை பெறும் பொருட்டு அந்நபர் மீது வேண்டுமென்றே திணிக்கப்படும் செயலொன்றாகும் அல்லது குறிப்பிட்ட நபர் ஒருவர் அல்லது மூன்றாம் தரப்பினர் ஒருவர் செய்துள்ளதாக அல்லது செய்துள்ளதாக சந்தேகிக்கப்படும் செயலொன்றின் மீது தகவலை அல்லது குற்ற ஒப்புதலை பெறுவதற்கு அந்நபரை அல்லது மூன்றாம் தரப்பு நபரை அச்சுறுத்துதல் அல்லது நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்குதல் அல்லது அவ்வாறான நோவினையை அல்லது துன்புறுத்தலை அரச அலுவலர் ஒருவர் அல்லது உத்தியோகபூர்வ நிலையில் கடமையாற்றும் எவரேனும் அலுவலர் ஒருவரின் தூண்டுதலின் பேரில் அல்லது அவரின் ஒப்புதலுடன் அல்லது அவரது இணக்கத்துடன் ஏதேனும் விதத்திலான பாரபட்சத்தின் அடிப்படையில் ஏற்படுத்துதல் என்று பொருள்படும். **<u>சித்திரவதைக்கு எதிரான உடன்படிக்கை – உறுப்புரை 1</u>**

### 1.4 ஒன்றும் கூறாமல் மௌனமாக இருக்கும் உரிமை (தன்னையே குற்றவாளியாக்கிக் கொள்வதற்கு எதிரான உரிமை)

1. நீதிபதி ஒருவருக்கு சுயவிருப்பின் பேரில் குற்ற ஒப்புதல் வாக்குமூலமொன்று வழங்கும் பட்சத்தில் மாத்திரம் அது குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிரான சான்றாக பயன்படுத்தப்படலாம். அதேவேளை ஒரு குற்றவாளி குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை வழங்கும் கடப்பாட்டில் இல்லை என்பதையும் அவரிடம் தெரியப்படுத்தல் வேண்டும். என்பதையும் அவ்வாறானதோர் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் தனக்கெதிரான சான்றாக பயன்படுத்தலாம். என்றும் கூறிவைத்தல் வேண்டும். – **<u>குற்றவியல் நடவடிக்கை கோவை பிரிவு 127</u>**
2. ஏற்புடைய சர்வதேச தரங்கள்.

- ஒரு நபருக்கு எதிரான குற்றவியல் குற்றச்சாட்டொன்றை தீர்மானிக்கும் விடயத்தில் அவ்வாறான ஒவ்வொரு நபரும் கீழே தரப்பட்டுள்ள ஆகக்குறைந்த உத்தரவாதங்களுக்கு பாரபட்சமின்றி முழுமையான அளவில் உரிமையாளராகின்றார். தனக்கெதிராக சாட்சியம் கூறுவதற்கு அல்லது குற்றத்தை ஒப்புக்கொள்ளும் விதத்தில் குற்ற ஒப்புதலை அளிப்பதற்கு கட்டாயப்படுத்தலாகாது. **<u>சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை – உறுப்புரை 14 (3) (எ)</u>**

### 1.5 சட்டத்தரணி ஒருவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட வேண்டிய உரிமை

1. குற்றவியல் நீதிமன்றம் ஒன்றின் முன்னால் குற்றம் சாட்டப்பட்டுள்ள எவரேனும் ஒருவர் சட்டத்தரணி ஒருவர் மூலம் எதிர்வாதம் கூறும் உரிமையை பெறுகின்றார். அதேபோன்று இடருற்றவரான ஒவ்வொரு கட்சிக்காரரும் நீதிமன்றத்தில் தன்னை சட்டத்தரணி ஒருவரால் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய உரிமையையும் பெறுகின்றனர். – **<u>குற்றவியல் நடவடிக்கை சட்டக்கோவை – பிரிவு 260</u>**
2. குற்றம் சாட்டப்பட்டுள்ள நபர் ஒருவருக்கு சட்டத்தரணி ஒருவரை ஒதுக்க வேண்டிய கடப்பாட்டை மேல் நீதீமன்ற நீதிபதி கொண்டுள்ளார் என்பதுடன் இதனூடாக குற்றம் சாட்டப்பட்டவர் சட்ட உதவி பெறும் உரிமையை திறம்பட பெறுகின்றார் - **<u>குற்றவியல் நடவடிக்கை சட்டக்கோவை – பிரிவு 195</u>**

3. குற்றவியல் வழக்கொன்றில் தோன்றும் மேன்முறையீட்டாளர் ஒருவருக்கு, சட்ட உதவி அளிப்பது விரும்பத்தக்கது என்றும் அவ்வுதவியை பெறுவதற்கு அவரிடம் போதிய பொருள் வசதி இருக்கவில்லை என மேன்முறையீட்டு நீதிமன்றம் கருதும் பட்சத்தில் நீதியை நிலைநாட்டும் நோக்கில் அவ்வாறான மேன்முறையீட்டாளருக்கு சட்ட உதவி கிடைக்கும் பொருட்டு மேன்முறையீட்டு நீதிமன்றமானது சட்டத்தரணி ஒருவரை குறித்து ஒதுக்கலாம். **<u>குற்றவியல் நடவடிக்கை சட்டக்கோவை – பிரிவு 153</u>**
4. தவறொன்றுக்காக குற்றம் சாட்டப்பட்டுள்ள எவரேனும் ஒருவர், தகுதிவாய்ந்த நீதிமன்றம் ஒன்றினால் நடாத்தப்படும் நியாயமான விளக்கத்தில் அவரே நேரடியாக உரைப்பதற்கு அல்லது சட்டத்தரணி ஒருவர் மூலம் உரைப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும். - **<u>இலங்கையின் அரசியல் யாப்பு 13 (3)</u>**
5. உரிய தகுதியினைப் பெறக்கூடியவர்களுக்கு அல்லது அவர்கள் சார்பில் சட்ட ஆலோசனை, சட்ட மற்றும் ஏனைய வழக்கு நடவடிக்கைகள் தொடர்பில் தேவைப்படும் நிதி வசதி, அவ்வாறான தகுதியானவர்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான சட்டத்தரணிகளின் சேவை மற்றும் அவ்வாறானவர்களுக்கு தேவைப்படும் சட்ட உதவியை பெறும் விடயம் தொடர்பான ஏனைய உதவிகள் போன்றவற்றை வழங்கக்கூடிய விதத்திலானதோர் செயற்திறன் மிக்க சட்ட உதவித் திட்டமொன்றை செயற்படுத்துவதே சட்ட உதவி ஆணைக்குழுவின் நோக்கமாகும். – **<u>சட்ட உதவி ஆணைக்குழு – 3</u>**
6. அவ்வாறான உதவியை பெற்றுக் கொள்வதற்கான பணவசதி இல்லாத நிலையில், நீதியை நிலைநாட்டும் பொருட்டு, பொருத்தமான சந்தர்ப்பங்களில், கட்டணம் எதுவுமின்றி சட்ட உதவி வழங்கப்படல் வேண்டும். – **<u>சட்ட உதவி வழங்கல் ஆணைக்குழு – பிரிவு 4</u>**
7. சிறுவர்களை பாதிக்கும் விதத்திலான குற்றவியல் நடவடிக்கைகளின் போது ஒவ்வொரு சிறுவன்/ சிறுமிக்கும் அரச செலவில் சட்ட உதவி கிடைக்கப்பெறல் வேண்டும். அவ்வாறின்றேல் அவர்கள் கணிசமான அநீதி நிலையை எதிர்நோக்கலாம். – **<u>சட்ட உதவி ஆணைக்குழு – பிரிவு 5</u>**
8. ஏற்புடையதாகும் சர்வதேச தர நிர்ணயங்கள் :

- ஒரு நபருக்கு எதிரான குற்றவியல் குற்றச்சாட்டொன்றை தீர்மானிக்கும் விடயத்தில் அவ்வாறான நபரும் கீழே தரப்பட்டுள்ள ஆகக்குறைந்த உத்தரவாதங்களுக்கு பாரபட்சமின்றி முழுமையான அளவில் உரிமையாளராகின்றார்: தன் முன்னிலையில் தன்னை விசாரிப்பதற்கும், தனிப்பட்ட முறையில் தனக்காக வாதாடவும் அல்லது தான் விரும்பியவாறான சட்ட உதவியை பெறவும் - **<u>அரசியல், சிவில் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை – உறுப்புரை 14(3)ஈ</u>**

- அரசாங்கமானது, வறிய மக்களுக்கும் தேவைப்படின் ஏனைய வசதி குறைந்த நபர்களுக்கும் தேவையான சட்ட உதவி கிடைக்கும் விதத்தில் போதுமான நிதியிடலையும் ஏனைய வளங்களையும் உறுதி செய்தல் வேண்டும். மேலும், தொழில் ரீதியில் இயங்கும் சட்டத்தரணிகள் அமைப்புகள் உரிய சேவைகளையும், வசதிகளையும் ஏனைய வளங்களையும் ஒழுங்குபடுத்தும் பணிகளில் ஒத்துழைப்பு நல்குதல் வேண்டும். – **<u>சட்டத்தரணிகளின் வகிபாகம் மீதான ஐ.நா.வின் அடிப்படைக் கொள்கைகள் - கொள்கைகள் 3.3.</u>**

**(1.6) உரிய செயல்முறைக்கான உரிமை**

**1.** சட்டத்தில் கூறப்பட்டுள்ள வழிமுறைக்கு மாறாக எந்தவொரு நபரையும் கைது செய்யலாகாது. கைது செய்யப்படும் எவரேனும் ஒருவருக்கு தான் அவ்வாறு கைது செய்வதற்கான காரணத்தை தெரியப்படுத்துதல் வேண்டும். – **<u>அரசியல் யாப்பு – பிரிவு 13(1)</u>**

**2.** கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள, தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்லது தனிப்பட்ட சுதந்திரத்தை இழந்துள்ள எவரேனும் ஒவ்வறாளும், சட்டத்தில் கூறப்பட்டுள்ளவாறான வழிமுறைகளுக்குமைய தாபிக்கப்பட்டுள்ள மிக்க அண்மையில் உள்ள தகுதியான நீதிமன்றம் ஒன்றின் நீதிபதி முன்னால் ஆஜர்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன், சட்டத்தில் கூறப்பட்டுள்ளவாறான வழிமுறைக்கு அமைய தாபிக்கப்பட்டுள்ள அவ்வாறான நீதிபதி வழங்கும் கட்டளைக்கு அமைவாகவன்றி குறித்த நபர் தொடர்ந்தும் கட்டுக்காவலில் வைக்கப்படவோ, தடுத்து வைக்கப்படவோ அல்லது தனிப்பட்ட சுதந்திரத்தை இழக்கச் செய்யவோ ஆகாது. – **<u>அரசியல் யாப்பு – பிரிவு 13(2)</u>**

3. ஏற்புடைய சர்வதேச தர நிர்ணயங்கள்.

- ஒரு நபருக்குரிய உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பிலும் அதேபோன்று அவருக்கெதிரான குற்றவியல் குற்றச்சாட்டு ஒன்று தொடர்பிலும் தீர்மானிக்கும் விடயத்தில் அவ்வாறான ஒவ்வொரு நபரும் நியாயமான சுயாதீனமான பாரபட்சமற்ற நியாய சபையொன்றில் முழுமையான அளவிலான பகிரங்க விசாரணையொன்றுக்கு உரிமையாளராகின்றார். – **<u>மனித உரிமைகள் மீதான உலகளாவிய பிரகடனம் - பிரிவு 10</u>**
- ஒரு நபருக்கு எதிரான குற்றவியல் குற்றச்சாட்டொன்றை அல்லது அவருக்குரிய உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் போன்றவற்றை வழக்கொன்றினூடாக தீர்மானிக்கும் விடயத்தில் அவ்வாறான ஒவ்வொரு நபரும் சட்ட ரீதியாக உருவாக்கப்பட்ட தகுதி வாய்ந்த சுயாதீனமான, பாரபட்சமற்ற நியாய சபையொன்றில் நீதியான பகிரங்க விசாரணையொன்றுக்கு உரிமையாளராகின்றார். – **<u>சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை உறுப்புரை – 14(1)</u>**
- ஒவ்வொரு நபரும் தனக்குரிய சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு போன்றவற்றுக்கு உரிமையாளராகின்றார். எவரேனும் ஒருவர் எழுந்தமானமான கைதுக்கோ அல்லது தடுத்துவைப்புக்கோ ஆளாகலாகாது. எவரேனும் ஒருவர், சட்டத்தில் உள்ளவாறான வழிமுறைக்கு அமையவோ சட்ட ரீதியாகவோ அன்றி, தனது சுதந்திரத்தை இழக்கலாகாது. - **<u>சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை – உறுப்புரை 9(1)</u>**

**(1.7) சட்டத்தின் அடிப்படையில் பாரபட்சமற்ற பாதுகாப்பிற்கான உரிமை**

1. சட்டத்தின் முன்னால் அனைவரும் சமம் என்பதுடன் அவர்கள் சட்டத்தின் படி சமமாக பாதுகாக்கப்படுவதற்கும் உரிமையாளராகின்றார்கள் - **<u>இலங்கையின் அரசியல் யாப்பு – பிரிவு 12(1)</u>**

2. இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் கருத்துக்கள், பிறப்பிடம் அல்லது அவைபோன்ற காரணங்களுக்காக இலங்கைப் பிரஜை எவரேனும் பாரபட்சத்துக்கு ஆளாக்கப்படலாகாது. - **<u>இலங்கை அரசியல் யாப்பு – பிரிவு 12(2)</u>**

3. ஏற்புடைய சர்வதேச தரநிர்ணயங்கள்.

- இப்பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, ஒவ்வொரு நபரும் இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல் அல்லது ஏனைய கருத்து, தேசிய அல்லது சமூக பூர்வீகம், சொத்து, பிறப்பு அல்லது ஏனைய அந்தஸ்து போன்ற விஷேட அம்சங்கள் கவனத்தில் எடுக்கப்படாமல் அனைத்து உரிமைகளுக்கும் தனியார் சுதந்திரத்திற்கும் உரிமை கொள்கின்றார். மேலும், அரசியல், நியாயாதிக்கம் அல்லது குறித்த பிரஜை சேரும் நாட்டின் அல்லது பிராந்தியத்தின் சர்வதேச நிலைப்பாடு, அது சுதந்திரமானதா, இல்லையா, நம்பிக்கை, சுய ஆட்சியற்ற அல்லது இறைமை தொடர்பான கட்டுப்பாடுகளின் கீழ் வரும் நாடொன்றா போன்றவாறான விடயங்களை வைத்தும் கூட பாரபட்சம் காட்டப்படலாகாது. – **<u>மனித உரிமைகள் மீதான உலகளாவிய பிரகடனம். உறுப்புரை 2</u>**
- சட்டத்தின் முன் சகலரும் சமம் என்பதுடன் சகலரும் எதுவித பாரபட்சமுமின்றி சட்டத்தின் கீழ் சமத்துவமான பாதுகாப்புக்கு உரிமையும் கொள்கின்றார்கள். மேலும் இந்தப் பிரகடனத்தினை மீறியவாறான ஏதேனும் பாரபட்சத்திற்கு எதிரான சமமான பாதுகாபிற்கும் அதே போன்று அவ்வாறான பாரபட்சத்தினை தூண்டும் ஏதேனும் விடயத்துக்கெதிராகவும் சகலரும் சமமான உரிமைகளை கொண்டுள்ளார்கள். – **<u>மனித உரிமைகள் மீதான உலகளாவிய பிரகடனம் - உறுப்புை - 7</u>**
- நீதிமன்றங்களிலும் நியாய சபைகளிலும் சகலரும் சமமானவர்களாக கருதப்படல் வேண்டும். – **<u>சிவில், அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச பிரகடனம் - உறுப்புரை 14 (1)</u>**

**(1.8) இரட்டைத் தண்டனைக்கு உள்ளாகுவதற்கு எதிரான உரிமை**

1. தவறொன்றுக்காக விசாரணைக்குட்படுத்தப்பட்ட ஒரு நபர் அதே குற்றச் செயலுக்காக மீண்டும் விளக்கத்திற்கு உட்படுத்தப்படலாகாது. – **<u>குற்றவியல் வழிமுறைக் கோவை பிரிவு 314</u>**
2. ஏற்புடைய சர்வதேச தர நிர்ணயங்கள்.

- ஒவ்வொரு நாட்டினதும் சட்டத்திற்கு அமையவும் தண்டனை வழிமுறைக்கு அமையவும் குற்றவாளியாக்கப்பட்டுள்ள அல்லது விடுதலை செய்யப்பட்டுள்ள ஒரு நபர் திரும்பவும் அதே குற்றத்திற்கு விசாரனைக்கு உட்படுத்தவோ தண்டனைக்குட்படுத்தவோ முடியாது. – **<u>சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை உறுப்புரை 14(7)</u>**

**(1.9) பிற்செயல் சார்பு வழக்குத் தொடுதலுக்கு எதிரான உரிமை**

**1. ஏற்புடைய சர்வதேச தர நிர்ணயங்கள் :**

- ஒரு குறிப்பிட்ட தவறு அல்லது தவிர்வு சம்பவித்த நேரத்தில் அத்தவறு அல்லது தவிர்வு தேசிய அல்லது சர்வதேச சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமொன்றாக இருக்காத நிலையில் அவ்வாறான ஏதேனும் தண்டனைக்குரிய குற்றமொன்றின் மீது எவரேனும் ஒருவர் குற்றவாளியாக காணப்படலாகாது. அத்துடன் குறித்த குற்றம் சம்பவித்த நேரத்தில் அதற்குரியதாக இருந்த தண்டனைக்கு மேலான மட்டத்திலான தண்டனை வழங்கப்படலாகாது. **<u>மனித உரிமைகள் மீதான உலகளாவிய பிரகடனம் உறுப்புரை 11 (2) இலங்கை அரசியல் யாப்பின் உறுப்புரை 13 (6) ஐயும் பார்க்கவும்.</u>**

- எவரேனும் ஒரு சிறுவன் ஒரு குறிப்பிட்ட செயலை அல்லது தவிர்ப்பை புரிந்துள்ளார் என்ற காரணத்தின் அடிப்படையில் அச்செயல் அல்லது தவிர்வு சம்பவித்த நேரத்தில் தேசிய சட்டத்தின் கீழ் அல்லது சர்வதேச சட்டத்தின் கீழ் தடை செய்யப்படாத செயலொன்றாக இருந்திருப்பின், இச்சிறுவன் அவ்வாறு தண்டனைச் சட்டத்தை மீறியுள்ளதாக கூறப்படலாகாது அல்லது குற்றம் சாட்டப்படலாகாது அல்லது ஏற்றுக் கொள்ளப்படலாகாது. **<u>சிறுவர் உரிமைகள் மீதான சமவாயம் - உறுப்புரை – 40(2)(a)</u>**

**1.10 குற்றச்சாட்டு தெரியப்படுத்தப்பட வேண்டிய உரிமை**

1. குற்றம் சாட்டப்பட்டுள்ள நபர் ஒருவருக்கு தான் புரிந்துள்ளதாக கூறப்படும் குற்றம் அல்லது குற்றச் சாட்டின் தன்மைப்பற்றி தெரியப்படுத்தப்படல் வேண்டும். – **<u>குற்றவியல் நடவடிக்கை கோவை – பிரிவு 23 (1)</u>**
2. குற்றம் சாட்டப்பட்டுள்ளவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை பூர்வாங்க விசாரணையொன்றின் போது அவரிடம் வாசித்துக் காட்டப்படல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு வாசித்துக் காட்டப்பட்ட பின்பு குற்றம் சாட்டப்பட்டவருக்கு மறுமொழி எதுவும் கொடுக்க வேண்டும் என கூறப்படலாகாது. அவ்வாறு பதில் கூறும் பட்சத்தில், அது குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிரானதோர் சான்றாக ஏற்றுக்கொள்ளப்படலாகாது. **<u>குற்றவியல் நடவடிக்கை கோவை – பிரிவு 146</u>**
3. ஏற்புடைய சர்வதேச தர நிர்ணயங்கள் :

   எவரேனும் ஒருவர் கைது செய்ப்பட்டால், அவர் கைது செய்ப்பட்ட நேரத்தில் அதற்கான காரணத்தை தெரியப்படுத்தல் வேண்டும் என்பதுடன் அவருக்கெதிரான குற்றச்சாட்டுகள் பற்றியும் தெரியப்படுத்தப்படல் வேண்டும். **<u>- சிவில், அரசியல் மீதான சர்வதேச உடன்படிக்கை – உறுப்புரை – 9 (2)</u>**

**1.11 பிணை பெறுவதற்கான உரிமை**

1. குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒருவர் பிணை வழங்க முடியுமான குற்றமொன்றுக்காக நீதிமன்றத்தில் தோன்றும் போது அவர் பிணையில் விடுவிக்கப்படல் வேண்டும். – **<u>குற்றவியல் நடவடிக்கைக் கோவை – பிரிவு 402</u>**
2. ஏற்புடைய சர்வதேச தர நிர்ணயங்கள் :
   - எவரேனும் ஒருவர் எழுந்தமானமாக கைது செய்யப்படவோ, தடுத்து வைக்கப்படவோ அல்லது நாடுகடத்தப்படவோ முடியாது. – **<u>மனித உரிமைகள் மீதான உலகளாவிய பிரகடனம். உறுப்புரை 9</u>**
3. எவரேனும் ஒரு சிறுவனின்/ சிறுமியின் சுதந்திரம் சட்ட விரோதமாக அல்லது எழுந்தமானதாக இழக்கப்படலாகாது. ஒரு சிறுவனின்/ சிறுமியின் கைதானது அல்லது சிறைப்படுத்தலானது சட்டத்துக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் இறுதி நடவடிக்கையொன்றாக மாத்திரமல்லாமல் மிகவும் குறுகிய, பொருத்தமான காலத்தையும் கொண்டிருத்தல் வேண்டும். **<u>– சிறுவர் உரிமைகள் மீதான மாநாடு – உறுப்புரை 37(b)</u>**
   - குற்றவியல் குற்றமொன்றின் மீது கைதுசெய்யப்பட்டுள்ள அல்லது தடுத்துவைக்கப்பட்டுள்ள எவரேனும் ஒருவர் நீதிபதி ஒருவர் முன்னிலையில் அல்லது சட்ட அதிகாரத்தை அமுல்படுத்த அதிகாரம் பெற்றுள்ள அதிகாரி ஒருவர் முன்னிலையில் உடனடியாக கொண்டுவரப்படல் வேண்டும். அத்துடன் அந்நபர்

நியாயமான காலப்பகுதிக்குள் விசாரணைக்குள்ளாகும் அல்லது விடுதலைக்குள்ளாகும் உரிமையையும் பெறுகின்றார். மேலும் வழக்கு விசாரணையை எதிர்பார்த்து நிற்கும் நபரொருவர் தடுப்புக்காவலில் தடுத்துவைக்கப்படல் வேண்டும் எனபது பொதுவான சட்ட விதியொன்றாக அமையலாகாது. ஆயினும் அவரது விடுதலையானது, வழக்கு நடவடிக்கைகளின் எந்தவொரு கட்டத்திலும், சட்ட விசாரணைக்கும், தேவை ஏற்படின் தீர்ப்பை அமுல்படுத்துவதற்கும் ஆஜராக வேண்டும் என்ற உத்தரவாத்தின் அடிப்படையில் அமையலாம். – **<u>சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை – உறுப்புரை 9(3)</u>**

- தன்னைக் கைது செய்திருப்பதன் ஊடாக அல்லது தடுத்து வைத்திருப்பதன் ஊடாக தனது சுதந்திரம் இழக்கப்பட்டுள்ள எவரேனும் ஒரு நபர் ஒரு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையொன்றை முன்னெடுக்கும் உரிமையைப் பெறுகிறார் என்பதுடன் அதனூடாக குறித்த நீதிமன்றம் அந்நபரின் தடுத்து வைத்தல் தொடர்பான சட்டபூர்வத் தன்மையை தாமதமில்லாமல் விசாரித்து, குறித்த தடுத்து வைப்பானது சட்டபூர்வமற்றதாக இருப்பின் அவர் விடுதலை செய்யப்படலாம். – **<u>சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை – உறுப்புரை 9(4)</u>**

### 1.12 உரை மொழி பெயர்ப்புக்கான உரிமை

1. இலங்கை பூராகவும் உள்ள நீதிமன்றங்களில் சிங்கள மற்றும் தமிழ் மொழிகள் பயன்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன் தமிழ் மொழி நிர்வாக மொழியாக பயன்படுத்தப்படும் பிரதேசங்களை தவிர்த்து இலங்கையின் அனைத்து பிரதேசங்களிலும் அமைந்துள்ள நீதிமன்றங்களில் சிங்கள மொழி பயன்படுத்தப்படல் வேண்டும். ஒரு குறிப்பிட்ட நீதிமன்றத்தில் பயன்படுத்தப்படும் மொழியில் பரிச்சயமில்லாத ஒரு நீதிபதி, யூரர், தரப்பு விண்ணப்பதாரி அல்லது அவ்வாறான தரப்பொன்றை அல்லது விண்ணப்பதாரியை பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய சட்டபூர்வ உரிமையை பெற்றுள்ள எவரேனும் ஒருவர் அவ்வாறான நீதிமனறத்தின் விசாரணைகளில் கலந்து கொண்டு நடவடிக்கைகளை புரிந்துகொள்ளும் பொருட்டு, அரசினால் வழங்கப்படும் உரை பெயர்ப்புக்கும், மொழிபெயர்ப்புக்கும் உரிமை கொள்கின்றார். அத்துடன் குறித்த பதிவுகளின் ஏதேனும் பகுதியொன்றின் மொழிபெயர்ப்பினை (குறித்த மொழியில்) பெறுவதற்கும் அவர் உரிமை கொள்கின்றார். - **<u>இலங்கையின் அரசியல் யாப்பு – பிரிவு 24</u>**
2. குற்றம் சாட்டப்பட்டுள்ளவர் ஒருவருக்கு புரிந்து கொள்ளமுடியாத மொழியில் சாட்சியம் வழங்கப்படும் போது, அவர் நேர்முகமாக சமூகமளித்திருக்கின்ற போதும், அவருக்குத் தெரிந்த மொழியில் அதனை உரைபெயர்ப்புச் செய்தல் வேண்டும். – **<u>குற்றிவியல் நடவடிக்கைச் சட்டக் கோவை – பிரிவு 275(1)</u>**
3. விதி முறையான சான்றுகளுக்காக ஆவணங்கள் முன்வைக்கப்படும் போது அவற்றிலிருந்து உரைபெயர்ப்புக்காக எடுக்க வேண்டிய பகுதிகளை தீர்மானிக்கும் தற்றுணிவை நீதிமன்றம் கொண்டுள்ளது. **<u>– குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவை – 275(2)</u>**
4. குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒருவர் நீதவான் முன்னிலையில் வாக்குமூலம் ஒன்றை அளிக்கும் போது அதனை முழுக்கவும் பதிவு செய்ய வேண்டும் என்பதுடன் அவ்வாறு பதிவு செய்யப்பட்டதை குற்றம் சாட்டப்பட்டுள்ளவருக்கு காட்டப்படல் வேண்டும் அல்லது அவர் தெரிந்த மொழியில் வாசித்துக் காட்டப்படல் வேண்டும். – **<u>குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவை – 277(1)</u>**

5. ஏற்புடைய சர்வதேச தர நிர்ணயங்கள் :

- அவருக்கொதிரான குற்றவியல் குற்றச் சாட்டொன்றை தீர்மானிக்கும் போது, ஒவ்வொருவரும் கீழ்வரும் ஆகக்குறைந்த உத்தரவாதங்களை முழு அளவிலான சமத்துவத்துடன் பெறுவதற்குரிய உரிமையை கொண்டுள்ளார். (அ) அவருக்கெதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டின் தன்மை மற்றும் அதற்கான காரணம் பற்றி அவர் தெரிந்த மொழியில் விபரமாக உடனடியாக தெரிவிக்கப்படல் வேண்டும். – **சிவில், அரசியல் தொடர்பான சர்வதேச சமவாயம், உறுப்புரை – 14(3)(a)**

## 1.13 சட்ட விரோதமான கைதுகளுக்கும் தேடுதல் நடவடிக்கைகளுக்கும் எதிராக செயற்படும் உரிமை

1. சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள விதிமுறைக்கு எதிராக எவரேனும் ஒருவர் கைது செய்யப்படலாகாது. – **அரசியல் யாப்பு – பிரிவு 13(1)**
2. கைது செய்யும் போது, கைது செய்யப்படவுள்ள நபர் வார்த்தையால் அல்லது செயலால் கீழ்ப்படியாத பட்சத்தில் மாத்திரம் கைது செய்யும் நபர் அவரின் உடம்பை தொட்டுப்பற்றுதல் வேண்டும் அல்லது சிறைத்துப் பிடித்தல் வேண்டும். – **குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவை – பிரிவு – 23**
3. ஒரு சமாதான அலுவலர், அணியும் உடைகள் தவிர்ந்த குறித்த குற்றத்துடன் தொடர்புபட்டுள்ளதாக நம்பப்படும் சாதனங்களை அல்லது அக்குற்றத்தின் பேறுகளென அல்லது அக்குற்றம் பற்றிய வேறு சான்றுகளென நம்புவதற்கு இடம் தரும் அத்தகைய பொருட்கள் எதனையும் சோதனையிடலாம். – **குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவை – பிரிவு – 29**
4. பெண்கள் மிகவும் பண்பான முறையில் பிறிதொரு பெண் ஊடாக சோதனையிடப்படும் உரிமையைக் கொண்டுள்ளனர். - **குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவை – பிரிவு – 30**
5. ஏற்புடைய சர்வதேச தர நிர்ணயங்கள் :

- ஒவ்வொரு நபரும் தனக்குரிய சுதந்திரத்திற்கும், பாதுகாப்பிற்கும் உரிமை கொண்டுள்ளார். எவரும் தன்னிச்சையான கைதுக்கோ, தடுத்து வைத்தலுக்கோ ஆளாக்கப்படலாகாது. சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள விதிமுறைக்கு எதிராக எவரேனும் ஒருவர் தனது சுதந்திரத்தை இழக்கலாகாது. – **சிவில், அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயம் - உறுப்புரை 9(1)**

## 1.14 சட்டவிரோத பொலிஸ் தடுத்துவைத்தலுக்கு எதிரான உரிமை

1. கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள, தடுத்துவைக்கப்பட்டுள்ள அல்லது தனிப்பட்ட உரிமையை இழந்துள்ள ஒவ்வொரு நபரும் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைவாக மிகவும் அண்மையில் உள்ள தகுதி வாய்ந்த நீதிமன்றத்தின் நீதிபதி முன்னால் ஆஜர்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன், ஏற்புடைய சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள விதமுறைகளுக்கு அமைவாக நீதிபதியால் வழங்கப்படும் உத்தரவுக்கு அமைவாகவன்றி அந்நபர் தொடர்ந்து கட்டுக்காவலில் வைக்கப்படவோ, தடுத்துவைக்கப்படவோ அல்லது தனது சொந்த சுதந்திரத்தை பறிக்கப்படுதலோ ஆகாது. - **இலங்கை அரசியல் யாப்பு – பிரிவு 13(2)**

2. குற்றம் சாட்டப்பட்ட நபர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு 24 மணித்தியாலயங்களுக்குள் விடுவிக்கப்பட வேண்டிய உரிமையை கொண்டுள்ளார். – **<u>குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவை – பிரிவு 37</u>**
3. குற்றம் சாட்டப்பட்ட நபர் தான் கைதுசெய்யப்பட்ட பிறகு அனாவசியமாக தாமதமின்றி உரிய நீதிமன்றத்தின் முன்னால் ஆஜர்படுத்தப்பட வேண்டிய உரிமையை கொண்டுள்ளார் – **<u>குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவை – பிரிவு 54</u>**
4. குறித்த புலன் விசாரணை 24 மணித்தியாலயங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட முடியாதுள்ள போது, குறித்த சந்தேக நபரை மொத்தமாக 15 நாட்களுக்கு மேற்படாத காலத்துக்கு தடுத்து வைக்கும் உத்தரவை வழங்கும் அதிகாரம் உண்டு. – **<u>குற்றவியல் நடவடிக்கைச் சட்டக் கோவை – பிரிவு – 115</u>**
5. புலனாய்வு பூர்த்தியானதும் சந்தேகநபர் எந்தக் குற்றத்தையும் செய்தார் எனக் குற்றம் சாட்டப்படவில்லையாயின் நீதவான் அவரை விடுதலை செய்தல் வேண்டும் **<u>- குற்றவியல் நடவடிக்கைக் கோவை, பிரிவு 120(3).</u>**
6. தொடர்புடைய சர்வதேச தரநிர்ணயங்கள் :
   - ஏதேச்சாதிகாரமான கைது, தடுத்து வைப்பு அல்லது நாடு கடத்தலுக்கு உட்படுத்தப்படலாகாது – **<u>மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனம் உறுப்புரை</u>**
   - எந்த சிறுபிள்ளையும் தனது சுதந்திரத்தை சட்டத்திற்கு மாறாகவோ அல்லது ஏதேச்சாதிகாரமாகவோ இழக்கச் செய்யலாகாது. சிறுபிள்ளையின் கைது, தடுத்து வைப்பு, சிறை வைப்பு என்பன சட்டத்துடன் உடன்படும் விதமாக இருக்க வேண்டியதுடன், இறுதிக்கட்ட ஏற்பாடாக மாத்திரமே பயன்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன் அதுவும் மிகவும் குறுகியதான பொருத்தமான காலப்பகுதிக்கானதாகவும் இருத்தல் வேண்டும். **<u>சிறுவர் உரிமைகள் மீதான சமவாயம் உறுப்புரை 37(b)</u>.**
   - குற்றவியல் குற்றச்சாட்டொன்றின் மீது கைது செய்யப்பட்ட அல்லது தடுத்து வைக்கப்பட்ட எவரும் நீதிபதியின் முன்போ அல்லது சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு யாரும் உத்தியோகத்தர் முன்பாகவோ நீதித்துறை அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கு உடனடியாகக் கொண்டு வரப்பட வேண்டுமென்பதுடன், நியாயமான நேரத்திற்குள்ளாக விசாரிக்கப்படவோ, விடுவிக்கப்படவோ உரித்துடையவராக இருப்பார். விசாரணைக்காக காத்திருக்கும் ஆட்கள் காவலில் தடுத்து வைத்திருக்க வேண்டுமென்ற பொது விதி எதுவும் இல்லை. ஆனால் விடுவிப்பானது, நீதித்துறை நடவடிக்கைகளின் ஏனைய கட்டங்களிலும், தேவையேற்படின் தீர்ப்பு நிறைவேற்றப்படுவதற்கான சந்தர்ப்பத்திலும் விசாரணைக்காக அவர் தோன்றுவார் என்ற உத்தரவாதத்தின் அடிப்படையில் அமையலாம். **<u>சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச சமவாயம், உறுப்புரை 9(3).</u>**
   - கைது அல்லது தடுத்து வைப்பு மூலமாக தனது சுதந்திரத்தை இழந்துள்ள எவரும் அவரது தடுத்துவைப்பின் சட்டபூர்வத் தன்மை மீது தாமதமின்றி சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் தடுத்து வைப்பு சட்டபூர்வமற்றதாயின் நீதிமன்றத்தினால் தன்னை விடுவித்துக் கொள்ளவும் உரித்துடையவராகின்றார். **<u>சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சமவாயம், உறுப்புரை 9(4).</u>**

## [2] பிரதிவாதிச் சட்டத்தரணியின் கடமைகளும் பொறுப்புக்களும்

### [2.1] மேலோட்டப்பார்வையும் இலங்கைத் தேசியக் கட்டமைப்பும்

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் (BASL) 1974 இல் உருவாக்கப்பட்டதுடன் இது அதன் சொந்த யாப்பின் கீழ் நிறுவப்பட்ட நியதிச்சட்டத்திற்குட்படாத அமைப்பாகும். BASL யாப்பின் படி இலங்கையில் சட்டத் தொழிலில் ஈடுபடும் பொருட்டு ஒருவர் இலங்கை உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாக நியமிக்கப்பட்டு உள்வாங்கப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கிறது. (BASL யாப்பு உறுப்புரை - 3.1) இது சட்டப் பரீட்சைகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதன் மூலமாகவும் இலங்கை சட்டக்கல்லூரியில் நடைமுறைப் பயிற்சி கற்கை நெறிகளை பூர்த்தி செய்து கொள்வதன் மூலமாகவும் அதனைத் தொடர்ந்து ஆகக் குறைந்து எட்டு வருடங்கள் சட்டத்தொழில் புரியும் சட்டத்தரணி ஒருவரின் மேற்பார்வையின் கீழ் ஆறு மாதப் பயிற்சியினை பின்பற்றுவதன் மூலமே இது சாதிக்கப்படுகிறது. இந்தத் தகைமைகளைப் பெற்றுக்கொண்டதும் சட்டத்தரணிகள் BASL இல் சட்டத் தொழில்வாண்மையின் பிரதிநிதித்துவ அமைப்பில் இணைவதற்கு உரித்துப் பெறுகின்றனர். இலங்கையின் சட்டமா அதிபர் பிரதம சட்ட மதியுரைஞராக இலங்கையின் உயர் நீதிமன்றத்தின் பிரதான சட்டத்தரணியாகவும் உள்ளார்.

நீதித்துறைச் சட்டத்தின் பிரிவு 40 ஆனது நல்ல பெயர் கீர்த்தியும், போதிய அறிவும் இயலுமையும் கொண்ட ஆட்களை சட்டத்தரணிகளாக அனுமதித்து நிறுவிக்கொள்வதற்கு உயர் நீதிமனறத்தின் விதிகளின் பகுதி VII இன் பிரகாரம் அதிகாரத்தை வழங்குகிறது. இதன் பிரகாரம் சட்டத்தொழில் துறைசார்பு அறிவுடனும் ஒரு நியாயமான நியமத்தின் மீதும் தனது தொழில்வாண்மைச் சேவையை வழங்கும்பொருட்டு தேவையான ஆற்றல்களையும் எடுத்தாண்டு கொள்வது ஒவ்வொரு சட்டத்தரணியினதும் கடமையாகும்.

உயர் நீதிமன்றமானது சட்டத்தரணிகளின் அனுமதி, பதவி வழங்குகை, இடைநிறுத்தம், அகற்றுகை மற்றும் சட்டத்தரணிகளுக்கான ஒழுக்க நெறிமுறைகள் மற்றும் விதிகள் என்பன உட்பட நீதிமன்றத்தின் பொதுவான வழிமுறைகள் மற்றும் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கான ஒழுங்கு விதிகளை நீதிமன்றம் உருவாக்க முடியும். இலங்கை அரசியலமைப்பு உறுப்புரை,136(g)

ஒரு பலமானதும் சுயாதீனமானதுமான சட்டத்தொழில்வாண்மையானது மனித உரிமைகளைப் பாதுகாப்பதை உறுதிப்படுத்துவதற்கும் சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்கும் அவசியமாக அமைகின்றது. தமது கடமைகளை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்காக சட்டத்தரணிகள் குற்றவியல் செயன்முறைகள், ஏனைய அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் விடயத்தில் ஒரு சுயாதீனமானதும் நன்மையலிக்கும் முறையிலும் தமது தரப்பினரின் விருப்பங்களை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களுக்கு அவர்களை அனுமதிக்கும் சகல உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்ட உத்தரவாதங்களை அவர் பெற்றிருத்தல் வேண்டும்.

### [2.2] சர்வதேசக் கட்டமைப்பு

சட்டத்தரணிகளின் வகிபங்கு மீதான அடிப்படைக் கொள்கைகள் (ஐ.நா. அடிப்படைக் கொள்கைகள்) 1990 இல் சட்டத்தரணிகளின் உரிய வகிபங்கை உறுதிப்படுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்மென உருவாக்கப்பட்டன. ஐ.நா. அடிப்படைக் கொள்கை ஆவணம் அதன் முன்னுரையில் எல்லா ஆட்களுக்கும் உரித்தாக உள்ள மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்களை போதியளவில் பாதுகாப்பதை வேண்டி நிற்கின்றது. சுயாதீனமான சட்டத் தொழில்வாண்மை அமைப்பொன்றினால் வழங்கப்படும் சட்ட சேவைகளை செயல்விளைவுடன் அடைந்துகொள்வதற்கு எல்லா ஆட்களுக்கும் தேவைப்படுகிறது…. சட்டத்தரணிகளின் உரிய வகிபங்கை ஊக்குவித்து உறுதிப்படுத்தும் பணியில் உதவுவதற்கு சர்வதேச சட்டத்தரணிகள் சங்கம் சில நியமங்களை ஏற்றுக் கைக்கொண்டுள்ளது.

தனிப்பட்ட உரிமைகளைக் கொண்டிருப்பவர்கள் என்ற வகையில் சட்டத்தரணிகள் எண்ணற்ற உரிமைகளுக்கும் சர்வதேச மற்றும் பிராந்திய மனித உரிமைகள் ஒப்பந்தங்களில் பொதியப்பட்டுள்ள எண்ணற்ற உரிமைகளுக்கும் பாதுகாப்புக்கும் உரித்துடையவராக உள்ளனர். வாழ்வுக்கான உரிமை, ஒரு ஆளின் சுதந்திரம், பாதுகாப்பு, சித்திரவதை ஏனைய கொடூரமற்ற மனிதநேயமற்ற அல்லது குறைவான நடத்துகை அல்லது தண்டனை என்பவற்றினை தடுத்தல் மற்றும் சட்டத்தின் முன் சமத்துவம் போன்றவற்றின் மீதான ஏற்பாடுகள் இதில் உள்ளடங்குகின்றன.

**[2.3] பிரதிவாதிச் சட்டத்தரணிகளின் விசேட கடமைகள், பொறுப்புக்கள் மற்றும் உரிமைகள்**

**[2.3.1] தமது தரப்பினரின் தகவல்களின் இரகசியத்தன்மையை பேணுவதற்கான கடமை**

சட்டத்தரணி அல்லது நொத்தாரிசு எவரும் அவரது கட்சிக்காரரின் வெளிப்படையுடனான சம்மதத்துடன் அன்றி அத்தகைய சட்டத்தரணி அல்லது நொத்தாரிசு என்ற தன்மையில் கடமையாற்றுகையில் அந்நோக்கத்திற்காகவும் அக்கட்சிக்காரரால் அல்லது அவர் சார்பில் அவரிடம் தெரிவிக்கப்பட்ட தகவல் தொடர்பின்படி வெளியிடும்படி அல்லது தொழிலின்போதும் அந்நோக்கத்திற்கெனவும் அறியவந்துள்ள ஏதேனும் ஆவணத்தின் உள்ளடக்கத்தை அல்லது நிபந்தனையைக் கூறுவதற்கு அல்லது அத்தகைய தொழிலின்போதும் அந்நோக்கத்திற்கென அவரின் கட்சிக்காரருக்கு அறிவிக்கப்பட்ட ஆலோசனைகளை வெளியிடுவதற்கு எப்போதேனும் அனுமதிக்கப்படலாகாது. ஆயினும், – (a) சட்டமுறையற்ற ஏதேனும் நோக்கத்தை முன்னேறுவதற்குச் செய்யப்பட்ட எவையேனும் தகவல் தொடர்புகளை; (b) எவரேனும் சட்டத்தரணி அல்லது நொத்தாரிசு தொழிலாற்ற தொடங்கிய பின்னர் அத்தன்மையில் தொழிலுக்கு அமர்த்தப்பட்டபோது அவரால் அவதானிக்கப்பட்டதும் ஏதேனும் குற்றம் அல்லது மோசடி புரியப்பட்டதாகக் காட்டப்படுவதுமான ஏதேனும் நிகழ்வை வெளியிடுவதிலிருந்து இப்பிரிவில் அடங்கியுள்ளது எதுவும் பாதுகாப்பு அளித்தலாகாது. - **இலங்கை சான்றுகள் கட்டளைச் சட்டம் பிரிவு 126.**

ஆள் எவருக்கும் அவரது சட்டத் தொழில் ஆலோசகருக்கும் இடையில் இடம்பெற்ற ஏதேனும் அந்தரங்க தகவல் தொடர்பு பற்றி நீதிமன்றத்திற்கு வெளியிடுமாறு அவ் ஆள் தானாக சான்றளிப்பதற்கு முன் வந்தாலன்றி அவர் கட்டாயப்படுத்தப்படலாகாது. அத்தகைய சந்தர்ப்பத்தில் அவர் அளித்த ஏதேனும் சானற்ற விளக்குவதற்கு நதீமன்றம் அறிந்துகொள்ளுதல் அவசியமானது என அதற்கு தோன்றும் எவையேனும் அந்தரங்கத்தை தகவல் தொடர்புகளை வெளியிடுமாறு அவர் கட்டாயப்படுத்தப்படலாம். **இலங்கை சான்றுக் கட்டளைச் சட்டம், பிரிவு 129.**

தொடர்புடைய சர்வதேச நியமங்கள்:

- சட்டம், மற்றும் / அல்லது பிரயோகிக்கக்கூடிய தொழில்ரீதியான, நடத்தை, விதிகள் என்பவற்றால் வேண்டப்பட்டால் அல்லது அனுமதிக்கப்பட்டாலே தவிர ஒரு சட்டத்தரணி தனது தற்போதைய அல்லது முன்னைய தரப்பினர்களுடனான விவகாரங்கள் தொடர்பான இரகசியத்தன்மையை எல்லா வேளைகளிலும் முடியுமானவரை பாதுகாத்துப் பேணுவார். **சர்வதேச சட்டத்தரணிகள் சங்கம் உறுப்புரை 4.1.**
- சட்டத்தரணிகளுக்கும் அவர்களது தரப்பினருக்கும் இடையிலான எல்லாத் தொடர்பாடல்களும் கலந்தாலோசிப்புக்களும் அவர்களது தொழில்வாண்மை உறவுக்குள் இரகசியமானவை என்பதை அரசாங்கங்கள் அங்கீகரித்து மதிக்கும் - **சட்டத்தரணிகளின் வகிபங்கு மீதான ஐ.நா. அடிப்படைக் கொள்கைகள், உறுப்புரை 22.**

**[2.3.2] உற்சாகமான சட்டத்தரணியாக இருப்பதற்கான கடமைகள்**

சட்டத்தரணிகள் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காக நீதிமன்றில் தோன்றினால் மாத்திரம் போதாது. அவர்கள் குறித்த வழக்கின் அடிப்படை அம்சங்கள் மற்றும் அதற்குரிய சட்டம் பற்றி தம்மை தயார்படுத்திக் கொண்டவாறு தமது கட்சிக்காரரின் நலனுக்காக வேண்டி தீவிரமாக வாதாடவும் வேண்டும்.

தொடர்புடைய சர்வதேச நியமங்கள்.

- சட்டத்தரணிகள் எல்லா வேளையிலும் நீதி நிர்வாகத்தின் அத்தியாவசிய முகவர்கள் என்ற படியால் தமது தொழில்வாண்மையின் மதிப்பையும் மகத்துவத்தையும் பேணுவர் சட்டத்தரணிகளின் வகிபங்கு மீதான அடிப்படைக் கொள்கைகள் **உறுப்புரை 12.**
- தமது தரப்பினரை நோக்கிய சட்டத்தரணிகளின் கடமைகளில் உள்ளடங்குவனவாவன:

  (a) தரப்பினர்களுக்கு அவர்களது சட்ட உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பாக மதியுரை வழங்கல் மற்றும் தரப்பினரின் சட்ட உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் தொடர்புடையவற்றில் இதுவரைக்குமான சட்ட முறைமைகளின் பணியாற்றுகையில் அவர்களின் சட்ட உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் குறித்து மதியுரை வழங்குதல் (b) எல்லாப் பொருத்தமான வழிகளிலும் தரப்பினருக்கு உதவுதலும் அவர்களது நலன்களைப் பாதுகாப்பதற்காக சட்ட நடவடிக்கை

எடுத்தலும் மற்றும் (c) நீதிமன்றங்கள் நியாய சபைகள் அல்லது நிர்வாக அதிகாரிகள் என்ற எந்த இடங்களில் எல்லாம் தேவையோ அந்த இடங்களில் எல்லாம் தரப்பினருக்கு உதவுதல் - **சட்டத்தரணிகளின் வகிபங்கு மீதான ஐ.நா. அடிப்படைக்கொள்கைகள் உறுப்புரை 13.**

- சட்டத்தரணிகள் தமது தரப்பினரின் உரிமைகளைப் பாதுகாப்பதில் நீதியை ஊக்குவிப்பதில் மனித உரிமைகள் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச சட்டங்களினால் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படைச் சுதந்திரங்களையும் நிலைநாட்டுவதற்கு நாடி நிற்பதும் எல்லா வேளைகளிலும் சுதந்திரமாகச் செயற்படுவதுடன் சட்டம் அங்கீகரிக்கப்பட்ட நியமங்கள், சட்ட தொழில்வாண்மை அறநெறிகள் என்பவற்றின் பிரகாரம் சுதந்திரமாகவும் விடாமுயற்சியுடனும் செயற்படல் சட்டத்தரணிகளின் வகிபங்கு மீதான **ஐ.நா. அடிப்படைக் கொள்கைகள், உறுப்புரை 14.**

  - சட்டத்தரணிகள் எப்போதும் தமது தரப்பினரின் விருப்புக்களை நேர்மையுடன் மதிப்பர் - **சட்டத்தரணிகளின் வகிபங்கு மீதான ஐ.நா. அடிப்படைக் கொள்கைகள், உறுப்புரை - 15.**

- சட்டத்தரணிகள் ஏனைய பிரஜைகளைப் போல கருத்துச் சுதந்திரம், சமய நம்பிக்கை, ஒன்றுகூடல், சங்கம் அமைத்தல் என்பவற்றின் சுதந்திரத்திற்கு உரித்துடையவராக இருப்பர். குறிப்பாக சட்டம், நீதிநிர்வாகம், மனித உரிமைகளின் ஊக்குவிப்பும் பாதுகாப்பும் சம்பந்தப்பட்ட விடயங்களில் பொதுக் கலந்துரையாடல்களின் பங்குபற்றுவதற்கும் உள்ளூர், தேசிய, சர்வதேச நிறுவனங்களை உருவாக்குவதற்கு அல்லது சேர்ந்து கொள்வதற்கும் அக் கூட்டங்களில் சமூகமளிப்பதற்கும் ஒரு சட்டரீதியான நிறுவனத்தில் தமது உறுப்புரிமை அல்லது தமது சட்டரீதியான செயற்பாடுகளின் காரணங்களினால் தம் தொழில்வாண்மை வரையறைகள் துன்புறாத வகையில் அவற்றில் பங்கேற்பதற்கான உரிமையைக் கொண்டிருப்பர். இந்த உரிமைகளைச் செயற்படுத்துவதில் சட்டத்தரணிகள் சட்டத்தின் பிரகாரமும், அங்கீகரிக்கப்பட்ட நியமங்களின் பிரகாரமும், சட்டத்தொழில்சார்பு அறநெறிகளின் பிரகாரமும் தாம் எப்பொழுதும் நடந்துகொள்வர். - **சட்டத்தரணிகளின் வகிபங்கு மீதான ஐ.நா. அடிப்படைக் கொள்கைள், உறுப்புரை 23.**

- நிறுவப்பட்ட ஒழுங்குகள். நியமங்கள், சட்டத்தரணி தொழில்சார், அறநெறிகள் என்பவற்றுக்குட்பட்டு சட்டத்தரணிகள் தமது கடமைகளைச் செயற்படுத்துவதில் எல்லா வேளைகளிலும் சுதந்திரமாகவும் சுறுசுறுப்பாகவும், அச்சமின்றியும் தரப்பினரின் சட்டரீதியான நலன்களின் பிரகாரம் அதிகாரிகள் பொதுமக்களிடமிருந்தான எந்தவிதமான அழுத்தங்களுமின்றி செயற்படுவர். – **சர்வதேச சட்டத்தரணிகள் சங்கம் உறுப்புரை 6.**

## [2.3.3] தேவையான விசாரணைகளை நடத்துவதற்கான கடமை

பிரதிவாதி தொடர்பான விசாரிப்புக்களை நடத்துவதற்குத் தவறுவதானது குறித்த தரப்புக்கு தன்னை பாதுகாத்துக்கொள்ள வேண்டியுள்ள உரிமை, சட்ட ஆலோசனை பெறும் உரிமை, நியாயமான விசாரணைக்கான உரிமை என்பவற்றை மீறக்கூடும். பிரதிவாதிச் சட்டத்தரணிகள் தமக்குச் சாதகமான சாட்சிகளை தேடிக்கொள்வதற்கும், பக்கசார்பினை அல்லது பிழைகளை தீர்மானித்துக் கொள்ளும் பொருட்டு வழக்காளித் தரப்பின் சாட்சிகளை விசாரிப்பதற்கும் அல்லது தேவையான புகைப்படச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கும் ஏனையோரில் தங்கியிருக்க முடியாது.

தொடர்புடைய சர்வதேச நியமங்கள்:

- ஒரு குறிப்பிட்ட தரப்பினருக்கு எதிரான ஏதேனும் குற்றவியல் குற்றச்சாட்டைத் தீர்மானிப்பதில் ஒவ்வொருவரும் முழு சமத்துவத்துடன் போதிய நேரத்தைக் கொண்டு தனது வசதிகளுடன் தான் தெரிவு செய்த சட்டத்தரணியுடன் குறித்த தொடர்பாடல் செய்து குறைந்தபட்ச உத்தரவாதங்களை பின்பற்றுவதற்கு உரித்துடையவராக உள்ளனர். **சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச சமவாயம் உறுப்புரை 14(3)(b).**

- தரப்பினருக்கு செயல்விளைவுடைய சட்ட உதவியை வழங்குவதற்கும் சட்டத்தரணிகளை இயலச்செய்வதற்கு போதிய நேரம் மற்றும் அவர்களிடம் உள்ள புதிய தகவல்கள், ஆவணங்கள், கோப்புகளை சட்டத்தரணிகளுக்கு எட்டச் செய்தல் என்பவற்றை உறுதிப்படுத்துவதானது தகுதி வாய்ந்த அதிகாரிகளின் கடமையாகும். அவ்வாறு அவற்றை எட்டுவதானது மிகவும் பொருத்தமான அண்மித்த காலப்பகுதியில் வழங்கப்பட வேண்டும். **சட்டத்தரணிகளின் வகிபங்கு மீதான ஐ.நா. அடிப்படைக் கொள்கைகள், உறுப்புரை 21.**

- சட்டத்தரணிகள் (a) தமது எல்லாத் தொழில் ரீதியான செயற்பாடுகளையும் அச்சுறுத்தல், இடைஞ்சல், தொந்தரவு, அல்லது உரிய முறையிலற்ற தலையீடு என்பன இல்லாமல் செயலாற்றக்கூடியதாக இருப்பதையும் (b) எமது நாட்டிற்குள்ளாகவும் வெளிநாட்டிலும் சுதந்திரமாக தமது தரப்பினருடன் பயணம் செய்து கலந்துரையாடக்கூடியதாக இருப்பதையும் மற்றும் (c) அங்கீகரிக்கப்பட்ட தொழில் ரீதியான கடமைகள், நியமங்கள் மற்றும் அறநெறிகளின் பிரகாரம் எடுக்கப்படும் எந்த நடவடிக்கைகள் தொடர்பிலும் துன்புறுத்தப்படவோ அச்சுறுத்தப்படவோ, பிரச்சினைக்குள்ளாக்கப்படவோ அல்லது நிர்வாக, பொருளாதாரம் அல்லது ஏதும் தடைகளுக்கு உள்ளாக்கப்படாதிருப்பதையோ அரசாங்கம் உறுதிப்படுத்தல் வேண்டும் - **<u>சட்டத்தரணிகளின் வகிபங்கு மீதான ஐநா அடிப்படைக் கொள்கைகள், உறுப்புரை 16.</u>**

## [2.3.4] <u>சுயாதீனமாக இருப்பதற்கான உரிமையும் கடமையும்</u>

சட்டத்தரணியாக செயற்படுவதில் உள்ள ஒரு தடை என்னவெனில் குறித்த தரப்பினருடன் சட்டத்தரணி அதீதம் அடையாளம் காணப்படுவதாகும். சட்டத்தரணிகள் தமது தரப்பினர் மையப்படுத்தப்பட்டவராகவும், அவர்களது விருப்புக்களை எப்பொழுதும் மனதில் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டிய அதேவேளை சட்டத்தரணிகள் எப்போதும் சுயாதீனமான தொழில்வாண்மையாளர்களாகவும் சட்டம் மற்றும் அறநெறி நியமங்களுடன் ஒட்டிய வகையில் பிரதிநிதித்துவத்தை வழங்குபவர்களாகவும் இருக்க வேண்டும்.

தொடர்புடைய சர்வதேச நியமங்கள் :

- சட்டத்தரணிகள் தமது தொழிற்பாடுகளை செயற்படுத்துவதன் விளைவானது, அவர்களை அவர்களது தரப்பினருடன் அல்லது அவர்களது தரப்பினரின் நோக்கங்களுடன் இனங்காணப்படாதிருத்தல் வேண்டும். **<u>சட்டத்தரணிகளின் வகிபங்கு மீதான ஐ.நா. அடிப்படைக் கொள்கைகள், உறுப்புரை 18.</u>**
- சட்டத்தரணிகள் நல் நோக்குடன் செயற்படுகையில் நம்பிக்கையுடன் எழுத்து மூலமாகவோ அல்லது உரைமன்றாற்றமாகவோ அல்லது நீதிமன்றம், நியாய சபை அல்லது ஏனைய சட்ட அல்லது நிர்வாக அதிகாரிகளுக்கு முன்பாகவோ தமது தொழில் ரீதியான தோன்றுகையில் மேற்கொண்ட தொடர்புடைய கூற்றுக்களுக்கான சிவில் மற்றும் குற்றவியல் சட்டத்தில் இருந்து விலக்களிக்கும் தன்மையை அவர்கள் அனுபவிப்பர். – **<u>சட்டத்தரணிகளின் வகிபங்கு மீதான ஐ.நா. அடிப்படைக் கொள்கைகள், உறுப்புரை 20.</u>**
- ஒரு சட்டத்தரணி சுயாதீனத்தைப் பேணுவார் என்பதுடன் குறித்த தரப்பினர்களுக்கு நடுநிலையான அறிவுரை மற்றும் பிரதிநிதித்துவத்தை வழங்குகையில் அந்த சுயாதீனம் வழங்கும் பாதுகாப்பையும் பெற்றுக்கொள்வார். ஒரு சட்டத்தரணி குறித்த தரப்பினருக்கு அறிவுரை கூறுவதில் பிறரின் வழக்கின் வெற்றிக்கான சாதகத்தன்மை உட்பட சுயாதீனத்தையும் நடுநிலையான தொழில்ரீதியான தீர்ப்பையும் செயற்படுத்துவார். - **<u>சர்வதேச பார் சங்கம், உறுப்புரை கையானது 1.</u>**
- தங்களது சுதந்திரம் பறிக்கப்பட்ட ஆட்களுடன் ஈடுபடுகையில் சட்டத்தரணிகளின் சுயாதீனமானது அவர்களுக்கு சுதந்திரமான, நியாயமான, அவசியமான சட்ட உதவியை அவர்கள் கொண்டிருப்பதையும் அத்துடன் அவ்வாறான ஆட்களை சென்றடைவதற்கான உரிமையை சட்டத்தரணிகள் கொண்டிருத்தல் உட்பட அவ்வாறானவைகளை அவர்கள் கொண்டிருப்பதை உறுதிப்படுத்தி உத்தரவாதப்படுத்தப்படும். ஏற்படக்கூடிய ஏதும் ஏமாற்று ஆலோசனை ஏற்பாடு அல்லது அவர்களுக்காக செயற்படும் சட்டத்தரணி அதிகாரத்தரப்பினருடன் கூட்டுச்சேர்ந்து அவர்களைத் தங்கியிருப்பதையும் தவிர்ப்பதற்கு பாதுகாப்புக்கள் கட்டியெழுப்பப்படும். **<u>சர்வதேச சட்டத்தரணிகள் சங்கம் உறுப்புரை 12.</u>**

## [2.3.5] <u>அறநெறியுடன் இருப்பதற்கான கடமை</u>

தொடர்புடைய சர்வதேச சமவாயங்கள்:

- ஏனைய பிரஜைகளைப் போன்றே சட்டத்தரணிகளும் கருத்து வெளிப்படுத்தல் சுதந்திரம், மத நம்பிக்கை, சங்கம் அமைத்தல் மற்றும் ஒன்றுகூடும் சுதந்திரங்களுக்கு உரித்துடையவராக இருப்பர். குறிப்பாக சட்டம், நீதி நிர்வாகம், மனித உரிமைகளை ஊக்கமூட்டி பாதுகாத்தல் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களை உருவாக்குதல் அல்லது அதில் இணைந்து கொள்ளுதல், அத்துடன் அந்தக் கூட்டங்களுக்கு சமூகமளித்தல் ஒரு சட்டபூர்வமான நிறுவனததிலுள்ள அவர்களது உரிமை மற்றும் சட்டரீதியான செயற்பாடுகளைக் காரணம் காட்டி தொழில்ரீதியான

வரையறைகளால் துன்புறாது அந்தக் கூட்டங்களுக்கு சமூகமளித்தல், சட்டம் மற்றும் நிர்வாகம் தொடர்பான விடயங்களைக் கலந்துரையாடும் பொதுக் கூட்டங்களில் பங்குபற்றுதல் என்பவற்றுக்கான உரிமையைக் கொண்டுள்ளனர். இந்த உரிமையை செயற்படுத்துவதில் சட்டத்தரணிகள் எப்பொழுதும் சட்ட தொழில்வாண்மையின் அங்கீகரிக்கப்பட்ட நியமங்கள் மற்றும் அறநெறிகள் மற்றும் சட்டங்களின் பிரகாரம் தாம் நடந்து கொள்வார். – **சட்டத்தரணிகளின் வகிபங்கு மீதான ஐநா அடிப்படை உரிமைகள் உறுப்புரை 23.**

## [2.3.6] பிரதிநிதித்துவத்தில் விருப்பு முரண்பாடுகளை தவிர்ப்பதற்கான கடமை

தமது பிரதிநிதித்துவத்தில் விருப்பு முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கு குற்றவியல் வழக்குகளில் சட்டத்தரணிகள் ஒரு கடமையைக் கொண்டிருக்கிறார்கள். தரப்பினர் மட்டிலான சட்டத்தரணியின் கண்ணியமான கடமையைப் பாதிக்கக்கூடிய, தரப்பினரின் சுயாதீனத் தீர்ப்பை வழங்குவதற்கான கடமை அல்லது தரப்பினரின் விருப்பைப் பாதுகாப்பதற்கான கடமை என்பவற்றைப் பாதிக்கக்கூடிய சட்டத்தரணி – கட்சிக்காரர் உறவுகள் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கான இயலுமை இருக்கும்பொழுதே விருப்பு முரண்பாடு எழுகின்றது.

ஒவ்வொரு வழக்கிலும் முரண்பாட்டு மட்டம் வேறுபட்டு இருக்கிறது என்பதையும் வழக்கு விசேடிப்பு அடிப்படையில் அது கவனிக்கப்பட வேண்டுமென்பதையும் கவனிப்பது முக்கியமானது. பிரதிநிதித்துவத்தின் முரண்பாடுகளுக்கான உதாரணங்களாக பின்வருவன உள்ளன.

1. குற்றம் சாட்டப்பட்டவர் தனது குற்றத்திற்காக சட்டத்தரணியிடம் மன்றாடுகிறார் ஆனால் குற்றமற்றவர் என மன்றாடப்பட விரும்புகிறார். ஒரு குற்றமுடையவர் எனத் தெரிந்துகொண்டு சட்டத்தரணி உரிய முறையில் நீதிமன்றத்தை விளிக்க முடியாது. (அதாவது தனது பிரதிநிதித்துவம் நீதிமன்றத்திற்கு உண்மையல்லாதது என தெரிந்து கொண்டு)

2. வழக்கின் கோட்பாட்டு விடயத்தில் குற்றம் சாட்டப்பட்டவர் சட்டத்தரணியுடன் முரண்படுகிறார். – சட்டத்தரணிக்கும் தனது தரப்பினருக்கும் இடையிலான உறவுமுறையில் ஒரு முறிவு இருக்கும் போது முன்செல்லும் அடிப்படையில் சட்டத்தரணியால் இந்த வழக்கை உரிய முறையில் முகாமைத்துவம் செய்ய முடியாது.

## [2.3.7] நீதிமன்றத்தில் பிரதிநிதித்துவத்தை வழங்குவதற்கான உரிமை

தொடர்புடைய சர்வதேச நியமங்கள்:

- எந்த நீதிமன்றம் அல்லது நீதிமன்ற அதிகாரத்திற்கு முன்பாக ஒரு சட்டத்தரணியின் ஆலோசனைச் சேவைக்கான உரிமை அங்கீகரிக்கப்பட்டதோ அந்த நீதிமன்றங்களானவை, அந்த நீதிபதியானவர் தேசிய சட்டம் மற்றும் பழக்கங்கள் என்பவற்றின் பிரகாரம் மற்றும் இந்தக் கொள்கைகளுடன் உடன்படுதல் என்பவற்றில் சட்டத்தரணி தகுதியற்றவர் ஆக்கப்பட்டாலொழிய அவர் தரப்பினர் முன்தோன்றும் சட்டத்தரணியின் உரிமையை அங்கீகரிப்பதை மறுக்க முடியாது. **சட்டத்தரணிகளின் வகிபங்கு மீதான ஐ.நா. அடிப்படைக் கொள்கைகள், உறுப்புரை 19.**

- எந்த நீதிமன்றமோ அல்லது நிர்வாக அதிகாரமோ தனது தரப்பினருக்காக தோன்றுவதற்கான ஒரு சட்டத்தரணியின் நீதித்துறை ரீதியான தகைமையின் உரிமையை அங்கீகரிப்பதற்கு மறுக்க முடியாது. **சர்வதேச சட்டத்தரணிகள் சங்கம், உறுப்புரை 9.**
- ஒரு குறித்த வழக்கில் அல்லது ஒரு வழக்கு அல்லது விசாரணையை நடத்துகையில் நீதிபதியின் பங்குபற்றுகை அல்லது தொடர்ச்சியான பங்குபற்றுகை குறித்து நல்ல நோக்கத்திற்கான ஒரு எதிர்ப்பை எழுப்புவதற்கான உரிமையை ஒரு சட்டத்தரணி கொண்டிருப்பார். **சர்வதேச சட்டத்தரணிகள் சங்கம், உறுப்புரை 10**

**[2.3.8]** **தடுத்து வைப்பட்டுள்ள தரப்பினரிடம் சென்று வருவதற்கான உரிமை**

தொடர்புடைய சர்வதேச நியமங்கள்:

- குற்றவியல் நடவடிக்கைச் செயன்முறைகளின் எல்லாக் கட்டங்களிலும் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கும், தமது உரிமைகளை பாதுகாத்து நிறைவேற்றி நிலைநாட்டிக் கொள்வதற்கும் தமது தெரிவிலான ஒரு சட்டத்தரணியின் உதவியை பெறுவதற்கும் எல்லா ஆட்களும் உரித்துடையவராய் உள்ளனர். **சட்டத்தரணிகளின் வகிபங்கு மீதான ஐ.நா. அடிப்படைக் கொள்கைகள், உறுப்புரை 1.**
- இனம், நிறம், இனப்பூர்வீகம், பால்நிலை, மொழி, மதம், அரசியல் அல்லது ஏனைய கருத்து, தேசியம் அல்லது சமூக பூர்வீகம், சொத்து, பிறப்பு, பொருளாதாரம் அல்லது ஏனைய அந்தஸ்துக்களின் அடிப்படையிலான ஏதும் பாரபட்சங்களுடன் எவ்வகையிலான வேறுபாடுகளும் இன்றி அவர்களது நீதியாட்சிக்கு உட்பட்டும் தமது பகுதியிலுள்ள எல்லா ஆட்களுக்கும் சட்டத்தரணிகளை சென்றடைவதற்கான வினைத்திறனான செயன்முறைகள் சட்டத்தரணிகளை சென்றடைவதற்கான செயல்விளைவான பதிற்செயற்பாட்டு பொறிமுறைகள் வழங்கப்பட்டிருப்பதை அரசாங்கங்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும். **சட்டத்தரணிகளின் வகிபங்கு மீதான ஐநா அடிப்படைக் கொள்கைகள், உறுப்புரை 2.**
- வறியோர், தேவையிலுள்ளோர் மற்றும் ஏனைய துரதிஷ்டவசமான ஆட்களுக்கு சட்ட சேவைகளுக்கான போதிய நீதியீட்டல் மற்றும் ஏனைய வளங்கள் வழங்கப்படுவதை அரசாங்கம் உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் சட்டத்தரணிகளின் தொழில் ரீதியான அமைப்புகள் இச் சேவைகள், வசதிகள் மற்றும் ஏனைய வளங்களை வழங்குவதில் ஒத்துழைப்பு நல்குதல் வேண்டும். - **சட்டத்தரணிகளின் வகிபங்கு மீதான ஐ.நா. அடிப்படைக் கொள்கைகள், உறுப்புரை 3.**
- அரசாங்கங்களும் சட்டத்தரணிகளின் தொழில்வாண்மைச் சங்கங்களும் பொதுமக்களுக்கு சட்டத்தின் கீழான அவர்களது உரிமைகள், கடமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்களைப் பாதுகாப்பதில் சட்டத்தரணிகளின் முக்கியமான வகிபங்கு என்பன குறித்தும் பொதுமக்களை அறியச் செய்தல் வேண்டும். வறியோர் மற்றும் ஏனைய துரதிஷ்டவசமான ஆட்களுக்கு தேவைப்படும் இடங்களில் எல்லாம் சட்டத்தரணியின் உதவியை அழைப்பதற்கும் அவர்களது உரிமையை உறுதிப்படுத்திக் கொள்ள இயலச் செய்வதற்கும் அவர்களுக்கு உதவுவதற்கு விசேட கவனம் கொடுக்கப்படல் வேண்டும். **சட்டத்தரணிகளின் வகிபங்கு மீதான ஐ.நா. அடிப்படைக் கொள்கைகள், உறுப்புரை 4.**
- குற்றவியல் குற்றத்தினை குற்றம் சாட்டப்படும்பொழுது அல்லது கைது செய்யப்பட்டு அல்லது தடுத்து வைக்கப்படும்பொழுது தமது சொந்தத தெரிவில் ஒரு சட்டத்தரணியால் உதவி அளிக்கப்படுவதற்கான அவர்களது உரிமை குறித்து அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் உடனடியாக எல்லா ஆட்களுக்கும் அறிவிப்பதனை அரசாங்கங்கள் உறுதிப்படுத்தல் வேண்டும். **சட்டத்தரணிகளின் வகிபங்கு மீதான ஐ.நா. அடிப்படைக் கொள்கைகள் உறுப்புரை 5.**
- குற்றவியல் சாட்டுதலுடனோ அல்லது அவ்வாறு இல்லாமலோ கைது செய்யப்பட்ட அல்லது தடுத்து வைக்கப்பட்ட எல்லா ஆட்களும் கைது செய்யப்பட்ட அல்லது தடுத்து வைக்கப்பட்ட நேரத்திலிருந்து நாற்பத்தியெட்டு மணித்தியாலத்திற்கு பிந்தாத வகையில் ஒரு சட்டத்தரணியை உடனடியாகச் சந்திக்கக் கூடியதாக இருப்பதை அரசாங்கங்கள் உறுதிப்படுத்தல் வேண்டும். - **சட்டத்தரணிகளின் வகிபங்கு மீதான ஐ.நா. அடிப்படைக் கொள்கைகள் உறுப்புரை 7.**
- கைது செய்யப்பட்ட அல்லது தடுத்து வைக்கப்பட்ட அல்லது சிறையிலிடப்பட்ட எல்லா ஆட்களும் தாமதம் அல்லது தலையீடு அல்லது தணிக்கை எதுவும் இல்லாமல் முழுமையான நம்பிக்கையுடன் ஒரு சட்டத்தரணியைத் தரிசிக்க, தொடர்பாடல் கொண்டு கலந்தாலோசிப்பதற்கான போதிய சந்தர்ப்பங்கள், நேரம், வசதிகள் அவ்வாறான எல்லா ஆட்களுக்கும் வழங்கப்படல் வேண்டும். இவ்வாறான கலந்தாலோசிப்புக்கள் சட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர்களின் கண்ணுக்குத் தெரியக்கூடிய வகையில் இருக்கலாம். ஆனால் காதால் கேட்க முடியாத நிலையில் இருத்தல் வேண்டும். - **சட்டத்தரணிகளின் வகிபங்கு மீதான ஐ.நா. அடிப்படைக் கொள்கைகள் உறுப்புரை 8.**

## [3] தரப்பினர்

### [3.1] தரப்பினருடனான ஆரம்ப நேர்காணல்

சட்டத்தரணி தனது தரப்பினருடன் மேற்கொள்ளும் முதலாவது நேர்காணலானது ஒரு மிக முக்கியமான கட்டமாக இருக்கும். சட்டத்தரணி - தரப்பினர் உறவுமுறைக்கான ஒரு அவசியமான அடிப்படையை இது அமைத்துக்கொள்வதுடன் பிரதிவாதி பற்றி அறிந்து கொள்வதற்கும் வழக்கின் அடிப்படை உண்மைகளைப் புரிந்துகொள்ளத் தொடங்குவதற்குமான ஒரு சந்தர்ப்பத்தையும் இது சட்டத்தரணிக்கு வழங்குகிறது.

ஆரம்பச் சந்திப்பின் போது பிரதிவாதியின் சட்டத்தரணியானவர் நிகழ்ச்சிகளின் அடையாளத்துவம், இணைப்பிரதி வாதிகளின் அடையாளத்துவம், சான்றுகளின் அமைவிடம், பிரதிவாதியின் சட்டரீதியான உரிமைகளின் மீறுகைகள் சம்பந்தப்பட்ட விபரங்கள் என்பவற்றை அறிந்துகொள்வார். இந்தத் தகவலானது வெற்றிகரமான பிரதிவாதி பக்க தந்திரோபாயத்தை விருத்தி செய்துகொள்வதற்கு முக்கியமானதாக அமைவதுடன், இவை எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் பெற்றுக்கொள்ளப்படவும் வேண்டும்.

நல்லதொரு பிரதிவாதத்தை முன்கொண்டு செல்வதானது நிகழ்வுகள் தொடர்பான உங்களது தரப்பினரின் கதையைப் புரிந்துகொள்வதற்கும் அப்பால் செல்வதாக உள்ளது. உங்களது தரப்பினரின் கதையை அறிந்துகொள்வது முக்கியமானதாக இருக்கும் அதே வேளையில் ஏனையோர் சொல்லக்கூடிய எதிரான கதைகளைப் பரீட்சித்துக் கொள்வதும் முக்கியமானது. உதாரணத்திற்கு உங்களது தரப்பினர் மற்றுமொருவரை தாக்கியதாகக் குற்றம் சாட்டியிருந்தால் முதலில் அவர் அதனை மறுப்பாராயின் ஏனையோரிடமிருந்து அவர் வன்முறைச் சுபாவம் கொண்ட ஒருவரா என அறிந்து கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு, பாதிக்கப்பட்டவராக சொல்லப்படுபவர் உங்களது தரப்பினரை விட தோற்றத்தில் பெரியவராக இருப்பதுடன் அதன் காரணமாக தாக்குதலுக்கு இலக்கு வைக்கப்படுவதற்கு சாத்தியமற்றவராக இருக்கிறாரா என நீங்கள் பரிசீலிக்க வேண்டும்.

பிரதிவாதியின் சட்டத்தரணியானவர், ஆரம்ப சந்திப்பை தனது பிரதிவாதிக்கு அவரது சட்ட உரிமைகள் தொடர்பில் மதியுரை செய்யக்கூடிய அத்துடன் சட்டத்தரணி - தரப்பினர் உறவுமுறையின் எல்லைகளை விபரிக்கும் விதத்திலும் வழக்கில் சம்பந்தப்பட்ட செயன்முறைகளைக் கலந்துரையாடும் ஒரு கூட்டமாகவும் பயன்படுத்தல் வேண்டும்.

இதற்கான ஒரு சாதாரண கட்டமைப்பு பின்வருமாறு இருக்கும் :



ஆகவே பின்வரும் நோக்கங்களுக்காக பிரதிவாதியினை சட்டத்தரணி கூடிய விரைவில் சந்திப்பது மிகவும் முக்கியமானது:

- கூடிய விரைவில் தன் தரப்பிற்கு அவசியமான சட்ட உதவியை வழங்குவதற்காக ˙
- ஆரம்ப தகவல்களை சேகரிக்க தொடங்குவதற்காக்
- விபரங்கள், நிகழ்வுகள் பற்றி தரப்பினர் கூறும் விடயங்களை விளங்கிக் கொள்வதற்காக தனது தரப்பினரிடமிருந்து அறிவுறுத்தல்களை பெற்றுக் கொள்வதற்காக்
- தரப்பினரிடமிருந்து அறிவுறுத்தல்களை எடுத்துக்கொள்வதற்காக்
- ஒரு பிரதிவாதத்தைக் கட்டியெழுப்பி முன்னெடுப்பதற்காக்
- வழக்கின் கோட்பாடு, கருப்பொருள் என்பவற்றை விருத்தி செய்யத் தொடங்குவதற்காக;
- குறித்த தரப்பினரின் நலனைப் பாதுகாக்கும் முகமாக எடுக்கப்பட வேண்டிய முனைப்பு மற்றும் ஆரம்ப சட்டப் படிநிலைகளைப் பரிசீலிப்பதற்காக.

தரப்பினருடனான ஆரம்ப சந்திப்பின் போது பச்சாத்தாபமும் இரக்கமும் முக்கியமானது. ஒரு பிரதிவாதியின் சட்டத்தரணியானவர் தரப்பினரை செயல்விளைவுடன் திறமையாக பிரதிநிதித்துவம் செய்யும் முகமாக தரப்பினரின் நம்பிக்கையை ஈட்டிக்கொள்ள வேண்டும். சந்திப்பானது சிறப்புரிமை மிக்கதும் இரகசியமானதும் என தரப்பினருக்கு விபரிப்பது முக்கியமாகும். வழக்கின் குற்றச்சாட்டுகள் அல்லது உண்மைகள் தொடர்பாக நண்பர்கள் குடும்பத்தவர்கள் உட்பட எவருடனும் கலந்துரையாடக்கூடாது என விளக்கிக் கூறுவது முக்கியமாகும். இறுதியாக எப்பொழும் உண்மை சொல்வது மற்றும் நேர்மையாக இருப்பதன் முக்கியத்துவத்திற்கு அழுத்தம் கொடுத்தல வேண்டும்.

தனது தரப்பினருடனான ஆரம்ப சந்திப்பின் மற்றுமொரு முக்கியமான நோக்கம் என்னவெனில் தரப்பினரை கொட்டுக் காவலில் வைத்திருப்பதற்கு பொலிசாருக்கு நியாயமான அடிப்படைகள் உள்ளனவா என நிச்சயப்படுத்திக் கொள்வதாகும்.

விசாரணைக்கு முன்பாக தரப்பினரின் விடுவிப்பை பெற்றுக்கொள்வதற்கான சட்டரீதியான அளவுகோல்கள் குறித்து பிரதிவாதியின் சட்டத்தரணி அறிந்துகொள்ள வேண்டுமென்பதுடன் இலங்கையில் பிணை எடுக்கக்கூடிய மற்றும் பிணை எடுக்க முடியாத குற்றங்களுக்கு இடையிலான வேறுபாடு இதில் முக்கியமானது:

1. நீதிமன்றத்திற்கு முன்பாக ஒருவரைக்கொண்டு வராது அவ்வாளினை வைத்திருப்பதற்கு சட்டத்தினால் அனுமதிக்கப்பட்ட உயர்ந்தபட்ச காலப்பகுதிக்கு அப்பால் தரப்பினர் அவ்வாறு வைத்திருக்கப்படுவதை உறுதிப்படுத்துதல்.

2. தரப்பினர் சித்திரவதை அல்லது துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படாதிருப்பதையும் தரப்பினர் வைத்திருக்கப்படும் நிலைமைகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய மனித உரிமை நெறிகள் மற்றும் நியமங்களுடன் உடன்பட்டிருப்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுதல்.

## [3.2] ஆரம்ப நேர்காணலின் ஊடாக சட்டத்தரணி தன் தரப்பினரின் நற்புறவினை வளர்த்துக் கொள்வதற்கான துணுக்குகள்

தன் தரப்பினரின் நம்பிக்கையை ஈட்டிக்கொள்வதற்கும், வழக்குடன் தொடர்புடைய அத்துடன் அதனை முன்னெடுத்துச் செல்ல அவசியமான விடயங்களை வெளிக்கொணரவும் பின்வருவனவற்றைப் பரிசீலியுங்கள் :

### [3.2.1] உங்களது தரப்பினர் கூறும் கதைக்கு செவிமடுங்கள்:

- உங்களது அடிப்படை செவிமடுத்தல் மற்றும் நேரக்ாணல் செய்யும் திறன்களைப் பயனபடுத்துங்கள்
- உங்களது தரப்பினரின் அக்கறைகள் மற்றும் நிலைப்பாட்டினைப் புரிந்துகொள்ள முயற்சியுங்கள்
- உங்களது தரப்பினரை செவிமடுத்து அவதானியுங்கள்
- நீங்கள் செவிமடுக்கிறீர்கள், கவனம் செலுத்துகின்றீர்கள் என்பதை தரப்பினருக்கு காட்டும் உடல்மொழியை பயன்படுத்துங்கள்
- உறுதியான கண் தொடர்பை தரப்பினருடன் பேணுவதினால் விருப்பை சுட்டிக்காட்டுங்கள்
- வெளிப்படுத்தப்பட்டவற்றின் ஒரு முழுமையான விபரிப்பை வழங்குவதற்கு தரப்பினரைத் தூண்டுங்கள்
- முடியுமாயின், தரப்பினர் இந் நிகழ்வுகள் தொடர்பான தமது விபரிப்பை அவரால் எழுதச் செய்யுங்கள்
- அவரைத் தீர்ப்பிடுவதற்கு அங்கே நீங்கள் இல்லையென அறியச் செய்யுங்கள்.

### [3.2.2] பச்சாத்தாபமாக இருங்கள், ஆனால் உறுதியாக இருங்கள்:

- குறித்த தரப்பினர் மீது அக்கறையைக் காட்டுங்கள்
- அக்கறை காட்டும் அதேவேளை தொழில்வாண்மைத் தூரத்தைப் பேணுவதுடன் ஒரு சட்டத்தரணியாக நடந்துகொள்ளுங்கள்.

### [3.2.3] நேர்காணலின் ஆரம்ப பகுதியின் போது தரப்பினர் கட்டுப்பாட்டை சிறிது விட்டுக்கொடுங்கள்

- தரப்பினர் தனது உளக்கிடக்கைகளை வெளிக்கொனர்வதற்கு அனுமதியுங்கள்
- நீங்கள் ஒரு பிரச்சினை தீர்ப்பவர் என்றும் தரப்பினர் உங்களிடம் தனது பிரச்சினைகள், சிக்கல்களை விபரிக்க வேண்டும் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்

### [3.2.4] விடைகளைக் வெளிக்கொண்டு வரும் கேள்விகளைக் கேளுங்கள் :

- விளக்கம் அல்லது விபரிப்புக்களை தரப்பினரிடமிருந்து வேண்டி நிற்கும் கேள்விகளைக் கேளுங்கள்
- விடைகளைக் கொண்டுவரும் கேள்விகளானவை றுறுறுர்று- கேள்விகள்: யார், எப்போது, ஏன், எப்படி மற்றும் எங்கே என்பவையாகும் என நினைவில் கொள்ளுங்கள்
- தகவல்களை வெளிக் கொனராத மூடிய கேள்விகளைத் தவிர்க்கவும், விடைகளைக் கொண்டுவரும் திறந்த முடிவுக் கேள்விகளை விட மூடிய முடிவுக் கேள்விகள் குறைந்த தகவல்களையே வழங்கும் என்பதுடன் முன்னணிப்படுத்தும் விளைவையும் ஏற்படுத்தும்.

### [3.2.5] தரப்பினருடன் முரண்படுவதைத் தவிருங்கள்:

- உங்களுடைய தரப்பினரை நீங்கள் விசாரிக்காதீர்கள்
- நேரடியான கேள்விகளைத் தவிர்ப்பதற்கு முயற்சியுங்கள்
- இந்தக் கட்டத்திலே ஏனைய சாட்சிகளின் நிலைகளுடன் தரப்பினரின் நிலைகளில் ஏதும் முரண்பாடுகள் அல்லது ஒத்துவராதவைகளை சுட்டிக்காட்டுவதை தவிர்ப்பதற்கு முயற்சியுங்கள். அவை வழக்கிற்கு தயார்படுத்தும் கட்டத்தின் போதும் பின்தொடரும் கலந்தாலோசிப்புக் கட்டங்களின் போதும் பின்பு எடுத்துக்கொள்ளப்படக் கூடியவையாகும்.

### [3.2.6] **கேள்விகளைக் கேளுங்கள், ஆனால் அதிகம் பேசாதீர்கள்**

- அனுபவமான நேர்காணல் செய்பவர் தான் பேசுவதைக் காட்டிலும் அதிகம் செவிமடுப்பார்
- ஏனைய தகவல்கள் தெளிவாக இல்லாது போனால் பின்தொடரும் அல்லது ஆய்வுக் கேள்விகளைக் கேளுங்கள்.

### [3.2.7] **சாதகமான செயற்பாட்டின் வாக்குறுதியுடன் எப்போதும் ஒரு நேரக்ாணலை முடிவுக்கு கொண்டு வாருங்கள்:**

- எவ்வளவு பெரியதாக அல்லது சிறியதாக இருந்தாலும் உங்களது தரப்பினரை அடுத்த செயற்பாட்டில் அல்லது நடைமுறைப் படி நிலையாக நீங்கள் எடுக்கக்கூடியவை தொடர்பானவற்றின் சுட்டிக்காட்டுகையுடன் உங்களது தரப்பினரை விட்டுவிடுங்கள்
- பின்தொடர்தல் நேரக்ாணலுக்கான அட்டவணையிடுதல்
- நிறைவேற்றமுடியாத வாக்குறுதிகளை வழங்காதீர்கள்.

## [3.3] **சட்டத்தரணி - தரப்பினர் நல்உறவு கட்டியெழுப்புதல்.**

பிரதிவாதி தனது சட்டத்தரணி தொடர்பானதோர் முதல் அவதானிப்பையும் அவ்வாறே சட்டத்தரணி தனது தரப்பினர் தொடர்பானதோர் முதல் அவதானிப்பையும் இங்கு உருவாக்கிக்கொள்வார். தனது தரப்பினருடனான ஆரம்ப நேர்காணல் மூலம் பிரதிவாதிச் சட்டத்தரணியின் இலக்காக இருக்க வேண்டியது பரஸ்பர நம்பிக்கை, மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு சாதகமான சட்டத்தரணி - தரப்பினர் உறவு முறையை கட்டியெழுப்புவதாகும். மிகவும் வினைத்திறன் மிக்க சட்டப் பிரதிநிதித்துவத்தை வழங்கும் முகமாக பிரதிவாதிச் சட்டத்தரணியானவர் ஒரு ஆரம்ப நேரக்ாணலை நடத்துவதற்காக பிரதிவாதியை கூடிய விரைவில் சந்திக்க வேண்டும்.

சட்டத்தரணி தனது தரப்பினரை ஒரு பொலிஸ் உத்தியோகத்தரோ அல்லது சிறைச்சாலை உத்தியோகத்தரோ சமூகமளிக்காத நிலையில் தனிப்பட்ட முறையில் சந்திப்பதற்கான உரிமையைக் கொண்டிருக்கிறார். தரப்பினர் பொலிசாரின் பிரசன்னத்திலேயோ அல்லது அவர்கள் பேசுவதைக் கேட்கக்கூடிய நிலையிலேயோ நேரக்ாணல் செய்யப்பட வேண்டுமென்று பொலிசார் வற்புறுத்த முடியாது.

முழுமையான நேர்காணலை நடத்துவதற்கு போதுமான நேரத்தை ஒதுக்குவதற்கு பிரதிவாதிச் சட்டத்தரணி உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆரம்ப நேர்காணளுக்கு தயாராகும் போது பிரதிவாதிச் சட்டத்தரணியானவர் தன் தரப்பினரை குற்றம் சாட்டப்பட்டுள்ள குற்றத்தின் காரணிகள் மற்றும் அதனோடு இணைந்த தண்டனை என்பவற்றுடன் தன்னை பரீட்சயப்படுத்திக் கொள்ள முடியுமாயின் பிரதிவாதிச் சட்டத்தரணியானவர் கைது பிடிவிறாந்துகள், தேடுதல் விறாந்துகள், பொலிஸ் அறிக்கைகள் மற்றும் குற்றவியல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான ஏனைய மேலதிக ஆவணங்கள் போன்ற உரிய ஆவணங்களின் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பிரதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாதிருக்கும் நிலையானது நேர்காணலை பிற்போடச் செய்யலாகாது. ஆரம்ப நேர்காணலுக்கு முன்பு இவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பின் நேர்காணலைத் தொடர்ந்து கூடிய சீக்கிரம் அவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும்).

## [3.4] **குறித்த தரப்பினரின் ஆரம்ப நேர்காணல் சரிபார்ப்பு நிரல்**

தனது தரப்பினருடனான ஆரம்ப நேர்காணலின் போது சேகரிக்கப்பட வேண்டிய தகவல்கள் தொடர்பான ஒரு பயனுள்ள வழிகாட்டியாக பின்வரும் விடயங்கள் அமைகின்றன.

### [3.4.1] **தரப்பினர் தொடர்பான பின்புலத் தகவல்**

ஆரம்ப நேர்காணலின் போது பிரதிவாதிச் சட்டத்தரணியானவர் பிரதிவாதியிடமிருந்து பின்வரும் பின்புலத் தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இத் தகவல்கள் பிரதிவாதிச் சட்டத்தரணிக்கு பிரதிவாதியை அறிந்துகொள்ளச் செய்வதுடன் சட்டத்தரணியின் எதிர்தரப்பு வாதத்திற்கான தந்திரோபாயங்களுக்கும் தகவல்களை வழங்குகிறன.

- பெயர்
- முகவரி
- தொலைபேசி இலக்கம்(கள்)
- பிறந்த திகதி

- சனசமூகத்துடனான பிணைப்புக்கள் (தற்போதைய முகவரியின் காலப்பகுதி, குடும்ப உறவுகள், அந்தஸ்து) (பொருத்தமாயின்)
- உயரம், நிறை மற்றும் அடையாளத்துவ அம்சங்கள்
- ஆயுதப்படைச் சேவை வரலாறு
- கல்வி வரலாறு
- வேலைவாய்ப்பு வரலாறு
- குற்றவியல் வரலாறு
- குடும்ப வரலாறு
- உடல் மற்றும் உள ஆராக்கியம்
- உடனடி மருத்துவ தேவைகள்.
- அவசர தொடர்பு தகவல்கள்

## [3.4.2] கைது

- நீர் எப்போது கைது செய்யப்பட்டீர் ?
- நீர் எங்கே கைது செய்யப்பட்டீர்?
- யார் கைது செய்தார்?
- உமது கைதிற்கான காரணம் அறிவிக்கப்பட்டதா?
- உமது கைதிற்கான காரணத்தை நீர் புரிந்து கொண்டீரா?
- கைது செய்யப்பட்ட போது உமக்கு ஒரு கைதுப் பிடிவிராந்து அல்லது அழைப்பாணை காட்டப்பட்டதா?
- கைது பிடிவிராந்தை வாசித்து விளங்கக் கொள்ள உம்மால் முடிந்ததா?
- பிடி விராந்து அல்லது அழைப்பாணையின் பிரதி உமக்கு வழங்கப்பட்டதா? அல்லது உமக்குள்ள சட்ட உரிமைகள் அறிவிக்கப்பட்டதா? உமது தடுத்து வைப்பின் 24 மணித்தியாலத்திற்குள் தடுப்பக் காவலில் வைக்கப்பட்டுள்ள இடம், தடுப்பு வைப்புக்கான காரணங்கள் போன்றவை உமது குடும்பத்தினருக்கோ அல்லது வேலை தளத்திற்கோ தெரியப்படுத்தப்பட்டதா?
- கைது செய்யப்பட்ட அதே நேரத்தில் வேறு யாரும் கைது செய்யப்பட்டனரா? அவ்வாறாயின் அவர்களது பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களை எவ்வாறு தொடர்பு கொள்வது பற்றி உமக்குத் தெரியுமா? அவர்கள் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் என்னவென்று உமக்குத் தெரியுமா ?

## [3.4.3] தேடுகையும் கைப்பற்றுகையும்

- ஆடை அவிழ்க்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டீரா?
- உங்களிடமிருந்து எடுக்கப்பட்டவைகள் யாவை?
- உங்களது ஆடைகள் ஏதும் கைப்பற்றப்பட்டதா? உங்களது ஆடையில் இருந்து ஏதும் பொருட்கள் கைப்பற்றப்பட்டதா?
- பரிசோதிப்புக்காக உங்களது உடல் திராவகங்கள் அல்லது மயிர் எடுக்கப்பட்டதா?
- நீங்கள் கைது செய்யப்பட்ட இடத்தில் ஒரு தேடுகை மேற்கொள்ளப்பட்டதா?
- உங்களது வதிவிடத்தில் ஒரு தேடுகை மேற்கொள்ளப்பட்டதா?
- உங்களது வேலையிடத்தில் ஒரு தேடுகை மேற்கொள்ளப்பட்டதா?
- தேடுதல் செய்யப்பட்ட ஏனைய ஆட்கள் அல்லது இடங்களை அறிந்திருக்கிறீர்களா? அவ்வாறாயின் அந்தப் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் என்ன? தேடுதல் செய்யப்பட்ட இடங்களின் முகவரிகள் என்ன? அவை எந்தவிதமான இடங்களாக உள்ளன? (உதா: வதி விடங்கள், வேலையிடங்கள்)
- பொலிசார் அல்லது விசாரணையாளர்கள் ஏதும் சான்றுகளைக் கைப்பற்றியதை நீங்கள் கண்டீர்களா?
- என்ன பொருட்கள் கைப்பற்றப்பட்டன?
- ஒரு தேடுதல் உத்தரவு இருந்ததா? நீங்கள் அதைப் கண்டீர்களா?
- தேடுகையின் போது யாரும் சாட்சிகள் பிரசன்னமாக இருந்தார்களா? எவ்வாறாயின் அவர்களது பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் என்ன?

- தேடுகை பதிவு செய்யப்பட்டதா? விசாரணையாளர்கள் கைச்சாத்திட்டனரா? நீங்கள் கைச்சாத்திட்டீர்களா? வேறு யாரும் கைச்சாத்திட்டார்களா? யாரும் கைச்சாத்திட மறுத்தார்களா? அவ்வாறாயின் ஏன்?
- குறித்த இடத்தில் கைப்பற்றப்பட்ட பொருட்கள் மற்றும் ஆவணங்களின் விபரமான நிரல் அல்லது நகல் பிரதிகளை விசாரணையாளர்கள் செய்து கொண்டார்களா? கைப்பற்றப்பட்ட பொருட்களின் விபரமடங்கிய நிரலின் பிரதியொன்றை அவர்கள் உடமையாளருக்கு கொடுத்தார்களா?

### [3.4.4] விசாரணை செய்தல்

- நீங்கள் கைதாகும் போது உங்களுக்குச் சொல்லப்பட்டது என்ன?
- கைது செய்யப்பட்ட பின்பு உங்களுக்குச் சொல்லப்பட்டது என்ன?
- உங்களது கைதின் பின்பு 24 மணித்தியாலங்களுக்குள்ளாக நீங்கள் விசாரிக்கப்பட்டீர்களா?
- உங்களை விசாரித்தது யார்? எத்தனை பேர் உங்களை விசாரித்தார்கள்?
- உங்களுடன் உரையாடலைத் தொடங்கியவர் யார்?
- அவர்களுக்கு நீங்கள் எவ்வாறு பதில் கூறினீர்கள்?
- அந்த நேரத்தில் உங்களது மனநிலை எவ்வாறு இருந்தது?
- உங்களது கூற்றுக்கள் பதியப்பட்டதா?
- உங்களது கூற்றை நீங்களாகவே எழுதினீர்களா?
- உங்களது கூற்றுக்களை போதியளவில் மீளாய்வு செய்யவும் திருத்தவும் நீங்கள் அனுமதிக்கப்பட்டீர்களா?
- உங்களது கருத்துக்களை எழுதுவதற்கு நீங்கள் அனுமதிக்கப்பட்டீர்களா?
- உங்களது இணைப் பிரதிவாதிகள் விசாரிக்கப்பட்டனரா? அவ்வாறாயின் உங்களைப் பற்றி அவர்கள் என்ன சொன்னார்கள் என உங்களுக்குத் தெரியுமா?

### [3.4.5] சட்ட உதவி பெறுவதற்கான வேண்டுகோள் மற்றும் குடும்பம் சம்பந்தமானது.

- ஒரு சட்டத்துறை சார்பு பாதுகாப்பாளரை நீங்கள் கோரினீர்களா?
- ஒரு சட்டத்துறை சார்பு பாதுகாப்பாளரை உங்களுக்கு வைத்திருக்க முடியும் என யாரும் உங்களுக்கு அறிவித்தார்களா?
- ஒரு சட்டத்துறைப் பாதுகாப்பாளரை வைத்திருக்க முடியும் என உங்களுக்கு எப்போது அறிவிக்கப்பட்டது?
- உங்களது கைதின் பின்பு உங்களது குடும்ப உறுப்பினர், நண்பர் அல்லது சகபணியாளரை பார்ப்பதற்கு நீங்கள் வேண்டுகோள் விடுத்தரீகளா?
- உங்களது கைதுக்குப் பின்பு உங்களது குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் அல்லது சகபணியாளர்களை நீங்கள் கண்டீர்களா?
- உங்களது தடுத்து வைப்பு அல்லது கைதிற்கு 24 மணித்தியாலத்திற்குள் உங்களது சூழ்நிலைகள், நீங்கள் எங்கே தடுத்து வைத்திருக்கப்படுகிறீர்கள் என்று உங்களது குடும்பத்தினருக்கு அறிவிக்கப்பட்டதா?

### [3.4.6] தடுத்து வைப்பு

- உங்களது கைதின் பின்பு நீங்கள் தடுத்து வைக்கப்பட்ட இடத்தை விபரியுங்கள்.
- உங்களது கைதின் போது எத்தனை பாதுகாப்பு உத்தியோத்தர்கள் இருந்தனர்?
- உங்களது விசாரணைக்கு முன்பாக உங்களுக்கு எதிராக ஏதேனும் கட்டாயமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதா?
- கைதின் போதும் அதற்குப் பின்பும் உடல் ரீதியான துஷ்பிரயோகத்திற்கு நீங்கள் அச்சுறுத்தப்பட்டீர்களா?
- கைதின் போதும் அதற்குப் பின்பும் வன்முறையாக நீங்கள் நடத்தப்பட்டதுன்டா?
- கைதின் போதும் அதற்குப் பின்பும் நீங்கள் வாய்மொழி மூலம் தூஷிக்கப்பட்டீர்களா? அல்லது அச்சுறுத்தப்பட்டீர்களா?

### [3.4.7] குற்றம் சாட்டப்பட்ட பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுபவர் பற்றிய தகவல்கள்

- பாதிக்கப்பட்டவரை நீங்கள் அறிவீர்களா? அவ்வாறாயின் அவருடனான உறவு முறையை விபரியுங்கள்.
- பாதிக்கப்பட்டவரின் பெயர், வயது, முகவரி, தொலைபேசி இலக்கம், தொழில் என்பவற்றை உங்களுக்குத் தெரியுமா? அவர் குற்றவியல் பதிவு ஒன்றினைக் கொண்டிருக்கிறாரா?
- பாதிக்கப்பட்டவராகச் சொல்லப்பட்டவர் உடல் ரீதியாகவோ, உள ரீதியாகவோ காயப்பட்டாரா? அவ்வாறாயின் என்ன வகையான காயங்கள் மற்றும் அக்காயங்கள் எவ்வளவு பாரதூரமானவை. பாதிக்கப்பட்டவராக சொல்லப்பட்டவர் அதிலிருந்து குணமடைந்து விட்டாரா? பாதிக்கப்பட்டவராகச் சொல்லப்பட்டவர் சொத்து சேதத்தினால் துன்புற்றாரா? அவ்வாறாயின் அச் சேதத்தின் அளவு தன்மை பற்றி எனக்குச் சொல்லுங்கள்.
- பாதிக்கப்பட்டவராக சொல்லப்பட்டவர் ஏதும் நட்டஈட்டைப் பெற்றுக்கொண்டாரா? அவ்வாறாயின் எப்பொழுது, எவ்வளவு மற்றும் நட்டஈட்டை செலுத்தியவர்கள் யார்?
- பாதிக்கப்பட்டவராகச் சொல்லப்பட்டவர் தொடர்பான உங்களது உணர்வுகள் யாவை?

### [3.4.8] இணைப்பிரதி வாதிகள் பற்றிய தகவல்கள்

- இணைப் பிரதிவாதி பற்றி உங்களுக்குத் தெரியுமா? அவ்வாறாயின் அவர்களது உறவு முறையை விபரிக்குக.
- அந்த இணைப் பிரதிவாதிகளின் பெயர்கள், வயது, முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள், தொழில்கள், குற்றவியல் வரலாறுகள் யாவை?
- இணைப் பிரதிவாதிகள் என்று சொல்லப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டார்களா என உங்களுக்குத் தெரியுமா? அவ்வாறாயின் அவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டவை ஏதேனும் இருப்பின் அவை எவ்வாறானவை என உங்களுக்குத் தெரியுமா?
- உங்களைப் பற்றி அந்த இணைப் பிரதிவாதிகள் ஏதேனும் வாக்கு மூலம் வழங்கியிருப்பின் அவை பற்றி உங்களுக்குத் தெரியுமா? குறித்த நிகழ்வுகள் தொடர்பில் அவர்கள் வழங்கும் கூற்றுக்களுக்கு உங்கள் பதில் என்ன?

### [3.4.9] குற்றவியல் குற்றச்சாட்டுக்கள்

- உங்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களின் தன்மையைப் பற்றி நீங்கள் புரிந்து வைத்துள்ளீர்களா?
- குற்றச்சாட்டுக்களின் சட்டரீதியான அர்த்தங்களை நீங்கள் புரிந்துகொள்கிறீர்களா?
- குறித்த குற்றச்சாட்டுகள் மீது உங்கள் பக்கத்தில் இருக்கக்கூடிய பாதுகாப்பை/ நியாயத்தை நீங்கள் அறிந்து வைத்துள்ளீர்களா?
- குற்ற நேரத்தின் போது தாம் உங்களோடு இருந்ததாக ஆனால் குற்ற காட்சியிலிருந்து சற்று தள்ளியிருந்ததாக உறுதிப்படுத்தக்கூடிய யாரும் உள்ளனரா?
- குற்றச்சாட்டின் எந்தப் பகுதிகள் பிழையானவை என நம்புகிறீர்கள்?
- குற்றம் சாட்டப்பட்ட அல்லது குற்றம் சாட்டப்பட வேண்டிய யாரும் இருக்கிறார்களா? அவ்வாறாயின் அவர்களது பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கம் யாவை? இந்த சம்பவத்தில் அவர்களது ஈடுபாட்டை எவ்வாறு விபரிப்பீர்கள்?

### [3.4.10] துரித விசாரணை

- நான் யாரைத் தொடர்பு கொள்ள வேண்டும்? அவர்களது பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் என்ன?
- நான் கதைக்க வேண்டிய சாட்சிகள் யாரும் உள்ளனரா? அவ்வாறாயின் அவர்களது பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்களை உங்களால் தர முடியுமா? அவர்களால் என்ன தகவல்களை வழங்க முடியும் என நீங்கள் நினைக்கிறீர்கள்? அவைகள் நம்பக்கூடியவை என நீங்கள் நினைக்கிறீர்களா?
- பாதுகாக்கப்பட வேண்டிய சாட்சியங்கள் எதுவும் உள்ளதா? அவ்வாறாயின் அவை யாவை? அவற்றை நான் எங்கே கண்டுகொள்ள முடியும் என எனக்கு உங்களால் கூற முடியுமா? இவை ஏற்கனவே கைப்பற்றப்பட்டவைகளா என உங்களுக்குத் தெரியுமா?

**[3.4.11] <u>அவசியமற்ற பிரச்சினைகள் அல்லது இடர்களைத் தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு பிரதிவாதியின் சட்டத்தரணி நேர்காணலின் போது பின்வரும் நடவடிக்கைகளைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்:</u>**

- எழுத்து மூலமான குற்றச்சாட்டுகள், வெளிப்படுத்தல்கள் தொடர்பான தகவல்கள் உட்பட தன் தரப்பினரின் வழக்கு பற்றிய தகவல்களை வெளியிடுதல்
- குறித்த சம்பவத்தில் தனது தொடர்பு/ வகிபாகம் பற்றி பொய் சொல்வதற்கு தரப்பினரைத் தூண்டுதல்
- உங்கள் சொந்த செல்லிடத் தொலைபேசியை இரவல் கொடுத்தல்
- தனது தரப்பினருக்கு தனிப்பட்ட முறையில் பண்டப் பொருட்களைக் கொடுத்தல்
- தனது தரப்பினரைச் சந்திக்கும் போது ஒரு சட்டத்தரணி அல்லாத ஒருவரை அல்லது அத்தரப்பினரின் குடும்ப உறுப்பினர்களைக் கொண்டு வருதல்.

**எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்:**

- ஒரு தரப்பினரை நேர்காணும் போது அவர் தடுப்புக்காவலில் இருந்தாலும் தடுப்புக்காவலில் இல்லாதிருந்தாலும் சட்டத்தரணியானவர் தனது தரப்பினருக்காக ஒரு எதிர்வாதத்தை திட்டமிடாதிருப்பதில் கவனமாக இருக்க வேண்டும். சட்டத்தரணியானவர் தனது கட்சிக்காரர் குறித்த சம்பவம் தொடர்பில் கூறும் விடயங்கள் உண்மையானவையா என்பதை கண்டறிதல் வேண்டும் என்பதுடன் அவற்றின் அடிப்படையில்தான் இக்கட்சிக்காரர் சார்பாக தன்னால் எதிர்வாதம் புரிய முடியுமென யோசனை தெரிவிக்கலாம். தனது தரப்பினரால் வெளிப்படுத்தப்பட்ட உண்மைகளுக்கு அப்பாற்பட்ட விதத்தில் விடயங்களை முன்வைத்து அவருக்கான எதிர்வாதம் ஒன்றை முன்வைப்பதானது ஒரு சட்டத்தரணியின் நெறிமுறைகளுக்கு மாற்றமனதாகும்.

## [3.5] விசேட மக்கள் கூட்டத்தினர்

"விசேட மக்கள் கூட்டத்தினர்" என்பது பாதிப்புக்குள்ளான அல்லது பாதிப்புக்குள்ளாகும் குழுவினரை குறிப்பதற்காக பொதுவாகப் பயன்படுத்தப்படும் ஒரு சொற்பிரயோகமாகும். குற்றவியல் நீதி முறைமைகளின் கீழ் சட்ட உதவியைப் பெற்றுக்கொள்வது மீதான ஐக்கிய நாடுகள் கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களின் கொள்கை 10 ஆனது பின்வருமாறு கூறுகிறது:

*"பெண்கள், சிறுவர்கள், விசேட தேவைகளுடன் கூடிய குழுக்கள், வயது முதிர்ந்தோர், சிறுபான்மையினர் இயலாமையுடன் கூடிய ஆட்கள், மனநோயுடன் கூடிய ஆட்கள், எச்.ஐ.வி. மற்றும் ஏனைய பாரதூரமான நோய்களுடன் வாழும் ஆட்கள், போதைப்பொருள் பயன்படுத்துபவர்கள், சுதேச மற்றும் பழங்குடி மக்கள், நாடற்ற மக்கள், தஞ்சம் கோருபவர்கள், வெளிநாட்டுப் பிரசைகள், புலம்பெயர்ந்தோர், புலம்பெயர் தொழிலாளர்கள், அகதிகள், மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆட்கள் உட்பட அவர்கள் மாத்திரம் அல்லாத அனைவருக்கும் அர்த்தபுஷ்டியான சட்ட உதவியை சென்றடைவதை உறுதிப்படுத்துவதற்கு விசேட ஏற்பாடுகள் எடுக்கப்பட வேண்டும். இந்த ஏற்பாடுகளானவை இந்தக் குழுக்களின் பால்நிலைக் கூருணர்வு மற்றும் வயதுக்குரிய ஏற்பாடுகள் உட்பட இந்தக் குழுக்களின் விசேட தேவைகளைக் கவனிக்க வேண்டும்."*

இந்தக் கையேட்டின் நோக்கத்திற்காக இலங்கையின் நான்கு விசேட மக்கள் குழுக்கள் ஆராயப்படுவர். இளம்ஆட்கள், பெண்கள், பெண் பெண் உறவுள்ளோர், ஆண் ஆண் உறவுள்ளோர் இருபாலியர், பால்நிலை மாறும் மற்றும் கலப்பு பால்உடையோர் (LGBTI), மற்றும் மன நோயாளிகள்.

### [3.5.1] இளம் பராயத்தினர்

இலங்கையில் இளம் பராயத்தினர் சார்பான நீதி விடயங்களானவை சிறுவர் மற்றும் இளம் ஆட்கள் கட்டளைச் சட்டம் (1939) (CYPO) என்பவற்றின் பிரகாரம் பரிசீலிக்கப்படுகிறது. CYPO ஆனது 14 வயதிற்கு குறைந்த ஒரு ஆளை சிறுவர் எனவும், 14 – 16 வயதிற்கு இடைப்பட்ட ஆட்களை இளம் ஆட்கள் எனவும் வரைவிலக்கணம் செய்கிறது.

தண்டனைச் சட்டக்கோவையின் பிரகாரம் 8 வயதிற்கு கீழானவர் ஒரு குற்றத்தைச் செய்வதற்கு முடியாத ஆளாகக் கருதப்படுகிறார். (தண்டனைக்கோவை, பிரிவு 75) அதேபோன்று 8 வயதிற்கு மேற்பட்ட 12 வயதிற்கு குறைந்த ஒரு பிள்ளையால் செய்யப்படும் எதுவும் ஒரு குற்றமல்ல. அவ்வாறான பிள்ளையானது ஒரு குறித்த சந்தர்ப்பத்தில் தனது நடத்தையின் தன்மை, பின்விளைவுகளை மதிப்பிடுவதற்கான போதிய முதிர்ச்சியை அடைந்திருக்க முடியாதிருக்கும்

நிலையில் அவ்வாறான வயதுடைய பிள்ளையின் நடத்தையானது குற்றமாகக் கருதப்படமாட்டாது. (தண்டனைச்சட்டக்கோவை, பிரிவு 76)

### [3.5.1.1] நியாயாதிக்கம்

CYPO கட்டளைச் சட்டத்தின் கீழ் இளையோர் நீதிமன்றங்கள் அல்லது சிறுவர் நீதிமன்றங்கள் உருவாக்கம் பெற்றுள்ளதுடன் இவை சிறுவர் அல்லது இளம் ஆட்களுக்கு எதிரான ஏதும் குற்றச்சாட்டுகளை சுருக்க முறையில் விசாரிப்பதற்கான நியாயாதிக்க சபைகளாக அமைகின்றன (CYPO பிரிவு 2). CYPO கட்டளைச் சட்டத்தின் பிரிவு 03 (1) மற்றும் 03 (2) மூலம் இலங்கை நீதவான் மற்றும் மாநகர நீதிமன்றங்களில் அவ்வாறான வழக்குகளை விசாரிப்பதற்கு சிறுவர் நீதவான் மன்றங்களை நியமிப்பதை ஏற்பாடு செய்கிறது. மனிதக்கொலை, கொள்ளை, கொலை முயற்சி போன்ற திட்டமிடப்பட்ட குற்றங்கள் தவிர்ந்த, சிறுவர்களுக்கு எதிரான ஏதேனும் குற்றவியல் குற்றச்சாட்டுக்கள் மற்றும் சிறுவர்களின் தேவை, கவனிப்பு மற்றும் பாதுகாப்பு போன்ற எல்லா விடயங்களையும் உட்படுத்தும் விரிவானதோர் நியாயாதிக்கத்தை இந்த நீதிமன்றங்கள் கொண்டுள்ளன.

சிறுவர் நீதிமன்றமாக அமரும் ஒரு மாநகர நீதிமன்றமானது மாநகரசபைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் புரியப்படும் குற்றங்களுக்கான நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ளது. (CYPO, பிரிவு 4(2)). சிறுவர் நீதிமன்றமாக அமரும் நீதவான் நீதிமன்றமானது அட்டவணைப்படுத்தப்பட்ட குற்றம் தவிர்ந்த வேறு ஏதேனும் குற்றங்கள் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்ட ஒரு சிறுவர் அல்லது இளம் ஆளின் ஏதேனும் வழக்கை தீர்மானிப்பதற்கான நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ளது. (CYPO, பிரிவு 4(1)).

ஒரு சிறுவர் நீதிமன்றம் விசாரித்து தீர்மானிப்பதற்கான நியாயாதிக்கத்தை கொண்டுள்ள ஏதேனும் ஒரு குற்றம் தொடர்பாக ஒரு சிறுவர் அல்லது இளம் ஆள் அவ்வாறான நீதிமன்றம் முன்னே கொண்டு வரப்படும் பட்சத்தில் குற்றம் சாட்டப்பட்ட குற்றத்தின் சுருக்கத்தை இலகு மொழியில் கூடிய விரைவில் அவருக்கு விளக்கி வைக்கவேண்டியது அவ்வாறான நீதிமன்றத்தின் கடமையாக இருக்கும். (சிறுவர் சட்டம், பிரிவு 9(1)).

சிறுவர் நீதிமன்றமானது குற்றம் சாட்டப்படக் கூடியவாறான ஏதேனும் தவறொன்றை விசாரிப்பதற்கான நியாயாதிக்கத்தை கொண்டிருக்கின்றது. குற்றம் சாட்டப்பட முடியுமான தவறுகள் தொடர்பிலும்கூட குறித்த வழக்கை சுருக்கமான முறையில் விசாரித்து முடிக்க வேண்டியது உசிதம் என நீதிமன்றம் கருதும் பட்சத்தில் பின்வரும் கேள்விகளை அல்லது அதை ஒத்த கேள்விகளை இளம் ஆளிடம் முன்வைத்தல் வேண்டும். (CYPO, பிரிவு 4(1)).

''நீர் இந்த நீதிமன்றத்தினாலா? அல்லது உயர் நீதிமன்றமொன்றினாலா? விசாரிக்கப்பட விரும்புகிறீர்.?''

மேற்படி கேள்வியுடன் நீதிமன்றமானது, குற்றம் சாட்டப்பட்ட சிறுவனுக்கு/ சிறுமிக்கு அவர் தனது பெற்றோரையோ, பாதுகாவலரையோ அல்லது நண்பரையோ பதிலளிப்பதற்கு முன்னர் கலந்தாலோசிக்க முடியும் என்று விளக்கிக்கூற வேண்டியது முக்கியமானதாகும். விசாரிக்கப்படும் விடயத்தின் தாக்கம் மற்றும் விடயமானது சிறுவர் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்டு, தலைமை தாங்கும் உத்தியோகத்தரால் எந்தக் கட்டத்திலும் செயன்முறையின் போது இவ்விடயமானது உயர் நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கும் பட்சத்தில் அவர் விடயத்தை அவ்வாறானதொரு உயர் நீதிமன்றத்திற்கு முன்னிலைப்படுத்தப்படும் என்பதையும் குற்றம் சாட்டப்பட்ட சிறுவனுக்கு.'. சிறுமிக்கு விளக்கமளிப்பது தலைமை தாங்கும் உத்தியோகத்தரின் கடமையாக இருக்கும் (CYPO, பிரிவு 9 (4)(டி)(i)).

குறித்த இளம் ஆள் அல்லது சிறுவன்/ சிறுமி ஒரு உயர் நீதிமன்றத்தால் அதனை விசாரிக்க விரும்பும் பட்சத்தில் குறித்த குற்றச்சாட்டுகையானது தகுதியான நியாயாதிக்கத்திற்கு உட்பட்ட நீதவான் நீதிமன்றத்திற்கு முன்னிலைப்படுத்தப்படல் வேண்டும்.

### [3.5.1.2] இளம் தரப்பினரை நேர்காணல்

இவர்கள் குறிப்பாக பாதிப்புக்குள்ளாகுவோர்கள் என்பதன் காரணமாக இளம் தரப்பினர் அநேகமாக பிரதிவாதிச் சட்டத்தரணிக்கு ஒரு தனித்துவமான சவாலினை ஏற்படுத்துவர். இவற்றுள் மிக முக்கியமான ஒன்றாக இருப்பது பெற்றோருக்கும் இளம் தரப்பு வாதிக்கும் இடையில் இருக்கக்கூடிய விருப்பு முரண்பாடாகும்.

ஏற்படக்கூடிய சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக வேண்டி நேர்காணலின் ஆரம்பத்திலேயே தான் சிறுவரதும் சிறுவரின் பெற்றோரினதும் விருப்புக்களை பிரதிநிதிப்படுத்துவது என்பதைத் தெளிவாகக் காட்டும் முகமாக அதை நிச்சயப்படுத்திக்கொள்வது அவருக்கு கட்டாயமானதாகும். அத்துடன் பெற்றோருக்கும் பிள்ளைக்கும் இடையில் இணக்கம் காணாத நிலையில் சட்டத்தரணியானவர் பெற்றோர் சார்பாகவன்றி பிள்ளையின் சார்பாகவே செயற்பட வேண்டும் என்பதையும் வழியுருத்தியாக வேண்டும். ஆரம்ப நேர்காணல் நடாத்தப்படும் அறையில் பெற்றோர் இருக்கக்கூடுமா இருக்கக்கூடாதா என்பதை சட்டத்தரணியே கவனத்தில் எடுக்க வேண்டும்.

சட்டத்தரணி - தரப்பினர் இடையிலான சிறப்புரிமையைப் பேணிக்கொள்வதற்காக சட்டத்தரணி பெற்றோரின் பங்குபற்றுகையில்லாமல் ஒரு இளம் ஆளின் ஆரம்ப நேர்காணலை நடத்த விரும்பக்கூடும். இருந்தும் அவரின் வயது, மனோநிலை மற்றும் குறிப்பிட்டுள்ள தெரிவு போன்றவற்றைப் பரிசீலித்து சிறப்புரிமையை விட்டுக் கொடுத்தவாறு நேர்காணலில் பெற்றோரின் பிரசன்னத்தைக் கொண்டிருப்பதை விரும்ப முடியும். வயதுவந்த ஒருவரைப் போல் அன்றி இளம் தரப்பினர் ஒருவரை நேர்காணும் போது அவருக்குள்ள பதற்றம் மற்றும் ஆவல் என்பவற்றையும் அவருக்குள்ள தனித்துவமான தேவைகளையும் பிரதிவாதியின் சட்டத்தரணி கூருணர்வுடன் அணுக வேண்டும். பிரதிவாதிக்கு இச்செயன்முறையில் பிற்கேள்விகள் அல்லது மேலதிக விளக்கங்கள் தேவைப்படலாம்.

குறித்த தரப்புடனான ஆரம்ப நேர்காணலில் கலந்துரையாடப்பட்ட எல்லாவற்றையும் இளம் பிரதிவாதி விளங்கிக்கொண்டார் என்பதை பிரதிவாதியின் சட்டத்தரணி உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதுடன் அவ்விளம் ஆளுக்கு கேள்விகளைக் கேட்பதற்கான சந்தர்ப்பத்துடன் நேர்காணலை முடிவுக்கு கொண்ட வர வேண்டும்.

### [3.5.1.3] இளம் ஆட்களைத் தடுத்து வைத்தல்

சிறுவர் மற்றும் இளம் குற்றமிழைத்தவர்கள் பொலிஸ் நிலையங்களிலும் நீதிமன்றங்களிலும் வயதுவந்தோரிடமிருந்து பிரிக்கப்பட்டு தனியாக தடுத்து வைக்கப்படல் வேண்டும். அத்துடன் இளம் பெண்கள் ஒரு பெண்ணின் கவனத்தின் கீழ் கூட்டி வரப்படவும் அப்பெண் காத்திருக்கும் நிலையில் தடுத்து வைக்கப்படவும் வேண்டுமென ஊஇஊழ கூறுகிறது. (CYPO, பிரிவு 13) அதேபோன்று, ஊஇஊழ வின் பிரிவு 14(1)இ 14(2) மற்றும் 14(3) ஆகியன கைது செய்யப்படும் சிறுவர் மற்றும் இளம் ஆட்கள் தொடர்பில் பிணை மற்றும்/ அல்லது தடுத்து வைப்பை வழங்குகிறது.

சிறுவராலோ அல்லது பன்னிரண்டு வயதிற்கு மேற்பட்ட பதினான்கு வயதிற்கு கீழான ஒருவராலோ செய்யப்பட்டதாக சொல்லப்படும் ஒரு குறித்த குற்றத்தின் விடயத்தில் ஒரு மருத்துவ பரிசோதனைக்கான ஏற்பாடுகளை தண்டனைச் சட்டக் கோவை பிரிவு 122 A வளங்குகிறது. அது பின்வருமாறு:

*(1)சிறுவரால் அல்லது பன்னிரண்டு வயதிற்கு மேற்பட்ட பதினான்கு வயதிற்கு கீழ்ப்பட்ட ஒருவரால் இழைக்கப்பட்டதாகச் சொல்லப்படும் ஒரு குற்றத்தை விசாரிக்கும் பொலிஸ் நிலையத்திற்குப் பொறுப்பான உத்தியோத்தர் இந்தப் பிள்ளையின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் இணக்கத்துடன் பிள்ளையானது நியாயாதிக்கம் கொண்ட நீதவான்மன்ற வழக்கில் தீர்மானிக்கப்படுவதற்கு அவரை இயலச் செய்யக்கூடிய விளக்க முதிர்ச்சியை போதியளவு அடைந்துள்ளதா என்ற ஒரு அறிக்கையைப் பெற்றுக்கொள்ளும் முகமாக உபபிரிவில் விதந்துரைக்கப்பட்டவாறான முகவர்களை உள்ளடக்கிய பல்துறை நிபுணர்கள் சார்ந்த குழாத்தினரால் பரிசோதிக்கப்படச் செய்வார்*

—

*(அ)குற்றம் சாட்டப்பட்ட குற்றத்தினை பிள்ளை பொறுப்பெடுப்பதற்கான, அதன் தன்மை மற்றும் பின்விளைவுகளை பரிசீலனைக்கு எடுப்பதற்கான அதன் பொறுப்பின் அளவு மற்றும்*
*(ஆ) அந்தப் பிள்ளைக்கு ஏதும் சிகிச்சை இடையீடுகள் தேவையாக உள்ளதா என,*

*(2) பிரிவு (1) இல் எடுத்தாளப்பட்ட பல்துறை நிபுணர்கள் சார்ந்த குழாமில் உள்ளடங்குவோர்*

—

*(அ) உரிய மாவட்டத்தின் சட்ட மருத்துவ அதிகாரி*

*(ஆ) சிறுவர் மருத்துவ நிபுணர் அல்லது இளைஞர் மனந மருத்துவர்*

*(இ) உளவியலாளர்.*

*(3) பிள்ளையின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் அப்பிள்ளை இவ்வாறு பரிசோதிக்கப்படுவதற்கு இணக்கம் தெரிவிக்காத நிலையில் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பான உத்தியோகத்தர் இவ் வழக்கினை விசாரிக்கும் நியாயாதிக்கம் கொண்ட நீதவானுக்கு அப் பிள்ளையை அவ்வாறு பரிசோதிப்பதற்கு பல்துறை நிபுணர் சார் குழாத்தினருக்கு அதிகாரம் வழங்கச் செய்வதற்காக விண்ணப்பிப்பார்.*

*(4) உரிய மாவட்டத்தின் சட்ட மருத்துவ உத்தியோகத்தர் கிடைக்கப் பெறாத நிலையில் அக் குற்றத்தை விசாரணை செய்யும் பொலிஸ் நிலையத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் பிரிவு (1) இல் எடுத்தாளப்பட்ட அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்காக பிறிதொரு மாவட்டத்தின் ஒரு சட்ட மருத்துவ உத்தியோகத்தரின் உதவியைப் பெற்றுக்கொள்வார்.*

*(5) இவ்வகையான பல்துறைசார் நிபுணர் குழுவானது பொலிஸ் நிலையத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு அதன் அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டியதுடன் அவர் அவ்வறிக்கையை தண்டனைச் சட்டக்கோவைச் சட்டம் 76 ஆம் பிரிவு ஏற்பாடுகளைப் பரிசீலித்து உபபிரிவு (1) இல் எடுத்தாளப்பட்டவாறான தனது அபிப்பிராயத்தை உருவாக்கிக்கொள்வதற்கும் தீர்மானத்தை எடுப்பதற்கு உதவுவதற்கும் முகமாக நீதவானுக்கு அவ் அறிக்கையைச் சமர்ப்பிப்பார்.*

*(6) உபபிரிவு (1) இன் கீழ் எடுத்தாளப்பட்ட அப் பிள்ளையானது குழந்தை மனநல வைத்தியர் மற்றும் உளவியலாளரின் மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டின் கீழ் குறித்துரைக்கப்பட்ட விதத்தில் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படும்.*

### [3.5.1.4] இளம் குற்றவாளிகளுக்கான நீதிமன்றச் செயன்முறைகள்

இளையோர் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படும் ஒவ்வொரு வழக்கினைப் பொறுத்த மட்டிலும் சிறுவர் சட்டத்தின் 9(5) பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான பின்வரும் செயன்முறைகளை நீதிமன்றம் கைக்கொள்ளும் :

(அ) *நீதிமன்றமானது அச்சிறுவரிடமோ அல்லது இளம் ஆளிடமோ ஒரு குற்றத்தை அவர் செய்ததாக ஏற்றுக்கொள்கிறதா எனக் கேட்டறிதல் வேண்டும்*
(ஆ) *அச் சிறுவர் அல்லது இளம் ஆள் குற்றமிழைத்ததை ஏற்றுக்கொள்ளாது போவாராயின் நீதிமன்றமானது குற்றச்சாட்டுக்கு ஆதரவான சாட்சிகளின் சான்றுகளுக்கு செவிமடுத்தல் வேண்டும்.*
*(இ) ஒவ்வொரு சாட்சியினதும் சாட்சியத்தின் இறுதியில் நீதிமன்றமானது சிறுவர் அல்லது இளம் ஆளிடம் அல்லது நீதிமன்றம் பொருத்தமானது எனக் கருதுமாயின் பெற்றோர் அல்லது பாதுகாவலரிடம் குற்றம் சாட்டும் சாட்சிக்கு எதிராக ஏதும் கேள்விகளைக் கேட்க விரும்புகிறாரா எனக் கேட்டறிதல் வேண்டும்.*
(ஈ) *சிறுவர் அல்லது இளம் ஆள், பெற்றோர் அல்லது பாதுகாவலர் இதன் பிரகாரம் ஏதாவது கேள்விகளைக் கேட்கலாம்.*
*(உ) சிறுவர் அல்லது இளம் ஆள் கேள்வி கேட்பதற்குப் பதிலாக அவர் விரும்பின் ஒரு கூற்றை விடுக்கலாம்.*
*(ஊ) நீதிமன்றத்திற்குத் தேவையாகத் தோன்றும் அளவுக்கு அவ்வாறான கேள்விகளை குற்றச்சாட்டுக்கு ஆதரவாக சாட்சியமளிக்கும் ஒவ்வொரு சாட்சியிடமும் கேட்க வேண்டியது நீதிமன்றத்தின் கடமையாக இருக்கும்.*
*(எ) சிறுவர் அல்லது இளம் ஆளால் செய்யப்பட்ட ஏதும் கூற்று எதனையும் விளக்கிக் கொள்ளும் தேவை ஏற்படுமிடத்து நீதிமன்றமானது அக் கேள்விகளை சிறுவர் அல்லது இளம் ஆட்களிடம் கேட்கலாம்.*
*(ஏ) ஒரு முதல்தோற்ற வழக்கானது உருவாக்கப்பட்டுள்ளது என நீதிமன்றத்திற்கு தோன்றுமாயின், எதிர்த்தரப்பின் எவரேனும் சாட்சிகளின் சாட்சியம் எடுக்கப்படல் வேண்டுமென்பதோடு சிறுவர் அல்லது இளம் நபர் சான்றளிப்பதற்கோ அல்லது ஏதாவது கூற்றுக்களைச் செய்வதற்கோ அனுமதிக்கப்படல் வேண்டும்.*
*(ஓ) சிறுவர் அல்லது இளம் ஆள் இழைக்கப்பட்ட குற்றத்தை ஏற்றுக்கொண்டாலோ அல்லது முன்வைக்கப்பட்ட சாட்சியங்களின் படி சிறுவர் அல்லது இளம் ஆள் குற்றமிழைத்துள்ளார் என நீதிமன்றம் திருப்திப்பட்டாலோ அந்நிலையில் குற்றத்தின் சூழ்நிலை குறித்தோ அல்லது தண்டனையின் குறைப்பு குறித்தோ அல்லது வேறேதேனும் இருப்பின் கூறும் படியோ* அவர் கேட்கப்படுவார்.

### [3.5.1.5] சிறுயோருக்கு தண்டனைத் தீர்ப்பு வழங்குதல்

CYPO யில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சிறுவர் அல்லது இளம் ஆள் குற்றமொன்றை புரிந்துள்ளதாக காணப்படும் பட்சத்தில் அவர் பின்வரும் முறையில் தண்டிக்கப்படலாம்.

- ஒரு மாதத்திக்கு மேற்படாத காலப்பகுதிக்கு தடுப்பு வீடொன்றில் காவலில் வைக்கச் செய்யப்படல் (பிரிவு 25(1) வேண்டும்
- 12 வயதானதோர் சிறுவர்/ சிறுமி/ இளம் ஆள் ஒரு அங்கீகரிக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்படலாம் (பிரிவு 26(1))
- ஒரு வருடத்திற்கு நல்ல நடத்தையில் வைத்திருக்க வெண்டுமென்ற நிபந்தனையின் பேரில் பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் பொறுப்பில் கையளிக்கப்படலாம். (பிரிவு 27(1))
- பொருத்தமான ஆள் ஒருவரின் பொறுப்பில் மூன்றாண்டுகளுக்கு வைக்கப்படலாம். (பிரிவு 27(1))
- நிபந்தனையின் பேரில் அவரை விடுவிக்கலாம் (பிரிவு 27(1))

- தண்டப்பணம் விதிக்கப்படலாம் (பிரிவு 28(1)
- உடற் தண்டனைக்கு கட்டளையிடலாம் (ஆண்களுக்கு மாத்திரம் பிரம்பால் மெதுவாக 6 தடவைகள் அடித்தல் (29(1))
- உரிய கண்டிப்புக்கு பின்னர் விடுவிக்கப்படலாம் (பிரிவு 30).

குற்றவாளியாக காணப்பட்ட சிறுவனான/ சிறுமியான சிறைக்கைதிகள் வழமையாக இலங்கையிலுள்ள பின்வரும் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்

- குற்றமிழைத்த இளையவர்களுக்கான வத்துபிற்றிவெல பயிற்சிப் பாடசாலை,
- குற்றமிழைத்த இளையவர்களுக்கான பல்லன்சேன திருத்துகை நிலையம் மற்றும்/ அல்லது
- குற்றமிழைத்த இளையவர்களுக்கான தல்தேன திருத்துகை நிலையம்

### [3.5.2] <u>பெண்கள்</u>

இலங்கையில் இழைக்கப்படும் குற்றச் செயல்களில் ஒப்பீட்டு ரீதியில் சிறிய நூற்றுவீதத்தையே பெண்கள் கொண்டுள்ளனர். 2017 இன் ஆரம்பத்தில் பெண் சிறைக் கைதிகள் இலங்கையின் மொத்த சிறைக் கைதிகள் தொகையில் 4.9% ஆகவே இருந்தனர். (அக்காலப்பகுதியில் மொத்த சிறைக் கைதிகள் 21,000 பேராக இருந்தனர்).[15]

பெண்கள் அநேகமாக இலங்கையில் வீட்டு வன்முறையாலும் வன்புணர்வாலும் பாதிக்கப்படுபவர்களாக இருப்பதுடன் பின்வரும் கட்டங்கள் உட்பட குற்றவியல் நீதிமுறையின் எல்லாக் கட்டங்களிலும் பால்நிலை மீதான அக்கறையின்மை நிலவுவதாக அறிக்கைகள் கூறுகின்றன: (i) சட்ட அமுலாக்கல் (ii) குற்றம் சாட்டுதல் (iii) நீதிகாணுதல், (iv) திருத்துதல் மற்றும் (v) புனர்வாழ்வளித்தல். ஏனைய நியாயாதிக்க நிர்வாகங்களுக்கு ஒத்ததாக ஒரு பெண்ணைத் தேடுகை செய்தல் அவசியமான போதெல்லாம் மிகவும் பண்பான முறையில் வேறொரு பெண்ணினால் தேடுதல் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறான சந்தர்ப்பத்தில் குற்றம் சாட்டப்பட்டவரின் கண்ணியத்தை பேணவேண்டியது மிகவும் கண்டிப்பானதாக உள்ளதை இங்கு குறிப்பிடல் வேண்டும். **(குற்றவியல் கோவை, பிரிவு 30).**

பொலிஸ் கான்ஸ்டபல், சட்டத்தரணிகள், நீதிபதிகள், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், சட்ட மருத்துவ அதிகாரிகள் மற்றும் ஏனையோர் உட்பட குற்றவியல் நீதி முறைமையின் பல்வேறு செயற்பாட்டாளர்கள் மத்தியில் பால்நிலை அக்கறையின்மை காணக் கூடியதாக இருப்பதாக அறிக்கைகள் மேலும் கூறுகின்றன.[16] இலங்கையில் சிறைச்சாலையில் இருக்கும் பெண் சிறைக்கைதிகள் மற்றும் கைதிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு மத்தியில் வழக்குகளை எதிர்பார்த்து நிற்பவர்களாகவோ குற்றவாளிகளாக காணப்பட்டவர்களாகவோ இருக்கலாம். அவற்றுள் கீழ்வரும் விடயங்கள் அடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

- செயற்றிறன் மிக்க பொலிஸ் பிரசன்னம் இல்லாமை – பெண்கள் மற்றும் சிறுவர் கருமபீடங்களின் எண்ணிக்கையை இலங்கையில் அதிகரிக்கச் செய்வதற்கு இலங்கை பெண்கள் மற்றும் சிறுவர் பணியகம் நடவடிக்கை எடுத்திருந்த போதும் கூட நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள அவ்வாறான கருமபீடங்களால் வினைத்திறன் மிக்க சேவையை வழங்குவதற்கு முடியாதுள்ளது.
- சிறைக்கூடங்களின் நெரிசலும் அவற்றின் தரம் குறைந்த நிலைமைகளும்
- பால்நிலை மாறும் பெண்கள் உட்பட குற்றம் குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு பொருத்தமான போதியதான புகலிடங்கள் இல்லாமை
- குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகள் மற்றும் பாதுகாப்பு என்பன பால்நிலை பரிமாணங்களை அங்கீகரிக்கத் தவறுவதுடன் குற்றங்களால் பாதிப்புறும் பெண்கள் தொடர்பில் எதுவித விஷேட ஏழுத்தாளுகைகளையும் எடுத்தியம்புவதில்லை என்பதுடன் பெண்கள் என்ற வகையில் பாதிப்புக்குள்ளாகும் நிலையிலுள்ள பெண்களுக்குக் கூட எதுவித பாதுகாப்பும் வழங்குவதில்லை. (2015 ஆம் ஆண்டு 4 ஐக் கொண்ட குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கான உதவிகள், பாதுகாப்புச் சட்டம்)[17]

[15] "World Prison Brief data: Sri Lanka." December 2017, http//www.prisonstudies.org/country/sri-lanka.
[16] "Some aspects of criminal law discriminatory of woman." *Daily News,* 14 December 2015,
[17] "Some aspects of criminal law discriminatory of woman." *Daily News,* 14 December 2015, http://www.dailynews.lk/2015/12/14/features/some-aspects-criminal-law-discriminatory-woman.

### [3.5.2.1] கருக்கலைப்பு, வன்புணர்வு மற்றும் விபச்சாரம்

இலங்கையில் தண்டனைச் சட்டக்கோவையின் 303 ஆம் பிரிவின் பிரகாரம் கருக்கலைப்பானது இலங்கையில் ஒரு சர்ச்சைக்குரிய சட்ட விடயமாக இருப்பதுடன், ஒரு தாயின் உயிரைப் பாதுகாக்கும் முகமான ஒரு நல்லெண்ணத்துடன் கருக்கலைப்பு செய்யப்பட்டிருந்தாலொழிய ஒரு பிள்ளையின் கருக்கலைப்பிற்கு தன்னார்வமாக யாரும் உட்படுத்துவதானது மூன்று வருட சிறைத்தண்டனை மற்றும்/ அல்லது ஒரு தண்டப்பணம் செலுத்துகைக்கும் உட்படுகின்றது. அதேவேளை விரைவில் குழந்தையைப் பெற இருக்கும் (Quick with Child) தாயின் தண்டனையானது ஏழு ஆண்டுகள் வரைக்கான சிறைத்தண்டனையும் தண்டப் பணச் செலுத்துகையும் ஆகும். இச்சொற்பிரயோகமானது சட்டக் கோவையில் வரைவிலக்கணம் செய்யப்படாவிட்டாலும் இது ''குழந்தையுடன் இருக்கும் பெண்'' என்றவாறு கருத்துப்படும் வெறுமனே கர்ப்பவதியாக இருத்தல் என்பதற்கு மாறாக சிசுவின் நகர்வை அவதானிக்கும் நிலையில் உள்ளதான முன்னேற்றகரமான கர்ப்பகாலக் கட்டத்தினை குறித்து நிற்கிறது.

தானாகவே கருச்சிதைவை உண்டாக்கும் ஒரு பெண்ணும் கூட இதே தண்டனைக்கு உட்படுகிறார். கருச்சிதைவானது பெண்ணின் இணக்கத்துடன் மேற்கொள்ளப்படுமானால் விரைவில் குழந்தையைப் பெறக்கூடிய நிலையில் இருந்தாலும் இல்லா விட்டாலும் அதனைச் செய்பவர் 20 வருட சிறைத்தண்டனைக்கும் தண்டப்பணக் கொடுப்பனவிற்கும் உள்ளாகிறார். **(தண்டனைச்சட்டக்கோவை, பிரிவு 304).** கருச்சிதைவை ஏற்படுத்தும் நோக்கத்துடன் செய்யப்பட்ட எந்தச் செயற்பாடுகளின் மூலமாவது பெண்ணின் இறப்பை விளைவிக்குமாயின் குற்றமிழைத்தவர் இச் செயல் அவ்விறப்பை உண்டாக்கும் என அறிந்திருக்கிறாரோ அறிந்திருக்கவில்லையோ அதே தண்டனையே விதிக்கப்படும். **(குற்றவியல் தண்டச் சட்டக்கோவை பிரிவு 305)**

சில விஷேட சூழ்நிலைகளின் கீழ் ஆணுக்கும் பெண்ணிற்கும் இடையிலான பாலியல் புணர்வாக வன்புணர்வை தண்டனைச் சட்டக்கோவை வரைவிலக்கணம் செய்வதுடன், பாலியல் வன்புணர்வின் ஒரு செயற்பாட்டை உருவாக்குவதற்கு உட்செலுத்துகை போதுமானதாகவும் உள்ளது. தனது மனைவியை வன்புணர்வு செய்ததாக ஒரு ஆணை குற்றம் சாட்டுவதற்கு நீதிமன்றக் கட்டளையால் அத் தம்பதியினர் சட்ட ரீதியாக பிரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். திருமண முறிவின் காரணமாக தனித்து வாழ்வது அவசியமான பிரிவை ஏற்படுத்த முடியாது. தம்பதிகள் ஒன்றாக வாழும் நிலையில் ஒரு கணவன் வன்புணர்வு செய்ததாக குற்றம் சாட்டப்பட முடியாது.

இலங்கையில் கணிசமான அளவு பெண்கள் விபச்சாரத்தில் ஈடுபடுவதாக குற்றம் சாட்டப்படுகின்றனர். விபச்சாரம் என்பது தெருச்சுற்றியல் கட்டளைச்சட்டம் (1841), விலைமாதர் மனை கட்டளைச்சட்டம் (1889) மற்றும் தண்டனைச் சட்டக்கோவை என்பவற்றின் கீழ் இலங்கையில் ஒரு குற்றவியல் குற்றமாக உள்ளது.

குறித்த சட்டத்திலுள்ள குறைபாடுகள் மற்றும் தெளிவற்ற நிலைமை காரணமாக ஆண் தரப்பினருக்கு எத்தண்டனையும் விதிக்காது பெண் விலைமாதரை மாத்திரம் தண்டிப்பதால் பெண்களுக்கு எதிரான பாரபட்சம் மற்றும் துஷ்பிரயோகம் என்பன ஏற்படுவதாக ஆதங்கம்/ கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. தெருச்சுற்றியல் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 3(1)(b) ஆனது பின்வருமாறு குறிப்பிடுகிறது :

> *"பொது வீதி அல்லது நெடுஞ்சாலையில் அலைந்து திரியும் அல்லது பொது தங்குமிடத்தில் இருக்கும் அத்துடன் ஒரு அடக்கமில்லாமல் கண்ணியமற்ற விதத்தில் நடக்கும் எல்லாப் பொது விலைமாதர்களும் ஒரு பயனற்ற, ஒழுங்கற்ற ஆளாகக் கருதப்படுவதுடன் முதலாவது குற்ற நிரூபிப்பில் சிறைத்தண்டனைக்கு அல்லது தண்டப் பணத்திற்கு உள்ளாக்கப்படுவர் ''*

தெருச்சுற்றியல் கட்டளைச்சட்டம் 3(2) மேலும் இவ்வாறு கூறுகிறது :

> *"ஒரு நோக்கற்ற அல்லது முறையற்ற எந்த ஆளாகக் கருதப்படும் ஒவ்வொரு ஆளையும் கைது பிடிவிராந்து இல்லாமலே ஒரு பொலிஸ் உத்தியோகத்தரால் கைது செய்ய முடியும்."*

மேற்படி பிரிவில் காணப்படும் ''பொது விபச்சாரி'' என்ற பதமானது சுற்றியல் கட்டளைச் சட்டத்தில் வரைவிலக்கணம் செய்யப்படவில்லையென்பதுடன் இப்பதத்தின் தெளிவற்ற தன்மை காரணமாக நோக்கற்றும் முறையற்ற விதத்திலும் காணப்படுவதாக இருக்கும் எந்த ஆளையும் ஒரு பிடிவிராந்து இன்றிக் கைது செய்வதற்கான பரந்த அதிகாரங்களைப் பொலிசார் கொண்டுள்ளனர்.[18]

[18] "Some aspects of criminal law discriminatory of woman." *Daily News,* 14 December 2015, , http://www.dailynews.lk/2015/12/14/features/some-aspects-criminal-law-discriminatory-woman.

தெருச்சுற்றியல் கட்டளைச்சட்டத்தின் 7 ஆம் பிரிவு பின்வருமாறு கூறுகிறது

> *"எந்தப் பொது இடத்திலும் சட்டத்திற்கு மாறான பாலியல் புணர்வுக்காகவோ அல்லது ஒழுக்கயீன செயற்பாடு எதற்குமான நோக்கத்திற்காகவோ எந்த ஆளையும் அழைக்கும் எந்த ஆளுடனோ அல்லது வேறு எவரேனும் ஆளுடனோ குறித்துரைக்கப்பட்டாலோ அல்லது அவ்வாறு இல்லாது விட்டாலோ அவர் குற்றச்சாட்டுதலுக்கு உள்ளாவதுடன் சிறைத்தண்டனைக்கோ அல்லது தண்ட பணச் செலுத்துகைக்கோ அல்லது இரண்டிற்குமோ உள்ளாவார்."*

தர்மதாசா எதிர் *தியாதமன் 56NLR 278* இன் படி விருப்பத்துடனோ அல்லது பலவந்தமாகவோ பாலியல் உறவு கொள்ள அழைப்பது தேவைப்படாது. ஒருவர் மறைமுகமாக அவ்வாறு அழைப்பதாயின் ''அழைத்தல்'' என்ற இத்தவறான செயலை புரிவதற்கு அதுவே போதுமானதாகும்.

மேற்படி சூழமைவும் சட்டப் பார்வை நோக்கிலிருந்து முழுமையற்றதாக இருப்பதுடன் பரந்துபட்ட கைது செய்யும் அதிகாரங்களைப் பொலிசாருக்கு கொடுக்கவும் முடிகின்றது.

சர்வதேச நியமங்கள் தொடர்பில் ஐ.நா. பாங்கொக் ஒழுங்குவிதிகளானவை விசாரணைக்கு முந்திய தடுத்து வைப்பு மற்றும் குற்றச்சாட்டுகை தொடர்ந்தான தீர்ப்பு வழங்குகை என்பவற்றுக்கான பாலியல் கூருணர்வு மாற்றீடுகள் மீதான வழிகாட்டுதல்களை வழங்குகின்றன உதாரணத்திற்கு ஐநா பாங்கொக் ஒழுங்குவிதிகள் ஒரு வழிகாட்டியாக ஒரு பெண் சிறைக்கு அனுப்பப்பட்டால் உரிய சுகாதாரக்கவனம் வழங்கப்படுதல் மனிதநேயத்துடன் நடத்தப்படுதல் தேடுதல்களின் போது மகத்துவம் பேணப்படுதல் வழிகாட்டுதல்களை வழங்குகின்றன.''

## [3.5.2.2] <u>பெண் சிறைக் கைதிகளுக்கான சர்வதேச நியமங்கள்</u>

சர்வதேச நியமங்கள் தொடர்பில் ஐ.நா. பாங்கொக் ஒழுங்கு விதிகளானவை விசாரனைக்கு முந்திய தடுத்து வைப்பு மற்றும் குற்றச்சாட்டுகை தொடர்பான தீர்ப்பு வழங்குகை என்பவற்றுக்கான பாலியல் கூருணர்வு மாற்றீடுகள் மீதான வழிகாட்டுதல்களை வழங்குகின்றன. உதாரணத்திற்கு ஐ.நா. பாங்கொக் ஒழங்கு விதிகள் வழிகாட்டியாக ஒரு பெண் சிறைக்கு அனுப்பப்பட்டால் உரிய சுகாதாரக்கவனம் வழங்கப்படுதல், மனிதநேயத்துடன் நடத்தப்படுதல், தேடுதல்களின் போது கௌரவம் பேணப்படுதல், வன்முறையிலிருந்து பாதுகாக்கப்படுதல், சிறைக்கைதிகளின் பிள்ளைகளின் தேவைகளைக் கவனித்தல் போன்றவற்றையும் வேண்டி நிற்கின்றது.

## [3.5.3] <u>பெண் பெண் உறவு, ஆண் ஆண் உறவு, இரு பால் உறவு, பால்நிலை மாறுவோர், இடைப்பாலினர் (Lesbian, Gay, Bisexual, Transgender and Intersex)</u>

இலங்கையில் வாழும் பெண் பெண் உறவு, ஆண் ஆண் உறவு, இரு பால் உறவு, பால்நிலை மாறுவோர், இடைப் பாலினர் (LGBTI) போன்றவர்கள் இங்குள்ள ஏனையோரால் அனுபவிக்கப்படாத சட்டத்துறை சவால்களை எதிர்கொள்ளக்கூடும். இது ஒரு விலக்கப்பட்ட விடயமாக இருப்பதுடன் அவர்கள் அநேகமாக அவதூறுகளுடன் தொடர்புபடுகின்றனர்.

இலங்கை அரசியலமைப்பின் 12 ஆம் உறுப்புரையானது இனம், மதம், மொழி, பால்நிலை, அரசியல் கருத்து, பிறப்பிடம், அல்லது அவ்வாறானவற்றின் அடிப்படைகளை ஆதாரமாகக் கொண்டு பாரபட்சம் காட்டப்படாதிருப்பதை ஒரு அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கின்றது. பால்நிலை போக்கின் மற்றும் பால்நிலை அடையாளங்கள் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு ஒருவரின் நற்பெயரை இழக்கச் செய்தல் மற்றும் பாரபட்சத்திலிருந்து இந்த ஏற்பாடுகள் ஆட்களை பாதுகாக்கிறது. இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 12.1 ஆனது பால்நிலைப் போக்கு மற்றும் பால்நிலை அடையாளத்துவத்திற்கான சமத்துவத்தை உறுதிப்படுத்துவதுடன், பாலியல் துஷ்பிரயோகம் பால்நிலை அடையாளத்துவத்தின் அடிப்படையிலான பாரபட்சமான சட்டங்களானவை அரசியலமைப்புக்கு முரணானவையாக உள்ளன. எவ்வாறாயினும் முன்னே சொல்லப்பட்ட அரச மற்றும் அரச சார்பற்ற பாரபட்சங்கள் மற்றும் LGBTI ஆட்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள் தொடர்ந்தும் உள்ளதாக அறிக்கைகள் கூறுகின்றன.[19]

[19] "Sri lanka : Event of 2017. "*Human Rigths Now,* http://www.hrw.org/world-report/2017/country-chapters/srilanka#d91ede.

தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகள் 365 மற்றும் 365A என்பன ஒரு பால் உறவை இயற்கை ஒழுங்கிற்கு முரணான உடல் இன்ப அறிவு மற்றும் முழுமையான ஒழுக்கயீனம் என்பவற்றை தடை செய்வதினால் இலங்கையில் ஓரினச் சேர்க்கையை குற்றமாக்கிறது. இது பொதுவாக இணக்கமுடைய வளர்ந்தோருக்கு இடையிலான அதேபால் உறவுகளை குற்றமாக்குவதாக விளங்கப்படுகிறது.

**பிரிவு 365:** பிரிவு 365 ஆனது, இயற்கை நியதிக்கு முரணாக எவரேனும் ஆணுடன், பெண்ணுடன் அல்லது எதேனும் விலங்குடன் வேண்டுமென்று உடலுறவு கொள்ளும் எவரும் 10 வருடங்கள் வரை நீடிக்கக் கூடிய காலப்பகுதிக்கான சிறைத்தண்டனையினாலோ அல்லது தண்டப்பணத்தினாலோ தண்டிக்கப்படுவர். அத்துடன் இக் குற்றமானது ஒரு பதினாறு வயதிற்கு குறைந்தவர் தொடர்பாக பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஒருவரினால் செய்யப்படும் பொழுது பத்து வருடங்களுக்கு குறையாததும் இருபது வருடங்களுக்கு கூடாததுமான ஒரு கடுழிய சிறைத்தண்டனையினாலும் தண்டப்பணத்தினாலும் தண்டிக்கப்படுவதுடன் இழைக்கப்பட்ட ஆளுக்கான காயங்களுக்காக குற்றமிழைக்கப்பட்டவர் தொடர்பில் நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் ஒரு தொகையினை நட்டஈடாகச் செலுத்தவும் கட்டளையிடப்படும்.''

**பிரிவு 365A:** பகிரங்கமாகவோ அல்லது தனிமையிலோ இன்னுமோர் ஆளுடன் மிக்க எளிவான செயலைப்புரிகின்ற அல்லது அதனைப் புரிவதில் ஒரு திறந்தவதாக இருக்கின்ற அல்லது எவரேனும் ஆளினால் புரியப்படுவதை கூட்டிவைக்கின்ற கூட்டிவைக்க எத்தனிக்கின்ற ஆளெவரும் தவறொன்றிக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் அவர் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கக்கூடிய ஒரு காலப்பகுதிக்கு இரு வகையில் ஒரு வகை மரியல் தண்டனையுடன் அல்லது குற்றப்பணத்துடன் அல்லது மரியல் தண்டனை குற்றப்பணமாகிய இரண்டுடனும் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் தவறானது 16 வயதிற்கு குறைவான எவரேனும் ஆளுடன் 18 வயதிற்கு மேற்பட்ட ஆளொருவரினால் புரியப்படுமிடத்து அவர் இரண்டு ஆண்டுகளுக்கு குறையாததும் 10 ஆண்டுகளை விஞ்சானதுமான ஒரு காலத்திற்கு கடுலிய சிறைத்தண்டனையுடன் அத்துடன் குற்றப்பணத்துடனும் தண்டிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் எந்த ஆள் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ அந்த ஆளுக்கு ஏற்படுத்தப்பட்ட ஊறுகளுக்காக நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட நட்டஈட்டை அவ்வாளுக்கு செலுத்துமாறு கட்டளையிடப்படவும் வேண்டும்.

இலங்கைச் சட்டமானது பால்நிலை மாறும் அல்லது இடைப்பாலின ஆட்களை விசேடமாக குற்றமயமாக்கவில்லை. ஆனால் அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்படுவதை எந்தச் சட்டமும் உறுதிப்படுத்தப்படவில்லையென்பதுடன் LGBTI ஆட்களுக்கு எதிராக குறிப்பாக பாலியல் தொழிலில் சம்பந்தப்பட்ட ஆண்களுடன் பாலியல் வைத்துக்கொள்ளும் பால்நிலை மாறும் பெண்கள் மற்றும் ஆண்களை இலக்கு வைக்கும் பல குற்றவியல் குற்றம் மற்றும் ஒழுங்குவிதிகளைப் பயன்படுத்தியுள்ளதாக அறிக்கையிடப்பட்டள்ளது. சட்டத்திற்கு மாறான அல்லது இயற்கைக்கு எதிரான புணர்வுகளைக் கொண்டு வரும் முழுமையான ஒழுக்கயீனம் அல்லது திருத்த முடியாத தொடர்களின் செயற்படும் செயற்பாடுகள் அல்லது பாலியல் உறவுக்கு அழைத்தல் என்பவற்றைத் தடைசெய்யும் நிறைவுபெறாத வார்த்தைகளைக் கொண்ட தெருச்சுற்றிகள் கட்டளைச்சட்டம் என்பன இதில் உள்ளடங்குகின்றன. பாலியல் தொழில் துறையில் சம்பந்தப்பட்டுள்ள சில பால்நிலை மாறும் பெண்கள் மற்றும் ஆண்கள் ஏதேச்சாதிகாரமான தடுத்துவைப்பு மற்றும் பிழையான நடத்துகை உட்பட பொலிஸாரினால் திரும்பத் திரும்ப மேற்கொள்ளப்படும் தொந்தரவுகளை சுட்டிக்காட்டியுள்ளதுடன், இவை இலங்கை அதிகாரிகள் மீதான தமது நம்பிக்கையை இழக்கச்செய்துள்ளதுடன், ஒரு குற்றத்தை அறிக்கையிடுவதை சாத்தியமற்றதாக்கியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளனர். மருத்துவ அதிகாரிகளின் கைகளிலுள்ள துஷபிரயோகம் மற்றும் தொந்தரவானது பல பால்நிலை மாறும் ஆட்களை தொழில் ரீதியான வைத்திய உதவிகளை நாடுவதற்கு பதிலாக சுய மருத்துவம் செய்வதற்கு இட்டுச் சென்றுள்ளதாக சனசமூகத்தினர் அறிக்கையிட்டுள்ளனர். இந்த விடயத்தில் இலங்கைச் சட்டமானது தெளிவற்றதாக இருப்பதினால் துஷ்பிரயோகத்திற்கு திறந்துவிடப்பட்டதாக அமைகின்றது.

*''பொலிஸ்நிலையப் பொறுப்பாளர் (மருதானை) எதிர் கலபாட விமலசிறி மற்றும் பிறிதொருவர் (உயர்நீதிமன்ற வழக்கு **SC SPL LA No. 304/2009**) 1990 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க மாகாண உயர்நீதிமன்ற விசேட ஏற்பாடுகளின் பிரிவு **9(a)** யின் பிரகாரம் இது ஒரு விண்ணப்பமாக இருந்தது. தண்டனைச்சட்டக் கோவையின் பிரிவு **365A** யின் பிரகாரம் இரு ஆட்களிடையிலான முழுமையான ஒழுக்கயீன நடவடிக்கையை மேற்கொண்டதாக மனுதாரர்கள் நீதவான் நீதிமன்றத்தினால் குற்றம் சாட்டப்பட்டிருந்தனர். இருவரும் குற்றம் காணப்பட்டதுடன் ஒருவருடத்திற்கான சிறை மற்றும் ஆறுமாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட தண்டனையுடன் 1500 தண்டப்பணம் மேலதிகமாக விதிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. மேன்முறையீட்டின் போது உயர்நீதிமன்றமானது நேரடிச் சிறைவைப்பு.'. தடுத்து வைப்புத் தீர்ப்பானது இந்தச் சூழ்நிலையில் பொருத்தமானதா எனப் பரிசீலித்தது. தீர்ப்புக்கு எதிரான மேன்முறையீட்டை அது ஏற்றுக்கொண்டது. ஆனால் குற்ற*

*நிரூபிப்புக்கு எதிராக அது மறுப்புத் தெரிவித்தது. நீதிமன்றமானது ஒரு சிறைத்தண்டனை மிகவும் பொருத்தமானது எனக் கருதி, குற்றவியல் நடைமுறைக்கோவைச் சட்டத்தின் **303(1**பிரிவின் கீழ் 5 வருட காலப்பகுதிக்கு முழுமையாக ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடுமையான சிறைத்தண்டனையை மனுதாரருக்கு வழங்கி தீர்ப்பளித்தது.''*

### [3.5.4] மனநோயாளி

தனது தரப்பினருடனான நேர்காணல்களின் விளைவாக பிரதிவாதி வழக்கறிஞர் குறித்த தரப்பினர் விசாரனையை எதிர்கொள்வதற்கு மனோரீதியில் பொருத்தமானவராக இல்லையென தீர்மானிக்கும் போது அவர் குற்றம்சாட்டப்பட்டவரின் மனோநிலை விடயத்தில் வழக்குத் தொடுனருடன் தொடர்பு கொண்டு அதனை நீதவானின் கவனத்திற்கு கொண்டு வர வேண்டும் என்பதுடன் குற்றம்சாட்டப்பட்டவரின் மனோநிலையை கண்டறிவதற்காக மருத்துவ பரிசோனையொன்றிக்கு கட்டளையிடப்படல் வேண்டும். குற்றச்சாட்டு தொடர்பான செயலைப் புரிவதில் அவர் ஒரு மனக்குழப்ப நிலையினால் துன்பப்பட்டாரா என வழக்குத் தொடுனர் பரிசீலிக்க வேண்டும். இந்த மனக்குழப்ப நிலையானது நிரந்தரமான ஒரு குழப்பநிலையாக இருக்க வேண்டுமென்று இல்லை. குற்றம் புரியப்பட்ட அந்த நேரத்தில் இந்த மனோ நிலை இருந்ததா என்பதே முக்கியமான கேள்வியாக உள்ளது.

குற்றமானது தெளிவாக நோக்கமற்றதாக இருக்கும் நிலையில் அவர் குற்றத்தை புரிந்த நேரத்தில் ஏதேனும் ஒரு வித பாதிப்புற்ற மனோநிலையில் தனது தரப்பினர் இருந்திருக்கக்கூடும் என்ற சாத்தியப்பாட்டை இங்கு முன்வைத்தல் வேண்டும். இது ஒரு கொலையைப் பொருத்த வரையில், குறித்த சம்பத்திற்கு முன்பும், சம்பவத்தின் போதும் அல்லது அதன் பின்பும் குற்றம் சாட்டப்பட்டவர் வெளிக்காட்டிய புதுமையான, புரிந்து கொள்ளமுடியாத அத்துடன் மாறுபட்ட நடத்தை பற்றியும், தனது சட்டத்தரணியுடன் நடந்து கொள்ளும் விதம் பற்றியும் இங்கு புறக்கணிக்க முடியாது என்பதுடன் இக்காரணிகள் ஊடாக, குற்றம் சாட்டப்பட்டவர் தெளிவற்றதோர் மனோ நிலையில் இருந்துள்ளார் என்பதற்காக அடிப்படை உருவாகலாம்.

குறித்த செயல் இடம்பெற்ற போது தன் தரப்பினர் ஒரு தற்காலிக மனக்குழப்பத்தினால் துன்புற்று இருந்தாலும் இப்போது சிறந்த மனோ நிலையில் இருப்பாராயின் குற்றம் சாட்டப்பட்டவர் அவரது குறைநிலையான மனம் குறித்து சட்டத்தரணி வேண்டிக்கொள்வதை அனுமதிக்கப்படுவதற்கு விருப்பமற்று இருப்பார். இந்த நிலைப்பாடு எடுக்கப்படுமாயின் தான் மனநோயாளி என்ற நிலைக்காக ஒரு மனோநிலைப் புகலிடத்தில் சிறை வைக்கப்படலாம் என்று தரப்பினர் பயப்பட முடியும். பிரதிவாதியின் சட்டத்தரணி வெற்றியடைந்து, நீதிமன்றமானது குற்றம் சாட்டப்பட்டவர் தற்போது மனக்குழப்பத்தினால் துன்புறவில்லை என்று நீதிமன்றம் தீர்மானிக்கும் பட்சத்தில் அவர் தடுப்புக்காவலில் இருந்து இலகுவாகவே விடுவிக்கப்படுவார் என்பதை தன் தரப்பிடம் விளக்கிக் கூறவேண்டும்.

அதனைச் செய்யும் நேரத்தில் யாதுமொருவர் சித்தசுவாதீனம் இல்லாத காரணத்தினால் அச் செயலின் தன்மையை அறிந்துகொள்ள முடியாமையினால் அல்லது தான் செய்வது பிழையானதோ அல்லது சட்டத்திற்கு மாறானதோ என தெரியாத நிலையில் செய்யப்படுவன ஒரு குற்றமாகாது. (தண்டனைக்கோவைச் சட்டம் பிரிவு 77) இப் பிரிவானது குற்றத்தின்பொழுது மனநிலை பாதிக்கப்பட்டதாகக் கருதப்படும் பிரதிவாதியிடமிருந்து குற்றவியல் பொறுப்பை நீக்கி முற்றுமுழுதாக குற்றமற்றவராக்கிறது. இப்பிரிவானது இலங்கை நீதிமுறைக்குள்ளாக மனநோயாளி பற்றிய சட்டரீதியான வரைவிலக்கணத்தைப் பயன்படுத்தச் செய்கிறது.

இலங்கையின் எந்த நியாயாதிக்கச் சட்டங்களும் மனநோய் பற்றிய ஒரு சட்டரீதியான வரைவிலக்கணத்தை வழங்கவில்லை. தண்டனைச்சட்டக்கோவையில் பயனப்டுத்தப்பட்ட பதமானது மனோவியாதியை பொருத்தமற்ற மனம் என எழுத்தாள்கிறது. பொருத்தமற்ற மனம் என்ற பதமானது 1873 ஆம் ஆண்டு மனோ சுகாதார கட்டளைச்சட்டம், 1879 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைக்கோவைச் சட்டம் 1895 ஆம் ஆண்டு சான்றுக்கட்டளைச் சட்டம் என்பவற்றில் மனநோயாக குறிப்பிடப்படுகிறது. மனக்குழப்ப நிலையானது மனத்தெளிவில்லை போன்ற, மனவிருத்தி அற்றது போன்ற, மனவிருத்தி அடையாலத்தினால் ஏற்படக்கூடிய மனநோய்களை உள்ளடக்கும் பரந்த நோக்கில் போதியளவில் பரிசீலிக்கப்படக்கூடியதாக உள்ளது.

குற்றவியல் பொறுப்பை தீர்மானிப்பதற்கான ஒரு மதிப்பீட்டை மேற்கொள்வதற்கானதோர் வேண்டுகோளானது உயர் நீதிமன்றம் அல்லது நீதவான் நீதிமன்றத்தினால் முன்வைக்கப்படலாம். இவ் விடயமானது வழக்கு விசாரணையின் போது விசாரணை ஆரம்பிக்க முன்பு எழுப்பப்பட முடியும். இந்த மனக் கோளாறுப் பிரச்சினையை வழக்குத்தொடுனர், பிரதிவாதி சட்டத்தரணி அல்லது நீதிவான் எழுப்பலாம்.

[20] "Sri lanka : Event of 2017. "*Human Rigths Now,* http://www.hrw.org/world-report/2017/country-chapters/srilanka#d91ede.

மனத்தெளிவு இல்லாமையின் காரணமாக ஒரு குற்றத்திற்கான பொறுப்பை எடுக்க வேண்டிய ஆள் தொடர்பான ஒரு மதிப்பீடானது விஷேட நிபுணர்களை வேண்டிநிற்பதுடன் அதனை தீர்மானிப்பதற்கான ஒரு நிபுணரை அழைப்பதற்கும் இடம் வகுக்கின்றது. ஒரு பிரதிவாதியின் மனக்கோளாரு குறித்து மதிப்பிடுவதில் மருத்துவ உத்தியோகத்தர்களை குற்றவியல் தண்டனைச்சட்டக்கோவை இனம் காணுகிறது.

சித்தசுவாதீனம் இன்மை காரணமாக எழும் பாதுகாப்பானது குற்றநேரத்தின் போது முழு அறிவின்மை அல்லது சித்தசுவாதீனம் இன்மையுடன் இருந்த ஒரு ஆள் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டு குற்றத்தைச் செய்வதற்கான செயற்பாட்டுக்கான அறிவு மற்றும் எண்ணத்தை உருவாக்க முடியாத நிலையைக் கொண்டிருப்பதுடன் அதன் நிமித்தமாக தண்டனைக்கு உட்பட முடியாததாகவும் ஆகின்றது.

### [3.5.4.1] மனநோயாளித் தரப்பினரை நேர்காணுதல்

ஒரு மனநோயுடைய தரப்பினருக்காக வாதிடுவது பிரதிவாதியின் சட்டத்தரணிக்கு மேலதிக பரிசீலிப்புக்களை ஏற்படுத்துகிறது. மனோநோயுடைய பிரதிவாதிகளுடனான ஆரம்ப நேர்காணல்களானவை வைத்தியசாலைகளிலோ நிறுவன ரீதியான இடங்களிலோ இடம்பெறலாம். அவ்வாறான சூழமைவுகளில் பிரதிவாதியின் சட்டத்தரணிக்கு தான் ஒரு சட்டத்தரணியே அல்லாமல் வைத்தியசாலையின் அலுவலர் அல்லவென விபரிப்பதில் சட்டத்தரணி கவனமாக இருக்க வேண்டும்.

ஒரு மனநோயாளித் தரப்பினரை நேர்காணும் போதான சரிபார்ப்பு நிரல்:

- பிரதிவாதியின் சட்டத்தரணியானவர் மனநோயுடைய பிரதிவாதிக்கு தங்களது உரையாடலானது இரகசியமானது எனவும், அதனை வைத்தியசாலைப் பணியாளர்களுடன் கலந்துரையாடக்கூடாது எனவும் விளக்கிக் கூற வேண்டும்.
- பிரதிவாதியின் சட்டத்தரணி தனது வாதத்திற்கான தந்திரோபாயத்தை உருவாக்குவதற்கு பிரதிவாதி ஒரு மனோ ரீதியிலான நிலையில் இல்லாமைக்கான சாட்சியமானது மிகவும் முக்கியமானது. ஏனெனில் சாட்டப்பட்ட குற்றத்தை மேற்கொள்வதற்கு பிரதிவாதி குற்றவியல் எண்ணமில்லாதிருந்தார் என்பதை நிரூபிப்பதற்கு அது பயன்படுத்தப்படக்கூடியதாக இருக்கும்.
- பிரதிவாதி நிறுவன மயப்படுத்தியிருந்தாலோ அல்லது அவ்வாறு செய்யப்பட்டிராவிடினோ பிரதிவாதியின் சட்டத்தரணி பிரதிவாதியை ஒரு மனநோயைக் கொண்டிருப்பதற்கான அடையாளங்களை நெருக்கமாக அவதானிக்க வேண்டும்.
- பிரதிவாதியின் சட்டத்தரணியானவர் பிரதிவாதியின் குடும்ப உறுப்பினர்களுடனான நேர்காணல்கள் ஊடாக ஒரு சாத்தியமான மனோநோய் தொடர்புடைய தகவல்களை நாட வேண்டும்.
- பிரதிவாதியின் மனநிலையை மதிப்பீடு செய்வதற்கும் ஒரு மிகவும் செயல்விளைவுடைய எதிர்தரப்பு சார்பு தந்திரோபாயத்தை உருவாக்குவதில் உதவியாக அமைவதற்கும் ஒரு நிபுணரின் கருத்தினை நாடுவதற்குமான நிலைமை பிரதிவாதி சட்டத்தரணிக்கு பெரிதும் தேவைப்படுகின்றது.

## [4] சித்திரவதை மற்றும்/ மனித உரிமை மீறல்களுக்கு உள்ளான ஒரு தரப்பினரை பிரதிநிதித்துவம் செய்தல்

### [4.1] சித்திரவதையின் பொது வரைவிலக்கணம்

சித்திரவதை என்பது அது உளவியல் ரீதியாகவோ அல்லது உடலியல் ரீதியாகவோ சிலவேளைகளில் நீண்டகாலம் நீடிப்பதுமான துன்பத்தை விளைவிப்பதுடன் மரணத்தை தவிர்ப்பதான அல்லது ஆகக் குறைந்தது தாமதிக்கச் செய்வதான ஒரு செயற்பாடாகவும் உள்ளது. அதன் பின்விளைவுகளானவை உடல் ரீதியாக (தழும்புகள் மற்றும் / அல்லது கெடுதல்கள் காணப்பட) அல்லது உளவியல் ரீதியாக (மனவடு மற்றும் / அல்லது மனவடுவுக்கு பின்னான அழுத்தம் என்பனவாக இருக்கும்) சித்திரவதை மற்றும் ஏனைய கொடூரமான மனிதநேயத்திற்கு எதிரான இழிவுபடுத்தும் நடத்தைகள் அல்லது தண்டனைகளுக்கு எதிரான முற்று முழுதான தடையானது வழமையான சர்வதேச சட்டங்களின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளாக மாற்றம் பெற்றுள்ளன.

சித்திரவதையின் பொதுவான வடிவங்கள் பின்வருமாறு அமையப்பெற்றிருந்தாலும் கூட அவை இவற்றுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டவை அல்ல.

**உடல் ரீதியானது :** அடித்தல், வேதனை ஏற்படுத்தும் விதத்தில் நிற்க வைத்தல், மின் அதிர்ச்சி கொடுத்தல், ஒட்சிசன் கிடைக்காதிருக்கச் செய்தல், இரசாயனங்களை எதிர்கொள்ளச் செய்தல், கடும்

சத்தத்தில் விடுதல், பிரகாசமான ஒளி பாய்ச்சல், பாலியல் தாக்குதல், வசதி குறைந்த இடங்களில் தடுத்து வைக்கும் வசதிகள் மற்றும்/ அல்லது பட்டினி போடுதல்.

**உளவியல் ரீதியானது :** வாய்மொழி மூலமான தூஷித்தல், மரண அச்சுறுத்தல், மேலும் சித்திரவதை செய்தல், தனக்கோ தனது உறவினர்/ நண்பர்களுக்கோ தீங்கு செய்வித்தல், மாதிரி மரண தண்டனை, கட்டாயப்படுத்தப்பட்ட நடத்தைகள் (உதா. கட்டாயப்படுத்தப்பட்ட பாலியல் புணர்வு அல்லது ஒரு மதத்திற்கு எதிரான பழக்கங்களிலும் ஈடுபடுவதற்கு கட்டாயப்படுத்தப்படுதல்) மற்றும்/ அல்லது நித்திரை கொள்ளாதிருக்கச் செய்தல்

சித்திரவதையின் ஒரு தீவிரமான உண்மை என்னவெனில் சித்திரவதை செய்பவர் பாதிக்கப்பட்டவர் மீது முழுமையான கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதும் இந்தக் கட்டுப்பாடானது பாதிக்கப்படுபவர் மீது உடல் அல்லது உளவியல் துன்பத்தை விளைவிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. சித்திரவதை மூலம் இருக்கக்கூடிய இலக்குகள் மற்றும் நோக்கங்கள் பின்வருமாறு :

- பாதிக்கப்பட்டவரிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல்.
- பாதிக்கப்பட்டவரிடமிருந்து குற்றத்தை ஒப்புக் கொள்ள அல்லது ஒப்புதல் வாக்குமூலத்தைப் பெற்றுக் கொள்ள நிர்ப்பந்தித்தல்.
- உண்மையான மற்றும்/ அல்லது திரிக்கப்பட்ட குற்றங்களுக்கான தண்டனை
- உதாரணமாக ஒரு விஷேடித்த குழுவின் உறுப்பினர்களைப் பயனப்டுத்தி ஒரு மக்கள் கூட்டத்தை அல்லது அரசியல் இயக்கங்களை அச்சுறுத்துவதானது தாமும் அதனால் பாதிக்கப்படுபவர்களாக கூடும் என்ற அச்சத்தில் ஏனைய மக்களை ஒரு அச்சத்திற்கும் செயற்பாட்டின்மைக்கும் இட்டுச் செல்லுதல்.
- வக்கிர இன்பம்.
- பாதிக்கப்பட்டவரின் முற்று முழுதான சமர்ப்பிப்பை பெற்றுக்கொள்ளும் இலக்குடன் அவர் பலவீனமாக இருக்கின்றார் என பாதிக்கப்பட்டவரை நம்பச் செய்வதற்கு பயன்படுத்தப்படும் ஒரு உளவியல் தாயரிப்பு மற்றும்/ அல்லது
- மேலதிகாரியிடமிருந்து கட்டளைகளைப் பின்பற்றும் சித்திரவதை செய்வோருக்கான சுய நியாயப்படுத்துகை.

## [4.2] சித்திரவதை தொடர்பான சர்வதேச சட்ட வரைவிலக்கணம்

சித்திரவதை மற்றும் ஏனைய கொடூரமான மனிதநேயமற்ற தன்மை அல்லது இழிவுபடுத்தும் நடத்தைகள் அல்லது தண்டனைக்கு எதிரான ஐ.நா. சமவாயத்தின் உறுப்புரை 1 (CAT) சித்திரவதையை பின்வருமாறு வரைவிலக்கணம் செய்கிறது.

*''இந்த சமவாயத்தின் நோக்கத்திற்காக சித்திரவதை என்ற பதமானது ஒருவரிடமிருந்து அல்லது மூன்றாம் ஆளிலிருந்து தகவல்கள் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் நோக்கம் அல்லது அவரால் அல்லது மூன்றாம் ஆளால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாக சந்தேகப்படும் செயற்பாட்டுக்காக சந்தேகித்தல் அவரையோ மூன்றாம் ஆளையோ அச்சுறுத்தல் அல்லது நிர்ப்பந்தித்தல் அல்லது எந்த விதமான பாரபட்சத்தினை அடிப்படையாகக் கொண்ட ஏதும் காணரங்களுக்காக இந் நோக்கங்களுக்காக ஒரு ஆள் மீது நோக்கத்துடன் உடல் ரீதியாகவோ அல்லது உள ரீதியாகவோ கொடுக்கப்படும் கடுமையான துன்பம் அல்லது நோவு இந்தத் துன்பம் அல்லது நோவானது ஒரு உத்தியோகபூர்வ தகைமையில் செயற்படும் ஒரு பொது உத்தியோகத்தர் அல்லது ஏனைய ஆளின் இணக்கத்துடன் அல்லது இணங்கியதை அடுத்து தூண்டுதலினால் அவ்வாறான துன்பம் அல்லது நோவு திணிக்கப்படும் போது அது சித்திரவதை என அர்த்தப்படுகிறது. அது சட்ட ரீதியான தடைகளுக்குள் அமையப் பெறும் அல்லது ஏற்படும் துன்பம் அல்லது நோவு என்பவற்றை மாத்திரம் உள்ளடக்காது.''*

எந்தப் பிராந்தியத்திலும் அவற்றின் நியாயாதிக்கத்தின் கீழ் வரும் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறாக சித்திரவதை என்றதற்குள்ளே கொள்ளப்படாத கொடூரம் மனிதநேயமற்ற அல்லது கீழ்தரமான நடத்தைகள் அல்லது தண்டனை செயற்பாடுகளையும் தடுப்பதற்கு CATஇன் உறுப்புரை 16 உரிய தரப்புகளை வேண்டிநிற்கிறது. CAT ஆனது மனித உரிமைகள் மீதான உலகளாவிய பிரகடனம் (UDHR), சிசில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச சமவாயம் (ICCPR) மற்றும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் மீதான சர்வதேச சமவாயம் (ICESCR) போன்ற ஏனைய சர்வதேச மனித உரிமை ஒப்பந்தங்கள் என்பவற்றுடன் ஒத்துசைவதுடன் அவற்றின் கட்டமைப்பினையும் பின்பற்றுகிறது. இந்த மனித உரிமைச் சாதனங்கள் அனைத்தும் சித்திரவதையிலிருந்து விடுபட்டிருப்பதற்கான உரிமையை உறுதிப்படுத்துகின்றன.

''குற்றம் சாட்டப்பட்டவரின் கட்டுப்பாட்டின் கீழ் அல்லது காவலில் உள்ள எந்த அளின் மீதும் உடல் ரீதியாகவோ மன ரீதியாகவோ கடுமையான துன்பம் அல்லது நோவை நோக்க ரீதியாக திணிப்பதாக சித்திரவதையினை உரோம நியதிச் சட்டம் வரைவிலக்கணம் செய்கிறது.''

சித்திரவதை என்பது கொடூரத்தனம், மனிதநேயமற்ற தன்மை அல்லது கீழ்த்தரமாக நடத்துதல் என்பவற்றிலிருந்து பிறிதாக வரைவிலக்கணம் செய்யப்படுகிறது என்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். ''கொடூரத்தனம், மனிதாபிமானமற்ற விதத்தில் அல்லது கீழ்த்தாரமாக நடத்துதல்'' எனும் போது உடல், உள ரீதியாக துன்புறுத்துதல், வேதனைப்படுத்துதல், அவமதிப்பு, அச்சம் அல்லது தரக்குறைவாக மதித்தல் என்பவை உள்ளடங்குகின்றன. ஆயினும் அவை சித்திரவதையை விடவும் குறைந்த தன்மையைக் கொண்டவைகளாகும்.

அநேகமாக ''கொடுமைப்படுத்தல்'' என்ற பதமானது சித்திரவதை சர்வதேச சட்டங்களினால் தடைசெய்யப்பட்ட சித்திரவதை முறைகள், கொடூரத்தனம், மனிதநேயமற்ற தன்மை அல்லது கீழ்த்தரமாக நடத்துதல் மற்றும் இழிவுபடுத்தும் நடத்துகை, தனிப்பட்ட மகத்துவத்தின் மீதான அட்டுழியங்கள் உடல் அல்லது மன நிர்ப்பந்திப்புக்கள் உள்ளடங்கலானவைகளை உட்படுத்துவதான ஒரு பொதுவான நோக்கில் பயன்படுத்தப்படுகிறது. சுட்டிக்காட்டப்பட்டவாறாக சித்திரவதைக்கும் ஏனைய கொடுமைப்படுத்தல் வகைகளுக்கும் இடையிலான சட்டரீதியான வித்தியாசமானது திணிக்கப்படும் நோவு அல்லது துன்பத்தின் கடுமைத்தன்மையின் மட்டத்திலேயே தங்கியுள்ளது.

இதற்கு மேலதிகமாக சித்திரவதையானது உதாரணத்திற்கு தகவலைப் பெற்றுக்கொள்ளுதல் போன்ற செயற்பாட்டுக்கு பின்னாலான விசேடித்த நோக்கத்தைக் கொண்டிருப்பதை வேண்டி நிற்கிறது. கொடுமைப்படுத்தலின் வேறுபட்ட வடிவங்கள் அல்லது நோவைத் திணித்தல் என்பவற்றின் வேறுபட்ட வடிவங்களை எடுத்தாளுவதற்குப் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட பதங்களானவை வழமையாக பின்வருமாறு விளக்கம் செய்யப்படுகின்றன.

- சித்தரவதை : கடுமையான துன்பம் அல்லது நோவினை திணித்தலில் விசேடித்த நோக்கம் அத்துடன் எண்ணம் இருத்தல்.
- கொடூரம் அல்லது மனிதநேயமற்ற நடத்துகை: எவ்வித விசேடித்த நோக்கமும் இல்லை ஆனால் கணிசமான மட்டத்திலான துன்பம் அல்லது நோவு திணிக்கப்படுதல்.
- சுய கௌவைத்தை கெடுத்தல் : எந்தவித விசேடித்த நோக்கமும் இல்லை. இருந்தும் அவமானப்படுத்தல் மற்றும் சீரழித்தல் என்பன ஒரு கணிசமான மட்டம் இணைந்திருக்கும்.

கொடுமைப்படுத்தல் முறைகளானவை உடல் ரீதியானதாகவும் மற்றும்/ அல்லது உளரீதியானதாகவும் இயல்பிலேயே இருப்பதுடன் இரு முறைகளும் உளவியல் ரீதியான உடல் ரீதியான தாக்கங்களையும் கொண்டிருக்கக்கூடும்.

## [4.3] இலங்கையின் சட்டக் கட்டமைப்பும் சித்திரவதையும்

இலங்கையில் CAT ஆனது 1994 ஆம் ஆண்டு ஜனவரி 3 ஆம் திகதி ஏற்றுக்கைக்கொள்ளப்பட்டதுடன் சித்திரவதையானது 1994 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சித்திரவதை மற்றும் ஏனைய மனிதநேயமற்ற கொடூர, தரக்குறைவான நடத்துகைகள் அல்லது தண்டனைகளுக்கு எதிரான சமவாயம் ஊடாக இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ளது. இச் சட்டவாக்கம் ஊடாகவே CAT இன் ஏற்பாடுகளுக்கான சட்ட அங்கீகாரம் இலங்கையில் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் நீதிமன்றங்களானவை உளரீதியான நெருக்குவாரம் சித்திரவதையை உருவாக்கக்கூடியதென தீர்ப்பளித்துள்ளன. (டி சில்வா எதிர் பசளைக் கூட்டுத்தாபன விடயத்தைப் பார்க்குக *[1989] 2 SLR 393*).

இருந்தும், இவ்வாறான சட்டங்கள் ஊடாக உடல் மற்றும் உளவியல் தீங்கிலிருந்து தனிநபர்களைப் பாதுகாப்பதற்கான பாதுகாப்புகள் இருந்த போதிலும் கூட யதார்த்தம் என்னவெனில் கொடுமைப்படுத்தல் மற்றும் சித்திரவதையினால் பாதிக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை இலங்கை சட்டத்தரணிகள் தொடர்ந்து எதிர்கொண்டு வருகிறார்கள் என்பதாகும். 2016 இல் சித்திரவதை மற்றும் ஏனைய கொடூரங்கள் மனிதநேயமற்ற நடத்தைகள், தரக்குறைவான நடத்துகைகள் அல்லது தண்டனை என்பவற்றின் மீதான ஐ.நா. விசேட அறிக்கையாளர் இலங்கை மீதான தனது அறிக்கையில் (2016 மே 7 ஆம் திகதி இடப்பட்டது) ''... ஒழுங்குக்கிரமமான குற்றவியல் விசாரணைகள் தொடர்பில் சித்திரவதையானது அங்கு மேற்கொள்ளப்படும் ஒரு பொதுவான பழக்கமாக உள்ளது'' என திட்டவட்டமாக கூறுகிறார் .[21]

அண்மையில், இலங்கையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவானது இலங்கைப் பொலிசார் மக்களின் மனித உரிமைகளைப் பாரதூரமாக மீறியுள்ளதைக் கண்டுகொண்டுள்ளது, இலங்கை மனித

உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் கூறுவதன் பிரகாரம் "ஆணைக்குழுவானது அதன் பணிக்காலத்தின் ஒன்பது மாதங்களில் 5,614 முறைப்பாடுகளைப் பெற்றுக்கொண்டுள்ளது. இதில் 1,174 முறைப்பாடுகள் சட்டத்திற்கு மாறான தடுத்துவைப்பு மற்றும் சித்திரவதை என்பன பொலிசாருக்கு எதிரானதாக இருந்தன. மனித உரிமைகள் ஆணைக்குழு கூறுவதன் பிரகாரம் மிகவும் முக்கியமான சிரமங்களானவை தடுத்து வைப்பு மற்றும் விசாரணைக் கட்டங்களின் போது பொலிசாரின் நடத்துகைகளிலிருந்து எழக்கூடியவைகளாக உள்ளன. மேலும் 2017 ஜனவரி மற்றும் செப்டெம்பருக்கு இடையிலான காலப்பகுதியில் 249 சித்திரவதைச் சம்பவங்களையும், ஏதேச்சாதிகாரமான தடுத்து வைப்பு தொடர்பான 298 விடயங்களையும் அச்சுறுத்தல் நடத்தைகள் தொடர்பான 323 விடயங்களையும் அது பதிவு செய்துள்ளது என மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.[22]

அதேவேளை, 2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் சித்திவதை மற்றும் ஏனைய கொடூரமான, மனிதநேயமற்ற தன்மை மற்றும் தரக்குறைவான நடத்துகை அல்லது தண்டனை தொடர்பில் ஐ.நா. விசேட அறிக்கையாளர், "சித்திரவதையின் பயன்பாடானது அன்றும் இன்றும் இடம்பெறும் வழமையான நிகழ்வு ஒன்றெனவும் இவை தேசிய பாதுகாப்பு அடிப்படையில் கைது செய்யப்பட்டவர்கள் மற்றும் தடுத்து வைத்திருப்போர் மீது இடம்பெறுவதாகவும் 2016 இன் பிற்பகுதியில் பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் அண்மையில் கைது செய்யப்பட்ட அநேமானோரில் 80மூ மானோர் அவர்களது கைதினைத் தொடர்ந்து எதிர்நோக்கிய சித்திரவதை மற்றும் உடல்ரீதியான கொடுமைகள் தொடர்பாகவும் முறைப்பாடு செய்துள்ளனர்" என அறிக்கையிட்டுள்ளார்.[23]

## [4.4] சித்திரவதை மற்றும்/ அல்லது மனித உரிமை மீறல்களுக்கு ஆளாக்கப்பட்ட தரப்பினருடன் நேர்காணலை தயார் செய்தல் அல்லது நடாத்துதல்

### [4.4.1] சித்திரவதைச் சம்பவங்களை விசாரித்தல் மற்றும் தனது தரப்பினரை அணுகுதல்:

- கூருணர்வு மற்றும் மரியாதையுடன் தரப்பினரை அணுகவும்
- சித்திரவதையில் தப்பிப்பிழைப்பவர்கள் சாதாரண மக்கள் என்பதை மனதில் வைத்திருக்கவும்
- சித்திரவதையிலிருந்து தப்பிப்பிழைத்தவர்கள் தாம் அனுபவித்த மனவடு மற்றும் அவமானத்தின் விளைவாக உங்களுடன் குற்றவுணர்வுடன் அல்லது வெட்க உணர்வுடன் தகவல்களை பகிர்ந்து கொள்வதற்கு தயங்கக்கூடும்
- உரியவர்களுடன் சிறிய சல்லாபத்துடன் ஆரம்பிப்பதை பரிசீலியுங்கள். அத்துடன் மிகவும் சிரமமான தலைப்புகளுக்கு மாறுவதற்கு முன்பதாக மிகவும் சரளமான விதத்தில் அன்றாட விடயங்கள் பற்றிய கேள்விகளைக் கேளுங்கள்.

### [4.4.2] கேள்விகளைக் கேட்டல்:

- திறந்த நிலையான ("பின்பு என்ன நடந்தது") மற்றும் விசேடித்த/ மூடிய கேள்விகள் (உத்தியோகத்தர் உங்களுக்கு அடிக்கும் போது ஏதாவது கூறினாரா? என்ற இருவகையிலான கேள்வி வகைகளை உங்களுக்குத் தேவையான பதிற்செயற்பாடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு பயனப்டுத்துங்கள்
- நிகழ்ந்திருக்கக்கூடிய சித்திரவதை தொடர்பான நேரடியான கேள்விகளுக்குச் செல்வதற்கு முன்பதாக தரப்பினரிடம் அதற்கான அனுமதியை கேளுங்கள்
- உடல் மற்றும்/ அல்லது உளரீதியான சித்திரவதை பற்றி விசாரிப்பதற்கு நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

---

21 "UN experts urge Sri Lanka to adopt measures to fight torture and strengthen and justice system's independence." *United Nations Human Rights,* Office of the High Commissioner, 10 May 2016, http://www.ohchr.org/en/NewsEvents/Pages/DisplayNews.aspx?NewsID=1994&LangID=E.

22 " Perera, Melani Manel. " HRSCL Slams police for serious human right violations." *AsiaNews.it. 8/ January 2018, http://www.asianews.it/news-en/HRCSL-slams-police-for-serious-human-right-violations-42767.html.*

23 "UN experts urge Sri Lanka to adopt urgent measures to fight torture and steangthen justice system's independence." *United Nations Human Right* , Office of the High Commissioner, 10 May 2016, http://www.ohchr.org/en/NewsEvents/Pages/DisplayNews.aspx?NewsID=1994&LangID=E.

### [4.4.3] தரப்பினரின் வழிகாட்டுதல்களுடன் செயற்படுதல்:

- அமைதியாக இருங்கள்
- சத்தங்களையோ அல்லது முக வெளிப்படுத்துகைகளையோ செய்வதைத் தவிர்க்கவும்
- கவனமாகச் செவிமடுப்பதுடன் திசைதிருப்புவைகளை தவிர்க்கவும்
- ஒரு நன்கு திட்டமிடப்பட்ட திறந்த மற்றும் மூடிய கேள்விகளின் நிரலின் ஊடாக உங்களது தரப்பினரின் கதையைப் பகிர்ந்து கொள்வதற்கு நேரத்தை அனுமதிக்கும் அதேவேளை உங்களது தரப்பினரின் சட்ட விடயங்கள் தொடர்பில் உங்களுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தான் நேர்காணலை முன்னெடுக்கிறீர்கள் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
- உடல் ரீதியான சான்றுதல் படுத்துகையிலிருந்து விலகியிருங்கள்
- தரப்பினரதும் உங்களதும் சொந்தத் தேவைகள் மற்றும் எல்லைகள் குறித்து கவனமாக இருங்கள்.
- உங்களது தரப்பினர் காவலில் இருந்தால் உங்களது தரப்பினரின் பாதுகாப்பை இடரில் விடக்கூடிய செயற்பாட்டிலிருந்து விலகியிருங்கள்
- முறைமையியலாகச் செயற்படுங்கள் நேர்காணலின் இலக்குகள் மற்றும் நோக்கங்களை மனதில் வைத்திருங்கள்.

### [4.4.4] முக்கியமான நடைமுறைத் துணுக்குகள்:

- நன்கு சௌகரியமாக இருக்கும்போது, பேசவேண்டியதன் முக்கியத்துவத்தையும் சித்திரவதை தொடர்பான அறிக்கையிடலின் முக்கியத்துவத்தையும் தரப்பினரிடம் விளக்கம் கூறுங்கள். அவை விசாரிக்கப்படுவதுடன் மாற்றத்தைக் கொண்டுவருவதற்கும் உதவக் கூடியனவாகும்.
- குற்றவியல் நீதிச் செயன்முறையின் ஆரம்ப கட்டத்திலேயே உங்களது தரப்பினரைச் சந்தியுங்கள். சித்திரவதை அல்லது துஷ்பிரயோமானது இடம்பெற்றிருப்பின் பிந்திய கட்டத்தில் அடையாளம் காணுவதைக் காட்டிலும் கூடிய விரைவில் இணம்காணுவது சுலபமானது
- சித்திரவதை பற்றிய முறையீட்டை நிரூபிக்க முடியுமான ஒரேயொரு வழியாக உடலியல் சான்றுகளே அநேகமாக உள்ளன. தான் சித்திரவதை செய்யப்பட்டதாக தரப்பினர் சொல்லுவாராயின் மருத்துவ பரிசோதனை நடத்தப்படுவதற்கு வற்புறுத்துங்கள்
- காயங்கள் குணமாகும் வரையில் குறித்த சான்று நிரூபிப்புகள் மறையாமல் இருக்கும் போது தரப்பினரிடம் சட்டத்தரணிகள் செல்வதை மறுக்கும் நிலைமை பொதுவாக இருப்பதென்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்
- சட்டத்திற்கு மாறான முறையில் நீங்கள் இவ்வாறு செல்வது மறுக்கப்படுமாயின் உரிய நீதிமன்ற உத்தியோகத்தரை கூடிய விரைவில் தொடர்பு கொண்டு, தரப்பினருக்கு சட்டத்தரணியை சந்திக்க முடியுமான உரிமையை தரும்படி வற்புறுத்தி நில்லுங்கள்.
- தரப்பினரைச் சென்றடைவதானது மேலும் மறுக்கப்படுமாயின், இந்நிலைமையானது சித்திரவதைக்கான சான்று ஒன்றைக் கொண்டுவரக்கூடியதாக இருப்பதினால் நீதிமன்றத்தை நாடி, 'அணுகுவதை மறுத்தல்' தொடர்பான நகர்த்தல் பத்திரமொன்றை சமர்ப்பிக்கவும்.

## [4.5] சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களை நேர்காணல் செய்வதற்கான நடைமுறை வழிகாட்டுதல்கள்:

- பாதிக்கப்பட்டவரிடமிருந்தான ஒரு விபரமான கூற்றை ஒலிப்பதிவு செய்து அதனை எழுத்து வடிவில் பதிவு செய்து கொள்ளுங்கள்
- பாதிக்கப்பட்டவரின் கூற்றானது உங்களுடைய இட்டுச்செல்லாத கேள்விகளுக்கான விடைகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும்
- இட்டுச்செல்லாத கேள்விகளானவை ஊகங்களையோ முடிவுகளையோ உண்டாக்கவில்லை என்பதுடன் பாதிக்கப்பட்டவருக்கு மிகவும் பூர்த்தியானதும் சார்ப்பற்றதுமான சாட்சியத்தை வழங்கச் செய்கிறது.
- இட்டுச்செல்லாத கேள்விகளுக்கான உதாரணங்களானவை : உங்களுக்கு என்ன, எங்கே நடந்தது? என்றவாறு அமையும். அதற்கு மாறாக, சிறைச்சாலையில் நீங்கள் சித்திரவதை செய்யப்பட்டீர்களா? என்றவாறு அமையலாகாது. (பிந்திய கேள்வியானது சாட்சிக்கு நடைபெற்றது சித்திரவதை என்பதையும் அது நடைபெற்றுள்ள இடம் சிறைச்சாலை தான் என்பதையும் மட்டுப்படுத்திக் காட்டும் ஊகத்திற்கு இட்டுச் செல்லும்.)

- முன்னரே நிர்மாணிக்கப்பட்ட நிரல்களுடன் கேள்விகளைக் கேட்பதைத் தவிர்க்கவும். ஏனெனில் இது தனிநபரை உண்மையில் நடந்ததுடன் தெரிவுகளை சரியாக ஒப்பிட முடியாத அளவுக்கு பிழையான பதில்களைக் கொடுப்பதற்கு நிர்ப்பந்திக்கலாம்
- அவரிடம் தனது சொந்தக் கதையை சொல்வதற்கு அனுமதியுங்கள். ஆனால் குறிப்பான பதில்களை வழங்கச் செய்வதற்கு பொருத்தமான விதத்தில் கேள்விகளைக் கேட்டு உதவுங்கள்
- தனக்கு என்ன நடந்தது என்பதை விபரிப்பபதற்காக தனது உணர்வுகளைப் பயன்படுத்துவதற்கு அவரைத் தூண்டுங்கள்
- அவர் எதனைக் கண்டார், நுகர்ந்தார், கேட்டார், உணர்ந்தார் எனக் கேளுங்கள். உதாரணத்திற்கு குறித்த நபர் கண் கட்டப்பட்டு அல்லது இருட்டில் தாக்ககுதலை அனுபவித்த சூழலில் இவை முக்கியமானதாகும்.

**[4.6] சித்திரவதை மற்றும்/ அல்லது மனித உரிமை மீறல் இடம்பெற்றதாகக் கூறும் தனிநபர்களுக்கான மாதிரிக் கேள்விகள்**

இது அனைத்தையும் உள்ளடக்கியதோர் நிரலாக இல்லாதிருக்கும் நிலையில் பின்வரும் கேள்விகள் உங்களது தரப்பினர் சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டாரா அல்லது தரக்குறைவான நடத்தலுக்கு அல்லது தண்டனையின் ஏனைய வடிவங்களுக்கு உட்படுத்தப்பட்டாரா என விசாரிப்பதிலும் உறுதிப்படுத்துவதிலும் உதவக்கூடும். இந்தக் கேள்விகளுக்கு பதிலளிப்பதனாது உங்களது தரப்பினருக்கு மேலதிகமான சிரமமாக இருக்கும் என்பதை மனதில் கொள்ளுங்கள். மரியாதையுடனும் அனுதாபத்துடனும் அமைதியுடனும் நடந்து கொள்ளுங்கள்:

- எப்போது, எங்கே நீங்கள் கைது செய்யப்பட்டீர்கள்?
- நீங்கள் கைது செய்யப்பட்ட போது எத்தனை உத்தியோகத்தர்கள் இருந்தனர்?
- யார் பொறுப்பானவர் போன்று தோன்றினார்?
- அவர்கள் சீருடை அணிந்திருந்தார்களா? ஆம் எனில் என்ன வகையான சீருடை?
- அவர்களில் எவரேனும் ஒருவர் குறிப்பாக வித்தியாசமானவராக இருந்தரா?
- உங்களைக் கைது செய்த ஆட்கள் என்ன கூறினர்?
- நீங்கள் எதற்காக கைது செய்யப்படுகிறீர்கள் என அவர்கள் உங்களுக்கு கூறினரா?
- உங்களது உரிமைகள் பற்றி அவர்கள் உங்களுக்கு கூறினரா?
- நீங்கள் கைது செய்யப்பட்டதிலிருந்து வேறு எந்த இடத்திற்காவது உங்களைக் கொண்டு சென்றார்களா?
- யாரும் உங்களை வந்து பார்க்க முடிந்ததா?
- சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வேறு சில ஆட்கள் அடிக்கப்பட்டிருக்கிறார்கள் அல்லது சித்திரவதை செய்யப்பட்டிருக்கிறார்கள் அப்படி எதுவும் உங்களுக்கும் நடந்ததா?
- பொலிசார் அல்லது (வேறு யாரும்) உங்களுக்கு வீதியிலோ, வீட்டிலோ அல்லது ஏனைய இடங்களில் உங்களை எப்போதாவது அடித்தார்களா சித்திரவதை செய்தார்களா?
- இது எத்தனை தடவை இடம்பெற்றது? எப்போது இடம்பெற்றது? எவ்வளவு நேர காலத்திற்கு இது நீடித்தது?
- உங்களது உடலில் எவ்விடத்தில் அடித்தனர் அல்லது சித்திரவதை செய்தனர்? நீங்கள் அடிக்கப்பட்ட அல்லது சித்திரவதை செய்யப்பட்ட ஒவ்வொரு பாகத்தையும் தயவுசெய்து எனக்கு காட்ட முடியுமா?
- எத்தனை தடவைகள் அவர்கள் உங்களை அடித்தனர்? ஒருவருக்கு மேலான ஆட்கள் சம்பந்தப்பட்டிருந்தால் அவர்கள் ஒவ்வொருவரும் எத்தனைத்தரம் உங்களை அடித்தனர்?
- உங்களை அவர்கள் அடிக்கும் போது அல்லது சித்திரவதை செய்யும் போது உங்களுக்கு எதையும் அவர்கள் கூறினரா? நீங்கள் அச்சுறுத்தப்பட்டீர்களா? உங்களிடம் ஒப்புதல் வாக்குமூலத்தை அவர்கள் கேட்டனரா?
- அவர்களுக்கு நீங்கள் என்ன சொன்னீர்கள் என்று உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?
- எத்தனை பேரை நீங்கள் கண்டீர்கள்?
- அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்?
- நீங்கள் ஒரு நீதிபதியையோ அல்லது வேறு யாரும் சட்டத்தரணியையோ கண்டீர்களா?
- உங்களை அடிப்படையோ அல்லது சித்திரவதை செய்வதையோ வேறு யாரும் கண்டார்களா அல்லது கேட்டார்களா?
- உங்களுக்கு அசௌகரியமாகத் தோன்றிய வேறு எதையும் உத்தியோகத்தர்கள் செய்தார்களா?
- நீங்கள் எனக்குச் சொல்ல விரும்பும் வேறு ஏதேனும் உண்டா?

**[4.7] சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களிடம் பொதுவாக அவதானிக்கப்பட்ட எதிர்வினைகள்**

- பாதிக்கப்பட்டவர்கள் அமைதியாக இருப்பார்கள் - இது அவர்கள் சகித்துக்கொண்ட மனவடுவுடன் தொடர்புபட்டு விருத்தியாகிய ஒரு இயற்கை எதிர்வினையாக அநேகமாக இருக்கிறது; அல்லது
- பாதிக்கப்பட்டவர்கள் தீவிரமாக கதைக்கக்கூடியவர்களாக இருப்பார்கள் - இது அவர்கள் அனுபவித்தவற்றினால் ஆத்திரமடைந்து அதனூடாக பெரும்பாலும் விருத்தியடைந்த எதிர்வினையாக இருப்பதுடன், இவ்வாறான கோபத்தை வெளிக்கொணர்வதற்கான தேவையினை அவர்கள் உணர்த்துவதாக அமைகிறது.
- பாதிக்கப்பட்டவர் இரண்டு எதிர்வினை அடையாளங்களை காட்டக்கூடும் என்பதையும் சட்டத்தரணிகள் தமது தந்திரோபாயத்தை அதன்படி மாற்றிக்கொண்டவாறு அணுகி கேள்வி கேட்க வேண்டுமென்பதையும் மனதில் வைத்துக்கொள்ளுங்கள்.

**[4.7.1] சித்திரவதைக்குள்ளானதாக அல்லது / மற்றும் தரக்குறைவாக நடத்தப்பட்டதாகத் தோன்றும். எனினும் மௌனமாக இருப்பதை விரும்பும் ஒரு தரப்பினரை எதிர்கொள்ளும் போது:**

- அவரின் அனுபவம் பற்றிப் பேசுவதற்கு உதவியை வேண்டி நிற்கின்றார் என்ற உண்மையை மறக்க வேண்டாம்
- உங்களது தரப்பினரின் சார்பாகப் பேசுவதற்கான சலனதத்தை எதிர்த்து நில்லுங்கள்
- ஆரம்பத்திலிருந்து கைது நடைபெற்ற கதையைச் சொல்லுமாறு உங்களது தரப்பினரைக் கேளுங்கள், அதன் போது அது குறித்து மேலும் விபரங்களை நீங்கள் கேளுங்கள்
- உங்களது தரப்பினரிடம் சிறு விடயங்களைக் கேட்பதானது, அநேகமாக அவர் தரக்குறைவாக நடத்தப்பட்டாரா? சித்திரவதை செய்யப்பட்டாரா என்ற பெரிய கேள்விகளுக்கு பதிலளிப்பதை விளைவிக்கும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்
- தரப்பினரின் வசனங்களை முடிக்காதீர்கள் அல்லது பூர்த்தி செய்யாதீர்கள்
- அவருக்கு என்ன நடந்துள்ளது என்பதை விளக்கும் பாதிக்கப்பட்டவரின் கதையின் விபரங்களுக்கு கவனம் செலுத்துங்கள் - சில செயற்பாடுகள் தொடர்பான பாதிக்கப்பட்டவரின் புரிந்துணர்வானவை சட்டரீதியாக சொல்லப்பட்டவைகளிலிருந்து வேறுபட்டிருக்கக்கூடும்
- நிகழ்வுகள் தொடர்பான தனது விபரிப்பை தரப்பினர் கூற ஆரம்பித்ததும் குழப்பாதீர்கள். பின்தொடர்பு கேள்விகளைக் கேட்பதற்கு முன்பதாக அது முடியும் வரைக்கும் காத்திருக்க முயற்சியுங்கள்
- முடியுமான வரைக்கும் தரப்பினரின் உளவியல் ரீதியான துஷ்பிரயோகத்தின் விளைவுகள் குறித்து பேசுவதற்கு முன்பதாக உடலியல் துஷ்பிரயோகங்கள் பற்றிப் பேசுவதற்கு அனுமதியுங்கள்
- உங்களது தரப்பினருடன் சேர்ந்து துஷ்பிரயோகத்தின் விளைவாக காணப்படக்கூடிய அடையாளங்களின் ஒரு நிரலை தயாரியுங்கள். ஏதும் சாட்சிகள், குற்றமிழைத்தவர்கள், அவர்களின் பெயர்கள் மற்றும் பட்டப் பெயர்கள் மற்றும் / அல்லது அவர்களது விபரிப்பின் நிரலை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**[4.7.2] சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட அல்லது தரக்குறைவாக நடத்தப்பட்டதாகச் சொல்லப்படும் அதேவேளையில் தனது அனுபங்களைக் கோபத்துடன் கொட்டித் தீர்க்கும் ஒரு தரப்பினரை எதிர்கொள்ளும் போது:**

- இத்தரப்பினருக்கு கொட்டித் தீர்க்க வேண்டிய தேவையுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள் - அவர் நேர்காணலின் வெளிக்கொணரும் கட்டத்தின் போது தனது உணர்வுகளை சுதந்திரமாக வெளிப்படுத்த அனுமதியுங்கள்
- உரையாடலைப் பின்பு இட்டுச் செல்லப் பயனப்டுத்தக்கூடிய சாத்தியமான முக்கியமான காரணிகளை இனம் காணுவதற்கு இந்த நேரத்தைப் பயனப்டுத்திக் கொள்ளுங்கள்
- மிகைப்படுத்தலின் சாத்தியங்களுக்கானவைகளை எதிர்பார்த்து அதற்காக ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்
- சில விபரங்கள் எதிர்தரப்புவாதமொன்றை உருவாக்கிக் கொள்ள எவ்வாறு உதவும் அல்லது உரிய தகவல்களை எவ்வாறு வழங்கும் என்பதை விளக்கப்படுத்துங்கள்
- முடியுமாயின் அதிகம் பேசும் தரப்பினர் முதலில் உள, உளவியல் ரீதியான சித்திரவதை பற்றிப் பேசுவதற்குச் செய்யுங்கள்
- தரப்பினரின் விபரிப்பு அல்லது கதைப்பாய்ச்சல் இடைமறிக்கப்படுமாயின் சிறிது நேரத்திற்கு விடயத்தை மாற்றுங்கள். உதாரணத்திற்கு அவர்களது குடும்பத்தைப் பற்றிப்

பேசுங்கள். இதற்குப் பின்பு துஷ்பிரயோகம் அல்லது வன்முறை பற்றிய விபரங்களுக்குத் திரும்ப முடியும்

- நேர்காணலின் இறுதியை எட்டும் போது மாத்திரமே உடலியல் காயங்களை முயற்சித்து மீள்பார்வை செய்யுங்கள்
- ஏதும் சாட்சிகள் குற்றமிழைத்தவர்கள், அவர்களது பெயர்கள் அல்லது பட்டப் பெயர்கள் மற்றும் / அல்லது அவர்களது விபரிப்புக்களை, அங்கு நடந்தவற்றை ஒழுங்கு செய்து கொள்ளும் பொருட்டு குறித்த நிரலை தரப்பினருடன் இணைந்து வரைந்து கொள்ளுங்கள் .

**[4.8] சித்திரவதை மற்றும் / அல்லது மனித உரிமை மீறல்களுக்கு உள்ளாக்கப்பட்ட தரப்பினருடனான நேர்காணலின் இறுதியில் அவருடன் உரையாடிய நீங்கள் கொண்டிருக்க வேண்டிய தகவல்கள்**

- சொல்லப்பட்ட நிகழ்வின் நேரம், இடம்
- நிகழ்வின் போது பிரசன்னமாக இருந்த ஆட்களின் விபரங்கள் - அவர்கள் ஏதாவது வன்முறையில் பங்குற்றினார்களா? பங்குபற்றவில்லையா?
- ஒவ்வொரு ஆளினதும் துல்லியனமான வகிபங்கு விசேடமாக விளைவிக்கப்பட்ட வன்முறையின் தன்மை
- உள ரீதியான மற்றும் / அல்லது உளவியல் சித்திரவதையை உருவாக்கிய ஏதும் அழுத்தங்கள் அல்லது அச்சுறுத்தல்களின் விபரங்கள்
- தரப்பினர் உங்களுக்கு காட்டிய எல்லா உடல் அடையாளங்களினதும் விபரங்கள்
- இந்த நிகழ்வுக்கு சாட்சியம் சொல்லக்கூடிய எவரேனும் சாட்சிகளின் விபரங்கள்.

**[4.9] சித்திரவதை மற்றும்/ அல்லது துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்ட தரப்பினரை சென்று சந்திப்பது மறுக்கப்படுமாயின் அரச வழக்கறிஞரையோ நீதிபதியையோ அணுகுவதற்கான நடைமுறைப் படிநிலைகள்**

**[4.9.1] நீதிபதியை அணுகுதல்**

- நீதியை இறுதியாக நிலைனாட்டும் அதிகாரம் பெற்றவர்கள் என்ற வகையில் நீதிபதிகள் பிரசைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதில் விசேட வகிபங்கை ஆற்றுகின்றனர்
- சர்வதேச நியமங்களானவை தனிநபர்களின் உரிமங்கள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்துவதில் நீதிபதிகளின் பாகம் தொடர்பான நெறிமுறை ரீதியான கடமையை உருவாக்குகின்றன்
- நீதித்துறையின் சுயாதீனம் மீதான ஐக்கியநாடுகள் அடிப்படைக் கொள்கைகளின கொள்கை 6 ஆனது பின்வருமாறு கூறுகிறது. நீதித்துறையின் சுயாதீனத்தின் கொள்கையானது நீதித்துறையானது நீதிச் செயனம்முறைகள் நியாயமான முறையில் நடத்தப்படுவதையும் தரப்பினரின் உரிமைகள் மதிக்கப்படுவதையும் நீதித்துறை உறுதிப்படுத்துவதை உறுதிசெய்ய வேண்டி நிற்கிறது.‖
- தரப்பினரை சென்று பார்ப்பது தொடர்ந்தும் மறுக்கப்படுமாயின் நீதிமன்றத்தை நாடி, ‘அணுகுவதை மறுத்தல்’ மீதான நகர்த்தல் பத்திரமொன்றை தாக்கல் செய்யவும்.

**[4.9.2] அரச வழக்கறிஞரை அணுகுதல்**

- அதேபோலவே அரச உத்தியோகத்தர்களால் இழைக்கப்பட்ட சித்திரவதை குற்றச் செயலினை விசாரித்து வழக்ககுத் தொடர வேண்டிய தார்மீக கடமையை அரச வழக்கறிஞர்கள் கொண்டுள்ளனர்
- ஐக்கிய நாடுகள் வழிகாட்டுதல்களின் உறுப்புரை 15 ஆனது வழக்கறிஞர்களின் வகிபங்கு தொடர்பாக கூறுவதாவது “ வழக்கறிஞர்கள் அரச உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட குற்றங்கள் குறிப்பாக இலஞ்சம், அதிகார துஷ்பிரயோகம், மனித உரிமைகள் மற்றும் சர்வதேச சட்டங்கள், உள்ளூர் பழக்கங்களுடன ஒத்திசையும் அல்லது சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டவைகளின் கடுமையான மீறுகைகளை விசாரித்து சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் வழக்குத்தொடுனர்கள் உரிய கவனம் எடுத்தல் வேண்டும்.
- தரப்பினரைச் சென்று பார்ப்பதற்கு தொடர்ந்து மறுக்கப்படுமாயின் அரச வழக்கறிஞரை அணுகி இதனை அவருக்கு தெரிவிக்கவும். நிலைமை தொடர்ந்து இருக்குமாயின் நீதிமன்றத்திடம் சென்று ‘அணுகுவதை மறுத்தல்’ நகவுர்வுப்பத்திரத்தை தாக்கல் செய்யவும்.

***ஹப்புகொடகே ஜகத் பெரேரா எதிர் கௌதமி ரணசிங்க பொலிஸ் பரிசோதகர், மீரிகம பொலிஸ் நிலைய சிறு குற்றப் பிரிவுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் மற்றும் ஏனையோர் (உயர் நீதிமன்ற வழக்கு இல. SC/FR 1006/2009)***

*இந்த விடயத்தில் மனுதாரர் இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரைகள் **11,12(1),13(1)** மற்றும் **13(2)** என்பவற்றால் உத்தரவாதப்படுத்தப்பட்ட தனது அடிப்படை மனித உரிமைகள் 1 ஆம், 2 ஆம், 3ஆம் பிரதிவாதிகளால் மீறப்பட்டுள்ளதனால் நீதிமன்றத்திடம் இருந்து ஒரு பிரகடனத்தை மனுதாரர்கள் நாடி நின்றனர். மனுதாரர்கள் சட்டத்திற்கு மாறான முறையில் கைது செய்யப்பட்ட பின்பு இலங்கைப் பொலிஸ் உத்தியோகத்தரகளால் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து இது மேற்கொள்ளப்பட்டது. நீதிமன்றம் அரசியலமைப்பின் உறுப்புரைகளான 11 மற்றும் 12(1) இனால் பாதுகாக்கப்படும் மனுதாரர்களின் அடிப்படை மனித உரிமைகள் 2வது எதிர்வாதியினால் மீறப்பட்டுள்ளதாக நீதிமன்றம் கண்டுகொண்டது. மனுதாரர் கடுமையான பொலிஸ் தாக்குதலின் விளைவாக தனது பல்லொன்றையும் இழந்திருந்தார். மனுதாரருக்கு நட்டஈடாக அரசிடமிருந்து ரூபா **500,000/-** பெற்றுக்கொள்ள உரித்துடையவர் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.*

***ஜானக பட்டவலகே எதிர் பொலிஸ் பரிசோதகர் பிரசன்னா ரணசிங்க, பொலிஸ் நிலையம் மற்றும் 4 ஏனையவர்கள்***

*(உயர் நீதிமன்ற வழக்கு இல. **SC (FR) No. 393/2008**)*

*இந்த விடயத்தில் மனுதாரர் ஆனவர் பொலிஸ் உத்தியோகத்தர்களால் தாக்கப்பட்டு, கை விரல் அடையாளங்கள் வழங்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டார். மனுதாரர் தனது மனைவியையும் ஏனையவர்களையும் சந்திப்பதற்கும் பொலிசார் மறுத்தனர். அவரை சட்ட வைத்திய அதிகாரி **JMO** வந்து பார்வையிட்ட பிறகு மனுதாரர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட வேண்டுமென பணித்தார். அதற்குப் பிறகு அவர் வழங்காத தகவல்களை உள்ளடக்கிய பொலிஸ் கூற்றில் கையெழுத்து இடுமாறு மனுதாரர் வற்புறுத்தப்பட்டார். குறித்த சட்டவைத்திய அதிகாரி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் தொடர்பு கொண்டு மனுதாரர் ஒரு சட்ட மருத்துவ பரிசோதனைக்கு உட்படவில்லையென அறிவித்தார். மனுதாரர் சித்திரவதைக்கும், கீழ்த்தரமான நடத்துகைக்கும் உட்படுத்தப்பட்டிருப்பதாகவும் மனுதாரர் உறுப்புரை 11 இன் கீழ் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள அவரது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதற்கான உரியளவிலான நிரூபிப்பு நிறுவப்பட்டு நீதிமன்றமானது உறுதிப்படுத்தியது. நீதிமன்றம் மனுதாரருக்கு ரூபா **150, 000/-** வழங்கியதுடன் வழக்குச் செலவுக்காக அரசு மனுதாரருக்கு ரூபாய் **25, 000** வழங்க வேண்டுமெனவும் தீர்ப்பளித்தது.*

## [4.10] இஸ்டான்புல் (Istanbul) சமவாயம் (2004)

இஸ்டான்புல் (Istanbul) சமவாயமானது சித்திரவதை, ஏனைய கொடூரமான அல்லது மனித நேயமற்ற தன்மை அல்லது கீழ்த்தரமான நடத்துகை அல்லது தண்டனைகளின் வினைத்திறன் மிக்க விசாரணை மற்றும் ஆவணப்படுத்தல் தொடர்பான சில வழிகாட்டுதல்களை வழங்குகிறது. இது சித்திரவதை மற்றும் தரக்குறைவான நடத்துகை பற்றி குற்றம் சாட்டும் தனி நபர்களை மதிப்பீடு செய்வதற்காகவும், குறித்த சித்திரவதைகளை விசாரணை செய்வதற்கும், கண்டறியப்பட்டவைகளை நீதித்துறை மற்றும் ஏனைய விசாரணை அமைப்புகளுக்கு அறிக்கையிடுவதற்குமான அதிசிறந்த சர்வதேச செயற்பாட்டுக் கொள்கைகளையும் வழிகாட்டல்கலையும் வழங்குகின்றது.

இச் சமவாயமானது சித்திரவதை குற்றச்சாட்டுக்களை வினைத்திறனுடன் விசாரிப்பதற்கு பாதிக்கப்பட்டவராகச் சொல்லப்படுபவரின் சாட்சியத்தின் ஊடாக பின்வரும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு விசாரணையாளர் முயற்சிக்க வேண்டுமென்பதில் தெளிவாக உள்ளது.

(i) சித்திரவதைக்கு இட்டுச் செல்லும் சூழமைவுகள், கைது அல்லது கடத்தல் மற்றும் தடுத்து வைப்பு

(ii) சித்திரவதையின் சரியான திகதிகளும் நேரங்களும், இறுதி சித்திரவதை சம்பவம் இடம்பெற்றது என்பது உட்பட்

* **குறிப்பு :** பல இடங்களில், பல குற்றமிழைத்தவர்களால் (அல்லது குற்றமிழைத்தவர்களின் குழுக்கள்) சம்பந்தப்பட்டிருப்பதால் இந்த தகவலை நிறுவிக்கொள்வது சுலபமானது அல்ல. வேறுபட்ட இடங்கள் குறித்து பிறிதான கதைகள் பதிவு செய்யப்பட வேண்டியிருக்கலாம். தொடர்ச்சி விடயங்கள் பிழையாக இருப்பதைத் தவிர சிலவேளைகளில் குழப்புவதாகவும் இருக்க முடியும். நேரம் பற்றிய கருத்துக்கள் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட ஒருவருக்கு கவனம் குவிப்பதற்கு அநேகமாக கடினமாக இருக்கும். வித்தியாசமான இடங்கள் பற்றிய இடங்கள், வேறுபட்ட கதைகளானவை நிலைமையின் உலகளாவிய தன்மையைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கும் போது பயனுள்ளதாக இருக்கமுடியும்.

சித்திரவதையிலிருந்து தப்பிப்பிழைத்தவர்கள் தம்மை சரியாக எங்கே கொண்டு செல்லப்பட்டார்கள் என்பதை அநேகமாக தெரிந்து கொள்ள முடியாதிருக்கும். ஏனெனில் அவர்கள் கண் கட்டப்பட்டவர்களாகவோ அல்லது பாதி நினைவுடன் இருந்திருக்க முடியும். குவியும் சாட்சியங்களை ஒன்றாகச் சேர்ப்பதன் மூலம் குறித்த இடங்கள், முறைகள் மற்றும் குற்றமிழைத்தவர்களைக் கூட தெளிவுபடுத்திக்கொள்வது சாத்தியமானதாக இருக்கும்.

(iii) கைது தடுத்து வைப்பு, சித்திரவதை என்பவற்றில் ஈடுபட்ட ஆட்களின் விபரமான விபரிப்புக்கள் அவர்கள் சொல்லப்பட்ட சித்திரவதைக்கு முன்பாக அவர்களில் யாரையும் அவர் அறிந்து வைத்திருந்தாரா, உடை, நிலைவரிசை, தழும்புகள், பிறப்பு அடையாளங்கள், உடற் சித்திரங்கள், உயரம், நிறை என்பன உட்பட அவரது சொந்த அளவு தொடர்பானவற்றில் சித்திரவதையாளரை அவரால் விபரிக்கக்கூடியதாக இருக்க முடியும்) குற்றமிழைத்தவரின் உடலியல் மொழி, உச்சரிப்பு, அந்த நேரத்தில் குற்றமிழைத்தவர்கள் எப்போதாவது போதைக்கு உட்பட்டிருந்தனரா போன்ற வழமைக்கு மாறான என்பன

(iv) அந்த நபர் சொன்ன அல்லது கேட்டவற்றின் உள்ளடக்கங்கள் : அறிந்து கொள்ளப்படாத தடுத்து வைக்கப்பட்ட இடங்கள் அல்லது இரகசியங்களை இனம்காண முயற்சிக்கும் போது உரிய தகவல்களை இது வழங்கக்கூடும்

(v) தடுத்து வைக்கும் இடத்தின் வழமையான நிகழ்வுகளின் விபரிப்பு மற்றும் கொடுமையான நடத்தையின் முறைமைகள்;

(vi) தடுப்பிடங்களில் வழமையாக நிகழும் சித்திரவதையின் உண்மையான விபரிப்பு, பயன்படுத்தப்பட்ட சித்திரவதை முறைகள் உட்பட

* **குறிப்பு** : இது அநேகமாக சிரமமானது என புரிந்துகொள்ள முடிகின்றது. அத்துடன் விசாரணையாளர்கள் நேர்காணலின் போது முழுக் கதையைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கக்கூடாது. மிகச் சரியான தகவலைப் பெற்றுக்கொள்வது முக்கியமானது ஆனால் நெருக்கமான அவமானப்படுத்தல் மற்றும் தாக்குதல் தொடர்புடைய கேள்விகளானவை மனவடுவை ஏற்படுத்தக்கூடியன என்பதுடன் அநேகமாக தீவிரமானதாகவும் இருக்கும்.

(vii) ஒரு தனிநபர் பாலியல் ரீதியாகத் தாக்கப்பட்டாரா? அத்துடன் ஒரு பாலியல் தாக்குதல் தொடர்பான கேள்விக்கு பதிலளிக்கையில் பாலியல் ரீதியான தாக்குதல் எனும் போது அது உண்மையான வன்புணர்வை அல்லது ஒருபால் புணர்ச்சியையே குறிப்பது அநேகமான ஆட்களின் போக்காக இருக்கும்.

* **குறிப்பு** : வாய்வழித் தாக்குதல்கள், ஆடை அகற்றல், தடவித் தேடுதல், கீழ்த்தரமான அல்லது அவமானப்படுத்தும் செயற்பாடுகள் அல்லது அடிகள், அல்லது பாலியல் உறுப்புக்கள் மீதான மின்சார அதிர்வுப் பாய்ச்சல் என்பன பாலியல் தாக்குதல்களாகப் பாதிக்கப்பட்டவரால் அநேகமாக எடுத்துக்கொள்ளப்படுவதில்லை என்ற உண்மைக்கு விசாரணையாளர்கள் கூருணர்வுடன் இருக்க வேண்டும். அநேகமாகப் பாதிக்கப்பட்டவர்கள் பாலியல் தாக்குதல்கள் பற்றி எதுவும் சொல்ல மாட்டார்கள் அல்லது மறுத்து விடுவார்கள். அநேகமாக இரண்டாவது அல்லது மூன்றாவது சந்திப்பின் போதுதான் தொடர்புகள் அனுதாப ரீதியாகவும் அவரின் கலாசாரம் மற்றும் தனித்துவத்தினை மதித்து கூருணர்வுடன் செயற்பட்டால் அநேகமான கதைகள் வெளியில் வரும்.

(viii) சித்திரவதையின் போது ஏற்பட்ட உடற் காயங்கள்

(ix) பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் அல்லது ஏனைய பௌதீக பொருட்களின் விபரிப்பு

(x) சித்திரவதையில் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளுக்கான சாட்சியங்களின் அடையாளம்.

* **குறிப்பு** : விசாரணையாளர் சாட்சிகளின் பாதுகாப்பை பாதுகாப்பதில் கவனம் எடுத்தல் வேண்டும் என்பதுடன் சாட்சிகளின் அடையாளங்களைக் குறியீட்டு ரீதியில் செய்வதற்குப் பரிசீலிக்க வேண்டும் அல்லது அவர்களின் பெயர்களை உண்மையான நேர்காணலின் குறிப்புக்களிலிருந்து பிறிதான இடத்தில் வைக்க வேண்டும்.

**[4.11] பால்நிலை விடயங்களும் சித்திரவதை மற்றும்/ அல்லது மனித உரிமை மீறல்களும்**

இஸ்டான்புல் சமவாயமானது பால்நிலை விடயங்கள் மீது பின்வருமாறு கவனம் செலுத்துகிறது:

ஒரு விசாரணைக் குழாம் ஆனது இருபால்நிலையினரில் இருந்தும் நிபுணர்களைக் கொண்டிருப்பது சிறந்ததாகும். தாம் சித்திரவதை செயயப்பட்டோம் என சொல்லும் ஆள் விசாரணையாளர்களினதும் தேவையாயின் மொழிபெயர்ப்பாளர்களினதும் பால்நிலையைத் தெரிவு செய்து கொள்வதற்கு அனுமதிக்கிறது. இவ்வன்புணர்வு இடம்பெற்றதாக அறியப்படும் நிலைமைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஒருவர் தொடர்பில், அவ்வாறு அவர் இதுவரைக்கும் முறைப்பாடு செய்யாவிட்டாலும் சரி மிகவும் முக்கியமானது. பாலியல் தாக்குதல் இடம்பெறாது போனாலும் அநேகமான சித்திரவதைகள் பாலியல் அம்சங்களைக் கொண்டுள்ளன.

என்ன நடைபெற்றது என்பதை தனக்குச் சித்திரவதை செய்தவர்களைப் போன்ற மொத்த உடல் அமைப்பைக் கொண்ட ஒரு ஆளுக்கு அதாவது தவிர்க்க முடியாத முறையில் அநேகமாக அல்லது முழுதாக ஆணாக உள்ள ஒருவருக்கு அவள் விபரிக்க வேண்டுமென்று உணருவாளாயின் அது மீள மனவடுவாக்கலாக மிகவும் கேடானதாகவே அநேகமாக இருக்கும். சில கலாசாரங்களில் ஆண் விசாரணையாளர் ஒரு பெண் பாதிக்கப்பட்டவரிடம் கேள்வி கேட்பது முடியாததாக இருப்பதுடன் இது மதிக்கப்பட வேண்டும். இந்த விதமான கலாசாரங்களில் ஒரு ஆண் மருத்துவர் மாத்திரமே இருப்பாராயின் தனக்குத் தேவையான மருத்துவ தகவல் மற்றும் மதியுரை போன்றவற்றைப் பெற்றுக்கொள்ளும் முகமாக மற்றொரு தொழில்வாண்மையிலுள்ள பெண்ணைக் காட்டிலும் அவரிடமே பேசுவதற்குப் பல பெண்கள் விரும்புவர். சில சமயங்களில் ஒரு உரைபெயர்ப்பாளர் பயனப்படுத்தப்படுமாயின் அவர் பெண்ணாக இருப்பது அவசியமானது. சில நேர்காணல் செய்யப்படுபவர்கள் மொழிபெயர்ப்பாளர் ஆனவர் தங்களுக்கு அண்மையில் வசிக்காத வெளியிடத்தவராக இருப்பதை விரும்புவர். ஏனென்றால் அவர்களது சித்திரவதையானது நினைவுக்கு கொண்டுவரப்படும் அபாயத்தின் நிமித்தமாகவும் அவரது இரகசியத்தன்மைக்கு அச்சுறுத்தலாகப் பார்க்கப்படுவதினாலும் ஆகும். உரைபெயர்ப்பாளர் தேவையில்லாது போயின் விசாரணைக் குழாமின் ஒரு பெண் உறுப்பினர் ஆகக் குறைந்தது உடல் பரிசோதிப்புக்கள் பூராகவுமாவது நோயாளி விரும்புவாராயின் நேர்காணல் பூராகவுமாவது பிரசன்னமாக இருக்க வேண்டும்.

பாதிக்கப்பட்டவர் ஒரு ஆணாக இருக்கும் போது அவர் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருக்கும் பொழுது நிலைமையானது மிகவும் சிக்கலானதாக இருக்கும். ஏனெனில் அவரும் அநேகமாக முற்று முழுதாக ஆண்களாலேயே துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருப்பார். ஆகவே சில ஆண்கள் ஏனைய ஆண்கள் மீதான அதீத அச்சம் காரணமாக தங்களது அனுபவங்களை பெண்களுக்கே விபரிக்க விரும்புவர். அதேவேளையில் ஏனையோர் அவ்வாறான தனிப்பட்ட விடயங்களை பெண்களுக்கு முன்னால் கலந்துரையாட விரும்பமாட்டார்கள்.

## [4.12] சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதிமன்றத்திற்கு வெளியேயான தீர்வுகள்

எதிர்தரப்பு குற்றவியல் சட்டத்தரணிகள் சட்ட அமுலாக்கலில் உள்ளவர்களால் சித்திரவதை செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்ட பாதிக்கப்பட்டவர்களுக்கு குற்றவியல் நீதிமன்றங்கள் மற்றும் முறைசார் குற்றவியல் நீதி செயன்முறைக்கு வெளியேயும் மேலதிக தீர்வுகள் இருக்கின்றதென்பதை விபரித்துக் கூறும் கடமையை கொண்டுள்ளனர்.

எதிர்தரப்பு குற்றவியல் சட்டத்தரணிகள் சட்ட மருத்துவ அதிகாரியிடம் துஷ்பிரயோகத்தை ஆவணப்படுதுவதற்கு மேலதிகமாக உடனடியாக மனித உரிமைகள் ஆணைக்குழு, சட்டமாஅதிபர் அலுவலகம், பொலிஸ்மா அதிபர், இலங்கைத் தேசிய பொலிஸ் ஆணைக்குழு போன்றவற்றுக்கும் பின்வருவனவற்றை எடுத்துச்சொல்லி கடிதங்களை உடனடியாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

1. குற்றம் சாட்டப்பட்டவர் குற்றம் சாட்டப்பட்ட நேரம் / திகதி
2. கைது செய்த உத்தியோகத்தரின் பெயர் தர நிலை மற்றும் அவர் சீருடையில் இருந்தாரா அல்லது சிவிலியன் உடையில் இருந்தாரா
3. சித்திரவதை செயற்பாட்டில் ஈடுபட்ட யாதும் உத்தியோகத்தர்களின் பெயர்/ தரநிலை
4. பொலிஸ்நிலையம் மற்றும் / அல்லது தடுத்து வைப்பு நிலையத்தின் பெயர் மற்றும் அமைவிடம்.
5. குடும்ப உறுப்பினர்கள் அல்லது நண்பர் சார்பாக ஆயின், குற்றம் சாட்டப்பட்ட ஆளுடனான உறவுமுறை
6. நீதவான் நீதிமன்றத்திற்கு முன்னே கொண்டு வரப்படுவதற்கு முன்பாக அல்லது விடுவிக்கப்படுவதற்கு முன்பாக குற்றம் சாட்டப்பட்டவர் எவ்வளவு காலம் தடுத்து வைக்கப்பட்டார்.

## [5] எதிர்வாதம் மற்றும் கருப்பொருள்

### [5.1] அறிமுகம், வழக்கின் எல்லைக்கோட்டின் வரைபு

ஒரு சம்பவத்தின் மையக்கருவை அல்லது அடிப்படைக் காரணியை வைத்தவாறு வழக்கொன்றை ஒழுங்கு செய்து தயாரிப்பதானது ஒரு சட்டத்தரணிக்குள்ள முக்கியமானதோர் சட்டத்திறமையாகவும், ஆயுதமாகவும் அமைகின்றது. ஒரு வழக்கின் அடிப்படைக் கருத்தானது/ கதையானது குற்றம் சாட்டப்பட்டவரை பாதுகாக்கக்கூடிய எதிர்வாதத்தை உருவாக்குவதுடன் அது குறித்த சம்பவத்தை அல்லது கதையை எடுத்தியம்பும் மிகவும் சரியான, விபரம் அடங்கிய அத்துடன் இசைவான விபரிப்பொன்றாகவும் இருக்கின்றது. இதுதான் வழக்கின் கோட்பாடாக இருக்கின்றது. ஒவ்வொரு

வழக்கும் ஒரு கோட்பாட்டை உள்ளடக்குவதுடன் சட்டத்தரணியானவர் தனது தரப்பினர் சார்பில் இக்கதையை சொல்லிவைக்க வேண்டியது அவரின் கடமையாக இருக்கின்றது. ஒருவருக்குரிய வழக்கின் கதையானது, ஒரு குற்றவியல் வழக்கின் விடுதலைபெறும் விடயத்தில் அவர் நிவாரணம் பெறுவதற்கு உரித்துடையவராகின்றார் என்பதை இறுதியில் நிரூபித்துக் காட்டக்கூடியதாக இருத்தல் வேண்டும். மேலும் வழக்கொன்றின் கதையானது, ஒரு தரப்பினரின் வழக்கை முன்னெடுத்து அவருக்கான பிரதிவாதத்தை நிறுவுவதற்குமான வியூகத்திட்டமொன்றாகும் என்பதுடன் அதனூடாக வழக்கை தந்திரோபாயமாக முன்வைப்பதற்கும் முடிகின்றது. இந்த வழக்குசார்பு கோட்பாடானது வழமையாக சட்டக் கோட்பாடு, உண்மைச் சம்பவக் கோட்பாடு மற்றும் தூண்டியக்கக் கோட்பாடு என்பவற்றுடன் தொடர்புபடுகின்றது.

- சட்டக் கோட்பாடு : வாதி அல்லது பிரதிவாதி (குற்றம் சாட்டப்பட்டவர்) சார்பான சட்ட வாதங்களை ஏன் முன்னெடுக்க வேண்டும்.
- உண்மைச் சம்பவக் கோட்பாடு : ஒரு குறிப்பிடட் நிகழ்வு வரிசையானது எவ்வாறு சம்பவித்துள்ளது அல்லது எவ்வாறு சம்பவித்திருக்கக் கூடும். அத்துடன்,
- தூண்டியக்கக் கோட்பாடு : நீதி, நியாயத்தின் அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்டவர் ஏன் விடுதலை செய்யப்படல் வேண்டும் என்ற வாதம்.

ஆரம்ப நேர்காணலின் பின்பு வழக்கின் அடிப்படைக் கோட்பாட்டை உருவாக்குவதானது இங்கு முக்கியமானதாகும். அதன் போது ஒரு சில கேள்விகள் ஆராயப்பட வேண்டியுள்ளன.

- எதிராளி சட்டவிரோதமாக கைதுசெய்யப்பட்டாரா?
- குறித்த தரப்பினர் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டாரா அல்லது மற்றும் மோசமாக நடத்தப்பட்டாரா?
- குற்றம் சாட்டப்பட்டவரை கைதுசெய்வதற்கு போதுமான நியதிச்சட்ட சூழமைவுகள் இருந்ததா?
- குற்றம் சாட்டப்பட்டவர் தடுத்து வைக்கப்பட்டிருப்பின்.'. தடுத்து வைக்கப்பட்டார் எனின் அது சட்டபூர்வமானதா?
- ஒரு தேடுதலானது முற்றுப்பெற்றிருப்பின் அது சட்டபூர்வமானதா?
- தேவைப்பட்டிருப்பின், உரைபெயர்ப்பாளர் ஒருவரின் சேவை குற்றம் சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட்டதா?
- குறித்த தவறை செய்வதற்கான மனோ ரீதியான ஆற்றல் குற்றம் சாட்டப்பட்டவருக்கு உண்டா?
- குற்றம் சாட்டபட்டவர், ஒப்புதல் வாக்குமூலம் போன்ற ஏதேனும் ஆவணமொன்றில் கைச்சாத்திட்டுள்ளாரா?
- குற்றம் சாட்டப்பட்டவருக்கு குற்றத்தை ஒப்புக்கொள்ள வேண்டிய தேவை உண்டா?
- சேகரித்து வைத்துக்கொள்ளத் தேவைப்படும் சாட்சிகளின் வாக்கு மூலங்கள் பெறப்பட்டதா?
- குற்றம் சாட்டப்பட்டவரிடம் தலத்திலா வாதம் ஒன்று உண்டா? அதனை நிரூபிக்க முடியுமா?
- குற்றவியல் வழக்குத் தொடர்புக்கான நியதிச் சட்டக் காலவரையறை முடிந்துள்ளதா?
- குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றமின்மையை உங்களால் நிரூபிக்க முடியுமா?
- குற்றம் சாட்டப்படவரால் புரியப்பட்ட குற்றச் செயலை உங்களால் நியாயப்படுத்த முடியுமா?
- குற்றம் சாட்டப்பட்டவர் உண்மையிலேயே இக்குற்றத்தைப் புரிந்தாரா?
- அவ்வாறு புரியப்பட்டதாக கூறப்படும் தவறுக்கான பொறுப்பை குறித்த தரப்பினரை விடவும் வேறு எவரேனும் ஏற்க வேண்டுமா?
- இலகுவான அல்லது குறைக்கப்பட்ட தண்டனையொன்றைப் பெறுவதற்குரிய தகுதியை குறித்த தரப்பினர் பெறுகின்றாரா?
- வழக்குத் தொடுனர் தரப்பினால் நிரூபிக்கப்பட வேண்டிய பாரத்தை அவர்களால் சுமக்க முடியுமா?

மேலேயுள்ளவை முழுமையானதற்றதோர் கேள்விக் கொத்தாகும் என்பதுடன் இந்த நெகிழ்ச்சியான வழிகாட்டலானது ஒவ்வொரு பிரத்தியேக வழக்கினதும் உண்மைக் காரணிகளை பொறுத்து வேறுபடலாம். ஆரம்ப தகவல்களை சேகரித்ததன் பின்பு, சட்டங்களை அல்லது குற்றச்சாட்டுக்குள் இருக்கும் குறியீடுகளையும் குற்றத்தோடு தொடர்புபட்ட கூறுகளையும் மீளாய்வு செய்யவும். குற்றம் சுமத்தப்பட்டுள்ளவாறு, குற்றவாளியென்ற தீர்ப்பொன்றை நீதிமன்றம் வழங்கும் பட்சத்தில் குற்றம் சாட்டப்பட்டவர் எதிர்நோக்கக்கூடிய வாய்ப்புள்ள தண்டனைக்கான குற்றவியல் குறியீட்டை மீளாய்வு செய்யவும்.

### [5.2] வழக்கின் கோட்பாட்டை தீர்மானித்தல்

#### [5.2.1] குறித்த விடயம் தொடர்பான உண்மைகள் எவ்வாறாயினும் சரி, ஒரு வழக்கின் கோட்பாடானது:

- வழக்கிற்குரிய உண்மைச் சம்பவங்கள் சார்பான ஏதேனும் அம்சங்கள் தொடர்பில் எவையேனும் அனுமானங்கள் அடிப்படையாக அமையலாகாது.
- வழக்கின் சாத்தியமற்ற உண்மைகள் அல்லது அம்சங்கள் போன்றவற்றை வாதாடி அல்லது விளக்கிக் கூறி அகற்ற வேண்டியுள்ளதை கவனத்தில் எடுத்தல்.
- அவர்களின் கற்பனையை விரிவடையச் செய்யாத விதத்தில் தலைமை தாங்கும் உத்தியோகத்தரால்/ அல்லது மற்றும் யூரர் சபையால் ஏற்றுக் கொள்ளப்படும்.
- உண்மையான நிகழ்வுகளின் அடிப்படையில் மற்றும்,
- வாதிட்டு வெல்ல முடியாத நிலையான உண்மைச் சம்பவங்களின் (ஏதேனும் இருப்பின்) அடிப்படையில் உருவாக்கம் பெற்றுள்ளது.

#### [5.2.2] ஒரு வழக்கிற்கான கோட்பாட்டை முன்னெடுக்க வேண்டியதன் முக்கியத்துவம் யாது?

- சிறந்ததோர் வழக்குக் கோட்பாடு கீழ்வரும் விடயங்களை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதால் முக்கியமானதாக அமைகின்றது.
- உங்கள் வழக்கு விசாரணை
- உங்கள் தரப்பினரிடம் கேட்கப்படும் கேள்விகள்.
- உங்கள் கண்டறிதல்கள் மற்றும் விளக்கத்துக்கு தயாராகுதல்.
- உங்கள் ஆரம்ப வாக்குமூலத்தில் என்ன கூறப்பட்டுள்ளது.
- பிரதான விசாரனையின் போதும் குறுக்கு விசரரனையின் போதும் என்ன கேட்கப்படுகின்றது?
- வழக்காளி மற்றும் எதிராளிப்பக்க சாட்சிகளிடம் என்ன கேள்விகளை விடுக்கலாம்.
- உங்களின் இறுதி வாதத்தின் போது என்ன கூறப்படுகிறது மற்றும்,
- உங்கள் வழக்கின் கருப்பொருள் எதுவாக இருக்கும்.

இந்த விதமான முக்கியமானதோர் வழக்குக் கோட்பாடானது, குறித்த வழக்கிற்கானதோர் வியூக ரீதியான திட்டத்தினை வழங்குவதுடன் இறுதியாக அதனை நீதிமன்றத்தில் நீதிபதி மற்றும்/ அல்லது யூரர் முன்னால் தந்திரோபாயமான முறையில் எவ்வாறு முன்வைப்பது என்பதனை வழங்குகின்றது.

#### [5.2.3] ஒரு வழக்கின் கோட்பாட்டை நான் உருவாக்கி அதனை எவ்வாறு முன்னெடுத்துச் செல்லலாம்?

ஒரு வழக்கின் கோட்பாட்டை உருவாக்குவதில் அதன் **முதல் கட்டமாக**, குற்றஞ் சாட்டப்பபட்டவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை துல்லியமாக தீர்மானித்துக் கொள்ளும் பொருட்டு அதனை நன்கு மீளாய்வு செய்தல் வேண்டும். இக்கட்டத்தின் போது, சுமத்தப்பட்டுள்ள குற்றச் செயலோடும், சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுடனும் தொடர்புபட்டுள்ள முக்கியமான கூறுகளைத் தீர்மானித்தல் வேண்டும்.

**இரண்டாவது கட்டமாக**, வழக்குடன் தொடர்பான உண்மைச் சம்பவங்களையும், பின்னணியையும் முழுமையாக விசாரித்தறிதல் வேண்டும். இப்பணி கீழ்வரும் விதத்தில் பல்வேறு செயற்பாடுகள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

- தகவல், உண்மையான நிகழ்வுகள், அறிவுறுத்தல்களைப் பெறுவதற்காக குற்றம் சாட்டப்பட்டவரை நேர்காணல் செய்தல்.
- வழக்காளியின் தரப்பால் கிடைக்கச் செய்துள்ள அனைத்துவித ஆவணங்கள், காட்சிப் படுத்தப்பட்டவைகள் மற்றும் ஏனைய பொருட்களை நன்கு பரீட்சித்து அவதானித்தல்.
- முடியுமாயின் குற்றத்தை நேரடியாக கண்ட சாட்சிகளை நேர்கண்டு, அதுபற்றி அவர்கள் கூறும் உண்மையான விடயங்களை தெரிந்து கொள்ள வேண்டும்.
- முடியுமாயின், குறித்த வழக்கு தொடர்பாக ஏதேனும் தகவல்களை வைத்திருக்க கூடிய ஏனைய சாட்சிகளை நேர்காணுங்கள்.

- முடியுமாயின் அல்லது ஏற்புடையதாயின் குற்றச் செயல் நடந்துள்ள இடத்தை போய்ப் பார்வையிடுங்கள்.
- அத்துடன் குறிப்பாக, குற்றம் சாட்டப்பட்டவரின் அரசியல் யாப்பு உரிமைகள் மீறப்பட்டுள்ளதா என்பதை கவனியுங்கள்.

குற்றம் சாட்டப்பட்டவர் கைதாகிய போது, ஒன்றும் கூறாமல் மௌனமாக இருக்க முடியுமான அவருக்குள்ள உரிமை பற்றி அவரிடம் கூறப்பட்டதா?

சட்டத்தரணி ஒருவரின் உதவியை பெற முடியுமான (அவருக்கு அவ்வாறு ஒருவரை அடையும் வசதி இல்லாவிட்டாலும் சரி) தனக்குள்ள உரிமை பற்றியும், தான் விசாரிக்கப்படும். போது அச்சட்டத்தரணிக்கு சமூகமளிக்க முடியுமான உரிமை பற்றியும் கூறப்பட்டதா?

ஒரு நியாயாபூர்வமற்ற தேடுதல் அல்லது/ மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவரின் கைது அல்லது/ மற்றும் உடமைகள் கைப்பற்றல் உள்ளிட்ட நிலைமையுடன் அவ்வாறானதோர் கைதுக்கான அல்லது தேடுதலுக்கான நிகழ்வு சாத்தியப்பாடு இருந்ததா?

**மூன்றாவது கட்டமாக**, நீதிமன்றத்தில் வழக்கு விசாரனையின் போது குற்றஞ் சாட்டப்பட்டவர் சார்பான எதிர்வாத்தினை எவ்வாறு முன்னின்று நடத்து வேண்டும் என்பதை தீர்மானிப்பதேயாகும்.

- குறித்த தரப்பினர் இரைஞ்ச முதல், ஆரம்பத்திலேயே ஏதேனும் எதிர்ப்பினை முன்வைக்க வேண்டுமா என்பதை தீர்மானியுங்கள் உதாரணம்: நியாயாதிக்கம் தொடர்பான பிரச்சினைகள், பிழையான குற்றஞ்சாட்டு அல்லது குற்றப்பத்திரம் போன்றவை.
- குற்றம் சாட்டப்பட்டவருக்கான எதிர்வாத்தை முன்னெடுத்து முன்வைக்கும் போது அதற்குத் தேவையான விதத்தில் அங்கு நிரூபிக்கப்பட வேண்டிய உண்மைச் சம்பவங்களை இனங்காணுதல்.
- அவ்வாறான உண்மைச் சம்பவங்களை எவ்வாறு நிரூபிக்க வேண்டும், என்பதையும் அதற்காக அழைக்க வேண்டிய சாட்சிகளையும் இனங்காணுங்கள்.
- வழக்காளித் தரப்பின் சாட்சிகள் தொடர்பில் அவர்களின் நம்பகத் தன்மையில் (முக்கியமானதாக இருப்பின்) பிரச்சினை உண்டா என்பதை தீர்மானித்துக் கொள்ளுங்கள்.
- இவ்வழக்கில் உங்கள் பக்கத்திலும் அதே போன்று வழக்காளித் தரப்பிலும் உள்ள மிகவும் பலமான நுட்பக் காரணிகளை தீர்மானியுங்கள்.
- அதே போன்று, உங்கள் பக்கத்திலும் வழக்காளியின் பக்கத்திலும் உள்ள பலவீனமான நுட்பக் காரணிகளைத் தீர்மானியுங்கள்.

ஒரு சட்டத்தரணியானவர், ஆரம்பத்திலிருந்தே சட்டத்திற்கும் அதேபோன்று இங்குள்ள உண்மைக் காரணிகளுக்கும் ஏற்புடையதாகும் விதத்தில் தனது தரப்பினரின் நலன்களை மையமாக வைத்த வண்ணம் குறித்த வழக்கின் பொதுக்கோட்பாட்டை கட்டியெழுப்புதல் வேண்டும். இவ்வாறான முன்னெடுப்பானது, எதிராளித்தரப்புக்குரிய செயன்முறை முழுக்கவுமே தனக்குள்ள தெரிவை மதிப்பீடு செய்வதற்கு உதவுவது மாத்திரமல்லாமல், குறித்த வழக்கெழு காரணிகளை விசாரித்தறியும் செயற்பாட்டின் போதும் அதே போன்று விளக்கத்திற்கான தயாரிப்புகளின் போதும் தனக்கு சிறந்த வழிகாட்லை வழங்கக் கூடியதாகவும் அமைகின்றது.

இவ்வாறு நோக்கும் பட்சத்தில், ஒரு சட்டத்தணியானவர் தனது தரப்பினரால் கூறப்படும் உண்மைக் காரணிகள், வழக்கிற்கான கோட்பாடு என்பவை தொடர்பான உண்மைகளையும், சான்றுகளையும் தொடர்ந்து வலியுறுத்தியவாறு விரிவாக்கம் செய்ய வேண்டிய பொறுப்பில் இருந்து வருகின்றார்.

## [5.3] வழக்கின் கருப்பொருளைத் தீர்மானித்தல்

ஒரு வினைத்திறன் மிக்க கோட்பாடு (அல்லது கதையானது) பல்வேறுபட்ட கூறுகளையும் ஒன்றாகத் திரட்டக்கூடியவாறானதோர் தெளிவான கருப்பொருளை வேண்டி நிற்கின்றது. உங்கள் வழக்கின் கருப்பொருளானது, குறித்த வழக்கு சம்பந்தப்பட்ட விரிவான கோட்பாட்டினுள் அமைந்துள்ளதோர் கூறாகவே இருக்குமென்பதை நினைவில் வைத்திருத்தல் வேண்டும். அதே வேளை, குறித்த வழக்கின் கருப்பொருளானது ஒரு சொல்லாக, சொற்றொடரொன்றாக அல்லது இலகு வசனமொன்றாக இருப்பதுடன் அது வழக்கின் கோட்பாட்டின் பலமான உணர்வினை அல்லது யதார்த்தத்தை கவருவதாக அல்லது தெளிவுபடுத்துவதாக இருக்கின்றது. குறித்த கருப்பொருளானது

மிகவும் சுருக்கமாகவும் நீதிபதியினால் அல்லது யூரரினால் இலேசான முறையில் ஞாபகத்தில் வைத்திருக்கக் கூடியதுமானதாகவும் இருத்தல் வேண்டும்.

வழக்கின் கருப்பொருளானது அதன் ஏனைய கூறுகளை ஒன்றாக பிணைப்பதில் முக்கிய மூலக்கூறாக அமைகின்றது. உங்கள் வழக்கின் கருப்பொருளை உருவாக்குவதில் கீழ்வரும் செயல்முறைத்துனுக்குகளும் உள்ளடங்குகின்றன.

| | | |
|---|---|---|
| வழக்கின் ஆரம்பத்தில் முதலில் கருப்பொருளை விருத்திசெய்தல் | விளக்கம் முழுக்கவும் உங்கள் கருப்பொருளை பின்னிப்பிணைத்துக் கொள்ளுங்கள் | கருப்பொருளின் உள்ளடக்கத்திற்கு அமைவாக உங்கள் சாட்சிகளை விசாரிக்க வேண்டும். |
| கருப்பொருளுக்கு உதவும் விதத்தில் தகவல் விபரப் பட்டியலை வைத்திருங்கள் | அதனை இலகுவாகவும் தொடர்ந்து வைத்திருங்கள் | முன்னேரிச் செல்வதற்கான பிரதான சாதனமாக உங்கள் கருப்பொருளை தயார்படுத்தி கொள்ளவும் |
| கருப்பொருளுக்காக அனைத்து சாட்சிகளையும் சான்றுகளையும் தொடர்புபடுத்திக் | விடயங்கள் கருப்பொருளுடன் தொடர்புபட்டதாக இருத்தல் வேண்டும். | ஆரம்ப மற்றும் இறுதி விவாதத்தின் போது கருப் பொருளை முன்னிலைப்படுத்திக் கொள்ளுங்கள் |

## [5.4] வழக்கின் கதையைச் சொல்வதும் அதன் கோட்பாட்டையும் கருப்பொருளையும் முன்வைப்பதும்

ஒரு சட்டத்தரணியானவர் நீதிமன்றத்தில் தன் தரப்பினரின் கதையை எடுத்துக் கூறுவார். அதற்காக வேண்டி அவர் வழக்கின் கோட்பாட்டை அதன் பலமான கருப் பொருளுடன் இணைத்து பயன்படுத்துகின்றார். தனது தரப்பினரை பாதுகாக்கும் நோக்கில் இச்சட்டத்தரணி குறித்த கதையை நீதிமன்றில் எவ்வாறு கூற வேண்டும் என்பதை தெரிந்து கொள்ளுதல் வேண்டும். அக்கதை எவ்வளவு கவர்ச்சிகரமாக இருக்கின்றதோ குறித்த விவாதமானது நீதிபதியையும் யூரரையும் அதே அளவு திருப்தியைக் கொடுப்பதாகவும் அமைவதுடன், இவர்களே வழக்கின் உண்மையான நிகழ்வுகளை இறுதியாகத் தீர்மானிக்கின்றார்கள்.

இவ்வாறான கூறுகளை மனதில் வைத்த வண்ணம் சட்டத்தரணியால் முன்வைக்கப்படும் கதையானது, வழக்குக்கான உரிய தளத்தையும் சூழலமைவுகளையும் உருவாக்கி பாத்திரங்களை அறிமுகம் செய்து, கருத்துக்களையும் சான்றுகளையும் ஒழுங்குபடுத்தி அதற்கானதோர் கட்டமைப்பை கவனமாக திட்டமிடவும் அனுமதியை வழங்குகின்றது. இவ்வாறானதோர் கட்டமைப்பின் செயற்பாடு இல்லாத பட்சத்தில் நீதிபதிகளும் அல்லது யூரர்களும் வழக்குத்தொடுனர் தரப்பின் வாதத்திற்கு அமைய சான்றுகளையும் சாட்சி வழங்கல்களையும் விளங்கி ஏற்றுக்கொள்வார்கள்.

எதிர்தரப்பு சட்டத்தரணியானவர் இந்தவித கட்டமைப்பைப் பயன்படுத்தி, தனது தரப்புக்கு சாதகமான சாட்சியத்தையும் சான்றுகளையும் தனது தரப்பினரின் அனுபவத்தின் பின்னனியில் நீதிபதிகள் மற்றும் யூரர்களுக்கு ஏற்றுக்கொள்ள வைக்கமுடிகின்றார். உங்கள் தரப்பினரின் கதையை நீதிமன்றத்தில் எடுத்துக் கூறும் போது அங்கு ஒரு வித சாதனமாக சூழமைவை ஏற்படுத்தி, அதனூடாக முன்வைக்கப்படும் சாட்சிகள் மதிப்பிடக்கூடியதாக இருக்க வேண்டியது முக்கியமானதாகும். நீதிமன்றத்தில் வினைத்திறன் மிக்கதோர் கதை விவரணத்தை முன்வைக்க கீழ் வரும் திறன்கள் தேவைப்படுகின்றன.

- வித்தியாசமான தொனிகள் மற்றும் சப்தத்தின் அளவு
- சாட்சிகளை விசாரிக்கும் போது தொனியில் காட்டப்படும் உரிய தாளம் மற்றும் போக்கு
- நீதிபதியை அல்லது யூரர்களை விளிக்கம் போது தெனியில் காட்டப்படும் உரிய தாளம் மற்றும் போக்கு

- அங்க அசைவு மொழி மற்றும் சைகைகள்
- வினைத்திறனுக்கும் வலியுறுத்தலுக்குமான மட்டுப்படுத்தப்பட்ட இடை நிறுத்தல்கள்
- கண்மைய தொடர்பாடல் மற்றும் கண்மைய தொடர்பினை பேணிவருதல், அத்துடன் வித்தியாசமான பேச்சுத்திறன்களை பயன்படுத்துதல்

ஒரு வழக்கின் கதை விவரணத்தை பயன்மிக்கதாக விருத்தி செய்வதற்கு குறித்த சட்டத்தரணியானவர் வழக்காளித் தரப்பின் வழக்கை நடுநிலையாக இருந்தவாறு மதிப்பீடு செய்தல் வேண்டும். அத்துடன் இதனை குறித்த சட்டத்தரணியால் தனது தரப்பினரின் அறிவுறுத்தல்களோடும் உண்மைக் கூற்றுக்களோடும் ஏற்புடைய சட்டங்களோடும் சம நிலைப்படுத்தியவாறும் குறித்த நிகழ்வின் உண்மையான விடயங்களை அடிப்படையாக வைத்த வண்ணம் ஒழுங்கமைத்து, மனதை உருக்கும் கதையொன்றாக கட்டியெழுப்புதல் வேண்டும். அத்துடன் எதிர் தர்க்கத்திற்கு வசதியளிக்கும் விதத்தில் உணர்வு பூர்வ விடயங்களையும் அடிப்படைக் கட்டமைப்புக்குள் உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.

வழக்கு தொடர்பானதோர் சாதாரண கோட்பாட்டை மிக விரைவில் புரிந்து கொள்ள வேண்டியது முக்கியமானதாகும். இதுவானது வழக்கு விசாரனையின் போதும், சாட்சிகள் சான்றுகளை பரிசீலித்து முன்வைத்தல் மற்றும் வாதிடலின் போதும் முக்கியத்துவம் பெறுகின்றது. இவை அனைத்தையும் நியாயமான, கவர்ச்சியான விதத்தில் ஒரு கதையாக முன்வைத்து அதனூடாக தனது தரப்பினரை விடுதலை செய்து கொள்வதற்கு, தண்டனையை குறைத்துக் கொள்வதற்கு அல்லது குறித்த குற்றவியல் பொறுப்பிலிருந்து அவரை விடுவித்துக் கொள்வதற்கு நீதிபதியை அல்லது யூரரை இணங்கச் செய்ய முடிகின்றது.

## [5.5] எதிர்வாதம்

வழக்கின் கோட்பாட்டை விருத்தி செய்யும் செயன்முறையில் பிரதிவாதியின் சட்டத்தரணி குறித்த குற்றத்தில் இருந்து தன் தரப்பினரை மன்னித்து விடுவது சாத்தியமானதா எனத் தீர்மானிப்பார். அவ்வாறாயின் சட்டத்தரணி வழக்கின் விளக்கத்தின் போது தரப்பினரின் அப்பாவித்தனத்தை மேலும் நிரூபிப்பது தொடர்பில் பரிசீலிக்க வேண்டும்.

குற்றவியல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் எழுப்பக்கூடிய பல்வேறுபட்ட பிரதிவாதங்களுக்கான தேவைப்பாடுகளானவை இலங்கை தண்டனைச் சட்டக் கோவை அத்தியாயம் IV இல் முன்வைக்கப்படுகின்றன. பிரதிவாத சட்டத்தரணிகள் கிடைக்கக்கூடிய பிரதிவாதங்களுடனும் அதன் அவசியமான தேவைப்பாடுகளுடனும் தன்னைத்தானே பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டுமென்பது முக்கியமானது. இலங்கைச் சட்டக் கட்டமைப்பின் கீழ் குற்றவியல் பொறுப்பிலிருந்து மன்னித்து விடுவிப்பதற்கு சாத்தியமான பிரதிவாதங்களாக பின்வருவன உள்ளன:

### [5.5.1] நிகழ்வுப் பிழை

ஒரு செயலைச் செய்வதற்கு சட்டப்படி கட்டுப்பட்டுள்ள அல்லது சட்டப்பிழை காரணமாக அல்லது நிகழ்வுப்பிழை காரணமாக அதனைச் செய்ய சட்டப்படி கட்டுப்பட்டதாக நல்லெண்ணத்துடன் நம்பும் ஆளொருவரினால் செய்யப்படும் எதுவும் தவறல்ல. (த.ச.கோ. பிரிவு – 69)

உதாரணத்திற்கு:

- சட்டத்தின் கட்டளையின் உறுதிப்பாட்டில் உயரதிகாரியின் கட்டளை நிமித்தம் ஒரு போர் வீரர் ஒரு காடையர் கூட்டத்தின் மீது துப்பாக்கியால் சுடுகிறார். அவர் எந்தக் குற்றத்தையும் செய்தவர் அல்ல.
- A என்பவர் நீதிமன்றத்தின் ஒரு உத்தியோகத்தர். A, நீதிமன்றத்தால் கட்டளையிடப்பட்டு Y யைக் கைது செய்கின்றார். உரிய விசாரணையின் பின் Z ஐ Y என நினைத்து Z கைது செய்யப்பட்டுகிறார். A எந்தக் குற்றத்தையும் செய்யவில்லை.

### [5.5.2] நல்லெண்ணம்/ நல்நோக்கம்

ஒரு செயலைச் செய்வதற்கு சட்டப்படி கட்டுப்பட்டுள்ள அல்லது சட்டப்பழை காரணமாகவல்லாமல் நிகழ்வுப் பிழை காரணமாக அதனைச் செய்யச் சட்டப் படி கட்டுப்பட்டதாக நல்லெண்ணத்துடன் நம்பும் ஆளொருவரினால் செய்யப்படுகிறதுவும் தவறல்ல. **(தண்டனைக்கோவை, பிரிவு 69).**

A என்பவர், தோற்றப்பாட்டிலான கொலையொன்றை Z செய்வதாக காண்கிறார். ஒரு கொலைச் செயல் நிகழும் போது அதனை புரிபவரை கைது செய்ய சட்டத்தினால் அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தையும் நல்லெண்ணத்துடனான தனது சிறந்த தீர்ப்பையும்

பயன்படுத்தியவாறு உரிய அதிகாரிகள் முன்னால் அவரை கொண்டுவரும் நோக்கில் Z ஐ கைதுசெய்கின்றார். இந்நிகழ்வின் போது Z என்பவர் தற்காப்புக்காக அதனை செய்திருந்ததாக பின்னர் வெளிவந்தாலும்கூட, A தவறொன்றை புரியவில்லை.

## [5.5.3] <u>தற்பாதுகாப்பு</u>

தற்பாதுகாப்பு மற்றும் மூன்றாம் தரப்பு ஒன்றின் பாதுகாப்பு என்பன இந்தப் பாதுகாப்புக்கான எல்லாத் தேவைப்படுகளும் பூர்த்தி செய்யப்படின் முழுப் பாதுகாப்பாக இருக்க முடியும்.

தீமை விளைக்கவேண்டுமென்ற குற்ற உளக்கருத்து எதுவுமின்றியும், ஆளுக்கு அல்லது ஆதனத்திற்கு நேரவிருக்கும் வேறு தீமையினைத் தடுக்கும் அல்லது ஆதனத்திற்கு நேரவிருக்கும் வேறு தீமையினைத் தடுக்கும் அல்லது விலக்கும் நோக்கத்துக்காக நல்லெண்ணத்துடனும் எதுவேனும் செய்யப்படின், அது தீமை விளைவிக்கும் சாத்தியமுள்ளது என்ற அறிவுடன் செய்யப்பட்டதென்ற காரணத்தால் மட்டும், தவறல்ல. **(தண்டணைச் சட்டக் கோவை – பிரிவு 74)**

ஆளொவ்வொருவரும், 92ஆம் பிரிவில் அடங்கியுள்ள மட்டுப்பாடுகளுக்கமைய,- மனித உடலைப் பாதிக்கும் ஏதேனும் தவறுக்கெதிராக தனது சொந்த உடலையும் வேறு எவரேனும் ஆளின் உடலையும் காப்பதற்கு உரிமையுடையவராவார். திருட்டு, கொள்ளை, சொத்தழிவு அல்லது குற்றமான அத்துமீறுகை என்பவற்றின் வரைவிலக்கணத்தினுள் அடங்குகின்ற தவறொன்றாகவுள்ள ஏதேனும் செயலுக்கெதிராக அல்லது திருட்டு, கொள்ளை, சொத்தழிவு அல்லது குற்றமான அத்துமீறுகையைப் புரிய எத்தனிக்கும் ஏதேனும் செயலுக்கெதிராக தன்னுடைய அல்லது வேறு எவரேனும் ஆளினது ஆதனத்தை, அது அசைவுள்ளதாயினும் சரி அசைவற்றதாயினும் சரி காப்பதற்கு உரிமையுடையவராவார். **(தண்டணைச் சட்டக் கோவை – 90)**

எவ்விடயத்திலும் பாதுகாப்பு நோக்கத்துக்கு அவசியமான தீமையிலும் கூடுதலான தீமையினை உண்டாக்குவதற்கு தற்காப்புரிமை விரிவுபடுவதாகாது. **(தண்டணைச் சட்டக் கோவை – 92(4))**

## [5.5.4] துர்ப்பாக்கியம்

சட்ட பூர்வமான செயலொன்றை சட்டபூர்வமான முறை மூலம் சட்டபூர்வமான வழிவகைகளினால் தகுந்த கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் செய்கையில் தற்செயலாக அல்லது துரதிஷ்டவசத்தினால் அத்துடன் குற்றஉளக் கருத்தோ அறிவோ இல்லாமல் செய்யப்படுவதெதுவும் தவறல்ல. **(தண்டணைச் சட்டக் கோவை – 73)**

ஒரு உதாரணத்திற்கு, A கோடரியுடன் வேலை செய்து கொண்டிருக்கிறார். கோடரியுடன் தலைப்பகுதி பறந்து அங்கு நின்றவரைக் கொலை செய்கிறது. A யின் பகுதியில் உரிய எச்சரிக்கை தேவைப்படாத நிலையில் அவரது செயற்பாடானது மன்னிக்கக்கூடியதாக இருப்பதுடன் அது ஒரு குற்றமல்ல.

## [5.5.5] <u>போதை வெறியாகுதல்</u>

தன்னார்வமற்ற போதை வெறியாகுதலானது முழுமையாக தனக்கான எதிர்வாதமாக அமைகின்றது. யாருமொருவர் ஒரு குடிபானதத்திற்குள் ஒரு மருந்தை நழுவ விட்ட நிலையில் அது மருந்தைக் கொண்டிருக்கிறது என அறியாது அதை நுகரும் நிலையானது தன்னார்வமற்ற போதை ஊட்டுதலில் சம்பந்தப்படுகிறது. மருந்தின் விளைவுகளினால் குற்றத்திற்கான காரண அறிவுகளை குற்றம் சாட்டப்பட்டவர் அறிந்திராத நிலையில் அவர் முழுப் பாதுகாப்பிற்கும் உரியவராக உள்ளார்.

செயலொன்றினைச் செய்யும் பொழுது, மதுபோதை காரணமாக அச்செயலின் தன்மையினையேனும் அல்லது தான் செய்வது பிழையானது அல்லது சட்டத்திற்கு முரணானது என்பதையேனும் அறிந்து கொள்ள இயலாத ஆளொருவரினாற் செயற்படுமெதுவும் தவறல்ல. **(தண்டணைச் சட்டக் கோவை – 78)**

செய்யப்பட்ட செயலொன்று குறிப்பிட்டவோர் அறிவுடன் அல்லது உள்கருத்துடன் செயற்பட்டாலன்றித் தவறொன்றாகாத விடயங்களில், மதுபோதை நிலையில் அச்செயலைச் செய்யும் ஆளொருவர், அவருக்குப் போதை உண்டாக்கிய பொருள் அவரது அறிவின்றி அல்லது அவரது விருப்பத்திற்கு எதிராக ஊட்டப்பட்டதாக இருந்தாலன்றி, அவர் உடையவராய் இருந்திருக்கக்கூடிய அதே அறிவினை உடையவராயிருந்தாற்போன்று, அவருக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படுதற்காளாதல் வேண்டும். **(தண்டணைச் சட்டக் கோவை – 79)**

## [5.5.6] சம்மதம்

மரணத்தை அல்லது கடும் காயத்தினை விளைவிக்கும் உளக்கருத்தின்றியும் மரணம் அல்லது கடுங்காயம் விளைவிக்கும் சாத்தியம் கொண்டது எளச் செய்தவர் அறியாததுமான செயலெதுவும், அத்தகைய தீமையினை அனுபவிக்க வெளிப்படையாக அல்லது உட்கிடையாகச் சம்மதம் அளித்துள்ள பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட எவரெனுமாளிக்கு, அது ஏற்படுத்தக்கூடிய அல்லது செய்பவரால் ஏற்படுத்தக் கருதப்பட்ட ஏதேனும் தீமையின் காரணத்தால், அல்லது அத்தகைய தீமையின் அபாயத்தை மேற்கொள்ளச் சம்மதமளித்த எவரேனுமதம்தகைய ஆளுக்கு விளைவிக்கும் சாத்தியம் கொண்டது எனச் செய்பவரால் அறியப்பட்ட ஏதேனும் தீமையின் காரணத்தால், தவறல்ல. **(தண்டணைச் சட்டக் கோவை – 80)**

மரணத்தை விளக்கும் உளக்கருத்தில்லாத எதுவும், எவரேனுமாளின் நன்மைக்காக நல்லெண்ணத்துடன் அது செய்யப்படுவதுமல்லாமல் அந்தத் தீமையினை அவர் அனுபவிக்க அல்லது அந்தத்தீமையின் அபாயத்தினை மேற்கொள்ள வெளிப்படையாக அல்லது உட்கிடையாகச் சம்மதந் தந்துள்ளவருமான அவ்வாளுக்கு அது ஏற்படுத்தக்கூடிய, அல்லது செய்பவரால் ஏற்படுத்தக் கருதப்பட்ட அல்லது ஏற்படுத்தும் சாத்தியமுள்ளது எனச் செய்பவாரால் அறியப்படக்கூடிய ஏதேனும் தீமையின் காரணத்தால், தவறல்ல. **(தண்டணைச் சட்டக் கோவை – 81)**

## [5.5.7] <u>அச்சுறுத்தல்</u>

மரணத்தினால் தண்டிக்கப்படக்கூடிய கொலை, அரசுக்கெதிரான தவறுகள் என்பவற்றைத் தவிர, அதனைச் செய்த நேரத்தில் அதனைச் செய்யாதுவிட்டால் அவ்வாளுக்கு உடனடியாக மரணம் விளையுமென்ற பயத்தை நியாயமாக ஏற்படுத்தக்கூடிய பயமுறுத்தல்களினால் அதனைச் செய்யும் படி கட்டாயப்படுத்தப்பட்ட ஆளொருவரினாற் செய்யப்பட்ட செயலெதுவும் தவறாகாது ஆயினும் அச்செயலைப் புரியும் ஆள் தனது சொந்த விருப்பத்தின் பேறில், அல்லது உடனடி மரணம் அல்லாத வேறு தீமை தனக்கு ஏற்படுமென்ற நியாயமான அச்சத்தின் காரணமாக, அத்தகைய கட்டாயப்படுத்தலுக்குத் தம்மை உள்ளாக்கிக் கொண்ட சூழ்நிலைக்குத் தம்மை உட்படுத்தியிருக்கலாகாது. **(தண்டணைச் சட்டக் கோவை – 87)**

உதாரணத்திற்கு, வலிந்து வீடு புகுவோர் கூட்டம் ஒன்றினால் பிடிக்கப்பட்டு, உடன் மரணப் பயமுறுத்தலின் மீது சட்டப்படி தவறாகவுள்ள விடயமொன்றை செய்யும்படி கட்டாயப்படுத்தப்பட்ட ஆளொருவர் அச்சட்டத்திலிருந்து அத்தீங்கை செய்வதற்கு விதிவிலக்கைப் பெறுகிறார்.

## [5.5.8] <u>தலத்திலா/ வேற்றிட இருப்பு வாதம்</u>

குற்றம் நிகழ்த்தப்பட்ட நேரத்தில் குற்றம் சாட்டப்பட்டவர் வேறு ஒரு இடத்தில் இருந்தாரென வேண்டிச் சேர்க்கும் வகையிலான ஒரு விசேடித்த பாதுகாப்பே தலத்திலா/ வேற்றிட இருப்பு வாதமாகும்.

இலங்கையில் ஒரு வேற்றிட இருப்பு வாத பாதுகாப்பை ஒரு குற்றம் சாட்டப்பட்டவர் எழுப்புவராயின் அங்கே குற்றவியல் நடவடிக்கைச் சட்டக்கோவையின் பிரிவு 126A யின் தேவைப்பாடுகள் ஒட்டி ஒழுகப்படுதல் வேண்டும். பிறிதிட இருப்பு வாதம் ஒன்றிற்காக குற்றம் சாட்டப்பட்டவர் வழங்க வேண்டிய அறிவித்தல்களை பின்வருமாறு விசேடித்த முறையில் அது சுட்டிக்காட்டுகிறது:

*(1)* ஆள் எவரும் மேல் நீதிமன்றத்தின் குற்றப்பகர்வின் மீதான விளக்கமொன்றின் போது வேற்றிட இருப்பு எதிர்வாதத்துக்கான ஆதாரமாக அவர்—

(அ)புலனாய்வின் போது அவரது கூற்றை அளித்த நேரத்தில் அத்தகைய நிகழ்வொன்றை பொலிசாருக்கு கூறியிருந்தாலொழிய; அத்துடன்

(ஆ) பூர்வாங்க விசாரணையின் போது எந்த நேரத்திலும் அத்தகைய நிகழ்வொன்றை கூறியிருந்தாலொழிய; அத்துடன்

(இ) விளக்கம் தொடங்கும் திகதியிலிருந்து பதினான்கு நாட்களுக்கு முன்னதாக எந்த நேரத்திலும் சட்டத்துறை தலைமையதிபதிக்கு அறிவித்தல் கொடுத்து குற்றப்பகர்வு சேர்ப்பிக்கப்பட்ட பின்னர் அத்தகைய எதிர்வாதத்தை எழுப்பியிருந்தாலொழிய சான்று முன்வைப்பதற்கு உரித்துடையவராகாது*:*

ஆயின் எவ்வாறாயினும் நீதிமன்றமானது மேலே தரப்பட்டுள்ள காலப்பகுதியினுள் வேற்று இட இருப்பு பற்றிய எதிர்வாதத்தை எழுப்புவதற்கு ஏன் தாமதித்தார் என்பதைக் காட்டுவதற்கு போதியதாகவுள்ள காரணங்களை குற்றம் சாட்டப்பட்டவர் முன்வைத்துள்ளார் என அபிப்பிராயப்படின் அதன் பின்னர் எந் நேரத்தினதும் ஆனால் குற்றவழக்குத் தொடுனர் தரப்பிலான வழக்கு முடிவுறு

முன்னர் வேற்றிட இருப்பு பற்றிய எதிர்வாதத்தை எழுப்புவதற்கு குற்றம் சாட்டப்பட்டவரை அனுமதிக்கலாம்.

*(2) அத்தகைய ஆள் எந்த நேரத்தில், எந்த இடத்தில் இருந்தார் எனக் கோருகிறாரோ அந்த நேரமும், இடமும் பற்றியதும் அவரின் வேற்றிட இருப்பு வாதத்திற்கு ஆதாரமாக சான்று கொடுத்து தவறக்கூடியவாறான ஆட்கள் எவரேனும் இருப்பின் அவர்கள் பற்றியதுமான எல்லாத் தகவல்களையும் மூலக்கூற்றானது கொண்டிருக்க வேண்டும்.*

*(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக வேற்றிட இருப்பு வாதத்திற்கு ஆதாரமான சான்று என்பது குறிப்பிட்ட ஓர் இடத்தில் அல்லது குறிப்பிட்ட ஓர் இடப்பரப்பில், குறிப்பிட்ட ஒரு நேரத்தில் சமூகமாய் இருந்த காரணமாக தவறு புரியப்பட்டதாகச் சார்த்தப்பட்ட இடத்தில் அவர் இருக்கவில்ல அவர் இருக்கக்கூடிய சாத்தியம் கொண்டவராக இருக்கவில்லையெனக் காட்டுவதற்கு உகந்ததான சான்று என்ற பொருளாகும்.*

ஒரு வேற்றிடவாத எதிர்வாதம் எழுப்பப்படின் சட்டத்தரணி குற்றம் சாட்டப்பட்டவருடன் இதைப் பிரச்சாரம் செய்வதுடன் இப் பிரிவின் விசேட தேவைப்பாடுகளை கவனததில் எடுப்பதும் முக்கியமானது.

## [5.5.9] பொது நோக்கு அல்லது கூட்டுக் குற்றவியல் முயற்றசியிலிருந்து விலகுதல் (JCE)

பொதுநோக்கக் கோட்பாடு (இது வடிவமைப்பு, கூட்டு முயற்சி அல்லது கூட்டுக் குற்றவியல் முயற்சி எனச் சொல்லப்படுவது) என்பது ஒரு கூட்டு குற்றவியல் முயற்சியின் எல்லா பங்குபற்றுனர்களுக்கும் அம் முயற்சியில் இருந்து எழும் எல்லா விளைவுகளையும் ஒரு பங்குபற்றுனரின் குற்றவியல் பொறுப்பை அவர்கள் எல்லோர் மீதும் சுமத்தும் ஒரு பொதுவான சட்டரீதியான கோட்பாடாகும்.

இந்தச் சட்டத்தின் ஒரு பொதுவான பிரயோகமும் விபரிப்பின் உதாரணமும் என்னவெனில் ஒரு ஆளைக் கலவரப்படுத்தியதான குற்றவியல் பொறுப்பை கலவரத்தில் இருந்த ஆட்களை ஒருவர் கலவரத்தில் கத்தியொன்றை வைத்திருக்கிறார். அவர் அதனைப் பயன்படுத்தலாம் என அறிந்திருந்த அல்லது அதை அறிவதை கவனயீனமாக இருந்த ஆனாலும் தாம் கத்தி வைத்திருக்காத ஏனைய எல்லாப் பங்குபற்றுனர்களுக்கும் அந்த குற்றத்திற்கான பொறுப்பை சுமத்தவதாக்கும் மற்றுமொரு உதாரணமானது பின்வருமாறு பிரயோகிக்கக்கூடியது. ஒரு குழுவானது ஒரு சண்டைக்காகவோ அல்லது ஒரு குற்றத்தைப் புரிவதற்காகவோ வருகிறது. அந்தக் குழுவினரில் ஒருவர் ஆயுதம் வைத்திருக்கிறார் என்று பங்குபற்றுனர்களுக்கு தெரிந்தோ அல்லது தெரியாமலோ உள்ளது. ஆயுதம் இருக்கிறது என ஆளுக்குத் தெரியுமானால் அது பாவிக்கப்படக்கூடும் என முன்னறிய முடியும் என்பதுடன் ஏனைய பங்குபற்றுனர்களும் ஆயுதத்தைக் கொண்டுவருபவரிடம் அதனை விட்டு விட்டு வரும்படியும் மற்றும் தமது எண்ண எல்லைக்குள்ளேயே அது இருக்க வேண்டுமெனவும் அவரிடம் கட்டளையிடவில்லையென்ற உண்மையுள்ளது. எவ்வாறாயினும் அந்த ஆயுதத்தைப் பற்றி அந்த ஆள் அறியாதிருப்பின் அது பொதுநோக்கிலிருந்து வேண்டுமென்றே விலகியிருப்பதாக இருப்பதுடன் கூட்டுமுயற்சி என்ற விடயத்தை முறிக்கிறது.

இலங்கை தண்டனைச் சட்டக்கோவை ஆனது இலங்கை குற்றவியல் சட்டத்தின் பொதுநோக்கங்களின் கோட்பாட்டை அங்கீகரித்து உள்ளிணைப்பதுடன் அதன் 32 ஆம் 33 ஆம் பிரிவுகளில் பின்வருமாறு உள்ளவாறு தீர்மானிக்கிறது:

குற்றம் சாட்டப்பட்டவர் மீது குற்றம் சாட்டப்பட்டு பொதுநோக்கில் செயற்பட்டது என வழக்குரைஞர் குற்றம் சாட்டும்பொழுது எதிர்வாதி விட்டு விலகியதை எழுப்ப வேண்டும். அதாவது குற்றம் சாட்டப்பட்டவர் பொது குற்றவியல் முயற்சியிலிருந்து அதாவது கேள்வியிலுள்ள பொதுநோக்கிலிருந்து தன்னைத்தானே துடிப்பாக இணைத்துக் கொள்ளாதிருப்பதைக் காட்ட வேண்டும். **(பிரிவு 32)**

குற்ற அறிவுடன் அல்லது குற்ற உளக்கருத்துடன் செய்யப்படுவதன் காரணத்தினால் மாத்திரம் குற்றமானதாயிருக்கும் செயல் ஒன்று, பல்வேறு ஆட்களால் செய்யப்படும் போதெல்லாம், அத்தகைய அறிவுடன் அல்லது உளக்கருத்துடன் அச்செயலிற் சேரும் அத்தகைய ஆட்களுல் ஒவ்வொருவரும், அந்த அறிவுடன் அல்லது உளக்கருத்துடன் அவரால் மட்டும் அச்செயல் செய்யப்பட்டிருந்தாற் போன்று, அச்செயலுக்குப் பொறுப்பாளியாவார். **(த.ச.கோ. 33)**

ஒருவர் குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில், அரச தரப்பு வழக்குரைஞர் பொது நோக்கத்தை வைத்து குறித்த குழு செயற்பட்டுள்ளதாக குறிப்பிடும் நிலையில் அதற்கான எதிர்வாதமாக பிரச்சினைக்கு உட்பட்ட குற்றம் சாட்டப்பட்டவர் தான் குறித்த பொது குற்றவியல் முயற்சியிலிருந்து தீவிரமாக விலகிக் கொண்டதை எடுத்துக் காட்டுதல் வேண்டும். (பொது நோக்கம்)

குற்றத்தை செய்த பிற்பாடு வெறுமனே மனம் வருந்துவதுதானது எவ்வளவு உண்மையாக இருப்பினும் பொது நோக்கம் குற்றம் சாட்டப்படும் இடத்தில் விட்டு விலகலின் ஒரு எதிர்வாதத்திள் அளவானது போதியதற்றதாக இருக்குமென்பதைக் கவனிப்பது முக்கியமானது. பொது நோக்கத்தின் ஒரு குழுவின் ஒரு துடிப்பான உறுப்பினராக இருக்கும் ஒருவர் குற்றத்தை இழைப்பதற்கு மற்றவருடன்

செல்வதற்கு முன்பதாக அதிலிருந்து விலகுவதினால் பொறுப்பிலிருந்து தப்ப முடியும். செயற்பாடு இல்லாமல் வெறுமனே மனம் வருந்துவது எவ்வாறாயினும் இன்னும் தரப்பிருக்கு குற்றச்சாட்டுகைக்கும் குற்ற நிருபிப்புக்கும் இடம் வைக்கும்.

செயல்விளைவுடன் இருப்பதற்கு விலகிச் செல்லும் தரப்பானது செய்யப்பட்டவற்றின் மீது தங்கியிருப்பதிலிருந்து ஏனையோரையும் தடுப்பதற்கு துடிப்பாக நாடி நிற்க வேண்டும். இரண்டாம் தரப்பின் பின்வாங்குகை தொடர்பில் குற்றமிழைப்பவருடனான ஏதும் தொடர்பாடலானது அவர்கள் தொடர்ந்தும் செய்வார்களாயின் பின்வாங்கும் தரப்பானது மேலதிக எந்தவித உதவியையும் பொது நோக்கத்திற்காக ஏனைய தரப்பின் மீது வழங்காது என்ற அறிவித்தலாக அது இருக்க வேண்டும்:

- குற்றத்திற்கு துணையாக இருப்பவர் குற்றம் செய்யும் பிரதானமானவருக்கு மதியுரை அல்லது தூண்டுதலை மாத்திரம் வழங்குபவராக இருப்பின் அவர் ஏனைய தரப்புகளுக்கு தனது பின்வாங்குகை ஆகக் குறைந்தது தொடர்பாடல் செய்ய வேண்டும்.
- சட்டத்திற்கு துணை போகிறவர் பிரதான குற்றமிழைப்பவருக்கு குற்றம் செய்வதற்கான வழிவகைகளை வழங்குபவராக இருப்பின் குற்றத்திற்கு துணைபோகிறவர் சிந்திக்கத்தக்க முறையில் நடுநிலையாக வேண்டும் அல்லது ஆகக் குறைந்தது தான் கொடுத்த உதவிகளை நடுநிலையாக்குவதற்கான எல்லா நியாயமான படிநிலைகளையும் ஆகக் குறைந்தது எடுக்க வேண்டும்.
- அநேகமான பாரதூரமான விடயங்களில் உடல் ரீதியான தலையீடு அல்லது பொலிசாரை அழைத்தல் என்பவற்றில் ஒரு செயல்விளைவுள்ள பின்வாங்குகையாக அது இருக்க முடியும்.

அதிகாரமளிக்கப்படாத அல்லது இணங்கப்படாத ஏதோ ஒன்றைச் செய்வதன் மூலம் பொதுநோக்கிலிருந்து பங்குபற்றுனர்களில் ஒருவர் வேண்டுமென்றே விலகிவருவாராயின் அந்தப் பங்குபற்றுனர் மாத்திரம் பின்விளைவுகளுக்குப் பொறுப்பாக இருப்பார்.

## [5.5.10] பொறியில் <u>சிக்கவைத்தல்</u>

### [5.5.10.1] பொது

ஒரு ஆண் தான் செய்திருக்க முடியாத அல்லது செய்ய விரும்பாத குற்றவியல் தவறொன்றை சட்டத்தை அமுல்படுத்தும் உத்தியோகத்தர் ஒருவரின் தூண்டுதலால் செய்யுமிடத்து அது சிக்கவைத்தல் என்றவாறு அமைகின்றது.

ஒரு குற்றத்தீர்ப்பினை பெறுவதற்காக வேண்டிய சான்றினை உருவாக்கும் நோக்கில் அதற்கான தவறொன்றை புரியும் பொருட்டு உரிய சந்தர்ப்பம் உருவாக்கப்படும் பட்சத்தில்தான் இந்த ''சிக்கவைத்தல்'' செயற்பாடு ஏற்படுகின்றது. இதில் ஏமாற்றுதல் செயற்பாடு ஓரளவு கட்டாயம் நடைபெறுவதுடன், அங்கு சிலவேளை அதனை மேற்கொள்ளும் குறித்த சட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர் கூட குறிப்பிட்ட சட்டவிரோத நடவடிக்கையில் வெளித்தோற்றத்தில் தொடர்புபடுவார்.

இச்சிக்கவைத்தலானது, பெரும்பாலும் குற்றவியல் குற்றச்சாட்டுக்களுக்கானதோர் பாதுகாப்பினை வழங்குவதுடன் இச்செயற்பாட்டின் போது பொலிஸ் உத்தியோகத்தர்ளும் எதிராளியும் அவ்வாறு கூறப்படும் குற்றத்துக்கு முன்பதாக தொடர்புகளை வைத்துக் கொள்வதை அடிப்படையாகவும் அமைகின்றது. ஒரு குற்றத்தை புரியும் பொருட்டு சட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர்கள் கட்டாயப்படுத்தலையும், தந்திரோபாயங்களையும் ஒருவர் மீது திணிக்கும் போது வழமையான சிக்கவைத்தல் நிகழ்வு நடைபெறுகின்றது. இதனடிப்படையில் பார்க்கும் போது, குற்றவியல் சட்டத்தின் நோக்கத்தை அடையும் பொருட்டானதோர் அம்சமாகத்தான் ஒருவர் சாதாரணமாக செய்திருக்க முடியாத அல்லது செய்ய விரும்பாத குற்றமொன்றை சட்டஅமுலாக்கல் உத்தியோகத்தர்கள் தூண்டுதல் காரணமாக செய்திருக்கின்றார் என்ற விடயம் அமைகின்றது.

இவ்வாறான அம்சங்கள் காரணமாக இங்கு பயன்படுத்தப்படும் முறைமைகள்/ துஷ்பிரயோகத்துக்கு இட்டுச் செல்ல முடியும் என்ற கவலை தெரிவிக்கப்படுவதுடன், இவ்வாறான சூழலில் மக்களால் தாம் ஏலவே விரும்பாத குற்றச் செயல்களைப் புரிவதற்கான நியாயமற்ற தூண்டுதலும் ஏற்படுகின்றது.

### [5.5.10.2] புறநிலை, அகநிலை மதிப்பீடு

குற்றம் சாட்டப்பட்டவர் ஒருவருக்கு எதிராக பெறப்படும் சான்றுகள் தொடர்பில் அவ்வாறான சிக்கவைத்தல் செயற்பாடொன்று நிகழ்ந்துள்ளதா என்பதை கண்டறியவும் அல்லது/ மற்றும் அவ்வாறான சிக்கவைத்தல் ஊடாக பெறப்படும் சான்றுகள் குற்றம் சாட்டப்பட்டவருக்கெதிராக அனுமதிக்கப்படலாமா என்ற விடயத்தை கண்டறியும் பொருட்டு பக்கசார்புள்ள அல்லது பக்கசார்பற்ற பரீட்சித்தலை வித்தியாசமான நியாயாதிக்கங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

- **புறநிலை தரநிர்ணயம்** : இதன் கீழ், குற்றம் சாட்டப்பட்டுள்ள எதிராளி ஒருவர் சிக்கவைத்தலினூடாக சான்றினை முன்வைக்கும் போது, ஒரு சட்ட உத்தியோகத்தரின் அவ்வாறான செயற்பாடுகள் சாதாரணமாக சட்டத்தை மதிக்கும் நபர் ஒருவரை குற்றச் செயலொன்றைப் புரிவதற்கு தூண்டப்பட்டிருக்கலாமா என்பதை யூரர்கள் அல்லது தலைமை தாங்கும் அதிகாரி தீர்மானிக்கின்றார்.
- **அகநிலை தரநிர்ணயம்** : இதன் கீழ். குற்றம் சாட்டப்பட்டுள்ள எதிராளி ஒருவர் சிக்கவைத்தலினூடாக சான்றினை முன்வைக்கும் போது, ஒரு சட்ட உத்தியோகத்தரின் தூண்டுதல்கள் எவ்வாறிருப்பினும் கூட, குற்றம் சாட்டப்பட்டுள்ள எதிராளிக்கு குறித்த குற்றத்தை செய்வதில் அவரிடம் இருந்து வந்த மனப்போக்கானது அக்குற்றத்தை புரிந்ததற்கான பொறுப்பினை ஏற்க வைத்துள்ளதென யூரர்கள் அல்லது தலைமை தாங்கும் அதிகாரி தீர்மானிப்பார்.

| | | |
|---|---|---|
| மருந்தகமொன்றில் வீதிக் கொள்ளையாளர்களால் மேற்கொள்ளப்பட்ட கொள்ளையின் போது அதனை பார்த்துக் கொண்டிருந்ததற்காக ஜோ என்பவர் குற்றம் சாட்டப்படுகின்றார். | ஸ்மித் எனப்படுபவர் ஜோவின் நண்பர் என்பதுடன் பாதாள உலக பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் ஆவார். தன்னை இக்கொள்ளையில் ஈடுபடும் படி கூறி, இல்லையேல் கொள்ளையர்கள் தன்மீது பழியெடுக்கும் எனக்கூறி ஸ்மித் அதில் சிக்கவைத்து அதனூடாக ஏமாற்றியதாக ஜோ கூறுகின்றார். | புறநிலை வாதமொன்றை முன்வைக்கும் போது குறித்த ஸ்கிம்மின் செயற்பாடானது சட்டத்தை மதிக்கும் பிரஜையொருவரை கொள்ளையொன்றில் ஈடுபட தூண்டப்பட்டுள்ளதா என்பதை யூரர்கள் தீர்மானிக்கும். |
| சிக்கவைத்தல் தொடர்பில் அகநிலை வாதமொன்றை முன்வைக்கும் போது, வழக்குத் தொடுனரானவர், குறித்த குற்றச் செயலில் ஜோவிற்கு இருந்த விருப்பம் பற்றியும் அவருக்கிருந்த முன்னைய குற்றத்தீர்ப்புகள் பற்றியும் சான்றுகளை முன்வைக்ககலாம். | இதன்போது ஜோ என்பவர், தான் சொந்த விருப்பத்தில் இக்கொள்ளையில் ஈடுபட்டாரா என்பதையன்றி ஸ்கிம்மின் செயற்பாடுகளைப் பற்றி யூரர் சபை தீர்மானிக்க வேண்டியுள்ளது. | சிக்கவைத்தலை தனக்குரியதோர் வாதமாக முன்வைக்கும் போது அதன் அகநிலை, புறநிலை என்பவை முக்கியத்துவம் பெறுகின்றன. |

### [5.5.10.3] சிக்கல் வைத்தல் தொடர்பான ஏனைய உதாரணங்கள்

உதாரணம் 1 : ஜோய் என்பவர் மறைமுகமாக தோன்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு சட்ட விரோதபோதைப் பொருளை விற்றதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளார். குறித்த போதைப்பொருள் தனது சொந்தப் பாவனைக்காகதென அவர் சாட்சியமளிக்கின்றார். ஒரு விருந்தினர் ஒன்றுகூடலின் போது தன்னை சந்தித்த ஒரு அதிகாரி, அவரது தந்தை புற்றுநோயால் பீடிக்கப்பட்டு கடும் நோவினால் அவதியுறுவதாகவும், அதற்காக போதைப் பொருள் தேவைப்படுவதாகவும் பொய் கூறியதன் காரணத்தினால்தான் போதைப்பொருளை விற்றதாகவும் கூறினார். அத்துடன் குறித்த அதிகாரி தான் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் அல்லவென்றும் கூறியுள்ளார்.

இங்குள்ளவாறு, பொலிஸ் உத்தியோகத்தரின் செயற்பாடு ''சிக்கவைத்தலுக்குள்'' அமையாது. குறித்த அதிகாரி ஜோய்க்கு சட்டத்தை மீறும் சந்தர்ப்பமொன்றை வழங்கினார். ஆனால் குறித்த அதிகாரி மிதமிஞ்சிய தீவிரமான நடத்தையில் ஈடுபடவில்லை.

உதாரணம் 2 : அனீ என்பவர் சட்டவிரோத போதைப் பொருளை மறைமுகமாகத் தோன்றும் பொலிஸ் உத்தியோகத்தருக்கு விற்றதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளார். அனீ சாட்சியமளிக்கையில்

குறித்த போதைப் பொருள் தனது சொந்தப் பாவனைக்கானதென கூறுகின்றார். குறித்த பொலிஸ் அதிகாரி தொடர்ச்சியாக மூன்று வாரங்களுக்கும் மேலாக தனது வசிப்பிடத்துக்குப் பக்கத்தில் தன்னை சந்தித்து, தனது தாயார் கடுமையாக நோய்வாய்ப்பட்டுள்ளதாகவும், அவரது உடல் வலியைக் குறைப்பதற்காக போதைப் பொருள் தேவைப்படுவதனால் அதனை விலைக்கு வாங்க வேண்டியுள்ளதாகவும் பல முறை கெஞ்சிக் கேட்டுள்ளார். ஆயினும் தான் தொடர்ந்து மறுத்து வந்ததாகவும் கூறியுள்ளார். மேலும் இவ்வுத்தியோகத்தரின் தாயின் உடல் வலியை இந்த போதைப் பொருள் நீக்கிவிடும் என்றும், அதனால் அவர் நல்நிலை பெறுவார் எனவும் கூறியபோது, அவர் மனமிறங்கி போதைப் பொருளை விற்றதாகவும் கூறியுள்ளார்.

இதன் பின்பு அனீ உடனடியாக கைது செய்யப்பட்டார். மறைமுகமாகத் தோன்றிய இந்த பொலிஸ் உத்தியோகத்தரின் விடாப்பிடியான முயற்சிகளும், உண்மையற்றவைகளும் சிக்கவைத்தலொன்றை எடுத்தியம்புவதற்கான மிகவும் தீவிரத்தன்மையொன்றை முன்வைப்பதனால், இந்நிலையானது 'குற்றமற்றவர்' என்ற தீர்ப்பின் முடிவுக்கு இட்டுச் செல்லவும் கூடும்

### [5.5.10.4] சிக்கவைத்தல் ரொடர்பான ஆங்கிலச் சட்டம்

ஆங்கிலச் சட்டத்தில் உள்ளவாறு தண்டனை வழங்குவதில் கனிசமான குறைப்பை வழங்கினாலும் கூட இந்தவித சிக்கலுக்குரிய பாதுகாப்பு எதுவும் இல்லையென ஏற்றுக் கொண்டுள்ளது. (R v sang (1980) AC 409) வழக்கைப் பார்க்கவும். எனினும் இதுநடுநிலையானது, நாட்டுப் பிரஜைகளை சட்விரோத செயற்பாடுகளில் ஈ,டுபடுவதற்கான தூண்டுதலை ஏற்படுத்தி அதன்பின்பு, அரச முகவர்கள் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு வழிவகுத்து நீதிமன்ற நடவடிக்கை வழிமுறையை துஷ்பிரயோகம் செய்யக்கூடியதொன்றென கருதப்படுகின்றது. அரசினால் முன்வைக்கப்படும் இவ்வாறான சிக்கவைத்தல் செயற்பாடானது பெரும்பாலும் சட்ட நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கும் நிலைமைக்கே இட்டுச்செல்கின்றது.

சிக்கவைத்தல் தொடர்பான முன்னணி ஆங்கில வழக்கொன்றான R V loosely (2001) UKHL 53 ஐ குறிப்பிடலாம். இங்கு, மறைமுகமாத் தோன்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை மட்ட கொள்வனவு நடவடிக்கையின் போது இடம்பெற்றுள்ள பொலிஸ் செயற்பாடுகள் தொடர்புபட்டுள்ளன. பொலிஸாரின் நடத்தையானது, குற்றமிழைக்கத் தூண்டப்பட்டதா என்றவாறும், எதிராளிக்கு ஒரு குற்றத்தை புரிவதற்கான சாதாரண நிலைமையை உருவாக்குவதை விடுத்து மிகவும் அசாதாரண சந்தர்ப்பத்தை பொலிஸார் முன்வைத்தார்களா என்ற கேள்விகளுக்கான பதிலையும் கோரி நிற்கின்றது.

குறித்த குற்றச் செயல் நடைபெற முன்பு பொலிஸார் நடந்து கொண்ட விதமானது இச்சூழ்நிலையில் அவ்வாறு நடந்திருக்கக்கூடும் என்பதற்கு மேலானதோர் மட்டத்தில் அமைந்திருக்கின்றதென ஏனையோர் அபிப்பிராயப்பட்டிருப்பின் அதுவானது சிக்கவைத்தலை உள்ளடக்காது. எனினும் அதுவானது குறித்த மட்டத்தை மீறிச் சென்றிருப்பின் அரசினாலான செயன்முறைத் துஷ்ரயோகமாக அது நிலை பெறுகின்றது.

### [5.5.11] நீதித்துறை மன்னிப்பு

நீதிமன்றமொன்றின் தீர்ப்பினை அல்லது கட்டளையினை பின்பற்றிச் செய்யப்பட்டது அல்லது தீர்ப்பினால் அல்லது கட்டளையினால் தேவைப்படுத்தப்பட்டதெதுவும், அத்தகைய தீர்ப்பு அல்லது கட்டளை வலுவுடையாயிருக்கையிற் செயற்பட்டதாயின், அத்தகைய தீர்ப்பை அல்லது கட்டளையைச் செய்ய நீதிமன்றத்திற்கு நியாயாதிக்கம் இல்லாதிருப்பினும் கூட அச்செயலைச் செய்யும் ஆள் அறிந்திருந்தும் அத்தகைய நியாயதிக்கத்தை உடையதாயிருந்ததென நல்லெண்ணத்துடன் நம்பியிருப்பின், அது தவறல்ல. **(தண்டனைச் சட்டக் கோவை பிரிவு 71)**

### [5.5.12] சட்டத்தின் பிழை

சட்டப்படி நியாயமுள்ள அல்லது சட்டப்பிழை காரணமாகவல்லாது நிகழ்வுப்பிழை காரணமாக தமக்கு அது சட்டப்படி நியாயமானதாகும் என நல்லெண்ணத்துடன் நம்பும் அனைவராலும் செய்யப்பட்டதெதுவும் தவறல்ல. **(தண்டனை சட்டக் கோவை பிரிவு 72)**

### [5.5.13] ஆற்றலின்மை

எட்டு வயதுக்குட்பட்ட பிள்ளையொன்றினால் செய்யப்படும் எதுவும் தவறல்ல. **(தண்டனை சட்டக்கோவை பிரிவு 75)**

எட்டு வயதிற்கு மேற்பட்டதும் பன்னிரண்டு வயதிற்குட்பட்டதும் குறிப்பிட்ட சந்தர்ப்பமொன்றில் தனது நடத்தையின் தன்மையையும் விளைவினையும் சீர்தூக்கிப்பார்ப்பதற்குப் போதிய விளக்க முதிர்ச்சியடையாததுமான பிள்ளையொன்றினால் செய்யப்படும் எதுவும் தவறல்ல. **(தண்டனை சட்டக்கோவை பிரிவு 75)**

### [5.5.14] சித்தசுவாதீனமின்மை

செயலொன்றைச் செய்யும் நேரத்தில், சித்த சுவாதீனமின்மை காரணமாக அச்செயலின் தன்மையினையேனும் அல்லது தான் செய்தது பிழையானது அல்லது சட்டத்திற்கு முரணானது என்பதையேனும் அறிந்து கொள்ள இயலாத ஆளொருவரினால் செய்யப்படுமெதுவும் தவறல்ல. **(தண்டனை சட்டக்கோவை பிரிவு 77)**

சித்தசுவாதீமின்மையை இறைஞ்சும் போதும், அதனை எதிர்த்தரப்பு வாதமாக முன்வைக்கும் போது பின்வரும் விடயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

- குறித்த செயல் நிகழ்ந்த நேரம்
- குற்றம் சாட்டப்பட்டவரின் சீரற்ற மனோநிலை
- தான் செய்யும் செயலின் தன்மையை அறிந்து கொள்ள/ புரிந்து கொள்ள முடியாத மற்றும்
- அது பிழையா அல்லது சட்டத்திற்கு முரணானதா என்பதுவும்

## [6] நியாயாதிக்கம்

### [6.1] நீதிவான் நீதிமன்றங்கள்

இலங்கையிலுள்ள நீதிவான் நீதிமன்றங்கள் சுருக்க முறை குற்றவியல் நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ளன. இது குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை பிரிவு 9 இல் சொல்லப்படுகிறது:

*இச் சட்டக் கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் அவற்றுக்கு இணங்கவும் நீதவான் நீதிமன்றம் ஒவ்வொன்றும்—*

*(அ) அதன் இட நியாயதிக்கத்திற்குள்ளாக முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ புரியப்பட்டனவும், இச்சட்டக்கோவை மூலம் அல்லது வலுவில் உள்ள வேறு ஏதேனும் சட்டத்தின் மூலம் நீதிவான் நீதிமன்றம் ஒன்றினால் அல்லது மாவட்ட நீதிமன்றம் ஒன்றினால் நீதிநெறிக் கவனத்துட்படுத்தப்படக்கூடிய தவறுகள் எனக் கூறப்பட்டவையுமான தவறுகளுக்கான எல்லாக் குற்றவழக்குகளையும் சுருக்க முறையில் விசாரித்து விளங்கி, தீர்மானித்து முடிவாக்குவதற்குத் தத்துவமும் அதிகாரமும் கொண்டதாக இருத்தல் வேண்டும் என்பது அவ்வாறு செய்யும்படி இத்தால் தேவைப்படுத்தவும்படுகிறது.*

*(ஆ) நியாயாதிக்கம் — பின்வரும் விடயங்களில் நியாயதிக்கம் கொண்டிருக்க வேண்டும்; அதாவது:*

*(i) அதன் இடை நியாயதிக்கத்திற்குள்ளாக முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ புரியப்பட்ட அல்லது புரியப்பட்டுள்ளனவாகச் சார்த்தப்பட்ட எல்லாத் தவறுகளையும் அல்லது எந்தத் தவறுகள் தொடர்பில் விசாரிப்பதற்கு அத்தகையன நீதிமன்றததிற்கு இச்சட்டக்கோவையினால் நியாயதிக்கம் வழங்கப்பட்டுள்ளதோ அந்தத் தவறுகள் எல்லாவற்றையும் விசாரணை செய்வதற்கும், அத்தகைய தவறுகளோடு தொடர்புபட்ட எல்லாச் சாட்சிக்காரர்களையும் கட்டளை விட்டு அழைப்பதற்கும், அவர்களை விசாரிப்பதற்கு, எல்லாக் குற்றவாளிகளையும் தவறாளர்களையும் பிடிப்பதற்கும் கட்டளைவிட்டு அழைப்பதற்கான ஆணைப்பத்திரங்களையும் ஏனைய மன்றாணைகளை விடுப்பதற்கும் சட்டத்திற்கு இணங்க அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்வதற்கும; அத்துடன்*

*(ii) களவாடப்பட்ட எவையேனும் பண்டங்கள் வைக்கப்பட்டுள்ளனவென அல்லது மறைத்து வைக்கப்பட்டுள்ளன எனச் சார்த்தப்பட்ட அல்லது எந்தப் பண்டங்களை, பொருட்களை அல்லது ஆதனங்களைக் கொண்டு அல்லது எந்தப் பண்டங்கள், பொருட்கள், அல்லது ஆதனங்கள் தொடர்பில் தவறு எதுவும் புரியப்பட்டுள்ளதோ அந்தப் பண்டங்கள், பொருள்கள், அல்லது ஆதனங்கள் வைக்கப்பட்டுள்ளனவெனச் அல்லது மறைத்து வைக்கப்பட்டுள்ளனவெனச் சார்த்தப்பட்ட இடங்கள் எல்லாவற்றையும் தேடுதல் செய்வதற்கு அல்லது தேடுதல் செய்விப்பதற்கு ஆணைப்பத்திரங்கள் விடுப்பதற்கும் சமாதானதத்தைப் பேணுவதற்காக அல்லது நன்னடத்தையைக் கடைப்பிடிப்பதற்காக பிணைப் பொறுப்பு கொடுக்கும்படி சட்டத்திற்கு இணங்க ஆட்களைத் தேவைப்படுத்துவதற்கும்; அத்துடன்*

*(iii) எவரேனும் ஆள் ஏதேனும் மறியற்சாலையில் அல்லது ஏதேனும் மனநோய், தொழுநோய் அல்லது மருத்துவமனையில் இருக்கும்போது இறத்தல், அல்லது வன்முறையால் அல்லது விபத்தின் விளைவாக இறப்பு எய்துதல் அல்லது திடீரென இறந்துபொதல் அல்லது எவ்வாறு இறந்தார் என அறியப்படாத நிலையில் எவரேனும் ஆளின் உடல் காணப்படுதல் ஆகிய விடயங்கள் பற்றி விசாரணை செய்வதற்கும் நியாயதிக்கம் கொண்டதாக இருக்க வேண்டும்.*

நீதிவான் நீதிமன்றங்களின் உடனடிக் குற்றவியல் நீதியாட்சியானது குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் பிரிவு 10 க்கு உட்பட்டுள்ளது:

*இச் சட்டக்கோவையில் ஏனைய ஏற்பாடுகளுக்கமைவாக தண்டனைச் சட்டக்கோவையின் கீழான தவறு எதுவும் நியமித்த திகதியின் முன்னர் புரியப்பட்டிருப்பினும் சரி அல்லது அதன் பின்னர் புரியப்பட்டிருப்பினும் சரி ஏதேனும் சட்டத்தின் வேறுவகையாகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர—*

*(அ) மேல் நீதிமன்றத்தினால்; அல்லது*

*(ஆ) நீதவான் நீதிமன்றத்தினால் விளங்கப்பட முதலாம் அட்டவணையின் எட்டாம் நிரையில் அத்தவறு காட்டப்பட்டுள்ளவிடத்து ஒரு நீதிவான் நீதிமன்றத்தினால் விளங்கப்படலாம்.*

## [6.2] மேல் நீதிமன்றங்கள்

மேல் நீதிமன்றமானது இலங்கையின் ஒவ்வொரு அரசுகளிலும் உயர்ந்த நீதிமன்றமாக இருப்பதுடன் அது சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகளை விசாரிக்கிறது.

குற்றவியல் சட்டக்கோவை பிரிவு 12 இன் பிரகாரம் மேல் நீதிமன்றமானது குற்றப்பத்திரிகை தாக்குதல் செய்யப்பட்ட வழக்குகளை மாத்திரமே எடுத்துக்கொள்கிறது:

*இச் சட்டக்கோவையினதும் எழுத்திலான வேறு எந்தச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக, மேல் நீதிமன்றத்தின் முன்னர் விளங்கப்படுவதற்காக, சட்டத்துறை தலைமையதிபதியினால் அல்லது அவரது வேண்டுதலின் பேரில் அந்தக் குற்றம் சாட்டப்பட்ட ஆளுக்கு எதிராக குற்றம் பகரப்பட்டிருந்தாலொழிய ஏதேனும் தவறினை அந்நீதிமன்றம் நீதிநெறிக்கவனத்திற்குட்படுத்தலாகாது.*

நீதித்துறைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவானது இலங்கையின் மேல் நீதிமன்றங்கள் மீது பின்வரும் நியாயாதிக்கத்தை வழங்குகிறது:

*(1) பின்வருவன தொடர்பில் எவரேனுமாளுக்கெதிராக குற்றப்பகர்வின் மூலம் நீதிமன்றத்தில் தொடுக்கப்படும் குற்ற வழக்குகள் எல்லாவற்றையும் எழுத்திலான சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் விசாரித்து, விளங்கித் தீர்மானிப்பதற்கு மேல் நீதிமன்றமானது சாதாரணமாகத் தத்துவமும் அதிகாரமும் உடையதாதல் வேண்டும் என்பதோடு, அவ்வாறு விசாரித்து, விளங்கித் தீர்மானித்தல் வேண்டும் என இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றது. (அ) இலங்கையில் முழுமையாக அல்லது பகுதியளவில் புரியப்பட்ட ஏதேனும் தவறு; (ஆ) இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளில் அல்லது அவற்றின் மீது எவரேனும் ஆளினால் புரியப்பட்ட ஏதேனும் தவறு; (இ) இலங்கையின் வான்வெளியில் எவரேனுமாளினால் புரியப்பட்ட ஏதேனும் தவறு; (ஈ) ஆழ்கடலில் எவரேனுமாளினால் புரியப்பட்ட ஏதேனும் தவறு, நாட்டிடைச் சட்டத்தின் படி கடற்கொள்ளையாக அத்தவறு இருக்குமிடத்து; (உ) இலங்கையில் பதிவுசெய்யப்பட்டதும் எத்தகையதுமான வகுதியைச் சேர்ந்ததுமான ஏதேனும் கப்பலில் அல்லது வானூர்தியில் அல்லது ஏதேனும் கப்பல் தொடர்பாக அல்லது வானூர்தி தொடர்பாக எவரேனும் ஆளினால் எங்காயினும் புரியப்பட்ட ஏதேனும் தவறு; அல்லது (ஊ) எத்தகையதுமான வகுதியைச் சேர்ந்த ஏதேனும் கப்பலில் அல்லது வானூர்தியில் அல்லது ஏதேனும் கப்பல் தொடர்பாக அல்லது வானூர்தி தொடர்பாக இலங்கைப் பிரசையாகவுள்ள எவரேனுமாளினால் இலங்கையின் ஆள்புலத்துக்கு வெளியேயுள்ள ஏதேனும் இடத்தில் எங்காயினும் புரியப்பட்ட ஏதேனும் தவறு.*

*(2) வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய மேல் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் - (அ) ஓராமுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டதும் இலங்கையில் முழுமையாக அல்லது பகுதியளவில் புரியப்பட்டதுமான ஏதேனும் தவறு தொடர்பில், அத்தகைய தவறு முழுமையாகவோ பகுதியளவிலோ எந்த நீதி நிருவாக வலயத்தில் புரியப்பட்டதோ அந்த நீதி நிருவாக வலயத்தில் நடாத்தப்படும் மேல் நீதிமன்றத்தால் சாதாரணமாகப் பிரயோகிக்கப்படுதல் வேண்டும். (ஆ) ஓராம் உட்பிரிவின் (ஆ) தொடங்கி (ஊ) வரையிலான பந்திகளிற் குறிப்பீடு செய்யப்பட்டதும் ஏதேனும் இடத்தில் புரியப்பட்டதுமான ஏதேனும் தவறு தொடர்பில், பிரதம நீதியரசரின் கைப்பட்ட பணிப்பின் மூலம் அவரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட நீதிநிருவாக வலயத்தில் நடாத்தப்படும் மேல் நீதிமன்றத்தால் பிரயோகிப்படுதல் வேண்டும்.*

*ஆயின், பிரதம நீதியரசர் தக்கதென அவர் கருதினால், அவரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஏதேனும் நீதிநிருவாக வலயத்தில் நடாத்தப்படும் மேல் நீதிமன்றமே, (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டதும் வேறேதேனும் நீதிநிருவாக வலயத்தில் நடாத்தப்படும் மேல் நீதிமன்றத்தினால் சாதாரணமாக விளங்கப்பட்டுத் தீர்மானிக்கப்பட்டிருக்கக் கூடியதுமான ஏதேனும் தவறை விளங்கித் தீர்மானித்தல் வேண்டும் எனத் தம் கைப்பட்ட எழுத்து மூலம் பணிக்கலாம்.*

மேல் நீதிமன்றத்தின் எல்லா விளக்கங்களும் யூரருமின்றி தனியாக அமரும் மேல்நீதிமன்ற நீதிபதியின் முன்னே இடம்பெறும். **(நீதித்துறைச்சட்டம் பிரிவு 11).**

நீதித்துறைச் சட்டத்தின் பிரிவு 11(2) மேல் நீதிமன்ற விளக்கங்களானவை மேல் நீதிமன்றத்தின் ஒரு நீதிபதி முன்பாக யூரர்களால் இருக்கும் எனத் தீர்மானிக்கிறது:

(அ) 2ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான தவறொன்றில் ஆகக் குறைந்தது ஏதேனுமொன்று; அத்துடன்

(ஆ) குற்றஞ்சாட்டப்பட்டவர் யூரர் சபை மூலம் விளங்கப்பட வேண்டுமென விரும்பும் பட்சத்தில்

மேல் நீதிமன்றமானது தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் முதலாம் அட்டவணையில் எட்டாம் நிரலில் நிரல்படுத்தப்பட்ட குற்றத்தின் கீழான குற்றங்களை விளங்கிக்கொள்வதற்கான நீதியாட்சியைக் கொண்டுள்ளது **(நீதிமன்ற சட்டக்கோவை பிரிவு10(b))**.

## [6.3] மேல் முறையீட்டு நீதிமன்றம்

மேன்முறையீட்டு நீதிமன்றமானது மேல் நீதிமன்றம் மற்றும் நீதவான் நீதிமன்றங்களில் இருந்தான எல்லா முறையீடுகளையும் விசாரிக்கிறது.

அரசியலமைப்பு அல்லது வேறு ஏதேனும் சட்டங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்குட்பட்டு நீதிமன்றமானது பின்வரும் விசேடித்த நீதியாட்சிகளைக் கொண்டுள்ளது:

- அதன் நீதியாட்சியை செயற்படுத்துகையில் கட்டளை, தீர்ப்பு, தண்டனை என்பவற்றை உறுதிப்படுத்தவோ, மறுதலையாக்கவோ, திருத்தவோ மாற்றவோ கூடியதாக உள்ளது. **(உறுப்புரை 139(1))**
- முதற்தடவையில் நீதிமன்றத்தில் ஏற்கனவே எடுத்துக்கொள்ளப்பட்ட சான்றுகளுக்கு மேலும் புதிய மேலதிக சான்றுகளையோ அல்லது குறைநிரப்புகளையோ பெற்றுக்கொள்ளவோ அனுமதிக்கவோ கூடுமாக இருக்கிறது. **(உறுப்புரை 139(2))**
- ஆட்கொணர்வு நீதிப் பேராண்மைகள் தவிர பேராண்மைகளை வழங்குவதற்கு அதிகாரம் கொண்டுள்ளது **(உறுப்புரை 140)**
- சிறைக் கைதிகளைக் கொண்டுவருவதற்கு அல்லது அகற்றுவதற்கான அதிகாரம் **(உறுப்புரை 142)**
- தடை உத்தரவுகளை வழங்குவதற்கான அதிகாரம் **(உறுப்புரை 143)**
- எந்த நீதிமன்றத்தினதும் முதற்தடவையிலான ஏதும் பதிவுகளை பரிசோதித்து பரீட்சிக்க முடியும் **(உறுப்புரை 145)**

## [6.4] உச்சநீதிமன்றம்

இலங்கையின் உச்ச நீதிமன்றம் ஆனது புதிய அரசியலமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்ட பிற்பாடு 1972 இல் உருவாக்கப்பட்டது. உச்ச நீதிமன்றம் பதிவு நீதிமன்றத்தின் அதி உயர்ந்ததும் இறுதியானதுமான நீதிமன்றமாக இருப்பதுடன் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்குட்டு அதன் அதிகாரங்களை செயற்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்படுகிறது, எல்லா கீழ் நீதிமன்றங்களின் மேலும் நீதிமன்றங்களின் தீர்ப்புக்களானவை முன்னுரிமை எடுக்கின்றன. இலங்கை நீதிமுறையானது பொதுச்சட்டம் மற்றும் சிவில் சட்டம் என்பவற்றின் கலப்பாக உள்ளது. மரண தண்டனை போன்ற சில விடயங்களில் தீர்மானமானது கருணை மனுக்களுக்காக குடியரசு ஜனாதிபதிக்கு விடப்படக்கூடும்.

உச்ச நீதிமன்றத்தின் நியாயதிக்கம் பின்வரும் விசேடித்த விடயங்களை உள்ளடக்கியுள்ளது:

- அரசியலமைப்பு விடயங்கள்
- அடிப்படை உரிமைகள்
- இறுதியான மேன்முறையீட்டு சட்ட அதிகாரம் - குற்றவியல் மற்றும் சிவில் விடயங்கள் இரண்டிலும்
- ஆலோசிப்பு சட்ட அதிகாரம்
- தேர்தல் மனுக்கள் (ஜனாதிபதித் தேர்தல்)
- பாராளுமன்ற சிறப்புரிமைகள் மீறுகை
- சட்டத்தின்படி பாராளுமன்றத்தால் கொடுக்கப்படும் நியமிக்கப்படும் ஏனைய விடயங்கள்
- சட்டத்தரணிகளை அனுமதித்தல், பதிதல், நிறுத்தி வைத்தல் அகற்றுதல்.

உறுப்புரை இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 132 பின்வருமாறு கூறுகிறது:

(1) உயர் நீதிமன்றத்தின் பிரதம நீதியரசர் வேறுவிதமாக பணித்தாலொழிய, சாதாரணமாக கொழும்பிலேயே பிரயோகிக்கப்படுதல் வேண்டும். (2) உயர் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் உயர் நீதிமன்றத்தின் பல்வேறு நீதிபதிகளும் வெவ்வேறாக அமர்வதன் மூலம் ஒரே நேரத்தில் வெவ்வேறு கருமங்களில் பிரயோகிக்கப்படலாம். ஆயின், அதன் நியாயாதிக்கம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளுக்கு குறையாதோர் உயர் நீதிமன்றமாக ஒருங்கமர்தல் மூலம் சாதாரணமாக பிரயோகிக்கப்படுதல் வேண்டும். பிரதம நீதியரசர் அவரது அந்த சொந்தப் பிரேரனையில் அல்லது ஏதேனும் கருமத்தை விசாரணை செய்கின்ற இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நீதிபதிகளின் வேண்டுதலின் பேரில் அல்லது சம்பந்தப்பட்ட பிரச்சினை பிரதம நீதியரசரின் அபிப்பிராயத்தில், பொது முக்கியத்துவமும் பொதுசன முக்கியத்துவமும் வாய்ந்ததாக இருக்குமெனின் ஏதேனும் மேன்முறையீட்டுக்கு, நடவடிக்கைக்கு அல்லது கருமத்திற்கு கட்சிக்காரராயுள்ள ஒருவரின் விண்ணப்பத்தின் பேரில் அத்தகைய மேன்முறையீடு, நடவடிக்கை அல்லது கருமம் உயர் நீதிமன்றத்தின் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட நீதிபதிகளைக் கொண்ட தவிசினால் விசாரணை செய்யப்படுதல் வேண்டும்.

மேல் நீதிமன்ற விசாரணை நீதிமன்றத்தில் இருந்தான மேன்முறையீடுகள் ஐந்து அல்லது அதற்கு அதிகமான நீதிபதிகளின் குழாத்தினால் விசாரிக்கப்படும்.

### [6.5] ஏனைய சட்டங்களின் கீழ் செய்யப்பட்ட குற்றங்களுக்கான சட்ட அதிகாரம்

குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை பிரிவு 11 இனால் இது ஒழுங்குபடுத்தப்படுகிறது. இது பின்வருமாறு சொல்கிறது :

*தண்டனைச சட்டக் கோவை தவிர வேறு எந்த சட்டத்தின் கீழான தவறு எதுவும் நியமித்த திகதியின் முன்னர் புரியப்பட்டிருப்பினும் சரி அல்லது அதன் பின்னர் புரியப்பட்டிருப்பினும் சரி ஏதேனும் சட்டத்தில் வேறு வகையாகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர —*

*(அ) அச் சட்டத்தில் அதற்கென ஒரு நீதிமன்றம் குறிப்பிட்டிருக்குமிடத்து—*

*(i) அவ்வாறு குறிப்பிடப்பட்டு இருக்கும் நீதிமன்றம் மேல் நீதிமன்றமாக இருக்குமிடத்து அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஒரு காலத்திற்கான மறியற்தண்டனையால் அல்லது ஆயிரத்து ஐந்நூறு ரூபாய்க்கு மேற்பட்ட பணத்தினால் தண்டிக்கப்படுதற்குரிய தவறு ஒன்றின் விடயத்தில் அவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கும் நீதிமன்றமானது மாவட்ட நீதிமன்றமாக இருக்குமிடத்து மேல் நீதிமன்றத்தினால் விளங்கப்படுதல் வேண்டும்*

*(ii) அவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கும் நீதிமன்றம் நீதவான் நீதிமன்றமாக இருக்குமிடத்து அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத மறியற்தண்டனையால் அல்லது ஆயிரத்து ஐந்நூறு ரூபாக்கு மேற்படாத குற்றப்பணத்தினால் தண்டிக்கப்படுதற்குரிய தவறொன்றின் விடயத்தில் அவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கும் நீதிமன்றம் மாவட்ட நீதிமன்றமாக இருக்குமிடத்து ஒரு நீதவான் நீதிமன்றத்தினால் விளங்கப்படுதல் வேண்டும்*

*(ஆ) அச்சட்டத்தில் அதற்கென ஒரு நீதிமன்றம் குறிப்பிடப்படாதவிடத்து— (i) மேல் நீதிமன்றத்தினால் விளங்கப்படுதல் வேண்டும்; அல்லது (ii) தவறானது, இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத மறியற் தண்டனையால் அல்லது ஆயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்தினால் தண்டிக்கப்படுதற்குரியதாக உள்ளவிடத்து ஒரு நீதவான் நதீமன்றத்தினால் விளங்கப்படுதல் வேண்டும்.*

## [7] விசாரணைக் கட்டம்

### [7.1] குற்றம்சாட்டல்

சட்டத்தரணியானவர் குற்றம்சாட்டப்பட்டவரை தான் பிரதிநிதித்துவம் செய்யும் விடயம் தொடர்பாக அரச வழக்கறிஞருக்கு தகவல் அளித்ததும் உதாரணமாக வழக்கறிஞர் குற்றச்சாட்டுகையின் ஒரு பிரதியையும் குற்றம் சாட்டப்பட்டவரால் செய்து கொள்ளப்பட்டதான ஏதும் எச்சரிக்கை செய்யப்பட்ட கூற்றின் பிரதியையும் சட்டத்தரணிக்கு வழங்குவார்.

இது செய்யப்படாவிடின் சட்டத்தரணி இந்த ஆவணங்களை வழங்கும் படியாக வேண்டுகோள் விடுக்கப்பட வேண்டும்.

குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிரான வழக்கு என்ன எனப் புரிந்துகொள்வதே முதலாவது பணியாகும். இந்தக் குற்றச்சாட்டுகையானது சட்டரீதியாகப் போட்டியிடக்கூடியதா எனப் பார்ப்பதற்கு விமர்சன ரீதியாகப் பரிசோதிக்கப்பட வேண்டுமென்பதுடன் உரிய முறையிலான எதிர் விவாதத்தை தயாரிக்க இயலச் செய்யும் வகையில் போதிய விபரங்கள் வழங்கப்பட்டுள்ளனவா எனப் பார்ப்பதற்காகவும் பரிசோதிக்கப்பட வேண்டும். குற்றச்சாட்டின் தன்மை குறித்து குற்றம்சாட்டப்பட்டவருக்கு அறிவிப்பதற்கு அது தேவையான அளவில் நியாயமானதாக உள்ளதா என அரச வழக்கின் விபரங்களை குற்றச்சாட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் அது அனுப்பப்பட வேண்டியவைகளாவன:

1. குற்றம் நிறைவேற்றப்பட்டதாகச் சொல்லப்படும் நேரம் மற்றும் இடம்
2. யாருக்கும் எதிராகச் செய்யப்பட்டதாயின் அவ்வாறு எதிராகச் செய்யப்பட்ட ஆள்
3. ஏதும் சொத்து தொடர்பில் குற்றம் செய்யப்பட்டிருப்பின் குற்றம் செய்யப்பட்ட சொத்து

குற்றம் சாட்டப்பட்டவர் மீது குற்றம்சாட்டப்படும் குற்றத்தை ஒவ்வொரு குற்றச்சாட்டும் குறிப்பிடும் எனக் குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக்கோவை குறிப்பிடுகிறது. **(குற்றவியல் கோவை பிரிவு 164(1)** குற்றத்தை உருவாக்கும் சட்டமானது அதற்கான விசேடித்த பெயரைக் கொடுக்குமாயின் குற்றமானது குற்றப் பத்திரத்தில் அதன் பெயரினால் மாத்திரமே குறிப்பிடக்கூடியது. **(குற்றவியல் கோவை 164(2))**. குற்றத்தை உருவாக்கும் சட்டமானது அதற்கானவிசேடித்த பெயர் எதனையும் கொடுக்காவிட்டால், குற்றம்சாட்டப்பட்டவருக்கு எதற்காக குற்றம் சாட்டப்படுகிறார் என்ற விடயத்திற்கு குற்றம்சாட்டுவதற்கு குற்றத்தின் அதே வரைவிலக்கணம் குறிப்பிடப்பட வேண்டும். **(குற்றவியல் கோவை 164(3)**

புரியப்பட்டதாகச் சொல்லப்படும் குற்றத்தை தண்டிக்கும் சட்டம் மற்றும் சட்டப்பிரிவு என்பன குற்றத்தில் குறிப்பிடப்படும் குற்றவியல் கோவை 164(4) மற்றும் குற்றம்சாட்டப்பட்ட குற்றத்தை உருவாக்குவதற்கு சட்டத்தால் தேவைப்படுத்தும் எல்லா சட்ட நிபந்தனைகளும் குறித்த விடயத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்ற கூற்றுக்கு சமதையாக இருக்க வேண்டும் என்பதும் ஒரு உண்மையாகும். (குற்றவியல் கோவை பிரிவு 165(5)) மேலும் குற்றமானது விரும்பப்படும்பொழுது வழக்குக்கான கடப்பாட்டுக்கான ஆரம்ப விசாரணையிலோ அல்லது வழக்கு விசாரணையிலோ குற்றம் சாட்டப்பட்டவர் புரியக்கூடிய மொழியில் வாசிக்கப்பட வேண்டும். **(குற்றவியல்கோவை 165(6)).**

*சட்டமா அதிபர் எதிர் பிம்பிரி கொடகே அஜித்லால் (உச்ச நீதிமன்ற வழக்கு sc (spl) la 232/14) இலங்கை அரசியல் யாப்பின் பிரிவின் 128 இன் கீழ், மேன் முறையீடு செய்வதற்கான விஷேட அனுமதியை கோரிநிற்கும் விண்ணப்பமாக இது இருந்தது. குறித்த எதிர் வாதி கொலை குற்றவாளியாக காணப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்டது. வழக்கை விசாரணை செய்த நீதிமன்றத்தின் நீதிபதியானவர், குற்றவியல் நடவடிக்கை சட்டக்கொவையின் 195 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செயல்பட தவறியுள்ளாரா? என்ற கேள்விக்குரிய விடயம் பற்றி கவனத்தில் எடுக்க வேண்டிய நிலை நீதிமன்றத்துக்கு ஏற்பட்டது.. அதாவது, குற்றப்பகர்வின் போது, குற்றம் சாட்டப்பட்டவர் தனக்குள்ள அடிப்படை உரிமையை அங்கீகரித்தவாறு, தன்னை போன்ற யுரர் சபை ஒன்றினால் விளங்கப்பட வேண்டுமென தெரிவு செய்யப்படுகின்றாரா அல்லவா? என்பதை அவரஷிடம் குறித்த நீதிபதி கேட்டறிதல் வேண்டும் என்பதாகும். விளக்க விசாரணை நீதிபதி குற்றம் சாட்டவரிடம் தான் யுரர் சபை ஒன்றினால் விளங்கப்படச் செய்ய வேண்டுமா? என்பதை கேட்டறிய வேண்டிய கடப்பாட்டில் இருக்'க வேண்டியது மாத்திரமல்லாமல், அதை பொருள்படுத்தும் விதத்திலான சட்டபூர்வ உரிமையையும் குற்றம் சாட்டப்பட்டவர் கொண்டுள்ளார் என்பதை குறித்த நீதிாதி குற்றம் சாட்டப்பட்டவருக்கு தெரியப்படுத்தல் வேண்டும். என்பதையும் நீதிமன்றம் கண்டு கொண்டது. இதனை அனுசரிக்கத்தவறியதானது சட்டவிரோதமானது மட்டுமள்ளலாமல், ஒரு சாதாரண ஒழுங்கு முறை அற்ற செயலாகும் என்றும் தீர்மானித்த உச்ச நீதிமன்றம் குறித்த குற்றச்சாட்டுக்கும், தண்டனை தீர்ப்பிற்கும் எதிரான மேன்முறையீட்டை ஏற்றுக் கொண்டது.*

குற்றச்சாட்டானது குற்றம்சாட்டப்பட்டவர் எக்கருமத்திற்காக குற்றம் சாட்டப்பட்டுள்ளாரோ அக்கருமம் பற்றி அவருக்கு விளக்கம் கொடுத்தற்கும் அத் தவறு காலவிதிப்புத் தடைக்குட்பட்டது எனக் காட்டுவதற்கும், நியாயமான அளவு போதியதாக இருக்கும் வண்ணம் சார்த்தப்படும் தவறு புரியப்பட்ட நேரம், தவறு புரியப்பட்ட இடம், என்பன பற்றியும் எவ்வாளுக்கு எதிராக அது புரியப்பட்டதோ அவர் பற்றியும் எப்பொருள் பற்றிப் புரியப்பட்டதோ அது பற்றியும் கூறும் அத்தகைய விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். **(கு.ச.கோ. 165(1))**

குற்றம் சாட்டப்பட்டவர் குற்றமுறையான நம்பிக்கைத் துரோகத்தின் பேரில் அல்லது அசைவுள்ள ஆதனத்தை நேர்மையீனமாகக் கையாடியதன˙பேரில் குற்றம்சாட்டப்படும்போது அத்தவறு விடயத்திற்கு ஏற்றாற்போல எந்த முழு மொத்தப் பணத்தொகை தொடர்பாக அல்லது எந்த முழு மொத்த அளவு தொடர்பாக புரியப்பட்டுள்ளதாகச் சார்த்தப்பட்டுள்ளதோ அந்த முழு மொத்தப்

பணத்தொகையையும் அளவையும் அவற்றுடன் அத் தவறு எத்தேதிகளுக்கிடையில் புரியப்பட்டதாகச் சார்த்தப்படுகிறதோ அத் தேதிகளையும் குறிப்பிட்ட உருப்படிகளையோ அல்லது சரியான தேதிகளையோ குறிப்பிடாமலே குறித்துரைத்தல் போதுமானதாதல் வேண்டும். அவ்விதம் வகுககப்பட்ட குற்றச்சாட்டு 714 ஆம் பிரிவின் கருத்தெல்லைக்குட்பட்ட ஒரு தவறுக்கான குற்றச்சாட்டாக கருதப்படுதல் வேண்டும். ஆயின் அத்தேதிகளில் முதல் தேதிக்கும் கடைசித் தேதிக்கும் இடையிலான காலம் ஓராண்டை விஞ்சுதலாகாது. **(கு.ச.கோ. 165(2))**

164 ஆம் பிரிவிலும் இப் பிரிவின் முற்போந்த உட்பிரிவுகளிலும் குறிப்பிடப்பட்ட விபரங்கள் குற்றம் சாட்டப்பட்டவர் எக்கருமத்திற்காக குற்றம் சாட்டப்பட்டுள்ளாரோ அக்கருமம் பற்றி அவருக்குப் போதிய விளக்கம் கொடுக்காத அத்தகையதாக அவ் விடயத்தின் தன்மை இருக்கும் போது அவ் குற்றச்சாட்டானது அந்நோக்கத்திற்குப் போதியதாக இருக்கும் வண்ணம் சார்த்தப்பட்ட தவறு எவ்விதத்தில் புரியப்பட்டது என்பது பற்றி அத்தகைய விபரங்களையும் கொண்டிருத்தல் வேண்டும். **(கு.ச.கோ. 165(3))**

ஒவ்வொரு குற்றச்சாட்டிலும் தவறொன்றை விபரிப்பதற்குப் பயனப்டுத்தப்பட்ட சொற்களானவை தவறு எச்சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படற்பாலதானதோ அச்சட்டத்தினால் அவற்றுக்கு முறையே தரப்பட்டுள்ள பொருளில் பயன்படுத்தப்பட்டிருப்பனவாக கருதப்படுதல் வேண்டும். குற்றவியல் சட்டக்கோவை பிரிவு 165(4) குற்றச் சாட்டில் கூறப்பட வேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட்ட தவறையோ அல்லது விபரங்களையோ கூறுவதிலான பிழையெதுவும் அத்தவறை அல்லது விபரங்களைக் கூறாது விட்டமை எதுவும் குற்றம் சாட்டப்பட்டவர் அத்தகைய பிழையினால் அல்லது கூறாதுவிட்டமையினால் தவறாக வழிநடத்தப்பட்டாலொழிய அவ் வழக்கின் எக்கட்டத்திலும் முக்கியமானதாக கருதப்படுதலாகாது. **(குற்றவியல் சட்டக்கோவை பிரிவு 166)**

தீர்ப்பு எடுத்து மொழியப்படுவதற்கு முன்னர் எந்நேரத்திலும் அல்லது மேல் நீதிமன்றத்தின் முன்னர் யூரர்சபையினால் நடாத்தப்படும் விளக்கங்களின் விடயத்தில் யூரர்சபை துணிவுரை கூறப்படுவதற்கு முன்னர் குற்றப்பகர்வு அல்லது குற்றச்சாட்டு எதனையும் நீதிமன்றம் மாற்றலாம். **(குற்றவியல் கோவை 167(1)** அத்தகைய மாற்றம் ஒவ்வொன்றும் குற்றம்சாட்டப்பட்டவருக்கு வாசித்துக் காட்டப்பட்டு விளக்கப்படுதல் வேண்டும். **(குற்றவியல் சட்டக்கோவை பிரிவு 167(2))**. இலங்கை குற்றவியல் சட்டத்தில் இது மிகவும் முக்கியமானதாக இருப்பதுடன் பயிற்சியாளர்களும் இவ் உண்மை குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஒரு குற்றச்சாட்டானது திருத்தப்பட்டு விட்டு குற்றம்சாட்டப்பட்டவருக்கு வாசித்து விளக்கம் செய்யப்படாவிட்டால் இந்த விடயமானது மேன்முறையீட்டுக்கு எடுத்துக்கொள்ளப்படக்கூடியது.

*பொத்தன திஸ்ஸமஹாராம மற்றும் 15 பேர் எதிர் திஸ்ஸமஹாராம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் சட்ட மா அதிபர் (உச்ச நீதிமன்ற வழக்கு SC (SPL) LA NO 289 109)*

*இலங்கை அரசியலமைப்பின் பிரிவு 128 (2) இன் கீழ், மேன்முறையீடு செய்வதற்கான விஷேட அனுமதியினைக் கோரி நிற்கும் விண்ணப்பமாக இது இருந்ததுடன், இலங்கையின் சட்டத்தின் கீழ் குற்றப்பத்திரம்/ குற்றப்பகர்வு தொடர்பானதோர் திருத்தத்துடன் தொடர்புபட்டதாகவும் இருந்தது. இவ்வழக்கானது கீழ்வரும் விடயங்களை உறுதிப்படுத்துகின்றது. குற்றப்பத்திரம் திருத்தப்பட்டிருபட்டிருப்பின் (கு.ந.ச.கோ- பிரிவு 167 (1)(2)) அதனை குற்றம் சாட்டப்பட்டவருக்கு வாசித்துக் காட்டப்படல் வேண்டும். என்பதுடன் அத்திருத்தமும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். அது இலங்கைச் சட்டத்தின் கீழ் வரும் தேவையொன்றாகவும் உள்ளது. அதாவது குற்றப்பத்திரம் அல்லது குற்றப்பகர்வு திருத்தப்பட்டிருப்பின், அவ்வாறு திருத்தப்பட்ட குற்றப்பத்திரம் அல்லது குற்றப்பகர்வினை குற்றம் சாட்டப்பட்டவருக்கு வாசித்து, விளக்கிகக்காட்டப்படல் வேண்டும். இதனை செய்யத்தவறுவதானது, குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிரான விதத்தில் வழக்கு பிழையாக அமைந்துள்ளது என்பதாகும்.*

குற்றப்பகர்வு ஒன்றில் ஒரு குற்றச்சாட்டிற்காக இன்னொன்றைப் பதிலீடு செய்தலும் அல்லது குற்றப்பகர்வு ஒன்றில் புதிய குற்றச்சாட்டொன்றை சேர்த்தலும் அத்துடன் நீதிவான் நீதிமன்றம் ஒன்றின் ஒரு குற்றச்சாட்டுக்காக இன்னொன்றைப் பதிலீடு செய்தலும் அல்லது புதியதொரு குற்றச்சாட்டைச் சேர்த்தலும் இப்பிரிவின் கருத்தெல்லைக்குள் குற்றப்பகர்வை அல்லது குற்றச்சாட்டை மாற்றுவதாகக் கருதப்படுதல் வேண்டும் **(குற்றவியல் சட்டக்கோவை 167(3)).**

எந்த ஆளும் குற்றம் சாட்டப்படும் ஒவ்வொரு துல்லியமான குற்றத்திற்குமாக ஒரு பிறிதான குற்றச்சாட்டுகை இருக்குமென்பதுடன் அவ்வாறான ஒவ்வொரு குற்றச்சாட்டுகையும் பிரிவுகள் 174, 175, 176 மற்றும் 180 போன்ற பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தவிர ஏனையவற்றில் தனித்தனியாக விசாரிக்கப்படும். சொல்லப்பட்ட இப் பிரிவுகள் கடுமையாகவோ அல்லது இணைப்பாகவோ பிரயோகிக்கப்படக்கூடியவை **(குற்றவியல் கோவை, பிரிவு 173)**

ஒரு வருடத்திற்குள்ளாக அதேவகையான மூன்று குற்றங்கள் ஒன்றாகக் குற்றம் சாட்டப்படக்கூடியன. பன்னிரண்டு மாத காலப்பகுதிகளுக்குள்ளாக ஒரே வகையான அதிக குற்றங்கள் தொடர்பில் ஒருவர் குற்றம் சாட்டப்படும்பொழுது முதலாவதிலிருந்து இறுதி வரையான அந்தக் குற்றங்களுக்காக அவர் ஒன்றுக்கு மேற்படாத எண்ணிக்கையானவைகள் தொடர்பில் ஒரு வழக்கு விசாரணையிலேயே விசாரிக்கப்பட முடியும் என்பதுடன், மேல் நீதிமன்றத்தின் முன்னான விசாரணையில் குற்றங்களானவை குற்றச்சாட்டுகையில் உள்ளடக்கப்படவும் கூடும். **(குற்றவியல் கோவை 174(1)).**

குற்றங்கள் ஒரே வகையாக இருக்கும் பொழுது குற்றவியல கோவை அல்லது ஏதும் விசேட அல்லது உள்ளூர்ச் சட்டங்களின் ஒத்த பிரிவின் கீழ் ஒரேயளவான தண்டனையினால் அவர்கள் தண்டிக்கப்படலாம். **(குற்றவியல் கோவை பிரிவு 174(2)).**

## [7.2] கைது

### [7.2.1] சட்டத்திற்கு மாறான கைது

சட்டரீதியான கைதை உருவாக்குபவை குறித்து பிரதிவாதச் சட்டத்தரணிகள் அறிந்திருக்க வேண்டும். அப்போது தான் தமது கட்சிக்காரர்கள் சட்டத்திற்கு மாறாக கைது செய்யப்படும் போது அல்லது தடுத்து வைக்கப்படும் போது உரிய நடவடிக்கையை அவர்களால் எடுக்க முடியும்.

ஒருவரைக் கைது செய்யும்பொழுது அல்லது செயற்பாட்டினாலோ விசாரணைக்கான சமர்ப்பிப்பு இருந்தால் ஒழிய காவலில் வைப்பதற்கான சமர்ப்பிப்பு இருந்தாலொழிய அல்லது குற்றச்சாட்டின் தனமையினால் கைது செய்யப்படுவது குறித்து அறிவித்தாலொழிய அவர் கைது செய்யப்படுவதனான குற்றச்சாட்டை அறிவித்தாலொழிய கைது செய்யப்படும் ஆளின் உடலை உண்மையில் தொடவோ அல்லது கட்டுப்படுத்தவோ முடியாது **(குற்றவியல் கோவை, பிரிவு 23(1)).**

சட்டத்திற்கு மாறாக ஒருவரைக் கைது செய்தல், கைதுக்கான காரணம் பற்றி ஒரு ஆளுக்கு அறிவிக்காமல் கைது செய்தல் அல்லது கைதின் நிமித்தமாக குற்றம்சாட்டப்பட்டவரின் உரிமைகளை மீறுதல் குற்றம்சாட்டப்பட்டவரின் உரிமைகள் மீறப்பட்டுள்ளதா என்பதற்கான ஒரு நீதிமன்றக் கண்டுபிடிப்புக்காக இட்டுச்செல்லப்படக்கூடியது என்பதுடன் குற்றம்சாட்டப்பட்டவர் நட்டஈடுகளையோ அல்லது சேதாரங்களையோ உரிமை கோருவதற்கும் இட்டுச்செல்லப்படக்கூடியது.

*பான்கும்புறகே ரோஹித அனுரகுமார எதிர் H. ஹரிஸ்ன் ஹெட்டிஹேவா, பொரலஸ்க பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் 7 ஏனையோர், (உச்ச நீதிமன்ற வழக்கு இலக்கம் SC/FR, விண்ணப்ப இலக்கம் 194/2013)*

*இலங்கை அரசியலமைப்பின் பிரிவு 17 மற்றும் 126 இன் கீழான விண்ணப்பமொன்றாக இது இருந்தது. இதன்கீழ் பொலிஸார் தடுத்துவைப்பில் உள்ள மேன்முறையீட்டாளரை கைது செய்யும் போது அதற்கான காரணத்தை உரியமுறையில் விளக்கிக்கூற தவறியுள்ளது. சட்டபூர்வமான கைதுக்குப் பின்னரே இது நிகழ்ந்துள்ளது. எனினும் தடுத்து வைப்பதானது சட்டவிரோதமானதாகும். அத்துடன் அதுவானது பிணை முறியொன்றை செயற்படுத்திய பின்பே நடந்துள்ளது. இவ்விடயத்தின் போது, உச்ச நீதிமன்றமானது அரசியலமைப்பின் பிரிவு 12 (1) மற்றும் 12 (2) என்பவற்றின் கீழான அடிப்படை உரிமைகள் குறித்த 2ம் எதிர்வாதியாளும் ஏனைய சிலராலும் மீறப்பட்டுள்ளதாக தீர்மானித்தது. 2 ஆம் எதிர்வாதிக்கு 50,000.00 ரூபாயும் அரசிக்கு 100,000.00 ரூபாய் முறையீட்டாளருக்கான நட்டயீடாகவும் வழங்கும்படி நீதிமன்றம் கட்டளையிட்டது. அத்துடன் சட்ட நடவடிக்கைச் செலவிற்காக 50,000.00 ரூபாய் வழங்கும் படியும் அரசிக்கு கட்டளையிட்டது.*

கைது செய்யப்பட்ட ஆள் அவரது தப்பிச்செல்கையைத் தடுப்பதற்குத் தேவையான அளவிற்கு மேற்பட்ட அடக்குகைகளுக்கும் உட்படுத்தப்படக்கூடாது. **(குற்றவியல்கோவை, பிரிவு 28).**

அவ்வண்ணான ஆள் பலவந்தமாக கைது செய்கையை எதிர்ப்புக்காட்டுவதற்கு முயற்சித்தால் அல்லது கைதிலிருந்து தப்பிக்க முயற்சித்தால் கைதை மேற்கொள்ளும் முகமாக நியாமான அளவிற்கு அவ்வழிகளைப் பயனப்படுத்த முடியும். **(குற்றவியல்கோவை, பிரிவு 23(2)).**

கைது செய்யும் உத்தியோகத்தர் சட்டத்தால் தண்டிக்கப்படக்கூடிய ஒரு குற்றத்தை குற்றம்சாட்டப்படாதவரிடம் சாவை உண்டுபண்ணும் அளவிற்கு உரிமையைக் கொண்டிருக்கமாட்டார் **(குற்றவியல்கோவை, பிரிவு 23(3)).**

கைது செய்யப்படும் ஆளுக்கு தப்புவதற்கான சந்தர்ப்பத்தை தவிர்க்க வேண்டுமாயின் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் பிடிப்பதற்கான ஆணைப்பத்திரம் இல்லாமலே அந்த இடத்திற்குச் செல்ல முடியும். 24 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய இடத்திற்கு போவதற்கு அனுமதி பெற முடியாதிருப்பின் பிடியாணையொன்றின் கீழ் செயலாற்றுகின்ற ஆள் ஒருவர் எச்சந்தர்ப்பத்திலும் அல்லது பிடியாணையொன்று வழங்கப்படக்கூடிய விடயமாய் ஆனால் கைது செய்யப்பட வேண்டிய ஆள் தப்பிச் செல்வதற்கான சந்தர்ப்பம் ஒன்றை அவருக்கு அளிக்காமல் உட்புகுவதற்கு அனுமதி பெற முடியாமல்

இருக்கும் ஏதேனும் சந்தர்ப்பத்தில் சமாதான அலுவலர் ஒருவர் அத்தகைய இடத்தில் புகுதல் அல்லது தேடலும் **(குற்றவியல்கோவை, பிரிவு 25).**

கைது மேற்கொள்ளும்பொழுது விடுவிப்பு நோக்கத்திற்காக பொலிஸ் உத்தியோகத்தர்கள் கதவுகளையோ யனன்ல்களையோ உடைத்து திறப்பதற்கான அதிகாரத்தைக் கொண்டிருக்கிறார்கள். கைது செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள எவரேனும் ஆள் கைது செய்யும் நோக்கத்திற்காக எவரேனும் இடத்திற்குள் சட்டமுறையாகப் புகுந்த பின்னர், அதனுள் தாம் தடுத்து வைக்கப்பட்டால் தம்மையோ அல்லது அதனுள் வேறு எவரேனும் ஆள் தடுத்து வைக்கப்பட்டால் அந்த வேறேனும் ஆளையோ விடுவிப்பதற்காக அவ்விடத்தின் ஏதேனும் வெளிப்புறக் கதவை அல்லது உட்புறக் கதவை, அல்லது யனன்லை உடைத்து திறக்கலாம்.**(குற்றவியல்கோவை, பிரிவு 27).**

## [7.2.2] எழுத்தாணையின்றிக் கைது செய்தல்

குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக்கோவையின் பிரிவு 32 ஒரு சமாதான உத்தியோத்தர்கள் பிடியாணை இல்லாமல் கைது செய்யக்கூடிய நிலைமைகளை விபரிக்கிறது:

*(1) எவரேனும் சமாதான அலுவலர் நீதிவான் ஒருவரின் கட்டளையின்றியும் ஒரு பிடியாணையின்றியும் பின்வருவோரைக் கைது செய்யலாம்—*

*(அ) அவரது சமூகத்தில் சமாதானக் குலைவை விளைவிக்கின்ற எவரேனும் ஆளை;*

*(ஆ) பிடியாணையின்றிக் கைது செய்தகு தவறு எதிலும் சம்பந்தப்பட்டுள்ள எவரேனும் ஆளை அல்லது அவ்வாறு சம்பந்தப்பட்டவராயிருந்தார் என எவருக்கு எதிராக நியாயமான முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளதோ அல்லது எவருக்கு எதிராக நம்பத்தகு தகவல் பெறப்பட்டுள்ளதோ அல்லது எவருக்கு எதிராக நியாயமான சந்தேகம் இருக்கிறதோ அத்தகைய எவரேனும் ஆளை*

*(இ) வலிந்து வீடு புகுவதற்கான ஏதேனும் கருவியை, சட்டமுறையான காரணமின்றி (அத்தகைய காரணத்தை எண்பிக்கும் பொறுப்பு அத்தகைய ஆளின் மேலாக இருத்தல் வேண்டும்) தமது உடைமையில் வைத்திருக்கின்ற எவரேனும் ஆளை;*

*(ஈ) தவறாளர் ஒருவரெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளவராயிருக்கின்ற எவரேனும் ஆளை*

*(உ) களவாடப்பட்ட ஆதனமாகவுள்ளதென அல்லது மோசடியான முறையில் பெறப்பட்டுள்ளதென நியாயமாகச் சந்தேகிக்கப்படக்கூடியதான எதையும் அவரது உடைமையில் வைத்திருப்பவரும் அத்தகைய பொருள் தொடர்பில் தவறொன்றைப் புரிந்துள்ளார் என நியாயமாகச் சந்தேகிக்கப்படக்கூடியவராக இருக்கின்றவருமான எவரேனும் ஆளை*

*(ஊ)சமாதான அலுவர் ஒருவர் அவரது கடமையை நிறைவேற்றும்போது அவரைத் தடைசெய்கின்ற அல்லது சட்டமுறையான கட்டுக்காவலில் இருந்து தப்பிச் சென்றுள்ள அல்லது தப்பிச்செல்ல எத்தனிக்கின்ற எவரேனும் ஆளை*

*(எ) இலங்கைத் தரைப்படையை, கடற்படையை அல்லது வான்படையை அந்தரிக்க விட்டோடிய ஒருவராக உள்ளவரென நியாயமாகச் சந்தேகிக்கப்படுகின்ற எவரேனும் ஆளை*

*(ஏ) பிடியாணையின்றி கைது செய்தகு தவறொன்றைப் புரியும் நோக்கத்துடனனேயே தாம் மறைந்திருப்பதற்கான முற்காப்புகளைச் செய்கின்றாரென நம்புவதற்கு காரணமாக அமைகின்ற அத்தகைய சூழ்நிலைகளில், தான் சமூகமாக இருப்பதினை மறைப்பதற்கு முற்காப்புகளைச் செய்கின்றவராகக் காணப்படுகின்ற எவரேனும் ஆளை*

*(ஐ) இலங்கைக்கு வெளியே ஏதேனும் இடத்தில் புரியப்பட்டதும் இலங்கையில் புரியப்பட்டிருப்பின் தவறொன்றாகத் தண்டிக்கப்படபாலாதாக இருந்திருக்கக்கூடியதும் அத்துடன் புறத்தொப் படைப்பு பற்றிய அல்லது தப்பியோடிய ஆட்கள் பற்றிய அப்போதைக்கு வலுவில் இருக்கும் ஏதேனும் சட்டத்தின் கீழ் அல்லது வேறு வகையாக கைது செய்யப்படுவதற்கு அல்லது இலங்கையில் கட்டுக்காவலில் தடுத்து வைக்கப்படுவதற்கு அவரை ஆளாக்குவதுமான ஏதேனும் செயலில் சம்பந்தப்பட்டிருந்த எவரேனும் ஆளை அல்லது சம்பந்தப்பட்டிருந்தாரென நியாயமாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ள எவரேனும் ஆளை அல்லது சம்பந்தப்பட்டிருந்தாரென நம்பத்தகு தகவல் பெறப்பட்டள்ள எவரேனும் ஆளை அல்லது சம்பந்தப்பட்டிருந்தாரென்பதற்கு நியாயமான சந்தேகம் இருக்கின்ற எவரேனும் ஆளைக் கைது செய்யலாம்.*

*(2) இப்பிரிவிலுள்ள எதுவும், பிடியாணையின்றி கைது செய்வதற்குச் சமாதான அலுவலர் ஒருவருக்கு தத்துவம் அளிக்கும் வேறு ஏதும் சட்டவாக்கத்தின் நடைமுறையில் தலையிடுவதாக அல்லது திரிபுபடுத்துவதாக கொள்ளப்படுதலாகாது.*

*ஓமன்த முதலிகே தொன் காமினி எதிர் - குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின், விசேட பிரிவின் பொலிஸ் பரிசோதகர் மற்றும் ஏனையோர் (உச்ச நீதிமன்ற வழக்கு இலக்கம் SC/FR 81/2011)*

*இவ்விடயமானது, திறந்த பொலிஸ் எழுத்தாணையின் கீழ் மேன்முறையீட்டாளரின் தடுத்து வைத்தல் மற்றும் கைதினையொட்டியதாக அமைந்திருந்தது. இலங்கை அரசியல் யாப்பாக பிரிவு 17 மற்றும் 126 இன் கீழ் குறித்த விண்ணப்பம் அமைந்திருந்தது. மேன்முறையீட்டாளர், அரசியல் யாப்பின் பிரிவுகளான 11,12(1),12(2),13(1),13(2) மற்றும் 14(1) (g) என்பவற்றின் கீழ் தனக்குரிய அடிப்படை உரிமைகள் எதிர்வாதிகளால் மீறப்பட்டதானதோர் வெளிப்படுத்தலை கோரி நின்றார். குறித்த மேன்முறையீட்டாளர் திறந்த பொலிஸ் எழுத்தாணையின் உண்மையிலேயே தடுத்து வைகட்கப்பட்டு கைது செய்யப்பட்டிருந்ததாகவும் ஆனால் கைதானது சட்டவிரோதமானதென உச்ச நீதிமன்றம் கண்டு கொண்டது. எனவே, மேன்முறையீட்டாளருக்கு யாப்பின் பிரிவு (12) இன் கீழ் உறுதியளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமை 1ம்,2ம் எதிர்வாதிகளால் இங்கு மீறப்பட்டுள்ளதாக உச்ச நீதிமன்றம் கருதி, அதற்கமைய மேன்முறையீட்டாளருக்கு அரசினால் ரூபா 300,000.00 இழப்பீடு அரசு வழங்குமெனவும் தீர்ப்பளித்து, கட்டளையிட்டது.*

பிடியாணை இன்றிக் கைது செய்கின்ற சமாதான அலுவலர் ஒரு அநாவசியமற்ற தாமதமின்றியும் பிணையில் விடுதலை தொடர்பில் அதனகத்து அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கமையவும் அந்த விடயத்தில் நியாயதிக்கம் கொண்டிருக்கின்ற ஒரு நீதவானிடம் கைது செய்யப்பட்ட ஆளைக் கொண்டு செல்லுதல் அனுப்புதல் வேண்டும். **(குற்றவியல்கோவை, பிரிவு 36).**

பொலிஸ் நிலையங்களுக்கு பொறுப்பாக உள்ள அலுவலர்கள் தத்தமது நிலையங்களைச் சேர்ந்த எவரேனும் பொலிஸ் அலுவலரினால் பிடியாணையின்றிக் கைது செய்யப்பட்டவர்களான அல்லது அவர்கள் முன் கொண்டுவரப்பட்டவர்களான எல்லா ஆட்களின் விடயங்கள் பற்றியும் அத்தகைய ஆட்கள் பிணையில் விடப்பட்டுள்ளார்களா அல்லவா என்பது பற்றியும் முறையே அவரவர்கள் மாவட்டங்களின் நீதவான் நீதிமன்றங்களுக்கு அறிக்கையிடுதல் வேண்டும். **(குற்றவியல்கோவை, பிரிவு 38).**

சமாதான அலுவலர் ஒருவரினால பிடியாணையின்றிக் கைது செய்யப்பட்டவரான ஆள் எவரும் அவரது சொந்த முறியின் மீதன்றி அல்லது பிணையின் மீதன்றி அல்லது நீதிவான் ஒருவரின் எழுத்திலான சிறப்புக்கட்டளையின்றி விடப்படுதலாகாது. **(குற்றவியல் கோவை, பிரிவு 39).**

### [7.2.3] <u>பிடியாணையுடன் கைது செய்தல்</u>

பிடியாணை ஒன்றை நிறைவேற்றுகின்ற ஆள் அதன் சாரம்சம் பற்றிக் கைது செய்யப்படும் ஆளுக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன் பிடியாணையைக் காட்டும்படி கைது செய்யப்படும் ஆள் கேட்டால் அப்பிடியாணையை அல்லது அதை விடுக்கின்ற ஆளினால் கையொப்பம் இடப்பட்ட பிரதியை அவருக்கு காண்பித்தலும் வேண்டும். **(குற்றவியல்கோவை, பிரிவு, 53).**

பிணைப் பொறுப்பு பற்றிய 51 வது பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கமைவாக பிடியாணையொன்றை நிறைவேற்றுகின்ற ஆள் கைது செய்யப்பட்ட ஆளை எந்த நீதிமன்றத்தின் முன்பாக முன்னிலைப்படுத்தும்படி அவர் சட்டப்படி தேவைப்படுத்தப்பட்டுள்ளாரோ அவர் அந்த நீதிமன்றத்தின் முன்பாக அவசியமற்ற தாமதம் இன்றிக் கொணருதல் வேண்டுமென்பதுடன் கைது செய்யப்படும் நேரத்தையும் கைது செய்யப்பட்ட இடத்தையும் பிடியாணைப் பத்திரத்தில் புறக்குறிப்பிடுதலும் வேண்டும். **(குற்றவியல்கோவை, பிரிவு 54).**

பிடியாணை ஒன்றை இலங்கையின் எந்த இடத்திலும் நிறைவேற்றலாம் **(குற்றவியல்கோவை, பிரிவு 55).**

பிடியாணையொன்று அது எந்த நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டதோ அந்த நீதிமன்றத்தின் இட நியாயதிக்க எல்லைகளுக்கு வெளியே நிறைவேற்றப்படும்போது பிடியாணையை விடுவித்த நீதிமன்றமானது கைது செய்யப்பட்ட இடத்திலிருந்து இருபது மைல்களுக்கு உட்பட இருந்தாலொழிய அந்த நீதிவான் நீதிமன்றத்தின் இட நியாயதிக்க எல்லைக்குள்ளாக கைது செய்தல் நிகழ்ந்ததோ நீதிவான் நீதிமன்றத்திலும் பார்க்க அண்மையில் இருந்தாலொழிய அல்லது 51 ஆம் பிரிவின் கீழ் பிணைப் பொறுப்பு பெற்றுக்கொள்ளப்பட்டாலொழிய கடைசியாகக் கூறப்பட்ட அத்தகைய நீதிவான் நீதிமன்றத்தின் முன்னர் அவ்வாறு கைது செய்யப்பட்ட ஆளைக் கொணருதல் வேண்டும். **(குற்றவியல்கோவை, பிரிவு 58(1)).**

கைது செய்யப்பட்ட ஆள் எந்த நீதிவான் நீதிமன்றத்தின் முன்னர் கொணரப்படுகிறாரோ அந்த நீதிவான் நீதிமன்றத்திற்கு பிடியாணையை விடுத்த நீதிமன்றம் பிடிக்கக் கருதிய ஆளாக அக் கைது செய்யப்பட்ட ஆள உள்ளார் எனத் தோன்றினால் கடைசியாக கூறப்பட்ட அத்தகைய நீதிமன்றத்திற்கு அவரை கட்டுக்காவலில் கொண்டு செல்லும்படி பணித்தல் வேண்டும். ஆயின் தவறானது பிணையில் விடுவிக்கப்படக்கூடியதாகவும் கைது செய்யப்பட்ட ஆள் எந்த நீதிமன்றத்தின் முன்பாக கொண்டு வரப்பட்டுள்ளாரோ அந்த நீதிமன்றம் திருப்தியடையும்படி பிணைகொடுப்பதற்கு தயாரானவராயும் விருப்பமானவராயும் இருப்பின் 51 ஆம் பிரிவின் பிடியாணைப் பத்திரத்தின் மீது

பணிப்பு 1 புறக்குறிப்பிடப்பட்டு பிணைப் பொறுப்பை அளிப்பதற்கு அத்தகைய ஆள் தயாரானவராகவும், விருப்பமானவராகவும் இருப்பின் கடைசியாக கூறப்பட்ட நீதிமன்றம் அத்தகைய பிணையை பிணைப்பொறுப்பை விடயத்திற்கு ஏற்றவாறு பெற்றுக்கொண்டு அப்பிணை முறியைப் பிடியாணையை அனுப்பி வைத்த நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். **(குற்றவியல் கோவை, பிரிவு 58(2)).**

இவ் அத்தியாயத்தில் முரணாக எது எப்படியிருப்பினும் ஆள் ஒருவரைக் கைது செய்வதற்கான பிடியாணை விடுக்கப்பட்டுள்ளது என பொலிஸ் அலுவலர் நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருக்குமிடத்து அப் பொலிஸ் அலுவலர் இவ் அத்தியாயத்தில் முரணாக எது எவ்வாறு இருப்பினும் அந்த நேரத்தில் பிடியாணை அவர் கையில் இல்லாதிருப்பினும் பிடியாணை நிறைவேற்றும் வகையில் அவ் ஆளைக் கைது செய்யலாம் **(குற்றவியல் கோவை, பிரிவு 59).**

### [7.2.4] <u>கைதுசெய்யலாகாத விடயங்களில் கைது</u>

சமாதான அலுவலா் ஒருவரால் பிடியாணையின்றி ஒருவரை கைது செய்ய முடியாத நிலைமையை இது குறிக்கின்றது.

சமாதான அலுவலர் ஒரு சமூகமாக இருக்கையில் எவரேனும் ஆள் பிடியாணையின்றிக் கைது செய்யத் தகாத தவறொன்றைப் புரிந்துள்ளார் எனக் குற்றம் சாட்டப்பட்டு அவரது பெயரையும் வதிவிடத்தையும் தெரிவிக்கும்படி அத்தகைய சமாதான அலுவலர் கேட்டும் தெரிவிக்க மறுக்கின்றவிடத்து அல்லது பொய்யானது என அத்தகைய அலுவலர் நம்புவதற்கு காரணமுள்ள ஒரு பெயரை அல்லது வதிவிடத்தை தெரிவிக்குமிடத்து அவ் ஆளின் பெயரை அல்லது வதிவிடத்தை நிச்சயிக்கும் நோக்கத்திற்காக அவர் அத்தகைய சமாதான அலுவலரினால் கைது செய்யப்படலாம் என்பதுடன் பயணம் செய்யப்படும் நேரம் நீங்கலாக கைது செய்யப்பட்டதிலிருந்து இருபத்தினான்கு மணித்தியாலங்களுக்குள் ஆகக் கிட்டியதாகவுள்ள நீதிவான் நீதிமன்றத்தின் முன்னர் கொணரப்படுதலும் வேண்டும். அந் நேரத்திற்கு முன்னர் அவரது உண்மையான பெயரும் இருப்பிடமும் நிச்சயிக்கப்பட்டால் அவ்வாறு கொணரப்பட வேண்டியதில்லை. அவ்வாறு நிச்சயிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அத்தகைய ஆள் தோன்றுமாறு தேவைப்படுத்தப்படும்போது நீதிவான் நீதிமன்றத்தின் தோன்றுவார் என்று உடன்படும் முறியொன்றை எழுதி நிறைவேற்றிக்கொள்வதன் மேல் உடனடியாக விடுவிக்கப்படுதல் வேண்டும். **(குற்றவியல் கோவை, பிரிவு 33(1))**

எவரேனும் ஆள் பிடியாணையின்றிக் கைது செய்யத்தகாத தவறொன்றைப் புரிந்துள்ளாரெனக் குற்றம் சாட்டப்பட்டு அத்தகைய ஆளுக்கு இலங்கையில் நிரந்தரமான வதிவிடம் எதுவும் இல்லையெனறும் அவர் இலங்கையை விட்டு வெளியேறும் நிலையில் உள்ளாரெனவும் சமாதான அலுவலர் நம்புவதற்கு காரணம் இருக்குமிடத்து அத்தகைய ஆள் அத்தகைய சமாதான அலுவலரினால் கைது செய்யப்படலாம் என்பதுடன் உடனடியாக ஆகக் கிட்டடியதாக உள்ள நீதிவானிடம் கொணரப்படுதல் வேண்டும். அவ் நீதிவான் நீதிமன்றத்தின் முன்னர் அவ் ஆள் தோன்றுவதை உறுதிப்படுத்துவதற்காக பிணைகாரருடனோ அல்லது பிணைகாரரின்றியோ முறியொன்றை எழுதி நிறைவேற்றும்படி அவரைத் தேவைப்படுத்தலாம். அல்லது விளங்கப்படும் வரை அவ் ஆளைக் கட்டுக்காவலில் தடுத்து வைக்கும்படி கட்டளையிடலாம். **(குற்றவியல் கோவை பிரிவு 33(2)).**

### [7.2.5] <u>தனியாட்களால் கைது செய்யப்படுதல்</u>

குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை பிரிவு 35 குற்றம் சாட்டப்பட்டவரை தனிப்பட்ட ஆள் கைது செய்யும் செயன்முறையை விளக்குகிறது:

> *எவரேனும் தனிப்பட்ட ஆள், அவரது சமூகத்தில் பிடியாணையின்றி கைது செய்தகு தவறொன்றைப் புரிகின்ற அல்லது தவறாளர் ஒருவரெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள, அல்லது தப்பியோடுகின்றாரெனவும் பிடியாணையின்றிக் கைது செய்தகு தவறொன்றைப் புரிந்துள்ளராதெனவும் அவரால் நியாயமாகச் சந்தேகிக்கப்படுகின்ற எவரேனும் ஆளைக் கைது செய்யலாம் என்பதுடன் அவசியமற்ற தாமதமின்றி அவ்வாறு கைது செய்யப்பட்ட ஆளை ஆகக் கிட்டடியதாகவுள்ள சமாதான அலுவலரிடம் ஒப்படைத்தலும் வேண்டும். அல்லது சமாதான அலுவலர் ஒருவரில்லாது விடின் அத்தகைய ஆளை ஆகக் கிட்டியதாகவுள்ள பொலிஸ்நிலையத்திற்கு கொண்டு செல்லுதலும் வேண்டும். அத்தகைய ஆள் 32 ஆம் பிரிவினது ஏற்பாடுகளின் கீழான தவறொன்றைப் புரிந்துள்ளாரென நம்புவதற்கு காரணமிருப்பின் அவரைச் சமாதான அலுவலர் ஒருவர் மீளக் கைது செய்தல் வேண்டும். அவர் பிடியாணையின்றிக் கைது செய்யத்தகாத தவறொன்றைப் புரிந்துள்ளாரரென நம்புவதற்கு காரணம் இருப்பதோடு அவர் அவரது பெயரையும் வதிவிடத்தையும் கூறும்படி பொலிஸ் அலுவலர் ஒருவரினால் கேட்கப்பட்டதன் பேரில் தமது பெயரையும் வதிவிடத்தையும் கூறுவதற்கு மறுப்பின் அல்லது பொய்யானது என அத்தகைய அலுவலர் நம்புவதற்கு*

*அவருக்கு காரணம் உள்ள ஒரு பெயரை அல்லது வதிவிடத்தைக் கூறின் அல்லது இலங்கையை விட்டு வெளியேறும் தறுவாயில் உள்ளாரென அத்தகைய அலுவலர் நம்புவதற்கு காரணமாக இருக்கின்ற ஒரு ஆளாக இருப்பின் 33 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் அவர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அவர் ஏதேனும் தவறைப் புரிந்துள்ளாரென நம்புவதற்கு காரணம் இல்லாதுவிடின் அவர் உடனடியாக விடுவிக்கப்படுதல் வேண்டும்.*

### [7.2.6] நீதிவானால் கைது செய்யப்படுதல்

ஒரு நீதிவானது இட நியாயதிக்க எல்லைக்குள்ளாக அவரது சமூகத்தில் தவறேதும் புரியப்படும் போது அவர் தாமாகவே தவறாளரைக் கைது செய்யலாம் அல்லது அவ் தவறாளரைக் கைது செய்யும்படி எவரேனும் ஆளுக்கு கட்டளையிடலாம். அத்துடன் அதன் மேல் பிணையில் விடுதல் தொடர்பில் இதனத்து அமைந்துள்ள ஏற்பாடுகளுக்கமைவாக தவறாளரைக் கட்டுக்காவலுக்கு பாரப்படுத்தலாம். **(குற்றவியல் கோவை, பிரிவு 40).**

எவ் ஆளைக் கைது செய்வதற்கு சம்பந்தப்பட்ட நேரத்திலும் சம்பந்தப்பட்ட சூழ்நிலைகளிலும் பிடியாணை ஒன்று விடுவிப்பதற்கு எவரேனும் நீதிவான் தகுதிவாய்ந்தவராக உள்ளாரோ அவ் ஆள் எவரையும் அவர் இட நியாயதிக்க எல்லைகளுக்குள்ளாக எப்போதேனும் கைது செய்யலாம் அல்லது அவரது சமூகத்தில் கைது செய்யும்படி பணிக்கலாம். **(குற்றவியல் கோவை, பிரிவு 41).**

### [7.2.7] சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தப்பட்ட ஒருவரைக் கைது செய்தல்

குற்றவியல் நடவடிக்கை சட்டக்கோவையின் பிரிவு 43A சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் கைது செய்யப்பட்ட ஆட்கள் தொடர்பான விசேட ஏற்பாடுகளை வழங்குகிறது:

*(1) பிரிவுகள் 36 மற்றும் 37 என்பவற்றின் ஏற்பாடுகள் சிறுபிள்ளை துஸ்பிரயோகத்திற்காக சந்தேகிக்கப்பட்ட அல்லது குற்றம்சாட்டப்பட்ட ஆட்கள் தொடர்பில் ஏற்புடையனவாகமாட்டார்.*

*(2) சிறுபிள்ளை துஷ்பிரயோகத்திற்காக சந்தேகிக்கப்பட்ட அல்லது பிடியாணை ஒன்று இல்லாது கைது செய்யும் பொலிஸ் அலுவலர் ஒருவர் அநாவசியமான தாமதமின்றியும் கைது செய்யப்பட்ட இருபத்தினான்கு மணித்தியாலங்களுக்குள்ளும் அத்தகைய ஆளை வழக்கில் நியாயதிக்கம் கொண்ட நீதிவான் ஒருவர் முன்னிலைக்கு கொணர்தல் வேண்டும்.*

*(3) (2) ஆம் உட்பிரிவின் கீழ் கைது செய்யப்பட்ட ஆள் ஒருவர் எந்த நீதிவான் முன்னிலைக்கு கொணரப்படுகிறாரோ அந்த நீதிவான், பொலிஸ் கண்காணிப்பாளர் ஒருவரின் தரத்திற்கு குறையாத பொலிஸ் அலுவலர் ஒருவரால் அல்லது அவர் இல்லாது விடத்து அவர் சார்பில் செயலாற்றும் அலுவரினால் அத்தகைய சான்றிதழ் ஒன்று இணைக்கப்படுவதன் மீது ஆளை புலனாய்வு செய்யும் நோக்கத்திற்கு தடுத்து வைத்திருப்பது அவசியம் என்ற பயன்பாட்டிற்கு மூன்று நாட்களை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கு அத்தகைய ஆளை பொலிஸ் கட்டுப்பாட்டில் தடுத்து வைக்கப்படுவதை அனுமதித்து கட்டளையொன்றை ஆக்கலாம்.*

*(4) புலனாய்வு முடிவடைவதன் மீது அல்லது (3) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட தடுப்புக்காலம் முடிவடைவதன் மீது இவற்றுள் எது முதலில் நிகழ்கின்றதோ அப்போது அத்தகைய ஆள் நீதிவான் முன்னிலைக்கு கொணரப்படுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய ஆளுக்கு அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதலும் வேண்டும்.*

### [7.3] தேடுகைகள்

குற்றவியல் நடவடிக்கை சட்டக்கோவையின் பிரிவுகள் 73 – 79 ஆனவை தொடர்பான சில பொது ஏற்பாடுகளை முன்வைக்கின்றன.

### [7.3.1] கைது செய்யப்பட்ட ஆட்கள் தொடர்பான தேடுகை

குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக்கோவையின் பிரிவு 29 ஆனது சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் கைது செய்யப்பட்ட ஆட்கள் தொடர்பான விசேட ஏற்பாடுகளை வழங்குகிறது:

ஆளொருவர்*:*

*(அ) பிடியாணையில் விடுவிக்கப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யாத பிடியாணை ஒன்றின் கீழ் சமாதான அலுவலர் ஒருவரினால் கைது செய்யப்படும்போதிலெல்லாம் அல்லது பிணையில் விடுவிக்கப்படுவதற்கு ஏற்பாடு*

*செய்கின்ற பிடியாணையின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தும், கைது செய்யப்பட்ட ஆள் பிணை செலுத்த முடியாதவராக இருக்கும்போதிலெல்லாம்; அல்லது*

*(ஆ) பிடியாணையின்றி கைது செய்யப்பட்டிருந்து அல்லது பிடியாணை ஒன்றின் கீழ் தனிப்படட ஆள் ஒருவரினால் கைது செய்யப்பட்டு, சட்டப்படி பிணையில் விடுவிக்கப்பட முடிந்தவராக இருக்கும் அல்லது பிணை செலுத்த முடியாதவராக இருக்கும் போதிலெல்லாம் கைது செய்யும் சமாதான அலுவலர், அல்லது தனிப்பட்ட ஆள் ஒருவரினால் கைது செய்யப்படும்பொழுது கைது செய்யப்பட்ட ஆளை அவர் எந்தச் சமாதான அலுவலரிடம் ஒப்படைக்கின்றாரோ அந்தச் சமாதான அலுவலர் 30 ஆம் பிரிவுக்கு அமைவாக அத்தகைய ஆளைத் தேடுகை செய்து, அவர் மீது காணப்படுகின்றனவான அவசியமான உடைகள் தவிர்ந்த மற்றெல்லாப் பொருட்களையும் பாதுகாப்பான கட்டுக்காவலில் வைக்கலாம். அத்துடன் குற்றத்தைப் புரிவதற்கு பயனபடுத்தப்பட்ட சாதனங்கள் என அக் குற்றத்தின் பேறுகள் என அல்லது அக்குற்றம் பற்றிய வேறு சான்றுகள் என நம்புவதற்கும் இடம்தரும் அத்தகைய பொருள்களுள் எதுவும் அவர் விடுவிக்கப்படும் வரை அல்லது விடுதலை செய்யப்படும் வரை தடுத்து வைக்கப்படலாம்*

### [7.3.2] பெண்களைத் தேடுதல்

ஒரு பெண்ணைத் தேடுகை செய்வித்தல் அவசியமாகும் போதெல்லாம் மிகவும் பண்பான முறையில் வேறொரு பெண்ணினால் தேடுகை செய்யப்படுதல் வேண்டும். **(குற்றவியல் கோவை, பிரிவு 30).**

### [7.3.3] இடங்களைத் தேடுதல் செய்தல்

பிடியாணையொன்றின் கீழ் செயலாற்றுகின்ற அல்லது கைது செய்வதற்கு அதிகாரம் கொண்டுள்ள எவரேனும் ஆள் கைது செய்யப்பட வேண்டிய ஆள் ஏதேனும் இடத்தில் புகுந்துள்ளாரென அல்லது அதனுள் இருக்கின்றார் என நம்புவதற்கு காரணம் இருப்பின் அத்தகைய இடத்தில் வதிகின்ற அல்லது அத்தகைய இடத்திற்கு பொறுப்பாக உள்ள ஆள் மேற்சொல்லப்பட்டவாறு செயலாற்றுகின்ற அல்லது அதிகாரங்களைக் கொண்டுள்ள ஆள் அந்த இடத்திற்குள் புகுவதற்கு விடுமாறு கூறியதன் மேல் அதனுள் புகுவதற்கு அவருக்கு அனுமதி அளித்தல் வேண்டுமென்பதுடன் அதனுள் தேடுதல் செய்வதற்கான நியாயமான எல்லா வசதிகளை அளித்தலும் வேண்டும். **(குற்றவியல் ந.ச. கோவை, பிரிவு 24).**

ஒரு பிடியாணையின் பிரகாரம் தேடப்படும் இடங்களில் உள்ள ஆட்கள் எல்லோரும் தேடுதல் முடியும் வரையும் சட்டமுறையில் அவ்விடத்தில் தடுத்து வைத்திருக்கப்படலாம் என்பதுடன் பிரிவு 30 க்கு உப்பட்டு தேடும் பொருளானது ஒரு ஆளில் வைத்திருக்கப்படக்கூடியதாக இருக்கும் பட்சத்தில் அவர்களும் தேடுகைக்கு உட்பட முடியும். **(குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவை, பிரிவு 26).**

## [7.4] சொத்துக்கள் மற்றும் ஆவணங்களைக் கைப்பற்றுதல்

பிடியாணையைத் தொடர்ந்தான தேடுகையின்பொழுது ஏதும் சொத்துக்கள் அல்லது ஆவணங்கள் கைப்பற்றப்படுமாயின் அக் கைப்பறுகையை மேற்கொள்ளும். உத்தியோகத்தர் கைப்பற்றப்பட்ட பொருட்களை நிரல்படுத்த வேண்டும். குற்றவியல் நடவடிகை முறைச் சட்டக்கோவையின் 75 ஆம் பிரிவு இதனை தெளிவாக்குகிறது:

*தேடுதல் ஆணையை நிறைவேற்றும் ஆள் தேடுகையின்போது கைப்பற்றப்பட்ட எல்லாப் பொருள்கள் பற்றியதும் முறையே அவை கண்டுபிடிக்கப்படுகின்ற இடங்கள் பற்றியதுமான நிரல் ஒன்றைத் தயாரித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய நிரலில் கையொப்பம் இடுதலும் வேண்டும்.*

குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் பிரிவு 62 இன் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படின் கைப்பற்றப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட சொத்துக்கள் அல்லது பொருட்கள் சரியான உரிமையாளரிடம் மீளளிக்கப்படும் :

*நடுக்கட்டப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டினுள் எவ்வாளின் ஆதனம் 61 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரினால் கையாளப்படக்குரியதாக உள்ளதோ அல்லது கையாளப்படற்குரியதாக இருந்துள்ளதோ அவ் ஆள் எந்த நீதிமன்றத்தின் கட்டளையினால் அவ் ஆதனம் நடுக் கட்டப்பட்டதோ அந்த நீதிமன்றத்தின் முன்னர் தாமாகவே தோன்றி அல்லது கைது செய்யப்பட்டு கொண்டு வரப்பட்டு பிடியாணை நிறைவேற்றப்படுவதை தவிர்க்கும் நோக்கத்திற்காக அவர் தலைமறைவாக இருக்கவில்லையெனறும் அல்லது மறைந்திருக்கவில்லையென்றும், பிரகடனத்தில் குறிக்கப்பட்ட காலத்திற்குள்ளாக தாம் தோன்றுவதற்குத் தம்மை இயலச் செய்யும் வண்ணம், அப்பிரகடனம் பற்றிய அறிவித்தலை*

*தாம் பெறவில்லை என்றும் அத்தகைய நீதிமன்றம் திருப்திப்படும் வரை அவர் எண்பித்தால் அத்தகைய ஆதனம் விற்கப்பட்டிருப்பின் விற்பனையின் தேறிய வரும்படிகள் அல்லது அதன் பாகம் மாத்திரமே விற்கப்பட்டிருப்பின் அவ் விற்பனையின் தேறிய வரும்படிகளும் அவ் ஆதனத்தின் எஞ்சிய பாகமும் நடுக்கட்டலின் விளைவாக உறப்பட்ட எல்லாச் செலவுகளையும் கொடுப்பனவு செய்த பின்னர் அவரிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.*

## [7.5] அழைப்பு ஆணைகள்

குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் பிரிவு 139 இனால் செயன்முறை பிரச்சினைகள் ஒழுங்கு செய்யப்படுவதாவது பின்வருமாறு அதில் குறிப்பிடப்படுகிறது:

*(1) 126 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் அல்லது (ஆ) என்னும் பந்தியின் கீழ் அல்லது (இ) என்னும் பந்தியின் கீழ் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டிருந்து கட்டுக்காவலில் இல்லாத எவரேனும் ஆளுக்கு எதிராக வழக்கு நடவடிக்கைகள் எடுப்பதற்கு போதிய ஏதொன்று என நதீவான் அபிப்பிராயப்படுமிடத்து.*

*(அ) வழக்கானது முதலாம் அட்டவணையின் நான்காம் நிரைக்கிணங்க முதற் தடவையிலேயே அழைப்புக்கட்டளை விடுக்கப்பட வேண்டியதொன்று எனத் தோன்றினால் அவர் 63 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக அத்தகைய ஆள் வருகை தருவதற்கான அழைப்புக்கட்டளை ஒன்றை விடுத்தல் வேண்டும். (ஆ) வழக்கானது அந் நிரைக்கிணங்க முதற் தடவையிலேயே பிடியாணையொன்று விடுக்கப்பட வேண்டியதொன்று எனத் தோன்றினால் அவர் அத்தகைய ஆளை குறித்தொரு நேரத்தில் நீதிமன்றத்தின் முன் கொண்டுவரச் செய்வதற்காக அல்லது தோன்றச் செய்வதற்காக பிடியாணையொன்றைப் பிடித்தல் வேண்டும்.*

*(2) 136(1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் கீழ் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டுள்ளவிடத்து நீதிவான் குற்றம் சாட்டப்பட்டவரை நீதிமன்றத்தின் முன்பாக கொண்டுவந்துள்ள ஆளையும் நீதிமன்றத்தில் சமூகமளித்திருக்கக்கூடியவரும் வழக்கின் நிகழ்வுகளைப் பற்றிக் கூறக்கூடியவருமான வேறு எவரேனும் ஆளையும் அவர்கள் சத்தியம் செய்ததன் மேல் அல்லது உறுதியுரை மொழிந்ததன் மேல் உடனடியாக சோதனை செய்தல் வேண்டும.*

*(3) 136 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின் கீழ் அல்லது (ஊ) என்னும் பந்தியின் கீழ் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்படுமிடத்து வழக்கானது முதற்தடவையிலேயே அழைப்புக்கட்டளை அல்லது பிடியாணையொன்று விடுவிக்கப்பட வேண்டிய ஒரு வழக்காக இருந்தால் முதலாம் அட்டவணையின் நான்காம் நிரை ஏற்பாடு செய்வதற்கிணங்க நீதிவான் அப்பிடியாணையில் அல்லது முறைப்பாட்டில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஆள் வருகை தருவதற்காக அழைப்பு கட்டளையொன்றை விடுத்தல் வேண்டும். அல்லது குறித்த நேரத்தில் அந்த ஆளை நீதிமன்றத்தின் முன் கொண்டுவரச் செய்வதற்கு அல்லது தோன்றச் செய்வதற்கு பிடியாணையொன்றை விடுத்தல் வேண்டும்.*

நடவடிக்கைகளுக்கு அவசியமானதெனக் கருதப்படக்கூடிய எந்த சாட்சியினதும் சமூகமளிப்பை கட்டாயமாக்கும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு உண்டு என குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் 255 ஆம் பிரிவு பின்வருமாறு குறிப்பிடுகிறது:

*(1) நீதிவான் நீதிமன்ற விசாரணை அல்லது விளக்கம் எதனதும் நோக்கத்திற்காக வழக்குத் தொடுனர் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் சாட்சிக்காரர் எவரேனும் வருகை தருவதற்கு அல்லது ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளைக் காண்பிப்பதற்கு அவரைக் கட்டாயப்படுத்துவதற்கான மன்றாணை வழங்குமாறு நீதிவானுக்கு விண்ணப்பித்தால், நீதிவான் அவரால் பதிவு செய்துகொள்ளப்பட வேண்டிய அத்தகைய காரணங்களுக்காக அவ்வாறு செய்தல் அவசியமற்றது என அவர்கள் கருதினாலன்றி அத்தகையை மன்றாணையை அவர் விடுத்தல் வேண்டும்.*

*(2) அலைக்கழிக்கும் அல்லதும் தாமதம் ஏற்படுத்தும் அல்லது நீதி நிலைநாட்டப்படுதலை முறியடிக்கும் நோக்கத்திற்காகவே எவரேனும் கட்சிக்காரர் வருவதினைக் கட்டாயப்படுத்துவதற்கான மன்றாணைக்கு விண்ணப்பிக்கப்படுகின்றதென நீதிவான் சந்தேகித்தால் அவர் அத்தகைய சாட்சிக்காரரின் சான்றானது முக்கியமானது என நம்புவதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன என அவரைத் திருப்திப்படுத்தும்படி விண்ணப்பதாரரை தேவைப்படுத்தலாம். அவர் அவ்வாறு திருப்திபடாவிட்டால் (அத்தகைய மறுப்புக்கான காரணங்களை பதிவு செய்து கொண்டு சாட்சிக்காரரை கட்டளை விட்டழைப்பதற்று மறுக்கலாம் அல்லது சாட்சிக்காரரை கட்டளை விட்டு அழைக்க முன்னர் அத்தகைய சாட்சிக்காரரை வரும்படி செய்வதற்காக ஏற்படும் செலவுகளைக் கொடுத்து தீர்ப்பதற்கு அவசியமானது என அவர் கருதும் அத்தகைய பணத்தொகையினை வைப்பிலிடுமாறு தேவைப்படுத்தலாம்.*

## [7.6] பிரேதப் பரிசோதனை

பிரேதப் பரிசோதனையானது குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் பிரிவு 373 இன் பிரகாரம் ஒழுங்குபடுத்தப்படுகிறது:

> *(1) நீதிவான் அல்லது அதற்கென அமைச்சரால் தத்துவமளிக்கப்பட்ட எவரேனும் விசாணையாளர், அவர் அவ்வாறு செய்தல் உசிதம் எனக் கருதினால் உயிரற்ற உடலை சவப்பரிசோதனை செய்து இறப்பிற்கான காரணம் பற்றி அத்தகைய நீதிவானுக்கு அல்லது விசாரணையாளருக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மாவட்டத்தின் அரசாங்க மருத்துவ அலுவலரை அல்லது வேறு எவரேனும் மருத்துவ தொழிலரை கேட்டல் வேண்டும்.*
>
> *(2) ஓராம் உட்பிரிவின் கீழான சவப் பரிசோதனையின் நோக்கங்களுக்காக நீதிவான் உயிரற்ற உடல் ஏற்கனவே புதைக்கப்பட்டிருந்தால் அவ்வுடல் தோண்டியெடுக்கும்படி செய்யலாம்.*

## [7.7] தடுத்து வைப்பு

ஒரு தரப்பினர் பொலிஸ்காவலில் இருக்கும்பொழுது தரப்பினர் உடல் ரீதியாக தாக்கப்படுகிறார் என்றும் ஆனால் அதிகாரிகள் தரப்பினரிடம் செல்வதைத் தடுப்பதாகவும், சட்டத்தரணி நம்புகிறார் எனின் அவரது உடல் நிலைமையைப் பரிசோதிக்கும் முகமாக தரப்பினரிடம் உடனடியாகச் செல்வதற்கு தன்னை அனுமதிக்கும்படி மேல் நீதிமன்றக் கட்டளையொன்றுக்காக சட்டத்தரணி அவசரமான விண்ணப்பம் ஒன்றைச் செய்ய வேண்டியிருக்கும்.

எந்த சமாதான உத்தியோகத்தரும் பிடியாணையின்றி எவரையும் தடுப்புக்காவலில் வைத்திருக்கலாகாது அல்லது வேறு வகையில் கைது செய்யப்பட்ட ஆளை எந்த நியாயமான காரணமின்றி எந்த சூழ்நிலையின் கீழும் நீண்டகாலத்திற்கு பிடியாணையின்றி கைது செய்யப்பட்ட ஒருவரை தடுத்து வைத்திருக்கலாகாது. எவ்வாறாயினும் அந்தக் காலப்பகுதியும் கைது செய்யப்பட்ட இடத்திலிருந்து நீதிவானிடம் செல்வதற்கான பயணத்திற்கான அவசியமான காலத்தைச் சேர்க்காது ஒரு இருபத்தினான்கு மணித்தியாலங்களை விஞ்சக்கூடாது **(குற்றவியல் சட்டக்கோவை, பிரிவு 37).**

புலனாய்வொன்றை 37 ஆம் பிரிவினால் குறித்துரைக்கப்பட்ட இருபத்தினான்கு மணித்தியாலங்கள் காலப்பகுதிக்குள்ளாக ஒரு விசாரணை பூர்த்தி செய்ய முடியாதிருப்பதுடன் மேலும் புலனாய்வு செய்ய அவசியம் என காரணங்கள் இருக்கும்பொழுதெல்லாம் பொலிஸ் நிலையத்திற்கு பொறுப்பாக உள்ள உத்தியோகத்தர் அல்லது விசாரணையாளர் அவ்விடயத்தை நியாயதிக்கம் கொண்ட நீதிவான் முன்னர் சந்தேகநபரை உடனடியாக கொணருதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய புலனாய்வின்போது விசாரிக்கப்பட்ட கட்சிக்காரர்கள் ஒவ்வொருவரும் அவ்விடயம் தொடர்பில் கொடுக்கப்பட்ட கூற்றுக்கள் எவையேனும் இருப்பின் அவற்றின் சுருக்கம் ஒன்றுடன் சேர்த்து விடயத்தின் அறிக்கையொன்றினை அதேவேளையில் அத்தகைய நீதிவானுக்கு அனுப்பி வைத்தலும் வேண்டும். **(குற்றவியல் சட்டக்கோவை, பிரிவு 115(1)).**

இப்பிரிவின் கீழ் எந்த நீதிவானின் முன்னர் சந்தேகிக்கப்பட்ட ஒருவர் அனுப்பப்பட்டுள்ளாரோ அந் நீதிவான் மேற்கொண்டு புலனாய்வு செய்யப்பட்டு முடியும்வரை சந்தேகிக்கப்பட்டவரைக் கட்டுக்காவலில் தடுத்து வைத்தல் உசிமானது எனத் திருப்தியுறின் அவரது காரணங்களைப் பதிந்த பின்னர் ஏதாவது மறியற்சாலையின் கண்காணிப்பாளருக்கு முகவரியிட்ட ஆணைப்பத்திரத்தின் மூலம் சந்தேகிக்கப்பட்டவரை மொத்தமாக பதினைந்து நாட்களைக் கொண்டதும் அதற்கு அதிகமாகாததும் காலம் ஒன்றிற்கு தடுத்து வைப்பதற்கு அதிகாரமளிக்கலாம். இத்தகைய ஆணைப்பத்திரம் ஒவ்வொன்றும் தொடர்பிலும் 264 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும். சொல்லப்பட்ட பதினைந்து நாள் காலப்பகுதியின் முடிவில் வழக்கு நடவடிக்கை எதுவும் தொடரப்படாவிடின் நீதிவான் (3) ஆம் பிரிவுக்கமைவாக சந்தேகிக்கப்பட்டவரை விடுவிக்கலாம் அல்லது அங்கனம் அவர் தேவைப்படுத்தப்படும் போதும் அவர் நீதிமன்றத்தில் தோன்றுவதற்கென முறியொன்றை எழுதி நிறைவேற்ற வேண்டுமென தேவைப்படுத்தலாம். **(குற்றவியல்கோவை பிரிவு 115(2)**

குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்குட்பட்டு ஒரு நீதிவான் பின்வரும் நிலையிலுள்ள யாதும் ஒருவரை பிணையிலோ அல்லது வேறு வழியிலோ விடுவிக்க முடியாது:

(அ)நீதிமன்றத்தில் சரணடைந்துள்ள அல்லது

(ஆ) கைது செய்யப்பட்டுள்ள ஆள் எவரையும் நீதிவான் ஒருவர் பிணையில் செல்ல விடுதலோ அல்லது வேறு வகையில் செல்ல விடுதலோ ஆகாது. ஆயின் எவ்வாறாயினும் சட்டத்துறை தலைமையதிபதியினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது மேல் நீதிமன்றம் வேறு வகையாக பணித்தாலொழிய அத்தகைய ஆள் நீதிமன்றத்தில் சரணடைந்த திகதியில் இருந்து அல்லது கைது செய்யப்பட்ட தேதியில் இருந்து மூன்று மாத காலப்பகுதி முடிவடையும் முன்தாகவே நீதிவான் நீதிமன்றத்தில் அல்லது மேல் நீதிமன்றத்தில் அவருக்கு எதிராக வழக்கு நடவடிக்கைகள் தொடரப்படாது விட்டால் 1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் (சிறப்பு ஏற்பாடுகள்)

சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக அத்தகைய ஆளைப் பிணையில் செல்ல விடுதல் வேண்டும்.

ஒரு மேல் நீதிமன்றமானது குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்குட்பட்டு விசேட சூழமைவுகளில் அவ்வாறான ஒரு ஆளை இந்த உப பிரிவுகளின் நடவடிக்கை முறைகளில் (குற்றவியல் கோவை 115(3) எடுத்தாளப்படும் மூன்று மாத காலப்பகுதியின் முடிவின் பிற்பாடோ அல்லது முன்பாகவோ பிணையில் விட முடியும். இது 115 3 ஆம் உபபிரிவின் கீழான தடுப்புக்கட்டளையானது ஒரு நேரத்தில் பதினைந்து நாட்கள் காலப்பகுதியாக இருக்கும். **(குற்றவியல்கோவை, பிரிவு 120(2)).**

சந்தேகிக்கப்பட்டவர் ஒருவர் மறியற்சாலை கண்காணிப்பாளர் ஒருவரின் சட்டமுறையான கட்டுக்காவலில் இருக்கும் காலத்தின்பொழுது பொலிஸ் நிலையத்திற்கு பொறுப்பாக உள் பொலிஸ் அலுவலரினால் அதற்கென செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மேல் நீதிமன்றம் ஒன்று புலனாய்வு செய்யும் நோக்கத்திற்காக நியாயமான நேரங்களில் அச் சந்தேகிக்கப்பட்டவரைச் சென்று பார்ப்பதற்கு அவ் பொலிஸ் அலுவலகருக்கு அல்லது வேறு எவரேனும் பொலிஸ் அலுவலருக்கு அதிகாரமளிக்கலாம். நீதிமன்றத்தின் அபிப்பிராயப்படி அத்தகைய நடவடிக்கை புலனாய்வு நோக்கங்களுக்கு அவசியமானது எனக் கருதப்படின் நீதிமன்றம் ஆனது பொலிஸ் நிலையமொன்றுக்கு பொறுப்பாக உள்ள அலுவலர் ஒருவரினால் அந் நோக்கத்திற்காக செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றின் மேல் சந்தேகிக்கப்பட்டவரை மறியற்சாலை திணைக்கள அலுவலர் ஒருவரின் துணையுடன் இடத்திற்கிடம் (பொலிஸ்நிலையத்திற்கு தவிர) கொண்டு செல்பவருக்கு அவருக்கு அல்லது பெயர் குறிப்பிடப்பட்ட எவரேனும் பொலிஸ் அலுவலகருக்கு அதிகாரமளிக்கலாம். ஆயின் இவ் உட்பிரிவினது ஏற்பாடுகளின் கீழ் பொலிஸ் அலுவலர் ஒருவர் சந்தேகிக்கப்பட்ட ஒருவரை சென்று பார்க்கின்ற அல்லது அவரை இடத்திற்கிடம் கொண்டு செல்கின்ற காலப்பகுதியின்போது அச் சந்தேகிக்கப்பட்டவர் சான்றுக்கட்டளைச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) உட்பிரிவினை ஏற்புடையதாக்கும் நோக்கத்திற்காக அத்தகைய பொலிஸ் அலுவலரின் கட்டுக்காவலில் உள்ள குற்றம் சாட்டப்பட்ட ஆள் ஒருவராக கருதப்படுதல் வேண்டும். **(குற்றவியல்கோவை, பிரிவு 115(4)).**

37 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக விசாரணையாளர் ஒவ்வொருவரும் பொலிஸ் நிலையமொன்றுக்கு பொறுப்பாக உள்ளவரான அலுவலர் ஒவ்வொருவரும் புலனாய்வொன்றின்போது ஆள் ஒருவரைத் தடுத்து வைக்கும்படி அதிகாரமளித்தற்கு தத்துவம் கொண்டவர்களாதல் வேண்டும். **(குற்றவியல்கோவை, பிரிவு 118(2)).**

## [7.8] பொலிஸ் விசாரணை

தவறு ஒன்று புரிதல் தொடர்பான தகவல் ஒவ்வொன்றும் பொலிஸ் அலுவலகருக்கு அல்லது விசாரணையாளர் ஒருவருக்கு வாய்மொழி மூலமாக அல்லது எழுத்தில் கொடுக்கப்படலாம். குற்றவியல் கோவை பிரிவு 109(1) அத்தகைய தகவல் வாய்மொழி மூலமாக பொலிஸ் அலுவலகருக்கு அல்லது விசாரணையாளர் ஒருவருக்கு தரப்பட்டால் அது எம்மொழியில் கொடுக்கப்படுகிறதோ அது அம்மொழியில் அவரால் எழுத்தில் இடப்பட வேண்டுமென்பதுடன் தகவல் தருபவருக்கு அது வாசித்துக்காட்டப்படுதல் வேண்டும். ஆயின் தகவலானது எம்மொழியில் கொடுக்கப்படுகிறதோ அம் மொழியில் அத் தகவலை அலுவலர் அல்லது எழுத்தாளர் பதிவதற்கு இயலாதிருப்பின் அவ் அலுவலர் அல்லது விசாரணையாளர் அத் தகவலை எழுத்தில் தருதல் வேண்டுமெனக் கோருதல் வேண்டும் தகவல் தருபவர் அத்தகவலை எழுத்தில் தர முடியாதவராக இருப்பின், அவ்வாறு செய்வதற்கு அவ் அலுவலருக்கு அல்லது விசாரணையாளருக்கு உள்ள காரணங்களைப் பதிந்த பின்னர் அத் தகவலை தேசிய மொழிகளில் ஒன்றில் அலுவலர் அல்லது விசாரணையாளர் பதிதல் வேண்டுமென்பதுடன் அப்பதிவை தகவல் தருபவருக்கு வாசித்துக் காட்டுதலும் வேண்டும். அல்லது அவர் விளங்கும் வகையில் மொழிபெயர்த்துக் கூறுதலும் வேண்டும். **(குற்றவியல் சட்டக் கோவை பிரிவு 109(2)).**

அத் தகவல் ஒவ்வொன்றும் எழுத்தில் தரப்பட்டதாயினும் சரி அல்லது முன்னர் சொல்லப்பட்டவாறாக எழுத்தில் இடப்பட்டதாயினும் சரி அதனைத் தருபவரான ஆளினால் ஒப்பமிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய தகவல் அல்லது உகந்ததாகக் கூடியவாறான அதன் ஒரு பிரதி விடயத்திற்கேற்றாற்போல பொலிஸ் நிலையத்திற்கு பொறுப்பாக உள்ளவரான அலுவலரினால் பொலிஸ் நிலையத்தில் அல்லது விசாரணையாளரால் வைத்திருக்கப்பட வேண்டியதும் இதனகத்துப் பின்னர் தகவல் புத்தகம் என குறியீடு செய்யப்படுவதுமான புத்தகம் ஒன்றில் அத்தகைய பொலிஸ் அலுவலகரினால் அல்லது விசாரணையாளரால் தாமதமின்றி பதியப்படுதல் வேண்டும். அத்தகைய தகவல் புத்தகம் அதற்கென அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள் மூலம் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் இருத்தல் வேண்டும். **(குற்றவியல் சட்டக் கோவை பிரிவு 109(3)).**

தகவலைப் பெற்றுக்கொண்டவரான பொலிஸ் அலுவலகர் பொலிஸ் நிலையத்திற்குப் பொறுப்பாக உள்ள அலுவலராக இல்லாது விடின் அப்போது அத்தகைய பொலிஸ் அலுவலகர் அத்தகைய தகவல் நிகழ்வுகள் பற்றி பொலிஸ் நிலையத்திற்குப் பொறுப்பாக உள்ள அலுவலருக்கு உடனடியாக அறிக்கையிடுதல் வேண்டும். **(குற்றவியல்கோவை, பிரிவு 109(4))**.

பொலிஸ் அலுவலர் ஒருவரின் முன்னிலையில் தவறொன்று புரியப்படுமிடத்து தவறு புரியப்பட்ட இடத்தில் அல்லது அதே அண்டிய இடத்தில் சமூகமாக இருந்த எவரேனும் ஆளின் கூற்றையும் எவரேனும் சந்தேக நபரின் கூற்றையும் அவர் பதிவு செய்ய முற்படலாம் என்பதுடன் அத்தகைய பொலிஸ் அலுவலரே தவறானது எவ்விடயத்தில் புரியப்பட்டதோ அவ் விடயத்திற்கான பொலிஸ் நிலையத்திற்குப் பொறுப்பாக உள்ள அலுவலராக இல்லாதிருந்தால் அத்தகைய பொலிஸ் நிலையத்திற்குப் பொறுப்பாக உள்ள அலுவலருக்கு நிகழ்வு பற்றி உடனடியாக அறிக்கையிடுதலும் வேண்டும். **(குற்றவியல்கோவை, பிரிவு 109 (4A))**.

குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை 109(5) மேலும் பின்வருமாறு கூறுகிறது:

*(அ) பொலிஸ் நிலையத்திற்கு பொறுப்பாக உள்ள அலுவலர் ஒருவர் அல்லது விசாரணையாளர் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவலில் இருந்து அல்லது வேறு வகையாக ஏதேனும் தவறு புரியப்படுதல் பற்றி சந்தேகிக்கப்படுவதற்குக் காரணம் இருந்தால் இதன் கீழ் காட்டப்பட்ட விதமாக இந்த அத்தியாயத்தின் கீழான புலன் விசாரணையொன்றை அவர் தாமே செய்தல் வேண்டும். அல்லது புலன் விசாரணையொன்று செய்யப்படுவதற்கு அதிகாரமளித்தல் வேண்டும்.*

*எவ்வாறாயினும், அத் தவறு பிடியாணையின்றிக் கைது செய்தகு தவறொன்றாக இருப்பின் அல்லது சமாதானக் குலைவு ஒன்று ஏற்படும் என அஞ்சுவதற்கு அவருக்கு காரணம் இருப்பின் விசாரணையாளர் ஒவ்வொருவரினதும் விடயத்தில் அவர் அத்தகைய தவறு ஒன்றில் நியாயதிக்கம் கொண்டுள்ளதான நீதிவான் நீதிமன்றத்திற்கு அறிக்கையொன்றினை உடனடியாக சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் பொலிஸ்நிலையத்திற்கு பொறுப்பாக உள்ள அலுவலர் ஒருவரின் விடயத்தில் அவர் அவருக்கு உடன் அடுத்த மேல் அலுவலருக்கு அறிக்கையொன்றினை உடனடியாகச் சமர்ப்பித்து அவ்விடயம் பற்றிய நிகழ்வுகளையும் சந்தர்ப்பங்களையும் புலனாய்வு செய்வதற்கெனவும தவறாளரை விரைவில் வெளிக்கொணருவதற்கும் கைது செய்வதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தற்கெனவும் உடனடியாக அவர் அவ்விடத்திற்கு நேரில் செல்லுதலும் வேண்டும்.*

*ஆயின் மேலும் பொலிஸ் நிலையத்திற்கு பொறுப்பாக உள்ளவரான அலுவலர் ஒருவர் அவரின் கீழ் அமைந்த அலுவலர்களுள் ஒருவரை அத்தகைய புலனாய்வைச் செய்வதற்கும் தவறாளரை வெளிக்கொணருவதற்கும் கைது செய்வதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுப்பதற்கு தமது பதிலாக அவ்விடத்திற்கு செல்லுமாறு பணிக்கலாம்.*

(ஆ) புலனாய்வொன்றினை மேற்கொள்வதற்குப் போதுமான ஏதுக்கள் இல்லையென பொலிஸ்நிலையமொன்றுக்குப் பொறுப்பாவுள்ளரான அலுவலர் ஒருவருக்கு அல்லது விசாரணையாளர் ஒருவருக்குத் தோன்றினால் அவ்விடயத்தைப் புலனாய்வு செய்வதற்கு பணிக்கப்பட்டவராவார்.

புலனாய்வொன்றைச் செய்பவரான எவரேனும் பொலிஸ் அலுவலர் அல்லது விசாரணையாளர் கொடுக்கப்பட்ட தகவல்களைக் கொண்டு பார்க்கையில் அல்லது வேறு விதத்தில் பார்க்கையில் அவ் விடயத்தின் சூழ்நிலைகளை அறிபவராகத் தோன்றுபவரும் அத்தகைய பொலிஸ் அலுவலரின் நிலையத்தினது அல்லது அடுத்திருக்கும் ஏதேனும் பொலிஸ் நிலையத்தினது எல்லைக்குள்ளாக அல்லது அத்தகைய விசாரணையாளரின் நியாயாதிக்க எல்லைக்குள்ளாக வசிப்பவருமான எவரேனும் ஆளை தமக்கு முன் வருகை தருமாறு எழுத்திலான கட்டளை மூலம் தேவைப்படுத்தலாமென்பதுடன், அங்கனம் தேவைப்படுத்தப்பட்டவாறு அத்தகைய ஆள் எவரேனும் வருதலும் வேண்டும். எவரேனும் ஆள் விசாரணையாளரால் வருகை தருமாறு தேவைப்படுத்தப்படும்போது அவ்வாறு செய்வதற்கு மறுத்தால் அல்லது தவறினால் விசாரணையாளர் அதன் மேல் அவரது தற்றுணிபில் முன்னர் சொல்லப்பட்டவாறான அத்தகைய கட்டளை மூலம் தேவைப்படுத்தப்பட்ட அத்தகைய ஆள் வருகை தருவதை உறுதிப்படுத்துவதற்கு ஆணைப்பத்திரம் ஒன்றினை வழங்கலாம். **(குற்றவியல் கேவை, பிரிவு 109(6))**.

ஒரு விசாரணையைச் செய்யும் எவரேனும் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் அல்லது விசாரணையாளர் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளோடு பழக்கப்பட்டவராக கருதப்படும் எந்த ஆளுடனும் கதைத்து விசாரிக்க முடியும் என்பதுடன் அவற்றினை அவ்வாறு பரிசோதிக்கப்பட்ட ஆளினால் செய்யப்பட்ட எந்தக் கூற்றுக்களையும் எழுத்தில் ஆக்க வேண்டும். ஆனாலும் எவ்விதமான உறுதியுரையோ அல்லது உறுதிப்படுத்துகையோ அவ்விதமான எந்த ஆளிடமிருந்தும்

பெறப்படலாகாது. அவ்வாறான முழுக் கூற்றும் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை பிரிவு 109(2) இல் கூறப்பட்ட வகையில் முழுமையாகப் பதிவு செய்யப்படும். பொலிஸ் உத்தியோகத்தர் அல்லது விசாரணையாளர் ஏதும் விளக்கத்தின் வகையில் கேள்விகளைக் கேட்பாராயின் அக் கேள்விகளும் பதில்களும் கேள்வி பதில் வடிவத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். அந்தப் பதிவுகளானவை அவ்வாறான ஆளுக்கு காட்டப்படுதல் வேண்டும் அல்லது வாசித்துக் காட்டப்படுதல் வேண்டும். அல்லது அது எழுதப்பட்ட மொழி அவருக்கு தெரியாதுபோயின் அவர் புரியக்கூடிய மொழியில் உரைபெயர்ப்புச் செய்யப்பட வேண்டுமென்பதுடன் தனது கூற்றில் விளக்கம் செய்வதற்கு கருத்துச் சேர்ப்பதற்கான சுதந்திரத்தையும் அவர் கொண்டிருப்பார். கூற்றைச் செய்பவர் கூற்றைச் செய்த பிற்பாடு அக் கூற்று முடிக்கப்பட்ட இடத்தில் அதில் ஒப்பமிடுதல் வேண்டும்.

கூற்றைப் பதிவு செய்யும் பொலிஸ் உத்தியோகத்தர் அல்லது விசாரணையாளரால் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு கூற்றின் கீழேயும் பின்வரும் சான்றைச் சேர்த்து எழுத வேண்டும் :

……………………………. ஆகிய நான் மேலே பெயர் குறிப்பிட்டவரான …………………………. என்பவரின் கூற்றை விசுவாசத்தோடும் சரியாகவும் பதிந்துள்ளேன் என இத்தாள் வெளிப்படுத்துகிறேன்.

தகவல் புத்தகத்தில் அவ்வாறான கூற்று பதிவு செய்யப்படாது போயின் அதன் உண்மைப் பிரதியானது கூடுமான விரைவில் பொலிஸ் உத்தியோகத்தரால் அல்லது விசாரணையாளரால் தகவல் புத்தகத்தில் பதியப்பட வேண்டும். அத்தகைய கூற்றிலுள்ள எவையேனும் மாற்றங்கள் அதனை அழிக்கும் ஆளினால் முதலெழுத்து ஒப்பமிடப்பட வேண்டுமென்பதுடன் மாற்றத்தின் விளைவாக நீக்கம் செய்யப்பட வேண்டிய கூற்றின் பாகம் எதுவும் வாசிக்கத் தகுந்த அத்தகைய முறையில் கீறி விடப்படுதலும் வேண்டும். **(குற்றவியல் கோவை 110(1).**

அத்தகைய அலுவலரால் அல்லது விசாரணையாளரால் அத்தகைய விடயம் பற்றிக் கேட்கப்படும் எல்லா வினாக்களுக்கும் (குற்றவியலான ஒரு குற்றச்சாட்டுக்கு அல்லது ஒரு தண்டத்திற்கு அல்லது இழப்பீட்டுக்கு அவரை உள்ளாக்கும் நாட்டம் உடையனவான அத்தகைய வினாக்கள் தவிர) உண்மையாக விடையளிக்க பிணிக்கப்பட்டவராதல் வேண்டும். **(குற்றவியல்கோவை பிரிவு 110(2)).**

எவரேனும் ஆளினால் ஏதேனும் புலனாய்வின்போது பொலிஸ் அலுவலருக்கு அளிக்கப்பட்ட கூற்று ஒன்று நீதிமன்றத்தில் அத்தகைய ஆளின் சான்றை ஒப்புறுதிப்படுத்தும் நோக்கத்திற்குத் தவிர சான்றுக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க பயன்படுத்தப்படலாம். ஆயின் ஏதேனும் புலனாய்வின்போது குற்றம்சாட்டப்பட்ட ஆள் ஒருவரினால் அளிக்கப்பட்ட கூற்றொன்று வேறொரு நேரத்தில் வேறொரு கூற்றை அவர் அளித்தார் என எண்பிப்பதற்கு மட்டுமே பயன்படுத்தப்படல் வேண்டும். இவ் உட்பிரிவில் உள்ளது எதுவும் சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்குள் அடங்கும் ஏதேனும் கூற்றிற்கு ஏற்புடையதாக அல்லது ஏதேனும் புலனாய்வின்போது ஆள் ஒருவரினால் செய்யப்பட்ட ஏதேனும் கூற்று தண்டனைச் சட்டக்கோவையின் 180 ஆம் பிரிவின் கீழான குற்றச்சாட்டு ஒன்றில் சான்றாகப் பயனப்டுத்தப்படுவதினை தடுப்பதாக கருதப்படலாகாது. **(குற்றவியல் கோவை பிரிவு 110 (3)**

குற்றவியல் நீதிமன்றம் எதுவும் அத்தகைய நீதிமன்றத்தின் விசாரணையின் கீழுள்ள அல்லது விளக்கத்தின் கீழுள்ள வழக்கொன்றில் பதியப்பட்ட கூற்றுக்களை அனுப்பி வைக்குமாறு கோரலாம் என்பதுடன் அத்தகைய கூற்றுக்களை அல்லது தகவலை வழக்கில் சான்றாகப் பயன்படுத்தாமல் அத்தகைய விசாரணையில் அல்லது விளக்கத்தில் நீதிமன்றத்திற்கு உதவுவதற்கெனப் பயன்படுத்தலாம். 444 ஆம் பிரிவில் வேறு வகையாக ஏற்பாடு செய்திருந்தாலொழிய குற்றம் சாட்டப்பட்டவரோ அவரது முகவர்களோ அக்கூற்றுக்களைக் கோருவதற்கு உரித்துடையவராக மாட்டார்கள் அன்றியும் நீதிமன்றத்தால் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது என்ற காரணத்திற்காக மட்டும் அவரோ அவர்களோ அதனைப் பார்வையிட உரித்துடையவராகமாட்டார்கள். ஆனால் அவற்றை அளித்தவர்களான பொலிஸ் அலுவலரால், அல்லது விசாரணையாளரால் அல்லது சாட்சிக்காரரால் அவர் தம் நினைவை மீட்பதற்கு எனப் பயன்படுத்தப்பட்டால் அல்லது நீதிமன்றமானது அத்தகைய பொலிஸ் அலுவலகர் அல்லது விசாரணையாளர் அல்லது சாட்சிக்காரர் முரண்படுகிறார் எனக் காட்டும் நோக்கத்திற்காக அவற்றைப் பயன்படுத்தினால் விடயத்திற்கேற்றாற்போல சான்றுக்கட்டளைச் சட்டத்தின் 161 ஆம் பிரிவின் அல்லது 145 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும். ஆயின் ஏதேனும் தவறு தொடர்பாக அத்தியாயம் XV இன் கீழான பூர்வாங்க விசாரணை நடாத்தப்படும் இடத்து அதுவரையில் பதியப்பட்டனவான சாட்சிக்காரர்களின் அத்தகைய கூற்றுக்கள் குற்றம்சாட்டப்பட்டவரின் விண்ணப்பத்தின் பேரில் விசாரணையின்போது பகிரங்க நீதிமன்றத்தில் அவர் பார்வையிடுவதற்கு என அவருக்குக் கிடைக்கச் செய்யப்படுதல் வேண்டும். **(குற்றவியல்கோவை, பிரிவு 110(4)).**

விசாரணையாளர் அல்லது பொலிஸ் அலுவலர் எவரும் தவறொன்றுக்கு குற்றம் சாட்டப்பட்டவரான ஆளுக்கு அத்தகைய ஆளுக்கு எதிரான குற்றச்சாட்டு தொடர்பாக ஏதேனும் கூற்றை அளிக்குமாறு தூண்டுவதற்கென ஏதேனும் தூண்டுதலை, அச்சுறுத்தலை, அல்லது வாக்குறுதியை கொடுக்க முனைதல் அல்லது செய்தல் ஆகாது அல்லது கொடுக்க முனைவித்தல் அல்லது செய்வித்தலாகாது. ஆனால் விசாரணையாளர் அல்லது பொலிஸ் அலுவலர் எவரும் இவ் அத்தியாயத்தின் கீழான ஏதும் புலனாய்வின்போது ஆள் எவரும் அவரது சொந்த விருப்பத்தின் பேரில்

அளிப்பதற்கு விரும்புவதான கூற்று எதனையும் அளிப்பதை ஏதேனும் எச்சரிக்கை மூலமாக அல்லது வேறு வகையாக தடுத்தல் அல்லது ஊக்கமிழக்கச் செய்தல் ஆகாது. **(குற்றவியல் கோவை, பிரிவு 111)**

பொலிஸ் நிலையமொன்றுக்கு பொறுப்பாக உள்ள எவரேனும் அலுவலர் அல்லது பிடியாணையின்றி கைதுசெய்தகு வழக்கு ஒன்றின் புலனாய்வொன்றினைச் செய்பவரான விவாரணையாளர் ஒருவர் புலனாய்வைச் செய்வதற்கு ஏதாவது ஆவணம் அல்லது பொருள் முன்வைக்கப்படுதல் அவசியமானது எனக் கருதுமிடத்து 66 ஆம் பிரிவின் கீழ் அழைப்புக்கட்டளை அல்லது கட்டளை வழங்கப்பட்டவரான அல்லது வழங்கப்படக்கூடியவரான ஆள் ஒருவர் அழைப்புக்கட்டளையில் பணிக்கப்பட்டவாறான அத்தகைய ஆவணத்தை அல்லது வேறு பொருளை முன்வைக்க மாட்டாரென நம்புவதற்கு காரணம் இருக்கின்றவிடத்தும் அல்லது அத்தகைய ஆவணம் அல்லது வேறு பொருள் எவ் ஆளின் உடைமையில் இருக்கின்றது எனத தெரியாது இருக்கின்ற இடத்தும் அத்தகைய அலுவலர் அல்லது விசாரணையாளர் ஏதேனும் இடத்தில் அதனைத் தேடலாம் அல்லது தேடுவிக்கலாம். **(குற்றவியல் கோவை பிரிவு 112(1)).**

அத்தகைய அலுவலர் அல்லது விசாரணையாளர் சாத்தியமானதாயின் தாம் நேரில் தேடுகை செய்யலாம். (குற்றவியல் கோவை பிரிவு 112(2)). ஆவர் தாமே நேரில் தேடுகை செய்ய முடியாதவராக இருப்பதோடு அந்நேரத்தில் தேடுகை செய்வதற்கு வேறு எவரேனும் தகுதிவாய்ந்தவர் அச்சமயம் சமூகமில்லாமலும் இருந்தால் அவர் கிராமசேவகர் உத்தியோகத்தர் ஒருவரை தேடுமாறு தேவைப்படுத்தலாம் என்பதுடன், அவர் அத்தகைய கிராமசேவகர் உத்தியோகத்தருக்கு தேடுகை எந்த ஆவணம் அல்லது வேறு பொருள் தொடர்பாகச் செய்யப்பட வேண்டுமோ அந்த ஆவணத்தையும் அல்லது வேறு பொருளையும் தேடப்பட வேண்டியதான இடத்தினையும் குறித்துரைக்கின்ற எழுத்திலான கட்டளையொன்றினை ஒப்படைத்தலும் வேண்டும். அத்துடன் இத்தகைய கிராம உத்தியோகத்தர் அதன் மேல் அத்தகைய இடத்தில் தேடலாம். **(குற்றவியல் கோவை பிரிவு 113(3)).**

ஒரு கிராம சேவை உத்தியோகத்தர் எனப்படுபவர் இலங்கையின் கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவில் நிர்வாகக் கடமைகளை மேற்கொள்வதற்காக மத்திய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட அரச உத்தியோகத்தராவார். இக் கிராமசேவகர் உத்தியோகத்தர் பிரிவு என்பது பிரதேச செயலகத்தின் உப அலகாகும். அவர் தனது பகுதியில் குற்றவியல் செயற்பாடுகளின் மீது கண்கானிப்பு செல்வதற்கு பொறுப்பாக இருப்பதுடன் குடியிருப்பாளர்கள் சார்பாக சான்றுப் பத்திரங்களை வழங்குவதற்கும் பொறுப்பாக உள்ளார். ஒரு சமாதான உத்தியோகத்தராக சத்தியப் பிரமாணம் செய்திருந்தால் அவர்களால் தனிநபர்களைக் கைது செய்யவும் முடியும்.

கீழ்நிலை பொலிஸ் அலுவலர் எவரும் இவ் அத்தியாயத்தின் கீழ் புலனாய்வு எதனையும் செய்துள்ளபோது அவர் அத்தகைய புலனாய்வின் முடிவினை பொலிஸ் நிலையத்திற்கு பொறுப்பாக உள்ள அலுவலருக்கு அறிக்கையிடுதல் வேண்டும். **(குற்றவியல்கோவை, பிரிவு 113).**

இவ் அத்தியாயத்தின் கீழான புலானய்வொன்றின் கீழ் பொலிஸ்நிலையத்திற்குப் பொறுப்பாக உள்ளவரான அலுவலருக்கு அல்லது விசாரணையாளருக்கு குற்றம்சாட்டப்பட்டவரை நீதிவான் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைப்பதினை நியாயமானதாக்கும் வகையில் போதுமான சான்று அல்லது நியாயமான ஏது இல்லையெனத் தோன்றினால் அத்தகைய அலுவலர் அல்லது விசாரணையாளர் அத்தகைய ஆள் கட்டுக்காவலில் இருந்தால் தவறு பற்றி விளங்குவதற்கு விசாரணை செய்வதற்கு நியாயதிக்கம் கொண்ட நீதிவான் நீதிமன்றம் முன்னர் தோன்றுமாறு தேவைப்படுத்தப்படினும் தேவைப்படுத்தப்படும்போது எவ்வாறு தோன்றுவார் என உடன்படும் முறியொன்றை அத்தகைய அலுவலர் அல்லது விசாரணையாளர் பணிக்கக்கூடியவாறாக பிணைகாரருடனோ அல்லது பிணைகாரரின்றியோ எழுதி நிறைவேற்றுவதன் மேல் அவரை விட்டுவிடுதல் வேண்டும். **(குற்றவியல்கோவை, பிரிவு 114)**

புலனாய்வின் மீது பொலிஸ் நிலையத்திற்கு பொறுப்பாக அலுவலருக்கு அல்லது விசாரணையாளருக்கு தகவலானது ஆக்கபூர்வமாகத் தோன்றினால் அத்தகைய அலுவலர் அல்லது விசாரணையாளர் கட்டுக்காவலின் கீழுள்ள சந்தேகிக்கப்பட்டவரை விடயத்தில் நியாதிக்கம் கொண்டுள்ள நீதிவான் நீதிமனறத்தின் முன்னர் கொணருதல் வேண்டும் அல்லது தவறானது பிணையில் விடத்தகுந்ததாக இருப்பதோடு சந்தேகிக்கப்பட்டவர் பிணையக் பொறுப்பு கொடுக்கக்கூடியவராகவும் இருந்தால் அத்தகைய அலுவலர் அல்லது விசாரணையாளர் அத்தகைய நீதிமன்றத்தின் முன்னர் அவர் தோன்றுவதற்கென அவரிடமிருந்து பிணைப் பொறுப்பினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். **(குற்றவியல்கோவை, பிரிவு 116(1))**

பொலிஸ் நிலையத்திற்குப் பொறுப்பாக உள்ள அலுவலர் அல்லது விசாரணையாளர் சந்தேகிக்ப்பட்ட ஆள் ஒருவரை நீதிவான் நீதிமன்றத்தின் முன்னர் கொணரும்போது அல்லது அவர் தோன்றுவதற்கென பிணைப்பொறுப்பினைப் பெற்றுக்கொள்ளும்போது அவர் அத்தகைய நீதிமன்றத்தின் முன்னர் காண்பிக்க வேண்டியதாகவுள்ள ஏதேனும் ஆயுதத்தை அல்லது வேறு பொருளை அல்லது ஆவணத்தை அல்லது மாதிரியை அல்லது மாதிரிப் பொருளை அத்தகைய நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டுமென்பதுடன் முறைப்பாட்டாளர் எவரேனும் இருப்பின் அவரையும் அத்தகைய அலுவலர் அல்லது விசாரணையாளருக்கு அவ்விடயத்தின் சூழ்நிலைகளை அறிந்தவர்களாகத் தோன்றுபவர்களான ஆட்கள் அத்தனை பேரையும் நீதிவான் அங்கு குறிக்கப்பட்ட நீதிவான் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றுவதற்கும் சந்தேகிக்கப்பட்டவருக்கு எதிரான குற்றச்சாட்டின் விடயத்தில் சான்று கொடுப்பதற்கும் என முறியொன்றை எழுதி தேவைப்படுத்தலும் வேண்டும்.

**(குற்றவியல்கோவை, பிரிவு 116(2))**

நீதிவான் பொலிஸ் அலுவலரினால் அல்லது விசாரணையாரால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது ஏதேனும் ஆயுதத்தை, அல்லது வேறு பொருளை அல்லது ஆவணத்தை, அல்லது மாதிரியை அல்லது மாதிரிப் பொருளை விடயத்திற்கேற்றாற்போல் அரசாங்க பகுப்பாய்வாளருக்கு ஆட்சேபிக்கப்பட்ட ஆவணங்களின் அரசாங்கப் பரிசோதகருக்கு விரல் அடையாளப் பதிவாளருக்கு. அல்லது அரசாங்க மருத்துவ பரிசோதகருக்கு பகுப்பாய்வு செய்வதற்கும் நீதிமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்குமென அனுப்பி வைக்கப்படல் வேண்டும். **(குற்றவியல்கோவை, பிரிவு 116(3)).**

எந்த அலுவலர் அல்லது விசாரணையாளர் முன்னிலையில் 116(1) ஆம் அல்லது 116(2) ஆம் உட்பிரிவிற்கு குறியீடு செய்யப்பட்ட முறி எழுதி நிறைவேறப்பட்டதோ அந்த அலுவலர் அல்லது விசாரணையாளர் அத்தகைய முறியினை நீதிவான் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். **(குற்றவியல் கோவை, பிரிவு 116(4)).**

எவரேனும் முறைப்பாட்டாளர் அல்லது சாட்சிக்காரர் அத்தகைய முறியினை எழுதி நிறைவேற்ற மறுத்தால் அத்தகைய அலுவலர் அல்லது விசாரணையாளர் நியாயதிக்கம் கொண்டுள்ள நீதிவான் நீதிமன்றத்திற்கு அது பற்றி அறிவித்தல் வேண்டுமென்பதுடன் அதன் மேல் குற்றம்சாட்டப்பட்டவருக்கு எதிரான குற்றச்சாட்டின் விடயம் பற்றி சான்று கொடுப்பதற்கென அத்தகைய முறைப்பாட்டாளர் அல்லது சாட்சிக்காரர் அதன் முன்னர் சமூகமளிப்பதனை உறுதிப்படுத்துவதற்காக அதன் தற்றுணிபில் ஆணைப்பத்திரம் ஒன்றை அல்லது அழைப்புக்கட்டளையொன்றை வழங்கலாம் **(குற்றவியல்கோவை, பிரிவு 116(5)).**

விசாரணையாளர் ஒருவரினால் புலனாய்வு செய்யப்படுவதான தவறு எதுவும் பற்றி விசாரணை ஒன்றை நடாத்துவதற்கு நியாயதிக்கம் கொண்டுள்ளவரான நீதிவான் எவரும் எக்கட்டத்திலும் அத்தகைய விசாரணையாளரிடமிருந்து வழக்கை மீளப்பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன், அத்தகைய வழக்கினை தாமே விசாரித்து வழங்கலாம் அல்லது விளக்கத்திற்குப் பாரப்படுத்தலாம். **(குற்றவியல்கோவை, பிரிவு 119)**

புலனாய்வு ஒவ்வொன்றும் அநாவசியமற்ற தாமதமின்றி முடிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய புலனாய்வை பதினைந்து நாட்களுக்குள் முடிக்க இயலாது விடத்து பொலிஸ் நிலையத்திற்குப் பொறுப்பாக உள்ள அலுவலர் அல்லது விசாரணையாளர் அவ் வழக்கில் நியாயதிக்கம் கொண்டுள்ளதான நீதிவான் நீதிமன்றத்திற்கு புலனாய்வு பற்றிய நிகழ்வுகளையும், முன்னேற்றங்களையும் கூறும் அறிக்கையொன்றினை பதினைந்து நாட்களின் முடிவிலும் அதன் பின்னர் புலனாய்வு முடியும்வரை ஒவ்வொரு பதினைந்து நாட் காலப்பகுதியின முடிவிலும் அனுப்பி வைத்தல் வேண்டும். **(குற்றவியல்கோவை, பிரிவு 120(1))**

புலனாய்வு முடிவடைந்ததும் பொலிஸ் நிலையத்திற்குப் பொறுப்பாக உள்ள அலுவலர் விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான அறிக்கையொன்றினை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். சந்தேகிக்கப்பட்டவர் தவறு எதனையும் புரிந்துள்ளார் என அல்லது புரிவதில் சம்பந்தப்பட்டுள்ளரென சார்த்தல் எதுவும் அறிக்கையில் இல்லாதிருந்தால் அவர் நீதிவானினால் விடுவிக்கப்படுதல் வேண்டும். சந்தேகிக்கப்பட்டவர் தவறு எதனையும் புரிந்துள்ளாரென அல்லது புரிவதில் சம்பந்தப்பட்டுள்ளரென சார்த்தல் எதுவும் அறிக்கையில் இல்லாதிருந்தால் அவர் நீதிவானினால் விடுவிக்கப்படுதல் வேண்டும். சந்தேகிக்கப்பட்டவர் தவறு எதனையும் புரிந்துள்ளாரென அல்லது புரிவதில் சம்பந்தப்பட்டுள்ளாரென அறிக்கையில் சார்த்தப்பட்டிருந்தால் இச் சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்கமைய அவருக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்படுதல் வேண்டும். **(குற்றவியல் கோவை பிரிவு 120(3))**

புலனாய்வு ஒன்றை நடாத்துவதற்காக ஆள் எவரையும் மருத்துவ அதிகாரி ஒருவரைக் கொண்டு பரிசோதித்தல் அவசியமென்று பொலிஸ்நிலையத்திற்கு பொறுப்பாக உள்ள எவரேனும் பொலிஸ் அலுவலர் கருதுமிடத்து அவர் அத்தகைய ஆளினது சம்மதத்துடன் அத்தகைய ஆளை அரசாங்க மருத்துவ அலுவலர் ஒருவரால் பரிசோதிக்கப்படச் செய்வித்தல் வேண்டும். அரசாங்க மருத்துவ அலுவலர் தமது பரிசோதனை பற்றிய முடிவினைக் குறித்த பொலிஸ் அலுவலருக்கு அறிக்கை தயாரித்தல் வேண்டும். **(குற்றவியல் கோவை பிரிவு 122(1))**

(1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆள் அங்கனம் பரிசோதிக்கப்படுவதற்கு சம்மதிக்காதவிடத்து பொலிஸ் அலுவலகர் அத்தகைய ஆளைப் பரிசோதித்து அது பற்றிய அறிக்கையிடுவதற்கென மருத்துவ அலுவலர் ஒருவருக்கு அதிகாரம் அளிக்கும் கட்டளை ஒன்றை ஆக்குமாறு கோரி (அவ் மருத்துவ அலுவலரின் பெயர் அக்கட்டளையில் குறிப்பிடப்படுதல் வேண்டும்) அப் புலனாய்வு எந் நீதிவானின் நியாயதிக்கத்திற்குள் நடைபெறுகிறதோ அந் நீதிவானுக்கு விண்ணப்பிக்கலாம். அத்தகைய கட்டளையொன்று ஆக்கப்படுமிடத்து அத்தகைய ஆள் அத்தகைய அரசாங்க மருத்துவ அலுவலரினால் பரிசோதிக்கப்பட இணங்குதல் வேண்டுமென்பதுடன், அம் மருத்துவ அலுவலர் தமது பரிசோதனையின் முடிவு குறித்து நீதிவானுக்கு அறிக்கை செய்தலும் வேண்டும். **(குற்றவியல் கோவை பிரிவு 122(2)).**

பொலிஸ் நிலையமொன்றுக்குப் பொறுப்பாக உள்ள எவரேனும் பொலிஸ் அலுவலர் புலனாய்வொன்றின் நோக்கங்களுக்காக அவ்வாறு செய்தல் அவசியம் என அபிப்பிராயப்படுமிடத்து புலனாய்வொன்றின் தவறு இழைத்தவர் எனச் சந்தேகிக்கப்படும் எவரேனும் ஆளினது ஏதேனும் விரல் அடையாளத்தை, உள்ளங்கை அடையாளத்தை, அல்லது பாதத்தின் அடையாளத்தை அல்லது உடலின் எப்பாகத்தினதும் அடையாளத்தை அல்லது அத்தகைய ஆளின் இரத்தத்தின், உமிழ்நீரின், சிறுநீரின், தலை மயிரின், அல்லது விரல் நகத்தின் மாதிரியை அல்லது விரல் நகமொன்றின் ஏதேனும் சீவலை அவரது சம்மதத்துடன் எடுக்கச் செய்யலாம். **(குற்றவியல் கோவை பிரிவு 123(1))** 123(1) ஆம் உட்பிரிவில் குறியீடு செய்யப்பட்ட ஆள் அத்தகைய ஏதேனும் அடையாள மாதிரி அல்லது சீவல் எடுக்கப்படுவதற்கு சம்மதிக்காது விடத்து அத்தகைய பொலிஸ் அலுவலர் எந்த நீதிவானின் நீதிமன்றத்தின் நியாயதிக்கத்தின் உள்ளாக அப் புலனாய்வு நடாத்தப்படுகிறதோ அந் நீதிவான் நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்து அத்தகைய ஏதேனும் அடையாளத்தை, மாதிரியை, அல்லது சீவலை எடுப்பதற்கு அத்தகைய பொலிஸ் அலுவலருக்கு அதிகாரம் அளிக்கின்ற கட்டளை ஒன்றை ஆக்குமாறு கோரலாம். அத்தகைய ஆள் அத்தகைய கட்டளைக்கு இணங்கியொழுகுதல் வேண்டும். **(குற்றவியல் கோவை பிரிவு 123(2))**

எந்த ஒரு பொலிஸ் நிலையத்தினதும் பொறுப்பான பொலிஸ் அதிகாரிக்கு விசாரணை நோக்கங்களுக்காக கையெழுத்தை ஒப்பிட வேண்டிய தேவையேற்றப்படுமிடத்து எந்த ஆளினதும் மாதிரிக் கையெழுத்தானது அவரது இணக்கத்துடன் எடுக்கப்படுதல் வேண்டும். **(குற்றவியல் கோவை பிரிவு 123(3)).**

அத்தகைய ஆள் எவரும் தமது கையெழுத்தின் மாதிரியைக் கொடுப்பதற்கு மறுக்குமிடத்து பொலிஸ் நிலையமொன்றுக்கு பொறுப்பாக உள்ளவரான அலுவலர் எவரும் அத்தகைய ஆளை கையொப்பத்தின் மாதிரியொன்றைக் கொடுக்கும்படி தேவைப்படுத்துகின்ற கட்டளையொன்றை ஆக்குமாறு எவ் நீதிவான் நீதிமன்றத்தின் நியாயதிக்கத்திற்கு உள்ளாகப் அப்புலனாய்வு செய்யப்படுகிறதோ அந் நீதிவான் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம் என்பதுடன் அத்தகைய ஆள் அத்தகைய கட்டளைக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும். **(குற்றவியல் கோவை பிரிவு 123(4))**

எந்நீதிவானுக்கு அதற்கென விண்ணப்பம் ஒன்று செய்யப்பட்டதோ அந்நீதிவான் ஒவ்வொருவரும் தோதான கட்டளைகளையும், நீதிமன்ற மன்றாணைகளையும் ஆக்குவதன் மூலமும், விடுவிப்பதன் மூலமும் புலனாய்வொன்றை மேற்கொள்வதற்கு உதவுதல் வேண்டும். அத்துடன் குறிப்பாக தவறாளியை அடையாளம் காணும் நோக்கத்திற்காக அடையாள அணிவகுப்பொன்றையும் நடாத்தலாம். அல்லது நடாத்துவதற்கு அதிகாரமளிக்கலாம் என்பதுடன் அத்தகைய நோக்கத்திற்காக அத்தகைய அணிவகுப்பில் பங்குபற்றுமாறு சந்தேகப்பட்டவரை அல்லது வேரேனும் ஆளை தேவைப்படுத்தலாம். மறைவான ஓரிடத்திலிருந்து அவரது அடையாளத்தைக் காட்டுவதற்கு சாட்சிக்காரர் ஒருவரை அனுமதிக்கலாம். அத்துடன் அவர் அத்தகைய அணிவகுப்பு பற்றிய பதிவேடொன்றைத் தயாரிக்கலாம் அல்லது தயாரிப்பிக்கலாம். **(குற்றவியல்கோவை 124).**

இச் சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும் பொலிஸ் உதவிக் கண்காணிப்பாளர் வரிசைப் பதவிக்கு குறையாத பொலிஸ் அலுவலர் எவருக்கும் தவறு ஒன்றின் தொடர்பில் இவ் அத்தியாயத்தின் கீழ் நடாத்தப்படும் ஏதேனும் புலனாய்வை எக்கட்டத்திலாயினும் பொறுப்பேற்றுக்கொள்வதும் அத்தகைய புலனாய்வினை நாத்துவதும் நெறிப்படுத்துவதும் அத்துடன் அத்தகைய நோக்கத்திற்காக புலனாய்வினை அல்லது புலனாய்வின் ஏதேனும் பாகத்தினை அவர் தேர்ந்தெடுத்த பொலிஸ் அலுவலர் எவரையும் கொண்டு அல்லது இலங்கையில் எப்பாகத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறப்பாக தெரிவு செய்யப்பட்ட பொலிஸ் அலுவலர்களைக் கொண்ட குழு ஒன்றைக் கொண்டு செய்விப்பதும் சட்டமுறையானதாதல் வேண்டும் **(குற்றவியல்கோவை பிரிவு 125)**

## [7.9] குற்றம் சாட்டப்பட்டவரால் செய்யப்பட்ட கூற்றுக்கள்

தரப்பினர் பொலிசாருக்கு ஒரு கூற்றொன்றைச் செய்த பின்பு அக் கூற்று பதிவு செய்யப்பட்ட பின்பு சட்டத்தரணி பொலிசாரிடம் அந்தப் பதிவு செய்த கூற்றைத் தாம் பார்ப்பதற்கு அனுமதிக்குமாறு கேட்க வேண்டும். அத்துடன் அக்கூற்றின் ஒரு பிரதியை வழங்குமாறும் கேட்க வேண்டும்.

தரப்பினர் பொலிசாருக்கு ஒரு கூற்றை இன்னும் செய்யாத நிலையில் தரப்பினர் பொலிசாருக்கு என்ன சொல்ல இருக்கிறார்கள் எனக் கேட்டு ஒரு கூற்றைச் செய்வது தொடர்பாக தனது தரப்பினருக்கு என்ன அறிவுரையைக் கொடுக்க வேண்டும் என அவர் தீர்மானிக்க வேண்டும். பொதுவாகக் கூறுவதாயின் இந்த விடயத்திற்கு கவனமான பரிசீலிப்பு கொடுக்கப்படுவதற்கு முன்னர் தரப்பினர் கூற்றைச் செய்வதற்கு முண்டியடிக்கக்கூடாது.

சமாதான உத்தியோகத்தர்களின் நதீவான்கள் தொடர்பில் இதுவரையான கூற்றுக்கள் தொடர்பில் குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக்கோவையின் பிரிவு 126 பின்வருமாறு தீர்மானிக்கிறது:

*அத்தியாயம் XXI இல் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகவன்றி தவறொன்றுக்காக குற்றம் சாட்டப்பட்டிருக்கும் எவரேனும் ஆளுக்கு எதிரான குற்றச்சாட்டு தொடர்பாக ஏதேனும் கூற்றினைக் கூறும்படி அத்தகைய ஆளைத் தூண்டுவதற்காக சமாதான அலுவலர் எவரும் அல்லது அதிகாரத்தில் உள்ள ஆள் எவரும் அத்தகைய ஆளுக்கு ஏதேனும் தூண்டுதலை, அச்சுறுத்தலை அல்லது வாக்குறுதியைக் கொடுத்தாலோ அளித்தாலோ அல்லது கொடுக்கச் செய்தலோ அளிக்கப்படச் செய்தலோ ஆகாது. ஆனால் ஆள் எவரும் எக்கூற்றினை தமது சொந்த விருப்பத்தின் பேரில் அளிக்க முற்படக்கூடும் அக்கூற்று எதனையும் அளிக்காதவாறு சமாதான அலுவலர் எவரும் அல்லது அதிகாரமுள்ள ஆள் ஒருவரும் ஏதேனும் முன்னெச்சரிக்கையின் மூலம் அல்லது வேறு விதத்தில் அல்லது தடுத்தல் அல்லது ஊக்கமிழக்கச் செய்தல் ஆகாது.*

தனது தரப்பினரின் விருப்புக்களுக்கு நன்மையாக இருக்கும் சமயத்தில் மாத்திரம் கூற்றுக்களைச் செய்யுமாறு பிரதிவாதி சட்டத்தரணி தனது தரப்பினருக்கு அறிவுரை வழங்குவார். ஒரு அப்பாவியாள் தனது அப்பாவித்தனத்தை தெளிவாக ஆரம்பத்திலேயே எடுத்துரைப்பர் என்பதுடன், அவ்வாறு எடுத்துரக்கத் தவறுவதானது அவரை சந்தேகத்துடன் பார்க்கச் செய்யும். அவ்வாறான தவறுகையில் இருந்து பிற்கட்டத்தில் தவறுகையான அனுமானங்கள் எழக்கூடும். சட்டத்தரணிக்கு தரப்பினர் குற்றமற்றவர் எனவும், அவரது குற்றமற்ற தன்மை மிகவும் சுலபமாக நிறுவப்படக்கூடியது எனவும் காணப்படுமாயின் உதாரணத்திற்கு அயலிட சான்றுகளைப் பரிசோதிப்பதன் மூலம் அவ்வாறு சுலபமாக நிறுவப்படக்கூடியதாக இருந்தால் தரப்பினர் கூடுமான விரைவில் ஒரு கூற்றைச் செய்வது புத்திபூர்வமானதாக இருப்பதுடன் அதன் மூலம் தரப்பினரின் கதையானது விசாரிக்கப்படக்கூடியதாக இருப்பதுடன், விடயம் தெளிவாக்கப்பட்டு தரப்பினர் தனது விடுவிப்பை பெற்றுக்கொள்ள முடியும்.

கையேட்டின் 5 ஆம் அத்தியாயத்தில் சுட்டிக்காட்டப்பட்டவாறாக ஒரு குற்றம் சாட்டப்பட்டவர் அயலிடைச் சானறுகளில் தங்கியிருக்க விரும்புவராயின் அவர் அது சம்பந்தமாக அறிவித்தல் கொடுத்து குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை 126A இல் சொல்லப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரமாக அதனை எழுப்ப வேண்டும்.

சட்டத்தரணி தரப்பினரின் அறிவுறுத்தலை அடிப்படையாகக் கொண்டு சட்டத்தரணியே கூற்றை வரைவதற்கு தரப்பினர் அனுமதிக்க வேண்டும் என அநேகமாக சட்டத்தரணி அறிவுரை கூறுவார். அதன் மூலமே கூற்றானது கவனமாகச் சொற்கள் கையாளப்படுவதுடன், தரப்பினரின் வழக்கைத் தெளிவாக முன்வைப்பதுடன் பொருத்தமான தரவுகளை மாத்திரம் உள்ளடக்கி தர்க்கரீதியான தொடர்ச்சியைக் கொண்டிருக்கக் கூடியதாக இருக்கும். இந்த நிலையில் சட்டத்தரணி பொலிஸாரிடம் கூற்றைத் தானே தயாரிப்பதாகவும், தனது தரப்பினர் கைச்சாத்திட்டு பொலிஸாரிடம் கையளிப்பர் எனவும், பொலிஸாருக்கு சட்டத்தரணி கூறுவார். பொலிசார் தரப்பினரிடமிருந்து ஒருகூற்றை எடுப்பதற்கு நாடி நிற்கின்றனர் எனத் தரப்பினருக்குச் சொல்லப்பட வேண்டுமென்பதுடன், அந்தக் கூற்றினை சட்டத்தரணி தொகுக்கின்றார் எனவும், உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனவும் அவருக்குத் தெரிவிக்க வேண்டும்.

கூற்றுக்களை அல்லது ஒப்புதல் வாக்குமூலங்களைப் பதிவு செய்வதற்கு நீதிவானுக்குள்ள அதிகாரங்கள் தொடர்பில் இதுவரைக்குமான சில செயன்முறைகள் மற்றும் அதிகாரங்கள் குற்றவியல் நடவடிக்கை சட்டக்கோவை 127 முன்வைக்கின்றன.

*(1) நீதிவான் எவரும் ஏதேனும் விசாரணை அல்லது விளக்கம் தொடஙக்வதற்கு முன்னர் எந்நேரத்திலாயினும் அவருக்குச் செய்யப்பட்டதான கூற்று எதனையும் பதிந்து: கொள்ளலாம்..*

*(2) அத்தகைய கூற்றானத 227 ஆம் பிரிவின் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் பதிவு செய்யப்பட்டு ஒப்பமிடப்படுதல் வேண்டும் என்பதுடன் தேதியிடப்படுதலும் வேண்டும். அத்துடன் வழக்கமானது எந் நீதிவான் நீதிமன்றத்தினால் விசாரிக்கப்பட அல்லது விளங்கப்பட இருக்கிறதோ அந் நீதிவான் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.*

நீதிவானினால் பதிவு செய்யப்பட்ட ஒரு கூற்றானது ஒப்புதல் வாக்குமூலத்தை உள்ளடக்குமாயின் அது முக்கியமானதாக இருக்கும் பிரிவு 127(3):

*(3) நீதிவான் எவரும் குற்ற ஒப்புதல் ஒன்றாக இருக்கும் அத்தகைய கூற்று எதனையும் அதனை அளித்த ஆளைக் கேள்விக்குட்படுத்தியதன் மேல் அது தனனிச்சையாக அளிக்கப்பட்டது என நீதிவான் நம்புவதற்கு அவருக்கு காரணமாக இருந்தாலொழிய பதிதல் ஆகாது. அத்துடன் அவர் அத்தகைய கூற்று எதனையும் பதியும்போது அத்தகைய பதிவின் அடியில் பின்வரும் பொருள்பட நினைவுக் குறிப்பொன்றை எழுதல் வேண்டும்.*

—இக் கூற்று தனனிச்சையாக அளிக்கப்பட்டது என நான் நம்புகிறேன். இது எனக்கு கேட்ககூடியதாகவும் பெறப்பட்டது என்பதுடன், இதனை அளித்த ஆளுக்கு என்னால் மீண்டும்

வாசித்து காட்டப்பட்டு அவரால் இது சரியெனவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அத்துடன் அவரால் அளிக்கப்பட்ட கூற்று முழுவதையும் செம்மையாக கொண்டிருக்கிறது‖.

சில சந்தர்ப்பங்களில் தரப்பினர் பொலிசாருக்கு முழுக்கூற்று எதனையும் செய்யாதிருப்பது சிறந்ததாக இருக்கும். உதாரணத்திற்கு தரப்பினருக்கு எதிராகச் சாட்டப்பட்ட குற்றம் தொடர்பாக எந்தச் சான்றுகளும் பொலிசாரிடம் இல்லாதிருக்கும் அத்துடன் குற்றம் சாட்டப்பட்டவரின் கூற்றினைக் கொண்டு அவர்களது வழக்கை நிர்மாணிப்பதற்கு நம்பியிருக்கக்கூடும். அவ்வாறான சமயங்களில் பொலிசாருக்கு முழக் கூற்றையும் தரப்பினர் செய்யாதிருப்பது சிறந்ததாக இருக்கும்.

## [7.10] ஒன்றும் கூறாமல் இருப்பதற்கான உரிமை

இலங்கையின் அரசியலமைப்பானது அமைதியாக இருப்பதற்கான உரிமையை உத்தரவாதப்படுத்தவில்லை. எவ்வாறாயினும் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் பிரிவு 110(2) பிரிவானது குற்றம் சாட்டப்பட்டவர் அமைதியாக இருப்பதற்கான உரிமையைப் பாதுகாக்கிறது. சந்தேக நபர் பொலிஸ் விசாரிப்பாளரின் கேள்விகளுக்குப் பதிலளிக்க கடப்பாடு உடையவராக இருக்கின்றார் ஆனால், ஒரு குற்றவியல் குற்றச்சாட்டை வெளிப்படுத்தக்கூடிய பதில்களை சந்தேக நபர் வழங்க வேண்டுமென்றில்லை. இதற்கு ஒரு விதிவிலக்காக இருப்பது பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் பிரிவு 5 ஆகும். அது பயங்கரவாத செயல் ஒன்று தொடர்புடைய தகவல்கள் எதனையும் அறிக்கையிடத் தவறுவதானது அது தண்டிக்கப்படக்கூடிய குற்றம் எனச் சொல்கிறது. சுருக்கமாகச் சொல்வதாயின் குற்றம் சாட்டப்பட்டவர் அமைதியாக இருப்பதற்கான உரிமையை PTA பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் மீளப்பெற்றுள்ளது.

தூண்டுதல், அச்சுறுத்தல் அல்லது வாக்குறுதி என்பவற்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்களானவை ஏற்றுக்கொள்ளப்படக்கூடியவை அல்ல என சான்றுகள் கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவு கூறுகிறது.

குற்றம் சாட்டப்பட்டவர் ஒன்றும் கூறாமல் அமைதியாக இருக்க விரும்பின் நீதிமன்றத்திற்கு குற்றம் சாட்டப்பட்டவர் ஒரு கூற்றை கொடுக்கமாட்டார் அதற்குப் பதிலாக சான்றுகளின் போதியதற்ற தனம்ம அல்லது இணையப் பிரதித்தரப்பு சாட்சியங்கள் ஊடாக சமர்ப்பிக்கப்பட்டவைகள் போன்ற சட்டப்பாதுகாப்புக்களில் தங்கியிருப்பாரென பிரேரணை ஊடாக நீதிமன்றத்திற்கு அறிவித்தலை அவர்கள் கொடுக்க வேண்டுமா என சட்டத்தரணிகள் தீர்மானித்துக்கொள்வர். இலங்கைச் சட்டத்துடன் நடந்துகொள்ளும் விதத்தில் சட்டத்தரணிகள் குற்றம்சாட்டப்பட்டவர் ஒரு சாட்சியாக சாட்சியளிக்க விரும்பவில்லை என்பதையும் அத்துடன் ஒரு குற்றம்சாட்டப்பட்டவர் என்ற வகையில் அவரது சாட்சியம் குற்றம் சாட்டுகைகளின் ஒரு பொதுவான மறுப்பாக இருக்குமென்பதையும் சட்டத்தரணி குற்றம் சாட்டப்பட்டவருக்கு உறுதியாகச் சொல்ல வேண்டும்.

தரப்பினர் தனது அமைதியாக இருக்கும் நிலைப்பாட்டில் உறுதியாக நிலைத்திருப்பதற்கு சட்டத்தரணி அவரைக் கவனமாக தயார்ப்படுத்த வேண்டும். அமைதியாக இருக்கத் தீர்மானித்துக்கொண்ட ஒரு தரப்பினர் மீதான தொடர்ந்து செல்லும் கேள்விகளுக்கு எதிர்ப்பினை தெரிவிக்க அல்லது எதிர்ப்பினைப் பதிவு செய்ய தேவையாயின் சட்டத்தரணி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## [7.11] தரப்பினர் மீதான பொலிசாரின் கொடுமைப்படுத்துகைகள்

காவலில் உள்ள தனது தரப்பினரை சட்டத்தரணி நேரக்காணல் செய்யும் போது தனது தரப்பினரிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலத்தைப் பெறுவதற்கு அவரை நிர்ப்பந்திக்கும் முகமாக உடல் ரீதியாக கொடுமைப்படுத்தப்பட்டுள்ளார் என சட்டத்தரணி கண்டுபிடிப்பாராயின் பொலிஸ்நிலையத்திற்குப் பொறுப்பாக உள்ள உத்தியோகத்தருக்கு உடனடியாக அவர் முறைப்பாடு செய்ய வேண்டுமென்பதுடன் அவர் முடியுமான வகையில் அவர் உடனடியாக அவரை மருத்துவ பரிசோதிப்புக்கு உட்படுத்தவும் கேட்க வேண்டும். மருத்துவ சோதனை மறுக்கப்படின் சட்டத்தரணி இவ்விடயத்தை பொலிஸ் தலைமையகத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும். கொடுமைப்படுத்தலின் விளைவாக அவர் ஏற்கனவே குற்றச்சாட்டுக் கூற்றை கொடுத்துள்ளமையால் தரப்பினர் உடனடியாக மருத்துவ பரிசோதிப்புக்கு உள்ளாக்கப்படுவது குறிப்பாக முக்கியமானது.[24]

[24] "See Chapter 4 insofer instances where a client has allegedly been tortured or/ and subjected to human right abuse.

## [7.12] அரச தரப்பின் சான்றினைப் பெற்றுக்கொள்ளல்

வழக்கு விசாரணையின் போது சாட்சியம் கொடுப்பதற்கு அரசால் எண்ணப்பட்டிருக்கும் சாட்சிகளின் ஒரு நிரலினை தரும்படி சட்டத்தரணியானவர் அரச சட்டத்தரணியிடம் கேட்க வேண்டும். சாட்சி சாட்சியம் கொடுப்பதற்கு முன்பதாக ஒரு அரச சாட்சியை நேர்காணல் செய்வதற்கு எதிர்தரப்பு சட்டத்தரணி அனுமதிக்கப்படுவதில்லை. ஆகவே யார் சாட்சிகளாக இருக்கப்போகிறார்கள் என அறிந்துகொள்வது முக்கியமானது.

இந்தச் செயன்முறையானது குற்றவியல் நடைமுறை சட்டக்கோவை பிரிவு 158 இல் கீழ்வரும் விதத்தில் முன்வைக்கப்படுகிறது.

> *(1) குற்றம் சாட்டப்பட்டவர் விளக்கத்திற்காக பாரப்படுத்தப்பட்டள்ள போது விளக்கத்திற்கு நியாயமான காலத்திற்கு முன்னர் அவர் கேட்டால் நீதிவான் முன்னிலையில் சான்று பகர்ந்துள்ள சாட்சிக்காரர்கள் பொலிசுக்கு அளித்த கூற்றுக்களினதும், குற்றம் சாட்டப்பட்டவர் பொலிசுக்கு அளித்த கூற்றுக்கள் எவையேனும் இருப்பின் அக் கூற்றுக்களினதும் அத்தாட்சிப்படுத்தக்கூடியவாறான அத்தகைய விதத்தில் அதற்குரிய கொடுப்பனவு செலுத்தப்பட்டதன் மீது இயைபான புத்தகங்கள் வைத்திருக்கப்படும் பொலிஸ்நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரினால் கொடுத்து உதவப்படுதல் வேண்டும்.*

> *(2) முதலாம் அட்டவணையின் எட்டாம் நிரையில் நீதிவான் நீதிமன்றம் ஒன்றினால் விளங்கப்படற்பாலதெனக் காட்டப்படாத தவறொன்று தொடர்பில் எவரேனும் ஆளுக்கு எதிராகக் குற்றப்பத்திரமொன்று அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்ற போது சட்டத்துறை தலைமையதிபதி நீதிநலன் கருதி குற்றப்பகர்வில் நிரற்படுத்தப்படாத எவரேனும் சாட்சிக்காரர்களினால் பொலிசுக்கு கொடுக்கப்பட்ட கூற்றுக்களைக் குற்றம் சாட்டப்பட்டவர் அல்லது அவரது சட்டத்தரணி திறந்த நீதிமன்றத்தில் பார்வையில் இடுவதற்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.*

சட்டத்தரணிகள் சரியான தகவல் கோப்புகள் ஆவணங்களை தம்மிடம் அல்லது தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கும் அவர்களைச் சென்றடைவதற்கும் தரப்பினருக்கு செயல்விளைவுடைய சட்ட உதவியை வழங்குவதற்கு அவர்களை இயலச் செய்வதற்கு போதிய நேரத்தைக் கொண்டிருப்பதையும் உறுதிப்படுத்துவது தகுதிவாய்ந்த அதிகாரிகளின் கடமையாகும். இந்தச் சென்றடைவானது மிகவும் அண்மித்த உரிய நேரத்தில் கொடுக்கப்பட வேண்டும். **(ஐ.நா. அடிப்படைக் கொள்கைகள் - உறுப்புரை 21).**

# [8] விளக்கத்துக்கு முந்திய விடயங்கள்

## [8.1] பிணை

பிணை கொடுப்பதா கொடுப்பதில்லையா என்பது இலங்கையில் (1977 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க) பிணைச் சட்டத்தினால் ஒழுங்குபடுத்தப்படுகிறது.

ஆர்வமுள்ள சட்டத்தரணி ஒருவரின் கடமையென்பதை நினைவில் வைத்தவாறு, இலங்கையில் பிணை வழங்கல் தொடர்பாக விண்ணப்பிப்பதானது, அச்சட்டத்தரணியின் பிரதான கவனயீர்ப்பொன்றாக அமையவேண்டியுள்ளதுடன், இது தொடர்பான பிணைச் சட்டத்தின் பிரிவு 2 இல் காட்டப்பட்டுள்ள வழிகாட்டல் கொள்கைகள் கீழ்வருமாறு விளக்கப்பட்டுள்ளன.

இந்தச் சட்டத்திற்கு இதற்குப் பின்பு வழங்கப்பட்ட விதிவிலக்குகளுக்கு உட்பட்டு இந்தச் சட்ட ஏற்பாடுகளை அமுல்படுத்துவதிலான வழிகாட்டல் கொள்கைகளானவை பிணை வழங்கப்படுவதானது ஒழுங்குவிதியாகவும், பிணை வழங்குவதை மறுப்பதான விதி விலக்காகவும் கருதப்படுகிறது.

குற்றம் சாட்டப்பட்டவரை விடுவிப்பதற்காக விசேடமாக செயனமுறைகளின் ஆரம்பத்தில் அல்லது கூடுமானவரைக்கு விரைவில் குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவிப்பதற்கானதோர் உறுதியான அடிப்படையை இலங்கையில் பிரதிவாத சட்டத்தரணிகளுக்கு இந்தப் பிரிவு வழங்குகிறது. மேற்படி பிரிவினைத் தொடர்ந்து பிரதிவாத சட்டத்தரணிகள் குற்றம் சாட்டப்பட்டோரின் முடியுமானவரைக்கும் விரைவிலான விடுவிப்புக்காக விசேடமான முறைசாராப் பரிந்துரைப்பு ஊடாக விசாரிப்புக்களின் பிரதிநிதித்துவம் முறைசார் பிணை விண்ணப்பங்கள் மற்றும் விசாரணை மற்றும் வழக்கின் எல்லாக் கட்டங்களின் போதும் என்பன உட்பட முடியுமான விடுவிப்புக்காக சட்டத்தரணிகள் பரிந்துரைக்க வேண்டுமென்பது மேற்படி பிரிவின் பிரகாரம் முக்கியமானதாக உள்ளது.

**பிணை வழங்குதல் பரந்த நோக்கில் இரு வகைகளாக கீழ்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றது.**

1. பிணை வழங்கக்கூடியது (பிணைச்சட்டத்தின் 4 ஆம் பிரிவு) மற்றும்
2. பிணை வழங்க முடியாத வழக்குகள் (பிணைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவு)

விசேடித்த பிரிவானது பின்வருமாறு கூறுகின்றது.

பிணை வழங்க முடியுமான குற்றமொன்றை செய்துள்ள அல்லது அவ்வாறான தவறொன்றுடன் தொடர்பான நபர்கள் பிணையில் விடுவிக்கலாம். இவ்வாறான தவறொன்றை செய்துள்ள அல்லது செய்துள்ளதாக சந்தேகிக்கப்படும் அல்லது அதனுடன் தொடர்புள்ள ஒரு ஆள், இதனகத்துப் பின்னர் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக, பிணையில் விடுவிக்கப்பட வேண்டிய உரிமையை பெறுகிறார். **(பிணைச்சட்டம் பிரிவு 4)**

03 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பிணை வழங்கற்பாலாததல்லாதா தவறு ஒன்றை புரிவதில் சம்பந்தப்பட்டுள்ளார் என அல்லது புரிந்துள்ளார் என சந்தேகிக்கப்படும் அல்லது குற்றம் சாட்டப்படும் ஆளொருவர், நீதிமன்றத்தின் தற்றுணிபின் பேரில் எந்நேரத்திலும் பிணையில் விடுவிக்கப்படலாம். **(பிணைச்சட்டம் பிரிவு 5)**

நீதிமன்றமானது மேலதிக விசாரணைக்காகவும் அல்லது விளக்கத்துக்காக போதிய சான்றுகள் இருப்பதா என்பதை கவனத்தில் எடுக்கும் என்பதுடன் குற்றம் சாட்டப்பட்டவர் தகுந்தவாறான பணத்தை தொகையுடன் அல்லது பிணைமுறி இல்லாமல் விடுவிக்கப்பட வேண்டுமா? என்பதை பிணைமுறி ஒன்றை முன்வைப்பதன் மூலம் நீதிமன்றம் முடிவுசெய்யும். **(கு.ந.ச.கோ. பிரிவு 403(2))**

பொலிஸினால் புலன் விசாரனை செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் தவறொன்று, பிணை வழங்கற்படற்பாலதான தவறொன்றாக இருக்கின்றவிடத்து, பொலிஸ் நிலைய பொருப்பதிகாரி, அந்நிலையத்தின் கட்டுக்காவலின் கீழுள்ள சந்தேக நபரை, அத்தகைய தவறின் மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள அந்நீதிவான் முன்கொணரும் படி தேவைப்படுத்தப்படலாகாது. ஆனால், அத்தகைய அலுவலர், சந்தேக நபர் கட்டுக்காவலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, 24 மணித்தியாலங்களுக்கு பிந்தாமல் அவரை எழுத்திலான பொருப்பேற்பொன்றின் மேல் விடுவித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய சந்தேக நபரை கொடுக்கப்பட்ட ஒரு திகதியன்று நீதிவான் முன் தோன்றுமாறு கட்டளையிடுதல் வேண்டும். ஆயின், புலன் விசாரனை செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் சார்த்தப்பட்ட தவறுக்கு பொதுமக்களின் கருத்தளையானது சமாதானக்குழைவை ஏற்படுத்தக்கூடிய சாத்தியக்கூறு உண்டென பொருப்பதிகாரி அப்பிப்பிராயப்படுகின்ற விடத்து, அவர், அத்தகைய தவறின் மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவான் ஒருவர் முன் கட்டுக்காவலில் உள்ள சந்தேக நபரைக் கொணருதல் வேண்டும்: அத்துடன் நீதவான், அதன் மேல் பொருத்தமானதென அவர் கருதக்கூடியவாராக 7ஆம் பிரிவின் கீழ் அல்லது 14ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும். **(பிணைச்சட்டம் பிரிவு 6(1))**

ஓராம் முற்றிவின் கீழ் அத்தகைய சந்தேக நபரினால் கொடுக்கப்பட்ட எழுத்திலான பொருப்பேற்பு ஒன்றின் மீது பொலிஸ் நிலையமொன்றின் பொறுப்பதிகாரி ஒருவரினால் விடுவிக்கப்படும் சந்தேக நபர் ஒருவர் கொடுக்கப்பட்ட திகதியன்று நீதிவான் முன் தோன்றுவதற்கு தவறுகின்றவிடத்து அவர் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்கும் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், சுறுக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், 06 மாதங்களை விஞ்ஞாத காலப்பகுதியொன்றுக்கான சாதாரண மறியற்தண்டனையால் அல்லது 1000 ரூபாவை விஞ்ஞாத குற்றப்பணமொன்றினால் அல்லது அத்தகைய மறியற் தண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டினால் தண்டிக்கப்படல் வேண்டும் அத்துடன் நீதிவான் தமது தற்றுணிவின் பேறில் விடயத்திற்கேற்றவாரு குறித்துறைக்கப்பட்டவாறான நிபந்தனைகளுக்கு அமைய, அததகைய சந்தேக நபரை விடுவிக்குமாறு கட்டளையிடுதல் வேண்டும் அல்லது கட்டுக்காவல் விளக்கமறியலில் வைத்திருக்கும் படி கட்டளையிடுதல் வேண்டும். **(பிணைச்சட்டம் பிரிவு 6(2))**

## [8.2] பிணைத் தகவல் சரிபார்ப்பு நிரல்

தரப்பினர் பிணைக்கு விண்ணப்பிக்க விரும்பினால் உரிய பிணைத்தகவல் மற்றும் கேள்விகளின் பின்வரும் சரிபார்ப்பு நிரலானது பயனுள்ளதாக இருக்க முடியும்:

- தரப்பினரின் நிதிச் சூழ்நிலைகள்
- தரப்பினர் ஒரு நிலையான தொழிலில் உள்ளவரா?
- சாத்தியமான பிணையாளர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள்.

- நிதியங்களின் ஏனைய மூலங்கள்
- தரப்பினரின் வதிவிட முகவரி
- தரப்பினரின் திருமண நிலை
- தரப்பினருக்கு பிள்ளைகள்/ தங்கியிருப்போர் உள்ளனரா்
- தரப்பினர் விமானப் பயணம் மேற்கொள்வதில் இடரை எதிர்நோக்குபவரா?
- தரப்பினரிடம் கடவுச்சீட்டு உள்ளதா்
- தரப்பினர் ஒரு பொலிஸ் நிலையத்திற்கு சென்று தனது வரவை பதிவு செய்துகொள்ள தயாராக உள்ளவரா? (நாளாந்தம், வாராந்தம், வாரத்திற்கு இருதடவை, மாதாந்தம்)
- வழக்குத் தொடுனர் பிணை விண்ணப்பத்தை எதிர்க்கப் போகின்றாரா அல்லது எதிர்க்கமாட்டாரா?
- குற்றச்சாட்டுக்களின் இயல்பான தன்மை, அவற்றின் பாரதூரம் மற்றும் அவற்றின் மீதான அரச தரப்புப்பலம்.
- தரப்பினர் குற்றவியல் பதிவுகளைக் கொண்டுள்ளாரா அல்லது இதற்கு முன்பு குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளதற்கான நிரல் ஒன்றைக் கொண்டுள்ளாரா (ஒத்த அல்லது ஏனைய குற்றங்கள்)
- தரப்பினருக்கு எதிராக வேறு விடயங்கள் தொடர்பில் நிலுவையில் உள்ள எவையேனும் பிடியாணைகள் உண்டா? (வேறுபட்ட வழக்கு இலக்கங்களில்)
- தரப்பினருக்கு எதிராக ஒத்த இயல் தன்மையில் ஏதாவது குற்றச்சாட்டுக்கள் நிலுவையில் உண்டா?
- தரப்பினர் மருத்துவ ரீதியாக / மனோ ரீதியாக / உளவியல் ரீதியாக அல்லது வஸ்து துஷ்பிரயோக நிலையில் உள்ளாரா?
- தரப்பினர் ஒரு குற்றவியல் பதிவைக் கொண்டிருப்பாராயின் அவர் வாய்மொழி உறுதியில் சிறை விடுவிப்பில் அல்லது நன்னடத்தையில் உள்ளாரா என கண்டறியுங்கள்.
- பிணை விடுவிப்பு விசாரணை இடம்பெறப்போகிறதாயின் வழக்குத்தொடுனர் விசாரணை உத்தியோத்தர் மற்றும் வேறு ஏதும் சாட்சிகளை அழைக்கப் போகிறாரா என நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.
- இந்த விடயத்தில் பாதிக்கப்பட்டவராகச் சொல்லப்பட்டவருக்கு அல்லது யாரேனும் உத்தேச வழக்குத் தொடுனர் சார்பு சாட்சிக்கு தரப்பினரரால் ஒரு அபாயம் அல்லது அச்சுறுத்தல் ஏற்படுமா? என்ற கேள்வியைப் பரிசீலித்துப் பாருங்கள்.

பிணையில் விடக்கூடிய அல்லது பிணையில் விட முடியாத குற்றம் தொடர்பாக நீதிவான் நீதிமன்றம் முன்னே ஒரு குற்றம் சாட்டப்பட்டவர் கொண்டுவரப்படும் போது அந்நீதிமன்றமானது அவரை பிணையில் தற்றுணிவின் அடிப்படையில் விடுவிக்கலாம். **(பிணைச் சட்டம் பிரிவு 7)**

- வேண்டப்படும் போது தோன்றுவேன் என ஒரு பொறுப்பை அவர் எடுத்தலின் மீது
- அவரது சொந்தப் பிணை முறியின் மீது
- ஒரு அல்லது அதற்கு மேற்பட்ட பிணைக்காரர்களுடன் பிணைமுறியை நிறைவேற்றுவதன் பேரில்
- நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டவாறாக ஒரு நியாயமான பணத்தொகையை வைப்பிலிடுவதன் ஊடாக் அல்லது
- நீதிமன்றத்தால் கட்டளையிடப்பட்ட நியாயமான சாட்சிப்படுத்தப்பட்ட பிணை விருப்பை வழங்குவதினை அடிப்படையாகக் கொண்டு

தண்டனைக் கோவையின் பின்வரும் ஏற்பாடுகளுடன் சம்பந்தப்படும் பிணை வழங்க முடியாத விடயங்கள் தொடர்பில் நீதிவான் நீதிமன்றம் தற்றுணிபைக் கொண்டிருக்கமாட்டாது:

- பிரிவு 114 – அரசுக்கு எதிரான குற்றங்கள்– ''யுத்தம் நடத்துதல் அல்லது யுத்தம் நடத்த முயற்சித்தல் அல்லது அரசுக்கு எதிராக யுத்தம் நடத்த உடந்தையாக இருத்தல்.''
- பிரிவு 191 – பிழையான சாட்சி அல்லது பொது நீதிக்கு எதிரான குற்றங்கள் மரண தண்டனைக்குரிய குற்றச்சாட்டொன்றுக்குரிய தண்டனையை பெற்றுக்கொள்ளும் எண்ணத்துடன் பிழையான சாட்சிகளைக் கொடுத்தல் அல்லது உருவாக்கல்.''
- பிரிவு 296 – மனித உடலைப் பாதிக்கும் தவறுகள் – ''கொலை செய்யும் எவரும் மரண தண்டனையைக் கொண்டு தண்டிக்கப்படுவர்.''

மேற்படி தண்டச் சட்டக்கோவையின் பிரகாரம் பிணையில் விடுவதற்கு சட்டமா அதிபரின் அனுமதி நீதிவான் நீதிமன்றத்திற்குத் தேவைப்படுகிறது. தண்டனைச் சட்டக் கோவையின் படி

பிணையில் விடமுடியாத ஏனைய குற்றங்களைப் பொறுத்தளவில் ஆளைப் பிணையில் விடுவதற்கு நீதவான் தற்றுணிவைக் கொண்டுள்ளார். **(குற்றவியல் நடவடிக்கை சட்டக்கோவை, பிரிவு 403(3)**

குற்றம் சாட்டப்பட்ட ஒருவர், பிணைமுறியில் விடுவிக்கப்படும் போது, அவர் புரிந்திருக்கிறார் என சார்த்தப்படும் தவறின் தன்மையை கருத்தில் கொண்டு முன்வைக்கப்பட வேண்டிய பணம் தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதுடன் அத்தொகையானது மிதமிஞ்சியதாக இருத்தலும் ஆகாது பிணைச்சட்டம் 11(1) அவர் கட்டுக்காவலில் இருக்கும் போது எந்நேரத்திலும் அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட தொகையை குறைக்கலாம். **(பிணைச்சட்டம் பிரிவு 11(2))**

முறி ஒவ்வொன்றினதும் தொகை வழக்கின் சூழ்நிலைகளை முறைப்படி கருத்தில் கொண்டு நிர்ணயகிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் மிகையாக இருத்தலாகாது. அத்துடன் இச் சட்டக்கோவையில் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும் கட்டுக்காவலில் உள்ள எவரும் பிணையில் விடப்பட வேண்டுமென்று மேல் நீதிமன்றத்தால் அல்லது நீதிவான் ஒருவரால் நிர்ணயிக்கப்பட்ட பிணைத்தொகை குறைக்க வேண்டுமென அல்லது அதிகரிக்கப்பட வேண்டுமென அல்லது மேல்நீதிமன்ற நீதிபதியால் அல்லது நீதிவான் ஒருவரினால் பிணையில் விடப்பட்ட எவரினதும் ஆள் கட்டுக்காவலில் விளக்க மறியலில் உட்படுத்தப்பட வேண்டுமென மேன்முறையீட்டு நீதிமன்றம் எவ்விடயத்திலும் பணிக்கலாம். **(குற்றவியல்கோவை 404).**

பிணை கொடுக்கப்பட்டதும் குறித்த வழக்கின் உண்மைகளின் அடிப்படையில் நீதவான் பொருத்தமானதாக நினைக்கக்கூடிய நிபந்தனைகளை இணைக்க முடியும் (இலங்கையை விட்டுப் புறப்படுவதிலிருந்து விண்ணப்பதாரியை தடைசெய்தல் அல்லது நீதிமன்றத்திற்கு அவரது கடவுச்சீட்டை கையளிக்கும் படி விண்ணப்பதாரியை வேண்டிக்கொள்ளும் நிபந்தனைகள் உட்பட) அத்துடன் கீழ்வருமாறு குறித்துரைப்பார்:

(அ)பிணையில் விட முடியாத குற்றங்கள் அல்லது கட்டளை.·. தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள குற்றங்கள் மற்றும்,

(ஆ) விண்ணப்பதாரி கைது செய்யப்படும் நேரத்தில் அவரால் பிணை அமைத்துக் கொடுக்கப்படும் முறை **(பிணைச்சட்டம், பிரிவு 22).**

ஆள் எவரும் பிணையில் விடப்பட முன்னர் அவர் அல்லது அவரது சொந்தப் பிணைமுறியின் மீது விடப்படுமுன்னர் விடயத்திற்கேற்றாற்போல் அலுவலர் அல்லது நீதிமன்றம் போதுமானதென எண்ணும் அத்தகைய பணத்தொகைக்கு போதுமான பிணைமுறியொன்று அத்தகைய ஆளால் எழுதி நிறைவேற்றப்படுதல் வேண்டும். அத்துடன் போதியதொரு பிணைகாரரால் அல்லது கூடுதலான பிணைகாரரால் அவர் பிணையில் விடுவிக்கப்படும் போது பிணைமுறியில் குறிப்பிடப்பட்ட நேரத்திலும், இடத்திலும் அத்தகைய ஆள் சமூகமளித்தல் வேண்டும் என்பதும் வேறு வகையாகப் பணிக்கப்படும் வரை அவ்வாறு தொடர்ந்து சமூகமளித்தல் வேண்டுமென்ற நிபந்தனைகளின் பேரில் முறி எழுதி நிறைவேற்றப்படுதல் வேண்டும். **(குற்றவியல்கோவை, பிரிவு 405).**

இப்பிரிவில் அல்லது பிணை முறி எழுதி நிறைவேற்றப்பட்டவுடன் எவ் ஆள் தோன்றுவதற்கு எழுதி நிறைவேற்றப்பட்டதோ அவ் ஆள் விடுவிக்கப்படுதல் வேண்டும் அவர் மறியற்சாலையில் இருக்கும் போது அவருக்கு பிணை அனுமதிக்கின்றதான நீதிமன்றம் மறியற்சாலைக்குப் பொறுப்பாக உள்ள அலுவலருக்கு விடுவிப்புக்கட்டளையொன்றை வழங்க வேண்டுமென்பதுடன், அக்கட்டளை கிடைத்ததும் அத்தகைய அலுவலர் அவரை விடுவித்தலும் வேண்டும் **(குற்றவியல் சட்டக்கேவை, பிரிவு 406(1)) மற்றும் பிணைச்சட்டம், பிரிவு 8)** எவ்வாறாயினும் அவ்விடயம் அல்லாத வேறு விடயத்திற்காகவும் தடுத்து வைத்திருக்க வேண்டிய எவரேனும் ஆளை விடுவிப்பதனை தேவைப்படுத்துவதாக கருதப்படுதலாகாது. **(குற்றவியல்கோவை, பிரிவு 406(2)**

ஒரு குற்றம் சாட்டப்பட்டவர் பிணையில் விடப்படும் போது அவர் ஒரு முகவரியைக் கொடுக்க வேண்டும். **(பிணைச்சட்டம், 12(1))**

குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒருவர் பிணைகாரர் ஒருவரின் பிணையில் விடுவிக்கப்படும் போது பிணையில் உள்ளவருக்கான முழுப்பொறுப்பையும் குறித்த பிணைகாரரே கொள்வார். பிழை காரணமாக, மோசடி காரணமாக அல்லது வேறு வகையாகப் போதியதற்ற பிணைக்காரர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் அல்லது பின்னர் அவர்கள் போதாதவர்களாகிவிட்டால் பிணையில் விடுவிக்கப்பட்ட ஆள் அதன் முன்னர் கொண்டுவரப்பட வேண்டுமெனப் பணித்து நீதமன்றம் பிடியாணை ஒன்றை வழங்கலாம் என்பதுடன் போதிய பிணைக்காரர்களைக் கொண்டுவருமாறு அவரைப் பணிக்கலாம். அவர் அவ்வாறு செய்யத் தவறியதன் மேல் அவரை மறியற்சாலைக்குப் பாரப்படுத்தலாம். **(குற்றவியல்கோவை, பிரிவு - 407).**

குறித்த குற்றம் சாட்டப்பட்டவர் தொடர்பான பிணைமுறியில் இருந்து தன்னை விடுவிக்கும் படி ஒரு பிணைகாரர் நீதிமன்றத்திடம் விண்ணப்பிக்கலாம். (குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவை 408(1)) அத்தகைய விண்ணப்பம் செய்யப்படுவதன் மேல் அவ்வாறு விட்டுவிடப்பட்ட ஆள் அதன் முன்னர் கொணரப்பட வேண்டுமெனப் பணித்தல் வேண்டும். (குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவை

408(2)) நீதிமன்றத்தில் தோன்றுவதன் மேல் (தாமாகவோ பிடியாணை மூலமோ) நீதிமன்றம் அம்முறியில் இருந்து அவரை விடுவிப்பதற்கு உத்தரவிடல் வேண்டும் என்பதுடன் போதுமான வேறு பிணைக்காரர்களை கொண்டுவரும் படி அத்தகைய ஆளையும் கோரலாம். அவர் அவ்வாறு கொணரத்தவறினால் அவரை கட்டுக்காவலுக்கும் பாரப்படுத்தலாம். **(குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவை 408(3))**

எவ்வாளின் வருகைக்கும் தோன்றுகைக்கும் எனப் பிணைகாரர் ஒருவர் பிணிக்கப்பட்டவராய் உள்ளாரோ, அவ்வாள் தலைமறைவாய் இருக்குமிடத்து, அவரை அப்பிணைகாரர் எந்நேரத்திலேனும் கைது செய்யலாம் எனபதுடன், அவரை உடனடியாக நீதிமன்றத்தின் முன்னர் கொண்டும் வரலாம்: அந்நீதிமன்றம் அதன் மேல் அத்தகைய பிணைகாரரின் முறியைப் பொறுப்பிலிருந்து விடுவித்து, போதுமானவரான வேறொறு பிணைகாரரைப் கொண்டுவரும்படி அத்தகைய ஆளை கோருதல் வேண்டும் என்பதுடன், அவர் அவ்வாறு செய்யத்தவறின் அவரை கட்டுக்காவலுக்கு பாரப்படுத்தலும் வேண்டும். **(குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவை 408(4))**

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் (PTA) கீழ் ஒரு குற்றத்தைச் செய்த அல்லது குற்ற ஒப்புதல் பெற்றுக்கொண்ட ஒரு குற்றம் சாட்டப்பட்ட அல்லது பரிசோதிக்கப்பட்ட ஆளுக்கு பிணைச்சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படமாட்டாது. **(பிணைச்சட்டம் பிரிவு 3(1)).**

## [8.3] மன்றுரைப்பு

### [8.3.1] குற்றமற்றவர் மற்றும் குற்றவாளி மீதான வழக்குரைகள்

குற்றம் சாட்டப்பட்ட ஒரு செயற்பாட்டை தரப்பினர் செய்யவில்லை என மறுக்கும் போது குற்ற உணர்வற்ற மன்றாட்டத்திற்குள் நுழைகிறார். குற்றவுணர்வு மன்றாட்டத்துடன் இணைக்கப்பட்ட பல்வேறுபட்ட எதிர்வாதங்கள் இந்தக் கையேட்டின் அத்தியாயம் 5 இல் முன்வைக்கப்படுகிறன.)

ஆரம்பக் கலந்தாலோசிப்பில் அல்லது அதற்கு பின்னான ஏதாவது கூட்டத்தின் போது குற்றம்சாட்டப்பட்டவர் குற்றத்தை ஒப்புக்கொண்டால் குற்றத்திற்காக மன்றாட விரும்பி நின்றால் அவ்வாறு செய்வதற்கான செயன்முறைகளை விளங்கப்படுத்துவது முக்கியமானது.

ஒரு நீதிவான் நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டவர் குற்றத்தை ஒப்புக்கொண்டால் குற்ற ஒப்புதலுக்கான தீர்ப்பு பதியப்படுமென்பதுடன் தண்டனையும் விதிக்கப்படும். **(குற்றவியல் ந. ச. கோவை, பிரிவு 183)** ஆயினும் குற்றம் சாட்டப்பட்டவர் நீதிவானின் அனுமதியுடன் தம்மீது தண்டனைத தரீப்பு அளிக்கப்பட முன்னர் எந்நேரத்திலும் தான் குற்றவாளி என்ற மன்றுரையை மீளப் பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறு மன்றுரையை மீளப் பெற்றுக்கொள்ளும் பட்சத்தில் அவர்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்படவில்லை என்றாற்போன்று விளக்கத்தை தொடங்க நீதிவான் முற்படுதல் வேண்டும். **(குற்றவியல் ந. ச. கோவை, பிரிவு 183)**.

ஒரு யூரரில்லாத உயர்நீதிமன்ற வழக்கில் நீதிபதியிடம் குற்றம்சாட்டப்பட்டவர் குற்ற ஒப்புதல் செய்து குற்ற ஒப்புதலின் விளைவைச் சரியாக விளங்கிக்கொண்டு அது திருப்திகரமாகத் தோன்றுகையில் அவ் குற்ற ஒப்புதல் குற்றப்பத்திரத்தில் பதிவு செய்யப்படுவதுடன் அதன் நிமித்தம் அவர் குற்றத் தீர்ப்பையும் பெற்றுக்கொள்வார். **(குற்றவியல்கோவை, பிரிவு 197)**

நீதிமன்றமானது விளக்கத்தை தொடங்க தயாராக இருக்கும்போது குற்றம்சாட்டப்பட்டவர் அதன் முன் தோன்றுதல் வேண்டும் அல்லது கொண்டுவரப்படுதல் வேண்டும். அத்துடன் குற்றப்பகர்வானது அவருக்கு வாசித்துக்காட்டப்பட்டு விளங்கப்படுத்தப்படுத்தல் வேண்டுமென்பதுடன் குற்றம் சாட்டப்பட்ட தவறுக்கு அவர் குற்றவாளியா அல்லது குற்றவாளி அற்றவரா என அவரிடம் கேட்கப்படுதலும் வேண்டும். **(குற்றவியல் ந. ச. கோவை, பிரிவு 204)**

குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி என மன்றுரை அளித்திருப்பின், அத்துடன் அம்மன்றுரையின் விளைவுகளை அவர் சரியாக புரிந்து கொண்டவாறு அவ்வாறு பகர்ந்துள்ளார் என நீதிபதிக்கு திருப்தியாகத் தோன்றும் நிலையில் இவ்வளக்குரையானது குற்றச்சாட்டலில் பதிவு செய்யப்படுவதுடன் அதன் மீது அவர் குற்றவாளியாக்கப்படுவார். அவர் மன்றுரைக்கும் குற்றப்பகர்வானது ஒரு கொலை பற்றியதாக இருக்கும்போது குற்றமன்றாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு நீதிபதி மறுக்கக்கூடும் என்பதுடன், குற்றம் சாட்டப்பட்டவர் குற்ற மன்றாட்டைச் செய்யவில்லை என்ற வகையில் விசாரணை தொடரப்படும். **(குற்றவியல் கோவை பிரிவு 205)**

குற்றம் சாட்டப்பட்டவர் தான் குற்றவாளியல்லரென மன்றுரைத்து ஆனால் அதே குற்றப்பகர்வின் மேல் அவர் எந்தக் குறைந்த தவறுக்கு குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கக்கூடுமோ

அந்தக் குறைந்த தவறுக்கு குற்றவாளியென மன்றுரை அளிப்பதற்கு விரும்புவதாகக் கூறுமிடத்தும், அத்தகைய மன்றுரையை ஏற்பதற்கு வழக்குத் தொடுக்கும் சட்டவரைஞர் விரும்புமிடத்து நீதிபதி அவ்வாறு செய்வதானால் நீதிநலன் திருப்தி செய்யப்படும் எனக் கருதினால் குற்றவாளி என்ற அத்தகைய சான்றுரையை பதிவு செய்யும்படி கட்டளையிடலாம் என்பதுடன் அதற்கு இணங்க அதன் பேரில் தீர்ப்பும் வழங்கலாம். அத்துடன் அதன் மேல் குற்றம் சாட்டப்பட்டவர் குற்றப்பகர்வில் இடப்பட்ட தவறிலிருந்து விடுவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய விடுவிப்பு விடுதலையாக அமைதலும் வேண்டும். **(குற்றவியல் சட்டக் கோவை, பிரிவு 207)**

*கட்டடிகே அமரசேன எதிர்இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு (உச்ச நீதிமன்ற வழக்கு இலக்கம் SC (SPL) LA இலக்கம் 59/2014)*

*இலங்கை அரசியலமைப்பின் 128 மற்றும் 154P 3(b) என்பவற்றின் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1990ம் ஆண்டின் இலக்கம் 19ஐக் காண்ட (திருத்தப்பட்ட) பிரிவு 9 இன் கீழ்வரும் மாகாணங்களுக்கான மேல் நீதிமன்றம் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ், மேன்முறையீட்டுக்கான விஷேட அனுமதியைக் கோரி நிற்கும் விண்ணப்பத்துடன் தொடர்புபட்டதாக அமைந்திருந்தது. குறித்த மேன்முறையீட்டாளர் தனது மனைவியைக் கொலை செய்த குற்றத்திற்காக குற்றவாளியாக காணப்பட்டு, அதன் பேரில் அவருக்கு மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. தனக்குரிய வாதமொன்றாக அவர், பாரதூரமான மற்றும் திடீர் ஆத்திரமூட்டல் அடிப்படையில் தண்டனைத் தணிப்பு மன்றுரை முன்வைத்தார். எனினும் குற்றவாளி என்ற தீர்ப்புக்கும், தண்டனைத் தீர்ப்புக்கும் எதிரான மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டதுடன், இலங்கையின் குற்றவியல் சட்டத்திலுள்ள பாரதூரமான, திடீர் ஆத்திரமூட்டல் அடிப்படையில் அமைந்த குற்றமற்றவர் என்ற விடயம் கலந்துறையாடப்பட்டு தள்ளி வைக்கப்பட்டது.*

### <u>[8.3.2] மன்றுரைப்பொன்றுக்கான பேச்சு வார்த்தையை கையாளுதல்</u>

மன்றுரைப்பு ஒப்பந்தமொன்றானது, ஒரு குற்றவியல் வழக்கில் வழக்குத் தொடுனருக்கும் எதிராளித் தரப்புக்கும் இடையில் ஏற்படும் இணக்கப்பாடொன்றாகும். இதனூடாக எதிராளியானவர் வழக்குத் தொடுனரின் சட்டத்தரணியிடமிருந்து ஒரு சலுகையை பெறும் நோக்கில் ஒரு குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்கு தான் குற்றவாளியென பகர்வதற்கு இணங்குவதேயாகும்.இதனூடாக நீதிநலன் திருப்தி செய்யப்படுமென நீதிபதி கருதினால் குற்றவாளியென்ற அத்தகைய மன்றுரையை பதிவு செய்யும்படி கட்டளையிடலாம். அத்துடன் அதன் பேரில் தீர்ப்பும் வழங்கலாம். **(குற்றவியல் சட்டக் கோவை, பிரிவு 207)**

வழக்கு விசாரணை ஆரம்பத்திலிருந்தே குறிப்பிட்ட தரப்பினரானவர் தனக்கெதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றத்தை ஒப்புக் கொள்ளும் போக்கு இடம்பெறுவதுடன் அதற்கமைய குற்றவாளியென்ற வழக்குரையை முன்வைக்கவும் வேண்டி நிற்பார். அதே போன்று, ஒரு தரப்பினரானவர் தனது அப்பாவித்தனத்தை (குற்றமற்றவர் என்ற வழக்குரை) தொடர்ந்து பேணிவருபவராக இருந்தாலும்கூட, வழக்கின் விளக்கக் கட்டத்துக்கு செல்ல விரும்புவதில்லை என்ற போக்கும் காணப்படுகின்றது. எதிர்தரப்பின் சட்டத்தரணி ஒருவர் என்ற வகையில் உங்களது தரப்பினரின் அனுமதியுடன்.˙.அறிவுறுத்தலுடன், நீங்கள் வழக்குத் தொடுப்புத் தரப்பின் சட்டத்தரணியை அனுகி ஒரு மன்றுரைக்கான உடன்பாடொன்றை மேற்கொள்வது இக்கட்டத்தில் பொருத்தமானதாகும். (இது தொடர்பில் வழக்குத் தொடுப்பு சட்டத்தரணியும் கூட எதிர்தரப்பின் சட்டத்தரணியான உங்களை அனுகி குறித்த விடயம் தொடர்பான மன்றுரையொன்று பற்றி கவனமெடுக்கும்படி கோரிக்கை விடலாம்.)

**முக்கியமான செயற்பாட்டு குறிப்பு** : வழக்குத் தொடுனர் தரப்பின் வழக்கு பற்றியும் அதிலுள்ள பலமான சான்றுகள் மற்றும் பலவீனங்கள் பற்றியும் நன்றாக நேரமெடுத்து, அலசி பார்க்கவும் குறித்த வழக்குத் தொடுப்புச் சட்டத்தரணி உடனடியாக அல்லது விளக்கத்துக்கு முன்போ அல்லது அது ஆரம்பிக்கும் போதோ மன்றுரையொன்றுக்காக உங்களை அனுகும் பட்சத்தில் அவ்வழக்கு பற்றி விஷேட கவனத்தை செலுத்துவதற்கு மறக்காதீர்கள்: வழக்குத் தொடுப்புத் தரப்பின் பக்கத்திலுள்ள முக்கிய விடயங்களில் பலமான நிலையொன்று இருக்கும் போது அவை முழுக்கவும் முன்வைக்கப்பட்டவாறு வழக்கை அத்தரப்பினர் தொடர்வதே வழமையான நிகழ்வாகும். அதேபோன்றே, எதிர்தரப்பின் பக்கத்தில் பலவீனங்கள் இருக்கும் பட்சத்தில் அத்தரப்பானது, ஒரு இலேசான குற்றக் காணலுக்கான தீர்ப்பொன்றை பெற்றுக் கொள்ளும் பொருட்டு மன்றுரை உடன்பாடொன்றுக்கு முன்வரலாம்.

எதிர்தரப்பின் சட்டத்தரணியானவர் மறுபக்க சட்டத்தரணியை அணுகி எதிர்தரப்புக்கும் அரச தரப்புக்கும் இடையிலுள்ள சிக்கல்களை குறைத்துக் கொள்ளும் நோக்கிலும் வழக்கு விசாரணையின் போது

நேரகாலத்தை மிச்சம் பிடித்துக் கொள்ளும் நோக்கிலும் உரையாடலை மேற்கொள்ளலாம். வழக்குத் தொடுப்பின் சட்டத்தரணியானவர், எதிர்தரப்பினருக்கு எதிரான குற்றச்சாட்டானது ஒரு பாரதூரமான குற்றமாக இருக்குமானால், அதற்மைய முழு அளவிலான வாதமொன்றை நீதிமன்றத்தில் முன்வைப்பதற்கு, ஒரு குறைந்த தன்மையிலான குற்றச்சாட்டொன்றின் மீது இணக்கம் காண்பதற்கு அரச தரப்பு தயாராக உள்ளதா என்பது பற்றி அறிந்து கொள்ள எதிர்த்தரப்பினர் விரும்பலாம்.

அதேபோன்று, எதிர்தரப்பின் சட்டத்தரணியானவர், தனது தரப்பாளருக்கு, எதிரான சான்றுகளின் அடிப்படையில் பதிலளிப்பதற்கு உண்மையிலேயே ஏதேனும் நிலைமை அரச தரப்பில் உண்டா என்பதை அரச தரப்பின் சட்டத்தரணியிடம் கேட்டறியவும் விரும்பலாம். அத்துடன் குறித்த குற்றச்சாட்டானது திருப்பி பெற்றுக் கொள்ளக் கூடாதா என்றவாறும் அரச தரப்பிடம் கேட்டறியலாம். எதிர்தரப்பின் சட்டத்தரணியாவர் இவ்வழக்குத் தொடர்பான எதிர்தரப்பு வாதத்தை அரச தரப்பின் முன்னால் வைத்து குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிரான ஏதேனும் வழக்கெழு காரணமொன்று உண்டா என வினவலாம்.

மன்றுரை உடன்பாடொன்றானது கீழ்வரும் நான்கு முக்கிய கூறுகள் உள்ளடக்குவதாக சுருக்கமாக கூறலாம்.

1 எதிர்வாதியானவர் குற்றச் செயலொன்றுக்காக குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

2 எதிர்வாதியானவர் குற்றச்சாட்டை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல விரும்புவதில்லை. (குற்றவாளியா? குற்றமற்றவரா என்பது பொருட்டல்ல)

3 எதிர்வாதியானவர் ஆரம்பக் குற்றசசாட்டை விடவும் குறைந்த பாரதூரத்தன்மையிலான குற்றச்சாட்டொன்றுக்கு “குற்றவாளி” எனக் கூற விரும்புகிறார்.

4 குறைந்த மட்ட குற்றமொன்றுக்கான மன்றுரையை அரச தரப்பினர் ஏற்றுக் கொள்ள விரும்புகின்றார்.

மன்றுரையொன்றுக்கான உடன்பாடொன்று எட்டப்படுமாயின் பல நன்மைகள் கிடைக்க இடமுண்டு. அதுவானது இரு தரப்பினரும் கலந்து கொள்ள வேண்டியுள்ள நீண்டகால குற்றவியல் வழக்கு விசாரணையை தவிர்த்துக் கொள்ள முடியுமென்பதுடன், மிகவும் பாரதூரமான குற்றச்சாட்டொன்றின் மீதான விளக்கத்தின் போது ஏற்படக்கூடிய குற்றவாளியாகக் காணப்படும் ஆபத்தையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

## <u>[8.4] முதனிலை/ விசாரணை</u>

ஒரு நீதிவான் மன்றத்தினால் சுருக்கமான விசாரனையூடாக அல்லாமல் ஒரு மேல் நீதிமன்றத்தினால் விசாரிக்கப்பட வேண்டியதாகத் தோன்றும் வழக்கொன்றுக்கான விசாரணையே பூர்வாங்க விசாரணை ஆகும்.

குற்றவியல் சட்டக் கோவை, பிரிவு 145இன் படி, குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிவான் முன்னால் தோன்றும் போது அல்லது கொண்டுவரப்படும் போது, நீதிவானானவர்,

(அ)குறித்த தவறானது அல்லது ஒன்றுக்கு கூடுதலான தவறுகள் இருப்பின் அவற்றுள் ஏதேனும் ஒன்று நீதித்துறைச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தவறொன்றாக உள்ளவிடத்து, அல்லது,

(ஆ) சட்டமா அதிபர் குற்றப்பகர்வு ஒன்றை குற்றம் புரியப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தயாரிப்பதற்கு பூர்வாங்க விசாரணையொன்றில் பதியப்பட்ட சான்று அவசியமாகும் என அபிப்பிராயம் கொண்டவராய் அவ்வாறு பணிக்கும் விடயத்தில், இதனகத்துப் பின்னர் கூறப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க பூர்வாங்க விசாரணையொன்றை நடாத்துதல் வேண்டும்.

பூர்வாங்க விசாரணையொன்றை நடாத்துகின்ற நீதிவான், அத்தகைய விசாரணையின் தொடக்கத்தில் எக்குற்றச்சாட்டு அல்லது குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணையொன்று நடாத்தப்படுகின்றதோ அக்குற்றச்சாட்டை அல்லது குற்றச்சாட்டுக்களைக், குற்றம் சாட்டப்பட்டவருக்கு வாசித்துக் காட்டுதல் வேண்டும் ஆனால் அவ்வாறு வாசித்ததன் மேல் குற்றம்சாட்டப்பட்டவர் அதற்கு மறுமொழி எதுவும் கொடுக்க வேண்டும் என தேவைப்படுத்தப்படுதலாகாது அத்தகைய மறுமொழி எதுவும் கொடுக்கப்படுமாயின், அது நீதிவானால் பதியப்படுதலாகாது மேலும் அத்தகைய மறுமொழி எதுவும் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராகச் சான்றாக ஏற்றுக் கொள்ளப்படுதலுமாகாது. **(குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவை 146)**

இயைபான தகவற்புத்தகம் வைத்திருக்கப்படும் பொலிஸ் நிலையத்திற்கு பொறுப்பாகவுள்ள அலுவலர், விசாரணை தொடக்கத்தில், நீதிவானுக்கு, புலனாய்வின் குறிப்புகள், அப்புலனாய்வின்போது

பதியப்பட்ட எல்லாக் கூற்றுக்களும் ஆகியவற்றினது இரண்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளைக் கொடுத்துதவுதல் வேண்டும். **(குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவை 147)**

அதன் பின்னர் நீதிவான் ஆனவர் வழக்கின் நிகழ்வுகளையும் சூழ்நிலைகளையும் பற்றி அறிந்தவர்கள் சத்தியத்தின் மீது அல்லது உறுதியுரையின் மீது அளிக்கும் கூற்றுக்களை குற்றஞ்சாட்டப்பட்டவரின் முன்னிலையில் இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட முறையிலும் எடுத்து அவற்றை எழுத்தில் இடுதல் வேண்டும். அவை வாக்குமூலங்கள் என அழைக்கப்படும். **(குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவை 148(1)**)

ஆயின், 148(1) இற்கு அமைவாக குற்றஞ்சாட்டப்பட்டவர் தனக்கு எதிராக தோன்றியுள்ள ஒவ்வொரு சாட்சியிடமும் கேள்விகளைக் தொடுக்கலாம் என்பதுடன் சாட்சியால் வழங்கப்படும் பதில்கள் அவரது வாக்குமூலத்தின் பகுதியாக அமைதல் வேண்டும்.

குற்றம் சாட்டப்பட்டவர் விசாரணைக்கு சமூகளிப்பதற்கு முடியாதிருப்பின் அவருக்காக ஒரு சட்டத்தரணி தோன்றலாம் என்பதுடன் நடைமுறைச்சாத்தியமாகும் வரையில் குறித்த விசாரணை முன்னெடுக்கப்படுதல் வேண்டும். **(குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவை 148(4))**

146 ஆம் பிரிவின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வாசித்துக் காட்டப்பட்ட குற்றச்சாட்டில் கூறப்பட்டுள்ள நிகழ்வுகளுக்கும் அத்தவறு அல்லது செயல் புரியப்பட்ட காலமாக அல்லது இடமாகச் சார்த்தப்படும் காலம் அல்லது இடம் தொடர்பில் அக்குற்றச்சாட்டுக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டப்படும் சான்றுக்குமிடையேயுள்ள வேறுபாடெதுவும், காலத்தைப் பொறுத்தவரை குற்றச்சாட்டானது அதனையிடுவதற்கெனச் சட்டத்தினால் வரையறுக்கப்பட்டுள்ள காலத்திற்குள்ளாக அது உண்மையில் இடப்பட்டதெனவும், இடத்தைப் பொறுத்தவரை அதனால் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் அகற்றப்படவில்லை எனவும் எண்பிக்கப்படின், முக்கியமானதாக கருதப்படலாகாது (கு.ந.ச. கோவை 149(1). குற்றச்சாட்டில் கூறப்பட்டுள்ள நிகழ்வுகளுக்கும் அதற்கு ஆதாரமாக எடுத்துக்காட்டப்பட்ட சான்றுகளுக்கும் இடையேயுள்ள வேறேதேனும் தன்மையிலான வேறுபாடு எதுவும் முக்கியமானதாகாது. ஆயின், குற்றஞ்சாட்டப்பட்டவர் அவர் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள தவறு தவிர்ந்த அந்த ஏனைய தவறானது, அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ள தவற்றை விளங்கியதன் பின்னர் சட்டக்கோவையின் ஏற்பாடுகளின் கீழ் சட்ட முறைப்படி அவருக்கு குற்றத்தீர்ப்பளிக்கக்கூடிய தவறொன்றாயில்லாது, அவர் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அத்தகைய தவறல்லாத ஏனைய தவறெதற்கும் அவர் குற்றத்தீர்பளிக்கப்படுதலாகாது. **(குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவை 149(2))**

அத்தகைய வேறுபாடெதுவும் அவ்வாறாக தோன்றியதன் மேல், நீதிவான், அவர் தக்கதென கருதக்கூடியவாரான அத்தகைய திருத்தத்தை குற்றச்சாட்டில் செய்யலாம் என்பதுடன் சாட்சிக்காரர் எவரும் மீண்டும் அழைக்கப்பட்டு வேறுபாட்டிற்கு அல்லது திருத்தப்பட்ட குற்றச்சாட்டிற்கு இயைபான விடயங்கள் எவற்றையும் பற்றி மேலும் கேள்விகள் கேட்கப்படுவதையும் அனுமதிக்கலாம். **(குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவை 149(4))**

வழக்குத் தொடுனர் தரப்பில் அழைக்கப்பட்ட சாட்சிக்காரர்களை விசாரணை செய்த பின்னர், நீதிவான், குற்றச்சாட்டைக் குற்றம் சாட்டப்பட்டவருக்கு வாசித்துக்காட்டி, அதன் தன்மையைப் பழகு மொழியில் விளங்கப்படுத்ததல் வேண்டும் என்பதுடன், சாட்சிக்காரர்களை அழைப்பதற்கு அவருக்கு உரிமை உண்டெனவும் குற்றம் சாட்டப்பட்டவர் சான்றளிக்க விரும்பினால், தமது சார்பாக தாமே சான்றளிக்கலாம் எனவும் அறிவித்தல் வேண்டும். **(குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவை 150)**

அதன் மேல் நீதிவான் குற்றவாளியை விளித்து பின்வரும் சொற்களை அல்லது அதே பொருள்படும் சொற்களை கூறுதல் வேண்டும்:

‘‘குற்றச்சாட்டுக்கு மறுமொழியாக எதையேனும் கூறுவதற்கு நீர் விரும்புகின்றீரா? நீர் அவ்வாறு கூற விரும்பினாலன்றி. எதையும் கூறுவதற்கு நீர் கடப்பாடுடையவர் அல்லர், ஆனால் நீர் கூறுவதெதுவும் எழுத்தில் எடுக்கப்பட்டு உமது விளக்கத்தின் போது சான்றாகப் பயன்படுத்தப்படும்’’ **(குற்றவியல் சட்ட கோவை - பிரிவு 151(1))**

குற்றம் சாட்டப்பட்டவர் குற்றச் சாட்டுக்கு மறுமொழியாக கூற்றெதனையும் அளிக்க முன்னர், அவரது குற்றத்தினை அவர் ஏற்றுக் கொள்ளும் படி அவரைத் தூண்டுவதற்காக அல்லது ஒப்புக் கொள்ளும் படி அவரைத் தூண்டுவதற்காக அவருக்கு முனையப்படும் சலுகை உறுதி மொழி எதிலும் நம்பிக்கை வைக்க வேண்டியதில்லை எனவும், அவருக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தலுக்காக அஞ்சவேண்டியதில்லை எனவும் ஆனால் அவ்வுறுதிமொழி அல்லது அச்சுறுத்தல் எவ்வாறிருப்பினும், அவர் அப்போது கூறுவது எத்தன்மைதானாயினும் அது, அவரது விளக்கத்தில் சான்றாக கொடுக்கப்படும் எனவும், நீதிவான் அவருக்கு கூறி அவருக்கு தெளிவாக விளங்குதல் வேண்டும். **(குற்றவியல் சட்ட கோவை - பிரிவு 151(2))**

குற்றச் சாட்டுக்கு பதிலளிக்கும் விதத்தில் குற்றம் சாட்டப்பட்டவர் விடுக்கும் ஏதேனும் கூற்றானது பதியப்படல் வேண்டும். **(குற்றவியல் சட்ட கோவைஇ பிரிவு 151(3))**

அதன் பின்பு குற்றம் சாட்டப்பட்டவர் தாமாகவே தனக்காக முன்வந்து சான்றளிக்க விருப்பமா என்பதையும் சாட்சிகளை அழைக்க விருப்பமா என்பதையும் நீதிவான் கேட்டறிவார். **(குற்றவியல் சட்ட கோவை பிரிவு 152(4))**

குற்றஞசாட்டப்பட்டவர் தனக்காக சாட்சிகளை அழைக்க விரும்பி, ஆனால் அவர்கள் நீதிமன்றத்தில் சமூகமளித்திராத நிலையில், நீதிபதி விசாரணையை தள்ளிப்போட்டு அவ்வாறான சாட்சிகளை வரவழைக்க கட்டாயப்படுத்தும் நடவடிக்கை தொடர்பில் அழைப்பாணை விடுக்கலாம். **(குற்றவியல் சட்ட கோவை பிரிவு 152(5))**

குற்றஞ்சாட்டப்பட்டவருக்கெதிரான சான்று அவரை விளக்கத்திற்குட்படுத்துவதற்கு போதியதல்லவென நீதிவான் கருதினால், விசாரனை செய்யப்படும் குறித்த குற்றச்சாட்டு சம்பந்தமாக

குற்றஞசாட்டப்பட்டவர் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டுமென கட்டளையிடுதல் வேண்டும் இதற்கான காரணங்களை நீதிவான் பதிதல் வேண்டும். **(குற்றவியல் சட்ட கோவைஇ பிரிவு 153)**

குற்றஞ்சாட்டப்பட்டவரை விளக்கத்திற்குட்படுத்துவதற்கு போதிய நான்று உள்ளதென நீதிவான் கருதினால், மேல் நீதிமன்றத்தின் முன்பான விளக்கத்திற்காக நீதிவான் அவரைப் பாரப்படுத்துதல் வேண்டும். **(குற்றவியல் சட்ட கோவை பிரிவு 154)**

குற்றஞ்சாட்டப்பட்டவரை விளக்கத்திற்குற்படுத்துவதற்கு பாரப்படுத்தும் போது, அவரது விளக்கத்தில் சான்றளிக்குமாறு எவ்வாட்களைத் தேவைப்படுத்தும்படி குற்றஞ்சாட்டப்பட்டவர் விரும்புகின்றாரோ அவ்வாட்களின் பெயர்களை (எவரேனுமிருப்பின்) அவ்விடத்தில் அப்பொழுதே வாய்மொழி மூலம் கூறுமாறு அவரை நீதிவான் தேவைப்படுத்துதல் வேண்டும். நிகழ்வுகளைப் பற்றிக் கூறுவதாக அவர் எவ்வாட்களையும் நடத்தை பற்றி மாத்திரம் பேச விரும்பவோரையும் அழைக்க உத்தேசிக்கின்றாரோ அவ்வாட்களையும் வேறுபடுத்தி அவர் கூறுதல் வேண்டும். **(குற்றவியல் சட்ட கோவை பிரிவு (155(1)**

நீதிவான் அத்தகைய சாட்சிக்காரர்களின் நிரலொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அறிவித்தலிற் குறித்துரைக்கப்படும் திகதியன்று விளக்க நீதிமன்றத்தின் முன்னர் தோன்றுமாறு தேவைப்படுத்தி அறிவித்தலொன்றை அத்தகைய ஒவ்வொரு சாட்சிக்காரருக்கும் வழங்குமாறு பிசுக்காலைப் பணித்தலும் வேண்டும். **(குற்றவியல் சட்ட கோவைஇ பிரிவு (155(2)**

குற்றஞ்சாட்டப்பட்டவர் விளக்கத்திற்குப் பாரப்படுத்தப்பட்டுள்ள போது, விளக்கத்திற்கு நியாயமான காலத்திற்கு முன்னர் கேட்டால்,நீதிமான் முன்னிலையில் சான்று பகர்ந்துள்ள சாட்சிகாரர் பொலிசுக்குக்களித்த கூற்றுக்களினதும், குற்றஞ்சாட்டப்பட்டவர் பொலிசுக்களித்த கூற்றுக்கள் எவையேனுமிருப்பின் அக்கூற்றுக்களினதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள், ஒழுங்குவிதிகள் மூலம் அமைத்து விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதத்தில் அக்கொடுப்பனவு செலுத்தப்பட்டதன் மீது, இயைபான புத்தகம் வைத்திருக்கும் பொலிஸ் நிலையத்திற்குப் பொறுப்பான அலுவலரினால் கொடுத்துதவப்படுதல் வேண்டும். **(குற்றவியல் சட்ட கோவைஇ பிரிவு 158(1))**

நடாத்தப்படும் விசாரணை ஒவ்வொன்றும், நீதிவானானவர், ஒரு மாத காலத்துக்கப்பாலும் விசாரணையை நீடிப்பது அவசியமெனக் கண்டாலொழிய, (இதற்கான காரணத்தை அவர் பதிதல் வேண்டும்) வழக்கு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டதிலிருந்து ஒரு மாதத்துக்குள்ளாக முடிக்கப்படுதல் வேண்டும். **(குற்றவியல் சட்ட கோவைஇ பிரிவு 163)**

## [8.5] விளக்கத்துக்குத் தயாராகுதல்.

குற்றம் சாட்டப்பட்டவருடனான ஆரம்ப கலந்தாலோசனைகள் முடிவுற்றதுதும், தொடர்ந்து முன்வரக்கூடிய சட்ட நடவடிக்கைகள் பற்றி தெளிவுபடுத்தியவாறு, விளக்கத்துக்கான தயார்படுத்தலையும் கூறவேண்டியது மிகவும் முக்கியமானதாகும். விளக்க விசாரணைக்காக தயார்படுத்திக் கொள்ள வேண்டிய செயல்முறையின் போது குற்றம் சாட்டப்பட்டவருடன் கவனத்தில் எடுக்க வேண்டிய கலந்துரையாடப்பட வேண்டிய மற்றும் விளங்கப்படுத்தவேண்டிய (ஏற்புடைய விதத்தில்) பிரச்சினைக்குரிய விடயங்கள் தொடர்பான சில வழிகாட்டல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### [8.5.1] பொதுவான வழக்கு மதிப்பீடு

- குற்றச்சாட்டு ஆவணம்
- எதிர்தரப்பு வாதங்கள் எவையேனும் இருப்பின்?
- கூட்டாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் உண்டா?
- வழக்கின் கோட்பாடும் (கதையும்) கருப்பொருளும்:
- பொலிஸ் அறிக்கைகள்
- அரச சாட்சிகள் மற்றும் காட்சிப்படுத்தல்களின் நிரல்
- நிகழ்தகு காரணம் சார்பு சத்தியக் கடதாசி
- பிணை வழங்க முடியுமான எதிர் பிணை வழங்க முடியாத குற்றம்
- யூரர் எதிர் யூரரற்ற விடயம்

### [8.5.2] குற்றச்சாட்டுகள்

- குற்றச்சாட்டு அல்லது குற்றப்பத்திரம்
- ஏற்புடைய நியதிச்சட்டங்கள்,பிரமாணங்கள் மற்றும் சட்ட வழக்கங்கள்
- கொண்டுவரப்படக்கூடிய விளக்கத்துக்கு முந்திய நகர்த்தல் பத்திர(அடக்குதல்) வகைகள்

### [8.5.3] ஆரம்ப சட்ட மீளாய்வு

- நியாயாதிக்கச் சிக்கல்கள்
- ஏற்புடையதான நியதிச்சட்ட கட்டுப்பாடுகள் அல்லது இல்லாவிட்டால்
- விரைவான விளக்கச் சிக்கல்கள் அல்லது மற்றும் வாதியின் தரப்புடனான மன்றுரை சார்பு பேச்சுவார்த்தைகள்
- எதிர்வாதம் எவற்றுக்கும் நிபுணர்கள்/ அறிவித்தல்கள்/ நகர்த்தல் பத்திரங்கள் தேவைப்படுமா?
- தனக்கான சொந்த எதிர்வாதத்தில் தரப்பினருக்கு உதவ முடியுமா?
- ஆரம்ப தண்டனை மதிப்பீடு
- ஆகக்குறைந்த/ ஆகக்கூடிய தண்டனை (ஏற்புடையதாயின்)

### [8.5.4] எதிர்வாத சாட்சிகள் மதிப்பீடு

- சாட்சிகளின் நிரல்
- சாட்சிகளின் ஏதேனும் கூற்றுக்கள்
- அழைக்கப்பட வேண்டிய மேலதிக சாட்சிகள் இருப்பின்
- எவையேனும் விஷேட தண்டணைகள் தேவைப்படுமா? உதாரணத்துக்கு வைத்திய அறிக்கைகள் போன்றவை
- உரிய தரப்பினர் சாட்சியம் வழங்க விரும்புகின்றாரா அல்லது அமைதியாக இருக்க விரும்புகிறாரா?

### [8.5.5] நிபுணர்கள்

- தடயவியல் நிபுணர்கள் தேவையா?
- உளவியலாளர்கள்?
- வைத்தியர்கள்/ சட்ட வைத்திய அதிகாரிகள்?
- சொத்தை அல்லது பாதிப்பை மதிப்பீடு செய்வதற்கு நிபுணர்கள் தேவையா?
- தடயவியல், குற்றச் சம்பவ இட நிபுணர்கள், நேரில் கண்ட சாட்சிகளை அடையாளம் காணக்கூடிய நிபுணர்கள் என்போர் தேவையா?

### [8.5.6] மன்றுரை மற்றும் தண்டனைக்கு தயராகுதல் (ஏற்புடையதாயின்)

- ஒவ்வொரு குற்றத் தொகுதி தொடர்பான மன்றுரை சார்பு இணக்கப்பாடுகள்?
- தண்டனையை குறைக்கக் கூடிய நிலைமைகள்?

வழக்குத் தொடுனரின் கண்டறிதல்கள் கிடைக்கப்பெற்றதும். ஆவணங்கள், பொலிஸ் அறிக்கைகள், ஒலி/ ஒளிப்பதிவு நாடாக்கள் பிடியாணை அல்லது தேடுதல் எழுத்தாணை, படங்கள், அறிக்கைகள், சாட்சிகளில் நிரல் மற்றும் எழுத்து விளக்கக்கூடிய பௌதிகச் சான்றுகள் உள்ளிட்ட உருப்படியான சான்றுகள் அனைத்தையும் மீளாய்வு செய்யுங்கள், குற்றச்சாட்டுக்களை கொண்டுவருவதில் அரச தரப்பு தாங்கி நிற்கும் உண்மைச் சம்பவத்தின் சுருக்கமானது நிகழத்தக்க ஆரம்ப காரணத்தை நிலைநிறுத்துவதுடன் அதனூடாகவே குற்றம் சாட்டப்பட்டுள்ளவருக்கான குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றில் நியாயப்படுத்தப்படுகின்றன.

தனது தரப்பினரின் சாட்சி வழங்கலின் போதுள்ள நன்மை, தீமைகளை கவனத்தில் எடுத்தல் வேண்டும். தன்னைத்தானாகவே குற்றம் சுமத்திக்கொள்ளாத உரிமையையும் ஒன்றும் கூறாமல் இருக்கும் உரிமையையும் பற்றி தன் தரப்புக்கு விளக்கிக் கூறுவது முக்கியமானதாகும்.

## [9] விளக்க விசாரணை

### [9.1] நீதிவான் மன்ற விசாரணைகள்

குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதவான் மன்றில் குற்றமற்றவர் என்று கூறும் பட்சத்தில், வழக்கு தொடுனரின் சட்டத்தரணியானவர், வழக்காளி பக்க வழக்கின் தன்மை பற்றியும் அவர் தங்கியிருக்கும் உண்மைக் காரணிகள் பற்றியும் சுருக்கமான விளக்கமொன்றை முதலில் வழங்க வேண்டும். அதே போன்று எதிர் தரப்பானவரும் தன்பக்க வாதம் பற்றியும் முன்னெடுக்கவிருக்கும் சான்றுகள் பற்றியுமானதோர் சுருக்க விளக்கத்தை வழங்குமாறு கோரப்படுவார். மேலும் சாட்சிகள் வழங்கவுள்ள

சான்றுகள் பற்றியும் அதனூடாக குற்றம் சாட்டப்பட்டவர் தங்கியிருக்கும் தன்சார்பு வாதத்துக்குரிய உண்மை நிகழ்வுகளையும் வழக்குத் தொடுனருக்கு விளக்கிக் கூறுதல் வேண்டும்.

நீதிவான் மன்றில் நிகழும் வழக்கு விசாணைகுரிய அடிப்படைக் கட்டமைப்பானது குற்றவியல் சட்டக்கோவையின் 136 ஆம் பிரிவில் பின்வறுமாறு கூறப்படுகிறது.

*(1) நீதிவான் நீதிமன்றம் ஒன்றிலான வழக்கு நடவடிக்கைகள் பின்வரும் முறைகளுள் ஒன்றின் மூலம் தொடுக்கப்படுதல் வேண்டும்:*

*(அ) விசாரணை செய்வதற்கு அல்லது விளங்குவதற்கு அத்தகைய நீதிமன்றததிற்கு நியாயதிக்கம் உள்ள தவறு ஒன்று புரியப்பட்டுள்ளதென அத்தகைய நீதிமன்றத்தின் நீதிவான் ஒருவருக்கு வாய்மூலமான அல்லது எழுத்திலான முறைப்பாடொன்றைச் செய்வதன் மூலம் ஆயின் இத்தகைய முறைப்பாடொன்று எழுத்தில் இருப்பின் வழக்குரைப்பவர் ஒருவரால் வரையப்பட்டு அவரால் மேலொப்பமிடப்படுதலும் வழக்குரைப்பவரால் ஒப்பமிடப்படுதலும் வேண்டும் அல்லது,*

*(ஆ) XI ஆம் அத்தியாயத்தின் கீழ் நியமிக்கப்பட்ட விசாரணையாளர் ஒருவரினால் அல்லது சமாதான அலுவலர் ஒருவரினால் அல்லது பகிரங்க சேவையாளர் ஒருவரினால் அல்லது மாநகர சேவையாளர் ஒருவரினால் அல்லது நகரசபையின் சேவையாளர் ஒருவரினால் அல்லது பட்டினசபையின் சேவையாளர் ஒருவரினால் மேலே கூறப்பட்டவாறான பயன்பட அமைந்த எழுத்திலான அறிக்கையொன்று அத்தகைய நீதிமன்றத்தின் நீதவான் ஒருவருக்கு செய்யப்படுவதன் மூலம் வரையப்பட்டு அவரால் மேலொப்பமிடப்படுதலும் வழக்குரைப்பவரால் ஒப்பமிடப்படுதலும் வேண்டும்; அல்லது,*

*(இ) விசாரணைசெய்வதற்கு அல்லது விளங்குவதற்கு தான் நியாயதிக்கம்கொண்டிருந்தும் தவறு ஒன்று புரியப்பட்டுள்ளது என அத்தகைய நீதிமன்றத்தினது நீதிவான் அறிந்ததன் மீது அல்லது சந்தேகப்படுவதன் மீது; ஆயின் இப்பந்தியின் கீழ் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்படும்போது எந்நீதிவான அறியவந்ததன் பேரில் அல்லது சந்தேகித்ததன் பேரில் அந் நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டனவோ அவ் நீதிவானில் அவ் வழக்கு விளங்கப்படுதலாகாது எனவும் அது வேறொரு நீதிவானில் விளங்கப்படுதல் வேண்டும் அல்லது விளக்கத்திற்காக வேறொரு நீதிவானுக்கு பாரப்படுத்தப்படுதல் வேண்டும் என தேவைப்படுத்துவதற்கு அக்குற்றம் சாட்டப்பட்டவர் அல்லது பலர் குற்றம்சாட்டப்பட்டிருக்கும்பொழுது அவர்களில் எவரும் உரித்துடையவராதல் வேண்டும், அல்லது*

*(ஈ) விசாரணை செய்வதற்கு அல்லது விளங்குவதற்கு அத்தகைய நீதிமன்றம் நியாயாதிக்கம் கொண்டுள்ள தவறொன்றைப் புரிந்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டு எவரேனும் ஆள் மன்றாணையின்றி கட்டுக்காவலுடன் அத்தகைய நீதிமன்றத்தின் நீதிவான் ஒருவர் முன்னிலையில் கொண்டுவரப்படும்போது; அல்லது*

*(உ) விசாரணை செய்வதற்கு அத்தகைய நீதிமன்றம் நியாயதிக்கம் கொண்டுள்ள தவறொன்று தொடர்பாக விசாரணை நடாத்துமாறு அத்தகைய நீதிமன்றத்தினது நீதிவான் ஒருவரைத் தேவைப்படுத்துகின்ற சட்டத்துறை தலைமையதியின் கைப்படவுள்ள ஆணைப்பத்திரம் ஒன்றின் மூலம்; அல்லது*

*(ஊ) 135 ஆம் பிரிவின் கீழ் நீதிமன்றம் ஒன்றினால் செய்யப்படும் எழுத்திலான முறைப்பாடொன்றின் மூலம்.*

*(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) ஆம் பந்தியின் கீழான எழுத்திலான அறிக்கையும், (உ) எனும் பந்தியின் கீழான சட்டமா அதிபரின் ஆணைப்பத்திரமும், (ஊ) ஆம் பந்தியின் கீழான எழுத்திலான முறைப்பாடும் அஞ்சல் மூலம் தூதுவர் மூலம் நீதிவான் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்படலாம் அல்லது அத்தகைய நீதிமன்றத்தின் நீதிவானிடத்தில் நேரில் ஒப்படைக்கப்படலாம் அது வழக்கு நடவடிக்கைகளின் பாகமாக அமைதலும் வேண்டும்.*

*(3) இதனகத்து ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர எழுத்திலான முறைப்பாடு எதுவும் நீதிவான் ஒருவரினால் ஏற்றுக் கவனிக்கப்படலாகாது.*

அதன் பின்பு, நீதிவான் குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவையின் பிரிவு 145இன் கீழ் குறித்த விடயமானது நீதிவான் மன்றம் ஒன்றிலா அல்லது மேல் நீதிமன்றம் ஒன்றிலா விசாரிக்கப்படல் வேண்டும் என்பதை கண்டறியும் பொருட்டு, பூர்வாங்க விசாரணையொன்றை மேற்கொள்ளல் வேண்டும்.

**[9.1.1] குறித்த விடயமானது மேல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்த வேண்டுமா அல்லது விடுவிக்கப்பட வேண்டுமா என்பதை கண்டறியும் பொருட்டு நீதிவானால் நடாத்தப்படும் பூர்வாங்க விசாரணை நடவடிக்கைகள்**

***பிரிவு 145 : முதனிலை/ விசாரணை***

குற்றம் சாட்டப்பட்டவர் நீதிவான் நீதிமன்றத்தின் முன் தோன்றும் போது அல்லது கொண்டுவரப்பட்டபோது, நீதிவான்—

*(அ)தவறானது அல்லது ஒன்றுக்கு கூடுதலான தவறுகள் உள்ளவிடத்து அவற்றில் ஏதேனும் ஒன்று நீதித்துறைச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையிற் காட்டப்பட்டுள்ள தவறுகளின் நிரலில் அடங்கியுள்ள தவறொன்றாக உள்ளவிடத்து; அல்லது*

*(ஆ) சட்டமா அதிபர் குற்றப்பகிர்வு ஒன்றை குற்றம் புரியப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள்ளாக தயாரிப்பதற்காக பூர்வாங்க விசாரணையொன்றில் பதிவுசெய்யப்பட்ட சான்று அவசியமாகுமென அபிப்பிராயம் கொண்டவராய் அவ்வாறு பணிக்கும் விடயத்தில், இதனகத்து பின்னர் கூறப்பட்ட ஏற்பாடுகளுக்கிணங்க பூர்வாங்க விசாரணையொன்றை நடாத்துதல் வேண்டும்.*

குற்றச்சாட்டு குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு தெரிவிக்கப்படல் வேண்டும்.

***பிரிவு 146 : குற்றச்சாட்டு குற்றம் சாட்டப்பட்டவருக்கு தெரிவிக்கப்படல் வேண்டும்.***

பூர்வாங்க விசாரணையொன்றை நடாத்துகின்ற நீதவான் அத்தகைய விசாரணையின் தொடக்கத்தில் எக்குற்றச்சாட்டு அல்லது குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணையொன்று நடாத்தப்படுகின்றதோ அக்குற்றச்சாட்டை அல்லது குற்றச்சாட்டுக்களை குற்றம்சாட்டப்பட்டவருக்கு வாசித்து காட்டுதல் வேண்டும். ஆனால் அவ்வாறு வாசித்ததன் மேல் குற்றம்சாட்டப்பட்டவர் அதற்கு மறுமொழி எதுவும் கொடுக்க வேண்டுமென தேவைப்படுத்தப்படலாகாது. அத்தகைய மறுமொழி எதுவும் கொடுக்கப்படுமாயின் அது நீதிவானால் பதியப்படலாகாது. மேலும் அத்தகைய மறுமொழி எதுவும் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக சான்றாக ஏற்றுக்கொள்ளப்படலும் ஆகாது.

வழக்குத்தொடுனர் தரப்பின் வழக்கு மற்றும் சான்றுகள் முன்வைக்கப்பட்ட பிறகு எதிர்தரப்பானது அதன் வழக்கினை முன்வைக்க வேண்டிய உரிமையை கொண்டுள்ளது. உரித்துடையவராகின்றார்.

***பிரிவு 152 : எதிராளி தரப்பிலான சான்று***

*(1) குற்றம் சாட்டப்பட்டவரின் கூற்று தொடர்பாக 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கமைவாக இணங்கியொழுகியதன் பின்னர் உடனடியாக குற்றம் சாட்டப்பட்டவர் கூற்றொன்றை அளித்திருப்பினும் சரி அளிக்காதிருப்பினும் சரி அவர் தனது சார்பாக சான்றளிக்க விரும்புகிறாரா எனவும், அவர் சாட்சிக்காரர்களை அழைக்க விரும்புகிறாரா எனவும் நீதிவான் அவரைக் கேட்டல் வேண்டும்.*

*(2) கேள்விக்கு மறுமொழியாக சான்று அளிக்க விரும்புவதாகவும், ஆனால் சாட்சிக்காரர்களை அழைக்க விரும்பவில்லையெனவும் குற்றம்சாட்டப்பட்டவர் கூறினால் நீதிவான் குற்றம்சாட்டவரின் சான்றை உடனடியாக எடுக்க முற்பட வேண்டும் என்பதுடன், குற்றம்சாட்டப்பட்டவரின் சான்று முடிவடைந்ததன் பின்னர் அவர் அவ்வாறு விரும்பினால் அவரது சட்டத்தரணி (குற்றம்சாட்டப்பட்டவர் சார்பாக பிரதிநிதி எவரும் இருந்தால்) கூறுபவை கேட்கப்படுதல் வேண்டும்.*

*(3) குற்றம் சாட்டப்பட்டவர் கேள்விக்கு மறுமொழியாக அவரது சார்பாக சான்றளிக்கவும், சாட்சிக்காரர்களை அழைக்கவும் அல்லது சாட்சிக்காரர்களை மட்டும் அழைக்க விரும்புவதாகக் கூறினால் நீதிவான் உடனடியாக அல்லது குற்றம்சாட்டப்பட்டவர் சார்பாக சட்டத்தரணி ஒருவரால் உரையொன்று நிகழ்த்தப்படவிரும்பின் அவ்வுரை முடிவடைந்த பின்னர் குற்றம்சாட்டப்பட்டவர் சான்றளிக்க விரும்பினால் அவரது சான்றையும் வழக்கின் நிகழ்வுகள், சூழ்நிலைகள் ஆகியன தொடர்பான எதையும் அறிந்தவரும் அல்லது குற்றம்சாட்டப்பட்டவரின் குற்றத்தன்மையை எண்பிக்கும் தன்மையான எதையும் அறிந்தவரும் அவரால் அழைக்கப்பட்டவருமான சாட்சிக்காரர் எவரதும் சான்றையும் பெற்றுக்கொள்ள முற்படுதல் வேண்டும்.*

*(4) அழைக்கப்பட வேண்டிய சாட்சிக்காரர்கள் தமக்கு உள்ளார்கள் எனவும் ஆனால் நீதிமன்றத்தில் சமூகமளிக்கவில்லை எனவும் குற்றம்சாட்டப்பட்டவர் கூறுவதோடு, அத்தகைய சாட்சிக்காரர் வருகை தராமைக்கு குற்றம்சாட்டப்பட்டவரின் ஏதேனும் தவறுகை அல்லது அசட்டை காரணமல்ல எனவும் அவர்கள் சமூகமளித்திருந்தால் குற்றம்சாட்டப்பட்டவரின் சார்பாக முக்கியமான சான்றுகளை அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய சாத்தியக்கூறு உண்டு எனவும் நீதிவான் திருப்தியும் அடைந்தால் நீதிவான் விசாரணையை ஒத்திவைத்து மன்றாணையை விடுக்கலாம். அல்லது அத்தகைய சாட்சிக்காரர்களின் வருகையைக் கட்டாயப்படுத்துவதற்கு வேறு நடவடிக்கைகளை எடுக்கலாம்.*

*(5) குற்றம் சாட்டப்பட்டவரின் குணநலம் தொடர்பில் மட்டும் சாட்சிக்காரராக இருக்கும் எவரையும் சாட்சிக்காரரை விளக்கத்திற்கு வருகை தருமாறு நீதிவான் பிணித்தலாகாது என்பது தவிர*

*குற்றம்சாட்டப்பட்டவரால் அல்லது மேலே சொல்லப்பட்டவாறான அத்தகைய எவரேனும் சாட்சிக்காரரால் கொடுக்கப்படும் சான்று எழுத்தில் எடுக்கப்பட வேண்டுமென்பதுடன், 148 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் வழக்குத்தொடுனர் தரப்பிலான சாட்சிக்காரரின் விடயத்தில் அவர்களுக்கு ஏற்புடையதாதலைப் போன்று எதிரி தரப்பிலான சாட்சிக்காரர்களின் விடயத்திலும் ஏற்புடையதாக வேண்டும்.*

அதன் பின்பு நீதிவான் வழக்கை தள்ளுபடி செய்வதை கவனத்தில் எடுப்பார் அல்லது மேல் நீதிமன்றத்தில் விளக்கத்துக்காக பாரப்படுத்தமுடியுமான நிலமையை கவனத்தில் எடுப்பார்.

***பிரிவு 153 : விடுவித்தல்***

*(1) குற்றம்சாட்டப்பட்டவருக்கு எதிரான சான்று அவரை விளக்கத்திற்கு உட்படுத்துவதற்குப் போதியதல்ல என நீதிவான் கருதினால், விசாரணை செய்யப்படும் குறித்த குற்றச்சாட்டு சம்பந்தமாக குற்றம்சாட்டப்பட்டவர் உடனடியாக விடுவிக்கப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடுதல் வேண்டும். இதற்கான காரணங்களை நீதிவான் பதிதல் வேண்டும். ஆனால் அத்தகைய விடுவித்தல் அதே நிகழ்வுகள் தொடர்பான பின்னைய குற்றச்சாட்டு எதற்கும் தடையாக இருத்தலாகாது.*

*ஆயின், இப்பிரிவில் அடங்கியுள்ள எதுவும் குற்றம்சாட்டப்பட்டவர் எத்தவறுக்காக கட்டளை விட்டழைத்திருக்கக்கூடுமோ அல்லது வேறுவகையில் அவர் முன்பாக கொண்டு வரப்படக்கூடுமோ அல்லது மேலே சொல்லப்பட்டவாறு தள்ளுபடி செய்யப்பட்ட குற்றச்சாட்டின் போது குற்றம்சாட்டப்பட்டவர் தவறு ஒன்றைப் புரிந்துள்ளார் எனத் தோன்றுமோ அத்தவறு தொடர்பிலான வேறு ஏதேனும் குற்றச்சாட்டினை நீதிநலன் கருதி உசிதமாக தோன்றக்கூடியவாறு அன்றில் உடனடியாக அல்லது விசாரணையின் அத்தகைய ஒத்திவைப்பின் பின்னர் புலனாய முற்பட முடியாதவாறு நீதிவானைத் தடை செய்தலாகாது.*

*(2) முறைப்பாடானது ஆதாரமற்றது என அவரால் பதியப்படவுள்ள காரணங்களுக்காக நீதிவான் கருதினால் வழக்கின் எக்கட்டத்திலும் குற்றம்சாட்டப்பட்டவரை விடுவிப்பதிலிருந்து இப் பிரிவிலுள்ள எதுவும் நீதிவானை தடைசெய்வதாக கருதப்படலாகாது.*

***பிரிவு 154 : விளக்கத்துக்காக பாரப்படுத்தல்***

*(1) குற்றம் சாட்டப்பட்டவரை விளக்கத்திற்கு உட்படுத்துவதற்கு சான்று போதியது என நீதிவான் கருதினால் மேல் நீதிமன்றத்தின் முன்பாக விளக்கத்திற்காக நீதிவான் அவரைப் பாரப்படுத்தல் வேண்டும்.*

*(2) குற்றம்சாட்டப்பட்டவர் விளக்கத்திற்கென மேல் நீதிமன்றத்தின் முன்னர் பாரப்பட்டுத்தப்பட்டதன்மேல் குற்றம்சாட்டப்பட்டவர் மேல் நீதிமன்றத்தில் அவருக்கு எதிராக குற்றப்பகர்வு செய்யப்படின், குறைந்த தவறொன்றுக்கு குற்றவாளியென வாதுரை அளிப்பதற்கு விரும்புவதாகக் கூறலாம் என்பதுடன், நீதிவான் அத்தகைய கூற்றைப் பதிதலும் வேண்டும். ஆயின் எவ்வாறாயினும் அத்தகைய ஒரு கூற்று செய்யப்பட்டுள்ளதெனும் நிகழ்வு மேல் நீதி மன்றத்திலான விளக்கத்தைத் தொடர்வதை குற்றம்சாட்டப்பட்டவரை எவ்வகையிலும் தடுப்பதாதலாகாது. ஆயின் மேலும் அத்தகைய ஒரு கூற்று அளிக்கப்பட்டுள்ளதெனும் நிகழ்வு குற்றம்சாட்டப்பட்டவரை விளக்கத்தில் எவ்வகையிலும் பங்கப்படுத்துவதாகலாகாது.*

*(3) குற்றம் சாட்டப்பட்டவர் மேல் நீதிமன்றத்தில் குற்றப்பகர்வு செய்யப்பட்டதன் மேல் எந்தக் தவறொன்றுக்கு அவர் மீது தீர்ப்பளிக்கப்பட்டிருக்கக்கூடுமோ அக் குறைந்த தவறொன்றுக்கு தாம் குற்றவாளி என வாதுரையளிப்பதற்கு விரும்புவதாகக் கூறுமிடத்து நீதிமன்றம் அத்தகைய வாதுரையை ஏற்றுக்கொள்ள விரும்பும் இடத்தில் நீதிபதி குற்றம்சாட்டப்பட்டவருக்குத் தண்டனைத் தீர்ப்பளிக்கையில் குற்றம்சாட்டப்பட்டவர் தாம் குறைந்த தவறொன்றுக்கு குற்றவாளியென வாதுரைப்பதற்கான தமது விருப்பத்தை நீதிவான் நீதிமன்றத்தில் அறிவித்திருந்தார் என்ற நிகழ்வைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.*

*(4) குற்றம் சாட்டப்பட்டவர் (2) ஆம் உட்பிரிவின் கீழ் கூற்றொன்றை செய்துள்ளார் என்ற நிகழ்வு மேல்நீதிமன்றத்தில் கோப்பிடப்பட்ட குற்றப்பகர்வின் மீது எந்தக் குறைந்த தவறொன்றுக்கு அவர் குற்றத் தீர்ப்பளித்திருக்கலாமோ அந்த தவறொன்றுக்கு அம்மேல் நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டவரால் செய்யப்பட்ட குற்றவாளியென்ற வாதுரையை ஏற்குமாறு நீதிமன்றத்தின் மீது அல்லது சட்டமா அதிபரின் மீது ஏதேனும் கடப்பாட்டைச் சுமத்துவதாக வாசித்து பொருள்கொள்ளப்படலாகாது.*

**[9.1.2] நீதிவான் நீதிமன்றம் சுருக்கமாக விசாரிக்கக்கூடிய விசாரணை**

நீதிவான் நீதிமன்றம் ஒரு விடயத்தை விளங்கும் போது அதற்குரிய பொதுவான வழிமுறை குற்றவியல் ந. சட்டக் கோவை பிரிவு 182 முதல் 192 வரை குறிப்பிடப்பட்டுள்ளது.

**பிரிவு 182 : வழக்கின் விபரங்கள் குற்றம் சாட்டப்பட்டவருக்கு கூறப்படுதல் வேண்டும்.**

*(1) குற்றம்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தின் முன் கொண்டுவரப்படுமிடத்து அல்லது தோன்றுமிடத்து குற்றம்சாட்டப்பட்டவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு போதிய ஏது இருந்தால் நீதிவான் குற்றம்சாட்டப்பட்டவருக்கு எதிராகக் குற்றச்சாட்டொன்றை வகுத்தல் வேண்டும்.*

*(2) நீதிவான் அத்தகைய குற்றச்சாட்டை குற்றம்சாட்டப்பட்டவருக்கு வாசித்துக்காட்டி அவருக்கு எதிராக ஏன் குற்றத் தீர்ப்பளிக்கக்கூடாது எனக் காட்டுவதற்கு அவரிடம் காரணம் எதுவும் இருக்கிறதா எனக் கேட்டல் வேண்டும்.*

**பிரிவு 183 : குற்றஞ்சாட்டப்பட்டவரினால் தவறு ஒப்புக் கொள்ளப்படுதல்.**

*(1) குற்றம்சாட்டப்பட்டவர் அவருக்கு எதிராக ஏன் குற்றத் தீர்ப்பு அளிக்கப்படக்கூடாது எனக் காட்டுவதற்கு அவருக்கு காரணம் எதுவும் இருக்கின்றதா எனக் கேட்கப்படுவதன்மேல் அவர் எத்தவறுக்காக குற்றம்சாட்டப்படுகின்றாரோ அத்தவறுக்கு தான் குற்றவாளியென வரைபாடில்லா குற்ற ஒப்புதல் கூற்றொன்றை அளிப்பின், அவரது கூற்றானது கூடிய மட்டும் அவர் பயனபடுத்திய சொற்களிலேயே பதியப்படுதல் வேண்டும். அத்துடன் நீதிவான் குற்றவாளியென துணிபுரையொன்றைப் பதிந்து சட்டத்திற்கிணங்க அவருக்கு தண்டனைதத்தீர்ப்பு வழங்க வேண்டுமென்பதுடன் அத்தகைய தண்டனைத் தீர்ப்பை பதிதலும் வேண்டும். குற்றம்சாட்டப்பட்டவர் நீதிவான் அனுமதியுடன் அவர்மீது தண்டனைத் தீர்ப்பு அளிக்கப்படுவதற்கு முன்னர் எந்நேரத்திலும் தான் குற்றவாளியென்ற மன்றுரையை மீளப் பெற்றுக்கொள்ளலாம் . அவ்வாறு மன்றுரையை மீளப் பெற்றுக்கொள்ளும் பட்சத்தில் அவர்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்படவில்லை என்றாற்போன்ற விளக்கத்தை தொடங்க நீதிவான் முற்படுத்தல் வேண்டும்.*

*(2) குற்றம்சாட்டப்பட்டவர் அத்தகைய கூற்றை அளிக்காவிடின் அல்லது வரைபாடில்லாக் குற்ற ஒப்புதலாக அமையாத கூற்றொன்றை அளிப்பின் விளக்கத்திறகு தயாராக இருக்கின்றாரா என நீதிவான் அவரைக் கேட்டல் வேண்டும் என்பதுடன்*

*(அ) குற்றம்சாட்டப்பட்டவர் விளக்கத்திற்கு தயாராக இருக்கின்றார் எனப் பதிலளித்தால் இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு வழக்கைவிளங்க முற்படுதல் வேண்டும்.*

*(ஆ) சான்றுபகர்வோர் வருகை தராத காரணத்தினால் அல்லது வேறு காரணத்தினால் விளக்கத்திற்கு தயாராகவில்லை எனக் குற்றம்சாட்டப்பட்டவர் பதிலளித்தால் நீதிவான் 263 ஆம் பிரிவின் (3) ஆம் இலக்க உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக அப்போது நிர்ணயிக்கப்படப்பாலானதான ஒரு நாளுக்கு வழக்கைப் பிற்போடுதல் வேண்டும். அல்லது இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் உடனடியாக வழக்கை விளங்க முற்படுதல் வேண்டும்.*

*ஆனால் இதனகத்து அடங்கியுள்ளது எதுவும் வழக்குத் தொடுனர் தரப்பிலான சான்றையும் எதிராளி தரப்பில் சமூகமாகவிருக்கூடியவர்களான அத்தகைய சாட்சிக்காரர்களின் சான்றையும் இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் எடுப்பதிலிருந்தும் அதன் பின்னர் 263 ஆம் பிரிவினது (3) உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக அவரால் எழுத்தில் பதியப்பட வேண்டிய காரணங்களுக்கான விளக்கத்தினை அவரால் நிர்ணயிக்கப்பட்டபாலதான ஒரு நாளுக்கு ஒத்திவைப்பதிலிருந்து நீதிவானைத் தடைசெய்தலாகாது.*

**பிரிவு 184 : விளக்கத்துக்கான நடவடிக்கை முறை**

*(1) நீதிவான் குற்றம்சாட்டப்பட்டவரை விளங்க முற்படும்பொழுது முறையே வழக்குத் தொடுனர் தரப்பிலும் அல்லது எதிரி தரப்பிலும் அளிக்கப்படக்கூடியவாறான எல்லாச் சான்றுகளையும் எடுத்தல் வேண்டும்.*

*(2) வழக்குத்தொடுனர் தரப்பில் அழைக்கப்பட்ட எல்லாச் சாட்சிக்காரர்களையும் நீதிவானினால் அழைக்கப்பட்ட, மீள் அழைக்கப்பட்டவர்களுமான எல்லாச் சாட்சிக்காரர்களையும் குற்றம்சாட்டப்பட்டவர் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.*

*(3) முறைப்பாட்டாளரும் குற்றம்சாட்டப்பட்டவரும் அல்லது அவர்களது வழக்கு உரைப்பவர்களும் அவர்களது வழக்குகளை முறையே உரைக்கத் தொடங்குவதற்கு உரித்துடையவராதல் வேண்டும். ஆனால் முறைப்பாட்டாளர் அல்லது வழக்குரைப்பவர் குற்றம்சாட்டப்பட்டவராலோ அல்லது அவர் சார்பாகவோ கொடுக்கப்பட்ட சான்றின் மீது விடை என்ற வகையில் அவதானிப்பெதையும் கூறுவதற்கு உரித்துடையராதலாகாது*

**பிரிவு 185: தீர்ப்பு**

*நீதிவான் வழக்குத்தொடுனரினதும் எதிர்தரப்பினதும் சான்றையும் அவர் தமது சொந்தப் பிரேரணையின் பேரில் காண்பிக்கச் செய்யக்கூடிய அத்தகைய மேலதிக (சான்று ஏதேனும் இருப்பின்) சான்றையும் எடுத்தபின்னர் குற்றம்சாட்டப்பட்டவர் குற்றவாளி அல்லர் எனக் காண்பின் விடுதலை செய்வதற்கான துணிவுரையொன்றை உடனடியாக அவர் பதிதல் வேண்டும். அவர் குற்றம்சாட்டப்பட்டவரைக் குற்றவாளியாகக் காணின் குற்றவாளியென துணிவுரையொன்றை வரைந்து குற்றம்சாட்டப்பட்டவருக்கு சட்டத்திற்கிணங்க தண்டனைத் தீர்ப்பு வழங்கல் வேண்டுமென்பதுடன் அத்தகைய தண்டனைத் தீர்ப்பைப் பதிதலும் வேண்டும்.*

***பிரிவு 186: குற்றம் சாட்டப்பட்டவரை எப்போதேனும் விடுவிப்பதற்கு நீதிவானுக்குள்ள தத்துவம்***

*இதனகத்து முன்னர் அடங்கியுள்ளது எதுவும் வழக்கின் எக்கட்டத்திலாயினும் குற்றம்சாட்டப்பட்டவரை நீதிவான் விடுவிப்பதிலிருந்து அவரைத் தடைசெய்வதாக கருதப்படுதலாகாது. ஆனால் அவ்வாறு செய்வதற்கான காரணங்களை அவர் பதிதல் வேண்டும். ஆயின் நீதிவான் ஆனவர் வழக்கில் மேலும் நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடாத்துதல் குற்றம் சாட்டப்பட்டவரைக் குற்றவாளியெனக் காணுவதற்கு இட்டுச்செல்லாது எனத் திருப்தியடைந்தால் இதற்கான காரணங்களை அவர் பதிதல் வேண்டும். அவர் குற்றம் சாட்டப்பட்டவரை விடுதலை செய்தல் வேண்டும்.*

***பிரிவு 187: நடவடிக்கைகளின் போது வித்தியாசமான தவறு வெளிக்காட்டப்பட்டால் என்ன செய்ய வேண்டும்.***

*(1) குற்றச்சாட்டில் குறித்துரைக்கப்பட்ட தவறல்லாத தவறாக இருப்பதும் அந்த நீதிவான் விளங்குவதற்கு நியாயதிக்கம் கொண்டிருப்பதுமான ஒரு தவறை குற்றம்சாட்டப்பட்டுள்ளவர் புரிந்துள்ளார் என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்ட அல்லது எண்பிக்கப்பட்ட ஒரு நிகழ்வுகளில் இருந்து தோன்றினால் நீதிவான் குற்றம்சாட்டப்பட்டவருக்கு அத்தகைய தவறுக்காக குற்றத் தீர்ப்பளிக்கலாம். அவர் அவ்வாறு குற்றத்தீர்ப்பளிப்பதற்கு முன்னர் குற்றச்சாட்டொன்றை வகுத்து அதனை குற்றம் சாட்டப்பட்டவருக்கு வாசித்துக்காட்டி விளக்குதல் வேண்டும். அத்துடன் மாற்றப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பிலான XVI அத்தியாயத்தின் அத்தகைய ஏற்பாடுகள் இப்பிரிவின் கீழ் வகுக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.*

*(2) ஒப்புக்கொள்ளப்பட்ட அல்லது எண்பிக்கப்பட்ட நிகழ்வுகளில் இருந்து குற்றம் சாட்டப்பட்டவர் —*

*(அ) நீதித்துறைச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் தரப்பட்ட நிரலுக்குள் அடங்கும் தவறொன்றைப் புரிந்துள்ளார் எனத் தோன்றினால் நீதிவான் அவருக்கு குற்றத் தீர்ப்பளித்தலாகாது. ஆனால் அவ் அத்தியாயத்தின் கீழ் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்துவிட்டு XV ஆம் அத்தியாயத்தின் கீழ் புதிதாக நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும்; அல்லது*

*(ஆ) அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நிரலுக்குள் அடங்காததும் அவரால் சுருக்கமுறையாக விளங்கப்பட முடியாததுமான தவறொன்றைப் புரிந்துள்ளாரெனத் தோன்றினால் நீதிவான் அவருக்கு குற்றத் தீர்ப்பளித்தலாகாது. ஆனால் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்துவிட்டு அவ் வழக்கு பற்றி சட்டமா அதிபருக்கு அறிவித்து அவரது அறிவுரைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.*

***பிரிவு 188: முறைப்பாட்டாளர் சமூகமளிக்காத நிலையில் குற்றம் சாட்டப்பட்டவர் விடுவிக்கப்படலாம்.***

*(1) பிரிவு 136 (1) (அ) என்பதன் கீழான முறைப்பாட்டின் கீழ் அழைப்புக்கட்டளை விடுக்கப்பட்டு குற்றம்சாட்டப்பட்டவர் தோன்றுவதற்கென நியமிக்கப்பட்ட அந்த ஆள் அன்றும், அதேநேரத்திலும் அல்லது விசாரணை எப்போதைக்கு ஒத்திவைக்கக்கூடுமோ அப்போது முறைப்பாட்டாளர் தோன்றாவிட்டால் நீதிவான் இதனகத்து முன்னர் உள்ள எது எப்படியிருப்பினும் (வழக்கின் விசாரணையை வேறொரு நேரத்திற்கு அல்லது தேதிக்கு ஒத்திவைப்பது தக்கது என எக்காரணத்திற்காகவும் அவர் எண்ணினாலொழிய) குற்றம் சாட்டப்பட்டவரை விடுதலை செய்ய வேண்டும் என்பதோடு, இதனகத்து பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அரச செலவுத் தொகைகளை முறைப்பாட்டாளர் செலுத்த வேண்டுமெனக் கட்டளையொன்றையும் ஆக்கலாம்:*

*ஆயின் முறைப்பாட்டாளர் நியாயமான காலத்திற்குள் தோன்றி அவர் வருகை தராமை சுகயீனத்தால், விபத்தினால், அல்லது அவரது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட வேறு காரணத்தினால் நிகழ்ந்தது என நீதிவானைத் திருப்திப்படுத்தினால் அப்போது நீதிவான் இவ் உட்பிரிவின் கீழாக்கப்பட்ட கட்டளை எதனையும் நீக்குதல் வேண்டும்.*

*(2)* விடயத்திற்கு ஏற்றவாறு 136(1) (ஆ) எனும் பிரிவின் கீழான அல்லது 136(1) (இ) எனும் பிரிவின் கீழான முறைப்பாட்டின் மேல் அழைப்புக்கட்டளை விடுக்கப்பட்டு விளக்கத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட நாள் அன்று வழக்குத் தொடுப்பு தரப்பினர் ஆயத்தமாக இல்லாது விடின் எக்காரணத்திற்காகவும் வழக்கின் விசாரணையை வேறொரு நேரத்திற்கு அல்லது நாளுக்கு ஒத்திவைத்தல் பொருத்தமானது என நீதிவான் எண்ணினாலொழிய நீதிமன்றம் குற்றம்சாட்டப்பட்டவரை விடுவிக்கலாம்.

*(3) (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட விடுவித்தற் கட்டளையானது ஒன்றில் —*

*(அ) அது தள்ளிவைக்கப்படாமலும் அத்துடன் குற்றம்சாட்டப்பட்டவருக்கு எதிரான வழக்கு அத்தகைய கட்டளையின் தேதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதிக்குள் மீண்டும் ஆரம்பிக்கப்படாமலும் இருக்குமிடத்து; அல்லது*

*(ஆ) வழக்கு முறைப்படி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு விடுவித்தற் கட்டளையை இரண்டாம் முறையும் ஆக்கப்படுமிடத்து:*

*விடுதலைக்கட்டளையொன்றாகச் செயற்படுதல் வேண்டும். ஆயின் விடுவித்தற் கட்டளையை தள்ளிவைப்பதற்கான விண்ணப்பம் ஒன்று நீதிவான் ஒருவர் முன்னிலையில் அல்லது மீளாய்வில் வேறு நீதிமன்றம் முன்னிலையில் முடிவுறாதிருக்கும் நிலையில் விடுவித்தற் கட்டளையானது ஓராண்டு காலப்பகுதியின் முடிவில் அதனை தள்ளிவைப்பதற்கான விண்ணப்பத்தை மீறுகின்ற கட்டளையை நீதிவான் அல்லது அத்தகைய நீதிமன்றம் ஆக்கும்வகையில் விடுதலைக் கட்டளையொன்றாகச் செயற்படாதிருத்தல் வேண்டும். [S 188(3) subs by s 2 of Act 15 of 1989.]*

***பிரிவு 189: முறைப்பாட்டுக்காரரால் குற்றச்சாட்டை மீளப்பெறுதல்.***

*இவ் அத்தியாயத்தின் கீழான வழக்கு எதிலும் தீர்ப்பளிக்கப்படுவதற்கு முன்னர் எப்போதேனும் முறைப்பாட்டாளர் குற்றச்சாட்டை மீளப் பெறுவதற்கு அவருக்கு அனுமதியளிப்பதற்குப் போதிய காரணங்கள் உள்ளவென எப்போதேனும் நீதிவானைத் திருப்திப்படுத்தினால் நீதிவான் அதனை மீளப்பெறுவதற்கு அவருக்கு அனுமதியளிக்கலாம் என்பதுடன் அதன் மேல் குற்றம் சாட்டப்பட்டவரை விடுதலை செய்தலும் வேண்டும், ஆனால் அவ்வாறு செய்வதற்கான காரணங்களை அவர் பதிதல் வேண்டும்:*

*ஆயின், எவ்வாறாயினும் இதனகத்து அடங்கியுள்ள எதுவும் 266 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் தவறுகளை இணக்கச் செய்வதினை அனுமதிப்பதற்கு நீதிவானுக்குள்ள தத்துவங்களை விரிவுபடுத்துவதாக கொள்ளுதலாகாது.*

***பிரிவு 190: சட்டமா அதிபரின் உத்தரவின் பேரில் குற்றம் சாட்டப்பட்டவர் நீதிவானால் விடுவிக்கப்படலாம்.***

*136 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின் (அ) (இ) மற்றும் (ஈ) என்னும் பந்திகளின் கீழான முறைப்பாடொன்றின் மேலன்றி வேறுவிதமாக இவ் அத்தியாயத்தின் கீழ் விளங்கப்படும் எவ் வழக்கிலும் நீதிவான் சட்டமா அதிபர முன் அங்கீகாரத்துடன் விடுதலை செய்தல் பற்றிய தீர்ப்பு எதனையும் எடுத்து மொழியாமல் எக் கட்டத்திலேனும் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கலாமென்பதுடன் அதன் மேல் குற்றம்சாட்டப்பட்டவரையும் விடுவிக்கலாம். ஆனால் இவ்வாறு செய்வதற்கான காரணங்களை நீதிவான் பதிதல் வேண்டும்.*

***பிரிவு 191: இவ்வத்தியாயத்தின் கீழான வழக்குத் தொகுப்புகள் எவரினால் நடாத்தப்படலாம்.***

*(1) (2) ஆம் உட்பிரிவுகளுக்கமைவாக சட்டமா அதிபர் சொலிஸ்டர் ஜெனரல், அரச சட்டத்தரணி அல்லது பொதுவாக அல்லது சிறப்பாக அதிகாரமளிக்கப்பட்ட வழக்குரைப்பவர் ஒருவர் இவ் அத்தியாயத்தின் கீழ் விளங்கப்படும் வழக்கு எதிலும் தோன்றி வழக்குத் தொடுப்பை நடாத்துவதற்கு உரித்துடையவராதல் வேண்டும். ஆனால் முன்பு கூறுப்பட்டவாறான சட்டமா அதிபர், சொலிஸ்டர் ஜெனரல், அரச சட்டவுரைஞர் மற்றும் எவரேனும் வழக்குரைப்பவர். மேற்சொல்லப்பட்டவாறான அத்தகைய வழக்குரைப்பவர் ஒருவரும் சமூகமாகவில்லாவிடின் அத்தகைய முறைப்பாட்டாளர் அல்லது ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தின் மாநகரசபையின் அல்லது நகரசபையின் அல்லது பட்டினசபையின் அலுவலர் எவரும் அத்தகைய முறைப்பாட்டாளர் அல்லது அரசாங்கத் திணைக்களம் அல்லது மாநகரசபை அல்லது நகரசபை அல்லது பட்டினசபை அக்கறை கொண்டுள்ள வழக்கு எதிலும் வழக்குத் தொடர்வதற்கு தாமாக அல்லது வழக்குவரைப்பவர் மூலம் தோன்றலாம். ஆயின, சட்டமா அதிபர், சொலிஸ்டர் ஜெனரல் அரச சட்டவுரைஞர் அல்லது சட்டமா அதிபரால் பொதுவாகவோ சிறப்பாகவோ அதிகாரமளிக்கப்பட்டுள்ள வழக்குரைப்பவர் ஒருவர் இல்லாதபோது முறைப்பாட்டாளருக்காகச் சட்டத்தரணி ஒருவர் தோன்றாதவிடத்து குற்றம்சாட்டப்பட்டவர் எவ்வாறு எதிராக தவறு புரிந்துள்ளாரென அல்லது எவ்வாள் தொடர்பில் தவறு புரிந்துள்ளாரென சார்த்தப்படுகின்றதோ அவ்வாளின் சார்பில் தோன்றுவதற்கும், வழக்குத் தொடுப்பை நடாத்துவதற்கும் எவரேனும் சட்டத்தரணியை நீதிவான் அனுமதிக்கலாம்:*

*(2) முறைப்பாடானது 136 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிவிரின் (அ) என்னும் பந்தியின் கீழ் கோப்பிடப்பட்டதொன்றாக இருப்பின் சட்டமா அதிபர் சொலிஸ்டர் ஜெனரல அரச சட்டவுரைஞ்ரோ சடடமா அதிபரினால் சிறப்பாக அல்லது பொதுவாக அதிகாரமளிக்கப்பட்ட வழக்குரைப்போரோ அரச அலுவலர் ஒருவரின் அல்லது அரச ஊழியர் ஒருவரின் உத்தியோகமுறையிலான கடமைகளை நிறைவேற்றுவரோடு சம்பந்தப்பட்ட அல்லது நிறைவேற்றுதல் பற்றிய ஒரு விடயம் தொடர்பில் அத்தகைய அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு எதிராக அத்தகைய முறைப்பாடு*

*கூப்பிடப்பட்டிருந்தாலொழிய முறைப்பாட்டாளரின் அத்தகைய சம்மதமின்றி அவருக்காகத் தோன்றுவதற்கு உரித்துடையவராகார்.*

***பிரிவு 192: குற்றம் சாட்டப்பட்டவர் சமூகமளிக்காத போதும் விளக்கம் தொடரலாம்.***

*(1) குற்றம் சாட்டப்பட்டவர்—*

*(அ)தலைமறைவாக இருக்கின்றவிடத்து அல்லது தீவை விட்டுச் சென்றுள்ளவிடத்து; அல்லது*

*(ஆ) சுகவீனம் காரணமாக நீதிமன்றத்திற்கு வருகை தருவதற்கு அல்லது நீதிமனறத்தில் தங்கியிருப்பதற்கு இயலாதவராக இருப்பதோடு, ஒன்றில் அவர் சமூகமாகவில்லாமலே விளக்கமானது தொடங்குவதற்கு அல்லது தொடர்ந்து நடாத்தப்படுவதற்குச் சம்மதமளித்துமோ அல்லது அவர் சமூகமாகவில்லாமலே விளக்கமானது அவருக்கு பங்கம் எதுவும் ஏற்படாத முறையில் தொடரக்கூடியதாகவுமோ இருக்குமிடத்து; அல்லது*

*(இ) நீதிமன்றத்திலான அவரது நடத்தை காரணமாக விளக்கம் தொடர்ந்து நடாத்தப்படுவதினை அவர் தடைசெய்கின்ற இடத்து அல்லது அதற்கு முட்டுக்கட்டை இடுமிடத்து இந் நிகழ்வுகள் பற்றி நீதிவான் திருப்தியடைந்தால் அவர் குற்றம்சாட்டப்பட்டவரை சமூகமில்லாது இருக்கும்போதும் அவர் விளக்கத்தை தொடங்கித் தொடர்ந்து நடாத்தலாம்;*

*(2) (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் குற்றம் சாட்டப்பட்ட ஆள் ஒருவரின் விளக்கம் நடைபெறும்போது அல்லது விளக்கம் முடிவடைந்த பின்னர் நியாயமான காலத்திற்குள்ளாக குற்றம்சாட்டப்பட்ட ஆள் நீதிமன்றத்தில் தோன்றி விளக்கம் முழுவதன் போதும் அல்லது அதன பாகத்தின்போது தாம் நீதிமன்றத்தில் சமூகமாகவில்லாதிருந்தது நல்லெண்ணத்துடனேயே என நீதிமன்றத்தை திருப்திப்படுமிடத்து,—*

*(அ)அவ் விளக்கம் முடிவடையாதவிடத்து குற்றம் சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தின் முன்தோன்றும் வரை அவருக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்ட சான்றானது அவருக்கு வாசித்து சாட்டப்படல் வேண்டுமென்பதுடன் அத்தகைய சான்றை அளித்த சாட்சிக்காரர்களை குறுக்கு விசாரணை செய்வதற்கு அவருக்கு வாய்ப்பளிக்கப்படல் வேண்டும்; அத்துடன்*

*(ஆ) விளக்கம் முடிவடைந்துள்ளவிடத்து நீதிமன்றம் குற்றத் தீர்ப்பையும் தண்டனைத் தீர்ப்பு எதுவும் இருந்தால் அத்தண்டனைத் தீர்ப்பையும் தள்ளிவைத்து குற்றம் சாட்டப்பட்டவர் புதிதாக விளங்கப்படுதல் வேண்டுமென கட்டளையிடுதல் வேண்டும்.*

*(இ) குற்றம் சாட்டப்பட்டவர் விளக்கத்தில் சமூகமாகவில்லாது இருந்தபோது அவருக்காக எதிர்வாதி சட்டத்தரணி ஒருவர் இருந்திருப்பின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையதாக.*

## <u>[9.2] நீதிவான் மன்ற ஓட்ட விளக்கப்படம் - அத்தியாயம் 15 ஐ பாரக்கவும் - அட்டவணை</u>

## <u>[9.3] மேல் நீதிமன்ற நடவடிக்கைகள்</u>

குற்றம் சாட்டப்பட்டவர் மேல் நீதிமன்றத்தில் விளக்கத்திற்காக முன்னிலைப்படுத்தப்பட்டவுடன் அவருக்கு குற்றப் பகர்வு வழங்கப்பட வேண்டும். அதில் அவருக்கெதிரான குற்றச்சாட்டு தொடர்பாக விபரங்கள் மற்றும் விளக்கத்திற்கான அறிவித்தல் என்பவை அடங்குகின்றன. அத்துடன், அவர்

அ) விளக்கத்தின் போது அரசதரப்பால் அழைக்கப்படவுள்ள சாட்சிகளின் விபரங்கள். அடங்கிய பட்டியல் மற்றும் ஒவ்வொரு சாட்சியும் வழங்கவுள்ள சாட்சியத்தின் சுருக்கம் என்பன அடங்கிய ஆவணமானது அரச தரப்பு தங்கியிருக்கும் முக்கியமான நிகழ்வுகள் தொடர்பான போதிய தகவல்களை குற்றம் சாட்டப்பட்டவருக்கு வழங்குவதாக அமைகின்றது.

ஆ) குற்றச்சாட்டு தொடர்பிலான எதிர்வாதமொன்றிருப்பின் அதுபற்றியதோர் சுருக்கமொன்றை தரும்படியும், தனக்கான எதிர்வாதம் தொடர்பில் சாட்சிகள் எவரேனும் இருப்பின் அவ்வாறு அழைக்கவுள்ள சாட்சிகளின் பெயர்கள் பற்றியும் அத்துடன் அவ்வாறான சாட்சிகள் வழங்கவுள்ள சான்றுகளின் சுருக்கமொன்றையும் வழங்கும்படியானதோர் அறிவித்தலானது அவர் தனது வாதம் தொடர்பில் தங்கியிருக்கும் முக்கியமான நிகழ்வுகள் பற்றிய போதுமான தகவலை அரச தரப்புக்கு வழங்குகின்றது.

மேல் நீதிமன்றத்தில் நடைபெறவுள்ள விளக்கம் தொடர்பான பொதுவான ஏற்பாடுகள் குற்றவியல் நடவடிக்கை சட்டக்கோவையின் பிரிவு 193 மற்றும் 195 என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**பிரிவு *193: மேல் நீதிமன்றத்தில் யாரால் விளங்கப்படல் வேண்டும்.***

*மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கம் ஒவ்வொன்றிலும் வழக்குத் தொடுப்பானது சட்டமா அதிபர் சொலிஸ்டர் ஜெனரலால் அல்லது அரச தரப்பு வழக்குரைஞரால் அல்லது சட்டமா அதிபரால் அதற்கென பொதுவாக அல்லது சிறப்பாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் வழக்குரைப்பவரினால் நடாத்தப்பட வேண்டும்.*

*பிரிவு 194: வழக்குத் தொடுப்பை சட்டமா அதிபர் மீறப் பெறலாம்.*

1. *இச் சட்டக்கோவையின் கீழ் மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கத்தின் எக்கட்டத்திலும் துணிவுரை வழங்கப்படுவதன் முன்னர் சட்டமா அதிபரின் அவர் தக்கதென எண்ணினால் குற்றப்பகர்வின் மீது அல்லது அதிலுள்ள ஏதேனும் குற்றச்சாட்டின் மீது குற்றம்சாட்டப்பட்டவருக்கு எதிராக மேற்கொண்டு வழக்கு தொடுக்கமாட்டாராரென நீதிமன்றத்திற்கு அறிவிக்கலாமென்பதுடன் அதன்மேல்*

   *குற்றம்சாட்டப்பட்டவருக்கு எதிராக இருக்கக்கூடிய விடயத்திற்கு ஏற்றவாறு அத்தகைய குற்றப்பகர்வின் அல்லது குற்றச்சாட்டின் மீதான எல்லா நடவடிக்கைகளும் நிறுத்தி வைக்கப்பட வேண்டுமென்பதோடு அவர் அதிலிருந்து விடுவிக்கப்படுதலும் வேண்டும்.*

2. *இப் பிரிவின் கீழான அறிவித்தல் வாய்மொழி மூலமானதாக அல்லது சட்டமா அதிபரின் கைப்பட எழுத்து மூலமானதாக இருக்கலாம்.*
3. *துணிவுரை வழங்கப்படுவதற்கு முன்னர் எக்கட்டத்திலும் வழக்குத் தொடுக்கும் சட்டவுரைஞர் தலைமை வகிக்கும் நீதிபதியின சம்மதத்துடன் குற்றப்பகர்வை அல்லது அதிலுள்ள ஏதேனும் குற்றச்சாட்டை மீளப்பெறலாம் என்பதோடு அதன் மேல் குற்றம்சாட்டப்பட்டவருக்கு எதிராக இருக்கக்கூடிய விடயத்திற்கு ஏற்றவாறு அத்தகைய குற்றப்பகர்வின் அல்லது குற்றச்சாட்டின் மீதான எல்லா நடவடிக்கைகளும் நிறுத்தி வைக்கப்படுதல் வேண்டும் என்பதோடு அவர் அதிலிருந்து விடுவிக்கப்படுதலும் வேண்டும்.*

*பிரிவு 195: குற்றப்பகர்வு கிடைக்கப்பெற்றதன் மேல், நீதிபதிக்குள்ள கடமை*

*குற்றப்பகர்வு மேல் நீதிமன்றத்தில் கிடைக்கப்பெற்றதும் எந்த நீதி நிர்வாக வலயத்தில் விளக்கம் நடத்தப்படவுள்ளதோ அந்த நீதி நிர்வாக வலயத்தில் நடாத்தப்படும் மேல் நீதிமன்றத்தின் அமர்வுகளில் தலைமை தாங்கும் மேல்நீதிமன்ற நீதிபதி —*

- *அ. குற்றம் சாட்டப்பட்டவரை தன் முன்னர் தோன்றும்படி அல்லது கொணரப்படு படி செய்வித்தல் வேண்டும்.*
- *ஆ. அந்தக் குற்றப்பகர்வின் பிரதியொன்று அதன் பின்னிணைப்புகளோடு சேர்த்து அக் குற்றப்பகர்வின் மீது விளங்கப்படவுள்ளவர்களாகிய அத்தகைய குற்றம்சாட்டப்பட்டவர்கள் ஒவ்வொருவருக்கும் சேர்ப்பிக்கப்படச் செய்வித்தல் வேண்டும்.*
- *இ. குற்றம் சாட்டப்பட்டவருக்கு விளக்கத் தேதி பற்றி அறிவித்தல் வேண்டும்.*
- *ஈ. பிரிவு 403 ஆம் ஏற்பாடுகளுக்கமைவாக குற்றம் சாட்டப்பட்டவர் அவரது விளக்கத்திற்கு என நீதிமன்றத்தில் தோன்றுவதற்காக முறியொன்றை எழுதி நிறைவேற்றுமாறு அவரைப் பணித்தல் வேண்டும். ஏதாவது மறியற்சாலையின் கண்காணிப்பாளருக்கு முகவரியிட்டு அனுப்பப்பட்ட ஆணை மூலம் குற்றம்சாட்டப்பட்டவர் விளங்கப்படும் வரையில் அவர் தடுத்து வைக்கப்படுவதற்கு அதிகாரமளிக்க வேண்டும்.*
- *உ. குற்றம்சாட்டப்பட்டவரின் விரல் அடையாளத்தை எடுப்பித்து விரல் அடையாளத்தைப் பரிசோதனை செய்து அது பற்றி அறிக்கையை வழக்குத் தொடுக்கும் அரச சட்டவுரைஞருக்கு அளிப்பதற்காக அதை விரல் அடையாளப் பதிவாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.*
- *ஊ. குற்றப்பகர்வானது யூரர் சபையினால் விளங்கப்படக்கூடிய தவறொன்று தொடர்பானதால் குற்றம் சாட்டப்பட்டவர் யூரர் சபையொன்றினால் விளங்கப்பட வேண்டும் என்று தெரிவு செய்கிறாரா என அவரிடம் கேட்டல் வேண்டும்.*
- *எ. விளக்கம் யூரர் சபையினால் நடாத்தப்படவிருக்கும் இடத்தில் குற்றம்சாட்டப்பட்டவரை விளங்குவதற்கு எந்த யூரர் மார் குழாம்களில் இருந்து யூரர் சபையினர் எடுக்கப்படுதல் வேண்டுமோ அந்த யூரர்மார் குழாம்களைத் தெரிவு செய்யும்படி குற்றம்சாட்டப்பட்டவரை பணித்தல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு செய்யப்பட்ட தெரிவுக்கு அவர் இணக்கப்பட்டவராவார் என்றும் அத் தெரிவுக்கு இணங்க அவர் விளங்கப்படலாமென்றும் அவருக்கு அறிவித்தலும் வேண்டும்.*
- *ஏ. சட்டத்தரணியொருவர் வேண்டுமா என குற்றம்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தினால் கேட்கப்பட்டதன் மேல் வேண்டுமென்று கூறுமிடத்து அவருக்காக எதிர்வாதிடுவதற்கென சட்டத்தரணியொருவரை குறித்தொதுக்குதல் வேண்டும்.*

### <u>[9.3.1] மேல் நீதிமன்றம் - யூரரற்ற நீதிபதியினாலான விளக்கம்</u>

*இந்நடவடிக்கைகளானவை கு.ந.ச. கோவை பிரிவு 196 முதல் 203 வரை தரப்பட்டுள்ளன.*

*பிரிவு 196: குற்றம்சாட்டப்பட்டவரை முன்னிறுத்துதல்*

*நீதிமன்றமானது விளக்கத்தை தொடங்க தயாராக இருக்கும்போது குற்றம் சாட்டப்பட்டவர் அதன் முன்னிலையில் தோன்றுதல் வேண்டும் அல்லது கொண்டு வரப்படுதல் வேண்டும். அத்துடன்*

*குற்றப்பகர்வானது அவருக்கு வாசித்து காட்டப்பட்டு விளங்கப்படுத்தல் வேண்டும் என்பதுடன் குற்றம்சாட்டப்பட்ட தவறுக்கு அவர் குற்றவாளியா அல்லது குற்றவாளியல்லரா என அவரிடம் கேட்கப்படுதலும் வேண்டும்.*

***பிரிவு 197: குற்றவாளி என்றவாதமும் தண்டனைத் தீர்ப்பளித்தலும்***

*(1) (அ) அவர் எந்த தவறுக்குக் குற்றப்பகர்வுக்குட்படுத்தப்பட்டுள்ளாரோ அந்த தவறுக்கு குற்றவாதுரைசெய்வராயின், அல்லது*

*(ஆ) அந்தக் குற்றப்பகர்வின் மீது எந்த ஒரு குறைவான ஒரு தவறுக்குக் குற்றத் தீர்ப்பு அளிக்கப்படக்கூடுமோ அந்தக் குறைவானதொரு தவறுக்கு குற்றவாளியென வாதுரை செய்து நீதிமன்றமும், சட்டமா அதிபரும் அந்த வாதுரையை ஏற்றுக்கொள்ள விரும்பின் அத்துடன் அவரது வாதுரையை அவர் சரியாகப் புரிந்துள்ளாரென நீதிபதி திருப்தியுறும் விதத்தில் தோன்றுகின்றதாயின் இவ் வாதுரை குற்றப்பகர்வில் பதிவு செய்யப்பட வேண்டுமென்பதுடன் அதன் மீது அவர் குற்றத் தீர்ப்பு அளிக்கவும்படலாம். ஆயின் அவர் எந்தத் தவறுக்கு அவ்வாறு வாதுரைக்கப்படுகின்றதோ அந்தக் குற்றப்பகர்வு கொலையொன்றாக இருக்குமிடத்து நீதிபதி வாதுரையை ஏற்க மறுக்கலாமெனப்துடன், குற்றம் சாட்டப்பட்ட ஆள் குற்றவாளி அல்ல என வாதுரைத்துள்ளார் என்றாற்போன்றே அந்த வகையில் தொடர்ந்தும் விளக்கத்தை தொடர்ந்தும் நடாத்தலாம்.*

*(2) நீதிபதி குற்றம் சாட்டப்பட்ட ஆளுக்குத் தண்டனைத் தீர்ப்பளிக்கையில் அவ்வாறு அவ் ஆள் வாதுரைத்தார் என்ற நிகழ்வைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும் .*

***பிரிவு 198: மன்றுரைக்க மறுத்தால் அல்லது குற்றவாளியல்லர் என மன்றுரைத்தல்.***

*குற்றம் சாட்டப்பட்டவர் மன்றுரை அளிக்காவிட்டால் அல்லது அவர் தான் குற்றவாளியல்லர் என மன்றுரையளித்தால் அவர் விளங்கப்படுதல் வேண்டும்.*

*பிரிவு **199: சட்டவுரைஞர் வழக்கை தொடங்குகுதல் சாட்சிக்காரர்களைக் கூப்பிடுவதும்***

*(1) விளக்கமானது வழக்குத் தொடுக்கும் சட்டவுரைஞர் அவரது வழக்கை நீதிமன்றத்திற்கு கூறுவதன் மூலம் தொடக்குதல் வேண்டும்.*

*(2) பின்னர் வழக்குத் தொடுனர் தரப்பிலான கட்சிக்காரர்கள் விசாரிக்கப்படுதல் வேண்டும்.*

*(3) நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணையொன்று நடைபெற்று இருப்பின் அந்த விசாரணையின்போது பதியப்பட்டவையான குற்றம் சாட்டப்பட்டவரின் கூற்றுக்கள் யாவும் வழக்குத் தொடுனர் தரப்பிலான வழக்கு முடிவுறுத்தப்படுவதற்கு முன்பு சான்றாக முன்னிலைப்படுத்தி வாசிக்கப்படுதல் வேண்டும்.*

*(4) நீதிநலன் அவ்வாறு தேவைப்படுத்தினால் வழக்குத் தொடுனர் தரப்பினால் அழைக்கப்படாதவர்களான சாட்சிக்காரர்கள் எவர்களையும் நீதிமன்றம் அழைத்தல் சட்டமுறையாதல் வேண்டும். ஆனால் அத்தகைய சாட்சிக்காரர்கள் வழக்குத் தொடுக்கும் சட்டவுரைஞராலும் குற்றம்சாட்டப்பட்டவராலும் குறுக்கு விசாரணை செய்யப்படுவதற்கு அமைந்தவர்களாக்கப்படுதல் வேண்டும்.*

*(5) குற்றம் சாட்டப்பட்டவர், வழக்குத்தொடுனர், தரப்பில் அழைக்கப்பட்ட சாட்சிக்காரர்கள் எல்லோரையும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுதல் வேண்டும்.*

***பிரிவு 200: நீதிமன்றமானது எதிர்வாதம் இடுமாறு கேட்காமல் விடுதலை செய்யலாம் அல்லது எதிர்வாதம் இடுமாறு கேட்கலாம்.***

*(1) வழக்குத் தொடுனர் தரப்பிலான வழக்கு முடிவடைந்ததும் நீதிபதியானவர் வழக்குத் தொடுனர் தரப்பிலான சான்றினை முற்றாக நம்பாவிட்டால் அல்லது அத்தகைய சான்றானது குற்றப்பகர்வில் குற்றம்சாட்டப்பட்டவருக்கு எதிராக குற்றம்சாட்டப்பட்டதான தவறு அல்லது அத்தகைய குற்றப்பகர்வின் மேல் அவர் குற்றத்தரீப்பு அளிக்கப்படக்கூடியதான வேறு ஏதும் தவறு புரியப்பட்டதனை நிலைநாட்டத் தவறிவிட்டதென கருதினால் அவர் விடுதலைத் தீர்ப்பினை பதிவு செய்து கொள்ளல் வேண்டும். எவ்வாறாயினும் நீதிபதியானவர் விளக்கத்தை தொடருவதற்கான ஏதுக்கள் இருக்கின்றன எனக் கருதினால் குற்றம்சாட்டப்பட்டவரை எதிர்வாதிடுமாறு கேட்கலாம்.*

*(2) சான்றை முன்வைக்கும் உள்நோக்கம் தமக்கில்லை என்று குற்றம்சாட்டப்பட்டவர் அல்லது அவரது வழக்குரைப்பவர் தெரிவித்தால் வழக்குத் தொடுக்கும் சட்டவுரைஞர் குற்றம்சாட்டப்பட்டவருக்கு எதிரான சான்றுகளைத் தொகுதத்துரைக்கும் நோக்கத்திற்காக தமது வழக்கிற்கு ஆதாரமாக இரண்டாம் முறையாகவும் நீதிமன்றத்தை விளித்து உரையாற்றலாம்.*

***பிரிவு 201:   குற்றம் சாட்டப்பட்டவர் தமது எதிர்வாத்தைக் கூறலாம்***

*(1) சான்றை முன்வைக்கும் உள்நோக்கம் தமக்குண்டு என்று குற்றம் சாட்டப்பட்டவர் அல்லது அவரது வழக்குரைப்பவர் தெரிவித்தால் குற்றம் சாட்டப்பட்டவர் அல்லது அவரது வழக்குரைப்பவர் அவர் தரப்பிலான எதிர்வாதத்தினை எடுத்துக் கூறலாம் என்பதுடன் அவர் சாட்சிக்காரர்கள் எவரேனும் இருப்பின் அவர்களை விசாரணையும் செய்யலாம். அத்துடன் குற்றம் சாட்டப்பட்ட ஆள் அல்லது அவரது வழக்குரைப்பவர் வழக்கினைத் தொகுத்து உரைக்கலாம்.*

*(2) சத்தியத்தின் மீது அல்லது உறுதியுரையின் மீது சான்றளிக்கவென எதிரி தரப்பில் அழைக்கப்பட்ட சாட்சிக்காரர் எல்லோரையும் குறுக்கு விசாரணை செய்ய வழக்குத் தொடுக்கும் சட்டவுரைஞர் உரித்துடையவராதல் வேண்டும்.*

***பிரிவு 202:   வழக்குத் தொடுனர் மறுதலிக்கும் சாட்சிக்காரர்களை எப்போது அழைக்க உரித்துள்ளவரென்பது பற்றி***

*குற்றம் சாட்டப்பட்டவர் சார்பில் சான்று எதுவும் முன்வைக்கப்படின் வழக்குத் தொடுக்கும் சட்டவுரைஞர் நீதிபதியின் அனுமதியுடன் மறுதலிப்பதற்காக சாட்சிக்காரர்களை அழைக்கலாம்.*

***பிரிவு 203:   நீதிபதி தீர்ப்பை வழங்குதல்***

*வழக்குத்தொடுனர் தரப்பிலும் எதிர்வாதி தரப்பிலுமான வழக்குகள் முடிவடைந்ததும் நீதிபதி உடனடியாக அல்லது விளக்கம் முடிந்து பத்து நாட்களுக்குள் விடுதலை செய்வதற்கான துணிவுரையொன்றை அல்லது குற்றத் தீர்ப்பளிக்கும் துணிவுரையொன்றை அதற்கான காரணங்களுடன் பதிதல் வேண்டும் என்பதுடன் துணிவுரை குற்றத்தீர்ப்பளிப்பதற்காக இருந்தால் குற்றம் சாட்டப்பட்டவருக்குச் சட்டத்திற்கிணங்க தண்டனைத் தீர்ப்பளித்தல் வேண்டும்.*

**<u>[9.3.2] மேல் நீதிமன்றம் - யூரர் ஊடான விளக்கம்</u>**

விளக்கமானது யூரர்கள் ஊடானதென இருப்பின், அது தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய பொது நடவடிக்கை முறைகள் கு.ச.கோவை பிரிவு 204 முதல் வரை 208 வரை காட்டப்பட்டுள்ளன.

***பிரிவு 204:   குற்றம் சாட்டப்பட்டவரை முன்நிறுத்துதல்***

*நீதிமன்றமானது விளக்கத்தை தொடங்கத் தயாராக இருக்கும்போது குற்றம் சாட்டப்பட்டவர் அதன் முன்னிலையில் தோன்றி அல்லது கொண்டுவரப்படல் வேண்டும். அத்துடன் குற்றப்பகர்வானது அவருக்கு வாசித்துக்காட்டப்பட்டு விளங்கப்படுத்தல் வேண்டும் என்பதுடன் குற்றம் சாட்டப்பட்ட தவறுக்கு குற்றவாளியா அல்லது குற்றவாளியல்லரா என அவரிடம் கேட்கப்படுதல் வேண்டும்.*

***பிரிவு 205:   குற்றவாதுரையும் தண்டனைத் தீர்ப்பளித்தலையும் கையாளுகையில் 197 ஆம் பிரிவு ஏற்புடையதாதல்***

*குற்றம் சாட்டப்பட்டவர் எந்தத் தவறுக்கு குற்றப்பகர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளாரோ அந்த தவறுக்கோ அல்லது அந்தக் குற்றப்பகர்வின் மீது எந்தக் குறைவானதொரு தவறுக்கு குற்றத் தீர்ப்பளிக்கப்படக்கூடுமோ அந்தக் குறைவானதொரு தவறுக்கு குற்றவாதுரை செய்வாராயின் 197 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.*

***பிரிவு 206:   மன்றுரைக்க மறுத்தல்***

*குற்றம் சாட்டப்பட்டவர் மன்றுரை அளிக்காவிட்டால் அல்லது அவர் தாம் குற்றாவளி என மன்றுரையளித்தால் அல்லது 205 ஆம் பிரிவுக்கான காப்பு வாசகத்தில் காட்டப்பட்ட சூழ்நிலைகளில் நீதிபதி மன்றுரையை ஏற்க மறுத்தால் இதனகத்து பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு வழக்கை விளங்குவதற்கு யூரர்மார் தெரிந்தெடுக்கப்படுதல் வேண்டும்.*

***பிரிவு 207:   குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி அல்லவென மன்றுரையளிக்குமிடத்து அல்லது குறைந்த தவறொன்றுக்கு குற்றவாளியென மன்றுரைக்க விரும்பும் பட்சத்தில்***

*குற்றம் சாட்டப்பட்டவர் தாம் குற்றாவளி என மன்றுரைத்து ஆனால் அதே குற்றப்பகர்வின் மேல் அவர் குறைந்த தவறுக்கு குற்றத் தீர்ப்பு அளித்திருக்கக்கூடுமோ அந்தக் குறைந்த தவறுக்கு குற்றவாளி என மன்றுரையளிப்பதாகக் கூறும் இடத்தும் அத்தகைய மன்றுரையைத் தொடக்குவதற்கு வழக்குத் தொடுக்கும் சட்டவரைஞர் விரும்பும் இடத்தும் நீதிபதி அவ்வாறு செய்வதினால் நீதிநலன் திருப்தி செய்யப்படுமெனக் கருதினால் குற்றவாளி என்ற அத்தகைய மன்றுரையை பதிவு செய்யும்படி கட்டளையிடலாம் என்பதுடன் அதற்கிணங்க அதன் பேரில் தீர்ப்பும் வழங்கலாம். அத்துடன் அதன்*

*மேல் குற்றம் சாட்டப்பட்டவர் குற்றப்பர்வில் இடப்பட்ட தவறிலிருந்து விடுவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய விடுவிப்பு விடுதலைமையாக அமைதலும் வேண்டும்.*

***பிரிவு 208: விஷேட யூரர் சபை கட்டளையிட்டு அழைக்கப்படலாம்.***

*(1) வழக்குத் தொடுக்கும் சட்டவுரைஞர் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் ஏதேனும் வழக்கை விளக்குவதற்கு விசேட யூரர் சபையொன்றை அழைக்கும்படி தேவைப்படுத்தும் ஒரு கட்டளையை ஆக்குமாறு எந்த வலயத்திற்கான மேல் நீதிமன்றத்தில் விளக்கம் முடிவுறாதுள்ளதோ அந்த வலயத்திற்கான மேல் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம். அத்தகைய விண்ணப்பம் எந்த நீதிபதியின் முன்னர் பரிசீலனைக்கு வருகின்றதோ அந்த நீதிபதி அத்தகைய விண்ணப்பமானது நீதியானதும் நியாயமானதும் எனக் கருதினால் அதற்கு இணங்க கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.*

*(2) அத்தகைய விண்ணப்பமானது சட்டமா அதிபரின் அல்லது சொலிசிடர் ஜெனரல் அல்லது அரச சட்ட உரைஞரினால் செய்யப்பட்டால் தவிர ஒரு சத்தியக்கடதாசியினால் ஆதாரப்படுத்தல் வேண்டும்.*

## [9.3.3] யூரர் தெரிவு மற்றும் அதற்கு ஏற்புடையதான பொது நடவடிக்கை முறைகள்

இவ் ஏற்பாடுகள் கு. ச. கோவையின் பிரிவு 209 முதல் 216 வரை காட்டப்பட்டுள்ளன.

***பிரிவு 209: யூரர் சபையின் எண்ணிக்கையும் துணிபுரைக்கான நிறைவெண்ணும்***

*(1) யூரர் சபையானது ஏழு ஆட்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.*

*(2) அளிக்கப்படும் துணிவுரையானது ஒரு மனதாக அல்லது ஐந்தும் இரண்டும் என்ற பெரும்பான்மைக்கு குறையாயததாக இருக்க வேண்டும்.*

***பிரிவு 210: யூரர் சபையை அமைத்தல்.***

*(1) நீதிமன்றம் வேறு வகையாகப் பணித்தாலன்றி குற்றம் சாட்டப்பட்டவரால் தெரிவு செய்யப்பட்ட குழாத்திலிருந்து யூரர் சபை தெரிந்தெடுக்கப்பட வேண்டும்.*

*(2) யூரர் சபை குலுக்குச் சீட்டு முறையினால் குழாத்திலிருந்து தெரிந்தெடுக்கப்படுதல் வேண்டும்.*

*(3) ஒவ்வொரு யூரரும் தெரிந்தெடுக்கப்படும்போது அவரது பெயர் கூப்பிடப்படல் வேண்டும் என்பதுடன் அவர் தோற்றமளிப்பதன் மேல் அத்தகைய யூரரினால் விளக்கப்படுவதினை குற்றம்சாட்டப்பட்டவர் ஆட்சேபிக்கிறாரா எனப் பதிவாளரினால் அவர் கேட்கப்படுதல் வேண்டும்.*

*(4) குற்றம்சாட்டப்பட்ட ஆளின் அல்லது குற்றம்சாட்டப்பட்ட ஆட்கள் எல்லோரினதும் சார்பில் காரணங்கள் கூறப்பட வேண்டாத இரண்டு ஆடசேபனைகள் அனுமதிக்கப்படுதல் வேண்டும்.*

*(5) கட்டளை விட்டு அழைக்கப்பட்டவர்களாயும் சேவை செய்வதற்கு அங்கே கையடைவில் உள்ளவர்களாயுமுள்ள யூரர்மார் எல்லோரின் பெயர்களும் கூப்பிட்டு முடியும் வரை பெயர் கூடப்பிடப்பட்ட எத்தனை யூரர்மாரையும் கைக்காவலாக காத்து நிற்கும்படி நீதிபதி வழக்குத்தொடுக்கும் சட்டவுரைஞர் ஆலோசனை தெரிவிப்பதன் பேரில் கட்டளையிடலாம். தது ஆட்சேபனைக்கான காரணங்களை சட்டவுரைஞர் கூற வேண்டியதில்லை.*

*(6) அத்தனை பெயர்களும் கூப்பிடப்பட்டும் யூரர் சபை அமையுறாதுபோனால் அவ்வாறு கைக்காவலாக காத்து நிற்கும்படி கட்டளையிடப்பட்டவர்களில் ஒவ்வொருவரது பெயரும் மீளவும் கூப்பிடப்பட வேண்டுமென்பதுடன் 211 ஆம் பிரிவின் கீழ் ஆட்சேபனைக்கான காரணங்கள் எவையேனும் அவற்றைக் கூறும்படி வழக்குத் தொடுக்கும் சட்டவுரைஞர் கேட்கப்படுதலும் வேண்டும்.*

*(7) எதிர்ப்புத் தெரிவிக்கப்படாத யூரர்மார் போதிய அளவில் அங்கே இருக்காவிடில் புதிய யூரர் குழாமொன்றை கட்டளைவிட்டு அழைப்பதை இயலச் செய்யும் வகையில் விளக்கமானது ஒத்திவைக்கப்படுதல் வேண்டும்.*

***பிரிவு 211: ஆட்சேபனைக்கான காரணங்கள்***

*யூரர் ஒருவருக்கு எதிராக பின்வரும் காரணங்களுள் எதன் மீதும் நீதிமன்றம் திருப்தியடையும் வகையில் தெரிவிக்கப்படின் ஆட்சேபனைகள் எதுவும் அனுமதிக்கப்படுதல் வேண்டும்—*

*(அ) யூரரிடமிருப்பதாக ஊகிக்கப்படும் அல்லது உண்மையாகவே அவரிடமுள்ள பக்கச்சார்பு*

*(ஆ) அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் மூலம் அல்லது சட்டவலுவைக் கொண்டுள்ள ஏதேனும் விதிமுறை மூலம் தேவைப்படுத்தப்பட்ட தகைமையில் குறைபாடு இருத்தல் அல்லது அத்தகைய சொந்தக்காரணம் எதுவும்*

*(இ) பொலிஸின் எவையேனும் கடமைகளை அவர் நிறைவேற்றுதல் பொலிசுக் கடமைகள் எதுவும் அவரிடம் பொறுப்பிக்கப்பட்டிருத்தல்*

*(ஈ) நீதிபதியின் அபிப்பிராயப்படி யூரர்சபையில் சேவை புரிவதற்கு அந்த யூரரை தகுதியற்றவராக்கும் தவறு எதற்கும் அவர் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளமை*

*(உ) எந்த யூரர் குழாத்திலிருந்து யூரர்சபை அமைக்கப்படுகின்றதோ அந்த யூரர் குழாத்தின் மொழியைப் புரிந்துகொள்வதற்கு அவர்களுக்கு இயலாமை நீதிபதியின் அபிப்பிராயப்படி யூரராவதற்கு அவரைத் தோதற்றவருக்கும் ஏதாவது சூழ்நிலை.*

***பிரிவு 212: ஆட்சேபனை பற்றிய முடிவு***

*(1) யூரர் ஒருவருக்கு எதிராகத் தெரிவிக்கப்படும் ஆட்சேபனை ஒவ்வொன்றும் நீதிபதியால் முடிவு செய்யப்பட வேண்டும். என்பதுடன் அத்தகைய முடிவானது பதியப்பட்டு இறுதியாதலும் வேண்டும்.*

*(2) ஆட்சேபனையானது அனுமதிக்கப்பட்டால் அத்தகைய யூரரின் இடம் இவ் அத்தியாயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் தெரிந்தெடுக்கப்பட்ட யாரேனும் யூரரைக் கொண்டு நிரப்பப்படுதல் வேண்டும்.*

***பிரிவு 213: யூரர் சபை முகாரி***

*(1) யூரர்மார் தெரிந்தெடுக்கப்பட்டதும் பதிவாளர் பின்வரும் சொற்களில் அவர்களை விளித்துக் கூறுதல் வேண்டும். — யூரர்சபைப் பெரியோரே உங்கள் முகாரியைத் தெரிந்தெடுங்கள் அதன்மேல் அவர்கள் அவ்வாறு செய்ய முற்படுதல் வேண்டும்.*

*(2) நீதிபதி நியாயமானதெனக் கருதும் அத்தகைய நேரத்திற்குள் யூரர் சபையின் பெரும்பான்மையோர் முகாரி ஒருவர் நியமிப்பதில் இணக்கம் காணாவிட்டால் முகாரியானவர் நீதிபதியால் நியமிக்கப்பட வேண்டும்.*

*(3) முகாரியானவர் நியமிக்கப்பட்டதும் யூரர்மாருக்கு சத்தியம் எடுத்து அல்லது அவர்களுக்கு உறுதியுரை எடுத்து மொழியப்படுதல் வேண்டும்.*

***பிரிவு 214: முகாரியின் கடமைகள்***

*முகாரியானவர் யூரர்சபையின் விவாதங்களில் தலைமை வகித்தலும் யூரர்சபைக்கு அல்லது யூரர்மாரின் எவருக்கும் தேவையான தகவல் எதனையும் நீதிபதியிடம் கேட்டுப் பெறுதலும் யூரர் சபையின் துணிவுரையை வழங்குதலும் வேண்டும்.*

***பிரிவு 215: யூரர் வருகையானது நின்று விடுதல் சந்தர்ப்பிங்களில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறை***

*யூரர்சபை மூலம் ஒரு விளக்கம் நடைபெறும்போது துணிவுரை வழங்குவதன் முன்னர் எந்நேரத்திலும் ஏதேனும் போதிய காரணத்திற்காக எவரேனும் யூரர் முழுநேரமும் சமூகமளிக்காதவாறு தடை செய்யப்பட்டால், அல்லது எவரேனும் யூதர் வராதிருந்து அவர் சமூகமளித்தலை கட்டாயப்படுத்தல் சாத்தியமற்றதாக இருந்தால் அல்லது சான்று எந்த மொழியில் அளிக்கப்படுகின்றதோ அந்த மொழியை அல்லது அத்தகைய சான்றுப் பேச்சு மொழி பெயர்க்கப்படுகின்றவிடத்து பேச்சு மொழி பெயர்க்கப்பட்ட அந்த மொழியைப் புரிந்துகொள்வதற்கு எவரேனும் யூரர் இயலாதவராக இருக்கின்றார் எனத் தோன்றினால் நீதிபதி ஒன்றில் புதிய ஒரு யூரரைச் சேர்க்கும்படி கட்டளையிடலாம் அல்லது அந்த யூரர் சபையைக் கலைத்து விட்டு புதிய யூரர் சபையொன்றை தேர்ந்தெடுக்கும்படி கட்டளையிடலாம்.*

***பிரிவு 216: கைதி சுகவீனமாக உள்ள விடயத்தில் யூரர் சபை கலைக்கப்படல்.***

*கைதியானவர் கைதிக்கூண்டில் தொடர்ந்து இருப்பதற்கு இயலாதவராகும் போதிலெல்லாம் அத்துடன் நதீபதியின் அபிப்பிராயப்படி நீதியின்நலன் அவ்வாறு தேவைப்படுத்தும் போதிலெல்லாம் நீதிபதி யூரர் சபையைக் கலைக்கலாம்.*

*எட்மன்கே சாம்பத் அமரஸிரி எதிர் நிலையப் பொலிஸ் அதிகாரி, பொலிஸ் நிலையம் (வாரியப்பொல) மற்றும் சட்டமா அதிபர் ( உச்ச நீதிமன்ற வழக்கு SC (SPC)LA NO 262/15)*

*இவ்வழக்கானது அரச தரப்பின் பொறுப்புடன் சம்பந்தப்பட்டதுடன் அரசியலமைப்பின் 128 ஆம் பிரிவுடன், சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1990 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கம், கொண்ட மாகாணங்களுக்கான மேல் நீதிமன்றங்கள் சட்டத்தின் பிரிவு 9 (a) இன் அடிப்படையிலானதோர் மேன்முறையீட்டுக்கான விஷேட உத்தரவைப் பெறும் விண்ணப்பமாக இருந்தது. மேன்முறையீட்டாளர், கு.ந.ச. கோவையின் 344 ஆம் பிரிவின் கீழ் வரும் தவறொன்றுக்காக குற்றவாளியாக காணப்பட்டு (5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டதான) 2 மாதகால சாதாரண சிறைவாசத்துக்கும் ரூபா 1000.00 தண்டப்பணத்துக்கும் உட்படுத்தப்பட்டார். நீதிமன்றத்தினால் கவனத்தில் எடுக்கப்பட்ட முக்கியமான*

*கேள்வியாக, மேன்முறையீட்டாளரால் வழங்கப்பட்ட சாட்சியமானது அரச தரப்பு வழக்கு விசாரணையில் ஒரு நியாயமான சந்தேகத்தை உருவாக்கியுள்ளதா என்பதாகும். இது அவ்வாறிருப்பின், எதிர்தரப்பின் வழக்கு வெற்றியடையும் என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.*

**[9.3.4} அரச தரப்புக்கும் எதிர்தரப்புக்கும் வழக்கை முடிவிப்பதற்கான விளக்கம்.**

இவ் ஏற்பாடுகள் கு.ந.ச. கோவையின் பிரிவு 217 முதல் 228 வரையிலான பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

***பிரிவு 217: பதிவாளர் குற்றப்பகர்வினை யூரர் சபைக்கு வாசித்துக் காட்டல்.***

*யூரர்சபையினர் சத்தியம் செய்து கொண்டதும் குற்றம் சாட்டப்பட்டவருக்குக் கேட்கக்கூடியதாக பதிவாளர் யூரர்சபைக்கு குற்றப்பகர்வை வாசித்துக் காட்டுதல் வேண்டும். அத்துடன் சான்றினை அவதானித்துக் கேட்டு அந்தச் சான்றின் குற்றப்பகர்வில் அவருக்கு எதிராக இடப்பட்ட குற்றச்சாட்டுக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட குற்றச்சாட்டுக்கள் இருப்பின் அவற்றுள் எக் குற்றச்சாட்டுக்காகவாயினும் குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளியா அல்லரா என்று அவர்கள் துணிவுரை கொண்டு தீர்மானித்தல் அவர்களின் கடமையாகும் என நீதிபதி அவர்களுக்குத் தெரிவித்தல் வேண்டும். அத்துடன் அப்பாவியெனற் ஊகம் எண்பித்தற் பொறுப்பு அவ் வழக்கிற்கு இயைபாகக் கூடிய வேறு சட்டநெறிகள் என்பன தொடர்பில் அவர்களைச் சுருக்கமாக நெறிப்படுத்தலாம்.*

***பிரிவு 218: வழக்குத் தொடுரர் பக்க வழக்கை தொடங்குதல்***

*அதன் பின்பு வழக்குத் தொடுக்கும் சட்டவுரைஞர் குற்றச்சாட்டிற்குரிய தவறின் தனம்மையையும் குற்றம் சாட்டப்படுபவர் குற்றவாளி என்பதை எந்தச் சான்றைக் கொண்டு எண்பிப்பதற்கு உத்தேசித்துள்ளாரோ அந்தச் சான்றையும் சுருக்கமாகக் கூறின் தமது வழக்கைத் தொடங்குதல் வேண்டும். அதன் பின்பு அவர் சாட்சிக்காரர்களை விசாரணை செய்தல் வேண்டும். அவ் சாட்சிக்காரர்கள் பின்னர் குற்றம்சாட்டப்பட்டவரால் அல்லது அவரது வழக்குரைப்பவரால் குறுக்கு விசாரணை செய்யப்படலாம்.*

***பிரிவு 219: கைதியின் கூற்றுக்கள் முன்னிலைப்படுத்தப்படல்***

*நீதிவான் நீதிமன்றத்திலான விசாரணையின்போது பதிவு செய்யப்பட்டவையான குற்றம்சாட்டப்பட்டவரின் கூற்றுக்கள் எவையேனும் இருப்பின் அவையெல்லாம் வழக்குத்தொடுனர தமது வழக்கை முடிக்கு முன்னர் முன்னிலைப்படுத்தி சான்றாக வாசித்துக் காட்டப்படுதல் வேண்டும்.*

***பிரிவு 220: வழக்குத் தொடுரர் தரப்பிலான சாட்சிகாரர்களை விசாரணை செய்த பின்னரான நடவடிக்கை முறை***

*(1) வழக்குத் தொடுனர் பக்க வழக்கு முடிவடைந்ததும் குற்றம்சாட்டப்பட்டவர் அவற்றைப் புரிந்தார் என்பதற்கு —சான்று இல்லையென நீதிபதி கருதினால் குற்றவாளியல்ல என்னும் துணிவுரையை வழங்கும்படி யூரர்சபையை அவர் பணித்தல் வேண்டும்.*

*(2) குற்றம்சாட்டப்பட்டவர் அத் தவறைப் புரிந்தார் என்பதற்கு சான்று உள்ளதென நீதிபதி கருதுமிடத்து, அவர் அத்தகைய குற்றம்சாட்டப்பட்டவரை அல்லது அவரது வழக்குரைப்பவரை நோக்கி சான்றை முன்வைக்க கருதுகிறாரா எனக் கேட்டல் வேண்டும்.*

*(3) குற்றம்சாட்டப்பட்டவர் அல்லது அவரது வழக்குரைப்பவர் சான்றை முன்வைக்கும் உள்நோக்கம் தமக்கில்லை என்று தெரிவித்தால் வழக்குத் தொடுக்கும் சட்டவுரைஞர் குற்றம்சாட்டப்பட்டவருக்கு எதிரான சான்றுகளை தொகுத்துரைக்கும் நோக்கத்திற்காக தமது வழக்கிற்கு ஆதாரமாக இரண்டாம் முறையாகவும் விளித்து உரையாற்றலாம்.*

***பிரிவு 221: எதிர்வாதம்***

*(1) குற்றம் சாட்டப்பட்டவர் அல்லது அவரது வழக்குரைப்பவர் அதன் பின்னர் தாம் ஆதாரமாக நம்புவதற்கு எண்ணியிருக்கும் நிகழ்வுகளை அல்லது சட்டத்தைக் கூறியும் வழக்குத் தொடுனர் தரப்பிலான சான்றுகள் மீது அவர் அவசியமானதெனக் கருதும் அத்தகைய விமர்சனக் கருத்துக்களைக் கூறியும் அவரது வழக்கைத் தொடங்கலாம். ஆதன் மேல் அவர் கட்சிக்காரர்களைக் கூப்பிட்டு அவர்கள் சான்று அளித்ததன் பின்னர் தமது வழக்கை தொகுத்துரைக்கலாம்.*

*(2) சத்தியத்தின் மீது அல்லது உறுதிரையின் மீது சான்று பகர்வதற்கு எதிரி தரப்பில் அழைக்கப்பட்ட சாட்சிக்காரர்கள் எல்லோரையும் குறுக்கு விசாரணை செய்வதற்கு வழக்குத் தொடுக்கும் சட்டவுரைஞர் உரித்துடையவராதல் வேண்டும்.*

***பிரிவு 222: சாட்சிகாரர்களை விசாரணை செய்வதற்கு அவர்களை கட்டளை விட்டழைப்பதற்கு குற்றம் சாட்டப்பட்டவருக்குள்ள உரிமை***

*குற்றம் சாட்டப்பட்டவரால் முன்னரே பெயர் குறிப்பிடப்படாத சாட்சிக்காரர் எவரும் வந்திருந்தால் அவரை விசாரணை செய்வதற்கு குற்றம் சாட்டப்பட்டவரை அனுமதித்தல் வேண்டும்..*

***பிரிவு 223: மறுதலித்தலுக்கான சாட்சிகாரர்கள்***

*வழக்குத் தொடுக்கும் சட்டவுரைஞர் நீதிபதியின் அனுமதியுடன் மறுதலிப்பதற்காக சாட்சிக்காரர்களை அழைக்கலாம்.*

***பிரிவு 224: தவறு புரியப்பட்ட இடத்தை யூரர் சபை பார்வையிடுதல்.***

*(1) குற்றம் சாட்டப்பட்ட தவறானது புரியப்பட்டுள்ளதென சார்த்தப்படுகின்ற இடத்தை அல்லது விளக்கத்திற்கு முக்கியமான வேறு ஏதேனும் செயல் நிகழ்ந்துள்ளதாக சார்த்தப்படுகின்ற வேறு ஏதேனும் இடத்தை யூரர் சபை பார்வையிடுதல் வேண்டுமென நதீபதி எண்ணுகின்றவிடத்து பொருள்பட அமைந்த கட்டளையை அவராக்குதல் வேண்டும். அத்துடன் நீதிபதியினால் நியமிக்கப்பட்ட ஒரு ஆளினால் யூரர் சபையினருக்கு காட்டப்பட வேண்டிய அத்தகைய இடத்திற்கு நதீமன்ற அலுவலர் ஒருவரது கவனிப்பின் கீழ் யூரர்சபையினர் ஒரு குழுவாக அழைத்துச் செல்லப்படுதல் வேண்டும்.*

*(2) அத்தகைய அலுவலர் நீதிபதியின் அனுமதியுடன் தவிர யூரர் சபையின் உறுப்பினர் எவருடனேயும் பேசுவதற்கோ அல்லது ஏதேனும் தொடர்பு கொள்ளுவதற்கோ வேறு ஆள் எவரையேனும் அனுமதித்தல் கூடாது. அத்துடன் நீதிமன்றம் வேறுவகையாகப் பணித்தாலொழிய பார்வையிட்டு முடிந்ததும் உடனடியாக நீதிமன்றத்திற்கு திருப்பி அழைத்துச் செல்லப்படுதல் வேண்டும்.*

***பிரிவு 225: யூரர் எப்போது விசாரணை செய்யப்படலாம்.***

*இயைபான நிகழ்வு எதனையும் பற்றி யூரர் ஒருவர் தனிப்பட்ட முறையில் அறிந்திருப்பின் அவ்வாறு தான் அறிந்திருக்கின்றார் என்பது பற்றி நீதிமன்றத்திற்கு அறிவித்தல் அவரது கடமையாதல் வேண்டும். அதன் மேல் வேறெந்த சாட்சிக்காரரும் விசாரிக்கப்படுகின்ற அதேவிதத்தில் அவர் சத்தியம் எடுத்தோதுவிக்கப்பட்டு விசாரணை செய்யப்படலாம்.*

***பிரிவு 226: ஒத்திவைக்கப்பட்ட அமர்வில் யூரர் சபை சமூகமளித்தல் வேண்டும்.***

*விளக்கமொன்று ஒத்திவைக்கப்பட்டால் விளக்கம் முடிவடையும் வரையிலும் ஒத்திவைக்கப்பட்ட அமர்விலும் அதற்குப் பின்னரான ஒவ்வொரு அமர்விலும் யூரர் சபையானது சமூகமளிக்க வேண்டும்.*

***பிரிவு 227: யூரர் சபையை எப்போது ஒன்றாக வைத்துக் கொள்ளலாம்.***

*(1) ஏதேனும் வழக்கில் நீதிபதியின் தொகுப்புக்குரைக்கு முன்னரான ஏதாவது ஒத்திவைப்பின்போது யூரர் சபையினரை ஒன்றாக வைத்திருத்தல் அவசியமாகாது. ஆனால் ஏதேனும் விளக்கத்தில் ஏதேனும் ஒத்திவைப்பின் போது யூரர் சபையினர் ஒன்றாக வைத்திருக்கப்படுதல் நீதியின் நலனுக்கு உசிதமானது என அவருக்குத் தோன்றினால் அவர் அவ் ஒத்திவைப்பின் போது யூரர்சபை ஒன்றாக வைத்திருக்கப்படுதல் வேண்டுமெனத் தேவைப்படுத்தல் சட்டமுறையானதல் வேண்டும்.*

*(2) ஏதேனும் விளக்கத்தின் போது யூரர் சபையினர் பிரிந்திருப்பதற்கு அனுமதிக்கப்படுமிடத்து அவ்வாறு பிரிந்திருக்கும் போது விளக்கத்திற்குரிய விடயத்தின் மீது சகயூரருடன் அல்லது வேறு ஏதேனும் ஆளுடன் தொடர்பு கொள்ளுதலாகாது யூரர்மாருக்கு முதற்கண் சத்தியம் எடுத்தோதுவிக்கப்படலாம் அல்லது உறுதியுரை செய்விக்கப்படலாம்.*

*(3) அத்தகைய எவரேனும் யூரர் அல்லாத வேறு எவரேனும் ஆளுடன் அத்தகைய தொடர்பு கொண்டால் அல்லது சக யூரர் அல்லாத வேறு எவரேனும் ஆள் எவருடனும் அத்தகைய ஏதேனும் தொடர்பு கொண்டால் விடயத்திற்கு ஏற்றாற்போல அத்தகைய யூரர் அல்லது ஆள் நீதிமன்ற அவமதிப்பு குற்றவாளியாகக் கருதப்பட வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க தண்டிக்கப்படக்கூடியராதலும் வேண்டும்.*

***பிரிவு 228: நீதிபதி யூரர்களுக்கான சிற்றுண்டி, பானங்களை அனுமதிக்கலாம்.***

*நீதிபதி தொகுப்புரையாற்றுவதற்கு முன்னரேனும் அல்லது பின்னரேனும் யூரர் சபையொன்றாக வைத்திருக்கப்பட வேண்டிய எந்த நேரத்திலும் அவர் தகுதியெனக் கருதினால் யூரர் சபையினருக்கு நியாயமான அளவு சிற்றுண்டிகள் பானங்கள் அரசின் செலவில் வழங்கப்பட வேண்டுமென நதீபதி கட்டளையிடலாம்.*

## [9.3.5] விளக்க முடிவு

இவ் ஏற்பாடுகள் கு.ந.ச.கோவை பிரிவு 228 முதல் 229 வரையில் அடங்குகின்றன.

***பிரிவு 229: யூரர் சபைக்கான அறிவுரை***

*எதிர்தரப்பு வழக்குரைப்பும் வழக்குத்தொடுக்கும் சட்டவுரைஞரின் மறுமொழி ஏதேனும் இருப்பின் அதுவும் முடிவடைந்ததும் நீதிபதி சான்றுகளைத் தொகுதத்துரைப்பதன் மூலமும் யூரர் சபையால் பின்பற்ற வேண்டிய சட்டத்தை எடுத்துக்கூறுவதன் மூலமும் யூரர் சபைக்கு அறிவுரை கூறுதல் வேண்டும்.*

***பிரிவு 230: நீதிபதியின் கடமை***

பின்வருவன நீதிபதியின் கடமையாதல் வேண்டும் :

*(அ)விளக்கத்தின் போது நிகழ்கின்ற சட்டப்பிரச்சினைகள் எல்லாவற்றினையும் அத்துடன் குறிப்பாக எண்பிப்பதற்கென உத்தேசிககப்பட்டுள்ள நிகழ்வுகளின் இயைபுடைமையையும் சான்றின் ஏல்தகவையும் பற்றிய சாட்சிக்காரர்களால் அல்லது அவர்கள் சார்பில் கேட்கப்படும் கேள்விகளின் நேர்மையைப் பற்றிய எல்லாப் பிரச்சினையையும் முடிவு செய்தலும் அவரது தற்றுணிபின் பேரில் ஏல்தகாச்சான்று காண்பிக்கப்படுவதை கட்சிக்காரர்களால் ஆட்சேபிக்கப்படினும் சரி, அல்லது ஆட்சேபிக்கப்படாவினும் சரி தடுத்தலும்,*

*(ஆ) விளக்கத்தில் சான்றாக அளிக்கப்பட்டுள்ள எல்லா ஆவணங்களின் கருத்துக்கள் பற்றியும் அவற்றை பொருள் அமைத்துக்கொள்ளல் பற்றியும் முடிவு செய்தலும்,*

*(இ) குறித்த விடயங்கள் பற்றிய சான்று அளிக்கப்படுதலை இயலச் செய்வதற்காக எந்த நிகழ்வுக் கருமங்களை எண்பித்தல் அவசியமாகக்கூடுமோ அந்த நிகழ்வுக்கருமங்கள் பற்றிய விடயங்கள் பற்றி முடிவு செய்தலும்,*

*(ஈ) எழுகின்ற ஏதேனும் பிரச்சினை தமக்குரியதா அல்லது யூரர் சபைக்குரியதா என முடிவு செய்தலும் நீதிபதியின் கடமையாதல் வேண்டும்.*

***பிரிவு 231: நிகழ்வு பற்றிய பிரச்சினை மீது அல்லது சட்டப்பிரச்சினையும் நிகழ்வுப் பிரச்சினையும் தொடர்புபட்ட பிரச்சினை மீது நீதிபதி கருத்துத் தெரிவிக்கலாம்.***

*நீதிபதி தமது தொகுப்புரையின் போது நிகழ்வைப் பற்றிய ஏதேனும் பிரச்சினை மீது அல்லது நடவடிக்கைகளுக்கு இயைபானதும் சட்டப்பிரச்சினை, நிகழ்வுப்பிரச்சினை ஆகிய இரண்டும் பற்றியதான பிரச்சினை மீது அவர் தகுந்தது எனக் கருதினால் யூரர் சபைக்கு தமது கருத்தை தெரிவிக்கலாம்.*

எடுத்துக் காட்டுக்கள்:

*(அ)வழக்கில் சாட்சிக்காரராக இல்லாத ஆள் ஒருவரால் செய்யப்பட்ட ஒரு கூற்றை அத்தகைய கூற்றின் சான்றை ஏல்தகவினதாகச் செய்யும் சூழ்நிலைகள் எண்பிக்கப்பட்டன என்று ஏதுவின் மீது எண்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அச்சூழ்நிலைகள் இருந்தன என்பது எண்பிக்கப்ட்டதா எண்பிக்கப்படவில்லையா என்பது பற்றி முடிவு செய்து செய்ய வேண்டியது நீதிபதியேயன்றி யூரர் சபையல்ல.*

*(ஆ) எந்த ஆவணத்தின் மூலப்பிரதி தொலைந்துள்ளது என அல்லது அழித்துள்ளது என சார்த்தப்படுகின்றதோ அந்த ஆவணம் பற்றிய இரண்டாம் நிலைச்சான்றை அழிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மூலப்பிரதி தொலைந்துள்ளதா என முடிவு செய்தல் நீதிபதியின் கடமையாக வேண்டும்.*

***பிரிவு 232: யூரர் சபையின் கடமை***

*(அ)பின்வருவன யூரர் சபையின் கடமையாதல் வேண்டும். அதாவது நிகழ்வுகளைப் பற்றிய எந்தக் கருத்துக்கோணம் உண்மையானது என முடிவு செய்தலும் அதன் பின்னர் நீதிபதியின் பணிப்புக்கிணங்கள் அத்தகைய கருத்துக் கோணத்தின் படி அழிக்கப்படற்பாலானதாக துணிவுரையை அளித்தலும்,*

*(ஆ) (சட்டம் தொடர்பான சிறப்புச் சொற்களை விட) ஏனைய தொழில்நுட்பம் தொடர்பான சிறப்புச் சொற்கள் எல்லாவற்றினதும் பொருளையும் வழக்கிலுள்ள கருத்திற்கு புறம்பான கருத்தில் பயன்படுத்தப்பட்டனவும், அது பற்றி தீர்மானித்தல் அவசியமாக உள்ளதுமான சொற்களின் பொருளையும் (அத்தகைய சொற்களை அவ் ஆவணங்களில் காணப்பட்டாலும் சரி காணப்படவிட்டாலும் சரி) தீர்மானித்தலும்,*

*(இ) சட்டத்திற்கு இணங்க நிகழ்வை ஒட்டிய பிரச்சினைகள் என கருதப்படற்பாலவையான எல்லாப் பிரச்சினைகளையும் முடிவு செய்தலும்,*

*(ஈ) திட்டமிடப்பட்ட பொதுச் சொல் அமைப்புக்கள் அத்தகைய சொல் அமைப்புக்கள் சட்ட நடவடிக்கை முறைமையை குறித்தாலன்றி அல்லது அவற்றின் பொருள் சட்டத்தால் நிச்சயிக்கப்படுவதாயிருந்தாலன்றி (அவ்விரண்டு சந்தர்ப்பங்களிலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவற்றின் பொருளை முடிவு செய்தல் நீதிபதியின் கடமையாகும்) குறித்த விடயங்களுக்கு ஏற்புடையனவாகுமா அல்லவா என முடிவு செய்தலும் யூரர்சபையின் கடமையாதல் வேண்டும். .*

*எடுத்துக்காட்டுக்கள் :*

*(அ) A என்பவர் B என்பவரின் கொலைக்காக விளங்கப்படுகிறார்.*
*கொலைக்கும் கொலையாகாத குற்றத்திற்கிடமான மனித உயிர் போக்கலுக்கு இடையிலான வேறுபாட்டை யூரர் சபைக்கு விளக்குதலும் நிகழ்வுகளின் எக்கருத்துக் கோணங்களில் இருந்து பார்த்து A என்பவர் கொலைக்காக அல்லது கொலையாக குற்றத்திற்கிடமான மனித உயிர் போக்கலுக்காக குற்றத்தீர்ப்பு அளிக்கப்படுதல் வேண்டுமென அல்லது விடுதலை செய்யப்படுதல் வேண்டுமெனக் கூறுதலும் நீதிபதியின் கடமையாகும்.*
*நிகழ்வுகளின் எந்தக் கருத்துக்கோணம் உண்மையானது என முடிவு செய்து நீதிபதியின் நெறிப்படுத்தல் சரியாகவிருப்பினும் சரி பிழையாக இருப்பினும் சரி அத்துடன் அவர்கள் அதற்கு உடன்பட்டாலும் சரி உடன்படாவிட்டாலும் சரி அதற்கிணங்க துணிவுரை அளித்தலும் யூரர் சபையின் கடமையாதல் வேண்டும்.*

*(ஆ) குறித்த ஒரு விடயம் பற்றி உதாரணமாக வேலையானது நியாயமான திறமையுடன் அல்லது முறையான விழிப்புக் கடமையுடன் செய்யப்பட்டதா என்பது மீது ஆள் ஒருவர் நியாயமான நம்பிக்கை வைத்திருந்தாரா அல்லவா என்பது கேள்வி இவற்றில் ஒவ்வொன்றும் யூரர்சபை முடிவு செய்ய வேண்டிய கேள்வியாகும்.*

### *பிரிவு 233: துணிவுரை பற்றி ஆராய்வதற்கு யூரர்சபை ஒதுக்கிடத்துக்குச் செல்லலாம்.*

*(1) தொகுப்புரையின் பின்னர் யூரர் சபையினர் தங்கள் துணிவுரை பற்றி ஆராய்வதற்காக ஒதுக்கிடத்திற்குச் செல்லலாம்.*

*(2) யூரர்சபையினர் ஒதுக்கிடத்திற்குச் சென்றால் அவர்கள் நீதிபதி ஒருவரின் பொறுப்பில் விடப்படுதல் வேண்டும். முதற்கண் அந்த அலுவலர் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் சத்தியம் செய்தல் அல்லது உறுதியுரை வழங்கல் வேண்டும்.*

*(3) நீதிபதியின் அனுமதியுடன் தவிர யூரர் சபை உறுப்பினர் ஒருவரைத் தவிர்ந்த வேறு ஆள் எவரும் அத்தகைய யூரர் சபையின் உறுப்பினர் எவருடனும் கதைத்தலோ தொடர்பு எதனையும் வைத்திருத்தல் ஆகாது.*

### *பிரிவு 234: யூரர் சபை துணிவுரை அளிப்பதற்கு ஆயத்தமான போது*

*(1) யூரர் சபையின் தங்கள் தற்றுணிபுரையை அளிப்பதற்கு ஆயத்தமாகி அவர்கள் எல்லோரும் சமூகமாக இருக்கும் போது அவர்கள் ஒரே மனதினராக உள்ளனராவென பதிவாளர் முகாரியைக் கேட்டல் வேண்டும்.*

*(2) யூரர் சபையினர் ஒரே மனதினராக இல்லாவிடின் மேலும் ஆய்வதற்காக ஒதுக்கிடத்திற்கு செல்லும்படி நீதிபதி அவர்களைத் தேவைப்படுத்தலாம்.*

*(3) நீதிபதி நியாயமானதெனக் கருதும் வகையிலான அத்தகைய மேலதிக ஆய்வின் பின்னர் அல்லது முதலாவது முறையிலேயே முகாரியானவர் யூரர் சபையினர் ஒரே மனதிராக உள்ளனர் எனக் கூறினால் அல்லது நீதிபதி அவர்களை ஒதுக்கிடத்திற்கு செல்லும்படி தேவைப்படுத்தியிருக்காவிட்டால் (யூரர்மார் எல்லோரும் சமூகமாக இருக்கையில்) குற்றம்சாட்டப்பட்ட ஆள் (அவரது பெயரைக் குறிப்பிட்டு) அவருக்கு எதிராகச் சாட்டப்பட்டுள்ள தவறுக்கு ( அது என்ன தவறு எனக் குறிப்பிட்டு) குற்றவாளி என தீர்மானிக்கிறீர்களா அல்லது குற்றவாளியல்ல எனத் தீர்மானிக்கிறீர்களா எனப் பதிவாளர் கேட்டல் வேண்டும்.*

*(4) இதன்மேல் யூரர் சபையின் துணிவுரை என்னவென்பதை முகாரியானவர் கூறுதல் வேண்டும். .*

### *பிரிவு 235: ஒவ்வொன்றின் மீதும் துணிபுரை வழங்க வேண்டும்*

*(1) நீதிபதியால் வேறுவகையாகக் கட்டளையிடப்பட்டாலன்றி குற்றம் சாட்டப்பட்டவர் எந்தக் குற்றச்சாட்டுக்களின் மீது விளங்கப்படுகின்றாரோ அந்தக் குற்றச்சாட்டுக்கள் எல்லாவற்றின் மீதும் யூரர்சபை துணிவுரையளித்தல் வேண்டும். அவர்களின் துணிவுரை என்னவென நிச்சயப்படுத்துவதற்கு அவசியமானவாறான அத்தகைய கேள்விகளை நீதிபதி கேட்கலாம்.*

*(2) யூரர்சபையால் அளிக்கப்பட்ட துணிவுரையை நீதிபதி அங்கீகரிக்காவிட்டால் அவர்களது துணிவுரையை மீளாய்வுமாறு அவர்களை அவர் பணிக்கலாம். அத்தகைய மீளாய்வின் பின்னர் அளிக்கப்பட்ட துணிவுரையானது உண்மையான துணிவுரையெனக் கருதப்படுதல் வேண்டும். .*

***பிரிவு 236: துணிபுரையை பதிதலும் அதற்குக் கையொப்பமிடுதலும்***

*(1) பதிவாளர் குற்றப்பகர்வில் துணிவுரையைப் பதிவு செய்து அதன் பின்னர் பின்வரும் சொற்களை அல்லது அதே பயனைத் தருவதான சொற்களை யூரர்சபைக்கு கூறுதல் வேண்டும். யூரர்சபை பெரியோரே, தாங்கள் முகாரி துணிவுரையில் கையொப்பமிடுவதை உற்றுக் கவனிக்கவும். அ, ஆ எனும் கைதியானவர் குற்றவாளி (அல்லது குற்றளவாளியல்லர்) என்பதே உங்களின் (அல்லது விடயத்திற்கேற்றவாறு உங்களில் பல பேரின் துணிபு).*

*(2) அவ்வாறு பதியப்பட்ட துணிவுரையில் முகாரியானவர் கையொப்பமிடுதல் வேண்டும். அவ்வாறு பதியப்பட்டு கையொப்பமிடப்பட்டதும் (ஆனால் அதற்கு முன்பு அல்ல) துணிவுரையை இறுதியானதாக இருத்தல் வேண்டும்.*

*(3) தற்செயலாக அல்லது தவறுதலாகப் பிழையான துணிவுரை ஒன்று வழங்கப்பட்டால் அதில் கையொப்பமிட முன்னர் அல்லது உடனடியாக அதற்குப் பின்னர் அத்துணிவுரையை யூரர்சபை திருத்தலாம்.*

***பிரிவு 237: யூரர் சபையினருக்கு உடன்பட முடியாவிட்டால் அவர்களைக் கலைத்தல்.***

*யூரர்சபையினர் அல்லது அவர்களில் தேவைப்பட்ட பெரும்பான்மையோர் உடன்படா விட்டால் நீதிபதி அவர் நியாயம் எனக் கருதும் அத்தகைய நேரம் கழிந்த பின்னர் யூரர் சபையைக் கலைத்தல் வேண்டும்.*

***பிரிவு 238: குற்றத்தீர்ப்பளிக்கப்படும் சந்தர்ப்பத்திலான தீர்ப்பு***

*குற்றம் சாட்டப்பட்டவர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டால் சட்டத்திற்கிணங்க நீதிபதி உடனாடியாக அல்லது நியாயமான காலத்திற்குள் தீர்ப்பு வழங்க வேண்டும். ஆயின் நீதிபதி உசிதம் எனத் தோன்றிய அவர் தீர்ப்பு வழங்குவதற்குப் பதிலாக குற்றம் சாட்டப்பட்டவர் நீதிபதி பணிக்கக்கூடியவாறான அத்தகைய காலத்தின்போதும் கேட்கப்படுமிடத்தும் கேட்கப்படும்போதும் தோன்றித் தீர்ப்பைப் பெறுவதற்காகப் பிணைகாரரோடு அல்லது பிணைகாரரின்றி முறியொன்றை எழுதி நிறைவேற்றுவதன் மூலம் குற்றம்சாட்டப்பட்டவர் விடுவிக்கப்படுதல் வேண்டுமெனவும் அது வரையில் அமைதியைப் பேணி நன்னடத்தையோடு இருக்க வேண்டுமெனவும் பணிக்கலாம்.*

## [9.4] மேல் நீதிமன்றப் பாய்வு அட்டவணை: அத்தியாயம் 15 யைப் பார்க்கவும் – பின்னிணைப்புக்கள்.

## [9.5] நீதிமன்ற அறைப் பண்பாடும் மரபொழுங்குகளும்

நீதிமன்ற அறையானது ஒரு முறைசார் அமைப்பாக இருப்பதுடன் உங்களுக்கு பழக்கமில்லாத பின்பற்ற வேண்டிய சில விசேடித்த பண்பாட்டு விதிகள் அங்கே உள்ளன. இங்கே சில பயனுள்ள வழிகாட்டுதல்கள் தரப்படுகின்றன:

- எப்போதும் நீதிமன்றத்திற்கு உண்மையுள்ளோராய் இருங்கள் - நீங்கள் நீதிமன்றத்தின் ஒரு உத்தியோகத்தர் என நினைவில் கொள்ளுங்கள்.
- நீதிமன்றத்தில் தோன்றுவதற்கென உரிய முறையில் உடை உடுத்திக் கொள்ளுங்கள். முழுமையாக போர்த்தி முழுமையாக உடை அணிந்து கொள்ளுங்கள். இது நஙீகள் தோன்றும் சபைக்கான மரியாதையைக் காட்டுகிறது.
- நீதிமன்ற அறையின் எல்லாப் பணியாளர்களையும் மரியாதையுடன் நடத்துங்கள். இதிலே உரை பெயர்ப்பாளர்கள், ஒழுங்கு படுத்துனர்கள், தட்டச்சு எழுத்தாளர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், எழுதுவினைஞர்கள், நீதவான் நீதிபதிகள் அனைவரும் உள்ளடங்குவர்.
- நீதிபதிக்கு முகம் கொடுக்கும்போது குற்றம் சாட்டப்பட்டவருக்கான சட்டத்தரணிகள் வழமையாக வலதுபக்கத்தில் உள்ள மேசையில் அமர்ந்திருக்கும். வழக்குத் தொடுக்கும் பக்க சட்டத்தரணி இடது பக்கத்திலுள்ள மேசையில் அமர்ந்திருக்கும்.
- நீதிபதி நுழையும் போது எல்லா சபையினரும் நீதிமன்றத்தில் உள்ள அனைவரும் எழுந்து நிற்பதுடன், சபை நீதிபதிக்கு தலை வணங்கும்.
- எழுதுவினைஞர் அல்லது பதிவாளர் அமரும்படி அறிவுறுத்தும் போது எல்லோரும் அவ்வாறு செய்தல் வேண்டும்.

- நீதிபதியை விளிப்பதற்கு நீங்கள் தயாராகும்பொழுது உங்களது மேசையில் எழுந்து நில்லுங்கள் அல்லது வாசகர் பீடத்தில் நில்லுங்கள் (வாசகர் பீடம் இருக்குமாயின்)
- நீதிபதி உங்களைப் பார்க்கும் வரையும் அல்லது தொடருவதற்கு தயாராகும் வரையும் காத்திருங்கள், நீதிபதி உங்களுக்கு தலை அசைச்சலாம் அல்லது தொடரும்படி சொல்லலாம் உங்களுக்கு நிச்சயம் இல்லாது விடின் உங்களுக்கு நீதிபதியிடம் நீங்கள் தொடரலாமா எனக் கேளுங்கள்
- வழமையாக நீதிமன்றத்தில் பேசும் முதல் சபையினர் அடுத்த தரப்பினரையும் அறிமுகம் செய்ய வேண்டும். உதாரணத்திற்கு ஒருவர் சொல்லலாம் (பெயர்) வழக்குத் தொடுப்பவராகத் தோன்றுபவர் எனது தோழர் (பெயர்) அல்லது எனது நண்பதர் (பெயர்) மற்றும் பெயர்) அவர் வழக்குரைஞர் தரப்பில் தோன்றுபவர் மற்றும் (பெயர்) குற்றம் சாட்டப்பட்டப்பட்டவருக்காகத் தோன்றுகிறார
- ஒவ்வொரு சட்டத்தரணியும் மீண்டும் தாம் நீதிமன்றத்தில் பேசத் தொடஙகுவதற்கு முன்பதாக மீண்டும் தம்மை அறிமுகம் செய்து கொள்ள வேண்டும்.
- நீதிபதியை விளிப்பதற்கான முறை உங்களுக்கு இல்லை எனில் அது வரும் வரை அமர்ந்திருந்து நடப்பதை அவதானியுங்கள்.
- சமர்ப்பிப்புக்களில் அல்லது முடிவுக் குறிப்புக்களின்போது நீங்கள் பயனப்டுத்தக்கூடியவற்றைப் குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள்.
- இணைச்சட்டத்தரணியுடன் பேச வேண்டுமாக இருந்தால் நீதிபதியின் அவதானத்தை பாதிக்காத விதத்தில் இருக்க முயற்சியுங்கள், ஒரு குறிப்பை எழுதிக் கொடுங்கள்
- நீதிபதியிடம் நீங்கள் பேசும்போது அல்லது அவர் உங்களுடன் பேசும் ஒவ்வொரு சமயத்திலும் எழுந்து நில்லுங்கள் - தொடர்ந்து அமர்ந்து இருக்க வேண்டாம்
- உங்களது இணைசட்டத்தரணி எனது தோழர் அல்லது எனது இணை சட்டத்தரணி என எடுத்தாளுங்கள் எதிர்பக்க சட்டத்தரணி ''எனது தோழர்'' அல்லது சட்டத்தரணி என தரப்பினரின் பெயர் பதவிநிலை என்பவற்றினால் எடுத்தாளப்பட வேண்டும்.
- முறைசார் ரீதியாக நீதிபதியை விளியுங்கள். மிகவும் பொதுவான சட்ட நீதித்துறையில் இது M"lord என (ஒரு ஆண் நீதிபதிக்கும்) அல்லது M"lady என ஒரு பெண் நீதிபதிக்கும்) பயன்படுத்தப்படுகிறது. மாற்றீடாக ஒவ்வொரு நீதிபதிக்கும் நீதிபதி (முதல் பெயருடனோ) அல்லது வெறுமனே நீதிபதி எனவோ எடுத்தாளலாம்.
- நீதிபதிக்கு இடையீடு செய்ய வேண்டாம்.
- நீங்கள் சட்டம் அல்லது நிகழ்வு ரீதியான பிழையொன்றை சமர்ப்பணம் செய்வீர்களாயின் ''நான் நீதிமன்றத்திற்கு மற்றும்/ அல்லது எனது கற்ற நண்பருக்கு கடமைப்பட்டிருக்கின்றேன் என்ற சொற்களுடன் நீதிபதியிடமோ அல்லது வழக்குத் தொடுனரிடமோ தாழ்மையாக அதனை ஏற்றுக்கொள்ளுங்கள்''
- நீங்கள் நீதிமன்றத்தை விளித்து ஒரு விடயத்தை சொல்ல விரும்பும்போது ''இது சமர்ப்பிக்கப்படுகிறது'' என்ற வார்த்தையை குறிப்பிடுங்கள்.
- உங்களது விவாத இடையில் அல்லது சமர்ப்பிப்பு இடையில் ஒரு நீதிபதி இடையீடு செய்தால் உடனடியாக நிறுத்துங்கள் அவர் முடிக்கும் வரை பதிலளிக்க காத்திருங்கள்
- உங்களது தரப்பினருக்கு முக்கியமான ஒரு விடயத்தை அல்லது உண்மையை வழக்குத் தொடுனரின் நீதிமன்றத்திற்கு தெரிவிக்க விரும்புவீர்களாயின் ''இது எனது விசேடித்த அறிவுறுத்தலாக உள்ளது'' எனக் கூறுவதன் மூலம் அதைச் சுட்டிக்காட்டுங்கள்''
- எதிர்த்தரப்பு நீதிபதியுடன் பேசிக்கொண்டிருக்கும்போது இடையீடு செய்யாதீர்கள் அல்லது எதிர்ப்புத் தெரிவிக்காதீர்கள்.
- எதிர்த்தரப்பால் விவாதிக்கப்படும் ஒரு விடயம் தொடர்பாக பதிலளிக்குமாறு நீதிபதியால் விசேடமாகக் கேட்கப்படும் வரை காத்திருங்கள்.
- நீதிபதி ஒரு கேள்வியை உங்களிடம் கேட்பாராயின் அதற்குப் பதிலளிப்பதற்கு முன்பு அதைப்பற்றிச் சிந்திப்பதற்கு நேரம் எடுங்கள். கேள்வி கேட்காவிட்டால் அல்லது அதனால் குழப்பம் அடைந்தால் நீதிபதியிடம் அந்தக் கேள்வியை மீளக் கூறுமாறு அல்லது திரும்பக்கூறுமாறு கேளுங்கள்
- ஒரு கேள்விக்குப் பதில் உங்களுக்குத் தெரியாது என்றால் தெரியாது என்று சொல்லுங்கள்
- ஒரு கேள்விக்குப் பதிலளிக்கப்படும் பட்சத்தில் கேள்விக்கு முன்பு நீங்கள் எங்கு இருந்தீர்களோ அதிலிருந்து நீங்கள் தொடங்குங்கள்.
- திறந்த நீதிமன்றத்தில் உங்களது கோபத்தை வெளிக்காட்டாதீர்கள்.

## [9.6] ஆரம்பக் கூற்றுக்கள்

### [9.6.1] பொதுவானது

விசாரணைக்கு முந்திய விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்ட பிற்பாடு வழக்குத் தொடுனர் மற்றும் பிரதிவாதி தரப்பினர் ஒரு ஆரம்பக் கூற்றைக் கொடுப்பதற்கான சந்தர்ப்பத்தைக் கொண்டுள்ளனர். ஆரம்பக் கூற்றானது இரண்டு தரப்பினரையும் நீதிபதிக்கு அல்லது நீதிபதி மற்றும் யூரிக்கு விடயம் தொடர்பான ஒரு மேலோட்டப்பார்வையை வழங்க அனுமதிக்கிறது. அத்துடன் அவர்கள் எதை நிருபிக்க திட்டமிடுகிறார்கள் எவ்வாறு அதனை நிருபிக்க எண்ணுகிறார்கள் என்பவை உட்பட கொடுப்பதற்கு சந்தர்ப்பத்தை வழங்குகிறது. குற்றவியல் நடவடிக்கை செயனமுறைக் முறைக்கோவையானது வழக்குத் தொடுனருக்கும் பிரதிவாதிக்கும் முறையே ஆரம்பக்கூற்றுகளை வழங்குவதற்கான ஏற்பாட்டை வழங்குகிறது.

### [9.6.2] தொடர்புடைய சட்டவாக்கம்

*நீதவான் நீதிமன்றம்*

குற்றம் சாட்டப்பட்டவர் அல்லது அவருக்காக மன்றாடுபவர்கள் தமக்குரிய வழக்குகளை ஆரம்பிப்பதற்கு உரித்துடையவராய் உள்ளனர். **(குற்றவியல் கோவை, பிரிவு 184(3))**

*மேல் நீதிமன்றம்: நீதிபதியால் மாத்திரமான விளக்க விசாரணை*

வழக்குத் தொடுனரின் விளக்கம் பூர்த்தியானதைத் தொடர்ந்து குற்றம் சாட்டப்பட்டவர் சான்றுகளை உதாரணம் காட்டுவார். **(குற்றவியல் சட்டக்கோவை, பிரிவு 201)**

*மேல் நீதிமன்றம்: யூரியினால் விளக்க விசாரணை*

குற்றம் சாட்டப்பட்டவர் அல்லது அவரது வழக்குரைப்பவர் அதன் பின்னர் ஆதாரமாக நம்புவதற்கு எண்ணியிருக்கும் நிகழ்வுகளை அல்லது சட்டத்தைப் புரியும் வழக்குத்தொடுனர் தரப்பிலான சான்றுகள் மீது அவர் அவசியமானது எனக் கருதும் அத்தகைய விமர்சனக் கருத்துக்களைக் கூறியும் அவரது வழக்கைத் தொடரலாம். அதன் மேல் அவர் தம் சாட்சிக்காரர்களை அவர்கள் சான்று அளித்ததன் பின்னர் தமது வழக்கைத் தொகுதத்துரைக்கலாம். **(குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை, பிரிவு 221(1)).**

### [9.6.3] ஒரு செயல்விளைவுடைய ஆரம்பக் கூற்றை வழங்குதல்

எமது வழக்கின் விடயப்பொருளை நிறுவுவதற்கான ஒரு சந்தர்ப்பமே உங்களது ஆரம்பக் கூற்றாகும் என்பதுடன் அத்துடன் உங்களது சாட்சி மற்றும் சான்றுகளை அறிமுகம் செய்யும் தூண்டுதல் செய்யும் மற்றும் கட்டாயப்படுத்தும் ஒரு கதையினை சமர்ப்பிப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாக இது உள்ளது. ஆரம்பக் கூற்றின் நோக்கமானது நீதிமன்றத்திற்கும் மற்றும்/ அல்லது யூரிமார்களுக்கும் அவர்கள் கேட்க இருக்கும் வழக்கைப் பற்றி ஏதோ ஒன்றைச் சொல்லுவதாகும். சான்றுகளால் நிருபிக்கப்படவிருக்கும் உண்மைகளுக்கான ஒரு ஆரம்பக் கூற்றுக்கள் மட்டுப்படுத்துவது முக்கியமானது. ஒரு ஆரம்பக் கூற்றானது தர்க்கத்துக்குரிதாக இருக்கக்கூடாது.

நிரூபிக்க வேண்டிய சுமையுடன் கூடிய ஒரு தரப்பினரின் ஆரம்பக் கூற்றுடன் வழக்குத் தொடங்குகிறது. இலங்கையில் வழக்குத்தொடுனர் முதலில் ஆரம்பக் கூற்றை வழங்குவார் அதற்குப் பின்னர் பிரதிவாதிகள் வழங்குவர். அநேகமாக ஆரம்பக் கூற்றைச் செய்வதில் பிரதிவாதி தரப்பினரின் இலக்குகளில் மிகப் பொதுவானவற்றை பின்வருவன உள்ளடக்குகின்றன:

- எதிர்தரப்பு வழக்கின் மேலோட்டப்பார்வையொன்றை வழங்குதல்
- வழக்குத்தொடுனர் வழக்கின் பலவீனத்தன்மையை இனம் காணுதல்
- வழக்குத்தொடுனரின் நிரூபிக்கும் சுமையை அழுத்தியுரைத்தல்.
- சாட்சிகளின் நற்சாட்சியை சுருக்கமாக்குதல் மற்றும் முழு வழக்கினதும் முழுச் சம்பவத்தினதும் உறவுமுறையிலுமான ஒவ்வொரு வகிபங்கையும் சாட்சிகளின் நற்சாட்சியத்தையும் சுருக்கம் செய்தல்
- அறிமுகம் செய்யப்படும் காட்சிப்படுத்தல்களை விபரித்தல் மற்றும் முழு வழக்கிற்குமான உறவுகளின் ஒவ்வொரு வகிபங்கையும் விபரித்தல்
- யூரிமார்களின் பொறுப்புக்களை தெளிவுபடுத்தல்; மற்றும்
- யூரிமார்கள் எடுக்க வேண்டுமென சட்டத்தரணி நாடிநிற்கும் உச்சபட்ச கேள்விகளைக் குறிப்பிடுக.

### [9.6.4] ஒரு செயல்விளைவுடைய ஆரம்பக் கூற்றை வெளியிடுவதற்கான மேலதிக நடைமுறைத் துணுக்குகள்

- குறித்துரைக்கப்பட்ட முறைசார் வழியில் ''இது நீதிமன்றத்தை மகிழ்ச்சியளிக்கட்டும்'' எனத் தொடங்குதல்"
- கூடுமானவரைக்கும் சுருக்கமாக இருத்தல்
- நீதிபதியை மற்றும்/ அல்லது ஒவ்வொரு யூரிமாரையும் பார்த்தல் அவர்களை உங்களது நம்பிக்கைக்குள் எடுப்பதுடன் நீதிமன்ற அறை வளாகத்திற்குள் வெறுமனே பேசாதிருத்தல்.
- யூரிமார்கள் வழக்குத் தொடர்பில் நினைவுகூரக் கூடிய ஏதும் முக்கியமானது பற்றி யூரிமாருக்கு சொல்லுவதன் மூலம் தொடங்குத்தல்: முக்கியமான உண்மை அல்லது சான்றுத்துண்டம் ஒன்றை எடுத்துக்காட்டுதல்.
- உங்களது வழக்குக் கோட்பாட்டை நிறுவிக் கொள்துடன் உங்களது பிரதிவாதத்தின் மையப் பொருளை நீதிமன்றத்திற்கும் மற்றும் அல்லது யூரிமார்களுக்கும் விட்டுச் செல்லல்.
- இணை சட்டத்தரணியை அறிமுகம் செய்ய நீங்கள் விரும்பின் அல்லது எவ்வாறு விசாரணை வேலை செய்யப்போகிறது என விபரிக்க விரும்பின் உங்களது ஆரம்பிப்பிக்குப் பின்பு அதனைச் செய்யுங்கள்.
- சுருக்கமான சாதாரண சொற்களைப் பயனப்டுத்தி எளிய மொழியில் பேசுங்கள்.
- உங்களது யூரிமார்களின் மனதுக்குள் விம்பங்களை உருவாக்கும் வகையில் தெரிவு செய்து வார்த்தைகளைப் பயனப்டுத்துங்கள்.
- எதிர் சண்டையிடாது உங்களது நிலைப்பாட்டைத் தெரிவியுங்கள்.
- உங்களது தரப்பினருக்கான அனுதாபத்தை உருவாக்குங்கள்: நீதிபதியை மற்றும்/ அல்லது யூரிமார்களையும் உங்களது தரப்பினரின் தனிப்பட்ட வாழ்வுக்குள் கொண்டு வாருங்கள்.
- ஒருவிடயத்தை வேறுபட்ட வழிகளில் திருப்பிக் கூறி அதனை வழியுருத்துங்கள்; மற்றும்
- கட்புல உதவிகள் மற்றும் பகுதிகளைப் பயன்படுத்துங்கள்.

### [9.7] நேரடி/ பிரதம விசாரணை

பிரதிவாதிச் சட்டத்தரணியானவர் தன்பக்க நியாயத்தை சான்றுப்படுத்துவதற்காக சாட்சிகளை அழைக்கக்கூடும். தனது வாதத்தை நிருபிக்குமாறு குற்றம் சாட்டப்பட்டவரையும் அவர் அழைக்கலாம். பிரதம விசாரணையின் நோக்கமானது, உரிய மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுகளை தெளிவான மற்றும் ஒழுங்கான முறையில் சாட்சிகளிடமிருந்து எடுத்துக்கொள்வதாகும். பொரும்பாலான சாட்சிகள் சான்று ஒழுங்குகளுடன் பரிச்சயமானவர்கள் அல்லர் என்பதுடன் சட்டவுரைஞர்கள் பொருத்தமானதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதுமான சான்றுகள் கொடுக்கப்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு பொருத்தமான கேள்விகளைக் கேட்பது அவசியமாகும்.

### [9.7.1] பொருத்தமான சட்டவாக்கம்

#### [9.7.1.1] நீதவான் மன்றம் - நீதிவானினால் விளக்க விசாரணை

குற்றம் சாட்டப்பட்டவரால் முன்னரே பெயர் குறிப்பிடாத சாட்சிக்காரர் எவரும் வந்திருந்தால் அவரை விசாரணை செய்வதற்கு குற்றம் சாட்டப்பட்டவரை அனுமதித்தல் வேண்டும். (குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை, பிரிவு 222) வழக்குத் தொடுக்கும் சட்டவுரைஞர் நீதிபதியின் அனுமதியுடன் மறுதலிப்பதற்காக சாட்சிக்காரர்களை அழைக்கலாம். **(குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை, பிரிவு 223)**

குற்றம் சாட்டப்பட்டவர் தனது சார்பாக சான்று அளிக்க விரும்புகிறாரா எனவும், அவர் சாட்சிக்காரர்களை அழைக்க விரும்புகிறாரா எனவும் அவரை நீதிவான் கேட்டல் வேண்டும். (கு. ந. மு.ச.கோ. பிரிவு 152(1). கேள்விக்கு மறுமொழியாக சான்றளிக்க விரும்புவதாகவும் ஆனால் சாட்சிக்காரர்களை அழைக்க விரும்பவில்லை எனவும் குற்றம் சாட்டப்பட்டவர் கூறினால் நீதிவான் குற்றம்சாட்டப்பட்டவரின் சான்றை உடனடியாக எடுக்க முற்படுதல் வேண்டும். **(குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை, பிரிவு 152(2))**

குற்றம் சாட்டப்பட்டவரை விளக்கத்திற்கு பாரம்படுத்தும்போது அவரது விளக்கத்தில் சான்றளிக்குமாறு ஆட்களைத் தேவைப்படுத்தும்படி குற்றம்சாட்டப்பட்டவர் விரும்புகிறாரோ அவ் ஆட்களின் பெயர்கள் எவரேனும் இருப்பின் அவ்விடத்தில் அப்பொழுதே வாய்மொழி மூலம் கூறுமாறு அவரை நீதிவான் தேவைப்படுத்த வேண்டும். நிகழ்வுகளைப் பற்றிக் கூறுவதற்காக அவர் எவ் ஆட்களை அழைக்க உத்தேசிக்கிறாரோ அவ் ஆட்களையும், குணங்களையும் பற்றிக் கூறுவதற்காக அவர் எவ் ஆட்களை அழைக்க உத்தேசிக்கிறாரோ அவ் ஆட்களையும் வேறுபடுத்தி அவர் கூறுதல்

வேண்டும் (குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை, பிரிவு 155(1)). நீதவான் குற்றம்சாட்டப்பட்டவரால் பெயர் குறிக்கப்பட்டவர்களும் அவர் முன்பே ஏற்கனவே சான்றளிக்காதவர்களுமான அத்தகைய சாட்சிக்காரர்களின் நிரல் ஒன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன் அவ் அறிவித்தலில் குறித்துரைக்கப்படும் தேதி அன்று விளக்க நீதிமன்றின் முன்னர் தோன்றுமாறு தேவைப்படுத்தி அறிவித்தலொன்றை அத்தகைய கட்சிக்காரர் ஒவ்வொருவருக்கும் வழங்குமாறு பிசுக்காலைப் பணித்தலும் வேண்டும். **(குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை, பிரிவு 155(2))**

குற்றம் சாட்டப்பட்டவராலும் சாட்சியாலும் கொடுக்கப்படும் சாட்சியங்கள் எழுத்து மூலம் எடுத்துக்கொள்ளப்படும். **(கு.ந.ச. கோவை 152 (5)**

நீதிவான் மன்றத்திலான விசாரணையின் போது பதிவு செய்யப்பட்டவையான குற்றம் சாட்டப்பட்டவரின் கூற்றுக்கள் எவையேனும் இருப்பின் அவை எல்லாம் வழக்குத்தொடுனர் தமது வழக்கை முடிக்க முன்னர் முன்னிலைப்படுத்தப்பட்டு சான்றாக வாசித்துக் காட்டப்படுதல் வேண்டும். **(குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை, பிரிவு 219)**

### [9.7.1.2] மேல் நீதிமன்றம் - நீதிபதியால் விளக்க விசாரணை

குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பிலான எதிர்வாதத்தை எடுத்துக்கூறலாம் என்பதுடன் அவர் சாட்சிக்காரர்கள் எவரேனும் இருப்பின் அவர்களை விசாரணை செய்யலாம் அத்துடன் குற்றம் சாட்டப்பட்ட ஆள் அல்லது அவரது வழக்குரைப்பவர் அவரது வழக்கினைத் தொகுதத்துரைக்கலாம் **(குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை, பிரிவு 201)**

### [9.7.1.3] மேல் நீதிமன்றம் - யூரியினால் விளக்க விசாரணை

குற்றம் சாட்டப்பட்டவர் அல்லது அவரது வழக்குரைப்பவர் அதன் பின்னர் தாம் ஆதாரமாக நம்புவதற்கு எண்ணியிருக்கும் நிகழ்வுகளை அல்லது சட்டத்தைக் கூறியும் வழக்குத் தொடுனர் தரப்பிலான சான்றுகள் மீது அவர் அவசியமானது எனக் கருதும் விமர்சனக் கருத்துக்களைக் கூறியும் வழக்கைத் தொடங்கலாம். அதன் மேல் அவர் சாட்சிக்காரர்களைக் கூப்பிட்டு அவர்கள் சான்று அளித்ததன் பின்னர் தமது வழக்கைத் தொகுதத்துரைக்கலாம். **(குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை, பிரிவு 221(1))**

பிரதிவாதி வழக்குரைஞர் அவரது கேள்விகளின் தொடர்பினைக் கவனமாகத் திட்டமிட வேண்டும். சாட்சியினைத் தெளிவாகவும் முறைமை ரீதியான பாணியிலும் எடுத்துக்கொள்வதை இலக்காக இருக்க வேண்டும். ஒரு தர்க்க ரீதியான தொடர்ச்சியைப் பின்பற்ற வேண்டும் அதன் மூலம்தான் சாட்சியங்களானவை உடனடியாக வழங்கப்படக்கூடியதாக இருக்கும். கேள்விகள் கேட்கப்படும்பொழுது சட்டத்தரணி ஒரு தர்க்கரீதியான ஒழுங்கைப் பின்பற்றாவிடில் சாட்சி குழப்பமடைவதுடன் நீதிபதி அல்லது யூரி சாட்சியின் சாட்சியங்களை பின்தொடர்வதில் அல்லது புரிந்துகொள்வதில் சிரமத்தை கொண்டிருப்பார்.

சாட்சியங்களைப் பெற்றுக்கொள்ளும் சிறந்தவழி என்னவெனில், சாட்சி நிகழ்வுகளின் விபரிப்பை தன்பாட்டில் கொடுப்பதற்கு அனுமதித்து விடுவதாகும். நிகழ்வுகளை அவர்கள் விபரித்துமுடித்த பிற்பாடு விடயங்களைத் தெளிவுபடுத்துவதற்கு கேள்விகள் முன்வைக்கப்படலாம். எவ்வாறாயினும் கேள்விகளானவை சாட்சி, நிகழ்வுகளின் தனது வடிவத்தைச் சொல்லுவதற்கு உதவும் விதத்தில் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் சாட்சியானவர் எதைச் சொல்ல வேண்டும் அல்லது சொல்லிக் கொடுக்கப்படக்கூடாது. அல்லது கேள்விகளுக்கான பதில்களை சொல்லிக் கொடுக்கும் வகையில் கேள்விகள் கேட்கப்படக்கூடாது. கேட்கப்படும் கேள்விகளானவை சுருக்கமானதாகவும் தெளிவானதாகவும் சாட்சிகளால் உடனடியாக சுலபமாக விளங்கக்கூடியதாகவும் எளிதாகவும் உருவாக்கப்பட வேண்டும்.

நிகழ்வு பற்றி உண்மையில் அவரகளுக்கு என்ன தெரியும் என்பது குறித்து பொருத்தமான சாட்சிகளிடமிருந்து கண்டுபிடிப்பதே முக்கியமானதாகும். குற்றம் சாட்டப்பட்டவரோ அல்லது அவரது உறவினர்களோ எதைச் சொல்கிறார்களோ அதில் தங்கியிருப்பது ஆபத்தானது. சில சாட்சிகள் அல்லது மற்றும் அழைக்கப்பட்ட சாட்சிகள் அவர்களுக்குச் சொல்லப்பட்டதை அடிப்படையாகக் கொண்டே சாட்சி சொல்லுவார்கள். முக்கியமான விடயம் குறித்து அவர்களுக்கு என்ன தெரியும் என அறிவதற்கு பிரதிவாதியினால் சாட்சிகள் நேர்காணல் செய்யப்பட வேண்டும். வழக்குத் தொடுனருக்கு சார்பான சாட்சியங்களை அவர்களால் கொடுக்க முடியுமாக இருப்பினும் அவர்களை அழைக்கப்பட முடியும்.

பிரதிவாதிக்கு சாட்சியால் பெறுமதியான சாட்சியங்களை வழங்க முடியும் என ஒரு சாட்சியின் நேர்காணலில் இருந்து சட்டரீதியான வழக்குத்தொடுனர் காணும் பட்சத்தில் ஒரு பிரச்சினை எழக்கூடும். ஆனால் சாட்சி நீதிமன்றத்தில் தனக்கு சாட்சியமளிக்க விருப்பமில்லை அல்லது தான் தயங்குவதாக சுட்டிக்காட்டலாம். சாட்சியின் சாட்சியமானது பிரதிவாதிக்கு முக்கியமானதாக இருந்தால் பிரதிவாதி சாட்சியை அழைப்பிப்பதற்கான ஆணையைக் கொண்டிருக்க முடியும். தயங்கும் சாட்சியை

நீதிமன்றம் மூலம் அழைப்பிப்பதா என தீர்மானிக்கையில் பிரதிவாதிச் சட்டத்தரணியானவர் தயங்கும் சாட்சியிடமிருந்து நீதிமன்றத்தில் என்ன சான்றை எடுக்கக்கூடியதாக இருக்கும் என பரிசீலிக்க வேண்டியிருக்கும் என்பதுடன் அவரின் சாட்சியமானது தனது தரப்பினருக்கும் ஏதும் நன்மையைச் செய்ய முடியுமா எனவும் பரிசீலிக்க வேண்டும்.

### [9.7.2] பிரதம விசாரணையை நடாத்தும் போது நினைவில் வைத்திருக்க வேண்டிய துணுக்குகள்

- நீங்கள் வெளிக் கொண்டுவர விரும்பும் தகவல் குறித்து நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள். இங்கு குறித்த சில உண்மைகளை நிரூபிப்பதற்கு உங்களது வழக்கைப் பாதுகாத்துக்கொள்வதற்கு விசாரணையில் சாட்சியை சமர்ப்பிக்கிறீர்கள் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். குறித்த சாட்சியின் ஊடாக என்ன உண்மைகளை நீங்கள் முன்வைக்க விரும்புகிறீர்கள் என தெரிந்துகொள்வது சில நேரடிக் கேள்வி வழிக்கு முக்கியமானதாகும்.
- யார், என்ன, எப்போது, எங்கே, ஏன், எப்படி, விபரிக்கவும், விளங்கப்படுத்தவும் போன்ற சொற்களுடன் ஆரம்பிக்கும் கேள்விகளைக் கேட்டு சாட்சியிடமிருந்து பெற்றுக்கொள்ள எண்ணும் தகவல்களை வெளிக்கொணருங்கள்.
- சாட்சியைத் தயார் செய்தல் - உங்களது சாட்சியைத் தயார் செய்து கொள்ளுங்கள். என்ன சொல்லப்பட வேண்டுமென நீங்கள் இருவரும் அறிந்திருப்பது முக்கியமானது. எவ்வாறாயினும் சில குறித்த கேள்விகளுக்கு உங்களை ஆளாக்க வேண்டாமென்பதுடன், சாட்சி முற்பட்டு விடையளிப்பதற்கு சாட்சியை அனுமதிக்க வேண்டாம்.
- நீங்கள் கேட்கும் கேள்விகள் குறித்துச் சிந்திப்பதுடன் கொடுக்கப்படும் விடைகளைக் கவனமாக கேட்கவும். சாட்சியிடமிருந்து கிடைத்த முந்திய பதில்களை அடிப்படையாகக் கொண்டு உங்களது கேள்விகளை முயற்சித்து முடியுமான வரைக்கும் கட்டியெழுப்பிக் கொள்ளுங்கள்.
- கேள்விகளைச் சுருக்கமாக்கி அவை சாட்சி தனது கதையை தர்க்கரீதியான தெளிவான வகையில் சொல்ல அனுமதிக்கின்றதா என நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.
- சாட்சிக்கும் யூரிக்கும் நீங்கள் எந்தத் திசையில் உங்களது கேள்வியை முன்கொண்டு போகிறீர்கள் என அறிவிக்கும் தலையங்க வகையிலான கேள்விகளை உட்படுத்துங்கள்.
- உங்கள் கேள்வியின் அர்த்தம் மற்றும் வடிவம் என்பவற்றுக்கு உங்களது எதிரியிடமிருந்து கிடைக்கும் எதிர்ப்புக்களைக் கையாளுவதற்கு தயார்நிலையில் இருங்கள்.
- உங்களது எதிரியின் குறுக்கு விசாரணையை எதிர்பார்த்து இருப்பதற்கு முயற்சியுங்கள். உங்களைக் கவலைப்படுத்தும் உங்களது வழக்குக்கான பிழையான தகவல்கள் இருக்குமாயின் பிரதம விசாரணையின் போது நீங்களாகவே அவற்றை வெளியிடுவது அநேகமாகப் பயனுள்ளதாக இருக்கும். இந்த வகையில் பிழையான நிகழ்வுகளின் வழங்குகையை ஓரளவுக்கு தணித்துக்கொள்ள முடியும் என்பதுடன் கட்டுப்பாட்டிற்குள்ளும் வைத்திருக்க முடியும்.
- பிரதம விசாரணையின் போது பிரதிவாதியானவர் சட்டத்தரணியல்ல என்பதுடன் அவர் ஒரு நட்சத்திரம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நேரடி விசாரணையின் போது நீங்கள் சாட்சியை வழிநடத்துகிறீர்கள். ஆனால் அவர்கள் சொந்தக் கதையைச் சொல்ல விட்டு விடுங்கள்.
- விடயத்திற்குள் நிற்பதில் சாட்சி பிரச்சினையைக் கொண்டுள்ளரா? என்பது குறித்து எப்போதும் எச்சரிக்கையாக இருங்கள். இல்லாதுபோயின் அவரை பின்தொடர்பு கேள்வி மூலம் விடயத்திற்கு கொண்டு வாருங்கள்.
- இட்டுச்செல்லும் கேள்விகளை (விடைகளைச் சொல்லிக் கொடுக்கும் கேள்விகளைக்) கேட்காதீர்கள்.
- சாட்சி குழப்பமடைந்திருக்கிறரா, அசௌகரியமாக இருக்கிறாரா அல்லது களைத்துப் போய் இருக்கிறரா என்பதற்கான அடையாளங்களுக்காக எப்போதும் தேடுங்கள், அவ்வாறாயின் சிறிது நேரத்திற்கு நடவடிக்கையை ஒத்திவைக்கும் படி கேட்கலாம்.

## [9.8] குற்றம் சாட்டப்பட்டவரை சாட்சி வழங்கும் படி அழைத்தல்

குற்றம் சாட்டப்பட்டவர் தனது காப்புக்கருதி சான்றளிப்பது தேவையானதா என பிரதிவாதி வழக்குரைஞர் தீர்மானிக்க வேண்டியுள்ளது. இது தந்திரோபாய ரீதியான வழக்குத் தொடுப்பு தீர்மானமாக இருப்பதுடன் குற்றம் சாட்டப்பட்டவர் இவ்வாறு சான்றளிப்பது அறிவுபூர்வமானதா என குற்றம்சாட்டப்பட்டவரும் அவரது வழக்கறிஞரும் கலந்துரையாடி தீர்மானிக்க வேண்டும்.

இதனைப் பரிசீலிப்பதற்கான மிகவும் நடைமுறை ரீதியான விடயம் என்னவெனில் வழக்குத் தொடரின் இறுதியில் குற்றம் சாட்டப்பட்டவரைக் சிக்கவைக்கும் ஏதும் வழக்கெழு காரணிகள் உள்ளதா எனத் தீர்மானிப்பதாகும். அவ்வாறு இருக்குமாயின் குற்றம்சாட்டப்பட்டவர் பதிலளிக்க வேண்டும் என்பது அர்த்தமாகும். அந்தச் சமயத்தில் குற்றம் சாட்டப்பட்டவர் அவ்வாறு சான்றுரைப்பது பாதுகாப்பானதாக இருக்கும். இதற்கான காரணம் என்னவெனில் குற்றம்சாட்டப்பட்டவர் சான்று

அளிக்காது போயின் குற்றச்சாட்டுக்களில் அது காட்டப்படும் என்பதுடன், நீதிமன்றமும் அவர் எதையோ நீதிமன்றத்திற்கு மறைக்க முற்படுகிறார் என்ற பிரதிவிளைவை காட்டுவதுடன் அவரது மறுப்பை அடிப்படையாகக் கொண்டு பாதகமான முடிவுக்கும் இட்டுச் செல்லும்.

சாட்சியங்கள் இல்லாமையினால் ஒரு விசேடித்த விடயத்தில் வழக்குத் தொடுனர் முன்வைத்துள்ள வழக்கு தமது வழக்கு பலவீனமாக இருக்குமாயின் சான்றளிக்க வேண்டாம் என மதியுரை அளிப்பதே பிரதிவாத சட்டத்தரணிக்கு அறிவுபூர்வமானதாக இருக்கும். (ஒன்றும் கூறாமல் இருக்கும் தனக்குரிய உரிமையை பயன்படுத்துதல்) குற்றம்சாட்டப்பட்டவர் ஒரு வெறிதான சாட்சியை அளிப்பாராயின் இது அரச தரப்பினைப் பலப்படுத்துவதிலேயே சென்று முடியும்.

எவ்வாறாயினும் குற்றம்சாட்டப்பட்டவரின் சாட்சியம் பலவீனமாக இருக்குமாயின் (போதுமான சாட்சியம் இல்லாமை, வாத்தரப்பு சாட்சிகளின் சான்றளித்தலின் போதாமை, அல்லது.்.மற்றும் பிரதிவாதியின் சட்டத்தரணியின் சிறந்த குறுக்கு விசாரணை) அத்துடன் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக வழக்கெழு சாட்சிகள் இல்லாதிருப்பின் சாட்சியம் அளித்தாலும் அளிக்காவிடினும் இது ஒரு கணிக்கப்பட்ட இடராகவே இருக்கும். வழக்கினதும் பேறுகளையும் அடிப்படையாகக் கொண்டே இந்தக் கணிப்பு இருக்கும். வழக்குத்தொடுனர் பிரதிவாதி இருவரினதும் பலங்கள் பலவீனங்களை பரிசீலித்து தரப்பினருக்கு அவ்வாறு சாட்சியம் கூறுவது அவசியமா இல்லையா என பரிசீலிப்பது சட்டத்தரணியின் கடமையாகும்.

## [9.9] குறுக்கு விசாரணை

### [9.9.1] பொதுவானது

பிரதம விசாரணையின் போது சாட்சியம் சேர்க்கப்பட்ட பின்பு எதிர்த்தரப்பினால் சாட்சியை விசாரிக்கும் செயன்முறை இதுவாகும்.

குறுக்கு விசாரணையின் நோக்கம் என்னவெனில் சாட்சியம் வழங்கப்பட்டபோது சமர்ப்பிக்கப்பட்டவைகளின் செம்மைத்தன்மை, நேர்மை என்பவற்றை பரிசோதிப்பதாகும். குறுக்கு விசாரணையின் நோக்கமானது வழங்கபபட்ட சாட்சியத்தின் தகவல்களைச் சேர்த்தல், மாற்றுதல், தரப்படுத்தல், திருத்தல் அல்லது பின்வாங்கச் செய்தல் என்பனவாகும். குறுக்கு விசாரணையானது சாட்சிகளையும் அவர்களது சாட்சியத்தையும் நலிவடையச் செய்வதற்கு மற்றும் குறுக்கு விசாரணை செய்யும் தரப்புக்கு அதிகம் சார்பான சான்றுகளைப் பெற்றுக்கொள்வது என்பதாகும். குறுக்கு விசாரணையானது வழமையாக அநேகமாக மேற்படி எல்லா இலக்குகளையும் கொண்டிருக்கும் என்பதுடன் உங்களுக்கு சார்பாக சாட்சியத்தைப் பிரதானமாக பெற்றுக்கொள்வதும் உங்களது எதிராளியின் விடயத்திலுள்ள பலவீனங்களை வெளிக்கொணருவதும் ஆகும்.

ஒரு பொதுவான பழக்கமாக எதிர்வாதிச் சட்டத்தரணிகள் சாட்சிகளோடு ஈடுபடும் விதத்தில் இனிதாகவும், பண்பாகவும் இருக்க வேண்டும். எவ்வாறாயினும் சில விரோதமான ஒத்துழைக்காத சாட்சிகளோடு ஈடுபடும்பொழுது ஓரளவு உறுதியான மற்றும் கடுமையான அணுகுமுறைகளை கைக்கொள்வது அவசியமானதாகும்.

### [9.9.2] உரிய சட்டவாக்கம்

**நீதவான் நீதிமன்றம்**

வழக்குத் தொடுனர் தரப்பில் அழைக்கப்பட்ட எல்லா சாட்சிக்காரர்களையும் நீதிவானினால் மீள அழைக்கப்பபடடவர்களுமான எல்லாச் சாட்சிக்காரர்களையும் குற்றம்சாட்டப்பட்டவர் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதித்தல் வேண்டும். **(குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை, பிரிவு 184(2))**

**மேல் நீதிமன்றம்**

குற்றம்சாட்டப்பட்டவர் வழக்குத் தொடுனர் தரப்பில் அழைக்கப்பட்ட சாட்சிக்காரர்கள் எல்லோரையும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதித்தல் வேண்டும். **(குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை, பிரிவு 199(5))**

**[9.9.3] குறுக்கு விசாரணையின் நடைமுறை அம்சங்கள்:**

- பிரதிவாதிச் சட்டத்தரணி தனது சொந்த சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்ய மாட்டார்
- பிரதிவாதிச் சட்டத்தரணி, சாட்சியின் சாட்சியத்திலுள்ள நம்பகத் தன்மையை கேள்விக்குட்படுத்தும் பொருட்டு அவரது சாட்சியத்திலுள்ள பெரிய பல பிழைகளைச் சுட்டிக் காட்டக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
- இட்டுச் செல்லும் கேள்விகளாவன குறுக்கு விசாரணையில் அனுமதிக்கப்படுவதுடன் நீதிமன்றமானது சாதாரணமாக பிரதம விசாரணையை காட்டிலும் பெருத்த அளவை அனுமதிக்கிறது.
- எந்த விடயம் தொடர்பாகவும் ஒரு சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்யத் தவறுவதானது சாட்சி கூறிய அவ்விடயத்தை ஏற்றுக்கொள்வதாக அமைகின்றது.

**[9.9.4] மேற்படியானதற்கு மேலதிகமாக குறுக்கு விசாரணைக்காக சட்டத்தரணி தயாராகுதல்.**

- தனிநபர் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்வது உதவியான தகவல்களை உருவாக்கிக் கொள்வதில் எவ்வளவு சாத்தியத்தைக் கொண்டள்ளது என பரிசீலிக்க வேண்டும்
- பிரதம விசாரணையின் போது வழக்குத்தொடுனர் அழைக்கக்கூடிய சாட்சிகளை எதிர்பார்த்து நிற்றல் அல்லது அவர்கள் கொடுக்கக்கூடியதாக இருக்கக்கூடிய சான்றுகளை விவாதித்தல்
- ஒவ்வொரு எதிர்பார்க்கப்பட்ட சாட்சிக்குமான ஏதும் தேவையான குறுக்கு விசாரணைத் திட்டத்தை உருவாக்குதல்
- சாட்சியின் சாட்சியத்தில் இருக்கக்கூடிய ஏதும் முரண்பட்ட தன்மை அல்லது வேறுபாடுகள் குறித்து நீதிமன்றத்திற்கு எடுத்துக் காட்டுதல்
- சாட்சியம் கூறவுள்ளவரின் முன்னைய கூற்றை மீளாய்வு செய்தலும் அத்துடன் அச் சாட்சியின் முன்னைய தொடர்புடைய சாட்சியங்களை மீளாய்வு செய்தலும் பொருத்தமான இடத்தில் பொலிஸ் சாட்சிகளின் குறுக்கு விசாரணையில் பயனப்படுத்துவதற்கு சாத்தியமாக உள்ள உள்ளுர் பொலிஸ் ஒழுங்குவிதிகள் மற்றும் உரிய இடங்களை மீளாய்வு செய்தல்
- சாட்சியின் நம்பகத்தன்மை சார்புத்தன்மை மற்றும் சாட்சியத்தின் நோக்கம் என்பன தொடர்பான விடயங்களில் விழிப்புடன் இருந்தவாறு குறுக்கு விசாரணை தொடர்பாக விடயங்களை எடுத்துக்காட்டலும்

எதிர்வாதச் சட்டத்தரணியானவர், என்ன, எங்கே, எப்பொழுது, ஏன், எப்படி, விபரிக்குக, விளங்கப்படுத்துக போன்றவைகளைக் குறுக்கு விசாரணையின்பொழுது கேட்கக்கூடாது. குறுக்கு விசாரணையின போது நீங்கள் வெளிப்படுத்த விரும்பாத விளக்கங்களை வேண்டி நிற்பதற்கு வார்த்தைகள் உள்ளன. குறுக்கு விசாரணையின் இலக்கானது வழக்குத் தொடுனரின் வழக்கை இலக்கு வைப்பதற்கு அவர்களது பதில்களை விளக்கம் செய்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தை சாட்சிக்கு கொடுக்காமல் குற்றம்சாட்டப்பட்டவரின் வழக்குக் கோட்பாட்டை முன்னகர்த்துவதாகும். நிகழ்வுகள் தொடர்பில் உங்களது விவரணத்துடன் சாட்சியை சம்மதிக்க நீங்கள் விரும்புகிறீர்கள், ஆனால் அவர்களுடைய பதிப்பை விருத்தி செய்வதற்கு அல்ல.

ஆகவே உங்களது குறுக்கு விசாரணையின் தாக்கத்தை உச்சப்படுத்திக்கொள்வதற்கு இந்த மூன்று அடிப்படை கோட்பாடுகளை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்:

(அ)இட்டுச் செல்லும் கேள்விகளை மாத்திரமே கேளுங்கள்: இக் கேள்விகள் இறுதியில் ஒரு கேள்விக்குறியுடன் வெறுமனே உண்மைகளைக் குறிப்பிடும்.

(ஆ) ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு நிகழ்வை/ உண்மையை மாத்திரம் நிறுவிக்கொள்ளுங்கள்:, மற்றும்

(இ) ஒவ்வொரு கேள்வியும் ஒரு விசேடித்த இலக்கிற்கு இட்டுச்செல்வதை உறுதிப்படுத்திக் கொள்ளுதல். ஒரு நோக்கற்ற கேள்வி கேட்டலானது நேரத்தை வீணாக்குவதாகுகவும் சாட்சிக்கு தனது சொந்த விபரிப்பை விபரிப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாகவும் ஆகிவிடும்.

**[9.10] மீள் விசாரணை**

ஒரு சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்ட பின்பு அவரை அழைக்கும் அத் தரப்பானது மேலதிக கேள்விகளை அவர் மீது போடக்கூடும். எவ்வாறாயினும் அவ்வாறு போடப்படக்கூடிய கேள்வி வகைகளுக்கு கடுமையான வரையறைகள் உள்ளன. அத்துடன் நீதிபதி அல்லது நீதவான் கேட்பவரால் அந்த எல்லைகள் மீறப்படக்கூடாது என்பதை உறுதிப்படுத்தவும் வேண்டும். குறுக்கு விசாரணையின் போது எழுப்பப்பட்ட விடயங்கள் தொடர்பாக மாத்திரமே கேள்விகள் இருக்கும். இட்டுச்செல்லும் கேள்விகள் போடப்பட முடியாது. நீதிபதி அல்லது நீதவான் அவ்வாறு செய்வதற்கு அனுமதித்தால் மாத்திரமே புதிய விடயங்களை அறிமுகம் செய்து கொள்ள முடியும்.

## [9.11] விவாதத்தை முடிவுக்கு கொண்டு வருதல்

### [9.11.1] பொதுவானது

ஒரு முடித்து வைக்கும் விவாதமானது ஒவ்வொரு தரப்பினரதும் சட்டத்தரணியால் மேற்கொள்ளப்படும் முடிவுக் கூற்றாகும். இது வழமையாக மிக முக்கியமான உண்மைகளையும் சான்றுகளையும் நீதிபதிக்கு அல்லது யூரர் சபைக்கு வலியுறுத்திக் கூறுவதாக அமைகின்றது.

ஒரு முடிவான விவாதமானது எல்லா சான்றுகளும் சமர்ப்பிக்கப்பட்ட பிற்பாடு விசாரணையின் முடிவில் இடம்பெறுகிறது. குற்றவியல் வழக்குகளில் வழக்குத் தொடுனரின் முடிவு விவாதத்தைத் தொடர்ந்து பிரதிவாதியின் முழு விவாதம் இடம்பெறுகிறது. வழக்குத்தொடுனர் வழமையாக குற்றவியல் வழக்குகளில் நிரூபிக்கும் சுமையை கொண்டிருப்பதால் இறுதியான மறு விவாவதமாக இது அனுமதிக்கப்படுகிறது. வழக்கானது ஒரு யூரியினால் விசாரிக்கப்படுமானால் நீதிபதி வழமையாக யூரிக்கு அதன் இறுதி அறிவுறுத்தல்களை உரிய தரப்புக்களின் முடிவு விவாதங்களைக் கேட்ட பிற்பாடு வழங்குவார். பிரதிவாதியின் சட்டத்தரணி இந்த முடிவுச் சுருக்கத்தை வழக்குத் தொடுனரின் விவாதங்களின் பலவீனங்களை எடுத்துக்காட்டுவதற்கு மாத்திரமல்லாமல் சான்றுகளில் இருந்து எடுத்துக்கொண்டு வரக்கூடிய சார்பான அனுமானங்களை விபரிப்பதற்கும் பயன்படுத்துவார்.

இந்த திரட்டிய சமர்ப்பணத்தின் போது எல்லாச் சான்றுத் துண்டங்களும் ஒன்றாகக் கொண்டு வரப்பட வேண்டுமென்பதுடன், வழக்கை பலமாகவும் சரளமாகவும் கவரும் வகையிலும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வழக்கின் காரணிகளை நிறுவுவதற்கான உதவும் எல்லாக் கருத்துக்களும் முழுமையாக விளக்கம் செய்யப்பட வேண்டும். இந்த முடிவுரையானது ஒரு எளிய சுருக்கமான வழியில் செயற்படுத்தப்பட வேண்டும்.

### [9.11.2] பயனுள்ள முக்கிய துணுக்குகள்:

- அடுத்த தரப்பினரால் செய்யப்படக்கூடிய தர்க்கங்களை எதிர்பார்த்து நிற்பது முக்கியமானது. அவ்வாறான தர்க்கங்கள் செய்யப்படுவதற்கு முன்பதாகவே அவற்றை மறுதலிப்பதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.
- மற்றத் தரப்பினரின் சட்டத்தரணியை தாக்குவதைத் தவிர்க்கவும். யூரிகளோ அல்லது நீதிபதிகளோ இவ்வகையான விவாதத்தை பாராட்ட மாட்டார்கள். எந்த சூழ்நிலையிலும் எதிர்த்தரப்பினருடனோ, எதிர் சட்டத்தரணியுடன் தனிப்பட்ட மோதலில் ஈடுபட வேண்டாம். இது பொருத்தமற்றதும் தொழில்வாண்மையற்றதுமாகும்.
- உங்களது வழக்கின் முக்கிய விடயங்களை விபரிக்கும் போது விளக்கப்படுத்தும் சான்றுகள் பயன்படுத்தப்படுவதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள். விளக்கப்படுத்தல் சான்றுகளின் பயன்பாடானது முடிவு விவாதத்தின் செயல்விளைவை பெருமளவில் அதிகரிக்கிறது மட்டுமல்லாமல், அத்துடன்
- சமர்ப்பிக்கப்பட்ட எல்லாச் சான்றுகளையும் உட்படுத்தாதிருப்பது முக்கியமானது. வழக்கின் எல்லா விபரங்களும் தொகுப்புரையில் முன்வைக்கப்படும் பட்சத்தில் அது அலுப்பூட்டுவதாக மாறுவதுடன் நீதிபதி மற்றும்/ அல்லது யூரிகளை இழக்கும் இடரை ஒருவர் எதிர்கொள்வர். இதற்குப் பதிலாக விசாரணையில் இருந்து சாட்சியங்களின் எடுத்துக்காட்டுகைகள் மற்றும் முக்கிய சான்றுகளை சுட்டிக்காட்டுங்கள்.

இதன் முடிவில், சட்டத்தரணியானவர் குற்றம் சாட்டப்பட்டவரை விடுதலை செய்யுமாறு யூரியை அல்லது நீதிபதியைக் கேட்பதன் மூலம் தனது சமர்ப்பணங்களைச் செய்து முடிக்க வேண்டும்.

## [9.12] பரீட்சித்தல் ஒரு நியாயமான சந்தேகத்திற்கு அப்பாலான குற்ற உணர்வு ?

இலங்கையில் வழக்குத்தொடுனர் ஒரு நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் தனது வழக்கை நிரூபிக்க வேண்டும். ஒரு ஆளை குற்றவுணர்வுடையதாகக் காணுவதற்கு வழக்குத் தொடுனர் அந்த ஒரு ஆள் ஏதோ ஒன்றைச் செய்தார் அல்லது செய்யவில்லை என்ற எல்லா நியாயமான சந்தேகங்களையும் இல்லாதொழிக்க வேண்டிய தேவை அவருக்கு இல்லை அல்லது ஒரு முழுமையான நிச்சயத்தன்மைக்கு அதன் வழக்கை நிரூபிக்க முடியும். ஒரு நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் என்பது வேண்டிநிற்பதானது எல்லாச் சான்றுகளையும் பரிசோதித்த பின்பு நீதிபதி அல்லது யூரி ஒரு முடிவுக்கு மாத்திரம் வரக்கூடியதாக இருப்பதும் அது பிரதிவாதி உண்மையில் குற்ற உணர்வுடையவர் என்பதும் ஆகும்.

நீதிமன்றம் அதன் முன்னுள்ள விடயங்களை சீர்தூக்கிப் பார்த்த பின்னர், ஒன்றில் நிகழ்வொன்று உள்ளதென நம்பும் எனில் அல்லது குறிப்பிட்ட அவ்விடயத்தின் சூழ்நிலைகளின் கீழ் விவேகமுள்ள ஒருவர் அந்நிகழ்வு உள்ளது என்ற எண்ணத்தின் மீது செயலாற்ற வேண்டிய அத்துணை

அளவிற்கு அதன் உள்ளமை சாத்தியமானதெனக் கருதுமெனில், அந்நிகழ்வு எண்பிக்கப்பட்டதெனச் சொல்லப்படும். **( சா.க.ச. அத்தியாயம் 1)**

ஒரு ஆளின் குற்றம் பற்றிய நியாயமான சந்தேகமானது, எல்லா சான்றுகளினையும் பரிசீலிக்கும்போது, ஒப்பீடு செய்யும்போது மற்றும் நிறுத்த பிற்பாடு குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்ட குற்றங்களின் உண்மை ஏற்படுத்தும் நிர்ணயத்துடன் ஒருவர் விட்டுவிடுவதில்லை. குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிரான எல்லாக் குற்றச்சாட்டுக்களினதும் எல்லாக் கூறுகளும் நிருபிக்கப்பட வேண்டும்.

ஒரு நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் என்பதன் அர்த்தத்தை சிறந்த முறையில் புரிந்துகொள்வதற்கு நீதிமன்றம் பிரயோகிக்கக்கூடிய இரண்டு ஏனைய நியமங்களைப் பார்ப்பது அதற்கு உதவும்: *ஒரு அதிகளவிலான சான்று மற்றும்/ அல்லது தெளிவானதும் நம்பவைப்பதுமான சான்று*

- **சான்றுப் பெரும்பான்மை**: இதன் அர்த்தம் சான்றின் 50% க்கு அதிகமானது என்பதாகும். சான்றுகளை அளவிடும்போது ஒரு நீதிபதி அல்லது யூரி தவறு ஒன்று நடைபெறவில்லை என்பதைவிட மிகவும் சான்றுள்ளது என நினைக்கும் போது அந்த நிலையானது உண்மையானது என அவர்கள் கண்டுகொள்ள முடியும்.
- **தெளிவானதும் நம்ப வைப்பதுமான சான்று** : இது அளவுக்கு அதிகமான சான்றுகளை விட மிகவும் அதிகமானது, ஏதோ ஒன்றைச் செய்தாரோ செய்யவில்லையோ என்பதற்கான ஆகக் குறைந்தது 75% சந்தர்ப்பத்துடன் செயற்படுகிறது.
- **ஒரு நியாயமான சந்தேகத்திற்கு அப்பால்**: என்பது உயர்ந்தளவு நியமமாகவும், உலகிலே அநேகமான குற்றவியல் சட்ட எதிர்பார்ப்புகள் முறைமைகளுக்கு பொதுவானதாகவும் உள்ளது. குற்றவியல் வழக்குகளில் பங்குகள் மிகவும் உயர்வாக இருப்பதால் பிரதிவாதி உண்மையில் குற்றமிழைத்தவர் என்று நிரூபிப்பது போதுமானது அல்ல. மாறாக வழக்குத் தொடுனர் அந்த வழக்கின் எல்லா உட்கூறுகளையும் குற்றச்சாட்டுகைகளையும் ஒரு நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்க வேண்டும்.

## [9.13] <u>வழக்குத் தொடுனரின் வழக்கின் இறுதியில் விடுவிப்பதற்காக நீதிமன்றத்திடம் விண்ணப்பித்தல்</u>

குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை பிரிவு 220 பின்வருமாறு தீர்மானிக்கிறது :

வழக்குத் தொடுப்பிற்காக சாட்சிகளைப் பரிசோதித்த பிற்பாடான செயன்முறை

*(1) வழக்குத் தொடுனர் பக்க வழக்கு முடிவடைந்ததும் குற்றம் சாட்டப்பட்டவர் அத் தவறைப் புரிந்தார் என்பதற்கு சான்றில்லை என்று நீதிபதி கருதினால் ''குற்றவாளி அல்ல'' என்ற துணிவுரையை வழங்கும்படி யூரர்சபையை அவர் பணித்தல் வேண்டும்.*

*(2) குற்றம்சாட்டப்பட்டவர் அத்தவறைப் புரிந்தார் என்பதற்கு சான்று உள்ளது என நீதிபதி கருதும் இடத்து அவர் அத்தகைய குற்றம்சாட்டப்பட்டவரை அல்லது அவரது வழக்குரைப்பவரை நோக்கி அவர் சான்றை முன்வைக்கக் நினைக்கின்றாரா எனக் கேட்டல் வேண்டும்.*

*(3) குற்றம் சாட்டப்பட்டவர் அல்லது அவரது வழக்குரைப்பவர் சான்றை முன்வைக்கும் உள்நோக்கம் தமக்கில்லை என்று தெரிவிக்கும் பட்சத்தில் வழக்கு தொடுக்கும் சட்டவரைஞர் குற்றம்சாட்டப்பட்டவருக்கு எதிரான சான்றுகளை தொகுத்துரைக்கும் நோக்கத்திற்காக தமது வழக்கு ஆதாராமாக இரண்டாம் முறையாகவும் யூரர்சபையை விளித்து உரையாற்றலாம்.*

இப்பிரிவானது வழக்கு நீதிபதிக்கு உள்ளுணர்வால் உந்தப்பட்டு உள்னாந்த அதிகாரத்துடன் யூரிமாரை வழக்குத்தொடுனர் வழக்கு சமர்ப்பிக்கப்பட்ட பிற்பாடு அவர் குற்றமற்றவர் என்ற தீர்ப்புக்கு வருமாறு பணிப்பதற்கு குறித்த பிரிவு அனுமதித்தாலும் பிரிவு 220(1) பிரதிவாதிக்கு முக்கியமானது. ஏனெனில் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிப்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தை இது எதிர்வாத சட்டத்தரணிக்கு கொடுப்பதினூடாக (குற்றம் சாட்டப்பட்டவர் குற்றத்தை செய்தார் என்பதற்கு சாட்சியம் இல்லையென வழக்குரைஞர் கருத்துடையதாக இருக்குமாயின்) சாட்சியங்கள் இல்லையென வழக்கை செயல்விளைவுடன் தள்ளிவிடுவதற்கும் குற்றமற்றவர் என்ற தீர்ப்புக்கு யூரியை திருப்புவதற்கும் பணிக்க முடியும். பிரிவு 220(2) அல்லது 220(3) ஆகியவற்றின் செயன்முறைகளுக்கு அமைவாக ஒரு நகர்த்தல் பத்திரம் முன்வைக்கப்படுவதன் மூலம் இதனை முன்னெடுக்க முடியும்.

பிரிவு 220(1) ஆனது இவ்வண்ணமாக சட்டத்தரணிக்கு பயனுள்ள சாதனமொன்றாக இருப்பதன் காரணமாக ஆரம்ப கட்டத்திலே இவ் வழக்கில் இருந்து விடுவிப்பதற்கு மாத்திரமல்லாமல் வெற்றிகரமாக இருப்பின் வழக்கு விசாரணையின் ஆரம்பத்திலேயே குற்றத்தொடுப்பு வழக்கின் பலவீனத்தை விவாதிப்பதற்கும் சட்டத்தரணிக்கு மிகப் பயனுள்ளதாகவும் இருக்கும். (சான்று இருப்பதாகவும், குற்றம் சாட்டப்பட்டவர் பதிலளிக்க வேண்டுமெனவும் நீதிபதி பரிசீலிப்பாராயின்)

அத்துடன், அதனை நீதிபதி அல்லது யூரரிக்கு அழுத்தியுரைப்பார். பிரிவு 220(1) ஆனது குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் பிரிவு 153(1) அதன் விளைவில் ஒத்ததாக உள்ளது. பிரிவு 153(1) ஆனது நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுனரின் வழக்கிற்கு பிற்பாடு, ஒரே வித விடுவிப்பு செயன்முறையினை அனுமதிக்கிறது. அதேநேரத்தில் பிரிவு 220(1) ஆனது யூரியைக் கொண்ட மேல் நீதிமன்றத்தில் பிரயோகிக்கக்கூடியதாக உள்ளது.

''குணவர்தன எதிர் இலங்கைக் குடியரசு மேல் நீதிமன்றம் கம்பஹா *28/78* இலங்கை சட்ட அறிக்கை 316.''

குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக வழக்கெழு காரணிகள் எதுவும் இல்லாதிருப்பின் அவர் விளக்கம் வழங்க வேண்டியிருக்காது. வழக்குத்தொடுனரே குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளியென்பதை நிரூபிப்பதற்கான ஏக பொறுப்பைக் கொண்டிருக்கிறார். வழக்குத் தொடுப்பிற்கான பலவீனமான சான்று தொடர்பில் குற்றமற்ற தன்மையின் மீது குற்றம் சாட்டப்பட்டவர் பாதுகாப்பாக தங்கியிருக்க இது திறந்து விடப்படுகிறது வழக்குத் தொடுனர் தனது பொறுப்பை ஆற்றுவதில் அவருக்கு உதவுவதற்கு குற்றம் சாட்டப்பட்டவர் பக்கத்தில் எந்தக் கடப்பாடும் இருக்காது.

குற்றவியல் நடவடிக்கைச் சட்டக்கோவையின் 186 ஆம் பிரிவானது நடைமுறையின் எந்தக் கட்டத்திலும் குற்றம் சாட்டப்பட்டவரின் முன்மனப் பதிவுகளை விடுவிப்பதற்கு நீதவானிற்கு வலுவளிக்கின்றது என்பதை சட்டத்தரணிகள் கவனிக்க வேண்டும். இப் பிரிவானது பின்வருமாறு தீர்மானிக்கிறது :

*''இதனகத்து முன்னர் அடங்கியுள்ள எதுவும் வழக்கின் எக்கட்டத்திலாயினும் குற்றம் சாட்டப்பட்டவரை நீதிவான் விடுவிப்பதிலிருந்து அவரைத் தடை செய்வதாகக் கருதப்படுதலாகாது. ஆனால் அவ்வாறு செய்வதற்கான காரணங்களை அவர் பதிதல் வேண்டும். ஆயின் நீதிவான் ஆனவர் வழக்கில் மேலும் நடவடிக்கையை தொடர்ந்து நடாத்துதல், குற்றம் சாட்டப்பட்டவரை குற்றவாளி எனக் காணுவதற்கு இட்டுச்செல்லாது எனத் திருப்தி அடைந்தால் இதற்கான காரணங்களை அவர் பதிதல் வேண்டும். அவர் குற்றம் சாட்டப்பட்டவரை விடுதலை செய்தல் வேண்டும்.''*

## [10] சான்று விதிகள்

### [10.1] பொது

பிரதிவாதச் சட்டத்தரணியானவர் சான்று விதிகளுடன் நன்கு பரிச்சயமுடையவராக இருக்க வேண்டும். அநேகமான குற்றவியல் வழக்குகள் சட்ட நுட்பங்களைக் காட்டிலும் அந்த நிகழ்வுகளில் இருந்து எடுக்கப்படும் அந்த உண்மைகள் மற்றும் அனுமானங்களின் நிமித்தமாக மாற்றப்படுகின்றன. ஆகவே அந்த நிகழ்வுகள் உண்மைகள் மிகவும் முக்கியமானவையாக உள்ளன. சான்று விதிகளானவை அடிப்படையில் முக்கியமானவை ஏனெனில் அவை உண்மைகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் வைக்கப்படுகின்றன. எந்த ஆள் சாட்சியம் கொடுப்பதற்கு தகுதியானவர், எவ்வாறு உண்மைகள் நிருபிக்கப்பட முடியும், எப்போது முதல் வாக்குமூலங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியன, என்றவாறாக.

இலங்கையில் சான்றுவிதிகள் குறிப்பாக குற்றவியல் நடவடிக்கை முறைக்கு பொருத்தமானவை இலங்கை சான்றுகள் கட்டளைச்சட்டத்தில் முன்வைக்கப்படுகின்றன. இலங்கையின் சட்டத்தரணியானவர் கட்டளைச் சட்டம் பிரிவு 100 இல் பின்வருமாறு கூறுவதைக் கவனிக்க வேண்டும்.

*இக்கட்டளைச் சட்டத்தால் அல்லது இலங்கையில் வலுவிலுள்ள வேறேதேனும் சட்டத்தால் ஏற்பாடு செய்யப்படாத, சான்றுபற்றிய வினாவொன்று நீதிமுறை நடவடிக்கையொன்றில் எழும் போதெல்லாம், அத்தகைய வினாவானது, சான்றுபற்றிய அப்போதைய ஆங்கிளச் சட்டத்திற்கினங்க தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.*

இந்தப் பிரிவில் தொடருவது என்னவெனில், பிரதான சான்று ஒழுங்குவிதிகளின் சுருக்கமாகும். இது ஒரு சட்டத்தரணி குற்றவியல் வழக்குகள் தரப்பினருக்காக பிரதி வாதிடுகையில் உதவியாக இருக்கக்கூடியவை. இந்த விதிகளானவை நீதிமன்றங்களால் எவ்வாறு பிரயோகிக்கப்படுகின்றன என்ற நிலையில் இருந்து முதலில் விபரிக்கப்படுகின்றன. பல்வேறு குற்றங்கள் குற்றம் சாட்டப்பட்ட ஆளின் சார்பாக எவ்வாறு பயன்படுத்தக்கூடியன என்ற நோக்கிலிருந்து பின்பு அவை பரிசோதிக்கப்படுகின்றன.

## [10.2] ஒப்புறுதிப்படுத்துதல்

ஒப்புறுதிப்படுத்தும் சான்று என்பது ஒரு உண்மையின் நம்பகத்தன்மைக்கு ஆதரவளிக்கும் அல்லது அதனை அதிகரிக்கச் செய்யும் அல்லது ஒரு விடயத்தின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்தும் மேலதிக தகவல்களின் சமர்ப்பிப்பினால் நிச்சயப்படுத்துவதாகும். உதாரணத்திற்கு ஒரு சாட்சியின் சாட்சியமானது பின்வரும் சாட்சியம் அதனை நியாயமான அளவுக்கு சார்ந்திருந்தால் அதனை உறுதிப்படுததுகிறது. அதாவது மரண விசாரணை அதிகாரியின் அறிக்கை அல்லது மற்றுமொரு சாட்சியின் சாட்சியம்.

ஒப்புறுதிப்படுத்தலானது இவ்வண்ணமாக ஆரம்ப சாட்சியினால் ஏற்கனவே செய்யப்பட்ட அல்லது ஆதரவளிக்கப்பட்ட ஒரு கூற்றை இவ்வண்ணம் ஆதரவளிக்கும் சாட்சியமாக உள்ளதுடன் ஆரம்பக் கூற்றை உறுதிப்படுத்துகிறது. உதாரணத்திற்கு Z என்னும் ஒரு சாட்சி W என்பவர் தனது வாகனத்தை ஒரு பச்சைக் கார் மீது செலுத்தியதாக சாட்சியம் கூறுகிறார். அதேவேளையில் Y என்னும் மற்றொரு சாட்சி அன்று சிறிது நேரத்தின் பின்னர் தான் W இன் காரைப் பரிசோதித்த போது தடைகாப்புத் தட்டில் பச்சை வர்ணப் பூச்சை அவதானித்ததாக சாட்சியம் கூறுகிறார்.

சிலவகையான சாட்சிகளின் சான்றுகளானவை போதியதற்றதாகவும், தனியாக நிற்பவையாகவும், நிலை குறைக்கப்பட்ட உண்மைகளின் நிருபிப்பாகவும் உள்ளன. அவ்வாறான சாட்சிகளின் சான்றுகள் உதாரணத்திற்கு, பாலியல் வழக்குகளில் குற்றத்துணையாளிகள், இளம் பிள்ளைகள் மற்றும் முறைப்பாட்டாளர்கள் போன்றோரின் சாட்சியங்கள் வழமையாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

சாட்சியத்தில் பலம் இருப்பதற்கு உறுதிப்படுத்தப்பட்ட உண்மை அல்லது முக்கியமான சாட்சியம் இருக்க வேண்டும். முக்கியமில்லாத உண்மைகளின் உறுதிப்படுத்துகையானது வழமையாக அரச வழக்குகளைப் பலப்படுத்துவதற்கு உதவ மாட்டாது.

அரசின் நிலைப்பாட்டிலிருந்து பார்க்கும் போது குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒருவரை குற்றமொன்றை செய்வதற்கு சிக்கவைத்தல் தொடர்பான சான்றினையே சிக்கவைக்கும் ஒப்புறுதிப்படுத்தலாக பொருள்படுவதுடன் இவ்வாறான சான்று மிக முக்கியமானதொன்றாகும். ஒப்புறுதிப்படுத்துகையானது மற்றொரு சாட்சியின் சாட்சியத்திலிருந்து அல்லது குற்றம் சாட்டப்பட்டவரின் சாட்சியத்திலிருந்து வரக்கூடியது. குற்றம் சாட்டப்பட்டவரின் ஒப்புதல் வாக்குமூலமானது சாட்சியத்தை உறுதிப்படுத்தும் சான்றாக பயன்படுத்தக்கூடியது. சில சூழமைவுகளின் கீழ் குற்றம் சாட்டப்பட்டவர் சாட்சியம் அளிப்பதற்கு தவறிய சிலவையும் ஏனைய சான்றுகளின் உறுதிப்படுத்துகையாக இருக்கக்கூடியது.

## [10.3] சொல்லக்கேட்ட சான்று

சொல்லக்கேட்ட சான்று என்பது சாட்சி கண்ட, கேட்ட, அல்லது அவதானித்த ஒரு சாட்சியமல்ல. ஆனால் விசாரணையின் கீழுள்ள விடயம் பற்றி ஏனையோர் சொல்லக் கேட்டதாகும். அத்துடன் இது பொதுவாக இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

சான்றுக் கட்டளைச் சட்டம் பிரிவு 60 ஆனது எல்லா வாய்மொழிச் சான்றுகளும் நேரடியாகத் தெளிவாக இருக்க வேண்டுமென வெளிப்படுத்துகிறது. சான்றுக் கட்டளைச் சட்டத்தின்படி வதந்தி/ சொல்லக்கேட்ட சான்று ஆனது அனுமதிக்கப்படக்கூடாது எனச் சுட்டிக்காட்டி சான்று கட்டளைச் சட்டத்தில் எந்த ஏற்பாடுகளும் இல்லை. ஆனால் பல எண்ணிக்கையான பிரிவுகள் சொல்லக்கேட்ட சான்று இந்த நிகழ்வு பற்றியவை போன்ற வதந்திச் செய்திகள் அனுமதிக்கப்படுவதற்கு விதிவிலக்குகளை வழங்குகின்றன. (பிரிவு 6 இன் கீழ் அங்கீகரிக்கப்படுகிறது) அத்துடன் பொது எண்ணம் பிரிவு 10 இன் கீழ் அங்கீகரிக்கப்பட்டது. அத்துடன் சான்றுக் கட்டளைச் சட்டம் பிரிவு 17 முதல் பிரிவு 39 வரையானதும் ஏனைய சில விதிவிலக்குகள் உள்ளன.

பொதுவாக, சொல்லக்கேட்ட சான்றை அனுமதிக்காதிருப்பதற்கான காரணம் தர்க்கம் புரியும் நிகழ்வின் அதிசிறந்த சான்றாக (அதிசிறந்த சான்றாட்சி எனக் கூறிக்கொள்ளும்) இருக்காததாகும். (அதாவது, உண்மையான அவதானிப்பாளர் சாட்சியை அளிப்பதில்லையென்பதுடன் அதன் நிமித்தமாக சாட்சியத்தின் நம்பகத்தன்மையானது குறுக்கு விசாரணை மூலம் பரிசோதிக்கப்பட முடியாதது என்றும்) இரண்டாம் கையறிக்கையானது சிதறுண்டு போயிருக்கக்கூடிய மற்றும் செம்மையற்று போயிருக்கக்கூடிய இடர்களையும் கொண்டுள்ளது.

*''சுப்பிரமணியம் எதிர் அரசாங்க வழக்குத்தொடுனர் (1956) 1 W.L.R. 965, பிரிவ் கவுன்சில் வழக்கின் தீர்ப்பில், ஒரு சொல்லக்கேட்ட சான்றா அல்லது அவ்வாறில்லையா எனத் தீர்ப்பதற்கு ஒரு பொறிமுறையை அறிமுகம் செய்தது. சாட்சியத்தின் இலக்கானது கூற்றில் (சொல்லக்கேட்ட மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத) அடங்கியுள்ள எந்த உண்மையை நிறுவுவதாக இருக்குமோ என்பதாகும். அத்துடன் சான்றுகளினூடாக அதனை நிறுவுவதற்கும் முன்மொழியப்படுகிறது. அது கூற்றின் உண்மையின் அடிப்படையில் அல்லாமல் தகவல் அடிப்படையில் ஏற்படுகின்றது.''*

## [10.4] ஆவணச் சான்று

ஒரு ஆவணத்தின் உள்ளடக்கமானது முதனிலைச்சான்று அல்லது துணைநிலைச் சான்றாக நிரூபிக்கப்படக்கூடியது. (சான்றுக் கட்டளைச்சகட்டம் பிரிவு 61). முதனிலைச் சான்று எனப்படுவதன் அர்த்தம் ஆவணமே நீதிமன்றத்தின் பரிசோதிப்புக்காக கையளிக்கப்படுவதாகும். **(சான்றுக் கட்டளைச்சட்டம், பிரிவு 62)**

துணை நிலைச் சான்று என்பதன் அர்த்தமும் அதில் உள்ளடங்குவனவும்:

- உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கொடுக்கப்பட்ட சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள்
- பொறிமுறைச் செயன்முறையின் மூலமாக மூலப் பிரதியில் இருந்து பிரதி எடுக்கப்பட்டவைகள். அவைகளே பிரதியின் செம்மைத்தன்மை, பிரதிகளுடன் ஒப்பிடப்படும் பிரதிகள் என்பவற்றை உறுதிப்படுத்தப்படக்கூடியன:
- மூலப் பிரதி மற்றும் அதனுடன் ஒப்பிடப்படக்கூடிய பிரதிகள்
- அவைகளை செயற்படுத்தாத தரப்பினருக்கு எதிராக அதே நிலையிலான ஆவணங்கள்
- தானே அவற்றை நேராகக் கண்டதாகக்கூறுபவரால் கொடுக்கப்பட்ட ஆவணங்களின் உள்ளடக்கங்களின் வாய்மொழிக் கூற்று.

பொதுவாக ஆவணங்கள் முதனிலை சான்றாக நிருபிக்கப்பட வேண்டும். (சான்றுக் கட்டளைச்சட்டத்திலுள்ள பிரிவு 64). இந்தப் பொதுவான பிரயோகத்திலுள்ள விதிவிலக்குகளானவை சான்றுகள் கட்டளைச் சட்டப் பிரிவு 65 இல் காணப்படுகின்றன.

(1) உடைமையில் அல்லது தத்துவத்தில் உள்ளதாக காட்டப்படும் போது அல்லது, தோன்றும் போது
அ. எவ்வாளுக்கு எதிராக அவ்வாவணம் எண்பிக்க நாடப்படுகிறதோ அவ்வாளின் அல்லது,
ஆ. நீதிமன்ற ஆணையால் அணுகப்பட முடியாத அல்லது நீதிமன்ற மன்றாணைக்கு கீழ்ப்பட்டவராயிராத எவரேனுமாளின் அல்லது,
இ. அதனை காண்பிக்க சட்டப்படி பிணிக்கப்பட்டுள்ளவராயிருக்கும் எவரேனும் ஆளின் மற்றும் 66 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட அறிவித்தலின் பின்னர் அத்தகைய ஆள் அதைக் காண்பிக்காதிருக்கும் போது.

(2) அந்த மூலச் சுவடி எவ்வாளுக்கொதிராக எண்பிக்கப்பட நாடப்படுகின்றதோ அந்த ஆளால் அல்லது அவரது அக்கறைவழிப் பிரதிநிதியால் அந்த மூலச் சுவடியின் உள்ளமை, நிலைமை அல்லது பொருளடக்கங்கள் எழுத்து மூலம் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது என எண்பிக்கப்படும் போது;

(3) மூலச் சுவடி அழிந்துபோயுள்ள போது அல்லது தொலைந்துள்ள போது, அல்லது அதன் பொருடக்கங்கள் பற்றி சான்று கொடுக்க முனைவு செய்யும் திறந்தவரது தவறுகையிலிருந்து அல்லது அசட்டையிலிருந்து எழுவதல்லாத ஏதேனும் வேறு காரணத்திற்காக நியாயமான காலத்தில் அதனை அவர் காண்பிக்க முடியாதிருக்கும் போது.

(4) மூலச் சுவடி இலகுவாக இடம் பெயர்க்கக் கூடியதொன்றல்லாத அத்தகைய இயல்புடையாதிருக்கும் போது.

(5) மூலச் சுவடியானது 74 ஆம் பிரிவின் கருத்தெல்லைக்குட்பட பொது ஆவணமொன்றாக இருக்கும் போது.

(6) அந்த மூலச் சுவடியானது, அதன் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று இக்கட்டளைச் சட்டத்தால் அல்லது இலங்கையில் வலுவிலிருக்கும் வேறேதேனும் சட்டத்தால் சான்றாகக் கொடுக்க அனுமதிக்கப்படுவதான ஓர் ஆவணமாக இருக்கும் போது.

(7) அந்த மூலச் சுவடிகள், நீதிமன்றத்தில் வசதியாக ஆராய்ந்து பார்க்கப்பட முடியாதனவான பல்வேறு கணக்குகளை அல்லது வேறு ஆவணங்களை கொண்டனவாயும், எண்பிக்கப்பட வேண்டிய நிகழ்வு அவற்றின் முழுத்தொகுப்பினதும் பொதுவான பெயராகவும் இருக்கும் போது

உப பிரிவுகள் (1), (3) மற்றும் (4) என்பவற்றின் விடயத்தில் ஆவணத்தின் உள்ளடக்கத்தில் உள்ள துணை நிலைச்சான்றுகள் ஏற்றுக் கொள்ளப்படும் மேலும் உட்பிரிவு (2) இன் விடயத்தில் எழுதப்பட்ட ஏற்றுக் கொள்கையானது ஏற்றுக்கொள்ளப்படக்கூடியது உபபிரிவு (5) மற்றும் (6) க்காக ஒரு ஆவணத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி ஆனால் வேறு எந்த துணைநிலை சான்றும் சான்றும் ஏற்றுக்கொள்ளப்படாது. உப பிரிவு (7) இன் நோக்கத்திற்காக ஆவணங்களின் பரிசோதிப்பில் திறமையுடையவரும் அவற்றை ஆராய்ந்தவருமான யாதும் ஒரு ஆளினால் ஆவணங்களின் பொது விளைவுகளுக்கு சான்றுகள் கொடுக்கப்படலாம்.

பிரிவு 66 ஆனது பிரிவு 65 இல் இடப்பட வேண்டிய அவதானிப்பு விதிகளைக் கொண்டிருக்கும்.

ஆவணமொன்று எவறேனும் ஆளால் ஒப்பமிடப்பட்டது என அல்லது முற்றாக அல்லது பாகமளவில் எழுதப்பட்டுள்ளது என சார்த்தப்படின், அந்த ஆவணத்தின் எத்துணையளவு ஒப்பம் அல்லது எழுத்து அந்த ஆளின் கையெழுத்தில் உள்ளது எனச் சார்த்தப்படுகின்றதோ அத்துணையளவு அவரது கையெழுத்தில் உள்ளது என்பது எண்பிக்கப்படுதல் வேண்டும். **(சான்றுக் கட்டளைச் சேவை பிரிவு 67)**

ஆவணமொன்று அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டுமென சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்டிருப்பின், அதனை அத்தாட்சிப்படுத்திய சாட்சி ஒருவர் உயிரோடிருந்து, அத்துடன் நீதிமன்றத்தின் மன்றாணைக்கு கீழப்பட்டவராயும், சான்றளிக்கத் தகுதியுடையவராயும் இருந்தால், ஆகக் குறைந்தது அத்தகைய சாட்சி ஒருவராவது அவ்வாவணம் எழுதி நிறைவேற்றப்பட்டதை எண்பிக்கும் நோக்கத்துக்காக அழைக்கப்படும் வரை அவ்வாவணம் சான்றாகப் பயன்படுத்தப்படுதலாகாது. **(சான்றுக் கட்டளைச் சேவை பிரிவு 68)**

அத்தகைய அத்தாட்சிப்படுத்திய சாட்சி எவரும் காணப்படமுடியாவிடின், அல்லது அத்தகைய ஆவணம் ஐக்கிய இராச்சியத்தில் எழுதி நிறைவேற்றப்பட்டுள்ளது எனக் கொள்ளப்படின், ஆகக் குறைந்தது அத்தாட்சிப்படுத்திய சாட்சிக்காரர் ஒருவரது அத்தாட்சிப்படுத்துகையேனும் அவரது கையெழுத்தில் உள்ளது என்பதும், அவ்வாவணத்தை எழுதி நிறைவேற்றிய ஆளின் ஒப்பம் அவ்வாளின் கையெழுத்திலுள்ளது என்பதும் எண்பிக்கப்படுதல் வேண்டும். **(சான்றுக் கட்டளைச் சேவை பிரிவு 69)**

ஓர் ஆவணம் தம்மால் எழுதி நிறைவேற்றப்பட்டது என அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆவணமொன்றுக்கான திறத்தவரொருவரால் ஒப்புக்கொள்ளப்படுதல், அது சட்டத்தால் அத்தாட்சிப்படுத்தப்படத் தேவைப்படுத்தப்பட்ட ஆவணமொன்றாக இருப்பினும், அது எழுதி நிறைவேற்றப்பட்டதென்பதற்கு அவருக்கெதிராக போதிய எண்பிப்பாதல் வேண்டும். **(சான்றுக் கட்டளைச் சேவை பிரிவு 70)** அத்தாட்சிப்படுத்திய சாட்சியாளர் அந்த ஆவணம் எழுதி நிறைவேற்றட்டமை மறுத்தால் அல்லது நினைவில் நிறுத்தவில்லையெனில், அது எழுதி நிறைவேற்றப்பட்டமை வேறு சான்றின் மூலம் எண்பிக்கப்படலாம்.

## [10.5] சூழ்நிலைச் சான்று

சூழ்நிலை ரீதியான சான்று என்பது குற்றம் நடந்த இடத்தின் ஒரு கைரேகை போன்று, உண்மையின் ஒரு முடிவுடன் இணைக்கும் ஒரு அனுமானத்தினை அடிப்படையாகக் கொண்ட சான்றாக உள்ளது. அதற்கு மாறாக நேரடிச் சான்றானது நேரடி உறுதிப்படுத்தலின் உண்மையை ஆதரவளித்து வலியுறுத்தி நிற்கின்றது. அதாவது ஏதும் மேலதிக சான்று அல்லது அனுமானங்கள் ஏதம் தேவைப்படாது.

குறித்த செயலின் அல்லது விவகாரங்களின் நிலையின் நேரடிச் சவான்று எதுவும் கிடையாத நிலையில் ஒருவர் மறைமுக வழிவகைகளையும் சில உண்மைகளை நிறுவுவதற்கான சான்றுகளையும் நாடி நிற்கிறார்.

*“குணவர்தன எதிர் இலங்கை குடியரசு நீதிமன்றம் கம்பஹா (28/78 இலங்கை சட்ட அறிக்கை பக்கம் 315 இன் விடயத்தில் சான்றுகள் மீது தங்கியிருக்கும் ஒரு வழக்கில் நீதிபதியானவர், வழக்குத் தொடுனர் நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்க வேண்டும் என்ற வழமையான பணிப்புக்கு மேலதிகமாக அமுல்படுத்தும் பாணியில் மேலதிக பணிப்பு ஒன்றைக் கொடுக்க வேண்டும். அதாவது குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றத்துடன் ஒத்திருக்கும் வகையில் நிகழ்வுகள் நிரூபிக்கப்பட்டதாக அவர் திருப்திப்பட்டாலொழிய சூழ்நிலை அடிப்படையிலான சான்றுகளினால் அவர்கள் அதனை செய்ய முடியாது. அத்துடன் குற்றம்சாட்டப்பட்டவரின் குற்ற ஏற்பைத் தவிர வேறு எந்த சாத்தியமான விளக்கங்கள் எதையும் உள்ளடக்கவும் கூடாது.”*

ஒரு சாட்சியின் நேரடி சாட்சியம் குறுக்கு விசாரணைக்கு திறந்து விடப்படுவதினால் அவதானித்தல் மற்றும் மீள நினைவுக்கு கொண்டு வருவதன் பலவீனமானது மீள்நிலைச் சாட்சியம் குறைவான போட்டி போடக்கூடியதாக இருப்பதுடன் மிகவும் சுலபமாக நம்பியிருக்கக் கூடியதாகவும் உள்ளது. ஒரு குற்றம் சாட்டப்பட்டவரின் குற்ற நிரூபிப்பு சூழ்நிலைச் சாட்சியம் மீது தங்கியிருக்கும் நிலையிலும் … நிறுவப்பட்ட உண்மைகளில் இருந்து அனுமானங்களை எடுத்துக்கொள்ளும் நிலையிலும் எடுக்கப்பட வேண்டிய அனுமானங்களானவை எல்லா நிரூபிக்கப்பட்ட உண்மைகளுடனும் நிலையானதாக இருக்க வேண்டுமென்பதுடன், உண்மைகளானவை அவை அதே நிலையிலிருந்தான ஏனைய எல்லா அனுமானங்களையும் விலக்கியதாக உண்மைகள் இருக்க வேண்டும்.

மேலும், (குறித்த குணவர்தன விடயத்தில்) சூழ்நிலைச் சான்றுள்ளதோர் வழக்கின் சாட்சியத்தில் கூறப்பட்ட நிகழ்வுகள் அனைத்தையும் ஒன்றாக எடுக்கும் போது, குறித்த அப்பாவித்தனத்தை அவை மறுதலிக்கக் கூடியதாக இருப்பினும் கூட, ஒவ்வொரு சான்றையும் வேறு வேறாக எடுத்துக் கொண்டால், அச்சூழ்நிலையானத சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

அதே (குணவர்தன வழக்கில்), சூழ்நிலைச் சான்றொன்றானது, ஒரு சங்கிளியில் உள்ள ஒவ்வொரு இணைப்பும் ஒரு தொடர்பை ஏற்படுத்திய பிறகு, அதன் ஒரு இணைப்பு அறுபடும் பட்சத்தில் முழுச் சங்கிளியும் செயற்படத் தவறுவது போன்றதோர் விடயமல்லவென்றும், சூழ்நிலைச் சான்றானது பல புரிகளைக் கொண்டதோர் கயிறொன்றைப் போன்றதென்றும், ஒரு புரியினால் மாத்திரம் பாரத்தை சுமக்க முடியாதென்றும் ஆனால் மூன்று புரிகள் ஒன்றாக சேர்ந்தால் அதனைச் சுமக்க இலகுவாக முடியுமென்றும் நீதிமன்றம் வழியுறுத்திக் கூறியுள்ளது.

## [10.6] சாட்சியின் சான்றுரை

### [10.6.1] சிறுவர்கள்

பல்வேறுபட்ட நியாயாதிக்கங்களின் கீழான பல்வேறுபட்ட வழக்குகள் மற்றும் ஆய்வுகளில் சிறுவர்கள் நம்பக்கூடிய சாட்சிகளாக இருப்பதுடன், அவர்களது ஞாபகம் அநேகமாக வளர்ந்தவர்களை விடவும் குறைந்த விருத்தி அடைந்திருப்பதாகவும் நிறுவப்பட்டுள்ளது. சிறுவர்கள் வளர்ந்தவர்களை விடவும் அதிகம் ஆலோசனை வழங்கக்கூடியவர்களாகவும் அவர்களுக்கு தெரிந்ததை தொடர்பாடல் செய்வதில் வளர்ந்தவர்களை விடவும் பெரும் சிரமத்தை உடையவர்களாகவும் உள்ளனர்.

பல நியாயாதிக்கங்களில் இது விருத்திக்கு இட்டுச் சென்றுள்ளதுடன் சிறுவர்களின் சாட்சியத்தை பரிசீலிக்கையிலும் கேட்கையிலும் நீதிமன்றத்தின் எச்சரிக்கையான ஒழுங்கு விதிகளின் பிரயோகமும் காணப்படுகிறது.[25]

இலங்கை சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 118 வது பிரிவானது மிகுந்த இளவயது, மிகுந்த முதுமை, உடல் நோய் அல்லது உள நோய் அல்லது அது போன்ற வேறு ஏதேனும் ஏதுக்காக, அவர்களிடம் வினவப்படும் வினாக்களை புரிந்து கொள்ள அல்லது அவற்றிற்கு பகுத்தறிவுடன் விடையளிக்க தடையுற்றவர்களாயுள்ளனர் என நீதிமன்றம் கருதினாலன்றி, ஆட்கள் எல்லோரும் சாட்சியளிப்பதற்கு தகுதியுடையோராதல் வேண்டும்.

ஒவ்வொரு வழக்கும் அதன் சொந்தப் பெறுபேறுகளுடன் பரிசீலிக்கப்பட வேண்டும். அநேகமாக ஒரு சிறுவரின் சாட்சியமானது அந்த வழக்கின் சாட்சியமாகவே இருக்கும் என்பதுடன் சாட்சி சிறுவராக இருப்பதினால் அதனைக் கவனியாது விட முடியாது. ஒரு சிறுவரின் சாட்சியமானது ஒரு வளர்ந்தவரின் சாட்சியம் போன்று நம்பத்தகுந்த ஒத்ததாக இருப்பதாக நீதிமன்றத்தினால் கண்டுகொள்ள முடியும்.

ஒரு சிறுவரின் சாட்சியத்தை அணுகுவதற்கான மிகவும் சமநிலையான அணுகுமுறையானது சாட்சியத்தை ஒப்புறுதிப்படுத்துதல், நிலையான தன்மைகள், நிலையற்ற தன்மைகள் உள்ள சாதகங்கள், நம்பகத்தன்மை, கிடைக்கக்கூடிய சான்றுகளின் பலம் என்பவற்றுடன் தொடர்புடைய சரிபார்ப்புக்களுடன் இணைந்ததாக இருக்க முடியும். ஒரு உதாரணத்திற்கு, ஆறு வயது உடையவர் சாதாரணமாக வளர்ந்தவரின் அதே நடத்தைக்கு உரியதாக இருக்குமென எதிர்பார்க்க முடியாது என்பது ஒரு உண்மையாகும். எவ்வாறாயினும் சிறுவரின் இளம் வயது தன்னியக்கமாகவே அச்சிறுவர் நம்பத்தகுந்தவர் அல்ல என்பதையோ அல்லது தங்கியிருக்க முடியாத சாட்சி என்றோ தானாகவே கருத வைக்காது.

மீண்டும் ஒரு தடவை ஒவ்வொரு விடயமும் அதன் சொந்தப் பேறுகளில் மதிப்பிட வேண்டுமென்பதுடன் சிறுவரின் மனவிருத்தி மற்றும் முதிர்ச்சி அவரின் சாட்சியத்துடன் இணைந்த கனாகதி தொடர்பான தீர்மானங்கள் எடுப்பதற்கு முன்பதாக கவனமாக மதிப்பிட வேண்டும். நடத்தை, மனோதிடம், நிலையான தன்மை, சாட்சிய உறுதிப்படுத்துகை சிறுவரின் சாட்சியத்திற்கான சாதகங்கள் போன்ற பல காரணிகள் தொடர்பானவற்றில் நம்பகத்தன்மையின் சாதாரண பரீட்சிப்பு பிரயோகிக்கப்படுகையில் இந்த உணர்வில் ஒருவர் கவனமாக இருக்க வேண்டும்.

அதிக பொறுப்புக் கொடுக்கும் அதிக சக்தி கொடுக்கும், அல்லது குழப்பும் அல்லது உரியதற்ற வகையில் பிள்ளையிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்படுவதற்கு ஊக்குவிக்கப்படுவதற்கு எந்தவிதமான நீதியற்ற கேள்விகளும் இலக்கு வைக்கப்படவில்லையென்பதுடன் உறுதிப்படுத்தும் கடமையை நீதிமன்றம் கொண்டுள்ளது. சிறுவர் இயற்கையாகவும் எதேச்சையாகவும் பதிலளிக்க அனுமதிக்கப்பட வேண்டும். நீதிமன்றத்தில் சிறுவர்கள் உட்பட சாட்சிகளிடம் கேட்கப்படும் கேள்விகள் அவர்களால் விளங்கக்கூடிய முறையிலும் அர்த்தரீதியாக பதிலளிக்கக்கூடிய வகையிலும் இருக்க வேண்டும் என்பது நீதிபதிகளின் கடப்பாடாகும். கனடாவின் உச்ச நீதிமன்றமானது *R.v.l.(DO.)* இன் விடயத்தில் இது தொடர்பில் சிறந்த வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது.

சிறுவர் போன்ற நொய்தலான சாட்சிகளுடன் சம்பந்தப்படும் வழக்குகளில் கேட்கப்படும் கேள்விகளை சிறுவர் புரிந்துகொள்வதையும் சிறுவரால் அளிக்கப்படும் பதில்கள் தெளிவானதாகவும் குழப்பமற்றதாகவும் இருக்கும் நிலையை உறுதிப்படுத்துவதற்கு நீதிபதி பொறுப்பினைக் கொண்டுள்ளார். இதனை நிறுவிக்கொள்ளும் முகமாக நீதிபதி சட்டத்தரணியிடம் கேட்கப்படும் கேள்விகளை தெளிவாகவும் வசன அமைப்பாகவும் இருக்குமாறு கேட்டுக் கொள்ளலாம். பின்வரும் கேள்விகளைக் கேட்பதற்கு பிள்ளையின் பதில்கள் தெளிவாக்கப்பட வேண்டும். விசாரணை நடத்துகையின் உரிய தன்மையை உறுதிப்படுத்தும் முகமாக நீதிபதி பிள்ளை ஓய்வாகவும் அமைதியாகவும் இருப்பதற்காக பதற்றத்தைக் குறைப்பதற்கான பொருத்தமான சூழலை வழங்க வேண்டும்.[26]

வழக்குத் தொடுனரின் வழக்கானது ஒரு சிறுவரின் சாட்சியத்தில் தங்கியிருக்கும் போது சட்டத்தரணியானவர் அவரது சாட்சியத்தை மதிப்பிழக்கச் செய்யும் முயற்சியின் முகமாக மிகவும்

கவனமாக குறுக்கு விசாரணை செய்ய வேண்டும். (விசேடமாக வழக்குத் தொடுப்பில் ஒரு சிறுவர் ஒரேயொரு சாட்சியாக இருக்கும் சமயங்களில் உதாரணங்களில்).

எவ்வாறாயினும் மேலே சுட்டிக்காட்டப்பட்டவாறாக ஒரு இளம்வயது சாட்சியிடம் நெருக்கடியான கேள்விகளைக் கேட்பது மற்றும் தொந்தரவில் ஈடுபடுவதற்கு சட்டத்தரணி அனுமதிக்கப்படமாட்டார்.

## [10.6.2] குற்றத் துணையாளிகள்

குற்றத் துணையாளிகள் எனப்படும் ஆள் குற்றச் செயற்படுத்துகையில் பங்குபற்றிய அல்லது உதவியராகவும் அதேவேளை அதை புரிந்தவர் அல்லாமலும் நிகழ்வின் பின்னாலே உதவியாக இருக்காதவராகவும் இருப்பார்.

ஆங்கிலப் பொதுச் சட்டத்தின் கீழ் ஒரு ‘‘குற்றத்துணையாளி’’ எனப்படுவர், உண்மையாகவே குறித்த குற்றச் செயலில் பங்குகொள்ளாவிட்டாலும் கூட குற்றச் செயற்படுத்துகையில் துடிப்பாக பங்குபற்றிய ஆளாக இருப்பார்.

**உதாரணம்** : வங்கிக் கொள்ளை ஒன்றின் போது, காசாளர் மீது துப்பாக்கியை நீட்டியவராக, பணத்தை கேட்டவர் ஆயுதக் கொள்ளையில் குற்றமுடையவராவார். குறித்த குற்றச் செயற்பாட்டில் நேரடியாக ஈடுபட்ட எவரேனும் ஆள் அதாவது கவனப் பொறுப்பில் இருந்தவர், தப்பியோடும் வாகனத்தின் சாரதியாக இருந்தவர் போன்றவர்கள் குற்றத்துணையாளிகளாவர். அடிப்படையில் ஒரு குற்றமாக இல்லாத நிலையில், கவனமாக பார்த்துக் கொள்வது மற்றும் வாகனத்தை செலுத்துதல் போன்றவை இங்கு ஒரு குற்றமாக அமைவதில்லை.

குற்றத் துணையாளி எனப்படுபவர் துணையாள் என்பதிலிருந்து வேறுபடுகிறார். ஒரு குற்றத்துணையாளி குற்றச் செயலில் உண்மையாகவே பிரசன்னமாக இருக்கிறார் என்பதுடன் இவருக்கு எதிராக வழக்குத் தொடரப்படக் கூடும். ஆனால் பிரதான (முதலாவது) குற்றவாளி குற்றம் சாட்டப்படாமல் அல்லது குற்றவாளியாகக் காணப்படாமல் இருக்க முடியும். ஒரு துணையாளி என்று சொல்லப்படுபவர் பொதுவாக உண்மையான குற்றத்தில் சமூகமளிக்காதவராகவும், குற்றத்துணையாளி அல்லது பிரதானமானவர் என்பதைக் காட்டிலும் குறைந்த தண்டனைகளுக்கு உட்படக்கூடியவராகவும் உள்ளார்.

பெரும்பாலான நியாயாதிக்கம் நீதிமன்றங்களில் ஒரு குற்றத்துணையாளியின் சாட்சியமானது எச்சரிக்கையுடன் அணுகப்படுகிறது. அதற்கான காரணங்களில் பின்வருவன உள்ளடங்கும்.:

- குற்றத்துணையாளி எனப்படுபவர் ஒரு குற்றவாளியாக மற்றும்/ அல்லது கண்டிக்கத்தக்க குணாம்சமுடைய ஒரு ஆளாக குற்றவியல் நடத்தையில் செயற்பட்டு இருப்பவராகவும் உண்மைக்காக உயர் மதிப்பற்றவராகவும் இருப்பார்.
- நீதிமன்றத்தில் குற்றத்துணையாளி பொய் சொல்லத் தயாராக இருப்பார் என்பதுடன் உள்ளார்ந்த அபாயமாகவும் இருப்பார். வழக்கு நடவடிக்கையில் இருந்து தன்னை பாதுகாத்துக்கொள்ளும் நம்பிக்கையில் வேறு ஒருவரைக் குற்றம் சாட்டுவார். ஏனைய குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக சாட்சியம் கூறுவாராயின் அவர் இரக்கம் பெற்றுக்கொள்வார் அல்லது குறைந்த தண்டனையைப் பெற்றுக்கொள்வார்.
- ஒரு குற்றத்துணையாளி குற்றசெயற்பாட்டில் தனது வகிபாகத்தை அல்லது வேறொருவரின் வகிபாகத்தை மூடி மறைக்கும் நோக்கில் ஒருவரை பிழையாக அக்குற்றச் செயலில் சிக்க வைக்க விரும்புவார்.

சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 133வது பிரிவு கூறுவதாவது, குற்றம் சாட்டப்பட்ட ஆளுக்கு எதிராக சான்றளிப்பதற்கு குற்றத்துணையாளி சாட்சியாதல் வேண்டும். அத்துடன் குற்றத் தீர்ப்பானது குற்றத் துணையாளியின் ஒப்புறுதிப்படுத்தப்படாத சாட்சியத்தில் தங்கியுள்ளது என்றதனால் மட்டும் சட்ட விரோதமானதாகாது.

சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 114 ஆம் பிரிவு ஆனது நீதிமன்றமானது சில நிகழ்வுகளின் இருப்பை ஊகிக்கக்கூடிய சந்தர்ப்பங்களை முன்வைக்கிறது. (இந்தச் சமயங்களில் பொதுவாக இவை மறுக்கத்தக்க அனுமானங்களாக விபரிக்கப்படுகின்றன.) பிரிவு 114 இன் பிரகாரம் நீதிமன்றமானது ஒரு குற்றத்துணையாளரின் சான்று முக்கிய விடயங்களுடன் ஒப்புறுதிப் படுத்தப்பட்டால் அன்றி, அவர் நம்பத்தகுந்தவர் அல்லரென நீதிமன்றம் ஊகிக்கலாம்.

ஏனைய நியாயாதிகளுக்கு ஒத்த வகையில் ஒரு குற்றத் துணையாயின் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தின் உள்ளடக்கம் வேறொரு குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிரான சான்றாக பயன்படுத்தப்பட முடியாது. சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவானது, பின்வருமாறு கூறுகிறது. ‘‘ஒரே தவறுக்கு ஒருவருக்கு அதிகமான ஆட்கள் கூட்டாக விளங்கப்படும் போது இந்த ஆட்களில் ஒருவரால் செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் அவரையும் அவ் ஆட்களில் வேறு சிலரையும் பாதிக்கும் வகையில் நிரூபிக்கப்படும் போது, ஒப்புதல் வாக்கு மூலமானது அத்தகைய வேரெவருக்கும் எதிரானதாக இருக்கும் என நீதிமன்றம் கருத்தில் கொள்ளுதல் ஆகாது.’’, என்பதாகும்.

### [10.6.3] நிபுணர் சான்று

சான்றுச் சட்டமானது ஒரு தொடர்ச்சியான விதிவிலக்குகளுக்கு உட்பட்டு கருத்துக்கான சாட்சியம் தவிர ஒரு பொதுவிதியைக் கொண்டுள்ளது. பிரத்தியேகக் கொள்கைகளானவைகளுள், ஒரு குறித்த விடயம் தொடர்பில் விஷேட நிபுணத்துவமும் அறிவுத்திறனும் கொண்ட நிபுணர் ஒருவரின் கருத்தை அறிவதற்கு நீதிமன்றம் கருதும் போது, குறித்த சாட்சியானவர் அவ்வாறான அறிவை பெற்றிராதிருப்பின் அவ்வாறான சாட்சி அவ்விடயத்தில் தனது கருத்தினை வழங்கலாகாது.

சான்றுக் கட்டளைச்சட்டம் பிரிவு 45 கூறுவதாவது :

*வெளிநாட்டுச் சட்டம், அல்லது விஞ்ஞானம் அல்லது கலை அல்லது ஒரு கையெழுத்தின் கைவிரல் அடையாளத்தின், உள்ளங்கை அடையாளத்தின் கால் பாத அடையாளத்தின் அசல் தன்மை பற்றி நீதிமன்றம் ஒரு அபிப்பிரயாதத்தை கொள்ள வேண்டி உள்ளபோது, வெளிநாட்டச் சட்டம், அல்லது விஞ்ஞானம் அல்லது கலை அல்லது ஒரு கையெழுத்து அல்லது விரல் அடையாளம், உள்ளங்கை அடையாளம், கால் பாத அடையாளம் போன்றவற்றின் அசல் தன்மையை அடையாளம் காணக்கூடிய உண்மைகளை அடையாளம் காணக்கூடிய நுண்ணறிவுடைய ஆட்களின் அபிப்பிரயாயங்கள் இயைபான நிகழ்வுகளாகும். அவ்வாறான ஆட்கள் நிபுணர்களாவர்.*

ஒரு நிபுணத்துவ சான்றின் பொருத்தமான தன்மை தொடர்பாக சான்றுக்கட்டளைச் சட்டப் பிரிவின் 45 இல் பின்வரும் விபரிப்பு வழங்குகிறது :

**உதாரணம் #1:** இங்கு *A* என்பவரின் இறப்பு நஞ்சால் ஏற்பட்டதா என்பது ஒரு கேள்வி. நிபுணர்களின் அபிப்பிரயாயப்படி நஞ்சினால் உருவாக்கப்பட்ட நோய் அறிகுறிகளினால் *A* என்பவர் இறந்திருக்கலாம் என்பது பொருத்தமானது.

**உதாரணம் #2:** இங்கு கேள்வி என்னவெனில், குறித்த ஆவணம் *A* என்பவரால் எழுதப்பட்டதா என்பதாகும். கொடுக்கப்பட்ட மற்றொரு ஆவணம் ஆனது *A* யினால் எழுதப்பட்டதாகவே நிரூபிக்கப்பட்டுள்ளது அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த இரண்டு ஆவணங்களும் ஒரே ஆளால் எழுதப்பட்டதா, அல்லது வேறுபட்டவர்களால் எழுதப்பட்டதா என்ற கேள்வி மீதான நிபுணர்களின் கருத்து பொருத்தமுடையது.

சான்று வழங்க அழைக்கப்பட்ட ஆள் ''விசேட திறனுடையவரா'' என்ற நிகழ்வின் கேள்வியானது நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட வேண்டும். (சாள்ஸ் பெரேரா எதிர் மோதா (1961) 65 NLR 294 பக்கம் 295, *per* Basnayake, C.J ஐ பார்க்கவும்) சாட்சியை அழைக்கும் பக்கத்தினரின் கடமையாக இருப்பது, நீதிமன்றத்தின் திருப்திக்கு அந்த சாட்சியின் தகைமையும் அனுபவங்களும் நிபுணத்துவ சாட்சியத்தினை வழங்குவது தொடர்பில் அழைக்கப்பட்டவர் விசேட திறனுடையவர் எனக் காட்டுவதாகும். (பார்க்கவும் *R. vs Pinhamy* (1955) 57 NLR 169 gf 171 *per* Basnayake, C.J யின் பிரகாரம்). இந்த நிபுணரின் சாட்சிகள் ஆவண நிரூபிப்புடன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளன என பிரதிவாதிகள் உறுதிப்படுத்த வேண்டும். (உதா. அவரது தகைமைகள் மற்றும் நிபுணத்துவத்தைக் காட்டும் சுய விபரக்கோவை, உறுப்புரைகள், பிரசுரங்கள் என்பன)

ஒரு சாட்சி தனது நினைவை புதுப்பித்துக்கொள்ளக்கூடிய ஏனைய பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட வடிவங்களில், (a) நிபுணர் தனது நினைவை, உயர் தொழில் சார் ஆய்வு நூல்களை படித்துப்பார்ப்பதன் மூலம் புதுப்பித்தல் செய்து கொள்ளமுடியும். **(சான்றுக்கட்டளைச் சட்டம், பிரிவு 159).**

வழமையாக நீதிமன்றம் குறுக்கு விசாரணையின் கீழுள்ள சாட்சியைத் தவிர வேறு எந்த சாட்சியையும் நீதிமன்ற அறைக்குள் நிற்க விடுவதில்லை. எனினும் நீதிமன்றம் அவ்வாறு தீர்மானிக்கும் பட்சத்தில் ஏனைய சாட்சிகளின் சாட்சியங்களை அவதானிக்கும் நோக்கத்திற்காக நீதிமன்ற அறைக்குள் நிபுணத்துவ சாட்சி நிற்பதற்கு அனுமதி வழங்கக்கூடும். (*Colombo Electric Tramway Co. v Colombo Gas & Water Co.* (1915) 18 NLR 385 ஐ பார்க்குக).

[25] "Judicial Assessment of the Credibility of Child Witnesses." *US National Library of Medicine,* National Institute of Health, April 2005, http://www.ncbi.nlm.nih.gov/pmc/articles/PMC4640896/.

[26] "R.v.L.(DO) [1993] 4S.C.R. 419 at 471

[27] "Goonerathne, I., 2011. Delivering a Forensic Expert Testimony for the Defence.: Relevance, Hesitations and Reservations amongst Professionals in Sri Lanka. *Sri Lanka Journal of Forensic Medicine, Science & Law, 1(2), pp.1-4. DOI: http://doi.org/10.4038/sljfmsl.vli2.2719*

குற்றவியல் எதிர்வாதி சார்பாக நிபுணத்துவ சாட்சியைப் பயன்படுத்துவது இலங்கையின் நீதிமன்ற முறைக்குள்ளாக மிகவும் அரிதானது. எவ்வாறாயினும் நிபுணத்துவ சாட்சியத்தின் நிமித்தமாகவே பல எண்ணிக்கையான குற்ற விடுவிப்புக்கள் இடம்பெற்றுள்ளன என்பது இங்கே கவனிக்கப்படக்கூடியது. கடப்பாட்டில் இருந்தான விடுவிப்புக்கள் இடம்பெற்றுள்ளது என்பது இங்கு கவனிக்கப்படக்கூடியது. விஞ்ஞான ரீதியற்ற சான்றுகளும், கடுமையான நிலைப்பாடுகளும் கடந்த காலத்தில் அப்பாவி மக்களுக்கு சிறை அடைப்பை வழங்கியுள்ளது. ஒரு எதிர்வாத நிபுணர் கிடைக்கப்பெறின் அங்கே விவாத ரீதியான முறையில் விஞ்ஞான சக்தியின் சமநிலை காணப்படுவதுடன், ஒருபக்கச் சார்பு தப்பபிப்பிராயம், பிடிவாதம், நேர்மையீனம் என்பவை குறைவடைந்து நீதியை ஒளிரச் செய்ய முடியும்..''[27]

## [10.6.4] சாட்சிகளின் நம்பகத்தன்மை

குற்றம் சாட்டப்பட்டவரை காப்பாற்றுவதன் வழியில் எதிர்தரப்பு சட்டத்தரணியால் செய்யப்படக்கூடிய ஒரு கடமை என்னவெனில், விசேடமாக சாட்சிகள் சான்றளிக்கும் ஒரு விசாரணைக்கு செல்லும் போது சாட்சிகளின் (வாதியின் அல்லது பிரதிவாதியின்) நம்பகத்தன்மை பற்றி அல்லது அதற்கு வேறுபட்ட விதத்தில் சிறந்த முறையில் வாதத்தில் ஈடுபடுவதாகும்.

சாட்சிகளினதும் அவர்களது சாட்சியத்தினதும் நம்பகத்தன்மை மதிப்பீடானது வழமையாக சாட்சியின் சாட்சியங்களின் பல்வேறுபட்ட அம்சங்களை பரிசீலிப்பதாக அமைவதுடன் அதில் உள்ளடங்கக்கூடியவைகளாவன :

- **நேர்மை** *:* சாட்சி சாட்சியம் கூறுவதற்கு முழுமையாகவும், செவ்வையாகவும் ஒரு நல்ல நம்பிக்கை முயற்சியைச் செய்கின்றாரா அல்லது, மாறாக சாட்சி வேண்டுமென்றே பொய் சொல்கிறாரா அல்லது சில தகவல்களை வெளிப்படுத்தாது விடுகின்றாரா?
- **நினைவு** : சாட்சியின் ஞாபகசக்தி எவ்வளவு செவ்வையாகவும் பூரணமாகவும் உள்ளது?
- **கருத்துக் கூறக்கூடிய தன்மை** : சாட்சியின் ஞாபகசக்தி ஏனையோரின் உரையாடல்கள் அல்லது கேள்விகளின் நிமித்தமாக குழப்பப்பட்டு விட்டதா?
- **தொடர்பாடல் இயலுமை** : சாட்சி கேள்விகளை எவ்வாறு சிறந்த முறையில் புரிந்துகொள்வார் மற்றும் சாட்சி எவ்வாறு சிறந்த முறையில் பிரச்சினையுள்ள விடயங்கள் குறித்து கலந்துரையாடக்கூடியவராக இருப்பார்?

சாட்சியின் நம்பகத்தன்மையை மதிப்பிடும் போது ஒரு நீதிபதி அல்லது யூரி நம்பியிருக்கக்கூடிய பல காரணிகளுள் உள்ளடங்கக்கூடியனவாவன:

- குறித்த வழக்கிலுள்ள ஏனைய சாட்சிகளுடன் சாட்சியின் சாட்சியம் ஒத்த தன்மையாக உள்ளதா அல்லது இல்லையா?
- சாட்சியம் கொடுக்கும்போது ஒரு சாட்சியின் நடத்தை, பேச்சு, நிறுத்துகை, உடல் செய்கையிலான நடத்தை, சாட்சியின் நம்பிக்கை போன்ற விடயங்கள் உட்பட
- சாட்சி ஒரு நிலையான கதையைச் சொல்லுகிறாரா அல்லது அதற்கு மாற்றமாக சுய முரண்பாட்டுடன் அதனை சொல்லுகிறார்.
- சாட்சியம் ஒரு அர்த்தமுள்ளதாக இருக்கிறதா அதாவது, உலகத்தில் என்ன நடைபெறுகிறது, எவ்வாறு மக்கள் வேறுபட்ட சந்தர்ப்பங்களில் நடந்துகொள்கிறார்கள் என்பது பற்றிய நிகழ்வுகளை புரிந்துணர்ந்தவாறு அளிக்கும் சாட்சியம் எவ்வாறு நிலையானதாக உள்ளது பற்றி.
- சாட்சியின் நேர்மைக்கும் உண்மைக்கும் அவர் பொதுவாக மதிப்பைக் கொண்டிருக்கிறாரா அல்லது இல்லையா

## [10.7] DNA (உடற்கூறு), விரல், உள்ளங்கை, பாதம் மற்றும் கையெழுத்து மாதிரிகள்

DNA சுய விபரமிடுகை (DNA கைவிரல் அடையாளம்; DNA பரிசோதிப்பு, அல்லது DNA டய்பிங்) என அழைக்கப்படுவன கைவிரல்களைப் போன்று DNA யின் தனித்தவமான குணாம்சங்களை தீர்மானிக்கும் ஒரு செயன்முறையாகும்.

DNA பகுப்பாய்வானது ஒரு தனிநபரைக் காட்டிலும் ஒரு இனவகையை அடையாளம் காண எண்ணும் போது அது DNA barcoding என அழைக்கப்படுகிறது. ஏனைய சுயவிபரமிடுகையானது பொதுவாக குற்றவியல் விசாரணைகளில் தடயவியல் நுட்பமாகப் பயன்படுத்தப்படுகிறது. உதாரணத்திற்கு : குற்றச் செயலொன்று சம்பவித்த இடத்தில் DNA சுயவிபரமிடுகையானது ஒருவரையோ அதற்கு மேற்பட்டவர்களையோ தொடர்புபட்டிருக்கும் போது சுயவிபரத்தை ஒப்பீடு செய்வதானது அக்குற்றத்தில் ஈடுபட்டவர்களது சாத்தியப்பாடு மதிப்பிடக்கூடியதாக இருக்கிறது. DNA

யின் முக்கியத்துவம் என்னவெனில் DNA ஆனது ஒவ்வொரு ஆளுக்கும் தனித்துவமானது. DNA ஆனது கலங்கள், குருதிமாதிரி, உமிழ்நீர், விந்து, தோல், வியர்வை என்பவற்றின் மாதிரியின் ஒரு சிறிய பகுதி உட்படும் ஆய்வின் அடிப்படையில் அடையாளம் காணப்படுகிறது.

குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை பிரிவு 123 ஆனது DNA சான்றுடன் தொடர்புபடுவதுடன் (மேலதிகமாக சான்றுகள் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 45 ஆனது இலங்கை நீதிமன்றங்களில் DNA சான்றுகளுக்கான சட்டரீதியான கொள்கையை வழங்குகிறது.)

***பிரிவு 123 : சந்தேக நபரிடமிருந்து கைவிரல் அடையாளங்களையும் தலைமுடி மாதிரிகளையும் எடுத்தல்***

*(1) பொலிஸ் நிலையமொன்றுக்கு பொறுப்பாக உள்ள எவரேனும் பொலிஸ் அலுவலர் புலனாய்வு ஒன்றின் நோக்கங்களுக்காக அவ்வாறு செய்தல் அவசியம் என அபிப்பிராயப்படுமிடத்து, புலனாய்வின் கீழ் உள்ள தவறை இழந்தவரென சந்தேகிக்கப்படும் எவரேனும் ஆளினது ஏதேனும் விரல் அடையாளத்தை, உள்ளங்கை அடையாளத்தை அல்லது பாதத்தின் அடையாளத்தை அல்லது உடலின் எப்பாகத்தினதும் அடையாளத்தை அல்லது ஆளின் இரத்தத்தின், உமிழ்நீரின், சிறுநீரின், தலைமயிரின், அல்லது விரல் நகத்தின் மாதிரியை அல்லது விரல் நகம் ஒன்றின் ஏதாவது சீவலை அவரது சம்மதத்துடன் எடுக்கச் செய்யலாம்.*

*(2) (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆள் அத்தகைய ஏதேனும் அடையாளம், மாதிரி அல்லது சீவல் எடுக்கப்படுவதற்கு சம்மதிக்கப்படாதுவிடத்து அத்தகைய பொலிஸ் அலுவலர் எந்த நீதிவானின் நீதிமன்றத்தினதும் நியாயதிக்கத்தின் உள்ளாக அப் புலனாய்வு நடாத்தப்படுகின்றதோ அந் நீதிவானின் நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்து அத்தகைய ஏதும் அடையாள மாதிரியை அல்லது சீவலை எடுப்பதற்கு பொலிஸ் அலுவலர் ஒருவருக்கு அதிகாரமளிக்கின்ற கட்டளையொன்றை ஆக்குமாறு கூறலாம். அத்தகைய ஆள் அத்தகைய கட்டளைக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.*

*(3) ஒரு பொலிஸ் நிலையமொன்றுக்குப் பொறுப்பாகவுள்ள எவரேனும் பொலிஸ் அலுவலர் புலனாய்வு நோக்கங்களுக்காக ஏதும் கையெழுத்தை ஒப்பிடுவதற்கு தேவை ஏற்படும் போது எந்த ஆளினதும் கையெழுத்தின் ஒரு மாதிரியை அவரின் சம்மதத்துடன் எடுப்பிக்கலாம்.*

*(4) அத்தகைய ஆள் எவரும் தமது கையெழுத்தின் மாதிரியை கொடுக்க மறுக்கும் இடத்து பொலிஸ் நிலையம் ஒன்றுக்கு பொறுப்பாகவுள்ள அலுவலர் எவரும் அத்தகைய ஆளை அவரது கையெழுத்தின் மாதிரியொன்றைக் கொடுக்கும்படி தேவைப்படுத்துகின்ற கட்டளை ஒன்றை ஆக்குமாறு கோரி, எந் நீதிவான் நீதிமன்றத்தினதும் நியாயதிக்கத்திற்கு உள்ளாக அப்புலனாய்வு செய்யப்படுகின்றதோ அந் நீதிவான் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம் என்பதுடன் அத்தகைய ஆள் அத்தகைய கட்டளைக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.*

***பிரிவு 124(2) மற்றும் 124(4) என்பவற்றின் பிரகாரம் சட்டத்தரணியானவர் இரண்டு முக்கிய அம்சங்களைக் கவனிப்பது அவசியமானதாகும்.***

*(1) 124(1) பிரிவில் நிரல்படுத்தப்பட்டவாறாக எந்த மாதிரியையும் வழங்குவதற்கு எந்தக் குற்றம் சாட்டப்பட்டவரும் மறுக்க முடியும். 124 (3) அதனை சேகரிக்குமாறு பொலிஸ் கேட்டால்; மற்றும்*

*(2) குற்றம் சாட்டப்பட்டவர் எந்த மாதிரியையும் வழங்குவதற்கு மறுத்தால் அந்த மாதிரியைச் சேகரிப்பதற்கு கட்டளையிடுவதற்கான அந்த விடயம் மீது நியாயயாதிக்கம் கொண்டுள்ள பொருத்தமான நீதிவான் நீதிமன்றத்திற்கு முதலில் விண்ணப்பிக்க வேண்டும்.*

இப் பிரிவின் சிறப்பு அம்சம் என்னவெனில், உரிய உத்தியோகத்தர் உரிய நீதிவான் நீதிமன்றத்திற்கு ஒரு கட்டளைக்காக விண்ணப்பிக்க வேண்டும். மாதிரிகளின் சேகரிப்பானது சட்டத்திற்கு மாறானது என்பதுடன் குற்றம் சாட்டப்பட்டவரின் உரிமைகளின் மீறுகையும் ஆகும்.

## [10.8] அடையாள அணிவகுப்பு

இலங்கையில் இது அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவையின் பிரிவு 124 ஆல் ஒழுங்குபடுத்தப்படுகிறது.

***பிரிவு 124: நீதவான் விசாரணைகளுக்கு உதவுதல்***

*எந் நீதிவானுக்கு அதற்கு என விண்ணப்பம் ஒன்று செய்யப்பட்டுள்ளதோ அந் நீதிவான் ஒவ்வொருவரும் தோதான கட்டளைகளையும் நீதிமன்ற மன்றாணைகளையும் ஆக்குவதன் மூலமும் விடுவிப்பதன் மூலமும் புலனாய்வொன்றை நடாத்துவதற்கு உதவுதல் வேண்டும்.*

*அத்துடன் குறிப்பாக தவறாளியை அடையாளம் காணும் நோக்கத்திற்காக அடையாள அணிவகுப்பொன்றை நடாத்தலாம். அல்லது நடாத்துவதற்கு அதிகாரமளிக்கலாம் என்பதுடன் அத்தகைய நோக்கத்திற்காக அத்தகைய அணிவகுப்பில் பங்குபற்றுமாறு சந்தேகிக்கப்பட்டவரை அல்லது வேறு ஏதேனும் ஆளை தேவைப்படுத்தலாம். மறைவான ஓரிடத்திலிருந்து அவரது அடையாளத்தைக் காட்டுவதற்கு சாட்சிக்காரர் ஒருவரை அனுமதிக்கலாம். அத்துடன் அத்தகைய அணிவகுப்புக்கள் பற்றிய பதிவேடு ஒன்றைத் தயாரிக்கலாம் அல்லது தயாரிப்பிக்கலாம்.*

இடம்பெறவிருக்கும் ஒரு அடையாள அணிவகுப்பிற்காக நீதிவானுக்கு ஒரு விண்ணப்பம் செய்யப்பட வேண்டும் என்ற இந்தப் பிரிவின் முக்கியத்துவத்தை சட்டத்தரணிகள் கவனிக்க வேண்டும். இவ்வாறான விண்ணப்பம் ஒன்று செய்யப்படாத நிலையில் அதற்கான கட்டளை நீதவானால் செய்யப்பட்டுள்ள நிலையில், விளக்கத்தின் போது வழக்குத் தொடுனர் தரப்பால் அடையாள அணிவகுப்பு தொடர்பான சாட்சியமானது பிரதிவாதியால் வழங்கப்படாமல் இருக்கலாம்.

## [10.9] கணனிச் சான்று

சான்று (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 12 ஆனது, கணனியை, தகவல்களை களஞ்சியப்படுத்தி செயன்முறைப்படுத்தும் தொழிற்பாடுகளைக் கொண்டதோர் ஏதேனும் சாதனம் என வரைவிலக்கணப்படுகின்றது.
அதே சட்டத்தின் பிரிவு 5(1) இனால் கணனி சான்று கீழ்வருமாறு விதந்துரைக்கப்படுகின்றது.

ஏதேனும் சட்ட நடவடிக்கையின் போது நேரடி, வாய்மூல சான்று தேவைப்படும் போது, கணனியொன்றினால் உருவாக்கம் பெற்ற, குறித்த நிகழ்வை நிரூபிப்பதற்கு ஏதுவாகும் ஏதேனும் கூற்றில் உள்ளடங்கியுள்ள ஏதேனும் தகவலொன்று, குறித்த சட்டப்பிரிவில் எடுத்தியம்பும் நிலைமைகளுக்கு உட்பட்டவாரு, அதாவது,

- அவ்வாறு உருவாக்கம் பெற்ற அல்லது மீள் உருவாக்கம் பெற்ற அக்கூற்று புலன்களால் உணரக்கூடியவையாக இருப்பின்,
- குறித்த கூற்றானது உருவாக்கம் பெற்ற கணனியானது, சகல முக்கியமான சந்தர்ப்பங்களிலும் சிறந்த முறையில் செயற்பட்டுள்ளதாகவும் அல்லது அவ்வாறு இல்லாதிருப்பின் அல்லது அவ்வாறு செயற்படத் தவறியது எந்த தகவல் தொடர்பாகவோ அத்தகவலானது அதன் தன்மைக் கேற்றவாறு குறித்த கூற்றை உருவாக்குவது அல்லது அதிலுள்ள தகவல்கள் பிழையல்ல என்றும் அக்கூற்றில் அடங்கியுள்ள தகவல்கள், கணனிக்கு அவ்வாறு வழங்கப்பட்ட தகவல்கள் மீள் உருவாக்கம் செய்யப்படுவதாக அல்லது அதனால் பெறப்படுவதாக தோன்றும் போது அத்தகவல்கள் சான்றுகளாக ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

உருவாக்கப்பட வேண்டிய சான்றுகளைப் பரிசோதிப்பதற்கு சென்றடைவதற்கான அறிவித்தல்கள் தொடர்பான ஏற்பாடுகள், அந்த உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட அச்சான்றுகள் மற்றும் முறைமைகளின் உற்பத்தி தொடர்பான பதிவுகள், இயந்திரம், உபாயம் அல்லது கணனி மற்றும் குறித்த தரப்பினரால் எடுக்கப்பட வேண்டிய படிநிலைகளை சட்டத்தின் 7 ஆம் பிரிவு வழங்குகிறது. பொதுவாகப் பயன்படுத்தப்படும் இயந்திரம், சாதனம் அல்லது கணனியின் பாவனையால் உற்பத்தி செய்யப்பட்ட, பதிவுசெய்யப்பட்ட, மீளுருவாக்கப்பட்டவற்றின் செம்மைத்தன்மையை நீதிமன்றம் அனுமானிக்க முடியும். ஏதும் பதிவுகள் மீளுருவாக்கம் அல்லது கூற்று தொடர்பானவற்றில் அவ்வாறான அனுமானங்களை சான்றுகள் இல்லாத நிலையில் முரணான வகையிலே நீதிமன்றம் எடுத்துக்கொள்ளும்.

## [10.10] சத்தியக் கடதாசிகள்

குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் பிரிவு 415 ஆனது சத்தியக்கடதாசிகளானவை, அவை உரிய வகையில் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு மற்றும்/ அல்லது உறுதிப்படுத்தப்பட்டாலேயே நீதிமன்றத்தில் குற்றவியல் செயன்முறைகளுக்காகப் பயன்படுத்தப்பட கூடியது என தீர்மானிக்கிறது. இப்பிரிவானது விசேடமாக பின்வருமாறு தீர்மானிக்கின்றது :

சத்தியக்கடதாசியொன்று—

(அ)இலங்கையில் எவரேனும் சமாதான நீதிவான் முன்னர் அல்லது எவரேனும் நீதிபதி முன்னால்,

(ஆ) வேறு ஏதேனும் இடத்தில் நீதிபதியொருவர் முன்னால் அல்லது நீதவான் முன்னால் அல்லது சமாதான நீதிவான் முன்னால் அல்லது அவ்விடத்தில் சத்தியங்களை

எடுத்தோதுவதற்கு தகைமையுள்ள அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அல்லது நீதிமன்றத்தினால் போதுமானதெனக் கருதும் வேறேதேனும் வழியில் தகைமையுள்ள வேறு ஆள் முன்னால் அல்லது;

(இ) இலங்கைக்கு வெளியே சத்தியங்களைப் ஏற்றுக்கொள்வதற்கு உயர் நீதிமன்றத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் முன்னால்

சத்தியத்தின் மீது செய்யப்பட்டிருந்தால் அல்லது உறுதிப்படுத்தப்பட்டிருந்தால் அது குற்றவியல் நீதிமன்றம் ஒன்றில் அச்சத்தியக்கடதாசி பயன்படுத்தப்படலாம்.

ஆகவே இங்கே மிகவும் முக்கியமானது என்னவெனில், அரச தரப்பு அதன் வழக்கின் ஒரு பாகமாக ஒரு சத்தியக்கடதாசியை முன்வைப்பதாயின் அந்த சத்தியக்கடதாசி குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டக்கோவை 415இன் ஏற்பாடுகளுக்கமைய சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டதா அல்லது உறுதிப்படுத்தப்பட்டதா என்பதை சட்டத்தரணி தீர்மானிப்பார்.

## [10.11] ஓப்புக்கொள்ளல்/ ஏற்றுக்கொள்ளல்

இதனகத்துப் பின்னர் (சான்றுக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 17 (1) கீழ்) குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலைகளின் கீழ் யாதும் ஒரு ஆளினால் செய்யப்பட்டதும் பிரச்சினையில் உள்ள நிகழ்வு அல்லது பொருத்தமான நிகழ்வு ஏதுக்குமான ஏதும் அனுமானங்களை கூறுவதுமான ஒரு கூற்று அல்லது வாய்வழி ஆவணமாகும். ஏற்றுக்கொள்ளல்கள் என்பது விடயங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் ஒரு முடிந்த முடிவான நிரூபிப்பு அல்ல. **(சான்றுக் கட்டளைச்சட்டம் பிரிவு 31)**

குற்றவியல் வழக்கில் ஏதும் ஏற்றுக்கொள்ளல்கள் பிரதிவாதியால் செய்யப்படுவதற்கு முன்பதாக தரப்பினருடன் கலந்துரையாடப்பட்டு விளக்கம் செய்யப்படல் வேண்டும். ஏதும் ஏற்றுக்கொள்கையின் சரியான அளவை சட்டத்தரணி கண்டறிய வேண்டுமென்பதுடன், அவ்வாறான ஏற்றுக்கொள்கைகளைச் செய்வதன் பிரதிபலிப்புக்களை தரப்பினருக்கு அவர் விளக்கம் செய்ய வேண்டும். எல்லா ஏற்றுக்கொள்கைகளும் கவனமாகவும், சுருக்கமாகவும் வரையப்பட வேண்டும். தரப்பினர் ஏற்றுக்கொள்ளும்படியாக எது அவரிடம் அவ்வாறு கேட்கப்படுகிறது என்பது பற்றிச் சரியான விரும்பக்கூடிய வகையில் எழுத்து மூலம் உறுதிப்படுத்தும் படியாக கேட்கப்படல் வேண்டும்.

வழக்கு நடவடிக்கையொன்றுக்கு திறந்தவரான ஒருவரால் செய்யப்பட்ட கூற்றுக்கள் அல்லது அவ்விடயத்தின் சூழ்நிலைகளில் அவற்றை செய்வதற்கு வெளிப்படையாக அல்லது உட்கிடையாக அவரால் அதிகாரமளிக்கப்பட்டவரென நீதிமன்றம் கருதும் அத்தகைய எவரேனும் திறந்தவருக்கான முகவர் ஒருவரால் செய்யப்பட்ட கூற்றுக்கள் ஒப்புதல்களாகும். **(சான்றுக் கட்டளைச் சட்டம் 18(1))**

இறந்துபோன ஒரு ஆளினால் செய்யப்பட்ட கூற்றுக்கள் எழுத்து அல்லது வாய்வழியான உரிய நிகழ்வுகள் அல்லது தேடி கண்டுபிடிக்க முடியாதவரால் செய்யப்பட்டவைகள் அல்லது சான்று அளிப்பதற்கு முடியாதவரால் செய்யப்பட்டவைகள் அல்லது உரிய வழக்கின் சூழ்நிலைகளின் கீழ் செலவினதத்தின் மூலமோ அல்லது ஒரு அளவிலான தாமதத்தினாலோ அச் சாட்சியின் சமூகமளிப்பை செய்ய முடியாது என்ற நிலையில் அது நீதிமன்றத்திற்கு நியாயமற்றதாகத் தோன்றும் நிலையில் பின்வரும் நிலைகளில் பொருத்தமான/ ஏற்புடைய உண்மைகளாக அவை உள்ளன.

- ஆளொருபவரது மரணத்துக்கான ஏது விளைவாக வரும் விடயங்களில், அவரது மரணத்துக்கான ஏதுபற்றி, அல்லது அவரது மரணத்தை விளைத்த செய்கையின் சூழ்நிலைகளுள் எதனையும் பற்றி, அவ்வாளால் அக்கூற்று செய்யப்படடிருக்கும் போது, அக்கூற்றுக்களை செய்த ஆள் அவற்றை செய்த நேரத்தில் மரணம் ஏற்படும் என எதிர்பார்த்து இருத்தினும் சரி, இருந்திருக்காவிடினும் சரி, அத்துடன் அவர் இறந்ததற்கான ஏது வினாவாக வரும் நடவடிக்கைகளின் தன்மை எதுவாயினும் சரி, அக்கூற்றுக்கள் இயைபானவையாகும். **(சா.க.சட்டம் பிரிவு 32 (1))**
- அக்கூற்று அதனைச் செய்பவரது பண அக்கறைக்கு அல்லது உரித்தக்கறைக்கு எதிரானதாக இருக்கும்போது, அல்லது அது உண்மையானதானால், குற்றவியல் வழக்குத் தொடுப்பொன்றுக்கு அல்லது சேத ஈட்டுக்கான துடர்ச்சியொன்றுக்கு அவரை ஆட்படுத்தக்கூடியதாக அல்லது ஆட்படுத்தி இருக்கக்கூடியதாக இருக்கும் போது **(சா.க.சட்டம் பிரிவு 32(3))**
- அக்கூற்று பொது உரிமை எதனதும் அல்லது வழக்காறு எதனதும் அல்லது பொது மக்களது அக்கறைக்குரிய அல்லது பொது அக்கறைக்குரிய விடயம் எதனதும் உள்ளமை எதுவேனும் இருந்திருப்பின் அதனை அவர் அறிந்திருக்கக்கூடியதாக இருந்திருக்கலாம் **(சா.க.சட்டம் பிரிவு 32(4))**
- அக்கூற்று, ஆட்கள் பலரால் செய்யப்பட்டதாயும் வினாவிலான விடயத்துடன் இயைபானவையாக அவர்கள் அடைந்த உயர்ச்சிகளை அல்லது உளப்பகுதிகளை வெளிக்காட்டுவதாயும் இருக்கும்போது **(சா.க.சட்டம் பிரிவு 32(8))**

முன்னைய நீதிமன்ற நடவடிக்கை ஒன்றில் அளிக்கப்பட்ட சான்றானது, அந்நடவடிக்கைகள் அதே திறந்தவர்களுக்கிடையில் அல்லது அவர்களது அக்கறை வழிப்பிரதிநிதிகளுக்கிடையில் அமைந்திருப்பின், முதல் நடவடிக்கையில் எதிர்த்திறந்தவர் குறுக்கு விசாரணை செய்யும் உரிமையையும் வாய்ப்பினையும் உடையவராய் இருப்பின், அத்துடன் ஆய்வுக்கு உட்பட்ட வினாக்கள் முதலாவது நடவடிக்கையிலானவை போன்றே இரண்டாவது நடவடிக்கையிலும், பொருளளவில் அதே மாதிரியானவையாக இருந்திருப்பின் ஏற்புடையதாகலாம். **(சா.க.சட்டம் பிரிவு 33)**

செய்தொழிலில் அல்லது வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் போது செய்யப்பட்டுள்ள பதிவொன்று அத்தகவலை முதன்முதலாக வழங்கிய ஆளினது வாய்மொழிமூலச் சான்றை ஒப்புறுதிப்படுத்தக்கூடிய ஆற்றல் கொண்டிராதிருப்பின் ஏற்புடையதாகும். **(சா.க.சட்டம் பிரிவு 35 A)**

## [10.12] குற்றத்தை ஒப்புக்கொள்ளல்

குற்றச்சாட்டுக்கள் மீதான குற்றத்தை முழுக்கவும் ஏற்றுக் கொண்டளிக்கும் வாக்குமூலத்தையே குற்றத்தை ஒப்புக் கொள்ளல் என சுருக்கமாக கூறலாம். ஒரு குற்ற ஒப்புதலானது ''ஏற்றுக் கொள்ளல்'' என்பதை விடவும் பரந்த கருத்தைக் கொண்டுள்ளது. குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் தவறொன்றின் குறிப்பிட்ட விடயமொன்றை புரிந்ததாக ஏற்றுக் கொள்ளலாம் என்பதுடன் அத்தகைய விடயம் வழக்குத் தொடுனர் தரப்பால் நிரூபிக்க வேண்டிய தேவையும் ஏற்படாது. அத்துடன் அதுவானது, குற்றம் சாட்டப்பட்டவரை சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கவும் மாட்டாது. அதற்கு மாறாக, குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் குறித்த தவறொன்றில் அடங்கியுள்ள எல்லா விடயங்களையும் ஏற்றுக் கொள்ளும் போது, அதுவானது சார்த்தப்பட்டுள்ள குற்றத்தினை ஒப்புக் கொண்டதாக அமைகின்றது.

இலங்கையில் குற்றத்தை ஒப்புக்கொள்ளலானது சான்றுக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 17 (2) இன் கீழ் வரைவிலக்கணம் கூறப்பட்டுள்ளது.

''ஒரு குற்ற ஒப்புதலானது, தவறொன்றுக்காக குற்றம் காட்டப்பட்டுள்ள ஆளொருவரால் அத்தவறை தாம் புரிந்ததாகக் கூறி அல்லது அவ்வனுமாத்தை குறிப்பிட்டுக்காட்டி எக்காலத்திலேனும் செய்யப்படும் ஒப்புதலொன்றாகும்''

சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 24 (2) பிரிவின்படி, கீழ் வரும் சந்தர்ப்பங்களின் போது, குற்றம் சாட்டப்பட்ட ஒருவரினால் வழங்கப்படும் ஒப்புதலானது, ஒரு குற்றவியல் வழக்கு விசாரணையின் போது அவருக்கெதிரான சான்றாக ஏற்புடையதாகாது அல்லது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஒரு குற்ற ஒப்புதல் செய்வதானது, அதிகாரத்திலுள்ள ஆளொருவரிடமிருந்து வருவதான, அல்லது அதிகாரத்திலுள்ள ஆளின் சமூகத்திலும் அவரது அனுமதியுடனும் வேறாள் ஒருவரிடமிருந்து வருவதான, ஏதேனும் தூண்டுதலால், அச்சுறுத்தால் அல்லது வாக்குறுதியால் குற்ற ஒப்புதலானது செய்விக்கப்பட்டதாக நீதிமன்றத்துக்கு தோன்றினால் அத்துடன், அக்குற்ற ஒப்புதலை செய்வதால் தமக்கெதிரான நடவடிக்கைகள் தொடர்பில் தாம் உலகியல் அனுகூலம் எதனையும் அடையக்கூடும் அல்லது கேடு எதனையும் தவிர்க்கக்கூடும் எனக் குற்றம் சாட்டப்பட்டவர் எண்ணுவதற்கு அவருக்கு நியாயமாக தோன்றக்கூடிய ஏதக்களை வழங்க நீதிமன்றத்தின் அபிப்பிராயப்படி போதுமானதாயும் உள்ள ஏதேனும் தூண்டுதலால், அச்சுறுத்தலால் அல்லது வாக்குறுதியால் அக்குற்ற ஒப்புதல் நிகழ்ந்ததாக நீதிமன்றத்துக்குத் தோன்றினால்,

அத்தகைய குற்ற ஒப்புதலொன்று ஏதேனும் தூண்டுதலால், அச்சுறுத்தலால் அல்லது வாக்குறுதியால் உண்டான உளப்பதிவு, நீதிமன்றத்தின் அபிப்பிராயப்படி, முற்றாக அகற்றப்பட்ட பின்னர் செய்திருக்கப்படின் அது ஏற்புடையதாகும். **(சா.க.சட்டம் பிரிவு 28)**

ஒரு ஒப்புதலானது ஏற்புடையதாயின், சான்றுக்கட்டளை சட்டத்தின் 29 ஆம் பிரிவுக்கமைய அது ஏற்புடையதற்றதாக அமையாது.

அத்தகைய குற்ற ஒப்புதலொன்று மற்றப்படிக்கு இயைபுடையதாயின், இரகசியம் பேணுவதற்கான வாக்குறுதியொன்றின் கீழ் அல்லது அதைப் பெறும் நோக்கத்திற்காக குற்றம் சாட்டப்பட்டவர் மீது புரியப்பட்ட ஏமாற்றுகையொன்றின் கீழ் அல்லது அவர் குடிவெறியிலிருந்து போது அது செய்யப்பட்டது அல்லது வினாக்கள் எவ்வடிவானவையாயினும் சரி, அவர் விடையளித்திருக்க வேண்டியதல்லாதளவான அவ்வினாக்களுக்கு விடையாக அது செய்யப்பட்டது அல்லது அத்தகைய குற்ற ஒப்புதலை அவர் செய்யப் பிணிக்கப்பட்டவரல்லர் என அத்துடன் அது பற்றி அவருக்கெதிராக சான்று அளிக்கப்படலாம் என அவருக்கு எச்சரிக்கப்படவில்லை என்பதற்காக மாத்திரம்,

பொலிஸ் அலுவலர் ஒருவருக்கு செய்யப்பட்ட குற்ற ஒப்புதல் எதுவும் ஏதேனும் தவறுக்குக் குற்றம் சாட்டப்பட்ட ஆளொருவருக்கெதிராக எண்பிக்கப்படுதலாகாது. (சா.க.சட்டம் 25 (1)) என்பதுடன் பொலிஸ் அலுவலர் ஒருவரது கட்டுக்காப்பில் இருக்கையில் எவரேனும் ஆளால் செய்யப்பட்ட குற்ற ஒப்புதல் எதுவும், அக்குற்ற ஒப்புதல் நீதவான் ஒருவரின் நேர் முன்னிலையில் செய்யபட்டிந்தாலன்றி, அத்தகைய ஆளுக்கெதிராக எண்பிக்கப்படுதலாகாது. **(சா.க.சட்டம் பிரிவு 26(1))**

இலங்கையில் சட்டத்தரணிகள், சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவில் உள்ளடங்கி உள்ளவை பற்றி கவனமாக இருத்தல் வேண்டும். ஒருவருக்கு மேற்பட்டவர்கள் ஒன்றாக விளங்கப்படும் நிலையில் அவர்களுள் ஒருவரால் ஒப்புதல் வாக்கு மூலமொன்று அளிக்கப்படும் போது அவ்வொப்புதலில் அடங்கியுள்ள விடயங்கள் ஏனைய குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கெதிரான சான்றாக பயன்படுத்தப்படாது என்பதே அதுவாகும்.

"ஒரே தவறுக்கு ஒருவருக்கு மேற்பட்டோர் கூட்டாக விளங்கப்படும் போது அத்தகைய ஆட்களுள் ஒருவரால் தம்மையும், அத்தகைய ஆட்களுள் வேறு சிலரையும் பாதிப்பதாக செய்யப்பட்ட குற்ற ஒப்புதலொன்று எண்பிக்கப்படும் போது, அத்தகைய வேறொவருக்குகெதிராக அத்தகைய குற்ற ஒப்புதலை நீதிமன்றம் கருத்தில் கொள்ளலாகாது."

## [10.13] துப்பாக்கிகள், குண்டுகள், ஆயுதங்கள் போன்றவை

இதுவானது ஒரு குற்றச்செயல் நடந்த இடத்திலான துப்பாக்கிள், குண்டுகள், ஆயுதங்கள், சன்னங்கள், ஏவுகணைகள், சன்னக்கூடுகள், வெடிபொருள் உபகரணங்கள் என்பவற்றின் தாக்கங்கள், மற்றும் செயற்பாடுகள் உட்பட்டவை தொடர்பான சான்றுகளைப் பரிசோதிப்பதாகும். ஒரு தடயவியல் எறிபொருள் நிபுணர் சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாகக் குற்றம் சாட்டப்படும் சந்தேகநபர்கள் அல்லது ஏனையோரின் ஆயுதங்களுடன் சன்னங்களையும், துகள்களையும், ஏனைய சான்றுகளையும் ஒப்பீடு செய்வார். வெடி பொருளியல் சான்றுகளை ஒன்று சேர்க்கும் முறைமையில் உள்ளடங்குவனவாவன:

- கைரேகையைப் தேடிப் பெற்றுக்கொள்ளுதல்
- ஒரு தொடரிலக்கத்தைப் தேடிப் பெற்றுக்கொள்ளுதல்
- காந்த துகள்களின் பரிசோதிப்பு
- இரசாயனப் பொருள் மீட்டெடுப்பு
- மீட்டெடுக்கப்பட்ட சன்னத்தின் வகை மற்றும் தனிப்பட்ட குணாம்சங்களைப் பரிசோதித்தல்
- வரி வரிப்பள்ளம் (அடையாளமிடல்) தரவுத்தளமாக்கல்
- ஒப்பீட்டு ரீதியான சன்ன விடய பகுப்பாய்வானது இப்போது அவமதிப்புற்றுள்ளது.

இலங்கையிலுள்ள ஆயுதங்களின் உடைமையுரிமைத் தன்மையின் நிமித்தமாக தொழில்நுட்ப ரீதியாகச் சிறந்ததும் தொழில்வாண்மை ரீதியாகச் சேகரிக்கப்பட்டதுமான எரிபொருளியல் சான்றுகளின் தேவையானது வெளிப்படையானது. ஜெனிவாவில் இருந்து இயங்கும் சர்வதேச மற்றும் அபிவிருத்திக் கற்கைகளுக்கான பட்டப்படிப்பு நிறுவனததின் ஒரு கருத்திட்டமான 2017 ஆம் ஆண்டின் சிறிய ஆயுதங்கள் கருத்தாய்வானது இலங்கையில் பொதுமக்களின் கைகளில் இருக்கும் 494,000 ஆயுதங்களில் 93% ஆனவை சட்டத்திற்கு மாறாக வைத்திருக்கப்படுபவை என மதிப்பிட்டுள்ளது. பொலிஸ் உத்தியோகத்தர்கள் 134,000 ஆயுதங்களை கையிருப்பில் வைத்திருப்பதாகவும், பாதுகாப்பு படையினர் 509,700 துவக்குகளை வைத்திருப்பதாகவும் மதிப்பிடுகிறது.

ஆயுதங்களை சுவடொற்றல் மற்றும் ஐ.நா. வழிகாட்டுதல்களுடன் உடன்படுதலை முன்னேற்றுவதற்கான முயற்சியில் இலங்கையின் ஆயுதங்கள் கட்டளைச்சட்டத்தின் 18 ஆம் பிரிவானது இவ்வாறு கூறுகிறது. —*[e]* இலங்கையில் உரிமம் பெற்ற ஒரு உற்பத்தியாளரால் செய்யப்பட்ட ஒவ்வொரு துப்பாக்கியும் உற்பத்தியாளரின் பெயர் அத்துடன் தொடரிலக்கம் என்பன அக் குழலில் வாசிக்கக்கூடியவாறு செதுக்கப்பட்டு (ஒரு தொடரிலக்கம்) இவற்றைக் கொண்டிருக்க வேண்டும்*]*.

இலங்கை ஆயுதங்களை உற்பத்தி செய்யும் ஒரு நாடு அல்ல. அடையாளப்படுத்தல் தேவைப்படுத்தலானது வெளிநாட்டு உற்பத்தியாளர்களிலேயே தங்கியுள்ளது. ஆயுதங்கள் கட்டளைச்சட்டத்தின் 28 ஆம் பிரிவு பின்வருமாறு தொடர்கிறது.

> *உரிமம் வழங்கும் அதிகாரிகள் ஒரு உரிமத்தை வழங்குவதற்கு முன்பதாக விண்ணப்பதாரி அவ்வாறான ஒரு துவக்கை அவர்களுக்கு முன் சமர்ப்பிக்குமாறு வேண்டுவர் என்பதுடன் அதன் பின்பு யாதும் ஒருவர் நிலையான அடையாளமுள்ள அந்தக் குழலில் உள்ள அடையாளத்திற்கு இல்லாமல் செய்தல், மறைத்தல், மாற்றுதல், அதேவாறு செய்தல் போன்றனவற்றை அவ் அடையாளத்தில் செய்தல் குற்றமாக குற்றம் சாட்டப்படும்.*

இந்தத் தேவைப்பாடானது எறிபொருள் சான்றுகளை சேகரிப்பதை வசதிப்படுத்துவதற்கான வழியை வழங்குகிறது. எவ்வாறாயினும் சட்டத்திற்கு மாறான ஆயுதங்களை வர்த்தகம் செய்தல், மற்றும் பாவனை மீதான அச் சட்டங்களின் செயல்விளைவானது அறியப்படாததாக உள்ளது. பல தசாப்தங்களாக எறிபொருளியலானது நீதிமன்ற அறைகளில் ஒரு பிணக்கிற்கு உட்படாத ஒரு விஞ்ஞானமாக உலகம் பூராகவுமுள்ள நீதிமன்ற அறைகளில் இருந்து வந்துள்ளது. எவ்வாறாயினும் அண்மைக்காலங்களில் எதிர்வாதச் சட்டத்தரணிகள் எறிபொருளியல் சான்றுகளின் பெரு வெற்றியைத்தரும் நம்பகத்தன்மையை அண்மைக்காலங்களில் சவாலுக்கு உட்படுத்தியுள்ளது. ஐக்கிய அமெரிக்காவில் இருந்தான பல வழக்குகள் அவதானிப்பதற்கு பயனுள்ளதாக உள்ளது:

- *Daubert v. Merrell Dow* மருந்தகங்கள், *Inc.*, 509 U.S. 579 (1993) – சான்றியல் மீதான சமஷ்டி விதிகளானவை விஞ்ஞான ரீதியான சான்றுகளின் ஒப்புக்கொள்ளலை ஆளுகின்றது என நீதிமன்றம் கொண்டிருந்தது. சான்றுகளை ஏற்றுக்கொள்வதற்கு

முன்பதாக நீதிபதியானவர் ஒரு வாசல் காவற்காரராக செயற்பட வேண்டுமென அவை வேண்டி நிற்கின்றன. சான்றானது விஞ்ஞான ரீதியாக செல்லுபடியானது எனவும், கையிலுள்ள வழக்கிற்கு தொடர்புடையது எனவும் தீர்மானிப்பதில் அவ்வாறு இருக்க வேண்டுமெனவும் கொள்ளப்பட்டது.

- ஐக்கிய அமெரிக்கா *v. Green*, 405 F. Supp. 2d 104, 107 (D. Mass. 2005) – நீதிமன்றம் தீர்மானித்தது சன்னத்தின் கூடுகள் ஒத்தவையாக இருந்த வழிகளை விபரிக்க மாத்திரம் நிபுணர்களால் முடியுமாக இருந்தது என்பதையாகும். ஆனால் விசேடித்த ஆயுதம் ஒன்றிலிருந்து வந்த சன்னக்கூட்டை அல்ல. உலகத்திலிருந்து வந்த ஒவ்வொரு அணு ஆயுதம் தவிர.''
- ஐக்கிய அமெரிக்கா *v. Monteiro*, 407 F. Supp 2d 351, 374 (D. Mass. 2006) – பரிசோதிப்பவர் தனது களத்தில் உள்ள நிறுவப்பட்ட நியமங்களை பின்பற்றி இருக்கவில்லை என நீதிமன்றம் முடிவுக்கு வந்ததுடன், சான்றுகளை மீள் பரிசோதித்து காண்புகளை உரிய வகையில் ஆவணப்படுத்தும் வரைக்கும் சாட்சியமளிப்பதில் இருந்து விலகியிருத்தல் என நீதிமன்றம் முடிவுக்கு வந்தது. .

உங்களது வழக்கில் ஒரு எறிபொருளியல் நிபுணர் சாட்சியமளிக்க எதிர்பார்த்திருக்கும் போது சம்பந்தப்பட்ட ஆயுதம் மற்றும் சன்னங்களின் வகை பற்றிக் கற்றுக்கொள்வதற்கு நேரம் எடுங்கள். சட்டங்கள் ஏனையவர்கள் தொடர்பில் அறிந்து கொள்ளுங்கள். நிபுணர்களின் சான்றுகள், முறைகள், முடிவுகளை விசாரியுங்கள். நேரத்தை முதலிடுவதானது சான்றுகள் தொடர்பில் உங்களுக்கு சௌகரியத்தை ஏற்படுத்துவதுடன், உங்களது தரப்பினரை மிகவும் செயல் விளைவுள்ள முறையில் முகாமைத்துவம் செய்ய உங்களுக்கு முடியும்.

# [11] விளக்கத்திற்கு/ விசாரணைக்கு பின்பு

## [11.1] தண்டனை தீர்ப்பு வழங்குதல்

### [11.1.1] பொதுவானது

ஒரு குற்றம் சாட்டப்பட்டவர் குற்றமிழைத்தவராக நீதிமன்றத்தால் காணப்படின், நீதிமன்றமானது குற்றம் சாட்டப்படுவதற்கு தண்டனைத்தீர்ப்பு வழங்கும் செயற்பாட்டை முன்னெடுக்கும். தீர்ப்பளிக்கும் நடவடிக்கையானது வழமையாக பேறுகளை அடிப்படையாகக் கொண்டு நேரடியாக நடைபெறும் அல்லது நீதிமன்றத்தின் தற்றுணிபின் பிரகாரம் பின்னைய ஒரு திகதியில் நடைபெறும். வழமையாகவே தரப்புக்களில் ஒரு பகுதியினர் பின்னைய திகதியில் நடவடிக்கைகள் நடத்தப்படுவதற்காக விண்ணப்பிக்கலாம்.)

பொதுவாக நீதிமன்றமானது குற்றம் நிகழ்த்தப்பட்ட நியதிச்சட்டத்தினால் விதிக்கப்பட்ட எல்லைக்குள்ளாக தண்டனையை விதிக்கும். தீர்ப்புக் கொடுக்கும் தீர்ப்பெல்லையின் அட்டவணையானது குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவையில் நெறிப்படுத்தபடுத்தப்பட்டுள்ளது.

### [11.1.2] இலங்கையில் தண்டனைத் தீர்ப்பளித்தல் கட்டமைப்பு

ஒரு மேல் நீதிமன்றமானது எழுதப்பட்ட சட்டத்தில் விபரிக்கப்பட்ட ஏதும் சட்டத்தை அல்லது ஏனைய தண்டனையை விதிக்கும் (குற்றவியல் நடவடிக்கைச் சட்டக் கோவை, பிரிவு 13)

நீதிவான் நீதிமன்றத்தினால் விதிக்கப்படும் தண்டனைகள் குற்றவியல் நடவடிக்கைக் கோவையில் 14 ஆம் பிரிவில் விபரிக்கப்படுகின்றன. அதில் உள்ளடங்குவனவாவன :

(அ) இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலத்திற்கான இரு வகையில் ஒருவகை மறியற் தண்டனை

(ஆ) ஆயிரத்து ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாத குற்றப்பணம்

*(இ) … [S 14(c)*2.21 இல் *2005.]* நீக்கப்பட்டுள்ளது s14c ஆனது 2.21 இலக்க 2005 இனால் நீக்கப்பட்டுள்ளது.

(ஈ) மேற்சொல்லப்பட்ட தண்டனைத் தீர்ப்புக்களில் எதனையும் இணைத்து ஏதேனும் சட்டபூர்வமான தண்டனைத் தீர்ப்பு *[S 14(d) ஆனது* 2005 ஆம் ஆண்டு 2.21 இனால் திருத்தப்பட்டவாறாக.*]*

குற்றவியல் நடவடிக்கை சட்டக்கோவையின் 15(1) ஆம் பிரிவு ஏழு நாட்களுக்கு குறைந்த காலத்திற்கான மறியற் தண்டனையை ஆள் எவருக்கும் நீதிமன்றம் எதுவும் விதிக்கலாகாது என கூறுகிறது:

*இச் சட்டக்கோவையில் அல்லது தண்டனைச் சட்டக்கோவையில் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும் குற்றப்பணம் செலுத்த தவறியமைக்காகவோ அல்லது எது வேறு எதற்கு ஏழு நாட்களுக்குள் குறைந்த காலத்திற்கான மறியற்தண்டனையை ஆள் எவருக்கும் நீதிமன்றம் எதுவும் அளித்தலாகாது.*

சிறையில் அடைப்பதற்குப் பதிலாக நீதிமன்றத்தைச் சுற்றியுள்ள வளாகத்தில் தடுத்து வைப்பதற்கான ஒரு தீர்ப்பினை இச்சட்டக் கோவை உத்தேசிக்கிறது :

குற்றப்பணம் செலுத்த தவறியமைக்காகவோ அல்லது வேறு எதற்காகவோ தவறாளர் ஒருவருக்கு மறியற்தண்டனை தீர்ப்பு அளிப்பதற்கு எழுத்திலான சட்டத்தினால் அல்லது ஏதும் சட்டத்தினால் நீதிமன்றம் எதற்கும் தத்துவம் அளிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலைகளில் அந்த நீதிமன்றம் மறியற்தண்டனைத் தீர்ப்பு அளிப்பதற்குப் பதிலாக நீதிமன்றம் கட்டளையின் மூலம் அக் கட்டளையில் குறித்துரைக்கப்படக் கூடியனவும் இரவு எட்டு மணிக்கு மேற்படாததுமான அத்தகைய நேரம் வரையில் அக் கட்டளையிடப்படும் நாள் அன்று நீதிமன்ற சுற்று எல்லைக்குள் தவறாளரை தடுத்து வைக்கும்படி பணிக்கலாம். **குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை பிரிவு 15(2).**

குற்றப்பணத்தை செலுத்த தவறிய நிலையில் அவ்வாறு தவறிய ஆளுக்கு குற்றம்சாட்டப்பட்டவருக்கு சிறைத்தண்டனையை விதிப்பதற்கான அதிகாரத்தையும் நீதிமன்றம் கொண்டுள்ளது :

குற்றப்பணம் செலுத்த தவறியமைக்காக அத்தகைய தவறுகைக்கு என சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய காலத்திற்கான மறியற் தண்டனையை நீதிமன்றம் விதிக்கலாம். எனினும் விதிக்கப்பட்ட அத்தகைய மறியற்தண்டனைக் காலமானது அச் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றத்திற்குள்ள தத்துவங்களை விஞ்சலாகாது.**(குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை, பிரிவு 15(3)).**

குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் ஒரு விளக்கத்தின் போது பல குற்றங்களுக்காக குற்ற நிருபிப்புச் செய்யப்பட்டு குற்ற நிருபிப்பு செய்யப்பட்டு தண்டனைத் தீர்ப்பு வழங்கும் விடயத்தில் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் பிரிவு 16(1) பின்வருமாறு தீர்மானிக்கிறது.:

*''ஆளொருவர் ஒரே விளக்கத்தில் எவையேனும் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட தனிவேறு தவறுகளுக்காக தீர்ப்பளிக்கப்படுகின்றபோது அத்தகைய தவறுகளுக்காக விதித்துரைக்கப்பட்டவையும் நீதிமன்றத்தின் ஆற்றலுக்கு உட்பட்டவையுமான பல்வேறு தண்டனைகளை நீதிமன்றமானது 301 ஆம் பிரிவுக்கமைவாக அவர் மீது விதிக்கலாம். அத்தகைய தண்டனைகளில் மறியற்தண்டனையும் அடங்கியதாயிருந்தால் ஒரு தனித்தவறுக்கான குற்றத் தீர்ப்பின் மீது எந்தத் தண்டனையை விதிப்பதற்கு நீதிமன்றம் ஆற்றல் கொண்டதோ அந்தத் தண்டனையை பல்வேறு தவறுகளுக்கான கூட்டு மொத்த தண்டனையானது விஞ்சுமிடத்தும் கூட அவை அல்லது அவற்றில் எதுவும் எக்காலத்தில் தொடங்க வேண்டுமென நீதிமன்றம் கட்டளையிட்டாலொழிய நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறான அத்தகைய ஒழுங்கு விதியில் ஒன்று முடிவடைவதன் மேல் மற்றொன்றாக தொடங்குதல் வேண்டும். ஆயின் அந்த வழக்கு நீதிவான் நீதிமன்றத்தால் விளங்கப்படுமாயின் அளிக்கப்படக்கூடிய கூட்டுமொத்த தண்டனையானது அத்தகைய நீதிமன்றம் அதன் சாதாரண நியாயதிக்கத்தைப் பிரயோகிக்கையில் எவ்வாளவு தண்டனையை விதிப்பதற்கு ஆற்றல் கொண்டிருக்குமோ அந்த தண்டனை அளவில் இருமடங்கை விஞ்சுதல் ஆகாது''*

என்பதைத் தீர்மானிக்கும் பிரிவு 16(1)) உள்ளார்ந்த ஏற்பாட்டுக்கு உட்பட்டு இருக்கும், அதாவது ''ஆயின் அந்த வழக்கு ஒரு நீதவான் நீதிமன்றத்தால் விளங்கப்படுமாயின், அளிக்கப்படக்கூடிய கூட்டுமொத்தத் தண்டனையானது அத்தகைய நீதிமன்றம் அதன் சாதாரண நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் எவ்வாறான தண்டனையை விதிப்பதற்கு ஆற்றல் கொண்டிருக்கும் போது அந்தத் தண்டனையளவில் இருமடங்கை விஞ்சுதலாகாது.'' குற்றமற்றவர் என்ற தீர்ப்பளிப்பின் பின்பு, குற்றம் சாட்டப்பட்டவர் வெளிச்செல்ல முடியும் என்பதை அவரது சட்டத்தரணி விளக்கி கூறுவார்.

### [11.1.3] தண்டனை தீர்ப்பளித்தல்: தணிக்கும் மற்றும் மிகைப்படுத்தும் காரணிகள்

#### [11.1.3.1] பொதுவானது

ஒரு குற்றத்திற்கான குற்றமிழைத்தவருக்கு ஒரு தீர்ப்பை இடுகையில் சரியான தீர்ப்பை தீர்மானித்தக்கொள்ளும் முகமாக தீரப்பளிக்கும் நீதிபதி பல எண்ணிக்கையான மூலங்களில் இருந்தான தகவல்களை பரிசிலிப்பதுடன் பல எண்ணிக்கையான உண்மைகளையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வார். நீதிமன்றம் பரிசீலிக்கக்கூடிய காரணிகளின் வகைகளை பிரதிவாதி தரப்பின் சட்டத்தரணி அறிந்துகொள்ள வேண்டும்.

#### [11.1.3.2] மிகைப்படுத்தும் அல்லது தணிக்கும் சூழ்நிலைகள்

பொதுவாக நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்குவதற்கு முன்பாக வழக்குத் தொடுனர் பிரிவு மற்றும் பிரதிவாதப் பிரிவு இரண்டிற்கும் தீர்ப்பு தொடர்பில் சபையில் உரையாற்ற ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படும். வழக்குத் தொடுனர் வழமையாகத் தண்டனையை அமுல்படுத்துவதற்காக விவாதிக்கும் அதேவேளையில் பிரதிவாதி தரப்பானது அதனைத் தணிப்பதற்காக அதனை விவாதிப்பர். நீதிமன்றத்திற்கு முன்பாக பல வகையான காரணிகள் வைக்கப்படும். இதில் உள்ளடங்கக்கூடியவைகளாவன:

- குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றவியல் வரலாறு (முன்னைய குற்றத் திர்ப்புக்கள்)
- குற்றச்சாட்டுகையும் குற்றத்தின் தன்மையும்
- ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் அல்லது சனசமூகத்தில் குறித்த குற்றத்தின் நிலவுகை
- பாதிக்கப்பட்டவரின் விருப்புக்கள்
- குற்றமிழைத்தவரின் விருப்புக்கள்
- சனசமூகத்தின் விருப்புக்கள்
- குற்றம் சாட்டப்பட்டவரின் தனிப்பட்ட சூழமைவுகள் (கல்வி மட்டம், பிள்ளைகள், திருமண வேலைவாய்ப்பு நிலை),
- குற்றம் சாட்டப்பட்டவர் மனவுறுத்தலை வெளிப்படுத்தினாரா்
- குற்றம் முன்பு திட்டமிடப்பட்டதா அவ்வாறாயின் அதன˙மட்டம்
- குற்றத்தின் பாரதூரத்தன்மை
- குற்றத்தை சுற்றியுள்ள சூழமைவுகள் (உதாரணத்திற்கு குற்றம்சாட்டப்பட்டவர் தூண்டப்பட்டாரா அல்லது இல்லையா குற்றம் சாட்டப்பட்டவர் ஒருவருக்கு மேற்பட்டவர்களாக இருப்பார்களாயின் குற்றம் சாட்டப்பட்டவரின் ஈடுபாட்டின் மட்டம்)
- ஓத்த குற்றங்கள் தொடர்புபட்டவற்றில் வழக்கு அதிகாரம்
- தீர்ப்பிற்கு முன்னான வழியில் சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகள் (பிரயோகிக்கக்கூடியதாயின்).

தண்டனைத் தீர்ப்பை தீர்மானிப்பதில் நீதிபதி வழக்குத் தொடுனர் மற்றும் பிரதிவாதிகளிடம் இருந்து கிடைக்கப் பெற்ற உள்ளீடுகளைப் பரிசீலனைக்கு எடுப்பார். குற்றம் சாட்டப்பட்டவர் ஒரு கூற்றை விடுவது அவரது விருப்பத்தை பொறுத்ததாக இருக்கும் அல்லது அவரது சட்டத்தரணி அவர் சார்பாக விரும்பின் ஒரு கூற்றை விடுப்பார். (வழமையாக குற்றம் சாட்டப்பட்டவர் சார்பாக அவரது சட்டத்தரணி நீதிமன்றத்தை விளித்துப் பேசுவதானது ‘‘மறுகட்சியின்றி நீதிமன்ற விளித்தல்’’ எனக் குறிப்பிடப்படுகின்றது.)

#### [11.1.3.3] விவாதத்தை முடித்து தீர்ப்புச் சொல்லும் பொழுது பொருத்தமான நிலையில் பின்வரும் விடயங்களைச் செய்வது புத்திசாலித்தனமானது :

- குற்றம் சாட்டப்பட்டவரின் ஒரு விபரமான தனிப்பட்ட வரலாறு ஏனையவற்றுடன் அதில் உள்ளடங்கக்கூடினவாவன சாதகமான தனிப்பட்ட வெற்றிகள் தன்னார்வ வேலைகள் மற்றும்/ அல்லது சனசமூக சேவை செயன்முறையானது அநேகமாக குற்றம் சாட்டப்பட்டவரின் ‘‘மனிதநேயப்படுத்தல்’’ என எடுத்தாளப்படுகின்றது)
- சிறை வைத்தலுக்கு பதிலான சாதகமான மாற்றீடுகள் சனசமூக அடிப்படையிலான நன்னடத்தை வீட்டுக்காவல் மற்றும்/ அல்லது சீர்திருத்தப் பள்ளிகளில் வைத்திருத்தல். (‘‘சிறை அல்லாத’’) வகையிலான தீர்ப்புத் தெரிவுகளாக எடுத்தாளப்படுகின்றது)
- விசேடித்த சனசமூக சேவை
- மனவள/ உளவள ஆலோசனை

- உழைக்கப்பட்ட குற்றத்திற்கான மனவுறுத்தல் கூற்று ஒன்றுடன் பாதிக்கப்பட்டவரின் பரிகாரம்/ மீளளிப்பு
- குற்றம் சாட்டப்பட்டவருக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கான சாத்தியம்
- விசேடித்த வேலைவாய்ப்புத் தெரிவுகள்/ விபர ரீதியான வேலை வரலாற்றுடன் இணைந்தது
- தண்டனையை அதிகரிப்பதற்கான வழக்குத் தொடுனரின் சான்றுகளை எதிர்த்துப் போராடுவதற்கான ஏதும் வேறு தணிப்பு சூழமைவுகள்.

பிரதிவாதி சட்டத்தரணியின் இலக்கானது நீதிமன்றத்திற்கு அதன் தீர்ப்பு தீர்மானிப்பில் உதவக்கூடிய குற்றம் சாட்டப்பட்டவர் பற்றிய ஏதும் அல்லது எல்லா சாதக தகவல்களையும் வழங்குவதாக இருக்க வேண்டும்.

ஒரு இளம் வயதுடைய குற்றம் சாட்டப்பட்டவரை பொருத்த வரையில் சிறைவைப்பிற்கு எதிரான (விஷேடமாக நீண்டகால சிறைவைப்பு) வாதமானது சாதாரண வயதுவந்தவர் ஒருவருக்கான வாதத்தை விடவும் பலமானதாக அமைகின்றது என்பதை வழக்குரைஞர் கவனத்தில் எடுக்க வேண்டும். ஆகவே தான் ஒரு இளையவர் அல்லது இளம் குற்றம் சாட்டப்பட்டவரை பிரதிநிதித்துவம் செய்யும் நிலையில் நேரடி சிறைத் தீர்ப்பைக் காட்டிலும், ஏனைய தீர்ப்புத் தெரிவுகளை தேடி ஆராய்வதற்கு தீர்ப்பளிக்கும் செயன்முறைகளின்போது பிரதிவாதியின் சட்டத்தரணி நீதிமன்றத்துடனும், வழக்குதத் தொடுனருடனும் கூடுமானவரையில் கதைத்து அவற்றில் ஈடுபடுவது முக்கியமானது.

குற்றம் சாட்டப்பட்டவர் ஒரு தவறுக்காக குற்றம் சாட்டப்பட்டிருந்து அப்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் அவர் குற்றம் சாட்டப்பட்டிருக்கக்கூடிய வேறொரு தவறை அவர் புரிந்தாரென சான்றிலிருந்து தோன்றினால் அவர் எத் தவறைப் புரிந்துள்ளராரென நிறுவப்பட்டுள்ளதோ அத்தவறுக்காக அவர் குற்றம் சாட்டப்படவில்லையாயினும் அத் தவறுக்காக அவருக்கு குற்றத் தீர்ப்பு வழங்கப்படலாம் **(குற்றவியல் நடவடிக்கை கோவை, பிரிவு 177)**

ஒரு குற்றத்தைப் புரிவதில் சம்பந்தப்பட்ட எல்லா ஆட்களும் ஒன்றாக குற்றம் சாட்டப்படுவர் குற்றவியல் நடவடிக்கை கோவை, பிரிவு 180). உதாரணத்திற்கு ஒரே கொலைக்காகஇ A மற்றும் B யினர் குற்றம் சாட்டப்படுகின்றனர். A யும் B யும் குற்றம் சாட்டப்பட முடியும் என்பதுடன் கொலைக்காக கூட்டாக விசாரிக்கப்படலாம்.

## [11.1.4] தண்டனைத் தீர்ப்பளித்தல் விளைவுகள்

### [11.1.4.1] பண ரீதியான நட்டஈடு

ஆள் எவரும் ஏதேனும் குற்றத்திற்காக குற்றத்தீர்ப்பு அளிக்கப்படுகின்றவிடத்து அல்லது அவர் மீது நீதிமன்றத்திற்கு தகுந்தது எனத் தோன்றும் வகையிலான பணத்தொகையை நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறான அவ்வாறான அத்தகைய காலத்தினுள் அல்லது அத்தகைய தவணைகளில் அத்தவறினால் பாதிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு நட்டஈடாக செலுத்தும்படி குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்ட ஆளுக்கு நீதிமன்றம் கட்டளையிடலாம். **(குற்றவியல் கோவை, பிரிவு 17(4))**

17(4) இல் எடுத்தாளப்படும் குற்றமிழைத்தவர் பதினாறு வயதிற்கு குறைந்தவராயின் நீதிமன்றம் தகுந்தது எனக் கருதினால் கொடுப்பனவானது அவரது பெற்றோரால் அல்லது பாதுகாவலரால் செலுத்தப்படலாம் என் கட்டளையிடலாம். **(குற்றவியல் நடவடிக்கைக் கோவை, பிரிவு 17(5))**

செலவுத் தொகையாயினும் சரி நட்டஈடு வகையாயினும் சரி தீர்ப்பளிக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகை விதிக்கப்பட்ட குற்றப்பணம் இருந்தாற்போன்று அறவிடப்படக்கூடியதாதல் வேண்டும். குற்றவியல் நடவடிக்கைக் கோவை 17(6)). கட்டளையிடப்படும் நட்டஈடானது நூறு ஆயிரங்களை விஞ்சுதல் ஆகாது. **(குற்றவியல் நடவடிக்கைக் கோவை 17(7))**

தண்டப்பணங்கள் தொடர்பான ஏற்பாடுகள் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் பிரிவு 291 இல் முன்வைக்கப்படுகிறது.

### [11.1.4.2] சனசமூக சேவைக் கட்டளைகள்

குற்றவியல் நடவடிக்கைக் கோவையின் பிரிவு 18(1) பின்வருமாறு குறிப்பிடுகிறது.

*நீதிமன்றமானது குற்றம் சாட்டப்பட்ட ஆள் ஒருவருக்கு குற்றத் தீர்ப்பு அளிப்பதன் மேல் மறியற்தண்டனை தீர்ப்பு அளிப்பதற்குப் பதிலாக அல்லது குற்றப்பண கொடுப்பனவை விதிப்பதற்குப் பதிலாக அதே கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய*

*சேவைகளை பின்வரும் இடங்களிலான பெயர் குறிக்கப்பட்ட ஒரு இடத்தில் புரியும்படி அத்தகைய குற்றத்திற்கு தீர்ப்பளிக்கப்பட்ட ஆளை அத்தகைய கட்டளையைப் பணித்தல் வேண்டும்–*

*(அ) அரச கருத்திட்டம் ஒன்றில் அல்லது அரச ஆதரவு பெற்ற கருத்திட்டமொன்றில்*

*(ஆ) அரசாங்கத் திணைக்களம் ஒன்றில், பகிரங்க கூட்டுத்தாபனம் ஒன்றில், நியதிச்சட்ட முறையான ஒரு சபையில் அல்லது ஏதேனும் அதிகாரமுள்ள அதிகாரசபையில்; அல்லது*

*(இ) தர்ம நிறுவனமொன்றுக்கு சமூகசேவை ஒழுங்கமைப்பு ஒன்றுக்கு அல்லது மத வழிபாட்டுக்குரிய இடமொன்றுக்கு பொறுப்பாக உள்ள ஆளின் சம்மதத்துடன் விடயத்திற்கு ஏற்ற வகையில் அத்தகைய நிறுவனததில், ஒழுங்கமைப்பில் அல்லது இடத்தில்*

சனசமூக சேவை கட்டளையின் நடைமுறைக் காலமானது அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறு கூட்டுமொத்தமாக நாற்பது மணித்தியாலங்களுக்கு குறையாதவாறும், இருநூற்றி நாற்பது மணித்தியாலத்திற்கு மேற்படாததுமான அத்தகைய எண்ணிக்கையான மணித்தியாலங்களுக்காக இருத்தல் வேண்டுமென்பதுடன் கட்டளை பதியப்பட்ட திகதியிலிருந்து தொடங்கும் ஓராண்டு காலப்பகுதிக்குள் அது ஆற்றப்படுதலும் வேண்டும். **(குற்றவியல் நடவடிக்கைக் கோவை, பிரிவு 18(2))**

ஒரு குற்றம் தீர்க்கப்பட்டவர் குறித்துரைக்கப்பட்ட எண்ணிக்கையான மணித்தியாலங்களுக்கு சமூக சேவை ஆற்றுவதற்கு அல்லது அதிகாரமுள்ள உத்தியோகத்தர்களின் திருப்திக்கு ஏற்ற வகையில் சமூக சேவையாற்றாது விடும்பொழுது நீதிமன்றமானது,

(அ)சமூக சேவைக் கட்டளையை வேறுபடுத்தும்
(ஆ) புதிய சமூக சேவைக் கட்டளையைப் பதியும்; அல்லது,
(இ) சமூக சேவைக் கட்டளையை இல்லாதொழிக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.
**(குற்றவியல் கோவை, பிரிவு 18(3))**

### [11.1.4.3] <u>மறியலில் வைத்தல்/ சிறைவாசம்</u>

ஏழு நாட்களுக்கு குறையாத காலத்திற்கான மறியற்தண்டனையை ஆள் எவருக்கும் நீதிமன்றம் அளித்தல் ஆகாது. **(குற்றவியல் கோவை, பிரிவு 15(1))**

### [11.1.4.4] <u>ஒத்திவைக்கப்பட்ட தண்டனை</u>

குற்றவியல் நடவடிக்கைக் கோவையின் பிரிவு 303 பின்வருமாறு வழங்குகிறது:

*(1) பின்வருவனவற்றைக் கவனத்தில் கொண்டு தண்டனைத் தீர்ப்பு முழுவதையும் அல்லது அதன் பாகத்தை நிறுத்தி வைக்கின்ற கட்டளையொன்றை ஆக்குதல் தோதானது என எழுத்தில் கோரப்பட வேண்டிய காரணங்களுக்காக நீதிமன்றம் திருப்திப்படின் அது அவ்வாறு செய்யலாம்:*

*(அ)எந்த தவறு தொடர்பில் தண்டனை தீர்ப்பு விதிக்கப்படுகின்றதோ அந்த அத்தவறுக்கு விதித்துரைக்கப்படக்கூடிய ஆகக்கூடிய தண்டம்*
*(ஆ) தவறின் தன்மையும் பாரதூர தன்மையும்*
*(இ) தவறுக்காக தவறாளரின் குற்றத் தன்மையும் பொறுப்புடைமையின் அளவும்*
*(ஈ) தவறாளரின் முன்னைய பண்பு*
*(உ)தவறு புரியப்பட்டதிலிருந்து நேரடியாக விளைகின்ற ஏதும் நேரடி நட்டம், அல்லது சேதம்*
*(ஊ) தவறாளர் தொடர்பாக ஏதேனும் குற்றத்தை அதிகரிக்கின்ற அல்லது குற்றத்தை தணிக்கின்ற காரணி உள்ளமை*
*(எ) சூழ்நிலைகள் எல்லாவற்றிலும் நீதியாக உள்ள ஒரு அளவுக்கு ஒருமுறையில் தவறாளரைத் தண்டிக்க வேண்டிய தேவை*
*(ஏ) இதேபோன்ற இதையொதத் தவறுகளைப் புரிவதிலிருந்து தவறாளரை அல்லது வேறு ஆட்களைத் தடுப்பதற்கான தேவை*
*(ஐ) தவறாளர் எந்த வகையினதான நடத்தையில் ஈடுபட்டிருந்தாரோ அவ்வகையினதான நடத்தை நீதிமன்றத்தினால் தண்டிக்கப்படுவதினை வெளிப்படுத்துவதற்கான தேவை*
*(ஒ) பாதிக்கப்பட்டவரை அல்லது சமுதாயத்தை தவறாளரிடமிருந்து பாதுகாப்பதற்கான தேவை*
*(ஓ) தவறுக்கு குற்றம் சாட்டப்பட்ட ஆள் தவறுக்கு தான் குற்றவாளியெனக் கூறியிருப்பதுடன் அத்தகைய ஆள் பயபக்தியாகவும் உண்மையாகவும் வருந்துகிறார் என்ற நிகழ்வு அல்லது*
*(ஔ) மேலே உள்ளவற்றுள் இரண்டு அல்லது அதற்கு அதிகமானவற்றின் சேர்க்கையும்*

*(2) மறியற் தண்டனைத் தீர்ப்பொன்றை தடுத்துவிக்கும் கட்டளையொன்றை பின்வரும் நிலைகளில் ஒரு நீதிமன்றம் மேற்கொள்ளாகாது —*

*(அ)எத் தவறு தொடர்பில் தண்டனைத் தீர்ப்பு விதிக்கப்படுகின்றதோ அத்தவறுக்காக சட்டத்தினால் கட்டாயமான குறைந்த பட்ச மறியற் தண்டனைத் தீர்ப்பொன்றும் விதித்துரைக்கப்பட்டிருப்பின் அல்லது*

*(ஆ) நிறுத்தி வைக்கப்பட்டிராத காலப்பகுதி ஒன்றிற்கான மறியற் தண்டனையை தவறாளர் அனுபவித்துக்கொண்டிருப்பின் அல்லது அனுபவிக்க வேண்டியவராக இருப்பின் அல்லது*

*(இ) தவறாளர் நன்னடத்தை பாதுகாவல் கட்டளைக்கு அல்லது நிபந்தனைகளுடனான நிபந்தனைக்கு அல்லது விடுவிப்புக்கு இணைந்தவராக இருந்தபோது தவறானது புரியப்பட்டிருப்பின்; அல்லது*

*(ஈ) விதிக்கப்பட்ட மறியற்தண்டனைக்காலம் அல்லது தவறாளர் அதே வழக்கு நடவடிக்கைகளில் ஒன்றுக்கு மேற்பட்ட தவறுகளுக்காக குற்றத் தீர்ப்பு அளிக்கப்படுமிடத்து கூட்டு மொத்த மறியற்தண்டனைக் காலங்கள் இரண்டு ஆண்டுகளை விஞ்சியிருப்பின் மறியற் தண்டனைத் தீர்ப்பை நிறுத்தி வைத்திருக்கின்ற கட்டளையொன்றை நீதிமன்றம் ஆக்குதலாகாது*

*(3) ஒரு தண்டனைத் தீர்ப்பின் முழுமையும் அல்லது அதன் ஏதேனும் பாகம் எக்காலப்பகுதி தண்டனைத் தீர்ப்பின் முழுமையை அல்லது அதன் பாகத்தை நிறுத்தி வைக்கின்ற கட்டளையை ஆக்குகின்ற போது, —*

*(அ)தீர்மானிக்கப்படுதல் வேண்டும்; மற்றும்*

*(ஆ) குறித்துரைக்கப்படுதல் வேண்டும்,*

*ஆயின் அத்தகைய காலப்பகுதியானது தண்டனைத் தீர்ப்பின் முழுமையை அல்லது அதன் பாகத்தை நிறுத்தி வைத்திருக்கின்ற கட்டளைத் தேதியிலிருந்து ஐந்தாண்டுக்கு குறைவானதாக இருத்தலாகாது.*

### [11.1.4.5] நிபந்தனையின் பேரிலான விடுவிப்பு

குற்றவியல் நடவடிக்கை கோவையின் பிரிவு 306 பின்வருமாறு வழங்குகிறது

*(1) எவரேனும் ஆள் நீதிவான் நீதிமன்றத்தின் முன்னர் அத்தகைய நீதிமன்றத்தால் தண்டிக்கப்படற்பாலாதான தவறொக்கு என குற்றம் சாட்டப்பட்டபோதும் குற்றச்சாட்டு எண்பிக்கப்பட்டதெனக் கருதியிருந்தும் குற்றம் சாட்டப்பட்ட ஆளின் நடத்தை முன்வரலாறு, வயது, உடல்நிலை அல்லது மனநிலை என்பவற்றை அல்லது தவறின் அற்பத்தன்மை அல்லது எவ்வாறான குற்றம் தணிக்கும் சூழ்நிலையில் தவறு புரியப்பட்டது என்பது ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தண்டனை எதனையும் அல்லது பெயரளவிலான தண்டனை தவிர்ந்த வேறு எந்த தண்டனையையும் கொடுப்பது உசிதமற்றது என இதனகத்து பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக தவறாளரை நிபந்தனையின் பேரில் விடுவித்தல் உசிதமானது என நீதிமன்றம் அபிப்பிராயப்படும்போது நீதிமன்றமானது குற்றத்தீர்ப்பு வழங்க முற்படாது—*

*(அ)நீதிமன்றம் பொருத்தமானது எனக் கருதுவதான அத்தகைய கண்டித்தலின் பின்னர் அத்தகைய தவறாளரை விடுவிக்குமாறு கட்டளையிடலாம்; அல்லது*

*(ஆ) நன்னடத்தையாக இருப்பாரெனவும் மூன்றாண்டுகளுக்கு அதிகமாகாததும் நீதிமன்றத்தின் கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியதானதுமான அத்தகைய காலப்பகுதியினுள் எப்போதேனும் அழைக்கப்பட்டால் குற்றத்தீர்ப்புக்கும் தண்டனைத் தீர்ப்புக்கும் தோன்றுவார் எனவும் கூறும் நிபந்தனையில் பிணைகாரருடன் அல்லது பிணைகாரரின்றி பிணைப் பத்திரமொன்றை முடிப்பதன் பேரில் தவறாளரை விடுவிக்கலாம்.*

*(2) எவரேனும் மறியற் தண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதான தவறு எதற்குமென குற்றப்பகர்வின் மேல் குற்றத்தீர்ப்பு வழங்கப்படுமிடத்து குற்றம் சாட்டப்பட்ட ஆளின் நடத்தை முன்வரலாறு, நடத்தை, வயது, உடல்நிலை அல்லது மனநிலை என்பவற்றை தவறின் அற்பதனம்ம அல்லது எவ்வாறான குற்றம் தணிக்கும் சூழ்நிலையில் தவறு புரியப்பட்டது என்பதாகியவற்றைக் கருத்தில் கொண்டு தண்டனை எதனையும் அல்லது பெயரளவிலான தண்டனை தவிர்ந்த தண்டனை எதனையும் கொடுப்பது உசிதமற்றது என அல்லது இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக தவறாளரை நிபந்தனையின் பேரில் விடுவிபத்தல் உசிதமானது என நீதிமன்றம் அபிப்பிராயப்பட்டபோதும் நீதிமன்றமானது மறியற்தண்டனை தீர்ப்பினை அளிப்பதற்குப் பதிலாக நன்னடத்தை உள்ளவராக இருப்பாரெனவும், மூன்றாண்டுக்கு அதிகமானதும் நீதிமன்றத்தின் கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியதுமான அத்தகைய காலப்பகுதியினுள் எப்போதேனும் அழைக்கப்பட்டால் தண்டனைக்கு தோன்றுவார் எனவும் கூறும் நிபந்தனையில் பிணைகாரருடன் அல்லது பிணைகாரரின்றி பிணைப்பத்திரம் ஒன்றை முடிப்பதன் பேரில் தவறாளரை விடுவித்து கட்டளையாக்கலாம்.*

*(3) நீதிமன்றமானது (1) உட்பிரிவின் கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆகக் கூடிய கட்டளை எதற்கும் மேலதிகமாக :*

*(i) இச்சட்டக்கோவையின் 17(4) எனும் பிரிவின் கீழான நட்டஈட்டையும்; மற்றும்*

*(ii) நீதிமன்றம் தகுந்தது எனக் கருதுகின்றவாறு ஆயிரத்து ஐந்நூறுக்கு மேற்படாத தொகையிலான அரசின் செலவுகளையும் கொடுக்கும்படி தவறாளருக்கு கட்டளையிடலாம்.*

*(4) இப்பிரிவின் கீழான கட்டளையொன்று நீதிவான் நீதிமன்றம் ஒன்றினால் ஆக்கப்படுமிடத்து அக்கட்டளையானது களவாடப்பட்ட ஆவணத்தை மீள உரித்தாக்கும் அல்லது மீட்கும் நோக்கத்திற்காகவும் சொந்தக்காரருக்கு அந்த ஆதனத்தை மீளளிப்புச் செய்தல் அல்லது ஒப்படைத்தல் சம்பந்தமாகவும் அத்துடன் அத்தகைய மீளளித்தலின் மீது அல்லது ஒப்படைத்தலின் மீது மீளளித்தல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பாக பணம் செலுத்துதல் சம்பந்தமாகவும் கட்டளையிடுவதற்கு நீதிமன்றத்தை இயலச் செய்யும் நோக்கத்திற்காகவும் குற்றத் தீர்ப்பொன்று என்றாற்போன்று அதே பயனுடையதாதல் வேண்டும்.*

### [11.1.4.6] <u>மரண தண்டனை</u>

மரண தண்டனை விதிக்கப்படற்பாலதான தவறொன்றுக்கு குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்ட ஆள் எவரேனும் பதினெட்டு வயதிற்கு குறைந்தவராக நீதிமன்றத்திற்கு தோன்றுமிடத்து நீதிமன்றமானது அவ்வாளுக்கு மரணத் தீர்ப்புக்குப் பதிலாக தண்டனைச் சட்டக்கோவை 53வது பிரிவினாலே ஏற்பாடு செய்யப்பட்டதான தண்டனைத்தீர்ப்பினை எடுத்து மொழியலாம். குற்றவியல் நடவடிக்கைக் கோவையின் 281 ஆம் பிரிவில் இது முன்வைக்கப்படுகிறது.

ஆள் ஒருவருக்கு மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டபொழுது அத் தண்டனைத் தீர்ப்பானது சனாதிபதியால் தீர்மானிக்கப்படுவதான நாளிலும், இடத்திலும் அவ்வாளை இறக்கும் வரையிலும் கழுத்தில் கட்டி தூக்கிலிட வேண்டும் எனப் பணித்தல் வேண்டும். **(குற்றவியல் நடவடிக்கை கோவை 285)**

### [11.1.4.7] <u>பெண்கள்</u>

<u>குற்றவியல் நடவடிக்கைக் கோவையின் 282 ஆம் பிரிவு பின்வருமாறு கூறுகிறது:</u>

*(1) மரண தண்டனை விதிக்கப்படற்பாலதான தவறொன்றுக்கு ஒரு பெண் குற்றத்தீர்ப்பு அளிக்கப்படுமிடத்து அவள் தான் கருவுற்றுள்ளாள் என சார்த்தினால் அல்லது எந்த நீதிமன்றத்தின் முன்னிலையில் ஒரு பெண்ணுக்கு குற்றத்தீர்ப்பு அளிக்கப்படுகிறதோ அந்த நீதிமன்றமானது அந்தப் பெண் கருவுற்றுள்ளாளா இல்லையா என்ற பிரச்சினைக்கு முடிவு காணுதல் உசிதமானது எனக் கருதுமிடத்து அத்தகைய பிரச்சினையானது அவள் மீது தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட முன்னர் பின்வருவோரால் தீர்மானிக்கப்பட வேண்டும். அதாவது—*

*(அ) அப் பெண் யூரர் சபை இல்லாது மேல் நீதிமன்றத்து மூன்று நீதிபதிகளால் நியாய விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பு அளிக்கப்படுமிடத்து அந்த நீதிபதிகளால்; அல்லது (ஆ) அப் பெண் விளக்கத்தின் பின் யூரர் சபையால் குற்றத் தீர்ப்பு அளிக்கப்படுமிடத்து குற்றவாளி என துணிவுரையை வழங்கிய யூரர் சபையினால் (அத்தகைய யூரர் சபை உறுப்பினர்கள் மீண்டும் சத்தியம் செய்து கொள்ள வேண்டியதில்லை) தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.*

*(2) (1) ஆம் உட்பிரிவின் (ஆ) எனும் பந்தியின் கீழ் வருவதான விடயங்களில் —*

*(அ) அப் பெண் மீது குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்ட பின்னரும் பெண் கருவுற்றுள்ளாளா இல்லையா என்ற பிரச்சினையில் யூரர் சபை துணிவுரையை வழங்குவதன் முன்னரும் எவரேனும் யூரர் போதுமான ஏதேனும் காரணத்தினால் விசாரணை முழுவதிலும் சமூகமளிக்காதவாறு தடுக்கப்பட்டால் அல்லது எவரேனும் யூரர் வருகை தராமல் இருந்து அவர் வருவதைக் கட்டாயப்படுத்தல் சாத்தியமற்றதாக இருப்பின் அல்லது எவரேனும் யூரர் எம்மொழியில் சான்று கொடுக்கப்பட்டதோ அம்மொழியை விளங்கிக்கொள்ளாமல் இருந்தால் அல்லது அத்தகைய சான்று மொழிபெயர்த்துக் கூறப்படும்போது அவ்வாறு மொழிபெயர்க்கப்படும் மொழியினை விளங்கிக்கொள்ளாமல் இருந்தால் நீதிமன்றமானது ஒன்றில் புதிதாக ஒரு யூரரை சேர்த்துக்கொள்ளுமாறு அல்லது யூரர் சபையைப் கலைத்து விட்டு புதிய யூரர் சபையை தெரிவு செய்யுமாறு கட்டளையிடலாம்.*

*(ஆ) தீர்மானிக்கப்பட வேண்டியதான பிரச்சினையில் யூரர் சபை ஏகமனதாகவோ அல்லது ஐந்திற்கு இரண்டு என்ற பெரும்பான்மை மூலமோ உடன்பாடு காணாது இருந்தால் அல்லது நீதிமன்றத்தின் கருத்தில் நீதியின் நலன் அவ்வாறு தேவைப்படுத்துமாறு நீதிமன்றம் கருதினால் யூரர் சபையைக் கலைத்து விட்டு புதிய யூரர்சபையைத் தெரிவு செய்யுமாறு கட்டளையிடலாம்.*

*(இ) நீதிமன்றமானது இவ் உட்பிரிவின் (அ) (ஆ) என்னும் பந்தியின் கீழ் புதிதாக யூரர் சபையைத் தெரிவு செய்யுமாறு கட்டளையிடுமிடத்து அத்தகைய யூரர் சபையானது விளக்கமொன்றுக்கு யூரர் சபை தெரிவு செய்யும் வகையில் அமைக்கப்பட வேண்டும். அத்தகைய யூரர்சபை ஒவ்வொன்றும் அத்துடன் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு புதிய யூரர் ஒவ்வொன்றும் நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் சத்தியம் செய்து கொள்ள வேண்டும்.*

*(3) பெண் கருவுற்றுள்ளாளா இல்லையா என்ற பிரச்சினை விடயத்திற்கேற்ப பெண்ணின் தரப்பில் அல்லது வழக்குத் தொடுனர் தரப்பில் நீதிபதியின் முன்னிலையில் அல்லது யூரர்சபையின் முன்னிலையில் வைக்கப்பட வேண்டும். அத்தகைய சான்றின் அடிப்படையில் நீதிபதிகளால் அல்லது யூரர்சபையால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் நீதிபதி அல்லது யூரர்சபை விடயத்திற்கு ஏற்ப பெண் கருவுற்றுள்ளாள் என திருப்திப்படும் வகையில் உறுதியாக எண்பிக்கப்பட்டாலன்றி பெண் கருவுற்று இருக்கவில்லையென முடிவு செய்தலும் வேண்டும்..*

*(4) பெண் கருவுற்றுள்ளாள் என முடிவு செய்யப்பட்டதாயின் நீதிமன்றமானது மரண தண்டனை தீர்ப்புக்குப் பதிலாக தண்டனைச் சட்டக்கோவையின் 54 ஆம் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறான மறியற் தண்டனையொன்றினை எடுத்து மொழிதல் வேண்டும்.*

### [11.1.4.8] தொடர்புடைய சட்டவாக்கங்கள்

#### [11.1.4.8.1] நீதவான்மன்ற நீதிபதியால் விளக்க விசாரணை செய்யப்படுதல்

நீதிவான் வழக்குத் தொடுனரினதும் எதிரியினதும் சான்றையும் அவர் தனது சொந்தப் பிரேரணையின் பேரில் காண்பிக்கச் செய்யக்கூடிய அத்தகைய மேலதிக (சான்று ஏதேனும்) இருப்பின் சான்றையும் எடுத்த பின்னர் குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி அல்ல எனக் காணின் விடுதலை செய்வதற்கான துணிவுரை ஒன்றை அவர் உடனடியாக செய்ய வேண்டும். அவர் குற்றம் சாட்டப்பட்டவரை குற்றவாளி எனக் காணின் குற்றவாளி என துணிவுரையொன்றை அவர் உடனடியாகப் பதிந்து குற்றம்சாட்டப்பட்டவருக்கு சட்டத்திற்கிணங்க தண்டனைத் தீர்ப்பு வழங்க வேண்டுமென்பதுடன் அத்தகைய தண்டனைத் தீர்ப்பை பதிதலும் வேண்டும். **(குற்றவியல் நடவடிக்கைக்கோவை, பிரிவு 185)**

நீதிவான் நீதிமன்றமானது பின்வரும் தீர்ப்புக்களை விதிக்கக்கூடியது:

(1) இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலத்திற்கான இருவகையில் ஒரு வகை மறியற்தண்டனை **(குற்றவியல் நடவடிக்கைக்கோவை, பிரிவு 14(a))**

(2) ஆயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணம் **(குற்றவியல் நடவடிக்கைக்கோவை, பிரிவு 14(b))**

(3) மேற்சொல்லப்பட்ட தண்டனைத் தீர்ப்புக்களில் எதனையும் இணைத்த சட்டப்படியான தண்டனைத் தீர்ப்பு. **(குற்றவியல் நடவடிக்கைக்கோவை, பிரிவு 14(d)).**

#### [11.1.4.8.2] மேல் நீதிமன்றம் - யூரியால் விசாரிக்கப்படுதல்

எழுத்திலான சட்டத்தினால் விதந்துரைக்கப்பட்ட ஏதேனும் தண்டனைத் தீர்ப்பை அல்லது வேறு தண்டத்தை மேல் நீதிமன்றம் விதிக்கலாம். **(குற்றவியல் நடவடிக்கைக்கோவை, பிரிவு 13)**

நீதிபதியால் வேறு வகையால் கட்டளையிடப்பட்டாலன்றி குற்றம் சாட்டப்பட்டவர் எந்தக் குற்றச்சாட்டுக்களின் கீழ் விளங்கப்படுகிறாரோ அந்தக் குற்றச்சாட்டுக்கள் எல்லாவற்றின் மீதும் யூரர்சபை துணிவுரை அளித்தல் வேண்டும். அவர்களின் துணிவுரை என்னவென நிச்சயப்படுத்துவதற்கு அவசியமான அத்தகைய கேள்விகளை நீதிபதி கேட்கலாம். (குற்றவியல் நடவடிக்கைக்கோவை, பிரிவு 235(1)) யூரர்சபையால் அளிக்கப்பட்ட துணிவுரையை நீதிபதி அங்கீகரிக்காவிட்டால் அவர்களது துணிவுரையை மீளாய்வுமாறு அவர்களை அவர் பணிக்கலாம். அத்தகைய மீளாய்வின் பின்னர் அளிக்கப்பட்ட துணிவுரையானது உண்மையான துணிவுரை எனக் கருதப்படுதல் வேண்டும் (குற்றவியல் நடவடிக்கைக்கோவை, பிரிவு 235(2)).

குற்றம் சாட்டப்பட்டவர் மீது குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டால் சட்டத்திற்கு இணங்க அவர் மீது நீதிபதி உடனடியாக தீர்ப்பு வழங்குதல் வேண்டும். (குற்றவியல் நடவடிக்கைக்கோவை, பிரிவு 238)

### [11.1.4.8.3] <u>மேல் நீதிமன்ற நீதிபதியால் விளக்க விசாரணை</u>

வழக்குத் தொடுனர் தரப்பிலும் எதிர்வாதி தரப்பிலுமான வழக்குகள் முடிவடைந்ததும் நீதிபதி உடனடியாக அல்லது விளக்கம் முடிந்து பத்து நாட்களுக்குள் விடுதலை செய்வதற்கான துணிவுரையொன்றை அல்லது குற்றத் தீர்ப்பு அளிக்கும் துணிவுரையொன்றை அதற்கான காரணங்களுடன் பதிதல் வேண்டுமென்பதுடன் துணிவுரை குற்றத் தீர்ப்பு அளிப்பதற்காக இருந்தால் குற்றம் சாட்டப்பட்டவருக்குச் சட்டத்திற்கிணங்க தண்டனைத் தீர்ப்பு அளித்தல் வேண்டும். (அத்தகைய மீளாய்வின் பின்னர் அளிக்கப்பட்ட துணிவுரையானது உண்மையான துணிவுரை எனக் கருதப்படுதல் வேண்டும் 203)

## [11.2] <u>மேன்முறையீடுகள்</u>

### [11.2.1] <u>பொதுவானது</u>

ஒரு தீர்ப்பு தொடர்பாக அல்லது குற்றவியல் நீதிமன்றத்தில் சொல்லப்பட்ட இறுதி கட்டளை தொடர்பாக யாதும் ஒருவருக்கு அதிருப்தியீனம் இருப்பின் சட்டத்தில் அல்லது நிகழ்வில் ஏதும் தவறுக்காக அவ்வண்ணமான தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்ய முடியும.

### [11.2.2] <u>நீதிவான் நீதிமன்றத்திலிருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு</u>

நீதிவான் நீதிமன்றத்தின் கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கான செயன்முறைகள் மற்றும் ஒழுங்குவதிகள் குற்றவியல் நடத்தைக் கோவை 320 (1) இல் முன்வைக்கப்படுகிறது:

ஆள் எவரும் அவர் ஒரு கட்சிக்காரராகவுள்ள ஒரு குற்றவியல் வழக்கில் அல்லது விடயத்தில் நீதிவான் நீதிமன்றம் எதனாலும் எடுத்து மொழியப்பட்ட ஏதேனும் தீர்ப்பினால் அல்லது இறுதிக் கட்டளையினால் அதிருப்தியடைந்தால் சட்டம் சம்பந்தமான அல்லது நிகழ்வு சம்பந்தமான ஏதேனும் பிழை தொடர்பில் அத்தகைய தீர்ப்புக்கு எதிராக உயர் நீதிமன்றத்திற்கு பின்வரும் முறையில் மேன்முறையீடு செய்யலாம்—

*(அ)அத்தகைய தீர்ப்பு அல்லது கட்டளை அளிக்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட நேரத்திலிருந்து பதினான்கு நாட்களுக்குள்ளாக அத்தகைய நீதிவான் நீதிமன்றத்தின் உயர் நீதிமன்றத்தை விளித்து எழுதப்பட்ட மேன்முறையீட்டு மனுவொன்றைச் சமர்ப்பித்தல் மூலம் அல்லது*

*(ஆ) மேற்கூறப்பட்ட காலத்திற்குள்ளாக அத்தகைய நீதிமன்றத்தின் பதிவாளருக்கு அல்லது அப்போதைக்கு அவர் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் மறியற்சாலையின் சிறைக் காவலருக்கு மேன்முறையீடு செய்வதற்கு தமக்குள்ள விருப்பத்தை அதற்கான ஏதுக்களையும் பற்றிக் கூறுவதன் மூலமும் அதே நேரத்தில் ஐந்து ரூபாய் பெறுமதியான முத்திரையை அளிப்பதன் மூலமும் அதன் மேல் மேன்முறையீட்டு மனுவொன்றை தயாரித்து அத்தகைய தீர்ப்பு அல்லது கட்டளை எந் நீதிமன்றத்தினால் எடுத்து மொழியப்பட்டதோ அந் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தல் விடயத்திற்கு ஏற்றாற்போல அத்தகைய பதிவாளரின் அல்லது சிறைக் காவலரின் கடமையாதல் வேண்டும்.*

ஒரு மேன்முறையீடு எக்காலத்திற்குள்ளாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதை கணக்கிடுவதில் எந்தத் தீர்ப்பு அல்லது கட்டளை பற்றி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதோ அந்தத் தீர்ப்பு அல்லது கட்டளை எடுத்து மொழியப்பட்ட நாள் சேர்க்கப்படுதல் வேண்டும். ஆனால் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளும் பொது விடுமுறைகளும் நீக்கி விடப்படுதல் வேண்டும். **(குற்றவியல் நடவடிக்கைக் கோவை, பிரிவு (321(1)).**

மேன்முறையீட்டு மனுவொன்று எக்காலத்திற்குள்ளாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமோ அக்காலமானது நீதிமன்ற அலுவலகம் மூடப்பபட்டதான ஒரு நாளில் முடிவடையின் அத்தகைய அலுவலகம் திறந்திருக்கும் அதன் முதல்நாள் அன்று அத்தகைய மனு சமர்ப்பிக்கப்பட்டால் மேன்முறையீடானது உரிய காலத்திற்குள் சமர்ப்பிக்கப்பட்டதாக கருதப்படுதல் வேண்டும். **(குற்றவியல் நடவடிக்கைக் கோவை, பிரிவு 321(2)).**

மேன்முறையீட்டு மனு ஒவ்வொன்றும் மேன்முறையீட்டுக்கான ஏதுக்களை சுருக்கமாக கூறுதல் வேண்டும் என்பதுடன் மேன்முறையீட்டாளரால் அல்லது அவரது சட்டத்தரணியால் கையொப்பம் இடப்படுதலும் வேண்டும் **(குற்றவியல் நடவடிக்கைக் கோவை, பிரிவு 322(1)).**

மேன்முறையீடானது ஒரு சட்டப்பிரச்சினையாக இருக்கின்றவிடத்து மனு விவாதிக்கப்பட வேண்டிய சட்ட விடயம் பற்றிய கூற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டுமென்பதுடன் அத்தகைய சட்ட விடயம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் நீதி தீர்ப்பு அளிக்கப்படுவதற்கு தகுந்த பிரச்சினையாகும் என சட்டத்தரணி ஒருவரின் சான்றுரையைக் கொண்டிருத்தலும் வேண்டும். **(குற்றவியல் நடவடிக்கைக் கோவை, பிரிவு 322(2))**

அத்தகைய மனு ஒவ்வொன்றும் ஐந்து ரூபாய்க்கான முத்திரைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். (குற்றவியல் நடவடிக்கைக் கோவை, பிரிவு 322(3)) மேன்முறையீட்டு தீர்ப்பானது முழுமையாக அல்லது பகுதியளவில் மேன்முறையீட்டாளருக்கு சாதகமாக முடிவு செய்யப்பட்டால் முத்திரைக் கட்டணத்தொகை அத்தகைய கட்டணத்தொகை செலுத்தப்பட்டிருந்தால் அவருக்கு திருப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டும். **(குற்றவியல் நடவடிக்கைக் கோவை, பிரிவு 322(4)).**

ஒரு நீதிமன்றத்தால் ஒரு மேன்முறையீடானது முன்வைக்கப்பட்டுள்ள போது அவ் விண்ணப்பதாரியானவர் பிணைமுறி/ பிணைப் பொறுப்பு அளிக்கப்பட்டு விடுவிக்கப்படுவார் என குற்றவியல் நடவடிக்கைக்கோவை பிரிவு 323 குறிப்பிடுகிறது.

*(1) ஒரு மேன்முறையீடு செய்யப்பட்டுள்ள போது எந்த நீதிமன்றத்திலிருந்து மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அந்த நீதிமன்றம் மேன்முறையீட்டாளர் கட்டுக்காவலில் இருப்பின் அவரை அத்தகைய நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையிலும், பிணைகாரரோடும், அல்லது பிணைகாரரின்றியும் பிணைப்பத்திரம் ஒன்றை அவர் முடித்துக்கொடுப்பதன் மீது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு இணங்கியொழுகுவார் என்று தீர்ப்பளிக்கக்கூடிய அத்தகைய செலவுத்தொகைகளை செலுத்துவார் எனவும் கூறும் நிபந்தனையின் பேரில் விடுவிக்கும்படி கட்டளையிடுதல் வேண்டும். ஆயின் எப்போது எந்த நீதிமன்றத்தில் இருந்து மேன்முறையீடு செய்யப்படுகிறதோ அந்த நீதிமன்றம் தகுதியானது எனக் கருத்தினால் மேன்முறையீட்டாளர் பிணைப்பத்திரம் ஒன்றை முடித்துக் கொடுப்பதற்குப் பதிலாக அந்த நீதிமன்றம் போதுமானது எனக் கருதக்கூடியவாறு அத்தகைய நீதிமன்றத்தில் பணம் வைப்பிலிடப்படுவதன் மூலம் அல்லது வேறு வகையாக அல்லது வேறு வகைப் பொறுப்பை அளிக்கலாம்.*

*(2) மேன்முறையீட்டாளர் மேற்சொல்லப்பட்டவாறான அத்தகைய பிணைப்பத்திரத்தை முடித்துக்கொடுப்பதன் மேல் அல்லது அத்தகைய வேறு பிணைப்பொறுப்பை அளிப்பதன் மேல் கட்டுக்காவலில் இருந்து விடுவிக்கப்படுதல் வேண்டும்.*

*(3) மேன்முறையீட்டாளர் மறியற்சாலையில் இருப்பின் அத்தகைய பிணைப்பத்திரம் மறியற்சாலை கண்காணிப்பாளர் முன் அல்லது சிறைக்காவலர் முன்னர் முடிவு எடுத்துக் கொடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு முடிவு எடுத்துக் கொடுக்கப்பட்டால் அது எந்த நீதிமன்றத்தில் இருந்து மேன் முறையீடு செய்யப்பட்டதோ அந்த நீதிமன்றத்தின் முன்னர் செய்யப்பட்டுள்ளதைப் போன்று எல்லா வகைகளிலும் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் இந்த நோக்கத்திற்காக நீதிமன்றம் மேன்முறையீடு செய்யப்படும் விடயத்தில் கொடுக்கப்பட வேண்டிய பிணைப்பொறுப்பின் தொகையையும் தன்மையையும் பாரப்படுத்தல் ஆணைப்பத்திரத்தில் புறக்குறிப்பு இடுதல் வேண்டும்.*

*(4) ஒரு காலத்திற்கான கடுழிய மறியற் தண்டனை அளிக்கப்பட்ட ஆள் ஒருவர் மேன்முறையீடு செய்திருந்து ஆனால் தேவைப்படுத்தப்பட்ட பிணைப்பத்திரத்தை அல்லது வேறு பிணைப்பொறுப்பை அளிக்க இயலாதபோது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு மறியற்சாலைக் கண்காணிப்பாளருக்கு அறிவிக்கப்படும் வரையில் அவர் கடின ஊழியம் இல்லாத கட்டுக்காவலில் தடுத்து வைத்திருக்கப்படுதல் வேண்டும்.*

*(5) அத்தகைய மேன்முறையீட்டாளர் கட்டுக்காவலில் அவர் கழித்த காலம் அல்லது அவர் ஏதேனும் பாகம் அவரது தண்டனைத் தீர்ப்பின் பாகமாகக் கருதப்படுதல் வேண்டும்என மேன்முறையீட்டு நீதிமன்றம் கட்டளையிடலாம்.*

*(6) தீர்ப்பு/ அக்கட்டளை எக்கட்சிக்காரருக்கு சாதகமாக எடுத்து மொழியப்பட்டதோ அல்லது ஆக்கப்பட்டதோ அல்லது எக்கட்சிக்காரருக்கு மாறாக மேன்முறையீடு செய்யப்படுகிறதோ அக்கட்சிக்காரருக்கு (அக்கட்சிக்காரர் முறைப்பாட்டாளராயினும் சரி குற்றம்சாட்டப்பட்டவராயினும் சரி) உடனடியாக அது பற்றி அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.*

மேன்முறையீட்டு மனுவானது நீதவான் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதும் வழக்கின் பதிவுகளை மேன்முறையீட்டு மனு என்பவற்றுடன் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அனுப்புதல் வேண்டும் என்பதுடன், எத்தீர்ப்புக்கு அல்லது எக்கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டதோ அத்தீர்ப்பு அல்லது கட்டளை எக்கட்சிக்காரருக்கு சாதகமாக எடுத்து மொழியப்பட்டதோ அல்லது ஆக்கப்பட்டதோ அல்லது எக்கட்சிக்காரருக்கு மாறாக மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அக்கட்சிக்காரருக்கு, ( அவர் முறைப்பாட்டாளராயினும் சரி, குற்றம் சாட்டப்பட்டவராயினும் சரி) உடனடியாக அதுபற்றி அறிவித்தல் கொடுத்தலும் வேண்டும்.

பதிவேடுகளும் மேன்முறையீட்டு மனுவும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ள போது பதிவாளர் அந்த மேன்முறையீட்டுக்கு எண்ணிட்டு மேன்முறையீட்டு நிரலில் பதிதல் வேண்டும். அத்தகைய நிரல் மேன்முறையீட்டு நீதிமன்ற பதிவகத்தில் தொங்க விடப்படுதல் வேண்டும் **(குற்றவியல் நடவடிக்கைக்கோவை பிரிவு 324 (1))**

சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களுக்கு மேலும் அறிவிப்புக்களின்றி அந்த மேன்முறையீடு அதன் ஒழுங்கு முறைப்படி விளக்கத்திற்கு வருதல் வேண்டும். ஆயின், நீதிமன்றமானது ஆனது அதன் சொந்தப் பிரேரணையின் பேரில் அல்லது சம்பந்தப்பட்ட ஒரு கட்சிக்காரரின் விண்ணப்பத்தின் பேரில் வழக்குத் தொடுப்பது பற்றி அல்லது மேன்முறையீட்டு செலவுத்தொகைகள் பற்றிய அல்லது வேறு வகையில் அது தகுந்தது எனக் கருதக்கூடிய அத்தகைய எவையேனும் நியதிகளில் பேரில் ஒரு மேன்முறையீட்டின் விளக்கத்தை துரிதப்படுத்தலாம் அல்லது பிற்போடலாம். **(கு.ந.ச.கோவை 324 (2))**

மேன்முறையீடு விசாரணைக்கு வரும்பொழுது மேன்முறையீட்டாளர் சமூகமாகவிருப்பின் மேன்முறையீட்டுக்கு ஆதரவாக முதலில் அவர் விசாரிக்கப்படுதல் வேண்டும் அதன் பின்னர் எதிர்வாதி சமூனமாகவிருந்தால், மேன்முறையீட்டுக்கு எதிராக அவர் விசாரிக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் எதிர்வாதி சமூகமாகவிருந்தால், மேன்முறையீட்டு எதிராக அவர் விசாரிக்கப்படுதல் வேண்டும். **(குற்றவியல் நடவடிக்கைக் கோவை 325(1)).**

மேன்முறையீட்டு மனுக்கள் தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்குள்ள அதிகாரத்தை குற்றவியல் நடவடிக்கைக்கோவையின 328 எடுத்துக்காட்டுகிறது:

மேன்முறையீட்டு விசாரணையில் நீதிமன்றம் தலையிடுவதற்கு போதிய ஏது இல்லையெனக் கருதினால் மேன்முறையீட்டை தள்ளுபடி செய்யலாம் அல்லது —

*(அ) விடுதலைத் தீர்ப்புக் கட்டளைக்கு எதிரான மேன்முறையீட்டின் விடயத்தில் அத்தகைய கட்டளையை நேர்மாறாக்கி மேலும் விசாரணை நடாத்தப்பட வேண்டுமென அல்லது விடயத்திற்கு ஏற்றாற்போல குற்றம் சாட்டப்பட்டவர் திரும்ப விளங்கப்படுத்தப்பட வேண்டுமென அல்லது விளக்கத்திற்கு பாரப்படுத்தப்பட வேண்டுமென பணிக்கலாம் அல்லது குற்றவாளியாக கண்டு சட்டத்திற்கிணங்க அவருக்குத் தண்டனைத் தீர்ப்பு அளிக்கலாம்.*

*(ஆ) குற்றத்தீர்ப்புக்கு எதிரான மேன்முறையீட்டில் —*

*(i) துணிவுரையையும் தண்டனைத் தீர்ப்பையும் நேர்மாறாக்கி குற்றம் சாட்டப்பட்டவரை விடுதலை செய்யலாம் அல்லது விடுவிக்கலாம் அல்லது தகுதிவாய்ந்த நியாயதிக்கம் கொண்ட நீதிமன்றம் ஒன்றினால் அவர் திரும்ப விளங்கப்படுத்தப்படலாம் அல்லது விளக்கத்திற்கு பாரப்படுத்தப்பட வேண்டுமெனக் கட்டளையிடலாம்.*

*(ii) தண்டனைத் தீர்ப்பை மாற்றாமல் அவ்வாறே இருக்க துணிவுரையை மாற்றலாம் அல்லது துணிவுரையை மாற்றாமலோ தண்டனைத் தீர்ப்பின் அளவை அல்லது அதன் தன்மையைக் கூட்டலாம் அல்லது குறைக்கலாம்.*

*(இ) வேறு ஏதேனும் கட்டளைக்கு எதிரான மேன்முறையீட்டிலும் அத்தகைய கட்டளையை மாற்றலாம் அல்லது நேர்மாறாக்கலாம். ஆயின் எப்போதும் மேன்முறையீட்டில் அளிக்கப்படும் தண்டனைத் தீர்ப்பானது முதன்னிலை நீதிமன்றத்தினால் அளிக்கப்பட்டுள்ள தண்டனைத் தீர்ப்புக்கு மேற்படுதலாகாது.*

இவ் அத்தியாயத்தின் கீழ் மேன்முறையீடு ஒன்றைக் கையாளுகையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் மேலதிக சான்று அவசியமானது எனக் கருதினால் ஒன்றில் தானாகவே மேலதிக சான்றைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது நீதிவான் எவராலும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமெனப் பணிக்கலாம். (குற்றவியல் நடவடிக்கைக் கோவை பிரிவு 329(1)) அத்தகைய சான்றைப் பெற்றுக்கொள்ளுதல் அத்தியாயம் XVஇன் கீழான விசாரணையாகக் கருதப்படுதல் வேண்டும். **(குற்றவியல் நடவடிக்கைக் கோவை பிரிவு 329(4))**

மேன்முறையீட்டு விசாரணை முடிவடைந்ததன் பேரில் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒன்றில் உடனடியாகவோ அல்லது வேறு ஏதேனும் நாளிலோ (அந்நோக்கத்திற்காக அந்த நாள் அப்போது நிர்ணயிக்கப்படும்.) பகிரங்க நீதிமன்றத்தில் அதன் முடிவுக்கான காரணங்களைக் குறிப்பிட்டு தீர்ப்பு வழங்குதல் வேண்டும். (குற்றவியல் நடவடிக்கைக் கோவை பிரிவு 330(1)). அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட நாளன்று நீதிமன்றம் அதன் தீர்ப்பை அளிப்பதற்குத் தயாராக இல்லாது விடின் அதன் நோக்கத்திற்காக மேலும் வேறொரு நாள் நிர்ணயிக்கப்பட்டு அறிவிக்கப்படலாம். **(குற்றவியல் நடவடிக்கைக் கோவை பிரிவு 330(2))**

நீதிவான் நதிமன்றத்தால் விதிக்கப்பட்ட தீர்ப்பு அல்லது கட்டளையினால் குற்றம் சாட்டப்பட்டமையினால் அதிருப்திபபட்ட எந்தத் தரப்பும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்வதற்கான உரிமையைக் கொண்டுள்ளன. **(நீதித்துறைச்சட்டம், பிரிவு 31)**

### [11.2.3] <u>மேல் நீதிமன்றத்திலிருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு</u>

நீதிமன்றத்தினால் ஏதும் குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்டிருக்கும் எந்த ஆளும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்ய முடியும். **(நீதித்துறைச் சட்டம், பிரிவு 14)**

#### [11.2.3.1] <u>ஒரு யூரியினால் விசாரிக்கப்பட்ட வழக்கு ஒன்றில்</u>

நீதித்துறைச் சட்டத்தின் பிரிவு14(a) பின்வருமாறு குறிப்பிடுகிறது.

*(i) சட்டம் மாத்திரம் தொடர்பான ஒரு பிரச்சினையுடன் சம்பந்தப்படும் எந்த அடிப்படையிலும் மீதான ஒரு குற்றச்சாட்டுகைக்கு எதிராக; அல்லது*

*(ii) உண்மை நிகழ்வு மாத்திரமான ஒரு கேள்வியுடன் சம்பந்தப்படும் எந்த அடிப்படையிலும் அவரது குற்றச்சாட்டுகைக்கு எதிராக; அல்லது சட்டம் மற்றும் உண்மை கலந்த ஒரு பிரச்சினையின் விடயத்தில் அல்லது*

*(iii) சட்டத்தினால் ஒழிய ஒருவரது குற்றம் சாட்டுகை மீது கொண்டுவரப்பட்ட தீர்ப்புக்கு எதிரான மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் விடுவிப்புடன்.*

### [11.2.3.2] ஒரு யூரி இல்லாது விசாரிக்கப்பட்ட வழக்கில் :

நீதித்துறை சட்டம் பிரிவு 14(b) பின்வருமாறு விபரிக்கிறது :

பின்வரும் நிலை தவிர்ந்த ஒரு வழக்கின் ஏதும் குற்றச்சாட்டுகை அல்லது தீர்ப்பிலிருந்து *(b)*உரிமையாக ஒரு யூரி இல்லாது விசாரிக்கப்பட்ட ஒரு வழக்கில்

*(i)* குற்றம்சாட்டப்பட்டவர் குற்ற ஏற்பை மன்றாடியிருத்தல்; அல்லது

*(ii)* என்ன வகையான இயல்பிலும் ஒரே மாதிரியான காலப்பகுதிக்கான ஒரு மறியற்தண்டனைக்கான தீர்ப்பை நூறு ரூபாய்களை விஞ்ஞாத தண்டப்பணம்; தீர்ப்பு தொடர்பான பிரச்சினையில் மாத்திரம் குற்றம் சாட்டப்பட்டவர் குற்ற ஏற்பை மன்றாடியிருக்கும் நிலையில் அல்லது சட்டப்பிரச்சினையொன்றின் மீதில் ஒரு மேன்முறையீடு செய்யப்பட்டால் அவ்வாறான ஒரு வழக்காக இருந்தால்.

மேன்முறையீட்டு மனுவை முன்வைப்பதற்காக அல்லது மேன்முறையீட்டுக்கான அனுமதியைக் கோரும் விண்ணப்பத்திற்கான செயன்முறைகளை குற்றவியல் நடவடிக்கைக் கோவையின் பிரிவு 331 எடுத்துச் சொல்கிறது :

*(1) எந்தக் குற்றத் தீர்ப்புக்கு தண்டனைத் தீர்ப்புக்கு அல்லது கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட நாடப்பட்டுள்ளதோ அந்தக் குற்றத் தீர்ப்பு, தண்டனைத் தீர்ப்பு அல்லது கட்டளை, எடுத்து மொழியப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள்ளாக மேல்நீதிமன்றப் பதிவாளருக்கு மேன்முறையீட்டு மனு ஒன்றை அல்லது மேன்முறையீடு செய்வதற்கு அனுமதிகோரும் விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம் இவ் அத்தியாயத்தின் கீழான மேன்முறையீடு ஒன்று செய்யப்படலாம். ஆயின் மறியற்சாலையில் உள்ளவரான ஆள் ஒருவர் மேன்முறையீடு செய்வதற்கு தமக்குள்ள விருப்பத்தைப் பற்றியும் அதற்கான ஏதுக்கள் பற்றியும் சொல்லப்பட்ட காலத்திற்குள்ளாக அப்போதைக்கு அவர் அடைத்து வைத்திருக்கும் சிறைக்காவலருக்கு கூறுவதன் மூலம் மேன்முறையீடு ஒன்றைச் சமர்ப்பிக்கலாம். அத்துடன் அதனமேல் மேன்முறையீட்டு மனுவொன்றைத் தயாரித்து எக் குற்றத் தீர்ப்புக்கு தண்டனைததீர்ப்புக்கு அல்லது கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட நாடப்பட்டுள்ளதோ அக் குற்றத்தீர்ப்பினை, தண்டனைத் தீர்ப்பினை அல்லது கட்டளையினை எடுத்து மொழிந்த மேல் நீதிமன்றத்திற்கு அதனைச் சமர்ப்பித்தல் அத்தகைய மறியற்சாலையின் சிறைக்காவலரின் கடமையாதல் வேண்டும்.*

*(2) ஒரு மேன்முறையீடு எக்காலத்திற்குள்ளாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதை கணக்கிடுவதில் எந்தத் தீர்ப்புக்கு அல்லது இறுதிக்கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டதோ அந்த தீர்ப்பு அல்லது இறுதிக்கட்டளை எடுத்து மொழியப்பட்ட நாள் சேர்க்கப்படுதல் வேண்டும். ஆனால் எல்லா ஞாயிற்றுகிக்கிழமைகளும் பொதுவிடுறை நாட்களும் நீக்கி விடப்படுதல் வேண்டும்.*

*(3) மேன்முறையீட்டு மனுவொன்று எந்தக் காலத்திற்குள்ளாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமோ அக்காலமானது நீதிமன்ற அலுவலகம் மூடப்பட்ட நாளான்று முடிவடையின் அத்தகைய அலுவலகம் அதன் பின்னர் திறந்திருக்கும் முதல் நாளான்று அம்மனு சமர்ப்பிக்கப்பட்டால் மேன்முறையீடு உரிய காலத்திற்குள்ளாக மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.*

*(4) மேன்முறையீட்டு மனுவானது நல்லதும் பொருத்தமானதுமான கடதாசியில் தெளிவாக எழுதப்பட்டு மேன்முறையீட்டாளரால் அல்லது அவரது சட்டத்தரணியினால் கையொப்பமிடப்பட்டு தேதியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் பின்வரும் விவகாரங்களைக் கொண்டிருக்கவும் வேண்டும்.—*

*(அ)எந்த மேல் நீதிமன்ற அமர்வுகளில் மேன்முறையீடு செய்யப்பட்ட குற்றத்தீர்ப்பு. தண்டனைத்தரீப்பு அல்லது கட்டளை எடுத்து மொழியப்பட்டதோ அதே மேல்நீதிமன்ற அமர்வுகள்,*

*(ஆ) வழக்கின் இலக்கம்,*

*(இ) மேன்முறையீட்டாளரதும் எதிர்வாதியினதும் பெயர்களும் முகவரிகளும்,*

*(ஈ) மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கான விளிப்புரை,*

*(உ) விடயத்திற்கு ஏற்றாற்போல எந்தத் தீர்ப்புக்கு அல்லது கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட நாடப்படுகின்றதோ அந்த தீர்ப்பு அல்லது கட்டளை எடுத்து மொழியப்பட்ட தேதி*

*(ஊ) மேன்முறையீட்டுக்கான ஏதுக்கள் பற்றிய தெளிவானதும் சுருக்கமானதுமான கூற்று,*

*(எ) கோரப்பட்ட நிவாரணம்.*

*(5) ஐந்து ரூபாய் பெறுமதியான முத்திரைகள் அத்தகைய மேன்முறையீட்டாளரினால் ஒட்டப்படுதல் வேண்டும். ஆனால் சட்டமா அதிபரினால் அல்லது மரணத்தண்டனைத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்படுமிடத்து முத்திரைக் கட்டணம் தேவைப்படமாட்டாது.*

### [11.2.3.3] யூர் சபையின் தீர்ப்புக்கு மேன்முறையீடு செய்தல்

விசாரணையானது ஒரு யூரரியால் செய்யப்பட்ட வழக்குகளின் ஒரு மேன்முறையீட்டு தீர்மானிப்பை குற்றவியல் நடவடிக்கைக் கோவை 334 பின்வருமாறு எடுத்துக்காட்டுகிறது:

*(1) யூரர்சபையின் துணிவுரையொன்றின் மீது ஆக்கப்பட்ட குற்றத்தீர்ப்புக்கு எதிரான ஏதேனும் மேன்முறையீட்டின் மீது மேன்முறையீட்டு நீதிமன்றம் நியாயமற்றது என்ற அல்லது சான்றைக் கருத்துக்கெடுத்துப் பார்க்கும்போது ஆதாரமளிக்கப்பட முடியாதது என்ற ஏதுவின் மீது அல்லது எந்த நீதிமன்றத்தின் முன்னர் மேன்முறையீட்டாளர் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டாரோ அந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு ஏதேனும் சட்டப்பிரச்சினை பற்றிய பிழையான முடிவாகும் என்ற ஏதுவின் மீது அல்லது நீதிநெறி புறழ்வு காணப்படுகிறது என்ற ஏதேனும் ஏதுவின் மீது அத்தகைய துணிவுரை தள்ளிவைக்கப்பட வேண்டுமென அது நினைதத்தால் மேன்முறையீட்டை அனுமதித்தல் வேண்டும் அத்துடன் வேறு விடயத்திலும் மேன்முறையீட்டை தள்ளுபடி செய்தல் வேண்டும். ஆயின் நீதிமன்றமானது மேன்முறையீட்டில் எழுப்பப்பட்ட விடயம் மேன்முறையீட்டாளருக்கு சாதகமாக முடிவு செய்யப்படலாம் என அபிப்பிராயப்படுகின்றது என்பது எப்படியிருப்பினும் கணிசமானளவு நீதிநெறிப் புரழ்வு ஏற்படவில்லையென அது கருதினால் மேன்முறையீட்டை தள்ளுபடி செய்யலாம்.*

*(2) இச் சட்டக்கோவையினது சிறப்பு ஏற்பாடுகளுக்கமைவாக மேன்முறையீட்டு நீதிமன்றம் குற்றத் தீர்ப்புக்கு எதிரான மேன்முறையீடு ஒன்றை அனுமதித்தால் அக் குற்றத் தீர்ப்பை இல்லாதொழித்து விடுதலைத் தீர்ப்பு ஒன்று பதியப்படுதல் வேண்டுமென பணித்தல் வேண்டும். ஆயின் எந்த ஒழுங்கீனத்தை அடிப்படையாக வைத்து மேன்முறையீடு அனுமதிக்கப்பட்டதோ அந்த ஒழுங்கீனம் இல்லாவிட்டால் குற்றம் சாட்டப்பட்டவர் நியாயமாக குற்றத் தீர்ப்பு அளிக்கப்படக்கூடிய சான்று யூரர் சபை முன்னர் உள்ளது என யூரர்சபை நீதிமன்றம் அபிப்பிராயப்பட்டால் புதிய விளக்கமொன்றை நடாத்துமாறு அது கட்டளையிடலாம்.*

*(3) குற்றத்தீர்ப்பானது எந்த விளக்கத்தின்போது அளிக்கப்பட்டதோ அந்த விளக்கம் அதனை நடாத்திய நீதிமன்றத்தின் அமைப்பில் உள்ள ஏதேனும் குறைபாடு காரணமாக அல்லது வேறு வகையாக வறிதாக இருந்துள்ளபோது புதிய விளக்கமொன்றை நடாத்துமாறு கட்டளையிடுவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்குள்ள தத்துவத்தை பிரிவிலுள்ள எதுவும் பாதித்தலாகாது.*

*(4) மேன்முறையீட்டாளர் ஒருவர் குற்றப்பகர்வின் ஏதேனும் குற்றச்சாட்டின் மீது அல்லது பாகத்தின் மீது தகுந்த முறையில் குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டாராயினும் குற்றப்பகர்வின் வேறு ஏதேனும் குற்றச்சாட்டின் மீது அல்லது பாகத்தின் மீது தகுந்த முறையில் குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளராரென மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு தோன்றினால் அந்த நீதிமன்றம் விளக்கத்தில் மேன்முறையீட்டாளருக்கு அளிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பை ஒன்றில் உறுதிப்படுத்தலாம் அன்றில் அதற்குப் பதிலாக தக்கது எனக் கருதும் குற்றப்பகர்வின் எந்தக் குற்றச்சாட்டின் மீது அல்லது பாகத்தின் மீது மேன்முறையீட்டாளர் முறையாக குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டாரென அந்த நீதிமன்றம் கருதுகின்றதோ அந்தக் குற்றப்பகர்வின் குற்றச்சாட்டின் மீது அல்லது பாகத்தின் மீது சட்டத்தில் அத்துணிவுரையால் தேவைப்படுத்தப்படக்கூடியதுமான அத்தகைய தண்டனைத் தீர்ப்பை அளிக்கலாம்.*

*(5) மேன்முறையீட்டாளர் தவறொன்றுக்காக குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டிருந்து யூரர்சபை குற்றப்பகர்வின் மீது வேறு ஏதேனும் தவறுக்காக அவரைக் குற்றவாளியாகக் கண்டிருக்கக்கூடியதாகவிடத்தும் அந்த வேறு ஏதேனும் தவறுக்கு அவரைக் குற்றவாளியாக எண்பிக்க நிகழ்வுகள் பற்றிய அந்த யூரர்சபை திருப்தி அடைந்திருக்குமென அந்த யூரர் சபையின் துணிவுரையில் இருந்து மேல் முறையீட்டு நீதிமன்றத்திற்கு தோன்றுமிடத்து அந்த நீதிமன்றம் மேன்முறையீட்டை அனுமதிப்பதற்குப் பதிலாக அல்லது தள்ளுபடி செய்வதற்குப் பதிலாக யூரர்சபை அளித்த துணிவுரைக்குப் பதிலாக அந்த வேறு தவறுக்குக் குற்றவாளியென்னும் துணிவுரையை பதிலீடு செய்து விளக்கத்தில் அளிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்புக்குப் பதிலாக அந்த வேறு தவறுக்காக சட்டத்தில் தேவைப்படுத்தக்கூடியதும் கூடிய கடுமையான தண்டனைத் தீர்ப்பாக இல்லாததுமான அத்தகைய தண்டனைத் தீர்ப்பை அளிக்கலாம்.*

*(6) மேன்முறையீட்டாளருக்கு குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதன் மேல் யூரர்சபை விசேட துணிவுரையொன்றை வழங்கியிருந்து, அந்த துணிவுரையின் விளைவாக எந்த நீதிமன்றத்தின் முன்னர் மேன்முறையீட்டாளர் குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளாரோ அந்த நீதிமன்றத்தின் பிழையான முடிவு எடுக்கப்பட்டுள்ளது என மேன்முறையீட்டு நீதிமன்றம் கருதுமிடத்து*

*மேன்முறையீட்டு நீதிமன்றம் மேன்முறையீட்டை அனுமதிப்பதற்குப் பதிலாக சட்டத்தில் அத்துணிவுரையால் தேவைப்படுத்தப்படுவதாக நீதிமன்றத்திற்கு தோன்றும் அத்தகைய முடிவுகள் பதிவு செய்யப்பட வேண்டுமெனக் கட்டளையிட்டு விளக்கத்தில் அளிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்புக்குப் பதிலாக சட்டத்தில் தேவைப்படுத்தப்படக்கூடிய அத்தகைய தண்டனைத் தீர்ப்பை அளிக்கலாம்.*

## [11.2.3.4] நீதிபதியின் தனித்த தீர்ப்பு மீதான மேன்முறையீடு

யூரர் இல்லாது நீதிபதியின் தனித்த விசாரணையின் போதான வழக்கின் மேன்முறையீட்டைத் தீர்மானிப்பது தொடர்பில் குற்றவியல் நடவடிக்கை கோவை 335 எடுத்துச் சொல்வதாவது:

*(1) யூரர் சபையில்லாத விளக்கத்தின் மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவர் அளித்த துணிவுரைக்கு எதிரான ஒரு மேன்முறையீட்டில் மேன்முறையீட்டு நீதிமன்றம் அது தலையிடுவதற்கு போதிய ஏதுக்கள் இல்லையெனக் கருதினால் மேன்முறையீட்டைத் தள்ளுபடி செய்யலாம்.*

*(2) யூரர் சபையில்லாத விளக்கத்தில் மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவரினால் அளிக்கப்பட்ட குற்றத்தீர்ப்புக்கு எதிரான மேன்றையீட்டில் மேன்முறையீட்டு நீதிமன்றமானது,*

*(அ) துணிவுரையையும் தண்டனைத் தீர்ப்பையும் நேர்மாறாக்கி குற்றம் சாட்டப்பட்டவரை விடுதலை செய்யலாம் அல்லது விடுவிக்கலாம் அல்லது அவர் மீள விளங்கப்படும் படி கட்டளையிடலாம் ; அல்லது*

*(ஆ) தண்டனைத் தீர்ப்பை மாற்றாது துணிவுரையை மாற்றலாம் அல்லது துணிவுரையை மாற்றியோ அல்லது மாற்றாமலோ தண்டனைத் தீர்ப்பின் அளவை அல்லது அதன் தன்மையை அதிகரிக்கலாம் அல்லது குறைக்கலாம் அல்லது குற்றம் சாட்டப்பட்டவரை குற்றப்பகர்வின் குற்றவாளியாகக் கண்டிருக்கக் கூடிய வேறொரு தவறுக்கான குற்றத்தீர்ப்பொன்றைப் பதிலீடு செய்து அளிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்புக்குப் பதிலாக சட்டத்தினால் தேவைப்படுத்தப்படக்கூடிய அத்தகைய தண்டனைத் தீர்ப்பொன்றை புதிதாக வழங்கலாம்.*

## [11.2.4] மேன்முறையீட்டின் விளைவுகள்

யூரர் சபையின் விளக்கத்தின் பின்னராயினும் சரி அல்லது யூரர் சபை இல்லா விளக்கத்தின் பின்னராயினும் சரி அளிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்புக்கு எதிரான மேன்முறையீட்டின் மீது மேன்முறையீட்டு நீதிமன்றம் வேறொரு தண்டனைத் தீர்ப்பு அளிக்கப்பட்டிருத்தல் வேண்டுமெனக் கருதினால் தண்டனைத் தீர்ப்பை இல்லாதொழித்து அதற்குப் பதிலாக சட்டத்தின்படி துணிவுரையால் தேவைப்படுத்தப்பட்டதோ அளிக்கப்பட்டிருத்தல் வேண்டுமென அது கருதுவதுமான வேறொரு தண்டனைத் தீர்ப்பை அது கூடிய கடுமையானதாகவும் இருப்பின் சரி அல்லது கடுமை குறைந்ததாகவும் இருப்பினும் சரி அளித்தல்வேண்டும் வேறேதும் விடயத்திலாயின் மேன்முறையீட்டைத் தள்ளுபடி செய்தல் வேண்டும். **(குற்றவியல் நடவடிக்கைக் கோவை, பிரிவு 336)**

## [11.2.5] மேன் முறையீட்டுக்கான அனுமதி எப்போது தேவைப்படுகின்றது.

ஒரு குற்றவியல் வழக்கில் மேல் நீதிமன்றத்தினால் ஒருவருக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு, கட்டளை அல்லது கட்டளையால் அதிருப்தியுறும் எவரும் முதலாவது சமயத்திலேயே நீதிமன்றத்தின் அனுமதியுடன் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்ய முடியும். **(நீதித்துறைச் சட்டம், பிரிவு 16)**

மேன்முறையீடு செய்வதற்கான அனுமதிகோரும் விண்ணப்பம் எந்தக் குற்றத்தீர்ப்புக்கு, தண்டனைத் தீர்ப்புக்கு அல்லது கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்ய நாடப்படுகிறதோ அந்தக் குற்றத்தீர்ப்பு, தண்டனைத் தீர்ப்பு அல்லது கட்டளை மொழியப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் மேல்நீதிமன்றப் பதிவாளருக்கு விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் செய்யப்படலாம் என்பதுடன் 331 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்கான காப்பு வாசகத்தின் ஏற்பாடுகளும் அப்பிரிவின் (2)இ (3) மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளும் ஏற்ற மாற்றங்களுடன் அத்தகைய விண்ணப்பத்திற்கு ஏற்புடையதாதல் வேண்டும். **(குற்றவியல் நடவடிக்கைக் கோவை, பிரிவு 340)**

மேன்முறையீட்டுக்கான அனுமதிகோரும் விண்ணப்பத்தின் மீது மேன்முறையீட்டு நீதிமன்றம் (அ) அத்தகைய அனுமதியை வழங்கலாம்; அல்லது (ஆ) விண்ணப்பத்தை நிராகரிக்கலாம் என குற்றவியல் நடவடிக்கைக் கோவை பிரிவு 341 குறிப்பிடுகிறது.

மேன்முறையீட்டுக்கான அனுமதிகோரும் விண்ணப்பத்தின் மீது மேன்முறையீட்டுக்கான அனுமதி வழங்கப்படுவதன் மேல் மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர் மேன்முறையீட்டுக்கு

அவ்வாறு அறிவித்தல் வேண்டும். அதன் பின்னர் 333 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் அத்தகைய விண்ணப்பத்திற்கு ஏற்புடையதாதல் வேண்டும். **(குற்றவியல் நடவடிக்கைக் கோவை, பிரிவு 342)**

### [11.2.6] உயர் நீதிமன்றத்திற்கான மேன்முறையீடு

அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் பிரகாரமாகவும் ஏதும் தீர்ப்பிலிருந்தான ஏனைய சட்டங்கள் அல்லது மேல்நீதிமன்றம் அல்லது நீதிவான் நீதிமன்றத்திலிருந்தான ஏதும் மேன்முறையீடு நீதிமன்றத்தின் கட்டளை தொடர்பிலும் உயர்நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யும் ஒரு உரிமை உள்ளது. **(நீதித்துறைச்சட்டம், பிரிவு 37)**

*படகல மெனிகே எதிர் சட்டமாஅதிபர் (உயர் நீதிமன்ற வழக்கு* ***SC (SPL) LA 57/2015)***

*இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 128 இன் பிரகாரம் மேன்முறையீடு செய்வதற்கான விசேட அனுமதிக்கான ஒரு விண்ணப்பமாக இது இருந்தது. விண்ணப்பதாரியானவர் ஒரு கொலைக்குற்றம் சாட்டப்பட்டு மரணத் தீர்ப்பு அளிக்கப்பட்டிருந்தார். மேன்முறையீட்டின் மீது அவரது குற்றச் சாட்டுகையும் தண்டனையும் ஒரு பக்கம் வைக்கப்பட்டு, குற்றச்சாட்டத்தகு மனிதக்கொலை ஆக்கப்பட்டு 15 ஆண்டுகள் மறியற்தண்டனை என ஆக்கப்பட்டது. மேன்முறையீட்டாளரின் மேன்முறையீடு தீர்மானத்திற்காக காத்திருக்கும் நேரத்தில் பிணையில் விடப்படுவதுடன் மேன்முறையீட்டாளர் காவலில் இருக்கும் காலமானது தண்டனையின் கீழான மறியற்காலத்தின் எந்தப் பாகமாகவும் கருதப்படாது என்று நீதிமன்றம் கருத்துக் கொண்டிருந்தது.*

*சட்டமா அதிபர் எதிர் காமினிகே கொல்லா எனப்படும் சிங்கப்புலி தசநாயக்க மற்றும் ஏனையோர் (உயர்நீதிமன்றம்* ***SC (SPL) LA125/2014)***

*1990 ஆம் ஆண்டு மேல் நீதிமன்ற விதி 3 உடன் உடன்படாதது சம்பந்தமாக இலங்கை அரசியலமைப்பின் 128ஆம் உறுப்புரையின் பிரகாரம் மனுச் செய்வதற்கான விசேட அனுமதிக்கான ஒரு விண்ணப்பமாக இது இருந்தது. விதி 3 ஆனது மனுவானது ஒரு தெளிவான மற்றும் சுருக்கமான கூற்றில் எல்லா உயர்நீதிமன்றமானது மேன்முறையீட்டுக்கான விசேட அனுமதி கொடுக்கப்பட வேண்டுமா இல்லையா என உயர்நீதிமன்றம் ஆனது தீர்மானிப்பதற்கு இயலச் செய்யும் தேவையான எல்லா உண்மைகள் மற்றும் விடயங்களைக் கொண்ட தெளிவான ஒரு சுருக்கமான கூற்றொன்றாக மனு இருக்க வேண்டுமென விதி 3 தேவைப்படுத்தியது. கடுமையாக ஒரு விண்ணப்பதாரி தவறும்பொழுது அதனுடன் உடன்படுவதற்கு நியாயமான அளவுக்கு சரி செய்யப்படும் நிலையில் பதிலளிப்பவருக்கு அவ்வாறு செய்கையில் தப்பபிப்பராயம் ஏற்படுத்தாதவகையில் நீதிமன்றமானது அவ் விண்ணப்பத்தை தன்னியக்கமாக நிராகரிக்கப்படுவதை தவிர்க்கும் முகமாக ஒரு விடயத்தின் நியாயமான பார்வையைக் கைக்கொள்வதற்கும் அவ்வாறான தவறுகளைச் சூழவுள்ள சூழமைவுகளை பரிசோதிக்கவும் வேண்டும்.*

## [11.3] நீதித்துறை மீளாய்வு

நீதித்துறை மீளாய்வு என்பது ஒரு சட்டரீதியான செயன்முறையாகும். இதில் அரச அமைப்பு ஒன்றால் செய்யப்பட்ட தீர்ப்பு அல்லது தீர்மானம் ஆனது ஒரு சட்ட நீதிமன்றத்தால் மீளாய்வு செய்யப்படக்கூடியது. சுருக்கமாகச் சொல்வதாயின் நீதித்துறை மீளாய்வு என்பது பொறுப்புக்கூறலுடன் சம்பந்தப்படுகிறது. இது அரச அதிகாரமானது நன்கு நிறுவப்பட்ட நெறிகள் மற்றும் கொள்கைகளின் பிரகாரம் செயற்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதை நாடி நிற்கிறது.

இலங்கையில் அரசியலமைப்பின் 126 வது உறுப்புரையின் பிரகாரம் பின்வருவன உட்பட்ட பல நிலைமைகளில் நீதித்துறை மீளாய்வுக்காக விண்ணப்பிப்பதற்கு சாத்தியம் உள்ளது:

(அ) மனித உரிமை நியமங்கள்
(ஆ) நிர்வாக நீதியின் பொதுக் கொள்கைகள்; மற்றும்/ அல்லது
(இ) பொது நம்பிக்கைப் பொறுப்பு கோட்பாடுகள்.

அரசியலமைப்பின் அத்தியாயம் III இல் முன்வைக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் நியமங்களுக்கு எதிரான நிர்வாக மற்றும் நிறைவேற்று நடவடிக்கைகளை மீளாய்வு செய்வதில் நீதிமன்றங்கள் அவற்றை சமநிலைப்படுத்தல் வேண்டும். அத்தியாயம் III இலுள்ள உரிமைகள்

மீறப்படும் நிலைமையில் உயர்நீதிமன்றத்திற்கு மனுச் செய்வதற்கான உரிமையை பிரஜைகள் கொண்டுள்ளனர்.

பொது நம்பிக்கைப் பொறுப்புக் கோட்பாடானது அரசியலமைப்பின் ஏற்பாடுகளிலிருந்தும் மற்றும் நிறைவேற்று மற்றும் நிர்வாக செயற்பாடுகள் பொதுநன்மை மற்றும் பொதுநோக்கத்தை கொண்டிருக்க வேண்டுமென எடுத்துக்காட்டும் சட்டம் ஒழுங்கு போன்ற ஏனைய அரசியலமைப்புக் கொள்கைகளில் இருந்தும் அதன் சட்டபூர்வத் தனம்மையையும் பலத்தையும் பெற்றுக்கொள்கிறது. அரச உத்தியோகத்தர்கள் அதிகாரங்களை செயற்படுத்துவதில் என்ன நோக்கத்திற்காக அந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளனவோ அவற்றை நிறைவேற்றுவதில் உயர் நியமத்தைக் கொண்டிருக்க வேண்டும். அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வது அரசியலமைப்பின் 3 மற்றும் 4 ஆம் பிரிவுகளுக்கு எதிராகச் செல்லும் இந்த நம்பிக்கையின் ஒரு மீறுகையாக உள்ளது. நிருவாக நீதியின் பொதுக் கொள்கைகளின் கீழ் ஒரு கணிசமான காலப்பகுதியாக நீதிமன்றங்கள் விருத்தி செய்துள்ள மீளாய்வு நியமங்கள் உள்ளன.

நீதியாட்சி இல்லாமை இயற்கை நீதியின் விதிகளின் மீறுகை, தற்றுணிபு அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்தல், பதிவு முகத்தின் மீதான சட்டத்தின் தவறு போன்ற அடிப்படைகளை இது உள்ளடக்கிறது. சட்ட அல்லது நிர்வாக செயற்பாட்டின் நீதித்துறை மீளாய்வானது அரசியல் பின்விளைவுகளைக் கொண்டிருக்கக்கூடியது. அரச முகவராலயம், அரச திணைக்களம், அமைச்சருக்கு எதிராகச் செல்லும் ஒரு தீர்மானமானது அநேகமாக நடைமுறை அரசாங்கத்தின் மீதான பலவீனமாக காட்டப்படுகிறது.

## [12] <u>ஏனைய தொடர்புடைய உள்நாட்டுச் சட்டம்</u>

### [12.1] <u>மரண தண்டனை</u>

ஒருவர் செய்த ஒரு குற்றத்திற்கு தண்டனையாக அரசால் கொலை செய்யப்படும் இவ்வாறான மரண தண்டனையானது அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட ஒரு பழக்கமாகும். இவ்வாறான முறையில் ஒருவர் தண்டிக்கப்படும் தண்டனையானது மரண தண்டனையாக எடுத்தாளப்படுகிறது. அதேவேளையில் அத் தீர்ப்பினை நிறைவேற்றும் செயற்பாடானது ஒரு நிறைவேற்றுகையாக அறியப்படுகிறது. இறப்பால் தண்டிக்கப்படும் குற்றங்களானவை பெரும் குற்றங்கள் அல்லது பெரும் தவறுகள் என அறியப்படுகிறது.

மரண தண்டனையானது இலங்கையில் இன்னும் சட்டரீதியாக இருந்தபோதிலும் அதன் செயற்படுத்துகையானது உண்மையில் இல்லாதொன்றாகவே உள்ளது. இலங்கையின் இறுதி மரண தண்டனை நிறைவேற்றமானது 1976 இல் இடம்பெற்று இருப்பதுடன் 1976 முதல் தூக்கிலிடுவதை அரசாங்கம் நிறுத்தியுள்ளது. மரண தண்டனைக்குரிய சிறைக்கைதிகள் ஆயுள் தண்டனையாக எதிர்காலத்தை மறியற்சாலைகளில் கழிக்கின்றனர்.

#### [12.1.1] <u>இலங்கையில் மரணத்தினால் தண்டிக்கப்படும் குற்றங்களும் குற்றமிழைப்பவர்களும்</u>

குற்றவியல் நடவடிக்கைக் கோவையின் பிரகாரம் மரணத்திற்கு குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்குரிய அத்தண்டனையை அதனை நிறைவேற்றுவதற்கு முன்பதாக குற்றம் சாட்டப்பட்டவர் தனக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படக்கூடாது என்பதற்கான காரணங்களை சமர்ப்பிப்பதற்கு நீதிமன்றம் அனுமதிக்க வேண்டுமென்பதை சட்டத்தரணிகள் இறுதியில் கவனிக்க வேண்டும். நீதிபதியும் சனாதிபதியிடம் மரண தண்டனை பொருத்தமானதா என்பதற்கான ஒரு மதிப்பீட்டுக்காக இவ்விடயத்தை சனாதிபதிக்கு அறிக்கையிடுவதற்காக சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும் ஜனாதிபதி இந்த அறிக்கையை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி அதுவும் இதனை நீதியமைச்சுக்கு முன்வைத்து அவரின் ஆலோசனையுடன் இது அவரின் சிபார்சுகளுடன் ஜனாதிபதிக்கு அவரால் முன்வைக்கப்படுமென அரசியலமைப்பு கூறுகிறது.[28]

பின்வரும் குற்றங்கள் மரண தண்டனையால் தண்டிக்கப்படுகின்றன:

- <u>கொலை</u>: ''கொலையொன்றை மேற்கொள்பவர் மரண தண்டனையால் தண்டிக்கப்படுவர்''[29]
- <u>மரண தண்டனையை ஏற்படுத்தும் ஏனைய குற்றங்கள்</u>: "பிழையான சாட்சியம் ஒன்றின் விளைவாக ஒரு அப்பாவி மனிதன் குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்படுவாராயின் பிழையான சாட்சியத்தை வழங்கிய அந்த ஆள் மரணத்தினால் தண்டிக்கப்படுவார்''[30]
- *''ஒருவர் தற்கொலை செய்வாரானால் தற்கொலை செய்துகொள்ள உதவி செய்தவர் மரண தண்டனை விதிக்கப்படுவார்.''*[31]
- துப்பாக்கியைப் பயன்படுத்தி ஒரு மனிதக்கொலையைச் செய்தவர் சட்ட ரீதியான மரண அல்லது ஆயுள் சிறைத்தண்டனையால் தண்டிக்கப்படுவார்.[32]
- <u>மரணத்தை ஏற்படுத்தாத வன்புணர்வு</u>.[33]

- மரணத்தை ஏற்படுத்தாத கொள்ளை: துப்பாக்கியினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட கொள்ளையானது மரண தண்டனையால் அல்லது ஆயுள் சிறைத்தண்டனையால் தண்டிக்கப்படக்கூடியது.[34]
- மரணத்தை ஏற்படுத்தாத கடத்தல்: துப்பாக்கியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கடத்தல் ஆனது மரண தண்டனையால் அல்லது ஆயுள் தண்டனையால் தண்டிக்கப்படக்கூடியது. இது கடத்தல், மனித வஞ்சக் கடத்தல் மற்றும் ஆட்களை (வேறு நாடுகளுக்கு) கடத்தல் போன்ற குற்றங்களை தாங்கியுள்ளது.[35]
- மரணத்தை ஏற்படுத்தாத போதைப்பொருள் வஞ்சக்கடத்தல்: நஞ்சு, அபின் மற்றும் அபாயகர அவுடதங்கள் கட்டளைச் சட்டத்தின் 54(A-B) பிரிவின் கீழ் ஹெரோயின், கொகொன் மோர்பைன் அல்லது அபின் போன்றவற்றை உற்பத்தி செய்யும் எவரும் மரணம் அல்லது ஆயுள் தண்டனைக்குப் பொருத்தமானவராய் உள்ளனர். அட்டவணை 3 பகுதிகள் II மற்றும் III, இன் கீழ் 500 கிராமுக்கு அதிகமான இவைகளை வஞ்சக்கடத்தல் செய்வோர், இறக்குமதி செய்வோர் அல்லது ஏற்றுமதி செய்வோரானவர்கள் மரணம் அல்லது ஆயுள் சிறையினால் தண்டிக்கப்படக்கூடியதாக உள்ளனர்.[36]
- ஒரு துப்பாக்கியைப் பயன்படுத்தி அக்கட்டளைச் சட்டத்தின் கீழான ஏதும் போதைப்பொருள் தொடர்பான குற்றம் எதுவும் செய்யப்படுவதானது மரண அல்லது ஆயுள் சிறைத்தண்டனையினால் தண்டிக்கப்படக்கூடியது.[37]
- போதைப் பொருளை வைத்திருத்தல்: நஞ்சுகள், அபின், அபாயகர அவுடதங்கள் கட்டளைச்சட்டத்தின் அட்டவணை 3 இன் II மற்றும் III ஆம் பகுதிகளின் கீழ் அப் பண்டங்களின் 500 கிராமுக்கு மேலான தொகையை வைத்திருக்கும் எவரும் மரணம் அல்லது ஆயுள்கால தண்டனையினால் தண்டிக்கப்படக்கூடியவராய் இருப்பர்.[38]
- துப்பாக்கியைப் பயன்படுத்தி அக்கட்டளைச் சட்டத்தின் கீழான ஒரு போதைப் பொருள் குற்றத்தைச் செய்வதானது மரணம் அல்லது ஆயுள்கால தண்டனையினால் தண்டிக்கப்படக்கூடியதாக இருக்கும்.[39]
- இராஜதுரோகம் : —*குடியரசுக்கு எதிராக யுத்தம் செய்பவர் அல்லது அவ்வாறான யுத்தத்தை நடப்பிப்பதற்கு முயற்சிப்பவர் அல்லது அவ்வாறான யுத்தத்தை நடாத்துவதற்கு உதவுபவர் மரணம் அல்லது மறியற் தண்டனையினால் தண்டிக்கப்படுவார்.*[40]
- துப்பாக்கியுடன் அரசுக்கு எதிரான குற்றங்களைச் செய்பவர்கள் மரணம் அல்லது ஆயுள்கால தண்டனையால் தண்டிக்கப்படக்கூடியவராய் இருப்பார்.[41]
- மரணத்தை ஏற்படுத்தாத இராணுவக் குற்றங்கள் : (சிவிலியன்களுக்கு எதிராக) துப்பாக்கியைப் பயன்படுத்தி ஆயுதப்படையினர் செய்யும் குற்றங்கள் மரணம் அல்லது ஆயுள் தண்டனையால் தண்டிக்கப்படக்கூடியதாக இருக்கும்.[42]
- பொதுமக்களுக்குப் பயன்படுத்தப்படக்கூடியவாறாக; குடியரசிலுள்ள இராணுவம், கடற்படையினர் அல்லது ஆகாயப்படையின் ஒரு உத்தியோகத்தர், ஒரு படை வீரர், கடற்படை வீரல், ஆகாயப்படை வீரரினால் செய்யப்படும் ஆட்சிக் கவிழ்ப்புக்கு உதவி செய்யும் எவரும் அவ்வுதவியின் நிமித்தமாக அவ் ஆட்சிக் கவிழ்ப்பு செய்யப்படுமாயின் மரண அல்லது மறியற்தண்டனையால் தண்டிக்கப்படுவர்.[43]
- இராணுவ ஒழுக்கம் அல்லது கடமையை மீறும் வகையில் இராணுவம் அல்லது ஆகாயப்படையின் ஆட்களினால் செய்யப்படும் இராணுவக் குற்றங்கள் —மரணத்தினால் தண்டிக்கப்படக்கூடியவை'' அக்குற்றங்களில் உள்ளடங்குவனவாவன கோழைத்தனம் யுத்தம் போன்ற கட்டளைகளை பொருட்படுத்தாது விடுதல் ஆட்சிக் கவிழ்ப்பு, இராணுவச் சொத்துக்களை அழித்தல், நடவடிக்கை வெற்றிகளை கீழ்நிலைப்படுத்துவதற்காக கணிக்கப்பட்ட செயற்பாடுகள் பிழையான சமிக்ஞைகளைக் கொடுதல், ஏமாற்றுகை, விடுவிப்புக் கொடுத்தல், எதிரிக்கு விடுவிப்பு கோட்பாட்டுச் சொல் அல்லது ஒப்பமிடல் என்பவற்றைக் கொடுத்தல், வேவுபார்த்தல், எதிரிக்கு உதவுதல், சிறைக்கைதியாக எடுத்துச் செல்லப்படின் எதிரிக்கு தன்னார்வமாக சேவையாற்றுதல் அல்லது உதவுதல், [44]
- இலங்கை இராணுவச் சட்டத்திற்கு உட்பட்டுள்ள தனிநபர்கள் இராஜத்துரோகத்திற்காக மரண அல்லது கொலையை பெற்றுக்கொள்ளக்கூடியவராய் உள்ளனர்.[45]

[28] Sri Lanka Code of Criminal Procedure of 1979,arts. 280,286, amended by Act No. 7 of 2006.
[29] Sri Lanka Penal Code of 1885, art. 294-296, amended by Act No. 16 of 2006.
[30] Sri Lanka Penal Code of 1885, art. 294-296, amended by Act No. 16 of 2006.
[31] Sri Lanka Penal Code of 1885, art. 294-296, amended by Act No. 16 of 2006.
[32] Sri Lanka Firearms Ordinance, art. 44(A) & Schedule C, amended by Act No. 22 of 1996.
[33] Sri Lanka Penal Code of 1885, art. 294-296, amended by Act No. 16 of 2006.
[34] Sri Lanka Firearms Ordinance, art. 44(A) & Schedule C, amended by Act No. 22 of 1996.
[35] Sri Lanka Firearms Ordinance, art. 44(A) & Schedule C, amended by Act No. 22 of 1996.
[36] Sri Lanka Poisons, Opium and Dangerous Drugs (Amendment) Act, secs.5, 14, No. 13 of 1984
[37] Sri Lanka Firearms Ordinance, art. 44(A) & Schedule C, amended by Act No. 22 of 1996.
[38] Sri Lanka Poisons, Opium and Dangerous Drugs (Amendment) Act, secs.5, 14, No. 13 of 1984
[39] Sri Lanka Firearms Ordinance, art. 44(A) & Schedule C, amended by Act No. 22 of 1996.
[40] Sri Lanka Penal Code of 1885, art. 294-296, amended by Act No. 16 of 2006.
[41] Sri Lanka Firearms Ordinance, art. 44(A) & Schedule C, amended by Act No. 22 of 1996

- கடற்படையில் உள்ள உத்தியோகத்தர்கள் ‘‘எதிரிக் கடல் கொள்ளைக்காரருடன் அல்லது கிளர்ச்சிக்காரருடன் ஈடுபடுத்துவதற்கு கோழைத்தனம் காரணமாக தவறுவதானது காட்டிக்கொடுக்கும் விதத்தில் தவறியமைக்காக மரண தண்டனையை அல்லது ஏனைய தண்டனைகளை பெற்றுக்கொள்வர். மரணம் அல்லது ஏனைய தண்டனைகளை எதிர்கொள்வர். அத்துடன் அவர்கள் கடலில் பாதுகாப்பதில் தவறியமைக்காக, பாதுகாப்புக்காக நட்டஈட்டைக் கோரியதற்காக அல்லது கடற்கொள்ளையில் ஈடுபடுத்துவதற்காக மரணத்தினால் தண்டிக்கப்படக்கூடியோராயும் உள்ளனர்.[46]
- உளவாளிகள் (கடற்படையின் உறுப்பினரோ அல்லது அல்லாதோரோ) மரண தண்டனையினாலோ அல்லது குறைந்த தண்டனையினாலோ தண்டிக்கப்படக்கூடியோராய் உள்ளனர்.[47]
- இராணுவ ஒழுக்கம் அல்லது கடமையை மீறும் கடற்படை ஆட்களின் குற்றங்களானவை மரணத்தினாலோ அத்துடன் அவர் தனது பதவிநிலையைக் கைவிட்டு விடுதல் (காட்டிக் கொடுத்தல் நிலையில் அல்லது கோழைத்தனத்தில்) ஆட்சிக் கவிழ்ப்பு அல்லது அதனைத் தூண்டுதல், ஆட்சிக் கவிழ்ப்பை தடுக்கத் தவறுதல் (தந்திரமாகவோ அல்லது கோழைத்தனத்தினாலோ) எதிரிக்கு விட்டுவிடுதல் அல்லது சட்டத்திற்கு மாறான போருக்குப் பயனப்டாத சொத்துக்களை சட்டத்திற்கு மாறாக எரித்து விடுதல், போன்றன உள்ளடங்கியவையும் மரணத்தால் தண்டிக்கப்படக்கூடியவை அவ்வாறான சமயங்களில் காட்டிக்கொடுப்பவர்களின் செயற்பாடுகள் மரணத்தினால் தண்டிக்கப்படும்.[48]
- ஆட்சிக் கவிழ்ப்புக் குற்றங்கள் மற்றும் கொலை என்பன மரணத்தினால் தண்டிக்கப்படும்.[49]
- துப்பாக்கியைப் பயன்படுத்திக் கப்பம் கேட்டல் மரணம் அல்லது மறியற்கால தண்டனையால் தண்டிக்கப்படக்கூடியது.[50]
- துப்பாக்கியைப் பயன்படுத்தி தீங்கு விளைவித்தல் மரணம் அல்லது ஆயுட்கால மறியற்தண்டனையால் தண்டிக்கப்படக்கூடியது.[51]
- துப்பாக்கியைப் பயன்படுத்தி ஒரு அரச உத்தியோகத்தரைத் தாக்குதல் அல்லது குற்றவியல் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துதல் அல்லது பாலியல் தன்மை வாய்ந்த தாக்குதல் அல்லது களவு எடுத்தல் என்பன மரணம் அல்லது ஆயுட்கால மறியற்தண்டனையால் தண்டிக்கப்படக்கூடியவையாகும்.[52]
- துப்பாக்கியைப் பயன்படுத்தி கொலை செய்ய முயற்சித்தல் அல்லது அவ்வாறு செயற்பட முயற்சித்தல் குற்றத்திற்குரிய மனிதக்கொலையாக எடுக்கப்பட்டு மரண அல்லது ஆயுட்கால மறியற்தண்டனையால் தண்டிக்கப்படக்கூடியது.[53] மற்றும்
- துப்பாக்கியைப் பயன்படுத்தி மனித வஞ்சக்கடத்தல் குற்றங்களைச் செய்தல், மரண அல்லது ஆயுட்கால சிறை என்பவற்றால் தண்டிக்கப்படக்கூடியது.[54]

### [12.1.2] மறியற்தண்டனையிலிருந்து விலக்கப்பட்ட குற்றமிழைத்தவர்களின் வகைப்பாடுகள்

#### [12.1.2.1] குற்றத்தைச் செய்யும் நேரத்தில் 18 வயதிற்குக் குறைவான தனிநபர்கள்

மரண தண்டனையானது நீதிமன்றத்தின் கருத்துப்படி 18 வயதிற்கும் குறைந்தவர்கள் என அதனால் உச்சரிக்கப்படும் எந்த ஆளின் மீதும் விதிக்கப்படலாகாது. ஆனாலும் அந்த தண்டனைக்குப் பதிலாக தடுத்து வைக்கும் தீர்ப்பைக் கொடுக்கும்.[55]

சிவில், தனியார் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயம் (ICCPR) மற்றும் சிறுவர் உரிமைகள் சமவாயம் (CRC) போன்றவை மரண தண்டனை நிறைவேற்றுகையை தடைசெய்யும் அமைப்புகளாகும் என்பதுடன் அவற்றுடன் இலங்கை ஒரு பங்காளியாக இருக்கின்றது.

#### [12.1.2.2] கர்ப்பிணிப் பெண்கள்

*குற்றவியல் நடவடிக்கைக் கோவை பிரிவு 282 இன் ஏற்பாடுகளின் பிரகாரம், காணப்படும் எந்தப் பெண்ணும் அவர் குற்றம் சாட்டப்பட்டு குற்றவாளியாக காணப்படும் நேரத்தில் கர்ப்பிணியாக இருக்கும் போது அவருக்கு எதிராக மரண தண்டனைக் உச்சரிக்கப்படவோ அல்லது பதிவு செய்யப்படவோ மாட்டாது என தண்டனைக் கோவை வழங்குகிறது. ஆனால் அந்த தண்டனைக்குப் பதிலாக நீதிமன்றமானது ஆயுட்கால அல்லது ஏதாவது காலப்பகுதிக்கான மறியற்தண்டனையை நீதிமன்றம் அவருக்கு வழங்கும்.*[56]

ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டவாறாக இலங்கையானது இவ்வாறான நிறைவேற்றுகையை தடுக்கும் சர்வதேச சமவாயம் அமைப்புடன் (ICCPR) இலங்கை ஒரு தரப்பாக உள்ளது.

### [12.1.2.3] புலமை ரீதியாக இயலாதோர்

ஒரு நீதி விசாரணையின்பொழுது தம்மைத்தாமே பாதுகாத்தக்கொள்வதற்கு புலமை ரீதியாக இயலாத ஆட்களினை ஓரளவுக்கு குற்றவியல் நடவடிக்கைக் கோவை பாதுகாக்கிறது:

> *—குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் பித்துப்பிடித்தவராக இல்லாதிருந்தும் நடவடிக்கைகளை விளங்கிக்கொள்ள முடியாதிருப்பின் விடயத்திற்கு ஏற்றவாறு நீதிவான் நீதிமன்றம் அல்லது மேல் நீதிமன்றம் விசாரணையினை அல்லது விளக்கத்தினைத் தொடர்ந்து நடத்தலாம் என்பதுடன், அத்தகைய விசாரணையின் பிரகாரம் பாரப்படுத்தப்படின் அத்தகைய விளக்கத்தின் விளைவாக குற்றத்தீர்ப்பொன்று அளிக்கப்படின் வழக்கின் சூழ்நிலைகள் பற்றிய அறிக்கையொன்றுடன் வழக்கு நடவடிக்கைக் குறிப்புகள் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அனுப்பப்படுதலும் வேண்டும். அத்துடன் அதன் மீது நீதிமன்றம் அது தகுதியானது எனக் கருதுகின்றவாறு அத்தகைய கட்டளையை ஆக்குதல் வேண்டும்..*[57]

### [12.1.2.4] மன நோயாளி

குறித்த செயல் புரியப்பட்ட போது சித்த சுவாதீனமின்மை காரணமாக அச் செயலின் தன்மையை அது பிழையானதா அல்லது சட்டத்திற்கு முரணானதா எனத் தெரிந்து கொள்ளவதற்கு ஏது இல்லாதவராக இருந்துள்ளார் என தோன்றினால் அதுவும் குற்றமாகாது என தண்டனைக் கோவை தீர்மானிக்கிறது.[58]

## [12.2] பயங்கரவாத தடுப்புச் சட்டம்

### [12.2.1] பொதுவானது

பயங்கரவாத தடைச்சட்டமானது பொலிசாருக்கு சந்தேக நபரக்ளைத் தேடுவதற்கு, கைது செய்வதற்கு, தடுத்துவைப்பதற்கு பரந்துபட்ட அதிகாரங்களை வழங்குகிறது. இச்சட்டத்தின் முக்கியமான நோக்கம் அதிருப்தியாளர்களை அடக்குவதாகும்.

### [12.2.2] சட்டத்தின் முக்கிய மனித உரிமை பிரச்சினைகளும் அதன் அமுல்படுத்தலும்

குற்றம் சாட்டப்பட்டவரால் எந்நேரத்திலும் செய்யப்பட்ட ஏதும் கூற்றுக்களை சான்றாக நீதிமன்றங்கள் எடுக்க பயங்கரவாதச் சட்டம் அனுமதிக்கிறது. சித்திரவதை மூலம் பெறப்பட்ட ஒப்புதல் வாக்கு மூலங்களுக்கும் எந்த விதிவிலக்கையும் அது வழங்கவில்லை.[59] சுமார் 70 – 130 தனிநபர்கள் பயங்கரவாத தடைச்சட்டக் கைதின் நிமித்தமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என மதிப்பிடப்பட்டிருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.[60]

சித்திரவதையானது நாடு பூராகவும் பரவலாகக் காணப்படுவதாகவும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழான குற்றங்களுடன் குற்றம் சாட்டப்பட்டோர் உட்பட்டோருடனும் இது காணப்படுவதாகவும் மனித உரிமைகள் நிறுவனங்களின் நேர்காணல்கள் கண்டுகொண்டுள்ளன. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள், 2009 இல் யுத்தம் முடிவடைந்த பிறகு கைது செய்யப்பட்டோர் போன்றோர், சித்திரவதை, பிழையான நடத்துகை, நிர்ப்பந்திக்கப்பட்ட ஒப்புதல் வாக்கு மூலங்கள், குடும்ப உறுப்பினர்கள் அல்லது சட்டத்தரணிகளை சென்டைதல் போன்ற அடிப்படை உரிமைகள் மறுப்பு உட்பட்ட விடயங்களைத் தெரிவித்துள்ளனர்.[61]

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுப்பு வைப்புகளுக்கு சவால்விடும் இயலுமையானது குறிப்பாக வரையறையாக உள்ளது. தடுத்து வைத்திருக்கப்படுபவர்கள் குற்றம் சாட்டப்படாமலே 18 மாதம் வரைக்கும் தடுத்து வைத்திருக்கப்படலாம். ஆனால் நடைமுறையில் அதிகாரிகள் நீண்டகாலமாக ப.த.சட்டம் (PTA) யின் கீழ் தடுத்து வைத்திருக்கிறார்கள்.[62]

[42] Sri Lanka Firearms Ordinance, art. 44(A) & Schedule C, amended by Act No. 22 of 1996.
[43] Sri Lanka Penal Code of 1885, art. 294-296, amended by Act No. 16 of 2006.
[44] Sri Lanka Air Force Act of 1949, arts. 95,97,98,131,(1-2), amended by Act No. 9 of 1993; Sri Lanka Army Act of 1949, arts. 95,97,98,131 (1-2) amended by Act No. 10 of 1993.
[45] Sri Lanka Air Force Act of 1949, arts. 95,97,98,131,(1-2), amended by Act No. 9 of 1993; Sri Lanka Army Act of 1949, arts. 95,97,98,131 (1-2) amended by Act No. 10 of 1993.
[46] Sri Lanka Navy Act of 1950, arts. 54,55,92, amended by Act No. 53 of 1993.
[47] Sri Lanka Navy Act of 1950, arts. 54,55,92, amended by Act No. 53 of 1993.
[48] Sri Lanka Navy Act of 1950, arts. 54,55,92, amended by Act No. 53 of 1993.
[49] Sri Lanka Air Force Act of 1949, arts. 95,97,98,131,(1-2), amended by Act No. 9 of 1993; Sri Lanka Army Act of 1949, arts. 95,97,98,131 (1-2) amended by Act No. 10 of 1993.
[50] Sri Lanka Firearms Ordinance, art. 44(A) & Schedule C, amended by Act No. 22 of 1996.
[51] Sri Lanka Firearms Ordinance, art. 44(A) & Schedule C, amended by Act No. 22 of 1996.
[52] Sri Lanka Firearms Ordinance, art. 44(A) & Schedule C, amended by Act No. 22 of 1996.
[53] Sri Lanka Firearms Ordinance, art. 44(A) & Schedule C, amended by Act No. 22 of 1996.
[54] Sri Lanka Firearms Ordinance, art. 44(A) & Schedule C, amended by Act No. 22 of 1996. Sri Lanka Penal Code of 1885, art. 350-360, amended by Act No. 16 of 2006.
[55] Sri Lanka Penal Code of 1885, art. 294-296, amended by Act No. 16 of 2006.
[56] Sri Lanka Penal Code of 1885, art. 294-296, amended by Act No. 16 of 2006.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைத்திருக்கும் ஆட்களை பிணையில் விடுவதற்கு அதிகாரமளிப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரத்தை நீதிபதிகள் வேண்டி நிற்கிறார்கள். இதனை சாதாரணமாக அந்த அலுவலகம் வழங்குவதில்லை.[63]

வழக்கு விசாணைக்கு முந்தியதாக தடுத்து வைத்திருக்கும் அத்துடன் பொலிஸ் விசாரணை பூர்த்தி செய்வதற்காக 81 பேர் காத்திருப்பதுடன், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழான குற்றங்களுக்கான குற்றச்சாட்டுக்களை சட்டமாஅதிபர் திணைக்களத்தின், தாக்கல் செய்யும் வரையில் சுமார் 70 பேர் ஐந்து வருடங்களுக்கு மேலாகவும், 12 பேர் பத்து வருடங்களுக்கு மேலாகவும் விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக அறிக்கையிட்ட மனித உரிமைகள் ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு மற்றும் அடிப்படைச் சுதந்திரம் மீதான ஐநாவின் விசேட அறிக்கையாளர் 2017 ஆம் ஆண்டில் அறிக்கையிட்டார்.[64]

இலங்கையில் பொதுவாக உள்ள சட்டமானது அதிகாரிகள் கைது செய்யப்பட்ட ஆளின் கைதுக்கான காரணத்தை அறிவிக்கும் படி வேண்டி நிற்பதுடன் அந்த ஆள் பற்றிய ஏற்பாடுகளானவை சிறு குற்றங்கள் தொடர்பில் 24 மணித்தியாலங்களுக்குள் நீதிவானுக்கு அறிவிக்கப்பட வேண்டும். (கடும் குற்றங்களுக்கு 48 மணித்தியாலங்கள்) பயங்கரவாத தடைச்சட்டத்தின் நோக்கங்களில் இது 72 மணித்தியாலங்களாக இருப்பதுடன் பல சந்தர்ப்பங்களில் குறிப்பாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ்வரும் விடயங்களில் தடுத்து வைக்கப்படுவார்கள் இதைவிடவும் கூடிய காலம் அவ்வாறு வைக்கப்பட்டதன் பின்பே கொண்டுவரப்படுகின்றார்கள் எனவும் அறிக்கையிடப்பட்டுள்ளது..[65]

## [12.3] காணாமற்போன ஆட்கள் மீதான அலுவலகச் சட்டம் (இல. 14 of 2016)

காணாமற்போனோர் மீதான அலுவலகம் (OMP) என்பது காணமற்போவதை முடிவுக்கு கொண்டு வருவதற்கும் குடும்பங்களின் துன்பங்களைக் கவனிப்பதற்கும், நாட்டுக்கு உதவுவதற்கான ஒரு தேசிய பொறிமுறையாகும். கா.ஆ. (OMP) ஆனது இரண்டு சதிப்புரட்சிகள் மற்றும் 26 வருட சிவில் யுத்ததின்பொழுது பலவந்தமாக காணாமற் செய்யப்பட்ட ஆட்களின் விடங்களை விசாரித்து அடியொற்றிக் கண்டுபிடிப்பதற்கு வலுவூட்டப்பட்டிருப்பதாகும். கா.ஆ. (OMP) யினது இலங்கைப் பாராளுமன்றத்திற்கும் காணாமற்போன ஆட்களின் குடும்பங்களுக்கும் அறிக்கையிடும் ஒரு சுயாதீன அமைப்பாகும்.

### [12.3.1] கா.போ. அலுவலகத்திற்கான (OMP) ஆணை

கா.போ. (OMP) ஆனது காணாமற்போன ஆட்களைக் தேடிக் கண்டுபிடிப்பதற்கும் அந்த ஆட்கள் காணாமற்போன சூழ்நிலைகளைத் தெளிவுபடுத்துவதற்கும், அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை விளக்குவதற்கும், காணாமற்போன ஆட்கள் குறித்த சம்பவங்களை தீர்த்து வைப்பதை நோக்கி சிபாரிசுகளைச் செய்வதற்கும், காணாமற்போன ஆட்களின் உரிமைகளை விருப்புக்களைப் பாதுகாப்பதற்கும், காணாமற்போனவர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களின் குறை தீர்க்கும் வழிகளைக் கண்டுபிடிப்பதற்கும், காணாமற்போன ஆட்கள் தொடர்பாக ஏனைய நிறுவனங்கள், அமைப்புக்கள், அரச திணைக்களங்கள் மற்றும் விசாரணை ஆணைக்குழுக்களினால் மேற்கொள்ளப்பட்டவைகள் தொடர்பான தரவுகளைச் சேகரிப்பது என்பவற்றுக்குமான ஆணையை பெற்றுள்ளது.

### [12.3.2] கா.போ. அலுவலகத்தின் (OMP) அதிகாரம்

காணாமற்போன ஆட்களின் உறவினர் அல்லது வேறு ஏதேனும் ஆட்கள் அல்லது கா.போ.அலுவலகம் (OMP) நிறுவனங்களில் இருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் விசாரணை செய்வதற்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது. ஒரு விசாரணையைத் தொடக்குவதற்கும் மற்றும்/ அல்லது விசாரணை ஆணைக்குழுக்களினால் முன்பு பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அல்லது கா.போ.அலுவலகத்திற்கு (OMP) க்கு செய்யப்பட்ட ஒரு முறைப்பாடு தொடர்பாக காணாமற்போன சூழ்நிலைகள் மற்றும்/ அல்லது இடங்கள் குறித்து விசாரணைகளை ஆரம்பிப்பதற்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது. கா.போ.அலுவலகமானது (OMP) ஆனது கூற்றுக்களைப் பெற்றுக்கொள்வதன் மூலம் காணாமற்போன ஆட்களின் விடயங்களை விசாரிப்பதற்கான எல்லாப் படிநிலைகளையும் எடுப்பதுடன் சாட்சிகளைப் பரிசோதித்தல், இலங்கையில் வாழும் ஆட்களை அழைத்தல் சிவில் அல்லது குற்றவியல் செயன்முறைகளுக்கு ஏற்றுக்கொள்ள முடியாதிருக்கும் ஏதும் கூற்றுக்கள் அல்லது சாதனங்களை ஏற்றுக்கொள்ளுதல், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் தனிப்பட்ட பாதுகாப்பை உறுதிப்படுத்தவதற்கு இரகசியத் தகவல்களை ஏற்றுக்கொள்வதற்கான செயன்முறைகளை நிறுவுதல், சந்தேகப்படும் கல்லறைப்பகுதிகளின் அகழ்ந்தெடுப்புக்களை மேற்கொள்ளுவதற்கான கட்டளைகளுக்காக உரிய நீதிவான் நீதிமன்றங்களுக்கு விண்ணப்பித்தல், ஒருவர் தடுத்து வைத்திருப்பதாகச் சந்தேகிக்கப்படும் அல்லது

முன்பு தடுத்து வைத்திருப்பதாக சந்தேகிக்கப்படும் சிறைச்சாலைகள் அல்லது பொலிஸ்நிலையங்கள் அல்லது தடுப்பு இடங்கள் எதற்கும் உத்தரவாதம் அல்லது விசாரணையின்றி நுழைவதற்கு கா.போ.அலுவலகத்தின் (OMP) யின் விசேடித்த உத்தியோகத்தர்களுக்கு அதிகாரம் அளித்தல், சான்றுகளுடன் தொடர்பு கொள்ளுவதற்கு சந்தேகிக்ககூடிய இடங்களைத் தேடுவதற்கு தேடுதல் கட்டளைக்காக ஒரு விண்ணப்பத்தைச் செய்தல் என்பவற்றுக்கான எல்லா அவசிய நடவடிக்கைகளையும் கா.போ.அலுவலகம் (OMP) எடுக்கும்.

தண்டனைச் சட்டக் கோவைக்கு அல்லது வேறு ஏதும் சட்டத்திற்குள்ளாக குற்றமிழைக்கப்பட்டுள்ளதாக கா.போ.அலுவலகத்திற்கு (OMP) தோன்றும் போது அது பூர்த்தி செய்யப்பட்டு உரிய அமுலாக்கல் அல்லது ஒரு வழக்குத்தொடுக்கும் அதிகாரசபைக்கு அறிக்கை பூர்த்தி செய்யப்பட்டு வழங்கப்படும்.

### [12.3.3] கா.போ.அலுவலகம் (OMP) யின் தொழிற்பாடுகளும் கடமைகளும்

எவருடன் முறைப்பாடு தொடர்புபடுகிறதோ அந்த ஆள் காணாமற்போன ஆள் என்று கா.போ.அலுவலகம் (OMP) முடிவுக்கு வருவதற்கு போதிய ஏதுக்கள் இருக்கும்போது அந்த காணாமற்போன ஆளின் உறவினர்களுக்கு ஒரு இடைக்கால அறிக்கையை விடுக்கும் என்பதுடன் ஒரு மரணச்சான்றிதழை அல்லது இல்லாதிருக்கும் (Certificate of Absence) சான்றிதழ் ஒன்றை வெளியிடுவதற்கு பதிவாளர் நாயகத்தை இயலச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

கா.போ.அலுவலகம் (OMP) ஆனது நிர்வாக உதவியை வசதிப்படுத்தி அல்லது வழங்கிவரும் என்பதுடன் உளவியல் சமூகமைய ஆதரவு தேவைப்படும் இடங்களில் நலனோம்பல் சேவைகள் என்பவற்றை காணாமற்போன ஆட்களின் உறவினர்களுக்கும் வழங்குகின்றது. அத்துடன் காணாமற்போன ஆட்கள் மற்றும்/ உறவினர்களுக்கு நட்டஈடுகளை வழங்குவதற்கு உரிய அதிகாரிகளுக்கு சிபார்சு செய்யும், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கான பாதுகாப்பு முறையொன்றை விருத்தி செய்வதற்கும் அமுல்படுத்துவதற்கும் மற்றும் காணாமற்போன ஆட்களின் குறிப்புக்கள் உட்பட்டவற்றுக்கான ஒரு தரவுத்தளத்தை உருவாக்கிப் பேணுதல், விடயங்கள் தொடர்பில் ஒரு பொது விழிப்புணர்வை உருவாக்குதல், பொருளாதார, உளவியல் - சமூக, சட்ட மற்றும் நிருவாக ஆதரவுக்கு அவர்கள் சென்றடைவதை வசதிப்படுத்தலும் காணாமற்போன ஆட்களின் சம்பவங்கள் மற்றும் விளைவுகள் காரணங்கள் என்பவற்றின் பொது விழிப்புணர்வை ஏற்படுத்துதல் என்பனவற்றை கா.போ.அலுவலகம் (OMP) வழங்கும்.

### [12.3.4] தேடிச் செல்லும் அலகும் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகள் என்போரைப் பாதுகாப்பதும்

கா.போ.அலுவலகம் (OMP) யில் ஒரு தேடிச் செல்லும் அலகு இருக்கும். அது காணாமற்போன ஆட்களை தேடிச் செல்லல் மற்றும் தேடுதலுக்குப் பொறுப்பாக இருக்குமென்பதுடன் உரிய தொழில்நுட்ப மற்றும் தடயவியல் நிபுணர்கள் உட்பட தகைமை வாய்ந்த அனுபவமுள்ள விசாரணையாளர்களையும் உள்ளடக்கியிருக்கும்.

பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகள் பாதுகாப்பு பிரிவும் அதில் இருக்குமென்பதுடன் அது பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் காணாமற்போன உறவினர்கள் சாட்சிகள் என்போரின் தேவைகள் மற்றும் அக்கறைகளைக் கவனிப்பதுடன் உரிமைகளையும் பாதுகாக்கும்

[57] Sri Lanka Code of Criminal Procedure of 1979, art. 262, amended by Act No. 7 of 2006.
[58] Sri Lanka Code of Criminal Procedure of 1979, art. 338, amended by Act No. 7 of 2006.
[59] "Country Reports on Human Rights Practices for 2017." *United States Department of State*, Bureau of Democracy, Human Rights and Labor, https://www.state.gov/documents/organization/277537.pdf.
[60] "Country Reports on Human Rights Practices for 2017." *United States Department of State*, Bureau of Democracy, Human Rights and Labor, https://www.state.gov/documents/organization/277537.pdf.
[61] "Country Reports on Human Rights Practices for 2017." *United States Department of State*, Bureau of Democracy, Human Rights and Labor, https://www.state.gov/documents/organization/277537.pdf.
[62] "Country Reports on Human Rights Practices for 2017." *United States Department of State*, Bureau of Democracy, Human Rights and Labor, https://www.state.gov/documents/organization/277537.pdf.
[63] "Country Reports on Human Rights Practices for 2017." *United States Department of State*, Bureau of Democracy, Human Rights and Labor, https://www.state.gov/documents/organization/277537.pdf.
[64] "Country Reports on Human Rights Practices for 2017." *United States Department of State*, Bureau of Democracy, Human Rights and Labor, https://www.state.gov/documents/organization/277537.pdf.
[65] "Country Reports on Human Rights Practices for 2017." *United States Department of State*, Bureau of Democracy, Human Rights and Labor, https://www.state.gov/documents/organization/277537.pdf.

### [12.4] இறப்புப்பதிவு (தற்காலிக ஏற்பாடுகள் திருத்த) சட்டம் (இல 16 of 2016)

2016 ஜுனில் இறப்புக்களை பதிவதற்கான (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தில் கொண்டுவரப்பட்ட திருத்தம் ஊடாக காணாமல் போனோருக்கான அத்தாட்சிப் பத்திரங்களை வழங்குவதற்கு அரசாங்கத்திற்கு வழி ஏற்பட்டது. காணாமல் போனோர் பற்றிய தகவல்கள் வெளிவரும் பட்சத்தில் இது இரண்டு வருடங்களுக்கு செல்லுபடியாக இருக்கும். இரண்டு வருடங்களுக்குப் பிற்பாடும் எந்த தகவலும் கண்டுகொள்ளப்படாது விடின் உறவினர்கள் இதனை நீடிக்கச் செய்து ஒரு இறப்புச் சாட்சிப்பத்திரத்திற்கு விண்ணப்பிக்கலாம் அல்லது இந்த காணாமற்போன சான்றுப்பத்திரத்தை இரத்துச்செய்து கொள்ளலாம்.

2016, இல் ஜனாதிபதி மைத்தரிபால சிறிசேன சிவில் யுத்தத்தின் போது காணாமற்போன 65,000 க்கு மேற்பட்ட உறவினர்களுக்கு காணாமற்போன சான்றுப்பத்திரங்களை வழங்குவதற்கு இணங்கி அவர்களை அரசாங்க நலனோம்பல் திட்டங்களுக்கு விண்ணப்பிக்கவும், அவர்களது சிறுவர்களுக்கு பாதுகாவலர் ஏற்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும், காணாமற்போன ஆட்களின் சொத்துக்களை தற்காலிகமாக முகாமைத்துவம் செய்ய அனுமதிக்கும் சாட்சிப்பத்திரங்களை வழங்குவதற்கும் இணங்கினார்.

### [12.5] தகவல் அறியும் உரிமைச் சட்ட (இல . 12 of 2016)

அரசின் தொழிற்பாடுகள் பொது நிதியைப் பயன்படுத்தி நிறுவப்பட்டுள்ளமையினால் மக்கள் தகவல் அறிந்து கொள்வதற்கான உரிமையைக் கொண்டுள்ளார்கள். மக்களின் வரிப்பணத்தினாலேயே அரச மற்றும் பொதுநிறுவனங்கள் பேணப்படுகின்றன என்ற அடிப்படையில் 2016 இல் தகவல் அறியும் உரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

காணாமற்போன ஆட்களின் விதியைக் கண்டுபிடிப்பதற்கு இந்தச் சட்டம் பயனப்டுத்தப்படக்கூடியது. எவ்வாறாயினும் யுத்தம் பற்றிய தகவல்களானவை தேசிய பாதுகாப்பு என்ற அடிப்படையில் மறுக்கப்படக்கூடும்.

### [12.6] பலவந்தமாக காணாலாக்கல் செய்வதிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச சமவாயச் சட்டம் (இல. 5 of 2018)

பலவந்தமாக காணாமல் செய்யப்படுவதிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச சமவாயம் என்பது பலவந்தமாக காணாமலாக்கச் செய்யப்பட்டவர்களின் நீதிக்கும், அவர்களுக்கான நட்டஈட்டுக்குமான உரிமையை உறுதிப்படுத்துவதற்கானதாகும். இச்சட்டமானது, இலங்கையின் எல்லாப் பிரசைகளினதும் காணாமலாக்கப்படுதல் அல்லது கடத்தல் என்பவற்றில் பாதிக்கப்படும் அச்சமில்லாமல் வாழுவதற்கான சுதந்திரத்தை வழங்குகிறது. இந்தச் சட்டமானது, கடந்த காலத்தை அளாவிய நடவடிக்கையைக் கொண்டிராது இருப்பதுடன் 2018 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட காணாமற் போகச் செய்தவைகள் தொடர்பான குற்றச்சாட்டுகள் தொடர்பில் மாத்திரமே பிரயோகிக்க முடியும்.

## [13] ஏனைய குற்றவியல் நீதிச் செயற்பாட்டாளர்கள்

### [13.1] பொதுவானது

பிரதிவாதிச் சட்டத்தரணிகள் தனிநபர் தரப்பினரை தீவிரமாக பாதுகாக்க வேண்டும். இந்தக் கடமையின் ஒரு ஒன்றிணைந்த கூறாக இருப்பது, ஏனைய குற்றவியல் நீதிமுறைச் செயற்பாட்டாளர்களுடன் கூட்டிணைந்து பணியாற்றுவதாகும். வெளிப்படையானதும் சட்ட உறுதித்தன்மை, சட்டத்தின் நீதியில் இருந்து தப்ப முடியாத்தன்மை, நீதித்துறை சுயாதீனம் போன்ற கொள்கைகள், சட்டம் ஒழுங்கு, மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியனவற்றின் குற்றவியல் நீதி முறைமையை கட்டியெழுப்புவதையும் பலப்படுத்துவதையும் இது மேற்கொள்ளும்.

ஏனைய நியாயாதிக்கங்களில் உள்ளது போன்றே, எதிர்தரப்பு சட்டத்தரணியானவர் இலங்கையில் கிரமமான அடிப்படையில் எதிர்நோக்கும் குற்றவியல் நீதித்துறைசார் பங்காளர்களுக்குள் கீழ் வருவோரும் அடங்குவர்.

### [13.2] நீதிபதிகள்

நீதிபதிகளின் அடிப்படை வகிபங்கும் பொறுப்பும் தேசிய சடடம் மற்றும் சர்வதேச சட்டம் உட்பட்டவற்றை அவை உள்நாட்டுச் சட்டவாக்கத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கையில் சர்வதேச

சட்டங்கள் உட்பட்டவற்றையும் மேல்நிலைப்படுத்துவதாகும். நீதிபதிகள் நீதி நிர்வாகத்தில் சுயாதீனமாகவும் நடுநிலையாகவும் தலைமை வகிக்க வேண்டும்.

தனிநபர்ளுக்கும் அரசுக்கும் இடையிலான குற்றம் அல்லது குற்றமற்ற தனம்மயை அல்லது நற்பேறுகளின் உரிமை கோரல்களை அளவிடுகையில் குற்றம் மற்றும் அப்பாவித்தன்மையைத் தீர்மானிக்கையில் நீதிபதிகள் ஒவ்வொரு தரப்பினது நிலைப்பாட்டின் நிகழ்வுகளையும் பேறுகளையும் மாத்திரம் எடுத்துக்கொள்ளாமல் ஆனால் உரியதும் பிரயோகிக்கக்கூடியதுமான சட்டங்களையும் பார்க்க வேண்டும்.

அநேகமாக பொதுச்சட்ட நியாயாதிக்கங்களில் நீதிபதிகள் சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகளிலும் (மேன்முறையீடுகள் உட்பட) மேல் நீதிமன்றங்களிலும் தலைமை வகிப்பர். இதன் அர்த்தம் நீதிபதிகள் வழமையாக மேல் நீதிமன்றங்களிலும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களிலும் உயர் நீதிமன்றம் மற்றும்/ அல்லது அரசியலமைப்பு நீதிமன்றங்களிலும் ஒரு குறித்த நாட்டில் தலைமை வகிப்பர் என வழமையாக நீதி வழங்குவர் என்பதாகும்.

பிரதிவாதிகள், சாட்சிகள் பாதிக்கப்பட்டவர்கள் என்போர் நியாயமாக நடத்தப்படுவதை உறுதிப்படுத்துவதும் ஒரு குற்றத்தை செய்ததாக குற்றம் சாட்டப்படுபவர் நியாயமான விசாரணையைப் பெற்றுக்கொள்வதும் உறுதிப்படுத்துவதும் நீதிபதியின் பொறுப்பாகும். ஒரு நியாயமான விசாரணைக்கான உரிமையானது எல்லா நேரங்களிலும் குற்றம் சாட்டப்பட்டவரின் உரிமைகள் மதிக்கப்படுவதையும் சரியான முறையில் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகள் மாத்திரம் நீதிமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை உறுதிப்படுத்துவதிலும் தங்கியுள்ளது. நியாயமான விசாரணையை உறுதிப்படுத்துவதில் நீதிபதிகள் சுலபமாகக் கொடுக்கக்கூடிய எந்தச் சான்றையும் எல்லாச் சாட்சியங்களையும் உறுதிப்படுத்துவது மாத்திரமல்லாது அதீதம் உறுதியான வகிபங்கையும் அதிகமாக எடுக்க வேண்டியிருக்கும். ஆனாலும் பலவந்தப்படுத்தும் வழிகளைப் பயன்படுத்தி அவற்றை அவர்கள் பெற்றுக்கொள்ளப்படக்கூடாது.

பிரதிவாதிகள் மற்றும் சாட்சிகள் சித்திரவதை அல்லது கொடுமைப்படுத்தல் போன்றவற்றிக்கு உட்படுத்தப்படும் சாத்தியம் குறித்து எல்லா நேரத்திலும் நீதிபதிகள் விழிப்பாக இருக்க வேண்டும். உதாரணத்திற்கு ஒரு தடுத்து வைக்கப்பட்டிருப்பவர் நீதிபதிக்கு முன்னே கொண்டு வரப்பட்ட போது தான் கொடுமைப்படுத்தப்பட்டதாக தடுத்து வைக்கப்பட்டவர் குற்றம் சாட்டலாம். அவ்வாறான எல்லாக் குற்றச்சாட்டுக்களையும் பதிவு செய்வதுடன், குற்றச்சாட்டானது முழுமையாக விசாரிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எல்லாம் ஒரு தலைமை தாங்கும் உத்தியோகத்தர் பதவியில் இருப்பது என்ற அடிப்படையில் நீதிபதி எடுப்பது முக்கியமானது. உத்தியோகபூர்வமான நீதிபதியானவர் சம்பந்தப்பட்டவர் காணக்கூடிய உடல் அடையாளங்களையோ அல்லது மனோ ரீதியான கொடுமைப்படுத்துகையையோ காணும் இடத்து முறைப்பாடு வெளிப்படுத்துகை அல்லது குற்றச்சாட்டுகை இல்லாத நிலையில் கூட இதைச் செய்யலாம்.

உலகின் பல்வேறு பகுதிகள் பூராகவும் சட்டமுறையானது விடயங்களில் வேறுபட்டிருக்கும் அதேவேளையில் சித்திரவதையை தடைசெய்யும் சட்டமானது உலகளாவிய ரீதியாக இருப்பதுடன் எல்லா நேரங்களிலும் சட்டம் மேல்நிலைப்படுத்தப்படுவதும் சித்திரவதை தடை செய்யப்படுவது இதில் உள்ளடங்கியிருப்பதையும் உறுதிப்படுத்துவது நீதிபதியின் மிகவும் முக்கியமான வகிபங்குகளில் ஒன்றாகும்.

பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதியரசர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் என்போர் அரசியலமைப்புச் சபையின் நியமனத்துடன் இலங்கையின் ஜனாதியினால் நியமிக்கப்படுகின்றனர். அரசியலமைப்புச் சபையானது சுயாதீன ஆணைக்குழுக்களைப் பேணுதல் மற்றும் அவற்றின் விவகாரங்களைக் கண்காணித்தல் என்ற பொறுப்புக் கொடுக்கப்பட்ட 10 உறுப்பினர்களைக்கொண்ட அரசியலமைப்பு அதிகாரசபையாகும். மேல்நீதிமன்ற நீதிபதிகள் நீதிச்சேவை ஆணைக்குழுவின் மதியுரையின் கீழ் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்றனர். மரபு ரீதியாக நீதிபதிகள் என்போர் சட்டத்தரணிகளாவார். உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் என்பவற்றின் ஓய்வு பெற்ற நீதிபதிகள் ஓய்வு பெற்ற பின்பு சட்டத்தரணிகளாக பணியாற்றமாட்டார்கள்.[66,67]

இலங்கையில் உயர்நீதிமன்ற நீதிபதிகள் நீதிமன்றத்தில் சமூகமளிக்கும் போது செந்நிற மேலாடையை அணிவர். விசேட வைபவரீதியான சமயங்களில் (வைபவ ரீதியான உயர்நீதிமன்ற அமர்வுகளின் போது) அவர்கள் செந்நிற மேலாடையும், சட்டவாதிப் பட்டியும் பெரிய கையற்ற ஆடையுடன் நீண்ட தோகை போன்ற ஆடையை அணிவர். மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் நீதிமன்றத்திற்குச் சமூகமளிக்கும் போது கடும் ஊதா நிற ஆடையை அணிவர். விசேட வைபவ நிகழ்வுகளின் போது (வைபவ ரீதியான மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வுகளின் போது அவர்கள் கடும் ஊதா நிற மேலாடை, சட்டவாதிப் பட்டியும் பெரிய கையற்ற ஆடையுடன் நீண்ட தோகை போன்ற ஆடையும் அணிவர்

## [13.3] நீதவான் மன்ற நீதிபதிகள்

இலங்கையில் நீதித்துறைச் சட்டத்துக்கு அமைவாக ஒரு குறிப்பிட்ட நியாயாதிக்கத்தின் கீழ் வரும் நீதவான் மன்றத்திற்கு தலைமை தாங்குவதற்கு நியமிக்கப்படும் ஒரு நீதித்துறை அதிகாரியாக மன்ற நீதிவான் உள்ளார். இலங்கையில் உள்ள நீதிவான்கள் முன்பு நீதிவான் நீதிமன்றங்கள், பொலிஸ் நீதவான் நீதிமன்றங்களாக அறியப்பட்ட போது பொலிஸ் நீதவான்களாக அறியப்பட்டிருந்தனர்.

நீதவான்கள் தண்டனைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்றவியல் வழக்குகளின் மீது நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ளனர். அவர்களது கடமையில் தேடுதல் உத்தரவுகளை வழங்குதல், கைது உத்தரவுகளை வழங்குதல், பிணை விண்ணப்பங்களை விசாரித்தல் என்பன உள்ளடங்கியிருந்தன. பல சமயங்களில் நீதவான்கள் ஆரம்ப நீதிமன்றங்களில் தலைமை தாங்குகின்றனர். அத்துடன் நான்கு வகையான நீதவான்கள் உள்ளனர்.

- பிரதான நீதவான் (கொழும்பு நகரப் பிராந்தியத்திற்கு மாத்திரமானது)
- நீதவான்
- மேலதிக நீதவான் (ஒரு நிலையத்திலுள்ள ஒரு நீதவானுக்கு அதிகமாக உள்ளபோது காணப்படுவது; மற்றும்
- உத்தியோகபூர்வமற்ற நீதவான்.

மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் முதல் காப்புறுதி நீதிமன்றங்கள் போன்ற கீழ் நீதிமன்றங்களுக்கு நீதவான்களை நியமிப்பதற்கான பொறுப்பு நீதிச்சேவை ஆணைக்குழுவிடம் உள்ளது.[68]

## [13.4] சமாதான நீதிவான் மற்றும் உத்தியோகபூர்வமற்ற நீதிவான்கள்

இலங்கையில் ஒரு சமாதான நீதிவான் மற்றும் உத்தியோகபூர்வமற்ற நீதிவான் என்போர் (பதில் நீதவான் என அறியப்படுவோர்) நீதித்துறைச் சட்டத்தின் கீழ், ஒரு குறிப்பிட்ட நியாயாதிக்கத்துக்குறியதாக வழங்கப்படும் நீதித்துறை நியமனமொன்றாகும் என்பதுடன் அது நீதியமைச்சரினால் செய்யப்படும் ஒரு உத்தியோகபூர்வமற்ற நீதவான் எனப்படுபவர் ஒரு சிரேஷ்ட சட்டத்தரணியாவார் (15 வருடங்கள் அல்லது அதற்கு அதிகமான அனுபவத்துடன்) அவர் சமாதான நீதவானாக இருப்பதுடன் சிவில் அல்லது குற்றவியல் வழக்குகளை விசாரித்தல், விளங்குதல் அல்லது தீர்மானித்தல் போன்றவை தொடர்பில் நீதவானுக்குள்ள அதிகாரங்களைத் தவிர ஏனைய அதிகாரங்களையும் அதிகாரத்துவத்தையும் கொண்டிருப்பார்.

உத்தியோகபூர்வமற்ற நீதிவான்களாக நியமிக்கப்பட்ட ஆட்கள் குறைந்தபட்ச சமாதான நீதவான் மற்றும்/ அல்லது உத்தியோகபூர்வமற்ற நீதிவான் என்ற குறைந்தபட்ச பதவிநிலைகளைப் பயன்படுத்துவார்.

## [13.5] வழக்குத் தொடுனர்கள்

வழக்குத் தொடுனர்கள் பொதுவாக குற்றவியல் நடவடிக்கைகளில் ஒரு துடிப்பான வகிபங்கை ஆற்றுகின்றனர். வழக்குத்தொடுப்பை உருவாக்கல் மற்றும் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட இடங்களில் அல்லது உள்ளூர் பழக்கங்களுடன் உடன்பட்டு குற்றத்தை விசாரித்தல் இந்த விசாரணைகளின் சட்டபூர்வ தன்மை தொடர்பாக மேற்பார்வை செய்தல், நீதிமன்றத் தீர்மானங்களை நிறைவேற்றுவது தொடர்பில் மேற்பார்வை செய்தல் மற்றும் பொது நலனில் பிரதிநிதிகள் என்ற வகையில் ஏனைய தொழிற்பாடுகளை செயற்படுத்துதல் போன்றவற்றில் ஒரு துடிப்பான வகிபங்கை ஆற்றுகின்றனர்.

ஒரு அரச சட்டத்தரணியானவர் இலங்கையின் சட்டமுறைமையில் பொது வழக்குத்தொடுனர்களாக உள்ளதுடன், அரசின் குற்றவியல் நடவடிக்கைகளை பிரதிநிதித்துவம் செய்கின்றனர். அவர்கள் தெரிவு செய்யப்படுவதில்லை என்பதுடன் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தராக அரச ஊழியர்களாக கடமையாற்றுகின்றனர்.[69]

[66] *Judicial Services Commission Secretariat Sri Lanka,* *http://www.jsc.gov.lk/web/index.php?option=com_content&view=frontpage&Itemid=1&lang=en.*
[67] *Supreme Court of Sri Lanka, http://www.supremecourt.lk/.*
[68] *Judicial Services Commission Secretariat Sri Lanka,* *http://www.jsc.gov.lk/web/index.php?option=com_content&view=frontpage&Itemid=1&lang=en*
[69] *Attorney General's Department Sri Lanka, http://www.attorneygeneral.gov.lk*

இவ்வாறு அரச சட்டரணி ஒருவராக மாறுவதற்கு தகைமை வாய்ந்த சட்டத்தரணி ஒருவராக இருக்க வேண்டும். சிரேஷ்ட அரச சட்டத்தரணிகள் பொது வழக்குத் தொடுகையில் பல ஆண்டு அனுபவங்களுடன் அரச வழக்குத் தொடுப்பில் இருப்பர்.

சட்டமா அதிபர் மற்றும் அவரது பிரதியாளரான சொலிஸிடர் ஜெனரல் என்போர் முன்னாள் அரச சட்டத்தரணிகளாக இருந்திருப்பர். 1972 க்கு முன்பதாக இந்தப் பதவிநிலையானது முடிக்குரிய சட்டவாதி என்பதாக இருந்ததுடன் இலங்கை குடியரசான போது அது மாற்றப்பட்டது.

இந்த அரச சட்டத்தரணிகளுக்கும் ஸ்கொட்லாந்திலுள்ள வழக்குத்தொடு பிஸ்கால் Procurator Fiscal வழக்குத் தொடுனருக்கும் இங்கிலாந்திலும் வேல்சிலும் உள்ள முடிக்குரிய வழக்குத்தொடுனர் Crown Prosecutor கனடாவிலுள்ள முடிக்குரிய சட்டத்தரணி Crown Attorneys மற்றும் ஐக்கிய அரசுகளிலுள்ள மாவட்ட சட்டத்தரணிகளுக்கும் இடையில் ஒத்த தனம்மகள் உள்ளன. .

## [13.6] பொலிஸ்

### [13.6.1] பொதுவானது

இலங்கைப் பொலிசார் பொதுமக்களின் தேசிய பொலிஸ்படையாகும். தலைமையானவர் பொலிஸ்மா அதிபர் எனப்படுவார். அவர் சட்டம் ஒழுங்கு அமைச்சருக்கும் இலங்கை தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கும் அறிக்கையிட வேண்டியவராக உள்ளார்.

பொலிஸ் சேவையானது ஐந்து பிரதான புவியியல் ரீதியான கட்டளைப் பீடங்களாக ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கிறது. அவை பிரிவு (I, II, II, III, IV, V) என நாட்டின் வடக்கு, மேற்கு, கிழக்கு, தெற்கு என்றவாறு அமைகின்றன.

பொலிஸ் சேவையானது விசாரணை, பாதுகாப்பு, பயங்கரவாத எதிர்ப்பு, துணை இராணுவத் தொழிற்பாடுகள் என்பவற்றுக்குப் பொறுப்பான விசேடித்த பல எண்ணிக்கையான அலகுகளைக் கொண்டுள்ளது. ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயற்பாடுகள் மற்றும் துப்பறியும் வேலைகள் என்பனவற்றின் விசாரணையானது குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தினால் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கட்டளையின் கீழ் கையாளப்படுகிறது.

நாளாந்தக் கடமைகளை மேற்கொள்ளும் போது பொலிஸ் உத்தியோகத்தர்களால் நடைபெறும் மனித உரிமை மீறுதல்களைத் தடுக்கும் பிரதான இலக்குடனும் பொதுமக்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் 2002 ஏப்ரல் 29 ஆம் திகதி பொலிஸ் மனித உரிமைப் பிரிவு நிறுவப்பட்டது.

### [13.6.2] பொலிஸாரினால் நடைபெறும் மனித உரிமை துஷ்பிரயோகங்கள்

இலங்கைச் சட்ட முறைமையானது பொலிஸ் துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பல பொறிமுறைகளைக் கிடைக்கச் செய்கிறது. அடுத்த படியாக பாதிக்கப்பட்டவர்கள் பொலிசாருடன் முதல் தகவல் அறிக்கையொன்றை தாக்கல் செய்ய முடியும். துரதிஷ்டவசமாக இவை அநேகமாக வெற்றிகரமற்றதாக போகின்றன. ஏனெனில் பொலிசார் ஒன்றில் முறைப்பாட்டைப் பதிவதற்கு மறுக்கின்றனர். அன்றேல் அவ்வாறு தாக்கல் செய்ய வேண்டாம் என பாதிக்கப்பட்டவர்களுக்கு அழுத்தம் கொடுக்க முயற்சிக்கின்றனர். இரண்டாவதாகப் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளூர் நீதிமன்றத்துடன் பொலிஷ் துஷ்பிரயோகத்திற்கு எதிராக முறைப்பாட்டினைதாக்கல் செய்ய முடியும். எவ்வாறாயினும் நீதிமன்றக் கட்டணங்கள், நீதிமன்றத்திற்கு வருகை தரல், ஒவ்வொரு தோன்றுகைக்குமான சட்டத்தரணிகளுக்கான கட்டணம், போன்றவை வழக்குகள் உரிய முறையில் விசாரிக்கப்படுவதற்கு முன்பதாகப் பொதுவாக பல ஆண்டுகள் எடுக்கின்றன. மூன்றாவதாக, இலங்கையின் சட்டமானது அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒரு அடிப்படை உரிமையானது மீறப்படுமாயின் கொழும்பிலுள்ள உயர் நீதிமன்றத்தில் நேரடியான மேன்முறையீட்டைச் செய்வதற்கு அனுமதிக்கின்றது. இந்த விண்ணப்பங்களானவை சொல்லப்பட்ட துஷ்பிரயோகங்களிலிருந்து 30 நாட்களுக்குள்ளாக செய்யப்பட வேண்டும்.

## [13.7] சட்ட வைத்திய அதிகாரி

### [13.7.1] பொதுவானது

ஒரு சட்ட வைத்திய அதிகாரி (JMO) எனப்படுபவர் தடயவியல் நோயியலின் ஒரு முழுநேர நிபுணத்துவ ஆலோசகர் ஆவார். தடயவியல் நோயியல் என்பது மருத்துவச் சட்டம் மற்றும் சட்டச் செயன்முறையுடன் இணைக்கும் ஒரு களமாகும். சட்ட வைத்திய அதிகாரி JMO எனப்படுபவர் ஒரு அரச பணியாளராக நீதியமைச்சினால் அமர்த்தப்பட்டு அதற்கு பொறுப்புக்கூற வேண்டியவராக இருப்பார். சட்ட வைத்திய அதிகாரி JMO வின் கடமைகளுள் பிரேத பரிசோதனை மேற்கொள்ளல், மரண விசாரணையை நடாத்துதல், அடக்கம் செய்யப்பட்ட உடல்களை மீண்டும் எடுத்தல், சந்தேகத்திற்கிடமான உடலியல் வடுக்களை உட்பட்ட நோயாளிகளைப் பரிசோதித்தல் மற்றும் சான்றுகளை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தல் என்பன அடங்குகின்றன.

சா.வை. அதிகாரியின் (JMO) வகிபங்கானது சித்திரவதைக் குற்றச்சாட்டு விடயங்களில் முக்கியமானது. பொலிசாரின் கைகளில் சித்திரவதைக்குள்ளானதாக ஒரு குற்றம்சாட்டப்பட்டவர் சொல்லும் போது அவர்கள் முதலில் சட்ட வைத்திய அதிகாரி JMO யினால் பரிசோதிக்கப்பட வேண்டும். பின்பு பாதிக்கப்பட்டவர் சொல்வதன் பிரகாரம் காயங்களின் வரலாறைத் தீர்மானிப்பதற்கான ஒரு பௌதீக மற்றும் வாய்மொழி மூலமான தீவிர பரிசோதிப்பை செய்ய வேண்டும். அத்துடன் அக் காயங்களுக்கான காரணங்களின் கருத்துக்களைப் பதிவு செய்யவும் வேண்டும். அதாவது அந்தக் காயங்கள் குற்றம் சாட்டப்பட்ட ஆளின் நிகழ்வுகள் தொடர்பில் சரியாக இருக்கின்றதா என நிறுவுவுதற்காக அவற்றின் காரணங்களாக அவர்களின் கருத்துக்களைப் பதிய வேண்டும். இந்தக் கண்டுபிடிப்புகள் பின்பு ஒரு மருத்துவ சட்டப் பரிசோதிப்பு படிவத்தில் ஆவணப்படுத்துகிறது. சட்ட வைத்திய அதிகாரி JMO ஆனவர் காயங்களின் பாணிக்கும் குற்றம் சாட்டப்பட்டவரின் கதைக்கும் இடையிலான கருத்தை வழங்குவார். இது பின்பு குற்றமிழைத்தவர் பொதுவாக சட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர்களுடனான இச்சான்றுகளை இணைப்பதற்கு நீதிமன்றத்திற்கு விடப்படும்.

இந்த விடயமானது நீதவான் நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்படுமாயின் சட்ட வைத்திய அதிகாரி JMO மருத்துவ சட்டப் பரிசோதிப்பு படிவத்தின் ஒரு விபரமான விபரிப்புடனான மருத்துவ சட்ட அறிக்கையை உருவாக்குகிறார். இவ் வழக்கு மேல் நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்படுமாயின் சட்ட வைத்திய அதிகாரி JMO ஆனவர் வழக்குத் தொடுனருக்கான சாட்சியாக சாட்சியம் வழங்க வேண்டும்.

உரிய வகையிலான மருத்துவ சட்ட ஆவணமானது வெற்றிகரமான சித்திரவதை வழக்குத் தொடுப்புகளுக்கு முக்கியமானது. துரதிஷ்டவசமாக 20 மில்லியன் மக்கள் தொகை உள்ள இலங்கையில் 42 சட்ட வைத்திய அதிகாரிகள் மாத்திரமே உள்ளனர். ஆகவே சட்ட வைத்திய அதிகாரி JMO விடம் சென்றடைவதானது சிரமமானது. விசேடமாக கிராமியப் பகுதிகளில் இதன் நிமித்தம் பல சித்திரவதையினால் பாதிக்கப்பட்டவர்கள் சிரேஷ்ட வைத்தியர்கள் அல்லது திறன் குறைந்த வைத்தியர்களினாலேயே பரிசோதிக்கப்பட வேண்டியுள்ளனர்.

### [13.7.2] சட்ட வைத்திய அதிகாரியின் JMO வின் சட்டபூர்வத் தன்மை

குற்றம் சாட்டப்பட்டவருக்காகப் பரிந்துரைப்பதில் ஒரு குற்றவியல் பிரதிவாதிச் சட்டத்தரணியானவர் ச.வை.அதிகாரி JMO வினால் பூர்த்தி செய்யப்பட்ட மருத்துவ சட்ட இணைப்புப் படிவங்களை அதாவது MLEF மற்றும் MLR என்பவற்றின் சட்டபூர்வதனம்ம குறித்து தரப்பினர் கேள்வி எழுப்புவதற்கான கடமையைக் கொண்டுள்ளனர். ஒரு ச.வை.அதிகாரி JMO ஆனவர் வழக்குத் தொடுப்பு அல்லது கேள்வி கேட்பதிலிருந்து விடுவிக்கப்பட்டவர் அல்ல. ஒரு சமயத்தில் சித்திரவதை செய்யப்பட்டு அதனைத் தொடர்ந்து பொலிசாரின் காவலிலே இறந்துபோன ஒரு பாதிக்கப்பட்டவரை உரிய முறையில் பரிசோதிக்கத் தவறியதற்காக உயர் நீதிமன்றமானது ஒரு ச.வை.அதிகாரி JMO வின் தொழில்வாண்மை குற்றத்தின் பிழையான நடத்தையை பிழை கண்டதுடன், அதற்கமைவாக உச்ச நீதிமன்றம் ச.வை.அதிகாரியின் உரிமப் பத்திரத்தை மூன்று வருடங்களுக்கு இடை நிறுத்தி வைத்தது.

## [13.8] திடீர் மரண விசாரணை அதிகாரி

திடீர் மரண விசாரணை அதிகாரி எனப்படுபவர் நீதியமைச்சினால் நியமிக்கப்பட்டவராவார். இவர் பொதுவாக மருத்துவ அல்லது சட்டத்துறை நியமனமானவராக அல்லாமல் பொலிஸ் மற்றும் மரண விசாரணைகளுக்கான தடயவியல் நோயியலிலே அதிகம் தங்கியுள்ளவராக உள்ளார்.

ஒருவர் சந்தேககரமான அல்லது விபரிக்க முடியாத சூழ்நிலைகளில் இறப்பாராயின் அவ் இறப்பானது பொலிசாருக்கு அறிவிக்கப்படுவதுடன் மருத்துவ சட்ட முறைமையானது செயற்படுத்தப்படுகிறது. பொலிசார் பின்பு அதனை திடீர் மரண விசாரணை அதிகாரிக்கு அறிவிக்க அவர் இறப்பின் காரணத்தை தீர்மானிப்பதற்கான உண்மையைக் கண்டுகொள்ளும் விசாரணையைப் பொறுப்பெடுக்கிறார்.

திடீர் மரண விசாரணை அதிகாரிக்கு மரணத்தின் காரணத்தை தீர்மானிக்க முடியாதிருப்பின் இதனை அவர் பிரேத பரிசோதனை செய்வதற்கு சா.வை. அதிகாரி ஒருவரிடம் (JMO) ஆற்றுப்படுத்துவார். அவர் (JMO) மரணத்தின் சூழமைவுகளைப் பரிசோதிப்பதற்கு ஒரு இரண்டாவது பரிசோதனையை மேற்கொள்வார்.

## [13.9] திருத்தச் சேவைகள் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள்

இலங்கையில் திருத்தல் வசதி மற்றும்/ அல்லது சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் சிறைச்சாலைத் திணைக்களத்திற்காகப் பணியாற்றுகின்றனர். இத் திணைக்களமானது தடுத்து வைப்பு தண்டனைகள் (மறியற் தண்டனை) மற்றும் தடுத்து வையாத தண்டனைகள் மற்றும் கட்டளைகள் (வீட்டுத்தடுத்துவைப்பு, மேற்பார்வை, சனசமூக வேலை மற்றும் நிபந்தனைகளின் மேல் விடுவித்தல்) போன்ற இலங்கை நீதிமன்றங்களினால் விடுக்கப்படுபவர்கள் பாதுகாப்பானதும் காப்பானதும், மனிதநேயமும் செயல்விளைவுள்ள முறையில் நிர்வகிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் பொறுப்பைக் கொண்டுள்ளது.

இத்திணைக்களமானது, குற்றவாளிகளை திருத்தி, சமூகத்திற்குள் மீண்டும் இணையச் செய்யும் விதத்தில் முறையான நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்து, அதனூடாக அக்குற்றவாளிகள் குறித்த தவறுகளை மீண்டும் செய்யும் அளவு மட்டத்தை குறைத்து, அதனூடாக பாதுகாப்பான, தார்மீக சமூக கட்டமைப்பொன்றை பேணிவருவதற்கான உயர் பங்களிப்பை செய்து வருகின்றது. இத்திணைக்களத்தின் நிர்வாக நடவடிக்கைகள் யாவும் பிரதான சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தினூடாகவே (1877இன் 16ஆம் இலக்கம்) ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

மேலும் இத்திணைக்களம் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் சிறைக்கைதிகளை இலங்கைக்குள் கொண்டு செல்லவும்/ வரவும் வேண்டிய பொறுப்பினைக் கொண்டுள்ளது.

## [13.10] நீதிமன்ற உரைபெயர்ப்பாளர்கள்

நீதிமன்ற உரைபெயர்ப்பாளரானவர் நீதிமன்ற முறைமையில் இணைந்து கடமை புரியும் ஒருவர் என்பதுடன், ஒரு குறிப்பிட்ட நபர் விசாரிக்கப்படும் நீதிமன்றத்தில் எந்த மொழி உத்தியோக பூர்வ மொழியாக இருக்குமோ அந்த மொழியை அவர் பேச முடியாவிட்டால் மேற்குறித்த உரைபெயர்ப்பாளர் அவருக்கு குறித்த மொழியிலான உரைபெயர்ப்பை வழங்குவார். இவ்வாறான நீதிமன்ற உரைபெயர்ப்பாளர்கள் தமது சேவையை சாட்சிகளுக்கும் அல்லது/ மற்றும் எதிர்தரப்பினருக்கும் அவர்கள் பரிச்சயமான மொழியை விளங்கிக் கொள்ளும் விதத்தில் சான்றுகளையும் சாட்சியம் வழங்களையும் உரைபெயர்த்துக் கொடுப்பார். அங்கு கூறப்படும் அனைத்து விடயங்களையும் வாய் மொழி மூலமாக உரைபெயர்ப்பதே இவ்வுரை பெயர்ப்பாளரின் கடமையாகும். அதே போன்று வழக்குரைஞர்கள் தமது தரப்பினருடன் கலந்துரையாடும் போது இவ்வுரைபெயர்ப்பாளர்கள் அவர்களுக்கு ஒத்துழைப்பும் வழங்குவர்.

## [13.11] யூரர் சபை அங்கத்தினர்

நீதிமன்றம் முன்னால் உள்ள குறிப்பிட்ட பிரச்சினையொன்று பற்றிய நிகழ்வின் உண்மையை அறிந்தவாறு அதற்கான பக்கசார்பற்ற தீர்ப்பொன்றை வழங்குவதற்கு அல்லது ஒரு தண்டனையை வழங்குவதற்கு பொதுமக்கள் மத்தியிலிருந்து அழைக்கப்பட்டு, சத்தியம் செய்து கடமை புரியும் குழுமம் ஒன்றே யூரர் சபையாகும். தற்காலத்தின் யூரர்கள் நீதிமன்றத்தில் ஒரு குற்றச் செயல் தொடர்பில் குற்றத்தின் தன்மையை கண்டறிவதற்கும் அல்லது அது அவ்வாறில்லாத தன்மையை கண்டறிவதற்கும் குறித்த யூரர்கள் அங்கு காணப்படுகின்றனர். ஆங்கில நியாயதிக்கத்தின் கீழ், துணிபுரையானது குற்றவாளி அல்லது குற்றமற்றவர் ஆகக் கூடும் (நிரூபிக்கப்படாவிட்டால் அரசினால் குற்றத்தை நிரூபிக்க முடியவில்லை என்றதன் அடிப்படையில் விடுதலை செய்யும் படியான துணிபுரை- அது அப்பாவித்தனம் பற்றிய நிரூபிப்பாக மாட்டாது. இந்நிலைமை ஸ்கொட்லாந்திலும் காணப்படுகின்றது.)

இலங்கையின் மேல் நீதிமன்றங்களில் யூரர் ஊடான விளக்கங்கள் குற்றப்பகர்வின் மீது நடைபெற வேண்டும், மேல் நீதிமன்றங்களில் யூரர் சபையொன்றினால் நடாத்தப்படுதல் வேண்டும். **(குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவை பிரிவு 161)** இலங்கையின் உயர் நீதிமன்றம் யூரர் சபையினை தயாரிப்பது தொடர்பாகவும் அவர்களை அழைப்பது தொடர்பாகவும் அவர்களை இயக்கவைப்பது தொடர்பாகவும் அவர்களுக்குள்ள சவால்கள் தொடர்பாகவும் தீர்மானிக்கின்றது. **(இலங்கை அரசியல் யாப்பு பிரிவு 136(1)(g))**

## [13.12] சட்ட உதவி ஆணைக்குழு

சட்ட உதவி ஆணைக்குழுவானது (LAC) 1978 ஆம் ஆண்டு நிறுவப்பட்டதுடன் தீவு ரீதியாக 76 நிலையங்களைக் கொண்டுள்ளது. சட்ட உதவி ஆணைக்குழுவின் வகிபங்கானது குறைந்த வருமானக் குழுக்களுக்கு சட்டத்தரணிகளின் உதவியுடன் இலவசமான சட்டஉதவிகளை வழங்குவதும் சட்ட நடைமுறைகள் குறித்து முழு சனசமூகத்திற்கும் விழிப்புணர்வை உருவாக்குவதும் ஆகும். சட்ட உதவி திணைக்களத்திடமிருந்து உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு தரப்பினர் ரூபாய் 15,000 அல்லது அதற்குக் குறைந்த மாத வருமானதத்தைக் கொண்டவர்களாகக் இருத்தல் வேண்டும்.

சட்ட உதவி ஆணைக்குழுவினால் வழங்கப்படும் சட்ட உதவிச் சேவைகளில் பின்வருவன உள்ளடங்குகின்றன. காணி, விவாவரத்து, பணம் பெற்றுக்கொள்ளல், விபத்து நட்டஈடு, வாழ்க்கைத்துணை மற்றும் சிறுவர் பராமரிப்பு, தொழிற்கடன், இணக்கசபை விடயங்கள், வாடகைச் சபை விடயங்கள், பிணை, மேன்முறையீடுகள் அடிப்படை மனித உரிமை மீறுகை என்பனவாகும். சட்ட உதவி ஆணைக்குழுவானது குற்றவியல் சட்ட வழக்குகளை அருமையாகவே ஏற்றுக்கொள்வதுடன் அதன் விளைவாக, குற்றம் சாட்டப்பட்ட ஏழை மக்கள் தம் வழியில் சட்ட முறைமையைத் தேடிக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

## [13.13] இலங்கை நீதிச்சேவைகள் ஆணைக்குழு

கீழ்மட்ட நீதித்துறையின் நீதிபதிகள் நியமிக்கப்படும், இடம்மாற்றப்படும், அகற்றப்படும், ஒழுக்காற்றுகைக்கு உட்படுத்தப்படும் செயன்முறைகளை நீதிச்சேவை ஆணைக்குழு நிறுவுகிறது. இவ் ஆணைக்குழுவின் தவிசாளராக பிரதம நீதியர் இருப்பதுடன் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகள் இருவரையும் கொண்டு இது ஆக்கப்படுகிறது. இலங்கை (1978) அரசியலமைப்பின் பிரகாரம் நீதித்துறைக்குள் நுழைவதற்கு வேட்பாளர்கள் ஆகக் குறைந்தது மூன்று ஆண்டுகள் சட்டத்தரணியாக இருந்திருப்பதுடன் ஒரு எழுத்துப்பரிட்சையிலும் சித்தியடைந்து பின்பு ஒரு நேரகாணலிலும் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். அவர்கள் அவ்வாறு நியமிக்கப்பட்டதும் நீதிபதிகள் நிறுவனத்தில் ஒரு கட்டாயப் பயிற்சியை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

## [13.14] இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

மனித உரிமைகள் ஆணைக்குழுவானது மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் ஐக்கிய நாடுகளின் ஒரு உறுப்புரிமையாளராக செய்த அர்ப்பணிப்புக்கு அமுலாக்கம் கொடுப்பதற்காக பல்வேறான சர்வதேச ஒப்பந்தங்களினால் இலங்கை மீது விதிக்கப்பட்ட கடமைகளையும் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்காகவும், அத்துடன் 1996 பரிஸ் கொள்கையின் கீழ் முன்வைக்கப்பட்ட நியமங்களைப் பேணுவதற்காகவும் நிறுவப்பட்டது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது ஒரு சுயாதீன ஆணைக்குழுவாக இருப்பதுடன் அது இலங்கையில் மனித உரிமைகள் ஆணைக்குழு நிறுவப்பட்ட 1996 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் நாட்டின் மனித உரிமைகளை ஊக்குவித்து பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டது.

சட்டம், கொள்கை, பழக்கம் என்பவற்றில அனைவருக்கும் மனித உரிமைகளைப் பாதுகாத்து ஊக்குவிப்பதன் ஊடாகவும், இலங்கைப் பிரசைகளுக்காக இலங்கை அரசியலமைப்பின் கீழ் உத்தரவாதம் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மீதான விடயங்களில் விசேட அழுத்தம் கொடுப்பதுடன் உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமை நெறிகள் மற்றும் கொள்கைகளுடன் ஒட்டியொழுகுவதன் ஊடாகவும் ஒரு சிறந்த மனித உரிமைக் கலாசாரதர்தை இலங்கையில் விருத்தி செய்வதே அதன் பணி நோக்காகும்.''[70]

[70] *Human Rights Commission of Sri Lanka*, http://hrcsl.lk/english/about-us/establishment/.

# நீதவான் மன்றம்

**குற்றம் சாட்டப்பவருக்கு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன**

1. முதல் அட்டவணையில் 8வது நிரலில் உள்ள தவறொன்றுக்கு (கு.ந.ச.கோவை 10 (ஆ)

2. இரண்டு வருடங்களுக்கு குறையாத அல்லது ரூபா 1500.00 க்கு கூடாத தண்டப்பணத்துக்கு த.ச.கோவையின் கீழ் வரும் தவறுகள் (த.ச.போவை 11 (ஆ)(2))

**நீதிபதியால் மாத்திரமான வழக்கு விசாரணை**

**வழக்கு விசாரணைக்கு முந்திய விடயங்கள்**

**பிணை வழங்கப்படாமை**

- தடுப்புக் காவலில் வைத்தல் வழக்கு விசாரிக்கப்படுகிறது

**விசாரணைக் கட்டம்**

- குற்றச்சாட்டு
- பொலிஸ் விசாரணை
- தனிநபரை அல்லது இடமொன்றை சோதனையிடல்
- தடுத்து வைத்தல்
- குற்றம் சாட்டப்பட்டவரின் கூற்று
- வழக்குத் தொடுனரின் சான்றுகளை பெறுதல்

**வழக்கு விசாரணை**

**பிணை**

பிணைச் சட்டம் - 07

- நீதிமன்றத்தில் தோன்றுதல்
- தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளல்
- பிணை முறியொன்றுக்கு உட்படல்
- நியாயமான பணத்தொகை
- நியாயமான பொறுப்புப்பிணைப் பணம்.

**2. எதிர்தரப்பின் வழக்கு**

- குற்றம் சாட்டப்பட்டவரின் கூற்றுக்கள் கு.ந.ச.கோவை 184(3)
- ஆரம்ப சான்றுகள் கு.ந.ச.கோவை 152(1)
- குற்றம் சாட்டப்பட்டவர் சான்றழித்தல். கு.ந.ச.கோவை 152(2)

**1. குற்றச்சாட்டை முன்வைக்கும் சட்டத்தரணியின் வழக்கு**

- திறந்த கூற்றுக்கள்
- ஆரம்ப சான்றுகள்
- எதிர்தரப்பின் குறுக்கு விசாரணை

**தொகுப்புரை**

**2. குற்றச்சாட்டை முன்வைக்கும் சட்டத்தரணியின் கூற்று**

**தீர்ப்பளித்தல்**

**கு.ந.ச.கோவை – 185**

எதிர்தரப்பின் கூற்று

**குற்றவாளியாக காணுதல்**

**குற்றமற்றவராக்குதல்**

**தண்டனை (கு.ந.ச.கோவை 14)**

**மேன்முறையீடு**

**கு.ந.ச. கோவை 320**

# மேல் நீதிமன்றம்

**குற்றம் சாட்டப்பவருக்கு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன**

**நீதிபதி ஒருவரால் வழக்கை விசாரித்தல்**

- மேல் நீதிமன்றத்தில் அனைத்து வழக்குகளும் நீதிபதி ஒருவர் முன்னால் நடைபெறும். நீதித்துறைச் சட்டம் 11(1)

**யூரர் வழக்கை விசாரித்தல்**

- யூரரால் வழக்கை விசாரிப்பதற்கு குற்றம் சாட்டப்பட்டவர் அக்குழுவை தெரிவு செய்தல். அக்குற்றம் நீதித்துறை சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் வருமிடத்து வழக்கு விசாரணைக்கு முன்பாக (கு.ந.ச.கோவை 161),11.2

**பிணை வழங்கப்படாமை**

- தடுப்புக் காவலில் வைத்தல் வழக்கு விசாரிக்கப்படுகிறது

**பிணை**

பிணைச் சட்டம் - 07

- நீதிமன்றத்தில் தோன்றுதல்
- தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளல்
- பிணை முறியொன்றை வைப்பீடு செய்தல் அல்லது சாதாரண பிணைப்பணம்
- சாதாரண பணத்தொகை வைப்பீடு அல்லது
- அத்தாட்சிப்படுத்தப்பட்ட சாதாரண பிணைத் தொகை

**வழக்கு விசாரணைக்கு முந்திய விடயங்கள்**

**விசாரணைக் கட்டம்**

- குற்றச் சாட்டு
- பொலிஸ் விசாரணை
- தனியார்/ இடம் தேடுகை
- தடுத்து வைப்பு
- குற்றம் சாட்டப்பட்டவரின் கூற்றுக்கள்
- வழக்குத் தொடுனர் பக்க சான்றுகளைப் பொறல்

**வழக்கு விசாரணை**

**1. குற்றச்சாட்டை முன்வைக்கும் சட்டத்தரணிகளின் வழக்கு**

- ஆரம்ப கூற்றுக்கள்
- நேரடி சான்றுகள்
- எதிர்தரப்பின் குறுக்கு விசாரணை

**2. எதிர்த்தரப்பின் வழக்கு**

- ஆரம்ப கூற்றுக்கள் நீதிபதி (கு.ச.கோ. 201) யூரர் (கு.ச.கோவை 221(1)
- நேரடி சான்று ஒரு நீதிபதி மாத்தரம் (கு.ச.கோவை 201) யூரர் சபையுடன் (கு.ச.கோவை 221(1)
- குற்றம் சாட்டப்பட்டவர் சான்றளிக்கலாம் 152(2) ஒரு நீதிபதி மாத்திரம் (கு.ந.கோவை 199(5) யூரர் சபையும் (கு.ந.கோவை 218)

**வழக்குத் தொடுனரின் குறுக்கு விசாரணை**

ஒரு நீதிபதி மாத்திரம் (கு.ந.கோவை 201(1) யூரர் சபையும் (கு.ந.கோவை 221(2)

**கூற்றுக்கள் முன்வைப்பதை முடிவுறுத்தல்**

1. **வழக்குத் தொடுனரின் கூற்று**
2. **எதிர்தரப்பின் கூற்று**

**தீர்ப்பளித்தல்**

நீதிபதி ஒருவர் மாத்திரம் கு.ந.ச.கோவை – 203

யூரர் சபை - 234

**குற்றவாளியாக்கப்பட்டுள்ளனர்**

- தண்டனை - நீதிபதி ஒருவர் மாத்திரம் இருக்கின்றார். கு.ந.ச.கோவை 203
- யூரர் சபை – கு.ந.ச.கோவை 238

**மேன்முறையீடு**

நீதிபதி ஒருவர் மாத்திரம் கு.ந.ச.கோவை – 235

யூரர் சபை - 234

**குற்றமற்றவாக்குதல்**

- குற்றம்சாட்டப்பட்டவரை விடுதலை செய்தல்.